Koviloor Digital Library

பன்னிரு திருமுறைகள்

முதல் திருமுறை – முதல் பாகம்

A.No. 17657
Q : 23



தேவாரம்

மூலமும் உரையும்

தமிழ் நிலையம்

Koviloor Digital Library

Koviloor Digital Library
55
KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17657

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரம்

(முதல் திருமுறை – முதல் பாகம்)

உரையாசிரியர் :
வ.த. இராமசுப்பிரமணியம், எம்.ஏ.,

தமிழ் நிலையம்
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளெக்ஸ்,
141, உஸ்மான் சாலை,
தி. நகர், சென்னை – 600 017.

Koviloor Digital Library

முதல் பதிப்பு : 1994

உரிமை : பதிப்பகத்திற்கே

இரு தொகுதிகள்:

விலை : ரூ. 175.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17.

Printed by Offset at :

Sankar Printers, Madras - 600 042.

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

முன்னுரை

சைவம் தழைக்க வந்த நூல்கள் பன்னிரு திருமுறை. அவற்றுள் முதலாவதாக விளங்குவது திருஞானசம்பந்தர் தேவாரம். இது மூன்று திருமுறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. இந்த நூல் முதல் திருமுறையாகும்.

திருஞானசம்பந்தர் கருவிலே திரு அமையப் பெற்றவர். இறைவன் ஆணைப்படி இறைவி, பொற் கிண்ணத்தில் அளித்த ஞானப்பாலை அருந்திய ஞானி. மூன்று வயதில் ஈசனைப் பாடிப் போற்றினார்.

இறைவன் அருளாலே, யாவும் நடைபெறும். மக்களுக்கு நேரும் பிணியும் துன்பமும் வினைப் பயனால் நேர்பவை. அவ்வாறாயின் இறைவன் அருளுக்குப் பாத்திரராகி நன்மைகள் பெறுவது எங்ஙனம்? இதற்கு உரிய எளிய வழிகள் கூறுகின்றார் திருஞானசம்பந்தர்.

இகவாழ்க்கையில் பிணியற்று விளங்கவும், செல்வத்தோடு விளங்கவும் வழிவகுப்பது திருஞான சம்பந்தர் பாடல்கள். இறைவனை மலர் தூவி வழிபட வேண்டும் என்பது, இவர்தம் அருட் கட்டளை. அதனை ஆணித்தரமாகப் பல பதிகங்கள் வாயிலாகக் கூறுகின்றார். திருத்தலங்கள் சென்று வழிபட்டு நிற்றல் பிணி நீக்கவல்லது; வேண்டியவற்றைத் தரவல்லது; இம்மையில் மட்டும் அன்றி மறுமையிலும் நலம் தர வல்லது. திருக்கடைக்காப்பாக அமையப்பெற்ற ஈற்றுப்

Koviloor Digital Library

பாடல்களில், பதிகத்தை ஓதுவதால் உண்டாகும் பயன் நன்கு தெரிவிக்கப்படுகிறது. அதனை நன்கு ஊன்றிப் பார்த்து அத்தகைய திருப்பதிகங்களை ஓதி குறைகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

துன்பத்திற்கு வினைதான் காரணம். அதனை விலக்கும் வழி பலவகை உண்டு. அதில் மிக எளிதாகிய வழி, திருஞானசம்பந்தர் திருப்பதிகங்களை ஓதுதல் ஆகும். இதனை,

அருநெறிய மறை வல்லமுனியகன்
பொய்கை அலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மான் இவன் றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர்ஞானசம்
பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே

என்று 11ஆம் திருப்பாட்டில் காணலாம். திருஞான சம்பந்தர் தேவாரத்திலிருந்து ஒரு திருப்பதிகம் ஓத வல்லவராயின், தீயவினையானது நீங்கிவிடும் என்பது அருளாணையாகின்றது. இதன் உண்மையைத் தாமே பல இடங்களில் மெய்ப்பித்துக் காட்டியருளியவர் திருஞானசம்பந்தர்.

இத் திருமுறையில் தமிழின் சிறப்பு பலவாறு போற்றப்படுகிறது. நற்றமிழ் என்றும், திருநெறிய தமிழ் என்றும் கூறப்படுவதைக் காணலாம். பாடல்கள் யாவும் சந்த மணம் கமழ்கின்றது. அத்துடனன்றி, எதுகைத் தொடை அமையப்பெற்ற பாடல்கள் ஏராளம். இத்தகைய சிறப்பு, சொல்லழகைப் புலப்

Koviloor Digital Library

படுத்துவதோடு அப் பாடல்களை மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவும் எளிதில் கைகூடும்.

இவர்தம் பாடல்கள் தலந்தொறும் அமையப் பெற்றுள்ளதானது, தலத்தின் இயற்கை வனப்பும், ஆங்கு வசிக்கும் மக்களின் இயல்பும், அவர்கள் ஆற்றும் பணியின் சிறப்பும் நன்கு வெளிப்படுத்துவதாகின்றது. சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வற்ற, பேதமற்ற சிறப்புத் தோய்ந்துள்ளதை இவர்தம் திருப்பதிகங்கள் புகலும்.

இறைவன் வேறு இத் திருப்பதிகம் வேறு என அமையாமல், இறைவனே இத் திருப்பதிகங்கள் வடிவத்தில் மறையென மறைந்துள்ளான் என்பதே சாலப் பொருந்தும்.

இத் திருமுறையை நன்முறையில் வெளியிட்டு மக்களுக்கு நற்பேறுகளை வழங்கச் செய்யும் தமிழ் நிலையத்தாருக்கு என் நன்றி யாண்டும் உரித்து.

இதனைப் பயின்று திருஞானசம்பந்தர் திருவருளும், அழல் வண்ணனின் அருங்கருணையும் ஒருசேரப் பெற்றுத் தரணியோர் தழைப்பாராக.

வ. த. இராமசுப்பிரமணியம்

Koviloor Digital Library

பன்னிரு திருமுறைக் குறிப்பு

சைவ சமயம் தொன்மையானது. "தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை" என்று மாணிக்கவாசகர் திருவாக்கின் வண்ணம் சிவ பெருமான் தமிழ்ச் சங்கத்தின் தலைவனாக இருந்து வளர்த்த சிறப்புடையது நற்றமிழ். இதனைத் தமிழ் விரகனாகிய திருஞானசம்பந்தர் பலவாறு போற்றுகின்றார்.

இசைத் தமிழால் ஈசனைப் பாடி மகிழ்வது மன்னுயிர்க்கு இன்றியமையாதது என்பது ஆன்றோர் வாக்கு. இவ் இசையில் + தமிழில் நாட்டங்கொண்ட இறைவனும், இறைவனருள் வாய்க்கப்பெற்ற அருளாளர்களும் பாடிய தமிழ்ப் பாமாலைகள், பெரு மக்களால் முறைப்படுத்தித் தொகுக்கப்பெற்றனவாகும். சைவத் திருமுறையாகிய அவை, பன்னிரு திருமுறை எனப் பகரப்படுவன. இருபத்தேழு அருளாளர்கள் பாடிய இப்பன்னிரு திருமுறை 18,326 பாடல்களைக் கொண்டதாகும்.

இப் பாடல்கள் அரவம் தீண்டி இறந்த பாலகனை எழுப்பியும், எலும்பினைப் பெண்ணாக்கி யும், அசைவின்றி நிலைப்படுத்தப்பட்ட கதவுகளைத் திறந்தும், மூடியும், கல்லைத் தெப்பமாக்கியும், முதலை யுண்ட பாலகனை உயிர்ப்பித்தும், ஊமைப் பெண்ணைப் பேச வைத்தும், நிலைத்த தேரினை ஓடச்

Koviloor Digital Library

செய்தும், வேண்டிய அளவு பொன்னும் மணியும் துகிலும் நெல்லும் அளித்தும், இவ்வாறு பற்பல அற்புதங்களைப் புரிந்தவை. பக்தர்களுக்கு அருள் செய்யும் பரமன், நற்றமிழ் வல்லவர்பால் நயந்து நாடினான் என்பது வெளிப்படை. இத்தகைய அருள் நூல்கள் தமிழுலகத்திற்குக் கிடைத்த பரிசாகும். இவற்றை நாள்தோறும் ஓதும் பெருமக்கள் பலர் நிலவி வருவதும், அத்தகை பெரியோர்களை இறைவனே போன்று போற்றுதலும் இத் திருமண்ணின் சிறப்பு ஆகும்.

பன்னிரு திருமுறைகளை ஓதி உய்தி பெறுவோமாக.

* * *

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் வரலாறு

தோற்றுவாய்

சமயக் குரவர்கள் என்று சொல்லப்படு பவர்கள் நால்வர் ஆவர். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர். இவர்களுள் முதல் மூவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இடம் பெற்றுள்ளனர். (ஆனால் மாணிக்கவாசகர் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் இடம் பெறவில்லை; ,யாரினும் யாரினும் இனிய மாணிக்கவாசகர் இப் பட்டியலில் இடம் பெறாதது ஏனோ தெரியவில்லை.)

திருஞானசம்பந்தர் சீகாழிப் பதியில் திரு அவதாரம் செய்தார். இவர் தம் அவதார மகிமையை "வையம் வாழ யாம்வாழ" என்று திருத்தொண்டர் திருவந்தாதி அருளிச் செய்த நம்பியாண்டார் நம்பி சிறப்பிக்கின்றார். மேலும், முத்தமிழாகரன், மறைபயில் திப்பிய வாசகன், கலை வித்தகன், செழுமலயத் தமிழ்க் கேசரி எனவும், ஆளுடைய பிள்ளையார் திருக்கலம் பகத்தில் கூறுகின்றார். இவரைக் "கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டர் தொகையில் அருளிச் செய்கின்றார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தைப் பாடியருளிய சேக்கிழார் பெருமான், 1256 திருப் பாட்டுகள் வாயிலாக அவர்தம் வரலாற்றை

Koviloor Digital Library

மொழிதலானார். வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, பூத பரம்பரை பொலிய, திருஞானசம்பந்தர் திரு அவதாரம் செய்த நோக்கம் அமையப் பெற்றது எனச் சேக்கிழார் சுட்டிக் காட்டியுள்ளது ஆழ்ந்து உணரத்தக்கது.

செந்தமிழ்ச் சீரின் சிறப்பு மல்கிய 7ஆம் நூற்றாண்டில், பன்னிரண்டு திருநாமங்களைக் கொண்ட சீகாழிப் பதியின் அந்தணர்தம் குடிமரபில், கவுணியர் கோத்திரம் விளங்கச் சிவபாத இருதயர் என்பவருக்கும் அவர்தம் இல்லத்தரசியான பொற் புடைய பகவதியார் என்பவருக்கும் திருமகவாகத் தோன்றியவர் திருஞானசம்பந்தர். இவர்தம் அவதாரச் சிறப்பு, சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கவும், வண்தமிழ் செய்தவம் நிரம்பவும், சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார் எனக் கூறுகின்றார் சேக்கிழார்.

பாலடிசில் பெற்ற பாங்கு

சிவபாத இருதயர் ஒருமுறை நீராடுவதற்குச் செல்லும்போது, சம்பந்தர், உடன் செல்ல முனைந்தார். அவ்வமயம், உடன்போந்த குழந்தையைக் கரையில் இருக்கச்செய்து நீராடத் தொடங்கினார். தந்தையார் குளத்தில் மூழ்கி நீராடும் ஞான்று, குழந்தை சம்பந்தர், 'அம்மே! அப்பா!' எனக் கூவி அழைத்து அழத் தொடங்கினார். தோணிபுரத் திருக்கோயில் சிகரத்தை நோக்கி அழுத அருள் குழந்தைக்குப் 'பொற் கிண்ணத்தில் பால் அடிசில் ஊட்டுக' என ஈசன் உமையவளை நோக்கி மொழிய, உமாதேவி பொற் கிண்ணத்தில் வழங்கிய அமுதத்தை நன்கு பருகினார்

Koviloor Digital Library

ஞானசம்பந்தர். அந்நிலையில் பிள்ளையார் பெற்ற சிறப்பினைச் சேக்கிழார் பெருமான்,

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்

என அருளிச் செய்கின்றார்.

பின்னர் நீராடிக் கரையேறிய சிவபாத இருதயர், தம் குழந்தையின் கடைவாயில் பால் வழிவதைக் கண்டு, "உனக்கு எச்சில் பால் அளித்தவரைக் காட்டு" எனக் கடிந்து நோக்கத் திருஞானசம்பந்தர், "தோடுடைய செவியன் என்று எடுத்து ஓதித் திருப்பதிகம் அருளிச் செய்து அப் பெருமான் இவனன்றே!" என மொழியலானார். எங்கணும் "அர அர" எனும் சிவநாமம் ஒலிக்கத் தேவர்கள் மலர்மாரி பொழிய, அடியவர்கள் புடை சூழத் திருக்கோயிலுள் சென்று வணங்கினார் ஞான சம்பந்தர். ஞானசம்பந்தர் சிவஞானம் பெற்று ஆளுடைய பிள்ளையானார்.

பொற்றாளம் பெற்ற பாங்கு

ஞானசம்பந்தர், அடியவர்கள் புடைசூழத் திருக்கோயில்கள்தோறும் சென்று வழிபட்டுத் திருப்பதிகங்கள் அருளிச் செய்யலானார். திருக் கோலக்கா என்னும் திருத்தலத்தில் ஆளுடைய பிள்ளையார், கையினால் தாளமிட்டுத் திருப்பதிகம் இசைக்கையில் இறைவன் பொற்றாளம் நல்கினார். அது அம்பிகையின் அருள் முன்னிலையில் ஒலிக்கும்

Koviloor Digital Library

சக்தி பெற்றது. பெருகு சந்தப் பாடலின் இசை பெருகத் தாள ஒலியும் கலக்கத் திருமுல்லைவாயில் மயேந்திரப் பள்ளி, குருகாவூர் திருநனிபள்ளி முதலான தலங்கள் சென்று ஞானசம்பந்தர் வழிபட்டார்.

யாழிசை வல்ல திருநீலகண்டத்துப் பெரும் பாணர் தம் துணைவியாராகிய மதங்க சூளாமணி யாருடன் சென்று ஆளுடையபிள்ளையாரை வணங்கித் தொழுது நிற்க, யாழிசையும் உடன் கலந்து எழுந்தது. தில்லை, திருவேட்களம் முதலான திருத் தலங்களை வழிபட்டுத் திருப்பதிகம் அருளிச்செய்து திருமுதுகுன்றம் சார்ந்த ஞானசம்பந்தர், பல தலங்களை வழிபடலானார்.

முத்துச்சிவிகை பெறுதல்

தந்தையாரின் தோள்மீது இவர்ந்தும், நடந்தும் திருத்தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகம் அருளிச் செய்த ஞானசம்பந்தருக்கு ஏறுதற்குச் சிவிகையும், இடக்குடையும், ஊதக்குலவு பொற்சின்னங்களும் அருள்புரிய எண்ணிய ஈசர், அரத்துறையில் விளங்கும் அந்தணர்கள் கனவில் உரைத்து சம்பந்தருக்கும் புகன்றனர். விடிந்ததும் திருக்கோயில் சார, ஆங்கு முத்துச் சிவிகை முதலானவை விளங்கக் கண்டு மகிழ்ந்து இறைவரை வணங்கி, ஞானசம்பந்தர்பால் சென்று சேர்த்தனர். அன்று தொடங்கி ஞான சம்பந்தனார் சிவிகையில் செல்வாராயினர். அரத்துறை, சேய்ஞலூர் முதலான திருத்தலங்கள் சென்று இறைவனைத் தரிசித்து மகிழ்ந்து திருப்பதிகம் அருளிச் செய்யலானார்.

Koviloor Digital Library

திருத்தல யாத்திரை

முறைப்படி உபநயனம் செய்யப்பெற்ற சிவஞான சம்பந்தர், பூந்தராய்தன்னில் திருநாவுக் கரசர் தம் அன்பில் திளைத்து மகிழ்ந்து அடியவர்கள் குழாத்துடன் இருந்தனர். துந்துபி சங்கநாதம் முழங்க, முத்துக்குடை விரிந்திலங்க, அடியவர் திருக்கூட்டம் சூழ முத்துச்சிவிகையில், இறைவர் எழுந்தருளியுள்ள தலங்கள்தோறும் நாடிச் சென்று வணங்கித் தொழுது, திருநீலகண்ட யாழ்ப்பாணரின் யாழிசையுடன் திருப்பதிகம் அருளிச் செய்யலாயினர்.

இவ்வாறு, திருக்கண்ணார்கோயில், புள்ளி ருக்கு வேளூர், திருநின்றியூர், நீடூர், திருப்புன்கூர், திருக்குறுக்கை, திருந்து தேவன்குடி, இன்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, பெரும்புலியூர், நெய்த்தானம், திருமழபாடி, திருக் கானூர், அன்பில் ஆலந்துறை, மாந்துறை, திருமுன்றில் சார்ந்து திருப்பதிகம் அருளிச் செய்து இறைவனை வணங்கி மகிழ்ந்த திருஞானசம்பந்தர், திருப்பாச்சில் ஆச்சிராமம் சார்ந்தார்.

அற்புதம் நிகழ்த்திய அருளாளர்

திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் திருத் தலத்தில், கொல்லி மழவனின் மகள் முயலகன் என்னும் நோயினால் பீடிக்கப்பட்டதையறிந்து, இறைவரைப் போற்றித் திருப்பதிகம் பாடி, “மங்கையை வாட மயல்செய்வதோ இவர் மாண்பே!” என மொழியலுற்று அப்பிணியை நீக்கினார் ஞான சம்பந்தர்.

Koviloor Digital Library

செங்குன்றூரில் மக்கள் குளிர்சுரத்தால் அல்லல் உறுவதையறிந்து “அவ்வினைக்கு இவ்வினை” என எடுத்தோதும் திருநீலகண்டத் திருப்பதிகம் அருளிச் செய்ய, பிணி நீங்கிற்று.

பூமேவு பொற்றலங்கள் பல சார்ந்து திருப்பதிகம் அருளிச்செய்து ஈசனை வணங்கி மகிழ்ந்த திருஞானசம்பந்தருக்குத் திருப்பட்டீச்சரத்தில் முத்துப் பந்தர் அருளிச் செய்தார் பரமன். பற்பல தலங்களை நாடித் தரிசித்து மகிழ்ந்த ஞானசம்பந்தர், திருத்தரும புரத்தில், திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வேண்டு கோளுக்கு இணங்கி யாழ் முரியும் பண்ணிசைத்து நிறைவு புரிந்தார்.

திருமருகல் என்னும் பதியில், ஒரு பெண் தன் துணைவன் பாம்பு தீண்டப்பெற்று இறந்த நிலையில் துன்புற்றுக் கலங்கி இருக்கத் திருஞான சம்பந்தர், திருப்பதிகம் அருளிச் செய்து, “உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே” என்று விண்ணப்பிக்க, இறந்த ஆடவன் உயிர் பெற்று எழுந்தனன்.

திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று அடியவர்களின் பசிப்பிணி நீக்கிய ஆளுடைய பிள்ளையார், திருமறைக்காட்டில், மூடிக் கிடந்த திருக் கதவத்தைத் திருநாவுக்கரசர் திருப்பதிகம் சாற்றித் திறக்கச் செய்ய, அதனை நிலையில் பதிந்து மூடுமாறு திருப்பதிகம் இசைத்தனர்.

பாண்டிய நாடு சார்ந்து சைவம் ஓங்கச் செய்து சமணர்களை அனல்வாதம் புனல்வாதம் ஆகியவற்றின் வாயிலாக வென்று பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கச் செய்தார்.

Koviloor Digital Library

திருமயிலையில், பூம்பாவை என்னும் நங்கையின் எரிந்து சாம்பலான எலும்பினைக் குடத்திட்டுத் திருஞானசம்பந்தர் முன்பு சமர்ப்பணம் செய்ய, மயிலையம்பதியில் எழுந்தருளியிருக்கும் கபாலீச்சரத்தானின் திருவிழாப் பொலிவு தன்னை மனத்தில் இருத்தி அதனைக் "காணாதே போதியோ பூம்பாவாய்" என்று அருளிச் செய்யலானார். எலும்பு அழகிய நங்கையாக வடிவம் கொண்டு உயிர் பெற்று எழுந்த காட்சி யாவரையும் வியக்கச் செய்தது.

பெருஞ்சோதியிற் கலத்தல்

பூமேவு செம்பவள வண்ணர்தம் திருத்தலங்கள் பல சார்ந்து, அடியவர்கள் திருக்கூட்டத்துடன் பெருமானை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்து வரும் திருஞானசம்பந்தருக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று விரும்பினார் சிவபாத இருதயர்.

நல்லூர்ப்பெருமணம் சார்ந்து திருமணம் நனி புரிந்த திருஞானசம்பந்தர், இறைவன் அருள் நனிபதியத் திருவுளங்கொண்டு அடியவர்களும் திருமணம் காணப் போந்த நன்மக்களும் நற்கதி யடையும் முகத்தான் தழல்வண்ணர் திருக்கோயில் முன்பு அணைந்தார். பெருஞ்சோதி கண்டு அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். அனைவரும் அவ் அருட் சோதியுள் புகுந்தனர். திருநீல நக்கர், பெரும்பாணர் முதலான திருத்தொண்டர்களும் முத்துச் சிவிகை சுமந்தவர்களும் மற்றும் உள்ள அனைத்துப் பரிவாரமும் உடன் புகுந்தன. திருஞான சம்பந்தர் தம் துணைவியாருடன் மகுடமாகக் கலந்து

Koviloor Digital Library

இறைவருடன் இரண்டற ஆயினர். தூரத்தே இருந்து நணுகப் பெறாத தேவர்களும் முனிபுங்கவர்களும் அருள் பெருகப் போற்றித் துதித்தனர்.

பாலறாவாயன், ஆளுடைய பிள்ளையார் என்று அழைக்கப்பெறும் முதற் குரவராகிய திருஞான சம்பந்தரின் முத்திப்பிராயம், பதினாறு ஆண்டு என வழங்கப்படுகிறது.

திருஞானசம்பந்தர்தம் பொன்னடியை வணங்கி நலம் யாவும் நனி பேறுவோமாக!

பெருஞானப் பாலுண்டு பேரா
மிரங்கொள்ளும் பிஞ்ஞகனின்
ஒருஞானப் பிள்ளையாய்க் கோள்நீக்கி
நோய்நீக்கி ஓதரிய
குருஞான வள்ளலாய்க் காக்கும்
திருவாய்க் குணம் பெருக்கும்
திருஞான சம்பந்த மூர்த்திநற்
பாதமென் சென்னியதே.

* * *

Koviloor Digital Library

திருமுறை ஆசிரியர்கள் அட்டவணை

வ. எண்.	ஆசிரியர்	நூல்கள்	திரு முறை எண்	பாடல் கள்
1.	திருஞான சம்பந்தர்	தேவாரம்	1	1469
		"	2	1331
		"	3	1346
2.	திருநாவுக்கரசர்	தேவாரம்	4	1069
		"	5	1015
		"	6	980
3.	சுந்தரர்	தேவாரம்	7	1026
4.	மாணிக்க வாசகர்	1. திருவாசகம் 656 2. திருக்கோவையார் 400	8	1056
5.	திருமாளிகைத் தேவர்	திருவிசைப்பா 1. கோயில் ஒளிவகை 11 2. கோயில் உயர்கொடி 11 3. கோயில் உறவாகிய 12 4. கோயில் இணங்கிலா 11	9	
6.	சேந்தனார்	திருவிசைப்பா 1. திருவீழிமிழலை 12 2. திருவாவடுதுறை 11 3. திருவிடைக்கழி 11	9	

Koviloor Digital Library

7.	கருவூர்த்தேவர்	திருவிசைப்பா 1. கோயில் கணம்விரி 11 2. திருக்களந்தை ஆதித்தேச்சரம் 10 3. திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் 11 4. திருமுகத்தலை 10 5. திரைலோக்கிய சுந்தரம் 11 6. கங்கை கொண்ட சோளேச்சரம் 11 7. திருப்பூவணம் 8 8. திருச்சாட்டியக்குடி 10 9. தஞ்சை ராஜராசேச்சரம் 11 10. திருவிடைமருதூர் 10	9	
8.	பூந்துருத்தி நம்பி காட நம்பி	திருவிசைப்பா 1. திருவாரூர் 2 2. கோயில் – முத்துவயிரமணி 10	9	
9.	கண்டராதித்தர்	திருவிசைப்பா கோயில் – மின்னாருருவம் 10	9	
10.	வேணாட்டடிகள்	திருவிசைப்பா கோயில் – துச்சான 10	9	
11.	திருவாலி யமுதனார்	திருவிசைப்பா 1. கோயில் – பாதாதிகேசம் 11 2. கோயில் – பவளமால்வரை 10 3. கோயில் – அல்லாய்ப் பகலாய் 11 4. கோயில் – கோலமலர் 10	9	

Koviloor Digital Library

12.	புருடோத்தம நம்பி	திருவிசைப்பா 1. கோயில் – வாரணி 11 2. கோயில் – வானவர்கள் 11	9	
13.	சேதிராயர் சேந்தனார்	திருவிசைப்பா கோயில் – சேறுலாம் 10 திருப்பல்லாண்டு கோயில் – மன்னுகதில்லை 13	9	301
14.	திருமூல நாயனார்	திருமந்திரம்	10	3047
15.	திருஆலவாய் உடையார் (ஈசன்)	1. திருமுகப் பாசுரம் 1	11	
16.	காரைக்கால் அம்மையார்	2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் – ஒன்று 11 –do– இரண்டு 11 3. திருவிரட்டை மணிமாலை 20 4. அற்புதத் திருவந்தாதி 100	11	
17.	ஐயடிகள் காடவர் கோன்	5. க்ஷேத்திரத் திருவெண்பா 24	11	
18.	சேரமான் பெருமாள் நாயனார்	6. பொன் வண்ணத் தந்தாதி 100 7. திருவாரூர் மும்மணிக்கோவை 30 8. திருக்கயிலாய ஞானஉலா 1	11	
19.	நக்கீரதேவர்	9. கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி 100 10. திருஈங்கோய் மலை எழுபது 70	11	

Koviloor Digital Library

19.	நக்கீரதேவர்	11. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 15 12. திருஎழுகூற்றிருக்கை 1 13. பெருந்தேவபாணி 1 14. கோபப்பிரசாதம் 1 15. கார் எட்டு 8 16. போற்றித் திருக்கலி வெண்பா 1 17. திருமுருகாற்றுப்படை 1 18. திருக்கண்ணப்ப தேவர் திருமறம் 1	11	
20.	கல்லாட தேவர்	19. திருக்கண்ணப்ப தேவர் திருமறம் 1	11	
21.	கபிலதேவர்	20. மூத்த நாயனார் இரட்டை மணிமாலை 20 21. சிவபெருமான் திரு இரட்டை மணிமாலை 37 22. சிவபெருமான் திருவந்தாதி 100	11	
22.	பரண தேவர்	23. சிவபெருமான் திருவந்தாதி 100	11	
23.	இளம்பெருமான் அடிகள்	24. சிவபெருமான் திருமும்மணிக்கோவை 30	11	
24.	அதிரா அடிகள்	25. மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை 23	11	
25.	பட்டினத்துப் பிள்ளையார்	26. கோயில் நான் மணிமாலை 40 27. திருக்கழுமல மும்மணிக் கோவை 30 28. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 30	11	

Koviloor Digital Library

25.	பட்டினத்துப் பிள்ளையார்	29. திருவேகம்ப முடையார் திருவந்தாதி 100 30. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது 10	11	
26.	நம்பியாண்டார் நம்பி	31. திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை 20 32. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 70 33. திருத்தொண்டர் திருவந்தாதி 89 34. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 100 35. திருச்சண்பை விருத்தம் 11 36. ஆளுடைய பிள்ளையார் மும்மணிக்கோவை 30 37. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை 1 38. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 49 39. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை 1 40. திருநாவுக்கரசுதேவர் திருஏகாதசமாலை 11	11	1400
27.	சேக்கிழார்	திருத்தொண்டர் புராணம்	12	4286
				18326

ஆக: திருமுறை ஆசிரியர்கள் : 27

நூல்கள் : 76

திருப்பாட்டு : 18326

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் தேவாரம்

தல வரிசைப் பதிகங்கள் அட்டவணை

வ. எண்.	தலம்	பதிக எண்கள்			
		முதல் திரு முறை	இரண் டாம் திரு முறை	மூன் றாம் திரு முறை	மொத்த பதி கங்கள்
1	2	3	4	5	6
I. தொண்டை நாடு : 25					
1.	திருக்கச்சியேகம்பம்	133	12	41; 114	4
2.	திருக்கச்சிநெறிக் காணாக்காடு			65	1
3.	குரங்கணில் முட்டம்	31			1
4.	மாகறல்			72	1
5.	திருவோத்தூர்	54			1
6.	திருவல்லம்	113			1
7.	திருமாற்பேறு	55; 114			2
8.	திருவூறல்	106			1
9.	இலம்பையங்கோட்டூர்	76			1
10.	திருவிற்கோலம்			23	1
11.	திருவாலங்காடு	45			1
12.	திருப்பாசூர்		60		1
13.	திருக்கள்ளில்	119			1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
14.	திருக்காளத்தி			36; 69	2
15.	திருவொற்றியூர்			57	1
16.	திருவலிதாயம்	3			1
17.	திருவேற்காடு	57			1
18.	மயிலாப்பூர்		47		1
19.	திருவான்மியூர்		4	55	2
20.	திருவிடைச்சுரம்	78			1
21.	திருக்கழுக்குன்றம்	103			1
22.	அச்சிறுபாக்கம்	77			1
23.	திருவக்கரை			60	1
24.	அரசிலி		95		1
25.	இரும்பை மாகாளம்		117		1
	ஆக	15	6	10	31
II. நடுநாடு : 15					
26.	நெல்வாயில் அரத்துறை		90		1
27.	திருத்துங்கானைமாடம் – பெண்ணாடகம்	59			1
28.	எருக்கத்தம்புலியூர்	89			1
29.	திருச்சோபுரம்	51			1
30.	திருவதிகை	46			1
31.	திருமுதுகுன்றம்	12; 53; 93; 131	64	34; 99	7
32.	நெல்வெண்ணெய்			96	1
33.	திருக்கோவலூர்		100		1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
34.	அரையணி நல்லூர்		77		1
35.	வடுகூர்	87			1
36.	திருமாணி குழி			77	1
37.	திருப்பாதிரிப்புலியூர்		121		1
38.	புறவார் பனங்காட்டூர்		53		1
39.	திருவாமாத்தூர்		44; 50		2
40.	திருவண்ணாமலை	10; 69			2
	ஆக	11	8	4	23
III. சோழநாடு காவிரி வடகரைத்தலம் : 54					
41.	கோயில் சிதம்பரம்	80		1	2
42.	திருவேட்களம்	39			1
43.	நெல்வாயில்		26		1
44.	திருக்கழிப்பாலை		21	44	2
45.	நல்லூர்ப் பெருமணம்			125	1
46.	மயேந்திரப்பள்ளி			31	1
47.	தென்திருமுல்லை வாயில்		88		1
48.	கலிக்காமூர்			105	1
49.	திருச்சாய்க்காடு		38; 41		2
50.	காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்	65		112	2
51.	திருவெண்காடு		48; 61	15	3
52.	கீழைத்திருக்காட்டுப் பள்ளி	5			1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
53.	திருக்குருகாவூர் – வெள்ளடை			124	1
54.	சீகாழி — பூந்தராய் கழுமலம் பிரமபுரம் வெங்குரு கொச்சைவயம் சிரபுரம் புகலி வேணுபுரம் புறவம் தோணிபுரம் சண்பை	1; 9; 19; 24; 30; 34; 47; 60; 63; 66; 74; 75; 79; 81; 90; 97; 102; 104; 109; 117; 126; 127; 128; 129	1; 11; 17; 25; 29; 40; 49; 54; 59; 65; 70; 73; 74; 75; 81; 83; 89; 96; 97; 102; 113; 122	2; 3; 5; 7; 13; 24; 37; 43; 56; 67; 75; 81; 84; 89; 94; 100; 110; 113; 117; 118	66
55.	திருக்கோலக்கா	23			1
56.	புள்ளிருக்குவேளூர்		43		1
57.	கண்ணார்கோயில்	101			1
58.	திருக்கடைமுடி	111			1
59.	திருநின்றியூர்	18			1
60.	திருப்புன்கூர்	27			1
61.	திருஅன்னியூர்	96			1
62.	திருவேள்விக்குடி	*			
63.	திருமணஞ்சேரி		16		1
64.	கருப்பறியலூர்		31		1
65.	வாழ்கொளிபுத்தூர்	40	94		2
66.	ஓமாம்புலியூர்			122	1
67.	திருநாரையூர்		86	102;107	3

Koviloor Digital Library

1	2	3	4	5	6
68.	கடம்பூர்		68		1
69.	பந்தணைநல்லூர்			121	1
70.	திருக்கோடிக்கா		99		1
71.	திருமங்கலக்குடி		10		1
72.	திருப்பனந்தாள்			62	1
73.	சேய்ஞலூர்	48			1
74.	திருந்துதேவன் குடி			25	1
75.	திருவியலூர்	13			1
76.	இன்னம்பர்			95	1
77.	திருப்புறம்பயம்		30		1
78.	திருவிசயமங்கை			17	1
79.	திருவைகாவூர்			71	1
80.	வடகுரங்காடுதுறை			91	1
81.	திருப்பழனம்	67			1
82.	திருவையாறு	36; 120; 130	6; 32		5
83.	திருநெய்த்தானம்	15			1
84.	பெரும்புலியூர்		67		1
85.	திருமழபாடி		9	28; 48	3
86.	திருப்பழுவூர்		34		1
87.	திருக்கானூர்	73			1
88.	அன்பில் ஆலந்துறை	56			1
89.	திருமாந்துறை		110		1
90.	திருப்பாற்றுறை	56			1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
91.	திருவானைக்கா		23	53	2
92.	திருப்பைஞ்ஞீலி			14	1
93.	திருப்பாச்சில் ஆச்சிராமம்	44			1
94.	திருஈங்கோய்மலை	70			1
* காவிரி தென்கரைத் தலத்தில் – திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் என்னும் திருப்பதிக எண் 90இல் இத்தலத்திற்குப் பதிகம் மூன்றாம் திருமுறையில் அமையப் பெற்றுள்ளது.					
	ஆக பதிகங்கள்	47	45	42	134
IV. காவிரி தென்கரைத் தலம் : 100					
95.	திருப்பராய்த்துறை	135			1
96.	திருக்கற்குடி	43			1
97.	முக்கீச்சரம்		120		1
98.	திருச்சிராப்பள்ளி	98			1
99.	நெடுங்களம்	52			1
100.	மேலைத் திருக்காட்டுப் பள்ளி			29	1
101.	திருக்கண்டியூர் வீரட்டம்			38	1
102.	திருச்சோற்றுத்துறை	28			1
103.	திருவேதிகுடி			78	1
104.	தென்குடித்திட்டை			35	1
105.	திருப்புள்ள மங்கை	16			1
106.	சக்கரப்பள்ளி			27	1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
107.	திருக்கருகாவூர்			46	1
108.	திருநல்லூர்	86	57	83	3
109.	ஆவூர் பசுபதீச்சரம்	8			1
110.	பட்டீச்சரம்			73	1
111.	திருவலஞ்சுழி		2; 106	106	3
112.	குடமூக்கு			59	1
113.	குடந்தைக்காரோணம்	72			1
114.	திருநாகேச்சரம்		24; 119		2
115.	திருவிடைமருதூர்	32; 95; 110; 121; 122	56		6
116.	தென்குரங்காடுதுறை		35		1
117.	வைகல் மாடக்கோயில்			18	1
118.	திருநல்லம்	85			1
119.	திருக்கோழம்பம்		13		1
120.	திருவாவடுதுறை			4	1
121.	திருத்துருத்தி		98	90	2
122.	திருவழுந்தூர்		20		1
123.	மயிலாடுதுறை	38		70	2
124.	திருஇளநகர்		78		1
125.	திருப்பறியலூர் வீரட்டம்	134			1
126.	திருச்செம்பொன் பள்ளி	25			1
127.	திருநனிபள்ளி		84		1
128.	திருவலம்புரம்			103	1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
129.	தலைச்சங்காடு		55		1
130.	ஆக்கூர் – தான்தோன்றிமாடம்		42		1
131.	திருக்கடவூர்			8	1
132.	திருக்கடவூர் மயானம்		80		1
133.	வேட்டக்குடி			66	1
134.	திருத்தெளிச்சேரி		3		1
135.	தருமபுரம்	136			1
136.	திருநள்ளாறு	7; 49	33	87	4
137.	கோட்டாறு		52	12	2
138.	அம்பர் பெருந்திருக்கோயில்			19	1
139.	அம்பர் மாகாளம்	83	103	93	3
140.	மீயச்சூர்		62		1
141.	திலதைப்பதி		18		1
142.	திருப்பாம்புரம்	41			1
143.	சிறுகுடி			97	1
144.	திருவீழிமிழலை	4; 11; 20; 35; 82; 92; 124; 132		9; 80; 85; 98; 111; 116; 119	15
145.	பேணுபெருந்துறை	42			1
146.	திருநறையூர்ச் சித்தீச்சரம்	29; 71	87		3
147.	அரிசிற்கரைப்புத்தூர்		63		1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
148.	திருச்சிவபுரம்	21; 112; 125			3
149.	கருக்குடி			21	1
150.	திருவாஞ்சியம்		7		1
151.	திருப்பனையூர்	37			1
152.	திருவிற்குடி வீரட்டம்		108		1
153.	திருப்புகலூர்	2	115		2
154.	திருப்புகலூர் வர்த்தமனீச்சரம்		92		1
155.	இராமனதீச்சரம்	115			1
156.	திருச்செங்காட்டங்குடி	61		63	2
157.	திருமருகல்	6	18		2
158.	திருச்சாத்தமங்கை			58	1
159.	திருநாகைக் காரோணம்	84	116		2
160.	சிக்கல்		8		1
161.	கீழ்வேளூர்		105		1
162.	தேவூர்		82	74	2
163.	திருவாரூர்	91; 105	79; 101	45	5
164.	திருவிளமர்			88	1
165.	கரவீரம்	58			1
166.	பெருவேளூர்			64	1
167.	குடவாயில்		22; 58		2
168.	திருச்சேறை			86	1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
169.	நாலூர்மயானம்		46		1
170.	இரும்பூளை		36		1
171.	அரதைப் பெரும்பாழி			30	1
172.	அவனிவனல்லூர்			82	1
173.	பரிதிநியமம்			104	1
174.	வெண்ணியூர்		14		1
175.	பாதாளீச்சரம்	108			1
176.	திருக்களர்		51		1
177.	திருச்சிற்றேமம்			42	1
178.	திருவுசாத்தானம்			33	1
179.	இடும்பாவனம்	17			1
180.	கடிக்குளம்		104		1
181.	தண்டலைநீணெறி			50	1
182.	கோட்டூர்		109		1
183.	திருவெண்டுறை			61	1
184.	கொள்ளம்புதூர்			6	1
185.	திருக்கொள்ளிக்காடு			16	1
186.	திருத்தெங்கூர்		93		1
187.	திருநெல்லிக்கா		19		1
188.	திருக்காறாயில்		15		1
189.	வலிவலம்	50; 123			2
190.	கைச்சினம்		45		1
191.	திருக்கோளிலி	62			1

Koviloor Digital Library

1	2	3	4	5	6
192.	திருவாய்மூர்		111		1
193.	திருமறைக்காடு	22	37; 91	76	4
194.	அகத்தியான்பள்ளி		76		1
(குறிப்பு:– காவிரி வடகரைத் தலமாகிய திருவேள்விக்குடி திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் என்னும் தலைப்பில் தென்கரைத் தலம் – 3ஆம் திருமுறையில் திருப்பதிகம் அமைந்துள்ளது.					
	ஆக	52	51	47	150
V. பாண்டிய நாடு : 13					
195.	ஆலவாய் (மதுரை)*	94	66	39; 47; 51; 52; 108; 115; 120	9
196.	திருஆப்பனூர்	88			1
197.	திருப்பரங்குன்றம்	100			1
198.	திருவேடகம்			32	1
199.	கொடுங்குன்றம்	14			1
200.	திருப்புத்தூர்	26			1
201.	திருப்புனவாயில்			11	1
202.	இராமேச்சரம்			10; 101	2
203.	திருவாடானை		112		1
204.	திருக்கானப்பேர்			26	1
205.	திருபூவணம்	64		20	2
206.	திருக்குற்றாலம் (குறும்பலா)	99	71		2

Koviloor Digital Library

1	2	3	4	5	6
207.	திருநெல்வேலி			92	1
	ஆக	7	3	14	24
*குறிப்பு:– முதலாம் திருமுறை – திருநள்ளாறும் (காவிரி தென்கரைத்தலம்) திருவாலவாயும் (பாண்டிய நாட்டுத்தலம்) பதிக எண் 7இல் அமையப்பெற்றுள்ளது.					
VI. கொங்கு நாட்டுத் தலம் : 4					
208.	திருநணா		72		1
209.	கொடிமாடச் செங்குன்றூர்	107			1
210.	பாண்டிக்கொடுமுடி		69		1
211.	கருவூர்		28		1
	ஆக	1	3	–	4
VII. துளுவ நாடு : 1					
212.	திருக்கோகர்ணம்			79	1
	ஆக	–	–	1	1
VIII. வடநாடு : 5					
213.	திருப்பழுப்பதம் – ஸ்ரீசைலம்	118			1
214.	இந்திரநீல பருப்பதம்		27		1
215.	அனேகதங்காவதம்		5		1
216.	திருக்கேதாரம்		114		1
217.	நொடித்தான்மலை – (கயிலாயம்)	68		68; 109	3
	ஆக	2	3	2	7

Koviloor Digital Library

1	2	3	4	5	6
IX. ஈழநாடு : 2					
218.	திருக்கோணமலை			123	1
219.	திருக்கேதீச்சரம்		107		1
	ஆக	–	1	1	2
X. பொது : 7					
220.	அவ்வினைக்கில் வினை	116			1
221.	திருச்க்ஷேத்திரக் கோவை – ஆரூர் தில்லை		39		1
222.	வேயுறு தோளிபங்கன்		85		1
223.	பஞ்சாக்கரத் திருப்பதிகம் – துஞ்சலும் துஞ்சலில்லா			22	1
224.	பொது – கல்லாநிழல்			40	1
225.	நமச்சிவாயத் திருப்பதிகம் – காதலாகிக் கசிந்து			49	1
226.	பொது – வாழ்க அந்தணர்			54	1
	ஆக	1	2	4	7

Koviloor Digital Library

திருநாட்டுத் தலப் பதிக அட்டவணை

வ. எண்.	நாடு விவரம்	தலங் கள்	பதிகங்களின் எண்ணிக்கை			மொத்த பதிகங் கள்
			முதல் திரு முறை	இரண் டாம் திரு முறை	மூன் றாம் திரு முறை	
I.	தொண்டைநாடு	25	15	6	10	31
II.	நடு நாடு	15	11	8	4	23
III.	காவிரி வடகரை	54	47	45	42	134
IV.	காவிரி தென்கரை	100	52	51	47	150
V.	பாண்டிய நாடு	13	7	3	14	24
VI.	கொங்கு நாடு	4	1	3	–	4
VII.	துளுவ நாடு	1	–	–	1	1
VIII.	வடநாடு	5	2	3	2	7
IX.	ஈழநாடு	2	–	1	1	2
X.	பொது	7	1	2	4	7
	ஆக	226	136	122	125	383

புதியதாகக் கிடைக்கப் பெற்றவை:

1. திருமறைக்காடு காவிரி தென்கரைத் தலம் 1
2. திருவிடைவாய் – " " " 1
3. கிளியன்னவூர் – " " " 1

386

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் தேவாரம்

பண்களின் அட்டவணை

வ. எ ண்.	பண்கள்	பதிக எண் கள்	மொத்த பதிகம்		
			முதல் திரு முறை	இரண் டாம் திரு முறை	மூன் றாம் திரு முறை
1.	நட்டபாடை	1–22	22		
2.	தக்க ராகம்	23–46	24		
3.	பழந்தக்க ராகம்	47–62	16		
4.	தக்கேசி	63–74	12		
5.	குறிஞ்சி	75–103	29		
6.	வியாழக் குறிஞ்சி	104–128	25		
7.	மேகராகக் குறிஞ்சி	129–135	7		
8.	யாழ்மூரி	136	1		
9.	இந்தளம்	1–39		39	
10.	சீகாமரம்	40–53		14	
11.	காந்தாரம்	54–82		29	
12.	பியந்தைக் காந்தாரம்	83–96		14	
13.	நட்டராகம்	97–112		16	
14.	செவ்வழி	113–122		10	
15.	காந்தார பஞ்சமம்	1–24			24
16.	கொல்லி	25–41			17
17.	கொல்லிக்கௌவாணம்	42			1

Koviloor Digital Library

18.	கௌசிகம்	43–56, 117			15
19.	பஞ்சமம்	57–66			10
20.	சாதாரி	67–99			33
21.	பழம்பஞ்சுரம்	100–116			17
22.	புறநீர்மை	118–123			6
23.	அந்தாளிக் குறிஞ்சி	124–125			2
	ஆக		136	122	125

பிற்சேர்க்கை

1.	கொல்லி	திருமறைக்காடு –	1
2.	”	திருவிடைச்சுரம் –	1
3.	கௌசிகம்	கிளியன்னவூர் –	1
		ஆக	3

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

பண்களின் அட்டவணை

வ. எண்.	பண்	பதிக எண்கள்	மொத்த பதிகம்
1.	நட்டபாடை	1–22	22
2.	தக்க ராகம்	23–46	24
3.	பழந்தக்க ராகம்	47–62	16
4.	தக்கேசி	63–74	12
5.	குறிஞ்சி	75–103	29
6.	வியாழக் குறிஞ்சி	104–128	25
7.	மேகராகக் குறிஞ்சி	129–135	7
8.	யாழ்மூரி	136	1
	ஆக		136

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருத்தலங்கள் வரிசை

பதிகம் – பொருளடக்கம்

Koviloor Digital Library

1	2	3
(ஊ)	சிரபுரம்:	
	பல்லடைந்த	47
	வாருறுவனமுலை	109
(எ)	தோணிபுரம்:	
	வண்டரங்கப்புனல்	60
(ஏ)	சண்பைநகர்:	
	பங்கமேறுமதி	66
(ஐ)	திருப்புறவம்:	
	நறவ நிறைவண்டறை	74
	எய்யாவென்றி	97
(ஒ)	வெங்குரு:	
	காலை நன்மாமலர்	75
2.	திருப்புகலூர்:	
	குறிகலந்த இசை	2
3.	திருவலிதாயம்:	
	பத்தரோடு பலரும்	3
4. (அ)	திருப்புகலியும் திருவீழிமிழலையும்:	
	மைம்மரு பூங்குழல்	4
(ஆ)	திருவீழிமிழலை:	
	சடையார் புனல்	11
	தடநிலவியமலை	20
	அரையார் விரிகோவண	35
	இரும்பொன்மலை	82
	வாசிதீரவேகாசு	92
	அலர்மகண் மலிதர	124
	ஏரிசையும் வடவாலின்	132
5.	கீழைத் திருக்காட்டுப்பள்ளி:	
	செய்யருகே புனல்	5

Koviloor Digital Library

Koviloor Digital Library

1	2	3
18.	திருநின்றியூர்: சூலம்படை சுண்ணப்பொடி	 18
19.	திருச்சிவபுரம்: புவம்வளி கனல்புனல்புவி இன்குரல் இசைகெழும் கலைமலியகலல்குல்	 21 112 125
20.	திருமறைக்காடு: சிலைதனை நடுவிடை	 22
21.	திருக்கோலக்கா: மடையில் வாளைபாய	 23
22.	திருச்செம்பொன்பள்ளி: மருவார் குழலிமாதோர்	 25
23.	திருப்புத்தூர்: வெங்கள்விம்மு வெறியார்	 26
24.	திருப்புன்கூர்: முந்திநின்ற வினைகள்	 27
25.	திருச்சோற்றுத்துறை: செப்பநெஞ்சேநெறிகொள்	 28
26.	திருநறையூர்ச் சித்தீச்சரம்: ஊருலாவு பலிகொண்டு பிறைகொள் சடையர்	 29 71
27.	குரங்கணில் முட்டம்: விழுநீர் மழுவாட்படை	 31
28.	திருவிடைமருதூர்: ஓடே கலன்உண்பது தோடொர்காதினன் மருந்தவன் வானவர் நடைமரு திரிபுர மெரியுண விரிதரு புலியுரி விரவிய	 32 95 110 121 122

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

பாடல் பெற்ற திருத்தலங்களின் தொகுப்பு

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்	44
திருஞானசம்பந்தர், அப்பர்	52
திருஞானசம்பந்தர், சுந்தரர்	13
அப்பர், சுந்தரர்	2
திருஞானசம்பந்தர்	112
திருநாவுக்கரசர் (அப்பர்)	28
சுந்தரர்	25
மொத்த தலங்கள்	276

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

தேவாரம்

முதல் திருமுறை

1. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம் - சீகாழி என்று வழங்கப்படுவது. திருஞான சம்பந்தர் திருஅவதாரம் செய்த பதி. ஞானப்பால் அருந்திப் பாடியது. இதற்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு.

1. பிரமபுரம் – பிரமன் வழிபட்டதால் அழைக்கப் படுதல்.
2. வேணுபுரம் – இறைவன் மூங்கில் வடிவில் தோன்றி னான்.
3. புகலி – தேவர்களின் புகலிடமாய் விளங்கியது
4. வெங்குரு – குருபகவான் வழிபட்டது.
5. தோணிபுரம் – பிரளயகாலத்தில் ஈசன் தோணியில் காட்சி தருதல்.
6. பூந்தராய் – பூமியைப் பிளந்த இரணியாக்கதனை வதம் செய்த வராகமூர்த்தி (திருமால்) வழிபட்டது.
7. சிரபுரம் – இராகுக் கிரகம் பூசித்தது.
8. புறவம் – புறா வடிவத்தில் வந்த அக்கினியால் சிபிச் சக்கரவர்த்தி நற்கதியடைந்தது.

Koviloor Digital Library

9. சண்பை – சண்பை என்னும் கோரைப் புல்லால் மடிந்த தமது குலத்தினரால் தனக்கு நேர்ந்த பழியானது பற்றாதவாறு கண்ணபிரான் (திருமால்) வழிபட்டது.

10. காளிபுரம் – காளி வழிபட்டதால் ஸ்ரீகாளி - சீகாழி.

11. கொச்சைவயம் – மச்சகந்தியை விரும்பிய பழிச்சொல் நீங்க - (கொச்சைப்படுவது) பராசரர் வழிபட்டது.

12. கழுமலம் – மலத்தொகுதி விலகுமாறு உரோமச முனிவர் வழிபட்டது.

சுவாமி : பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டை நாதர்

அம்பிகை : பெரியநாயகி, திருநிலைநாயகி

தல மரம் : பாரிஜாதம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம், காளி தீர்த்தம் முதலான இருபத்திரண்டு உள்ளன.

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

1. தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து
ஏத்தஅருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: தோடு என்னும் அணியை அணிந்துள்ள, உமாதேவியை இடப்பாகம் உடைய சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறி, தூய வெண்மதியைச் சூடி திருவெண்ணீறு மேனியில் பொலிய என் உள்ளத்தைக்

Koviloor Digital Library

கவர்ந்தவன். அப்பெருமான், ஒரு காலத்தில் நான்முகனுடைய வழிபாட்டினை ஏற்று அருள் செய்தவன். அவனே எனக்குக் காட்சி தந்தருளியவன். அவன் இவனே அல்லவா!

சிறப்புரை: சிவபெருமானுடைய திருக்கோலமும், அவனுடைய கருணையும் அப்பெருமானை வழிபடுபவர்களுக்கு அருள்புரியும் பண்பும் இப் பாடலில் சிறப்பிக்கப்படுகிறது.

செவி – அழகு. செவியின் – அழகன்.

2. முற்றல்ஆமையிள நாகமோடுஏனம்
முளைக்கொம்புஅவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலி தேர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கற்றல்கேட்டல்உடை யார்பெரியார்கழல்
கையால்தொழுது ஏத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: ஆமையோடு, நாகம் முதலானவைகளை ஆபரணமாகக் கொண்டு திருஓடு ஏந்தி பிச்சை கொள்ளும் சிவபெருமான், என் உள்ளத்தைக் கவர்ந்தவன். நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர் களும், கேள்வி ஞானம் பெற்றவர்களும், திருத்தொண்டு செய்யும் பெருமக்களும் கரங்கூப்பி வணங்கி நிற்க இடபவாகனத்தில் காட்சி தரும் பெருமான் இவனல்லவா?

சிறப்புரை: தொண்டு செய்பவர்கள் பெரியவர்கள் என்பதும் அத்தகையயோர்கள் திருக்கோயிலுக்குச் சென்று ஈசன் திருக்கழலைக் கைகளால் தொழுது போற்றுகின்றனர் என்பதும் குறிப்பால் அறிக.

பெரியார் – திருத்தொண்டர்கள்.

Koviloor Digital Library

3. நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண் மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளம்கவர் கள்வன்
ஊர்பரந்தஉல கின்முதலாகிய
ஓரூர்இது என்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: கங்கை தங்கும் சடையில் குளிர்ந்த வெண்ணிலவைச் சூடி, அழகிய வளைகள் கைகளிலிருந்து நழுவிச் செல்லுமாறு என் உள்ளத்தையும் மேனியையும் உருகச் செய்து கவர்ந்தவன் சிவபெருமான். உலகிலுள்ள ஊர்கள் யாவும் பிரளய காலத்தில் அழிந்தாலும், அழியாது எப்போதும் நிலவும் பிரமபுரத்தில் இருக்கும் பெருமான் இவனல்லவா!

சிறப்புரை: தேய்ந்த நிலவு ஈசன்பாற் சென்று வளரும் தன்மையுற்ற செயலானது, சிவபெருமான் புரிந்த அருட் செயலும் அவன் கொண்டுள்ள கருணையும் நினைக்குந் தோறும் தோன்றிய உணர்வு, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் ஆற்றலாய் வெள்வளை நழுவும் காட்சி யமைந்தது.

நீர் – கங்கை; ஓர்நிலா – ஒருகலையுடைய நிலவு; ஓரூர் – ஒப்பற்ற ஊர்; பேர்பரந்த – பெரும் புகழ் எல்லா இடங்களிலும் சென்று விளங்குதல்.

4. விண்மகிழ்ந்தமதில் எய்ததும்அன்றி
விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க் கொன்றை
மலிந்தவரை மார்பில்

Koviloor Digital Library

பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: வானத்தில் பரந்து சென்று துன்புறுத்தும் தன்மையில் மகிழ்ச்சி கொண்ட முப்புரக் கோட்டை களை எரித்ததும் அன்றி, பிரமனுடைய கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பிச்சையேற்று என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அரவமும் கொன்றை மலரும் மார்பினில் பொலிய உமாதேவியை மகிழ்ந்து இடப்பாகத்தில் வைத்து பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

மண் மகிழ்ந்த அரவம் – புற்றை விரும்பும் நாகம்.

5. ஒருமைபெண்மைஉடை யன்சடையன்விடை
ஊரும்இவன் என்ன
அருமையாகஉரை செய்யஅமர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ள மதிந்ததோர்
காலம்இது என்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில் அமரும் சிவபெருமான் அருமையான உரைகளைச் சொல்லும் பொருட்டு எனது உள்ளம் அமர்ந்து என்னைக் கவர்ந்தவன். ஊழிக் காலத்திலும் அழியாத பெருமையுடைய பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!

சிறப்புரை: சிவபெருமான் ஞானசம்பந்தப் பெருமானுடைய உள்ளத்தில் அருமையாக உரை

Koviloor Digital Library

செய்ய அமர்ந்த நிலையினை "எனதுரை தனதுரை யாக" என்றும்; "நல்லுரை ஞான சம்பந்தன்" என்றும் பிறிதோர் இடங்களில் குறிக்கப்பட்டுள்ளதும், ஈசன் பிறருக்குத் தோற்றம் தராமல் திருஞானசம்பந்தர் உள்ளத்தில் அமர்ந்து கவர்ந்த கள்வன் என்றும் சுட்டப் படுவதை உணர்க.

6. மறைகலந்தஒலி பாடலோடு ஆடலர்
ஆகிமழு வேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன்
உள்ளம்கவர் கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர்
சோலைக்கதிர் சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: வேத ஒலி முழங்க, பாடலுடன் ஆடலும் செய்து மழு ஏந்தி இருப்பவன் ஈசன். அவன் என்னுடைய கைகளில் உள்ள வளைகள் தாமே கழன்று விழும்படி என் உள்ளத்தைக் கவர்ந்து உருகச் செய்தவன். அடர்ந்த சோலைகள் திகழ்ந்து நறுமணம் வீச நிலவின் தன்மையுடைய பிரம்மபுரத்தில் மேவிய பெருமான் இவனல்லவா!

சிறப்புரை: உள்ள உருக்கம் ஊன் சுருங்கும் நிலைதரும் என்பது இத்திருப்பாட்டில் "வெள்வளை சோர" என்பது உணர்த்திற்று.

இறை – கை; முன்கை. கறை – இருள், கருமை (அடர்த்தி).

7. சடைமுயங்குபுன லன்அனலன்எரி
வீசிச்சதிர் வெய்த
உடைமுயங்குஅர வோடுஉழிதந்துஎனது
உள்ளம்கவர் கள்வன்

Koviloor Digital Library

கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல்அம்
பொன்னஞ்சிறகு அன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: சடையில் கங்கையும் கரத்தில் நெருப்பும் ஒளிதந்து பெருமை கொள்ளவும், நாகமானது இறுகப் பற்றி உடலின் மீது திரியவும் காட்சி தந்து என் உள்ளத்தைக் கவர்ந்த சிவபெருமான், உப்பங்கழி பொருந்திய சோலையில் அன்னப் பறவைகள் தம் பேடைகளுடன் கூடியுள்ள பிரமாபுரத்தில் இருப்பவன். அவன் இவனல்லவா!

சிறப்புரை: அன்னப் பறவைகள் தம் பெடையுடன் கூடி மகிழ்ந்துள்ள காட்சி சிவசக்தியின் போக சாரத்தைக் குறிப்பது. ஈசனைப் பற்றுதலால் அடையும் பெருமை இங்கு நன்கு உணர்த்தப்படுகிறது.

புனல் – கங்கை. சதிர்வு – பெருமை. உழிதரல் – திரிதல், பொருந்தி உலவுதல்.

8. வியர்இலங்குவரை உந்திய தோள்களை
வீரம்விளை வித்த
உயர்இலங்கைஅரை யன்வலிசெற்றுஎனது
உள்ளம்கவர் கள்வன்
துயர்இலங்கும்உல கில்பலஊழிகள்
தோன்றும்பொழுது எல்லாம்
பெயர்இலங்குபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: சினத்தின் வயப்பட்டு வீரத்தைக் காட்டும் வகையில் கயிலையைப் பெயர்த்த இலங்கை அரசனுடைய வலிமையை அழித்து எனது உள்ளத்தைக் கவர்ந்த ஈசன், வினையின் கன்மத்தைச்

Koviloor Digital Library

சேர்த்துத் துயரை விளைவிக்கும் இந்த உலகில் ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்து நின்று தனது சிறப்பினை நல்கும் பதியாகிய பிரமபுரத்தில் மேவியவன். அவன் இவனல்லவா!

வியர் – சினம். பெயர் – புகழ், தனது பெயர் நிலைத்திருக்குமாறு விளங்குதல்.

9. தாள்நுதல் செய்துஇறை காணியமாலொடு
 தண்தாமரை யானும்
நீணுதல்செய்துஒழிய நிமிர்ந்தான் எனது
 உள்ளம்கவர் கள்வன்
வாள்நுதல்செய்மக ளிர்முதலாகிய
 வையத்தவர் ஏத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய
 பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: திருவடியைக் காணத் திருமாலும் திருமுடியைக் காணப் பிரமனும் முயற்சி செய்ய, அவர்கள் செயல் பயனற்றவாகச் செய்யும் வகையில் நீண்டு வளர்ந்தவனாகிய ஈசன் எனது உள்ளத்தைக் கவர்ந்தவன். வாள்போன்ற நெற்றியை உடைய மகளிர் முதலாக உலகத்தவர் அனைவரும் ஏத்தப் பேணிக் காக்கும் பிரமாபுரம் மேவிய பெருமான் இவன் அல்லவா!

சிறப்புரை: 'வாள்நுதல் செய்மகளிர்' என்பது வாளின் கூர்மை, அதனைப் பெற்றிருப்பவரின் உறுதி வீரம் காட்டுதலைப் போன்று கற்பு நெறியின்படி விளங்கும் மகளிரின் சிறப்பு புலப்படுத்தப் படுகிறது. 'பேணுதல் செய் பிரமாபுரம் பெம்மான்' என்பது திருத்தலத் தையும், தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனையும்

Koviloor Digital Library

சுட்டுகின்றது. நீணுதல், நிமிர்ந்தான் - ஓங்கியுயரும் சிறப்பு அறிவிக்கப்படுகிறது.

தண் தாமரையான் - பிரமன்.

10. புத்தரோடுபொறி யில்சமணும்புறம்
கூறநெறி நில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தெனது
உள்ளம்கவர் கள்வன்
மத்தயானைமறுக அவ்உரிபோர்த்ததோர்
மாயம்இது என்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய
பெம்மான்இவன் அன்றே.

தெளிவுரை: *புலன் உணர்வுகளை நீத்த புத்தரும் சமணரும் நன்னெறியில் அமையாத மாற்றுக் கருத்துக்களைக் கூறிடினும் பிச்சையேற்று எனது உள்ளத்தைக் கவர்ந்து, செருக்குற்ற யானையை அழித்து அதன் தோலைப் போர்வையாக்கிக் கொண்டு பின்னர் மாயை காட்டிப் பித்தனைப் போன்று பிரமாபுரம் மேவிய பெருமான் இவனல்லவா!*

சிறப்புரை: *வீரத்தைக் காட்டும் செயலாக யானையின் தோலை உரித்து அதன் அடையாளமாக அதன் தோலைத் தன் தோளில் போர்த்திக் கொண்டவனாயினும் பக்தர்களின் அன்பிற்கு வயப்பட்டு எளியவனாக உள்ள காட்சி பித்தர் போலும் எனச் சுட்டப் பெறுதல் காண்க.*

மத்தயானை - செருக்கு, மயக்கம் உற்ற யானை. மறுக - துன்புற.

11. அருநெறியமறை வல்லமுனியகன்
பொய்கையலர் மேய

Koviloor Digital Library

பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மான்இவன் தன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
பந்தன்உரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளி தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மறைவல்ல பிரமன் பூசித்த பிரமாபுரம் மேவிய பெருமானை ஒன்றிய மனத்தினால் உணர்ந்து ஞானசம்பந்தன் உரைத்த திருநெறிய இத் தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவருடைய தொல்வினை எளிதாகத் தீரும்.

குறிப்பு: இத்திருப்பதிகம், திருஞானசம்பந்தருக்கு உமா தேவியார் பொற்கிண்ணத்தில் ஞானப்பால் கறந்து அமுது செய்வதற்கு அளித்ததும் அவர் தம் திருவாயில் பால் அருந்திய சுவடு கண்ட தந்தையார் அதன் காரணத்தை வினவிய ஞான்று எழுந்தது. "பெம்மான் இவனன்றே" என்னும் தொடர் அண்மைச் சுட்டு. ஆதலால் ஞானசம்பந்தருக்கு ஈசன் அண்மையில் உள்ளதைக் குறிப்பால் அறியலாம்.

2. திருப்புகலூர்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். திருநாவுக் கரசர் முத்தித் தலம். அக்னி பகவான் பூசித்தது. முருக நாயனார் திருஅவதாரம் செய்தது; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கல்லைப் பொன்னாக்கி அற்புதம் நிகழ்த்திய இடம் இதுவே.

சுவாமி : அக்னிபுரீஸ்வரர், கோணப் பிரான்

அம்பிகை : கருந்தாள்குழலி

Koviloor Digital Library

தல மரம் : *புன்னை மரம்*

தீர்த்தம் : *அக்னி தீர்த்தம் (பானதீர்த்தம்)*

பண் : *நட்டபாடை*

திருச்சிற்றம்பலம்

12. குறிகலந்தஇசை பாடலினான்நசை
யால்இவ்உலகு எல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாய்எருது
ஏறிப்பலி பேணி
முறிகலந்ததொரு தோல்அரைமேல்உடை
யான்இடம்மொய்ம் மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்துஅயலேபுயல்
ஆரும்புக லூரே.

தெளிவுரை: பேரின்பத்தை நோக்கமாகக் கொண்டு இசைப் பாடலில் பொருந்தும் ஒருவனாய் இந்த உலகில் நன்னெறியை இழைக்கும் விருப்பத்தினாலும் தன்மையினாலும் இடப வாகனத்தில் வீற்றிருந்தும், பிச்சையேற்றும் தோலாடையை உடையவனாகிய ஈசன் விளங்கும் இருப்பிடமானது நறுமணம் கமழும் நீர்நிலை சூழ்ந்த திருப்புகலூர் ஆகும்.

குறிகலந்த இசை — பேரின்ப நோக்கம் தோயும் விதத்தில் ஈர்க்கும் இசை. நெறிகலந்ததொரு நீர்மை — ஒழுக்கத்தில் தோயும் தன்மை – இனிமை. மொய்ம்மலர் — நெருக்கமாக மணம் தரும் மலர்; தாய்மைக்குணம் மிக்க என்பதும் அமையும்.

13. காது இலங்குகுழை யன்இழைசேர்திரு
மார்பன்ஒரு பாகம்
மாது இலங்குதிரு மேனியினான்கரு
மானின்உரி யாடை
மீதுஇலங்க அணிந்த தான்இமையோர்தொழ
மேவும்இடம் சோலைப்

Koviloor Digital Library

போதுஇலங்குநசை யால்வரிவண்டுஇசை
பாடும்புக லூரே.

தெளிவுரை: ஒரு காதில் குழையை உடையவன்; பூணூல் இழையும் மார்பினன்; உமாதேவியார் ஒரு பாகத்தில் விளங்கும் திருமேனி யுடையவன்; யானையின் தோலை உரித்து மேலாடையாகக் கொண்டவன்; அத்தகைய ஈசன் தேவர்கள் எல்லாம் தொழுது வணங்க இருப்பிடமாகக் கொண்ட இடம் சோலைகள் விளங்க வண்டுகள் இசைபாடும் புகலூர் ஆகும்.

14. பண்நிலாவும்மறை பாடலினான்இறை
சேரும்வளை அங்கைப்
பெண்நிலாவஉடை யான்பெரியார்கழல்
என்றும்தொழுது ஏத்த
உள்நிலாவியவர் சிந்தையுள்நீங்கா
ஒருவன்இடம் என்பர்
மண்நிலாவும்அடி யார்குடிமைத்தொழில்
மல்கும்புக லூரே.

தெளிவுரை: பண் திகழும் வேதத்தினன்; முன்கையில் வளையணிந்த அழகிய கரத்தையுடைய உமை யம்மையை இடப்பாகத்தில் உடையவன்; திருத் தொண்டர்களின் திருவடிகளைத் தொழுது போற்றும் சிந்தையுடையவர்களின் சிந்தையில் நீங்காது விளங்கு பவன் ஈசன்; அவன் விளங்கும் இடமானது வேளாண்மைத் தொழில் வளரும் புகலூர்.

சிறப்புரை: "மண் நிலாவும் அடியார் குடிமைத் தொழில்" என்னும் தொடர், இவ்வுலகில் அடியார் களைப் பேணித் திருத்தொண்டு செய்யும் சிறப்பினை உணர்த்துகிறது.

Koviloor Digital Library

15. நீரின்மல்குசடை யன்விடையன்அடை
யார்தம்அரண் மூன்றும்
சீரின்மல்குமலை யேசிலையாக
முனிந்தான்உலகு உய்யக்
காரின்மல்குகடல் நஞ்சமதுஉண்ட
கடவுள்இடம் என்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினால்உயர்வு
எய்தும்புக லூரே.

தெளிவுரை: *நீரின் மேலதாகிய கங்கையைச் சடைமுடியில் கொண்டவன்; இடப வாகனத்தை உடையவன்; நன்மை யடைய மாட்டாதவர்களாகிய மூன்று கோட்டைகளை உடைய அசுரர்களை, மேரு மலையை வில்லாகக் கொண்டு முனிந்தவன்; உலகம் உய்தி பெறும் பொருட்டு பாற்கடலில் அமுதம் கடையும் போது தோன்றிய நஞ்சினை உண்டு கண்டத்தில் இருத்திக் காத்தவன்; அவனுடைய இடம் ஊர்களில் திகழ்ந்து நல்லொழுக்கத்தினால் உயர்வு அடையும் புகலூர்.*

16. செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர்
சேரும்அடி யார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத்து
என்றும்பணி வாரை
மெய்யநின்றபெரு மான்உறையும்இடம்
என்பர்அருள் பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாதுபொ
ருந்தும்புக லூரே.

தெளிவுரை: *தனது சிவந்த திருமேனியில் வெண்மை தோன்றுமாறு திருநீற்றைப் பூசுவர்; தன்னை வணங்கும் அடியாரிடம் மெள்ள மெள்ளச் சேர்ந்து நின்ற தீவினையைச் சிதறி வெளியேறுமாறு செய்வர்;*

Koviloor Digital Library

தன்னைப் பணிந்து போற்றிப், பாடல்களால் துதி செய்யும் அடியார்பால் மெய்யாய் நின்றருளும் அப் பெருமான் உறையும் இடம், வாக்காலும் மனத்தாலும் பொய்மை கொள்ளாத மனத்தினர் பொருந்தி வாழும் புகலூர் ஆகும்.

சிறப்புரை: "மெய்ய" என்பது மெய்ஞ்ஞானமும் "பொய் இல்லாத" என்பது அஞ்ஞானம் அற்ற நிலையையும் புகலும்.

17. கழலின்ஓசைசிலம் பின்ஒலியோசை
கலிக்கப்பயில் கானில்
குழலின்ஓசைகுறள் பாரிடம்போற்றக்
குனித்தார்இடம் என்பர்
விழவின்ஓசைஅடி யார்மிடையுற்று
விரும்பிப்பொலிந்து எங்கும்
முழவின் ஓசைமுந் நீர்அயர்வுஎய்த
முழங்கும்புக லூரே.

தெளிவுரை: ஒரு காலில் கழலொலியும் பிறிதொரு காலில் சிலம்பின் ஒலியும் எழுமாறு, குழலோசையைப் பூதங்கள் எழுப்ப நடனம் புரியும். சிவபெருமான் விளங்கும் இடமானது, திருவிழாக்களால் உண்டாகும் ஓசை அடியார்களை மகிழ்ச்சியுறுமாறு செய்கிறது. முழவின் ஓசை கடல் அலைகள் முழங்கும் ஓசையை வெல்லும் தன்மை கொண்டது புகலூர் ஆகும்.

சிறப்புரை: உமைபாகனாகிய ஈசன் இடக்காலில் பெண்களுக்குரிய சிலம்பினையும் வலக்காலில் ஆண் களுக்குரிய கழலையும் அணிந்துள்ளான் என்பது சிவ சக்தியின் இணக்கத்தையும் நெருக்கத்தையும் பேத மின்மையையும் காட்டும்.

Koviloor Digital Library

18. வெள்ளம்ஆர்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல்
விளங்கும்மதி சூடி
உள்ளம் ஆர்ந்தஅடி யார்தொழுதேத்த
உகக்கும்அருள் தந்துஎம்
கள்ளம்ஆர்ந்துகழி யப்பழிதீர்த்த
கடவுள்இடம் என்பர்
புள்ளைஆர்ந்தவய லின்விளைவால்வளம்
மல்கும்புக லூரே.

தெளிவுரை: கங்கை பொருந்தி விளங்கும் சிவந்த சடைமுடியின்மேல் பிறைமதி சூடிய ஈசன், பொருந்திய உள்ளத்தால் வணங்கிப் போற்றும் அடியவர்களுக்கு அவர்கள் மகிழுமாறு அருள்புரிபவன். அவன் எம் மருங்கும் மறைந்து நின்று துன்பத்தைத் தரும் மும் மலத்தை நீக்குபவன். அவனுடைய இடம் பறவைகள் தங்கும் நீர்வளம் நிலவளம் பெருகும் புகலூர் ஆகும்.

சிறப்புரை: தமது இயல்பை வெளியே காட்டாமல் மறைந்து நின்று விளைவிக்கும் மும்மலக்கட்டினை அறுத்தவன் ஈசன் என்பது "கள்ளம் ஆர்ந்து கழியப் பழிதீர்த்த கடவுள்" என்னும் தொடர் குறிப்பதாகக் கொள்வதும் சிறப்புடைத்து.

பழி – இழிவு, கீழ்மை.

19. தென்னிலங்கையரை யன்வரைபற்றி
எடுத்தான்முடி திண்தோள்
தன்இலங்குவிர லால்நெரிவித்துஇசை
கேட்டுஅன்றுஅருள் செய்த
மின்இலங்குசடை யான்மடமாதொடு
மேவும்இடம் என்பர்

Koviloor Digital Library

பொன்இலங்குமணி மாளிகைமேல்மதி
தோயும்புக லூரே.

தெளிவுரை: தென்னிலங்கையின் அதிபதியாகிய இராவணன் கயிலாயமலையைப் பெயர்த்தெடுக்கும் போது அம்மலையின் மீது எழுந்தருளியுள்ள ஈசன், மலையைப் பெயர்த்த அரக்கனுடைய முடியும் உறுதியான தோள்களும் நெரிய அடர்த்து, பின்னர் அவ்வரக்கன் பக்தியால் எழுப்பிய இசையில் மகிழ்ந்து அருள் புரிந்தான். அப்பெருமான் உமாதேவியுடன் மேவும் இடம் பொன்னும் மணியும் திகழும் மாளிகையின் மேல் குளிர்ந்த நிலவு தோயும் புகலூர்.

20. நாகம் வைத்தமுடி யான்அடிகைதொழுது
ஏத்தும்அடி யார்கள்
ஆகம்வைத்தேபெரு மான்பிரமன்னொடு
மாலும்தொழுது ஏத்த
ஏகம் வைத்தளரி யாய்மிகஓங்கிய
எம்மான்இடம் போலும்
போகம்வைத்த பொழி லின்நிழலால்மது
ஆரும்புக லூரே.

தெளிவுரை: நாகத்தைத் தரித்த ஈசன், தனது திருவடியைப் பணியும் அடியவர்களைத் தன்பால் பொருத்திக் கொள்பவன். அவன் பிரமனும் திருமாலும் போற்றுமாறு ஜோதி வடிவாய் வளர்ந்து ஓங்கியவன். அப்பெருமான் விளங்கும் இடமானது மகிழ்ச்சியைத் தரும் சோலைகள் திகழும் புகலூர் ஆகும்.

சிறப்புரை: "தொழுது ஏத்தும் அடியார்கள் ஆகம்வைத்த பெருமான்" என்பது பிரளய காலத்தில் அடியவர்

Koviloor Digital Library

களைத் தனது காயத்தில் ஆரோகணித்து (ஏற்றுப் பொருத்தி) காயாரோகணனாக ஈசன் விளங்குவதும், "போகம் வைத்த பொழிலின் நிழலால் மது ஆரும்" என்பது அப்பெருமான் உயிர்களுக்குப் பாதுகாப்பாய் – நிழலாய் விளங்கி ஆன்மலாபத்தைக் கொடுத்து இன்பத்தில் சேர்ப்பவன் என்பதும் கொள்ளப் படுகிறது.

21. செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர்
செப்பில்பொருள் அல்லாக்
கைதவத்தர் மொழி யைத்தவிர்வார்கள்
கடவுள்ளிடம் போலும்
கொய்துபத்தர்மல ரும்புனலும்கொடு
தூவித்துதி செய்து
மெய்தவத்தின்முயல் வார்உயர்வானகம்
எய்தும்புக லூரே.

தெளிவுரை: நல்ல தவம் செய்தவர்களும், நன்றாகத் தேர்ந்து அறியும் பாங்குடையவர்களும், சாக்கியர்கள் கூறும் மெய்ப்பொருள் இல்லாத மற்றும் வஞ்சித்துத் துன்பம் தரும் மொழிகளை மனத்தில் கொள்ள மாட்டார்கள். பக்தர்கள் நன்னீரால் பூசித்தும், மென் மலரால் அருச்சித்தும் தோத்திரம் செய்து மெய்த் தவத்தில் விளங்க உயர் வானகம் எய்துவர். அதற்கு இடமாக இறைவன் உள்ள இடம் புகலூர்.

சிறப்புரை: வஞ்சனை மொழிகளை யேற்றுத் துன்பத்தை அடையாத நிலை செய்தவத்தின் வாயிலாகவரும் என்பதும் அது மிக்க தேர்ச்சியுடைமை தரும் என்பதும் அதற்கு ஈசனைப் பூசிப்பதுவே மெய்த்தவத்திற்கு உரிய முயற்சி என்றும் இங்கு உறுதிப்படுத்தப்படுகிறது.

Koviloor Digital Library

கடவுள் இடம் போலும்: போலும் என்பது, போல என்னும் உவமை கொண்டு புகலூர் ஆகியது.

கைதவம் – பொய்; வஞ்சனை, சூது

22. புற்றில்வாழும்அர வம்அரைஆர்த்தவன்
 மேவும்புக லூரைக்
 கற்றுநல்லஅவர் காழிஉண்ஞானசம்
 பந்தன்தமிழ் மாலை
 பற்றியென்றும்இசை பாடியமாந்தர்
 பரமன்அடி சேர்ந்து
 குற்றமின்றிக்குறை பாடொழி யாப்புகழ்
 ஓங்கிப்பொலி வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நாகத்தைத் தரித்தவனாகிய ஈசன் மேவிய புகலூரை, கல்வியில் தேர்ந்த ஊராகிய சீகாழியில் வாழும் ஞானசம்பந்தரின் திருப்பதிகத்தை விரும்பி எக்காலத்திலும் இசையுடன் பாடும் மக்கள் சிவபெருமான் திருவடியில் சேர்ந்து பொலிவார்கள். அத்தகையோர் குற்றம் இல்லாதவராகவும், குறைபாடு நீங்கியவராகவும் இருப்பார்கள். மேலும் அவர்கள் பெருகும் புகழுடன் விளங்குவார்கள்.*

குறிப்பு: *இத் திருப்பதிகம், திருப்புகலூர் என்னும் திருத்தலத்தின் சிறப்புகளை இயம்புகிறது. திருத்தலத்தின் சிறப்புக்கு அத் தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே காரணம் ஆகிறான் என்றும் இறைவன் பெரும்புகழ் திருத்தலத்திற்கும் இசைந்தது என்றும் கொள்ளப் படுகிறது.*

Koviloor Digital Library

3. திருவலிதாயம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம்.

இது சென்னைக்கு அருகில் உள்ளது. தற்போது பாடி என்று அழைக்கப்படுகிறது. பரத்வாஜசர், அனுமான், இந்திரன் முதலியோரால் வழிபட்டது. வலியன் (கரிக்குருவி) வழிபட்டதால் திருவலிதாயம் ஆ.யிற்று என்பர். பரத்வாஜர் வலியனாகப் பெற்ற சாபம் விமோசனம் ஆன தலம்.

சுவாமி : வலிதாய நாதர், வல்லீஸ்வரர்

அம்பிகை : தாயம்மை, திருவீதி நாச்சியார், ஜகதாம்பாள்

தல மரம் : பாதிரி

தீர்த்தம் : பரத்வாசர் தீர்த்தம்

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

23. பத்தரோடுபல ரும்பொலியம்மலர்
அங்கைப்புனல் தூவி
ஒத்தசொல்லிஉல கத்தவர்தாம்தொழுது
ஏத்தஉயர் சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுஉறை
கின்றவலி தாயம்
சித்தம்வைத்தஅடி யார்அவர்மேல்அடை
யாமற்றுஇடர் நோயே.

தெளிவுரை: பக்தி செய்யும் அடியவர்களுடன், உடனிருந்து போற்றும் ஏனையோரும் வேத முறைப் படி மந்திரங்களைச் சொல்லி ஏத்த அதனை ஏற்ற பெருமான் நீங்காது உறையும் திருவலிதாயத்தை நினைக்கும் அடியவர்கள்பால் இடர்செய்யும்

Koviloor Digital Library

துன்பங்கள் இல்லை. இடர்நோய் என்பது பிறவி நோயையும் உணர்த்தும்.

சிறப்புரை: அடியவர்கள் சிவஞானம் பெற்றவராதலின் நன்மையும் தீமையும் பேதமற்று இருப்பினும் புறத் தோற்றம் கொள்ளுமாறு உள்ள இடரும் அவர்களை நாடாது என்னும் பாங்கு “அடையா” என்னும் சொல் உணர்த்துதலை அறிக. நோயின்மை பதினாறு பேறுகளில் ஒன்றாதலின் இடர் நோய் அடையாத சிறப்பும் உணர்த்தப்படுகிறது.

24. படைஇலங்குகரம் எட்டுடையான்படிறு
ஆகக்கலன் ஏந்திக்
கடைஇலங்குமனை யிற்பலிகொண்டுஉணும்
கள்வன்உறை கோயில்
மடைஇலங்குபொழி லின்நிழல்வாய்மது
வீசும்வலி தாயம்
அடையநின்றஅடி யார்க்குஅடையாவினை
அல்லல்துயர் தானே.

தெளிவுரை: மழு, சூலம் முதலான படைகளைத் தரித்த எட்டுக் கரங்களையுடையவன். இது என்ன கொடுமை என்று பலரும் அஞ்சுமாறு பிச்சை ஏற்றவன். அவன் உறையும் கோயில் நீர்வளத்துடன் சோலைகளும் நிரம் பிய திருவலிதாயம் ஆகும். அத்தலத்தைச் சாரும் அடியவர்களுக்கு வினை இல்லை; துன்பமும் இல்லை.

சிறப்புரை: ‘படை இலங்குகரம்’ என்றதில் அபயக் கரமும் முத்தி தரும் திருப்பாதத்தைச் சுட்டிக் காட்டும் கரமும் அடங்கும். இப்படை அறக்கருணைக்கு ஆயது. ‘படிறு ஆகக்கலன் ஏந்தி’ என்றது ஈசன் பிச்சைப் பாத்திரம் ஏற்றதைக் குறிக்கும். பக்தர்கள் வியந்து அஞ்சுமாறு போற்றும் நிலை உடையதாயினும்

Koviloor Digital Library

அச்செய்கையின் உண்மையை இறைவனேயன்றிப் பிறர் அறியார் என்பதனைக் கள்வன் என்னும் சொல் காட்டுகின்றது.

படிறு – கொடுமை, கடினத் தன்மை.

25. ஐயன்நொய்யன் அணி யன்பிணிஇல்லவர்
என்றும்தொழுது ஏத்தச்
செய்யன்வெய்யபடை ஏந்தவல்லான்திரு
மாதோடுஉறை கோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துஉயர்
கின்றவலி தாயம்
உய்யும்வண்ணம்நினை மின்நினைந்தால்வினை
தீரும்நலம் ஆமே.

தெளிவுரை: பெரியவன், நுண்ணியன், அண்மையில் இருப்பவன், பற்றற்றவர் தொழுது ஏத்திடச் செம்மையுறு சோதி வடிவினன்; யாராலும் வெல்ல முடியாத படையைத் தரித்திருப்பவன். அப்பெருமான் உமாதேவியுடன் விளங்குகின்ற இடம், உலகத்தோர் வணங்கப் பிணி தீர்த்து மேன்மைச் சிறப்பினைப் பெறும் திருவலிதாயம் ஆகும். இத்தலத்தை, ஆன்மா நற்கதி பெறும் விதத்தில் நினைக்க வேண்டும். அவ்வாறு ஒன்றிய சிந்தனையில் ஈடுபட்டால் வினை தீரும். எல்லா நன்மைகளும் உண்டாகும்.

சிறப்புரை: திருமாது என்பது ஞானமாகிய செல்வத்தை வழங்கும் தேவியாகிய உமையைக் குறிக்கும். திருவீதி நாச்சியார், தாய் (தாயம்மை) என்று வழங்கப் பெறும் தேவியின் திருநாமமும் இதனில் கொள்வது பொருந்தும்.

26. ஒற்றைஏறதுஉடை யான்நடமாடியோர்
பூதப்படை சூழப்

Koviloor Digital Library

புற்றின்நாகம்அரை ஆர்த்துஉழல்கின்றஎம்
பெம்மான்மட வாளோடு
உற்றகோயில்உல கத்துஒளிமல்கிட
உள்கும்வலி தாயம்
பற்றிவாழும்அது வேசரண்ஆவது
பாடும்அடி யார்க்கே.

தெளிவுரை: இடபத்தை வாகனமாக உடையவன்; நடனம் புரிபவன்; பூத கணங்கள் சூழ இருப்பவன்; நாகத்தை இடுப்பில் தரித்தவன். அத்தகைய பெருமான் உமையுடன் வீற்றிருக்கும் கோயில் உலகத்தின் பெருமையாவும் சேரத் திகழும் திருவலிதாயம் ஆகும். இறைவனைப் பாடித் துதி செய்யும் அடியவர்களுக்கு அதுவே சரணாலயமாகும்.

சிறப்புரை: ஒற்றை ஏறு என்பது இறைவன் திருவடிக் கமலத்தை ஒன்றிச் சேரும் இடபத்தைக் குறிப்பால் உணர்த்தும்.

ஒற்றுதல் – ஒட்டுதல்

27. புந்திஒன்றிநினை வார்வினையாயின
தீரப்பொரு ளாய
அந்தியன்னதொரு பேரொளியான்அமர்
கோயில்அயல் எங்கும்
மந்திவந்துகடு வன்னொடும்கூடி
வணங்கும்வலி தாயம்
சிந்தியாதஅவர் தம்அடும்வெந்துயர்
தீர்தல்எளி தன்றே.

தெளிவுரை: சிந்தை ஒன்றி நினைப்பவரின் வினை யாவும் தீரும் வகையாக மாலை நேரத்துச் செவ்வொளி போன்ற திருமேனியை உடைய ஈசன்

Koviloor Digital Library

அமர்கின்ற கோயில், பெண் குரங்கு ஆண் குரங்குடன் சேர்ந்து வணங்கும் திருவலிதாயம் ஆகும். அத்தகைய இடத்தைச் சிந்திக்காதவருடைய துன்பம் தீர்வது எளிதன்றே.

சிறப்புரை: 'மந்தி வந்து கடுவன்னொடும் கூடி' என்பது கூடி வாழும் தன்மையும், இல்லறத்தின் சிறப்பும் குறிப்பதாம். வளம் பெருக்கும் இடங்களில் வானரங்கள் வாழும் தன்மையும் கொள்ளப்படுகிறது.

28. ஊன்இயன்றதலை யில்பலிகொண்டு உல
கத்துள்ளவர் ஏத்தக்
கான்இயன்றகரி யின்உரிபோர்த்துஉழல்
கள்வன்சடை தன்மேல்
வான்இயன்றபிறை வைத்தஎம்ஆதி
மகிழும்வலி தாயம்
தேன்இயன்றநறு மாமலர்கொண்டுநின்று
ஏத்தத் தெளிவு ஆமே!

தெளிவுரை: பிரம கபாலத்தை ஓடாகக் கொண்டு பிச்சையேற்று. உலகத்தோர் போற்றுமாறு யானையின் தோலை உரித்துப் போர்த்திக்கொண்டு எக்காலத்திலும் சஞ்சாரம் (அசைதல்) புரிந்தும், தோற்றத்தை மறைத்து கள்வனாய்த் தனது சடைமுடியில் வெண்பிறை சூடிய எமது ஆதி மூர்த்தியாகிய ஈசன் மகிழும் திருவலிதாயம் என்னும் பதியை மாமலர் கொண்டு ஏத்தத் தெளிவு உண்டாகும்.

உழல் – திரிதல், அசைதல் (யாண்டும் இயங்கும் நிலை)

29. கண்நிறைந்தவிழி யின்அழலால்வரு
காமன்உயிர் வீட்டிப்
பெண்நிறைந்தஒரு பால்மகிழ்வெய்திய
பெம்மான்உறை கோயில்

Koviloor Digital Library

மண்நிறைந்தபுகழ் கொண்டுஅடியார்கள்
வணங்கும்வலி தாயத்து
உள்நிறைந்தபெரு மான்கழல்ஏத்தநம்
உண்மைக்கதி யாமே.

தெளிவுரை: *தன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்தவன் ஈசன். அவன் உமாதேவியைத் தனது இடப் பாகத்தில் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான். அப் பெருமானுடைய இருப்பிடம் உலகம் போற்றும் புகழ்மிக்க அடியவர்கள் வணங்குகின்ற திருவலிதாயம் ஆகும். எனவே அத் திருத்தலத்தில் உள்ள இறைவன் திருவடிமலர்களைத் துதிக்க முத்தியின் நிலை உண்டாகும்.*

உண்மைக்கதி – முத்திப்பேறு.

30. கடலின்நஞ்சம்அமுது உண்டுஇமையோர்தொழுது
ஏத்தநடம் ஆடி
அடல்இலங்கைஅரை யன்வலிசெற்றுஅருள்
அம்மான்அமர் கோயில்
மடல்இலங்குகமு கின்பலவின்மது
விம்மும்வலி தாயம்
உடல்இலங்கும்உயிர் உள்ளளவும்தொழ
உள்ளத்துயர் போமே.

தெளிவுரை: *பாற்கடலைக் கடைந்து அமுதம் எதிர் பார்த்த நிலையில் நஞ்சு வெளிப்பட்டது. அதனையே அமுதமென உண்டு தேவர்களைக் காத்தவன் இறைவன்; நடனம் புரிந்து மகிழ்வித்தவன் வன்மை யுடைய இலங்கையின் வேந்தனான இராவணனுடைய வலிமையை அடக்கி அருள் புரிந்தவன். அத்தகைய கடவுள் அமர்ந்து விளங்கும் இடம் பலா கமுகு முதலான மரங்கள் பெருகியுள்ள திருவலிதாயம்*

Koviloor Digital Library

ஆகும். அத் திருத்தலத்தை உடலில் உயிர் உள்ள அளவும் தொழுது வணங்கிட மனத்துயர் நீங்கும்.

அம்மான் – தந்தை; கடவுள்.

31. பெரியமேருவரை யேசிலையாமலை
உற்றார்எயில் மூன்றும்
எரியஎய்தஒரு வன்இருவர்க்குஅறி
வொண்ணாவடி வாகும்
எரியதாகியுற ஓங்கியவன்வலி
தாயம்தொழுது ஏத்த
உரியர்ஆகஉடை யார்பெரியார்என
உள்கும்உல கோரே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு, தன்னை எதிர்த்துப் போர் செய்த அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் எரித்துச் சாம்பலாக்கியவன் ஈசன். அவன், திருமாலும் பிரமனும் முயற்சி செய்தும் காண்பதற்கும் அறிவதற்கும் முடியாதவனாய், சோதி வடிவானவன். அத்தகையவனுக்குரிய வலிதாயம் என்னும் பதியை ஏத்திடும் அடியவர்கள் அவனுக்கே உரிமையுடையவர்கள் ஆவர். உலகத்தவர், அத்தகைய பெருமக்களைப் பெரியவர்களாக – திருத்தொண்டர் களாகக் கருதுவர்.

சிலை – வில். மலை உற்றார் – போர் செய்த அசுரர்கள்.

32. ஆசியாரமொழி யார்அமண்சாக்கியர்
அல்லாதவர் கூடி
ஏசிஈரம்இல ராய்மொழிசெய்தவர்
சொல்லைப் பொருள் என்னேல்
வாசிதீரஅடி யார்க்குஅருள்செய்து
வளர்ந்தான்வலி தாயம்

Koviloor Digital Library

பேசும்ஆர்வம்உடை யார்அடியார்எனப்
பேணும்பெரி யோரே.

தெளிவுரை: ஆசி வழங்கும் மங்கலச் சொற்களைச் சொல்லாதவர்களாகிய சமணரும் சாக்கியரும் மற்றும் புறம்பானவர்களும் சேர்ந்து குறை கூறி அன்பற்றவர்களாய் மொழியும் சொற்களை உறுதி பயக்கும் வார்த்தைகளாகக் கொள்ள வேண்டாம். குறைவு இன்றி அடியவர்களுக்கு அருள்செய்து கொண்டு ஓங்கி வளரும் ஈசனுடைய திருவலிதாயம் என்னும் பதியைப் போற்றும் விருப்பத்தை உடையவர்கள் அடியார் எனப் புகழப் பெறும் பெருமக்கள் ஆவர்.

ஈரம் – அன்பு.

33. வண்டுவைகும்மணம் மல்கியசோலை
வளரும்வலி தாயத்து
அண்டவாணன்அடி உள்குதலால்அருள்
மாலைத்தமிழ் ஆகக்
கண்டல்வைகும்கடற் காழியுள்ஞானசம்
பந்தன்தமிழ் பத்தும்
கொண்டு வைகிஇசை பாடவல்லார்குளிர்
வானத்துஉயர் வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேனை நுகரும் வண்டுகளும், நறுமணம் வீசும் மலர்களும் நிறைந்த சோலைகள் திகழும் திருவலிதாயத்தில் விளங்கும் ஈசனின் திருவடியை மனத்தில் பதித்திட இந்தத் தமிழ் மாலை அருளப் பெற்றது. தாழை மடல் ஓங்கும் சீகாழி நகர் ஞான சம்பந்தன் பாடிய இப் பத்துப் பாடல்களையும் ஏற்று இசையுடன் பாடுபவர்கள் இனிமையான தேவ லோகத்தில் சிறந்திருப்பார்கள்.

Koviloor Digital Library

குளிர்தல் – கண்களுக்கு இனிமையாதல்

குறிப்பு: இத் திருப்பதிகம் இறைவன் விளங்கும் திருத்தல மான திருவலிதாயத்தின் மேன்மையை உரைப்ப தாகும்.

4. திருப்புகலியும் திருவிழிமிழலையும்

தல விளக்கம்: திருப்புகலி – சீகாழிப்பதி (காவிரி வடகரைத் தலம்.) பதிக எண் 1 காண்க.

திருவீழி மிழலை – சோழநாட்டு தென்கரைத் தலம். ஈசன் திருமணக் கோலத்துடன் இருக்கும் திருத் தலம். திருமால் பூசித்து ஆழிப்படையைப் பெற்ற தலம். ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் படிக் காசு பெற்ற தலம். சீகாழிப் பதியில் உள்ள காட்சியை ஈசன் இத் திருத்தலத்தில் ஞானசம்பந்தருக்குக் காட்டி அருளிய சிறப்புடையது.

சுவாமி : வீழியழகர்

அம்பிகை : சுந்தரகுசாம்பிகை

தல மரம் : வீழிச்செடி

தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்

வினாஉரை

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

34. மைம்மரு பூங்குழல் கற்றைதுற்ற
வாள்நுதல் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்கள்ஏத்தப்
புகலிநி லாவிய புண்ணியனே
எம்மிறை யேஇமை யாதமுக்கண்
ஈச ! என் நேச ! இதுஎன் கொல் ! சொல்லாய்

Koviloor Digital Library

மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: கருமையான கூந்தலும் வாளைப் போன்ற நெற்றியும் மானின் விழியும் உடைய உமையை உடனாகி, மறையோர்கள் போற்றிடப் புகலிப் பதியில் உள்ள புண்ணியனே! எமது இறைவனே! இமையாத மூன்று கண்களையுடைய ஈசனே! எனக்கு நேசமானவனே! இது என்ன விந்தை! மெய்ம்மை நான்மறையோர் மேவும் திருவீழிமிழலையில் இருக்கும் விமானத்தில் திருப்புகலியில் உள்ள கோலத்தைக் காட்சி தருகின்றாய்!

சிறப்புரை: பொய்ம்மொழியா மறையோர்கள் என்பது, மெய்ம் மொழியாகிய வேதங்களை அல்லாமல் வேறு உரையாத வேதியர்கள் என்றும், மெய்ம்மொழி என்பது நான்மறையின் சிறப்பினைக் கூறும் வாக்கால் அமைந்தது.

புண்ணியன்: பாவமும் புண்ணியமும் வினைக்கேற்ப மானிடரைப் பற்றி நின்றாலும், எக்காலத்திலும் எதனையும் பற்றாமல் நின்று உயிர்களின் வினைகளைத் தீர்ப்பவனாகிய ஈசன் ஒருவனையே புண்ணியன் என்பது சுட்டும்.

35. கழல்மல்கு பந்தொடுஅம் மானைமுற்றில்
கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழில்மல்கு கிள்ளையைச் சொல்பயிற்றும்
புகலிநி லாவிய புண்ணியனே!
எழில்மல ரோன்சிரம் ஏந்திஉண்டோர்
இன்புறு செல்வம்இது என்கொல் சொல்லாய்!
மிழலையுள் வேதியர் ஏத்தி வாழ்த்த
விண்ணிழி கோயில் விரும்பியதே.

Koviloor Digital Library

தெளிவுரை: கழற்சிக்காய், பந்து, அம்மானை முதலான விளையாடும் இளம் பெண்கள் தாம் விரும்பி வளர்க்கும் கிளிகளுக்குச் சொற்களைப் பயிற்றுவிக்கும் திருப்புகலியில் நிலவும் ஈசனே! பிரமனுடைய ஒரு தலையைக் கையில் ஓடாக ஏந்தி இன்புறும் செல்வமே! திருவீழிமிழலையின்கண் நின்காட்சியைத் தருகின்றனை! இது என்கொல்? இது திருக்காட்சியை வியந்து வினா வழி உரைத்தமையாகும்.

36. கன்னியர் ஆடல் கலந்துமிக்க
கந்துக ஆடை கலந்துதுங்கப்
பொன்இயல் மாடம் நெருங்குசெல்வப்
புகலிநி லாவிய புண்ணியனே
இன்னிசை யாழ்மொழி யாள்ஓர்பாகத்து
எம்இறை யே !இது என்கொல் சொல்லாய்
மின்இயல் நுண்ணிடை யார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: கன்னியர்கள் பந்து விளையாட்டில் ஈடுபட்டு அதற்கு உரிய ஆடை தரித்து ஒளிமிக்க மேல் தளத்தில் சூழ்ந்து இருக்கின்றனர். அத்தகைய செல்வம் நிறைந்த புகலியில் நிலவும் ஈசனே! இனிய யாழின் இசை போன்று மொழி பேசும் உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ள எம் இறைவனே! திருவீழி மிழலையின் திருக்கோயிலை விரும்பி இங்கு காட்சி தருவது என்கொல்!

சிறப்புரை: மொழி வேற்றுமையின்றி இனிய இசையால் கவரும் யாழைப் போன்று, இனிமையான ஞான போதத்தை ஆன்மாக்களுக்கு உணர்த்தும் ஞானாம்பிகையின் அருள்தன்மை "இன்னிசை யாழ் மொழியாள்" என்னும் தொடர் புகலும். "மொழியாள்

Koviloor Digital Library

ஓர் பாகத்து எம் இறை" என்பது உமாதேவியாரால் அன்றி வேறு ஒருவரால் அறிமாட்டாத இறைவனது ஆற்றலை உணர்த்திற்று.

ஓர்தல் – உணர்தல்; அறிதல்.

37. நாகப ணம்திகழ் அல்குல்மல்கு
நல்நுதல் மான்விழி மங்கையோடும்
பூகவ ணம்பொழில் சூழ்ந்தஅந்தண்
புகலிநி லாவிய புண்ணியனே
ஏகபெ ருந்தகை யாயபெம்மான்
எம்இறையே !இது என்கொல்சொல்லாய்
மேகம்உ ரிஞ்சுஎயில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: நாகத்தின் படத்தைப் போன்ற அல்குலும் நல்ல நெற்றியும் மான்விழியும் உடைய மங்கையர் களுடன் கமுகமரங்கள் சூழ்ந்துள்ள பிரமன் போற்றும் புகலியில் நிலவும் ஈசனே! எல்லாமும் தாமே என்று ஏகம் ஆகிப் பெருந்தகையாய் விளங்கும் எம் இறை வனே! மேகங்கள் சூழும் விமானத்தில் விரும்பிப் பொலிவது என் கொல்! சொல்!

சிறப்புரை: நாக பணம் திகழ் அல்குல் என்பது மங்கையர்தம் அழகும் கற்பின் மேன்மையும், அதனைப் போற்றாதாரின் அச்ச உணர்வும் குறிப்பிடுகின்றது. "ஏக பெருந்தகை" என்பது ஏகம்பப் பெருமானைச் சுட்டுவதாகக் கொள்ளலும் சிறப்புடைத்து.

நாகபணம் – நாகத்தின் படம். அந்தண் புகலி; (அந்தணன் – பிரமன்) பிரமன் வழிபட்ட புகலி. பூகம் – பாக்கு மரங்கள்.

Koviloor Digital Library

38. சந்துஅளறு ஏறுத டங்கொள்கொங்கைத்
தையலொ டும்தள ராதவாய்மைப்
புந்தியில் நான்மறை யோர்கள்ஏத்தும்
புகலிநி லாவிய புண்ணியனே
எந்தமை ஆளுடை ஈச ! எம்மான்
எம்இறை யே ! இது என்கொல்சொல்லாய்
வெந்தவெண் ணீறுஅணி வார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: *சந்தனக் குழம்பைத் தமது மார்புகளில் தடவிய நங்கையர்ளுடன், ஐம்புலன்களால் அரிக்கப் படாத உறுதிமிக்க வாய்மையை நெஞ்சில் பதித்த நான்கு மறையிலும் வல்லவர்கள் போற்றி வழிபடும் புகலியில் நிலவும் புண்ணியனே! எம்மை ஆளாக உடைய ஈசனே! எம்பெருமானே! எம் இறைவனே! திருவெண்ணீறு அணியும் அடியார்களையுடைய திருவீழிமிழலையில் இனிது அமர்ந்து இருப்பது என்கொல்!*

சிறப்புரை: *தளராத வாய்மைப் புந்தியினால் மறை யோர்கள் ஏத்தும் புகலி எனவும் கொள்க.*

வெந்தவெண்ணீறு – பிரளய காலத்தில் வெந்து சாம்பலான நீறு. சந்து – சந்தனம்; புந்தி – புத்தி (மனம்).

39. சங்குஒளி இப்பி சுறாமகரம்
தாங்கி நிரந்து தரங்கம் மேன்மேல்
பொங்குஒலி நீர்சுமந்து ஓங்குசெம்மைப்
புகலிநி லாவிய புண்ணியனே
எங்கள்பி ரான்இமை யோர்கள்பெம்மான்
எம்இறை யேஇது என்கொல்சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

Koviloor Digital Library

தெளிவுரை: *சங்கு, அழகிய கிளிஞ்சில் மற்றும் சுறா, மகரம் யாவும் செறிந்துறையும் கடல் அலைகள் மேலும் மேலும் பொங்கிக் குளிர்ந்து ஒலித்துச் செம்மை யுறும் புகலியில் நிலவும் புண்ணியனே! எங்கள் தலைவனே! இறைவனே! தேவர்கள் போற்றும் பெருமானே! சோலைகளின் ஊடே சூரியனுடைய கதிர்கள் பரவும் திருவீழிமிழலையில் நீர் விரும்பிப் பொலிந்தது என்கொல்! சொல்!*

ஒளி – அழகிய. இப்பி – கிளிஞ்சல். தரங்கம் – கடல் அலை.

40. காமன்எ ரிப்பிழம்பு ஆகநோக்கிக்
காம்பன தோளியொ டும்கலந்து
பூமரு நான்முகன் போல்வர் ஏத்தப்
புகலிநி லாவிய புண்ணியனே
ஈமவ னத்துஎரி யாட்டுஉகந்தி
எம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
வீமரு தண்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: *மன்மதன் எரியுமாறு தனது நெற்றிக் கண்ணால் நோக்கிய பின்னர், உமாதேவியைத் திருமணம் புரிந்து, மலர்மீது விளங்கும் நான்முகன் மற்றுமுள்ள மேலோர்களும் தொழுது ஏத்தப் புகலி நிலவும் புண்ணியனே! இடுகாட்டில் கோரத்தாண்டவம் விழைந்த எம்பெருமானே! மலர்கள் சூழும் குளிர்ந்த சோலைகள் பரந்த மிழலையில் விரும்பிக் காட்சி நல்கியது என்கொல்! சொல்?*

சிறப்புரை: *உலத்தோர் திருமணத்திற்கும் அவர்தம் வாழ்க்கைக்கும் உறுதுணையாய் விளங்கும் மன்மதன் ஈசனால் எரிக்கப் பெற்றவன் என்பதும், அத்தகைய காமன் இன்றி சிவசக்தி திருமணம் நடைபெற்ற*

Koviloor Digital Library

தென்பதும் பெறப்படுகிறது. இறைவன் இறைவி திருமண இயைபு காமத்தின் வயப்பட்டதல்ல என்பது இங்கு புலப்படுத்தப்படுகிறது.

பூமரு – மலர்மேல் உறைபவன். ஈமவனம் – இடுகாடு.
வீமரு – மலர்கள் சூழ்ந்த.

41. இலங்கையர் வேந்துஎழில் வாய்த்ததிண்தோள்
இற்றுஅலற அவ்விரல் ஒற்றிஐந்து
புலங்களை கட்டவர் போற்றஅந்தண்
புகலிநி லாவிய புண்ணியனே
இலங்குஎரி ஏந்திநின்று எல்லியாடும்
எம்இறை யே !இது என்கொல்சொல்லாய்
விலங்கல்ஒண் மாளிகை சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: இலங்கை வேந்தனாகிய இராவணனுடைய உறுதியான தோள்கள் துன்புறுமாறு தனது திருப்பாத விரலால் ஊன்றி, ஐம்புலன்களின் களைகளைக் கட்டி அடக்கிய திருத்தொண்டர்கள் போற்றப் புகலியில் நிலவும் புண்ணியனே! திருக்கரத்தில் தீப்பிழம்பை ஏந்தி இரவில் நடனம் புரியும் எம் இறைவனே! மலை போன்று உயர்ந்து ஒளி திகழும் மாளிகைகள் சூழ்ந்த மிழலையில் விரும்பித் திகழ்வது என்கொல்! சொல்லுக!

சிறப்புரை: "புலங்களைக் கட்டவர்" என்னும் தொடர், ஐம்புலன்களை வேருடன் களைந்தெடுத்து மீண்டும் பரவாதவாறு கட்டும் தன்மையைப் புலப்படுத்துவது அச்சிறப்பு திருத்தொண்டர்களுக்கே உரித்து.

விலங்கல் – மலை; உயந்த தன்மையைக் குறிப்பது.

Koviloor Digital Library

42. செறிமுள ரித்தவிசு ஏறிஆறும்
செற்றுஅதில் வீற்றிருந் தானும்மற்றைப்
பொறியர வத்துஅணை யானும்காணாப்
புகலிநி லாவிய புண்ணியனே
எறிமழு வோடுஇள மான்கைஇன்றி
இருந்தபி ரான்இது என்கொல்சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: *தாமரை மலர்மேல் வீற்றிருந்து ஆறு வகையான உட்பகைகளை வென்ற நான்முகனும், நாகத்தைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும் காண்பதற்கு அரியவனாகிப் புகலி நகரில் நிலவும் புண்ணியனே! நினக்குரிய மானும் மழுவும் தரிக்காமல் ஒருகாலத்தில் காட்சியுற்ற பாங்கில், மிழலையில் மீண்டும் அக்காட்சியைப் புரிந்தனை. இது என் கொல்! சொல்லுக!*

முளரி – தாமரை. ஆறும் செற்று – உட்பகைகளான 1) காமம், 2) குரோதம், 3) உலோபம், 4) மோகம், 5) மதம், 6) மாச்சரியம் (பொறாமை) இவை ஆறும் விட்டொழித்தல்.

43. பக்தர்க ணம்பணிந்து ஏத்தவாய்த்த
பான்மையது அன்றியும் பல்சமணும்
புத்தரும் நின்றுஅலர் தூற்றஅந்தண்
புகலிநிலாவிய புண்ணியனே!
எத்தவத் தோர்க்கும்இ லக்காய்நின்ற
எம்பெருமான் இதுஎன்கொல் சொல்லாய்
வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே.

தெளிவுரை: *பக்தர்கள் பணிந்து போற்றும் தன்மை யிலும் சமணரும் புத்தரும் தூற்றவும் புகலி நகரில் நிலவும் புண்ணியனே! பல வகையான தவநெறியில்*

Koviloor Digital Library

உள்ளவர்களுக்கும் அவர்கள் அனைவரும் நோக்கி அடைய வேண்டிய இலக்காகி விளங்கும் எம்பெருமானே! ஞானிகள் வாழும் வீழிமிழலையில் விரும்பி அமர்ந்தனை! இது என்கொல்! சொல்லாய்!

சிறப்புரை: எத் தவத்தோர்க்கும் இலக்காக நின்ற பெருமான் ஈசன் என்பதனை "அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்று சிவஞான சித்தியார் காட்டுதலைக் காண்க.

44. விண்ணிழி கோயில் விரும்பிமேவும்
வித்தகம் என்கொல் இதுஎன்றுசொல்லிப்
புண்ணிய னைப்புகலிந்நிலாவு
பூங்கொடி யோடுஇருந் தானைப்போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி
நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்கள்இந்தப்
பாரொடு விண்பரி பாலகரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: புகலிப் பதியில் நிலவும் புண்ணியன், உமாதேவியுடன் இருப்பவன்; திருவீழிமிழலையில் உள்ள திருக்கோயிலில் காட்சி தந்தருளினன்; இது என்ன விந்தை என்று வினவி, நண்ணிய புகழும் நலந்தரும் கேள்வி ஞானமும், நான்கு வேதங்களும் கைவரப் பெற்ற ஞானசம்பந்தர் சொன்ன இவ்வரிய இசைப் பாடல்களைப் பாடுபவர்கள் இந்த உலகத்தில் மட்டும் அன்றி தேவலோகத்திலும் சிறந்து விளங்குவார்கள்.

சிறப்புரை: "பாரொடு விண் பரிபாலகர்" என்னும் தொடர் வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் பொருந்துதலைக் குறிக்கின்றது.

Koviloor Digital Library

5. கீழைத் திருக்காட்டுப் பள்ளி

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். திருவெண் காட்டுக்கு அருகில் உள்ளது. இந்திரனால் பூசிக்கப் பெற்றது. நண்டு பூசித்த இடம்.

சுவாமி : ஆரண்யசுந்தரர்

அம்பிகை : அகிலாண்டநாயகி

தீர்த்தம் : அமிர்த தீர்த்தம் - காவிரி

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

45. செய்யரு கேபுனல் பாயஓங்கிச்
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழைஈன்று
கானல்எல் லாம்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேஅழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேஉடை யானைஉள்கி
விண்டவர் ஏறுவர் மேலுலகே.

தெளிவுரை: வயலருகே தண்ணீர் பாயவும், கயல்கள் துள்ளி ஆடவும், மருத நிலத்தின் மலர்கள் தேன் சொரியவும் கைக்கு எட்டும் அளவில் வாழைக் கனிகள் இருக்கவும், சோலையின் மணம் கமழும் திருக்காட்டுப் பள்ளி திகழ்கின்றது. ஐந்தலை நாகத்தைப் (ஆதிசேஷன்) படுக்கையாகக் கொண்ட திருமால், உமாதேவியைப் பாகமாக உடைய ஈசனைத் தியானித்து நெகிழ்ந்து இன்புற்றார். இதனைக் கருதுவார்க்கு உயர்ந்த உலகம் கிட்டும்.

Koviloor Digital Library

செய் – வயல். சிலமலர்த் தேன் – மருத நிலத்து மலர்கள் சொரியும் தேன். அழல்வாயவை வாய்ப்பாம்பணை – நெருப்பு போலும் நஞ்சுடைய ஐந்து தலை (ஐவாய்) நாகத்தின் அணை.

46. திரைகள்எல் லாமல ரும்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகள்எல் லாம்அணி சேர்ந்துஉரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகள்எல் லாம்உணர்வு எய்திநல்ல
உத்தம ராய்உயர்ந் தார்உலகில்
அரவம்எல் லாம்அரை ஆர்த்தசெல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே.

தெளிவுரை: காவிரி ஆற்றின் நீர் அலைகள் எல்லா விதமான மலர்களையும் ஏற்றுச் சுமந்து தன்பால் தேக்கி; செழுமையான மணிகளும் முத்துக்களும் பொன்மணிகளும் வாரி வாய்க்கால்களின் வழியாக இருகரைகளும் மோதும்படி எடுத்துச் செல்கின்றன. அத்தகைய சிறப்புடைய ஊர் காட்டுப்பள்ளி. ஆங்கு உரை செய்யப்படுகின்ற பொருள்களை நன்றாக உணர்ந்து அவ்வழியே ஒழுகி உத்தமர்களாய் உயர்ந்தனர். உலகில் அரவத்தைத் தரித்த செல்வனாகிய அந்த ஈசனுக்கு அடியவர் ஆக, அல்லல் தீரும்.

சிறப்புரை: திருக்காட்டுப்பள்ளியில் மேவும் செல்வர்க்கு ஈசனுக்கு ஆட்செய, அல்லல் அறும் என்பது குறிப்பு.

47. தோலுடை யான்வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யான்இமை யோர்பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யும்
காலுடை யான்கரிது ஆயகண்டன்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளி

Koviloor Digital Library

மேலுடை யான்இமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே.

தெளிவுரை: புலித்தோலை உடையாகக் கொண்டவன்; யானையின் தோலை உரித்து அழகிய போர்வையாக ஆக்கிக் கொண்டவன்; ஒளிமயமான திருவெண்ணீறு பூசியவன்; விளங்கும் முப்புரி நூலைத் தரித்த மார்பினன்; தேவர்களின் தலைவன்; மெய்ஞ்ஞானத் தால் வழிபாடு செய்யத்தக்க திருப்பாதத்தை உடையவன்; கருமையான கண்டத்தை உடையவன். அத்தகைய ஈசன் விரும்பிக் காட்டுப்பள்ளியில் பொருந்தி இருப்பவன். அப்பெருமான் உமாதேவி யாரை விருப்பத்தோடு தனது பாகத்தில் ஏற்றுக் கொண்டான்.

சிறப்புரை: நுண்ணறிவால் வழிபாடு செய்யும் காலுடை யான் என்பது, முத்தி நான்ற மலர்ப்பதம் என்ற உண்மை விளக்கத்தின் பாடலால் சுட்டப் பெறுதலை எண்ணுக.

நுண்ணறிவு – மெய்ஞ்ஞானம்; கால் – திருப்பாதம்.

48. சலசல சந்துஅகி லோடும்உந்திச்
சந்தன மேகரை சார்த்திளங்கும்
பலபல வாய்த்தலை ஆர்த்துமண்டிப்
பாய்ந்துஇழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றுஅதி ரும்கழலான்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்கள் ஏத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே.

தெளிவுரை: சலசல என்னும் ஒலியுடன் சந்தனமும் அகிலும் உந்திச் சென்றாலும் சந்தனத்தைக் கரையில்

Koviloor Digital Library

சேர்த்து எல்லா இடங்களிலும் வாய்க்கால்களாகப் பரவும் காவிரியின் பக்கம் கலகல என்று ஒலி தரும் கழலை யுடையவனாகிய ஈசன் விழையும் காட்டுப் பள்ளியைப் போற்றும் திருத்தொண்டர்கள் மகிழ்ந்து ஏத்தும் சிவன் கழலைப் போற்றுவோம்.

சிறப்புரை: கலகல என்று நின்று அதிரும் கழலான் என்பது திருநடனக் காட்சியைப் புகல்வதுடன் அவ்வொலியைத் திருச்செவிக்கு அமுதமாக்கிய தன்மையும் உணரலாம். இதற்குப் பிற்சான்றாகச் சேரமான் பெருமாள் நாயானார் புராண வரலாற்றில் காணலாம். அதிரும் கழலான் எனவும், சூலம் வல்லான் கழல் எனவும் இரு இடங்களில் கழலின் சிறப்புக் கூறினமை பரஞானம் அபரஞானம் வழங்கும் இணைமலர்ச் சேவடியைக் குறிப்பால் உணர்த்தும். இதனில் அறக்கருணை, மறக்கருணை புரிதலும் அடங்கும்.

49. தளையவிழ் தண்ணிற நீலநெய்தல்
தாமரை செங்கழு நீரும்எல்லாம்
களையவி ழும்குழ லார்கடியக்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளித்
துளைபயி லும்குழலி யாழ்முரலத்
துன்னிய இன்னிசை யால்துதைந்த
அளைபயில் பாம்புஅரை ஆர்த்தசெல்வர்க்கு
ஆட்செய அல்லல் அறுக்கலாமே.

தெளிவுரை: நீல நிறமுடைய நெய்தல் பூக்களும் தாமரை மலர்களும் பொய்கை நீரும், கூந்தலையுடைய மகளிரால் மணம் பரவும் தன்மையுடையனவாய் விரும்பப்படும் பெருமை பெற்றது காட்டுப்பள்ளி. அத் திருத்தலத்தில் குழலோசையும் யாழ் ஒலியும்

Koviloor Digital Library

இணைந்து சேர, அதனால் ஆட்கொள்ளப் பெற்ற பாம்பினை இடையில் பொருந்தச் செய்த செல்வனாகிய ஈசனுக்கு அடியவராக இருந்து திருத்தொண்டு செய்தால் துன்பம் இல்லை.

கடி – மிகுதி; மணம்.

50. முடிகையி னால்தொடும் மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டிக்
கடிகையினால்எறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரிது ஆயகண்டன்
பொடியணி மேனியி னானைஉள்கிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திமுன்னின்று
அடிகையி னால்தொழ வல்லதொண்டர்
அருவினை யைத்துரந்து ஆட்செய்வாரே.

தெளிவுரை: நாற்று முடிகளை வேர் அறுதல் கொள்ளாமல் பக்குவமாகக் கட்டியும், கரும்பின் கட்டிகளைக் கைகளால் வலிமையுடன் உடைத்தும் விளங்கும் உழவர்கள் நிறைந்த காட்டுப்பள்ளியை விழைந்து மேவும் ஈசன் கருமையான கண்டத்தை (கழுத்து) உடையவன். திருவெண்ணீறு தரித்த திருமேனி உடையவன். அவனை நினைத்து, மலரால் அருச்சித்து, நன்னீரால் பூசித்து, நல்லுரையால் ஏத்தி முன்னிருந்து திருவடியை வணங்கும் திருத்தொண்டர்கள் கண்களுக்குப் புலப்படாத வினையைக் களைந்து அடியவர் ஆவார்கள்.

சிறப்புரை: நாற்று முடிகளைத் தொடுதலும் கரும்பின் கட்டியை உடைத்தலும் உழவரின் பெருமையை நிலைநாட்டிற்று. "பொடியணி மேனியினானை உள்கிப் போதொடு நீர் சுமந்து ஏத்தி முன்னின்று

Koviloor Digital Library

அடிகையினால் தொழவல்ல" என்பது மனம், மொழி, மெய்களால் ஈசனை வழிபடுதல் ஆகும். அவர்கள் தொண்டர் என்று சுட்டப்படுதல் காண்க. அதன் மேற் பொருந்தும் சிறப்பு அடியவர் ஆதல்.

"போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார்" என்னும் திருநாவுக்கரசரின் வாக்கும் இங்கு நோக்கத் தக்கது.

மோட்டு – மோடு – பெருமை. தருக்குதல் – வருத்துதல்; உடைதல். அருவினை – அருவமாக (கண்ணுக்குப் புலப்படாதவாறு) உள்ள வினை. துரந்து – துரத்தல் – துரத்துதல் – ஓட்டுதல். ஆட்செய்வார் – அடியவர்.

51. பிறைஉடை யான்பெரி யோர்கள் பெம்மான்
பெய்கழல் நாள்தொறும் பேணிஏத்த
மறைஉடை யான்மழு வாள்உடையான்
வார்தரு மால்கடல் நஞ்சம்உண்ட
கறைஉடை யான்கனல் ஆடுகண்ணால்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறைஉடை யான்குறள் பூதச் செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பினோமே.

தெளிவுரை: *பிறை மதியுடையவன்; பெரியோர்களுடைய தலைவன்; வேதங்களால் போற்றப் படுபவன்; மழுவுடன் வாளையும் ஆயுதமாக உடையவன்; ஓங்கி வளர்ந்து நெடியவனான திருமால் உறையும் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு அதனால் கண்டம் கருமையுற்றவன்; நெற்றியில் விளங்கும் நெருப்புக் கண்ணால் மன்மதனை எரித்தவன்; காட்டுப்பள்ளியில் எக்காலும் இன்றியமையாப் பொருளாக இருப்பவன்; குறள் தன்மை கொண்ட பூதங்களின் தலைவன்; அவனுடைய திருவடியைக் கைகளால் கூப்பித் தொழுதனம்.*

Koviloor Digital Library

வார்தருமால் கடல் நஞ்சம் – வார்த்துத் தருகின்ற மதியற்ற கடல் தந்த நஞ்சு. மால் – மயக்கம். குறை உடையான் : எக்காலத்தும் இருப்பவன். (குறை – எஞ்சி நிற்கும் பொருள்); குரை – பெருமை; குரைகழல் – பெருமையான திருவடி.

52. செற்றவர் தம்அரணம் அவற்றைச்
செவ்வழல் வாய்எரி யூட்டிநின்றும்
கற்றவர் தாம்தொழுது ஏத்தநின்றான்
காதலிக் கப்படும் காட்டுப்பள்ளி
உற்றவர் தாம்உணர்வு எய்திநல்ல
உம்பர்உள் ளார்தொழுது ஏத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானை யல்லால்
பேசுவது மற்றொர் பேச்சிலோமே.

தெளிவுரை: *பகைவர் தம் அரணாக இருந்து முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கி எக்காலத்திலும் நிலை பெற்றவனாகி, கற்றவர்கள் தொழுது போற்ற இருப்பவனாகிய ஈசன் விழைவது காட்டுப்பள்ளி. அதனை அடைந்தவர் இப்பிறவி எடுத்ததன் சிறப்பினை அறிந்தவராய், தேவர்களால் வணங்கப் பெறும் பெருமானை யல்லாது வேறு பேச்சுப் பேசுவது இல்லை.*

சிறப்புரை: *"கற்றவர்தாம் தொழுது ஏத்த" என்பது கற்றதனால் ஆயபயனாக இறைவனைத் தொழுது போற்றும் செம்மையை உணர்த்திற்று. உணர்வு எய்து தலாவது மானிடப் பிறவியின் சிறப்பினை உணர்ந்து மீண்டும் பிறவாமை குறித்து அறிந்து அவ்வழியில் நிற்பது.*

பெற்றமரும் – பெற்றம் அமரும் – இடப வாகனத்தில் அமரும்.

53. ஒண்துவர் ஆர்துகில் ஆடைமெய்போர்த்து
உச்சிகொ ளாமைஉண் டேஉரைக்கும்

Koviloor Digital Library

குண்டர்க ளோடுஅரைக் கூறைஇல்லார்
கூறுவ தாம்குணம் அல்லகண்டீர்
அண்டம றையவன் மாலும்காணா
ஆதியி னான்உறை காட்டுப்பள்ளி
வண்டுஅம ரும்மலர்க் கொன்றைமாலை
வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே.

தெளிவுரை: *காவி நிறத் துணியை ஆடையாக உடம்பில் போர்த்து உயர்வாகக் கொள்ளப்படாத உணவை உட்கொண்டு உரைப்பவர்களுடன் சேர்ந்து அரையில் ஆடை அற்றோர் கூறும் மொழிகள் நன்மையாகாது. மறைவனாகிய பிரமனும் திருமாலும் காணமுடியாத மூலப் பொருளாகக் காட்டுப்பள்ளியில் கொன்றை மாலையும் நீண்டு வளரும் சடைமுடியும் கொண்டு உறையும் அப் பெருமானுடைய திருவடியை வாழ்த்து வோமாக.*

54\. பொன்னியல் தாமரை நீலநெய்தல்
போதுக ளால்பொலி வெய்துபொய்கைக்
கன்னியர் தாம்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடல் காழியர்கோன்
துன்னிய இன்னிசை யால்துதைந்து
சொல்லிய ஞானசம் பந்தனல்ல
தன்னிசை யால்சொன்ன மாலைபத்தும்
தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *சிவந்த தாமரை மலர்களும் நீலநிற நெய்தல் மலர்களும் இணைந்து சிறப்பினை எய்தும் குளத்தில் கன்னிப் பெண்கள் குடைந்து நீராடும் காட்டுப் பள்ளியை விரும்பியவனை – ஈசனை ஞான சம்பந்தர் பெருமான் இசையுடன் சொன்ன இத்திருப்பதிகத்தை இசைந்து ஏற்றுப் பாடுபவர்கள் புகழ் பெறுவர்.*

Koviloor Digital Library

சிறப்புரை: பகலில் தாமரையும் இரவில் நீல நெய்தலும் மலர்வன. ஆதலின் எல்லாக் காலங்களிலும் மலர்ந்திருக்கும் பொய்கையின் சிறப்பு உணர்த்தப் படுகின்றது. பொன்னியல் தாமரை நீல நெய்தல் என்பது சிவந்த நிறமுடைய ஈசன் திருக்கோலமும் நீல நிறமுடைய உமையின் திருக்கோலமும் காட்டற் பாலது. இதனைப் "பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம் போதால்... எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த பொங்கு மடு" என்னும் திருவாசகத் தொடர் (திருவெண்பாவை) காட்டும்.

"மாதரார் குடையும் பொய்கைக் கோலக்கா" என ஞானசம்பந்தர் பாடல் பதிக எண் 23 குறிப்பிடுவதும் காண்க.

6. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

தல விளக்கம்:

திருமருகல்: காவிரி தென்கரைத் தலம். திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தில் தன் தலைவனுடன் ஒரு பெண் வந்துற்றபோது, அந்த ஆண் மகன், அரவம் தீண்டி இறந்தான். அப் பெண்மணியின் துயரைத் தீர்த்து அவள் கணவனை உயிர் பெற்று எழச்செய்தார் திருஞானசம்பந்தர். அத்தகைய சிறப்புடையது இத்திருத்தலம்.

சுவாமி : மாணிக்க வண்ணர்

அம்பிகை : வண்டுவார் குழலி

தல மரம் : கல் வாழை

தீர்த்தம் : மாணிக்க தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம்.

Koviloor Digital Library

திருச்செங்காட்டங்குடி: சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். இறைவன் சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக் கறியமுது கேட்டு அனைவருக்கும் அருள்புரிந்த திருத்தலம். விநாயகர் பூசித்ததால் கணபதீச்சரம் என்று திருக்கோயிலின் பெயர் அமைந்தது. சிறுத்தொண்டர் விநாயகரைப் பிரதிட்டை செய்த தலம் இது.

சுவாமி : உத்தராபதீச்சரத்தார், கணபதீச்சரத்தார்

அம்பாள் : குழலம்மை

தல மரம் : ஆத்தி

தீர்த்தம் : சூரிய தீர்த்தம், இந்திர தீர்த்தம் முதலானவை

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர் திருமருகலில் தங்கி இருந்த காலத்தில், திருச்செங்காட்டங்குடியில் வசிக்கும் சிறுத்தொண்ட நாயனார் தமது பதிக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார். அப்போது திருஞானசம்பந்தர் திருமருகலில் உள்ளானைத் திருக்கோயிலின் உள்ளே சென்று தரிசிக்க அப் பெருமான், திருச்செங்காட்டங்குடி கணபதீச்சரத்தில் உள்ளவாறு காட்சி தந்து அருளினார். அப்போது மகிழ்ந்து இத் திருப்பதிகம் வினாவுரையாக எழுந்தது.

வினாவுரை

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

55. அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்

Koviloor Digital Library

செங்கயல் ஆர்புனல் செல்வமல்கு
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்குஎரி ஏந்திஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

தெளிவுரை: வேதமும் அதன் அங்கங்களும் திருவாயால் ஓதவும், மறைவல்ல அந்தணர்கள் திருவடியைத் தொழுது போற்றவும், நிலவின் ஒளி தவழும் மாட வீதியுடைய திருமருகலில் நிலவும் அழகனே! கயல் மல்கும் நீர்வளம் செல்வத்தைப் பெருக்க, சிறப்பு களைக் கொண்ட திருச்செங்காட்டங்குடி என்னும் ஊரில் கணபதி ஈச்சரத்தில் இரவில் திருக்கரத்தில் நெருப்பு ஏந்தி ஆடும் காட்சியை விரும்பித் தருவது எதன் பொருட்டு! சொல்லாய்!

மைந்தர்: வலிமையுடையவர், அழகுடையவர், விருப்பம் மிக்கவர்.

56. நெய்தவழ் மூவெரி காவல்ஓம்பு
நேர்புரி நூல்மறை யாளர்ஏத்த
மைதவழ் மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்கள்ஏத்தும்
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கைதவழ் கூர்எரி ஏந்திஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

தெளிவுரை: நெய் சொரிந்து மூன்று வகையான வேள்வித் தீயைப் பேணி வளர்க்கும் அந்தணர்கள் ஏத்த, மேகம் தவழும் உயர்ந்த மாடங்கள் நிறைந்த திருமருகலில் வீற்றிருக்கும் அழகனே! அவ்வேள்வி செய்தலைத் தவமாகப் போற்றும் நான்மறையாளர் கள் பாராட்டும் செங்காட்டங்குடியில் திருக்கரத்தில் பெரிய தீயை ஏந்தித் திருநடனம் புரிகின்ற கணபதி

Koviloor Digital Library

ஈச்சரத்தின்பால் விருப்பம் கொண்டு அக்காட்சியைப் நல்கினை! அஃது எதன் பொருட்டு? சொல்லாய்.

மூவெரி: ஆகவனீயம், காருகபத்யம், தட்சிணாக்கினி. இவை வேள்வித் தீயில் எழுப்பப்படுவன.

57. தோலொடு நூலிழை சேர்ந்த மார்பர்
தொகுமறை யோர்கள் வளர்த்த செந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயல் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழல் ஆர்க்கஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

தெளிவுரை: மான் தோலும் பூணூலும் மார்பில் பொலிய, மறையவர்கள் எழுப்பும் வேள்வித் தீயின் புகை மாட வீதிகளில் பரவுமாறு உள்ள திருமருகலில் வீற்றிருக்கும் அழகனே! சேல்கள் நிறைந்த நீர் வளம் மிக்க வயல்களும் சோலைகளும் சூழ்ந்த செங்காட்டங் குடியில், திருவடியில் கழலொலி ஆர்க்க புரியும் திருநடனத்தைக் கணபதி ஈச்சரத்தில் விரும்பி நல்கினை! இஃது எதன் பொருட்டு? சொல்லாய்!

58. நாமரு கேள்வியர் வேள்விஓவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயில்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
தேமரு பூம்பொழில் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

Koviloor Digital Library

தெளிவுரை: நடுநிலை தவறாததும் பொலிவு மிக்கதும் ஆன கேள்வி ஞானத்தை உடையவர்களும், ஒய்தல் இன்றி வேள்வி புரியும் நான்மறை வல்ல அந்தணர்களும் வழிபாடு செய்ய, பெருமை இழையும் மணிக் கோயில் உள்ள திருமருகலில் நிலவும் அழகனே! நல்ல மணம் தரும் பூம்பொழில் சோலை சூழ்ந்த செங்காட்டங்குடியில் விளங்கும் அழகிய சிறப்பினை மகிழ்ந்து இரவில் நடனம் புரிகின்றனை! இக்காட்சியை கணபதி ஈச்சரத்தில் விரும்பிக் கொண்டனை! இஃது எதன் பொருட்டு? சொல்லாய்.

சிறப்புரை: நாமரு கேள்வியர் என்பது கல்வியில் தேர்ச்சி கொண்டு இசையுடன் மந்திரங்கள் ஓதுதலை உணர்த்தும், நாமரு கேள்வி மிக்காரும் நான் மறையோரும் வழிபாடு செய்யும் சிறப்பு உணர்த்தப்பட்டது. வழிபாடு என்பது மலர்கொண்டு அருச்சித்தலும், பூசனை செய்தலும் இறைவன் திருப்புகழை இசையால் போற்றுவதும் இயற்றமிழால் மொழிதலும் ஆகும்.

நாமரு கேள்வியர்; நா – நடுநிலை; பொலிவு. மரு – மணம். கேள்வி – கல்வி; இசை; மந்திரம். – கேள்விஞானம். மா – பெருமை; ஒவா – ஒய்தல் இன்றி. தேமரு – சிறந்த (நல்ல) மணம். காமரு – அழகிய.

59. பாடல் முழவும் விழவும் ஒவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவு
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேஇடமாக ஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

Koviloor Digital Library

தெளிவுரை: எல்லாக் காலங்களிலும் முழவின் ஒலியுடன் கூடிய இசைப்பாடலும் திருவிழாக்களும் நடைபெற, மறையவர்கள் போற்ற, வானத்தை எட்டும் அளவு உயர்ந்த மாடங்களை யுடைய திருமருகலில் நிலவும் அழகனே! வளைந்த நெருக்கமான இலைகளை யுடைய பெருமை மிக்க மலர்ச் சோலை சூழ்ந்த செங்காட்டங்குடியில் இடுகாட்டினை இடமாகக் கொண்டு ஆடும் கணபதி ஈச்சரத்தினை விரும்பியது யாது பற்றி சொல்லாய்!

சிறப்புரை: விழாக் காலத்தில் இசைப் பாடல்கள் முழவொலியுடன் நிகழ்த்தப்படுதலும், அத்தன்மை யால் ஈசனைப் பரவிப் போற்றி வணங்குதலும் கூறப்பட்டது.

பன்மறையோர் – மறைவல்ல பலர். கொடி – நீட்சி; மாட நெடுங்கொடி – உயர்ந்த மாளிகை. சேடகம் – கேடகம் (பாசறை – வளைந்தும் நெருக்கமாக உள்ள இலைகளையுடைய மலர்ச் செடிகளைக் குறிப்பது). காடகம் – இடுகாடு.

60. புனைஅழல் ஓம்புகை அந்தணாளர்
பொன்னடி நாள்தொறும் போற்றிஇசைப்ப
மனைகெழு மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினைகெழு தண்வயல் சோலைசூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கனைவளர் கூர்எரி ஏந்திஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

தெளிவுரை: சிறப்பிக்கப்படும் வேள்வித் தீயைத் தமது கையால் உபசரிக்கும் அந்தணர்கள் நின் திருவடியைத் தினந்தோறும் போற்றி வேத கீதத்தால் வணங்கித் திகழ, அத்தகையோரின் மாட மாளிகைகள் நிறைந்த திருமருகலில் நிலவும் அழகனே! அரும்புகள் நிறைந்த

Koviloor Digital Library

சோலைகளும் தண் வயல்களும் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடியில், திரண்டு நெடிது ஓங்கி எரியும் நெருப்பைத் திருக்கரத்தில் ஏந்தி ஆடும் கணபதி ஈச்சரத்தினை விரும்பியது எதன் பொருட்டு? சொல்லாய்!

சிறப்புரை: புனை அழல் என்பது வேள்வி செய்தலையொட்டி அதற்குரிய விதிகளின்படி அலங்காரம் மற்றும் சிறப்புகளைச் செய்து நெருப்பைப் பேணுதல் சினைகெழு சோலையும் தண்வயலும் சூழ்ந்தது. திருச்செங்காட்டங்குடி. மேலும் இது போதொடு நீர்சுமந்து ஏத்தும் சிறப்புக்கு இயற்கையின் அருள்வண்ணம் அமைந்துள்ளது என்பதைக் காட்டும். எனவே இச்சீரினைக் கொள்ளும் செங்காட்டங்குடி ஆயிற்று.

புனை – புனைதல் – அலங்கரித்தல், சிறப்பித்தல். பொன்னடி – பொன்னானது களிம்பைச் சோக்காமல் தூய்மையாய் ஒளிர்தல்போல் ஈசன் திருவடி குறிக்கப்பெற்றது (பொன்னார் மேனியன் பொன்னம் பலத்தன்). சினை – அரும்பு. மனைகெழு, சினை கெழு – கெழு – பொருந்திய நிலையைக் குறிக்கும் உயர்வுச் சிறப்பு. கனை – திரட்சி, மிகுதி.

61. பூண்தங்கு மார்பின் இலங்கைவேந்தன்
பொன்நெடும் தோள்வரை யால்அடர்த்து
மாண்தங்கு நூல்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்தங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்தங்கு தோள்பெயர்த்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

தெளிவுரை: அணிகலன்கள் திகழும் மார்பினையுடைய இலங்கை வேந்தனின் ஒளி திகழும் நெடிய தோளை, அவன் எடுத்த மலையினாலேயே

Koviloor Digital Library

தண்டனையுறச் செய்து, மாட்சிமையுடைய முப்புரிநூலைத் தரித்த மறையவர்கள் வணங்க, மருகலில் நிலவும் அழகனே! உயர்ந்து நிற்கும் பெருமையான மலர்ச் சோலை சூழ்ந்த சிறப்பு மிகுந்த செங்காட்டங்குடியில் அழகிய தோள்களை வீசி, இரவில் ஆடும் கணபதி ஈச்சரத்தின் காட்சியினைப் புலப்படுத்தினீர். எதன் பொருட்டு? சொல்லாய்!

சிறப்புரை: இலங்கை வேந்தனின் தோள் நெரியுமாறு தண்டிக்கப்பட்டதென்றாலும், ஈசன் திருவடியைத் தாங்கும் சிறப்பினையுற்றமையால் பொன்னெடுந் தோள் எனும் பெருமையுற்றது. ஈசனை வணங்கு வோர்க்கு ஆணவமலம் தோயுங்கால் அதுவே ஆங்கு அடர்த்து நன்னெறியைப் புகட்டும் என்பது ''வரையால் அடர்த்து'' என்னும் தொடர் புலப்படுதிற்று. "தோள் பெயர்த்து எல்லி ஆடும்" என்பது ஈசன் நடனத்தை உணர்த்தியது. "எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான்" என்பது திருநாவுக்கரசர் வாக்கு.

பூண் – அணிகலன். மாண்தங்கு – மாட்சிமை பொருந்திய – இது முப்புரி நூலுக்கும் (பூணூல்) மறையோர்களுக்கும். சிறப்பாக அமைந்தது. சேண்தங்கு – உயர்ந்து நிற்கும்; சேண் – உயர்ந்த. காண் – அழகு, காட்சி.

62. அந்தமும் ஆதியும் நான்முகனும்
அரவணை யானும் அறிவரிய
மந்திர வேதங்கள் ஓதுநாவர்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவிஏத்தும்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்தம்அ கில்புகை யேகமழும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

Koviloor Digital Library

தெளிவுரை: திருவடியைத் திருமாலும் திருமுடியை நான்முகனும் காணவேண்டும் என்று முயற்சி செய்தும் அறிவதற்கு அரியவனாய் மந்திரமாக விளங்கும் வேதங்களை ஓதும் பெருமக்கள் திகழும் மருகலில் நிலவும் அழகனே! இனிமை மிக்கவர்கள் பரவிப் போற்றும் சிறப்பினைக் கொண்ட செங்காட்டங் குடியில் அகிற் புகையின் மணங்கமழும் கணபதி ஈச்சரம் என்னும் திருக்கோயின்கண் விருப்பமுற்று காட்சி நல்குதல் எதன் பொருட்டு? சொல்லாய்!

சிறப்புரை: திருவடியை அந்தம் என்றும் திருமுடியை ஆதி என்றும் குறிப்பிடுதல் காண்க. முடிவாகிய முத்திக்கு வழிகாட்டுவது முத்தி நான்ற மலர்ப்பதம் எனச் செப்பும் உண்மை விளக்கத்தின் செய்யுளை ஓர்க. ஓதும் நாவர் என்பது, வேதங்களை ஓதும் வாய்மையில் நாவானது நன்கு பழகி அது தன் இயல்பால் செய்யவல்லதைக் காட்டும். இது நாவின் சிறப்பை உணர்த்திற்று. செந்தமிழோர் பரவி ஏத்தும் என்பது தமிழர்தம் இனிய பண்பும் (தமிழ் – இனிமை) கூறப்படுகின்றது.

அந்தம் – திருவடி. ஆதி – திருமுடி. அரவணையான் – திருமால். நா – சொல், பொலிவு. கந்தம் – நறுமணம்.

63. இலைமரு தேஅழ காகநாளும்
இடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலைஅமண் தேரரை நீங்கிநின்று
நீதர்அல் லார்தொழு மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாய்அருளாய்
மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோல்உடுத்து எல்லிஆடும்
கணபதி ஈச்சரம் காமுறவே.

Koviloor Digital Library

தெளிவுரை: வெற்றிலை பாக்குடன் சுக்கும் வாயில் மென்றும் மருதாணி இலையின் சாயம் பூசியும் நிலவும் சமணர் மற்றும் சாக்கியரை விலகி, மற்றும் கீழ்மை அற்றவர்கள் போற்றும் சிறப்பின் மிக்க மருகலில் உமாதேவியுடன் விளங்கும் ஈசனே, அருள்புரிவாய். குற்றமில்லாத செங்காட்டங்குடியில் மான்தோலை உடுத்து இரவில் நடனம் ஆடும் கணபதி ஈச்சரத்தில் விரும்பியது எதன்பொருட்டு?

இலைமருது – மருதாணி இலை. துவர்க்காய் – பாக்கு. தேரர் – சாக்கியர் (புத்த மதத்தினர்). நீதர் – நீசர் (கீழ்மைக் குணத்தினர்). கலை மல்கு தோல் – மான் தோல்.

64. நாலும் குலைக்கமுகு ஓங்குகாழி
ஞானசம் பந்த னலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடம் ஓங்கு
மருகலில் மற்றுஅதன் மேல்மொழிந்த
சேலும் கயலும் திளைத்த கண்ணார்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழல் ஏத்துபாடல்
சொல்லவல் லார்வினை இல்லையாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தொங்கி வளரும் குலைகளையுடைய கமுக மரங்கள் மிகுந்த சீகாழியின் ஞானசம்பந்தப் பெருமான், நலமும் பெருமை பெற்ற மாடமும் ஓங்கித் திகழும் மருகல் என்னும் பதியிலும் மற்றும் அதன் மேன்மையாய், சேலும் கயலும் திளைத்த கண்மாய் கள் (மதகுகள் பொருந்திய கால்வாய்கள்) சிறப்புடன் விளங்கும் செங்காட்டங்குடியிலும் சூலப்படையுடன் விளங்கும் ஈசனின் திருவடியைப் போற்றி மொழிந்த பாடலைச் சொல்பவர்களுக்கு வினை இல்லை.

Koviloor Digital Library

சிறப்புரை: *"மாலின் மதிதவழ் மாடம்" என்பது தேய்ந்த சந்திரன் (மதி) சிவனடியைச் சார்ந்து பெருமையுற்ற தால் மாலின் மதியாயிற்று. அத்தகைய மதிதவழ் மாடம் சிவசிந்தனையில் பொலிவதனால் ஓங்கும் மருகல் எனும் பான்மையுற்றது.*

நாலும் – தொங்கும். மால் – பெருமை.

7. திருநள்ளாறும் திருவாலவாயும்

தல விளக்கம்:

திருநள்ளாறு: *காவிரி தென்கரைத் தலம். இத்தலம் சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. மற்றையவை: 1. திருவாரூர், 2. திருநாகைக் காரோணம், 3. திருமறைக்காடு, 4. திருவாய்மூர், 5. திருக்கோளிலி, 6. திருக்காறாயில்.*

திருஞானசம்பந்தர் அனல்வாதத்தில் "போக மார்த்த பூண்முலையாள்" என்று எழுதியிட்ட பதிகம். (பச்சைத் திருப்பதிகம் — இத் திருத்தலத்திற்குரியது. பதிக எண். 49.)

நளச்சக்கரவர்த்தி இத்தலத்தில் வந்து தரிசிக்க, சனிக் கிரகத்தின் இடர் நீங்கியது. இத் தலத்தில் சனி பகவானுக்கு முதன்மை வழங்கப்படுகிறது.

சுவாமி : திருநள்ளாற்று ஈசர்

அம்பிகை : போகமார்த்த பூண்முலையாள்

தல மரம் : தருப்பை

தீர்த்தம் : நள தீர்த்தம்

திரு ஆலவாய்: *பாண்டிய நாட்டுத் தலம். மதுரை எனப்படுவது. தடாதகைப் பிராட்டியார் (மீனாட்சி*

Koviloor Digital Library

அம்மை) திருவவதாரம் செய்து பாண்டிய நாட்டை ஆண்டு ஈசனைத் திருமணம் கொண்ட திருத்தலம். ஈசன் சௌந்தர பாண்டியனாக வீற்றிருந்து அரசு புரிந்தார். ஐந்து சபைகளுள் இது வெள்ளிச் சபை யுடையது. வெள்ளியம்பலம் என்பர். சிவபெருமான் அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் புரிந்த இடம். மூன்றாம் (கடை) தமிழ்ச் சங்கம் இருந்த பதி. புலவர்களுள் ஈசனும் ஒருவனாய் இருந்து தமிழ் ஆய்ந்தான். சங்கத் தமிழ் கண்ட பதி.

திருஞானசம்பந்தர் அனல்வாதம் புனல்வாதம் நிகழ்த்தி இப்பதியில் சமணர்களை வென்றார். கூன் பாண்டினுடைய வெப்பு நோய் திருஞானசம்பந்தரால் தீர்க்கப்பட்ட இடம் இதுவே. பின்னர் அப்பாண்டிய மன்னன் நின்ற சீர் நெடுமாறனாய், கூன் முதுகு சீராகிய சிறப்பு உண்டு. இறைவன் கால் மாறி ஆடிய தலம்.

இக்கோயிலுக்குள்ள பிற பெயர்கள்: ஆலவாய், கூடல், கடம்பவனம், பூலோகக் கயிலாயம்.

சுவாமி : சோமசுந்தரக்கடவுள், சொக்கநாதர்

அம்பிகை : மீனாட்சி

தல மரம் : கடம்ப மரம்

தீர்த்தம் : பொற்றாமரைத் தீர்த்தம்

பதிகக் குறிப்பு: மதுரையில் அனல்வாதத்தில் "போக மார்த்த" என்னும் திருப்பதிகம் பெற்ற திருத்தலமாகிய திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் ஈசனை, ஆலவாயில் அமர்ந்ததை வினவும் வினாஉரையாக உடையது.

வினாவுரை

பண் : நட்டபாடை

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

65. பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடகம்ஆடு நள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
சூடக முன்கை மடந்தை மார்கள்
துணைவ ரொடும்தொழுது ஏத்திவாழ்த்த
ஆடக மாடம் நெருங்குகூடல்
ஆல வாயின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: *பாடகம் என்று சொல்லப் படுகின்ற அணியை மென்மையான திருப்பாதத்தில் அணிகல னாகக் கொண்ட உமா தேவியுடன், பிணங்கள் நிறைந்த காட்டினை இடமாகக் கொண்டு நடனம் ஆடும் நள்ளாறுடைய .பெருமானே! முன் கையில் சூடகம் என்று சொல்லப்படும் வளையலை யணிந்த மகளிர் தத்தமது கணவன்மார்களோடும் தொழுது போற்றி வாழ்த்த பொன் மாளிகைகள் நெருக்கமாக உடைய கூடல் நகரில் ஆலவாய் எனப்படும் கோயிலின்கண் அமர்ந்த பாங்கு என்கொல்! சொல்லாய்!*

பாடகம் – காலில் அணியப்பெறும் அணி. சூடகம் – கைவளையல். ஆடகம் – பொன். துணைவர் – கணவர் – மகளிர்க்குத் துணையாக உள்ள தந்தை, மைந்தர் முதலானோரையும் குறிக்கும்.

66. திங்கள்அம் போதும் செழும்புனலும்
செஞ்சடை மாட்டுஅயல் வைத்துஉகந்து
நங்கண் மகிழுநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
பொங்குஇள மென்முலை யார்களோடும்
புனமயில் ஆட நிலாமுளைக்கும்

Koviloor Digital Library

அங்கழ கச்சுதை மாடக்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: திங்களையும் அழகிய கொன்றை மலரையும் வளமையான கங்கையையும் சிவந்த தன் சடைமுடியில் பொருந்துமாறு தனித்தனியே வைத்து மகிழ்ந்து நம் நெஞ்சத்திலும் இருந்து மகிழும் நள்ளாறு என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமானே! இளம் மகளிருடன் மயில்கள் ஆடும்போது நிலவு எழுந்து ஒளிபரப்பச் சத்சங்கத்தின் இருப்பிடமாக மண்டபங்களை யுடைய மாளிகைகள் நிறைந்த கூடலின்கண் அமர்ந்த விதம் என்கொல்? சொல்லாய்!

நங்கண் – நம்மிடம். நங்கண் மகிழும் – அடியாரிடம் மகிழ்ந்து நிலவும். அங்கழகச்சுதை – சத்சங்கம் வளர்க்கும் மண்டபங்கள். சுதைமாடம் – சுண்ணாம்பினால் அமைக்கப் பெற்ற நீளமான கட்டடங்கள் (மண்டபங்கள்).

67. தண்ணறு மத்தமும் கூவிளமும்
வெண்தலை மாலையும் தாங்கியார்க்கும்
நண்ணல்அ ரியநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துடன் ஏத்தப் புனைஇழையார்
அண்ணலின் பாடல் எடுக்கும்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: குளிர்ச்சியான ஊமத்தம் பூவும் வில்வ இதழும் வெண்மையான தலைகளை மாலைகளாக வும் தாங்கி, யாரும் அடைதற்கு அரியவனாய் திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே, புண்ணியம் செய்தவர்களும், பெருந்தவம் செய்தவர்களும் சென்று போற்றச் சிறப்பாக விளங்கும் பெருமானின்

Koviloor Digital Library

பாடலைத் தொடுக்கும் ஆலவாயின்கண் அமர்ந்திருக்கும் அழகு என்கொல்? சொல்லாய்!

சிறப்புரை: நண்ணுவதற்கு அரிய பெருமான் புண்ணிய வானரும் மாதவத்தினரும் புகுந்து ஏத்தும் சிறப்புடையவனாய் அடியவர்க்கு அருள் புரியும் செயல் பேசப்படுகின்றது. புனை இழையார் அண்ணலின் பாடல் எடுக்கும் கூடல் என்பது, ஈசனின் புகழைக் கூறும் பாடலைப் புனைந்து கூறும் அடியவர் கள் விளங்கும் மதுரை என அமையும். வெண்தலை மாலையுடைய பெருமானை, தலைமாலை தலைக் கணிந்து தலையாலே பலிதேரும் தலைவன் என்று திருநாவுக்கரசரின் வாக்கால் மொழியப் பெறுதலும் அறியத்தக்கது.

மத்தம் – ஊமத்தம் பூ. கூவிளம் – வில்வ இதழ். புனை இழையார் – புனைந்து (சிறப்பித்துக் கூறுதல்) நெஞ்சம் இழைந்து பொருந்திய; பாடலைப் புனைதலும் ஆம்.

68. பூவினில் வாசம் புனலில் பொற்புப்
புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினில் பாடநள் ளாறுடைய
நம்பெரு மன்இது என்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தரர்கணத் தோடும் சிறந்துபொங்கி
ஆவினில் ஐந்துஉகந்து ஆட்டும்கூடல்
ஆல்வா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: பூவினில் நறுமணமும், நீரின் பொலிவும், சந்தனத்தின் மணமும், நாவினால் பாடுதலும் ஆகிய ஐம்பொறிகளுக்கும் சார்வாய் நள்ளாற்றில் வீற்று இருக்கும் பெருமானே! தேவர், அசுரர், சித்தர், வித்யா தரர் முதலான கணத்தினரோடும் சிறந்து மேலோங்கி,

Koviloor Digital Library

பசுவின் வாயிலாகப் பெறப்படும் ஐந்து வகையான பொருள்களையும் உகந்து பூசனையாகக் கொள்ளும் மதுரையின் திருக்கோயிலில் அமர்ந்தவாறு என் கொல்? சொல்லாய்!

சிறப்புரை: "பூவினில் வாசம் .... நாவினில் பாட" இத் தொடர் ஐம்பொறிகளில் மெய், வாய், நாசி, செவி என்பதுடன் பெருமான் திருக்காட்சி கண்ணுக்கு அமைதலையொட்டி ஐம்பொறிகளுக்கும் இறைவன் சார்வாய் இருத்தலை உணர்த்திற்று. ஆவினில் ஐந்து உகந்து ஆட்டும் கூடல் என்பது, சிவ பூசைக்காகப் பசு விலிருந்து பெறப்படும் ஐந்து பொருள்களான 1. பால், 2. தயில், 3. நெய், 4. கோசலம் (அ) கோநீர், 5. கோமயம் (அ) சாணம் என்பவற்றைக் குறிக்கும். கோரோசனம் என்பதும் இதில் அடங்கும்.

69. செம்பொன்செய் மாலையும் வாசிகையும்
திருந்துபு கையும்அ வியும்பாட்டும்
நம்பும்பெரு மைநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்!
உம்பரும் நாகர்உ லகம்தானும்
ஒலிகடல் சூழ்ந்த உலகத்தோரும்
அம்புத நால்களால் நீடும்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: பொன் மாலையுடைய அலங்காரமும், வாசிகை என்னும் திருவொலியும், அடர்ந்து பரவி மணக்கும் அகிற் புகையும், நைவேத்தியமும் இசைப் பாட்டும், அரனை வழிபடுபவர்களுக்கு அருள் நிலவும் என்னும் வாய்மையில் பக்தி சிரத்தையுடன் வழிபடும் நம்பிக்கைக்குரிய சிறப்பும் உடைய நள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே! தேவருலகத்தாரும் நாகர் உலகத்தாரும் கடலால் சூழப்பட்ட இந்தப் பூவுலகத்

Koviloor Digital Library

தாரும் ஏத்த மேகங்கள் போன்று குளிர்ந்து நீண்ட நான்மாடக் கூடலில் அமர்ந்தவாறு என் கொல்? சொல்லாய்!

சிறப்புரை: "நம்பும் பெருமை நள்ளாறு" என்பது அடியவர்க்கு ஈசன் அருள்புரியும் சிறப்பு உணர்த்திற்று.

அம்புதம் – மேகம் : அம்புத நால்கள் – நான்கு வகையான மேகங்களைக் குறித்தலும் ஆம்.

70. பாகமும் தேவியை வைத்துக்கொண்டு
பைவிரி துத்திப் பரியபேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல் சொல்லாய்
போகமும் நின்னை மனத்துவைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகம்உ டையவர் சேரும்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: ஒரு பாகத்தில் உமாதேவியை வைத்துக் கொண்டு, நஞ்சினையும், அகன்ற படத்தையும் பிளந்த வாயையும் உடைய நாகமும் அணிகலனாகப் பூண்டு. நள்ளாற்றில் வீற்று இருக்கும் பெருமானே! புண்ணியர் நின்னை மனத்தில் இருத்திப் போகத்தில் சேரும் பண்பினராய்த் திருமேனி உடையவர்கள் விளங்கும் கூடலின்கண் அமர்ந்தவாறு என்கொல்? சொல்லாய்!

பை – அழகு, அரவின் படம். துத்தி – பாம்பின் படம். பரியபேழ்வாய் – அழிக்கும் தன்மையுடைய பெரிய வாய். ஆகம் – திருமேனி.

71. கோவண ஆடையும் நீறுப்பூச்கம்
கொடுமழு ஏந்தலும் செஞ்சடையும்
நாவணப் பாட்டுநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்

Koviloor Digital Library

பூவண மேனி இளையமாதர்
பொன்னும் மணியும் கொழித்தெடுத்து
ஆவண வீதியில் ஆடும்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: கோவணத்தை ஆடையாகக் கொண்டும், திருநீற்றை மேனியில் பூசியும் வளைந்த மழு ஆயுதத்தை ஏந்தியும், செம்மை திகழும் சடைமுடி கொண்டு பலவண்ணங்களை உடைய திருப்பாடல்களை நாவினால் இசைக்கத் திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே! பூப்போன்ற மென்மையான மேனியை உடைய இளம் மகளிர் பொன்னும் மணியும் திரளாகச் சேர்த்து கடை வீதியில் உலவும் கூடலின்கண் அமர்ந்தவாறு என்கொல்? சொல்லாய்!

சிறப்புரை: ஈசனுக்கு வேதமே கோவணமாகி ஆடை ஆயிற்று. வண்ணங்கள் பலவாய் நாவினால் பாடும் சிறப்புடைய நள்ளாற்றில் ஈசன் மழுவேந்திக் கோவண ஆடையுடன் இருத்தலும் ஆலவாயில் பொன்னும் மணியும் கொழித்து விளங்குவதும் இங்கு சுட்டப் பெறுதல் காண்க.

72. இலங்கை இராவணன் வெற்பெடுக்க
எழில்விரல் ஊன்றி இசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப்
புந்தியி லும்நினைச் சிந்தைசெய்யும்
அலங்கல் நல்லார்கள் அமரும்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: இலங்கை வேந்தனாகிய இராவணன், திகழும் கயிலாய மலையைப் பெயர்த்து எடுக்கும் போது உயர்ச்சியை நல்கும் அழகிய விரலை அம்

Koviloor Digital Library

மலையின்மீது ஊன்றி, மற்றும் அவ் வரக்கனுடைய இசையை விரும்பி அவனுக்கு நலன்களைக் கொள்ளுமாறு அருள் புரிந்து நள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே! ஐந்து இந்திரிய வயம் மயங்கியும் அந்தந்த புலன்வழிச் சேராமல் பாதுகாத்தும் மனத்தால் நின்னை எக் காலத்திலும் சிந்தித்து மகிழும் பெருமையுற்ற நல்லோர்கள் அமரும் ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்கொல்? சொல்லாய்!

சிறப்புரை: எழில் விரல் என்பது ஈசனின் அழகிய திருப்பாத விரல் உயர்ச்சியைத் தரவல்லது என்று சுட்டப்படுவது. மெய், வாய், கண், மூக்கு, செவியின் வாயிலாகத் தம் போக்கில் கட்டுப்பாடின்றி நுகரக் கூடிய சுவை, ஒலி, ஊறு, ஓசை, மணம் என்னும் ஐவகையின் வழி செல்லாது காத்தலைப் "புலன்களைச் செற்றுப் பொறி நீக்கி" என்னும் தொடர் சுட்டுகின்றது. மாலையணிந்து பெருமையுடன் விளங்கும் பெருமக்கள் அலங்கல் நல்லார்கள் என்று குறிப்பிடப் படுதல் காண்க.

எழில் – அழகு, வளர்ச்சி, உயர்ச்சி. அலங்கல் – மாலை.

73. பணியுடை மாலும் மலரினோனும்
    பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல்அ ரியநள் ளாறுடைய
    நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
    மாமுர சின்ஒலி என்றும்ஓவாது
அணிகிளர் வேந்தர் புகுதும்கூடல்
    ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: படம் விரித்துள்ள ஆதிசேடனைப் படுக்கையாக உடைய திருமால் பன்றி வடிவத்தில்

Koviloor Digital Library

பூமியைக் குடைந்து சென்றும், மலரின்மேல் உறையும் நான்முகன் அன்னப் பறவை வடிவத்தில் ஆகாயத்தில் பறந்து சென்றும் அடைய முடியாதவனாய்த் திரு நள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே! தேரில் பொருத்தப் பெற்றுள்ள மணிகளின் ஒலியும் புடை சூழும் படைகள் முழங்கும் சங்கொலியும். முரசொலியும் எக்காலத்திலும் ஓய்வின்றி அணிஅணி யாகப் பல நாட்டு வேந்தர்கள் சாரும் ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்கொல்? சொல்லாய்!

சிறப்புரை: பலநாட்டு வேந்தர்கள் கூடல் நகர் புகுதலானது, பாண்டிய மன்னர்களின் சிறப்பும் அதற்குக் காரணமான ஆலவாய் அண்ணலின் அருளும் பெருக்கெடுத்திருத்தலைப் புகல்வதாம். அன்னப் பறவை, ஈசன் திருமுடியைக் கண்டதாகப் பொய் உரைத்து வெற்றி பெற்றதாகக் கூறியதை வென்றிப் பறவை எனப்பட்டது.

74. தடுக்குடைக் கையரும் சாக்கியரும்
சாதியில் நீங்கிய அத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய
நம்பெரு மான்இது என்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவும் நன்னாள்விழவும்
இரும்பலி இன்பினோடு எத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தவாறே.

தெளிவுரை: தாம் அமர்வதற்காக ஓலையினால் செய்த தடுக்கையுடைய சமணர்களும் மற்றும் சாக்கிய மதத்தினரும், மரபில் திரிந்த தவத்தினராய் அதிர்ந்து இருக்கத் திருநள்ளாற்றில் வீற்றிருக்கும் பெருமானே! திருவிழாக்கள் நடத்தியும் காத்தல் செய்ய வேண்டும் என்னும் குறிக்கோளில் இன்பம் பெருக எல்லாத்

Koviloor Digital Library

திசைகளிலும் பெருமையுறும் ஆலவாயின்கண் அமர்ந்தவாறு என்கொல்? சொல்லாய்!

சிறப்புரை: அடியவர்கள் வேண்டுதலின் பொருட்டும் மற்றும் சுப காரியங்களை மேற்கொள்ளும் பொருட்டும் நடத்தும் திருவிழாக்கள் 'எடுக்கும் விழவு' எனவும், இறைவன் திருநட்சத்திரங்களில், நாள்களில் (திருவாதிரை, பூசம் மற்றும் பிரதோஷம் போன்ற நாட்கள்) நடத்தும் திருவிழாக்கள் 'நான்னாள் விழவு' எனவும் குறிக்கப்பெற்றது. திருவிழாக்கள் மக்களைக் காத்தலை யொட்டி நடைபெறுவதால் "இரும்பலி இன்பினோடு" எனப்பட்டது. காத்தல் செய்யும் திருவிழாக்கள் இன்பம் தரவல்லது என்பதாம்.

சாதியில் நீங்கிய – பாரம்பரியத்திலிருந்து மாறிய. நடுக்குற – அதிர்ச்சியுற, அச்சமுற. இரும்பலிஇன்பினோடு – இன்பத்தின் அளவு – மிகுந்த இன்பம். இரு – பெரிய. பலி – காக்கும் தன்மை. அடுக்கும் பெருமை – பெருமைகளின் திரட்சி.

75. அன்புடை யானை அரனைக்கூடல்
ஆலவாய் மேவியது என்கொல்என்று
நன்பொனை நாதனை நள்ளாற்றானை
நயம்பெறப் போற்றி நலம் குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக்காழிப்
பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லார்
இமையவர் ஏத்த இருப்பர்தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அன்புடையவனாகிய அரனைக் கூடல் ஆலவாய் மேவியது என்கொல் என்று திருநள்ளாறு என்னும் பதியில் வீற்றிருக்கும் தலைவனை, விருப்பத்துடன் போற்றி எல்லோருடைய நலத்தையும் விளங்கச் செய்யும், பொன்னால் அழகு படுத்தப்படும்

Koviloor Digital Library

மாட மாளிகையுடைய சீகாழியின் அந்தணர் பெருந்தகையாம் ஞானசம்பந்தப்பெருமான் மொழிந்த, இன்பம் பெருக்கும் பாடல்கள் பத்தினையும் ஏற்றுப் பாடுபவர்கள், தேவர்களெல்லாம் போற்றுமாறு திகழ்வர்.

சிறப்புரை: அன்பே சிவமாதலின் அரனை அன்புடை யான் எனப் போற்றினர். மலம் அற்றவனாக விளங்கும் ஈசனது இயல்பைப் புலப்படுத்துமாபோல் தூய - செம்பு கலவாத பொன்னாக விளங்கும் ஈசனை நன்பொன் எனச் சுட்டினர். இத் திருப்பதிகம் ஆன்மாக்களுக்கு உரித்தான இன்பத்தை வழங்கும் நெறியுடைத்தமையை இன்புடைப் பாடல்கள் என்னும் தொடர் குறித்தது.

நயம் – விருப்பம், மகிழ்ச்சி. பூசுரன் – அந்தணன்.
இருப்பர்தாமே என்பது திருப்பதிகத்தை ஓதுபவர்களுக்குத் தாமாகவே விளையும் சிறப்புக் கூறப்படுதலாம்.

8. திருஆவூர்ப் பசுபதீச்சரம்

தெளிவுரை: ஆவூர் - காவிரி தென்கரைத் தலம். திருக்கோயிலின் பெயர், பசுபதீச்சரம். இந்திரன் சப்த ரிஷிகள், பசுக்கள் பூசித்தது.

சுவாமி : பசுபதீஸ்வரர்

அம்பிகை : மங்களநாயகி

தலமரம் : அரசு

தீரத்தம் : பிரம தீர்த்தம், காமதேனு தீர்த்தம்

பண் : நட்டபாடை

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

76. புண்ணியர் பூதியர் பூதநாதர்
புடைபடு வார்தம் மனத்தார்திங்கள்
கண்ணியர் என்றென்று காதலாளர்
கைதொழுது ஏத்த இருந்தஊராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவிளங்கும்
பண்ணியல் பாடல்அ றாதஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: *புண்ணியமூர்த்தி, செல்வம் உடையவர், பூதகணங்களின் தலைவர், அணுகிப் பக்கம் சார்பவரின் மனத்தில் பொருந்துபவர், திங்களைச் சூடியவர் எனப் பலவாறு அன்பர்கள் கை தொழுது ஏத்தும் ஊர், உயர்ந்த மாளிகைகளும் மாட வீதிகளும் மற்றும் மணம் கமழ் சோலைகள் பரந்து எல்லா இடங் களிலும் பண்ணிசை மேவும் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும் ஆவூர். அத்தகைய ஊரில் விளங்கும் பசுபதீச்சரத்தை நாவானது பாடித் துதிக்கவேண்டும்.*

சுலாவி – பரவி.

77. முத்தியர் மூப்பிலர் ஆப்பின்உள்ளார்
முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும்
அத்தியர் என்றென்று அடியர்ஏத்தும்
ஐயன்அ ணங்கொடு இருந்தஊராம்
தொத்துஇயலும் பொழில் மாடுவண்டு
துதைந்து எங்கும் தூமதுப் பாயக்கோயில்
பத்திமைப் பாடல்அ றாதஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: *முத்தி தருபவர், முதுமை இல்லாதவர், மூன்று கண்களை உடையவர், தக்கன் புரிந்த தகாத*

Koviloor Digital Library

வேள்வியை அழிக்கும் யானை போன்றவர் எனப் பலவாறு அடியவர்கள் போற்றும் தலைவன் உமாதேவி யுடன் இலங்கும் இடம், பூங்கொத்துக்கள் விளங்கும் சோலைகளின் பக்கம் வண்டு படிந்து நல்ல தேனைச் சேர்க்க, அது பெருக்கெடுத்துப் பாயும் கோயில், பக்திப் பாடல்களை ஓயாது இசைக்கும் ஆவூரின்கண் மேவும் பசுபதீச்சரம் ஆகும். அதனை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

ஆப்பின் உள்ளார் – கன்றாப்பூர் என்னும் திருத்தலத்தில் உள்ளவர் அத்தியர் – (அத்தி – யானை) யானையைப் போன்று வெகுண்டு தீய வேள்வியைச் சேதப்படுத்தியவர். தொத்து – பூங்கொத்து (திரட்சி). மாடு – பக்கம்.

78. பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார்
போம்வழி வந்துஇழிவு ஏற்றம்ஆனார்
இங்குஉயர் ஞானத்தர் வானோர்ஏத்தும்
இறையவர் என்றும்இ ருந்துஊராம்
தெங்குஉயர் சோலைசேர் ஆலைசாலி
திளைக்கும் விளைவயல் சேரும்பொய்கைப்
பங்கய மங்கை விரும்பும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: பொங்கி வரும் புனலாகிய கங்கையைத் திருமுடியில் வைத்தார், ஈசன். அவரை, மானிடராய்த் தோன்றி பிறவித் தளையிலிருந்து விடுபட்டு ஏற்றம் பெற்றவர்களும், உயர்ந்த ஞானிகளும், வானோரும் ஏத்துகின்றனர். யாண்டும் விளங்கும் தென்னை மரங் களும், கரும்பும் செந்நெலும் திளைக்க வயல்களும், நீர்நிலை பெருக்கும் பொய்கை(குளம்)களும் சேரத் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் விரும்பும்படி அவ்வூர் உள்ளது. அத்தகைய ஊர் ஆவூர். அவ்வூரின் கண் விளங்கும் பசுபதீச்சரத்தை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

Koviloor Digital Library

79. தேவியோர் கூறினர் ஏறதுஏறும்
செலவினர் நல்குரவு என்னைநீக்கும்
ஆவியர் அந்தணர் அல்லல்தீர்க்கும்
அப்பனார் அங்கே அமர்ந்த ஊராம்
பூவியலும் பொழில் வாசம்வீசப்
புரிகுழ லார்சுவடு ஒற்றிமுற்றப்
பாவியல் பாடல்அ றாதஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகமாக வைத்து இருப்பவர்; இடப வாகனத்தில் ஏறி அமர்ந்து அடியவர்பால் சென்று காட்சி தருபவர்; வறுமை என்னைச் சாராதபடி காப்பவர்; உயிரைப் போன்றவர்; அந்தணர்; துயரைத் தீர்க்கும் தந்தையானவர். அப் பெருமான் அமர்ந்த ஊர் என்பது சோலைகள் பூவின் மணத்தைப் பரப்பவும் மகளிர் தமது பாதத்தால் தாளம் எழுப்பவும் தேர்ந்த இசையுடன் பாடல்கள் ஒலித்துக் கொண்டு விளங்கும் ஆவூர்ப் பசுபதீச்சரம் ஆகும். அங்கு எழுந்தருளியுள்ள ஈசனை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

சிறப்புரை: நல்குரவு என்னை நீக்கும் ஆவியர், அந்தனர், அல்லல் தீர்க்கும் அப்பனார் என்பது வறுமை நீக்கிக் காத்தலையும் ஈசனே உயிர்போன்று விளங்குதலையும், காட்சிக்குப் புலப்படாமல் இருப்பினும் அல்லல் தீர்தலை அறியப்படுதலும் எண்ணுக. நல்குரவு என்பது அஞ்ஞானம் எனவும் ஆம்.

80. இந்துஅணை யும்சடை யார்விடையார்
இப்பிறப்பு என்னை அறுக்கவல்லார்
வந்துஅணைந்து இன்னிசை பாடுவார்பால்
மன்னினர் மன்னி இருந்தஊராம்

Koviloor Digital Library

கொந்துஅணை யும்குழ லார்விழவில்
கூட்டம் இடைஇடை சேரும்வீதிப்
பந்தணையும் விரலார் தம்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: இளஞ் சந்திரனைச் செஞ்சடையில் அணிந்தவர், இடபத்தை வாகனமாக உடையவர், பிறவி என்னும் தளையிலிருந்து அறுத்து விடுவிப்பவர், திருக்கோயிலை நாடி வந்து இசையுடன் பாடும் தொண்டரிடம் பதிந்து பொருந்தி விளங்கும் ஊர் எனப்படுவது விழாக்காலங்களில் பூங்கொத்துக்களைக் கூந்தலில் அணிந்தும் கூட்டம் கூட்டமாகக் சேரும் மகளிர்கள் கொண்ட வீதிகளையுடைய ஆவூர் ஆகும். மேலும் அத்தகைய மகளிர் சுறுசுறுப்பான பந்தாட்டத்தை விரும்புபவர்கள். அங்கு எழுந்தருளியுள்ள பசுபதீச்சரத்தை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

சிறப்புரை: திங்களைத் தரித்து அருளிய செயல் காத்தல் சிறப்பினையும், இடபவாகனத்தில் அமர்ந்து அருளும் நிலையானது, அவனால் அருளப்பெறும் சிறப்பான உயிர்களின் மேன்மையையும் காட்டுதலாம். இறப்புக்குப் பிறவியே தோற்றுவாய் என்பதால் பிறப்பு அறுத்தல் என்பது மீளப் பிறவாத நிலையும், அப்பிறவிக்குக் காரணமான இருவினை நீக்கத்தையும் உணர்த்திற்று. சன்னிதி முன்னர் இசைப் பாடல்களை எழுப்பும் ஓதுவா மூர்த்திகள் அரனாகவே போற்றப்படுதலை வந்து அணைந்து இன்னிசை பாடுவார்பால் மன்னினர் என்பது உணர்த்திற்று. சுறுசுறுப்பாகத் தமது பணிகளைச் செய்யும் மகளிரைக் குறிக்கும் பெற்றியாகப் பந்து ஆடும் விரல்களையுடைய மகளிர் எனப்பட்டது.

மன்னினர் – பொருந்தினர். மன்னி இருத்தல் – விளங்கி இருத்தல்.

Koviloor Digital Library

81. குற்றம் அறுத்தார் குணத்தின்உள்ளார்
கும்பிடு வார்தமக்கு அன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணார்
உறைபதி யாகும் செறிகொள்மாடம்
சுற்றிய வாசலின் மாதர் விழாச்
சொற்கவி பாடநி தானநல்கப்
பற்றிய கையினர் வாழும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: *பாவச் செயல்களை நீக்கியவர்தம் உள்ளத்தில் உறைபவர்; தம்மை வணங்கும் அடியவர்களுக்கு விரும்பும் யாவையும் தருபவர்; இடபவாகனத்தை உடையவர்; நெற்றியில் கண்ணுடையவர்; இத்தகைய சிறப்புடைய பெருமான் உறைகின்ற இடம், நெருங்கிய மாடங்களை யுடைய வாயிலின் முன் திருவிழாக் காலங்களில் பெண்கள் மொழியலங்காரம் மிக்க இசைப் பாடல்களைப் பாடவும் அவற்றின் பரிசாகப் பொன்னும் மணியும் வழங்கும் கரங்களையுடையவர் கள் வாழும் ஆவூர் ஆகும். அத்தகைய வளம்மிக்க ஊரின்கண் எழுந்துள்ளது பசுபதீச்சரம். அதனை நாவானது பாடித்துதிக்க வேண்டும்.*

சிறப்புரை: *மனத்தால், சொல்லால் மற்றும் உடம்பால் ஆகிய மூன்று வகையால் உண்டாகும் குற்றங்களை நீக்கியவர்கள் குற்றம் அறுத்தார் எனப்பட்டது. அவர்களே நற்குணத்தில் சிறந்து விளங்குபவர்கள். அவர்களுடைய இயல்பான செயல் இறைவனைப் பணிதல் ஆகும். அன்பு செய்தல் அருள் நல்குதலையும் குறிக்கும்.*

ஒற்றை ஏறு; பதிக எண் 3; பாடல். எண் 26 காண்க. நிதானம் – பொன்.

Koviloor Digital Library

82. நீறுடை யார்நெடு மால்வணங்கு
நிமிர்சடை யார்நினை வார்தம்உள்ளம்
கூறுடை யார்உடை கோவணத்தார்
குவலயம் ஏத்தஇ ருந்தஊராம்
தாறுடை வாழையில் கூழைமந்தி
தகுகனி யுண்டுமிண் டிட்டுஇனத்தைப்
பாறிடப் பாய்ந்து பயிலும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: திருவெண்ணீற்று மேனியர்; உலகினை அளந்தவரான திருமாலால் வணங்கப் பெறுபவர்; தன்னை நினைத்து வணங்கும் அடியவர்தம் உள்ளத்தில் அங்கமாக வீற்றிருப்பவர்; கோவண ஆடையை உடையாகக் கொண்டவர். அத்தகைய பெருமான் உலகமெல்லாம் போற்றுமாறு விளக்கும் ஊரானது, மந்திகள் வாழைக் கனிகளை உண்டு மகிழ்ந்து தம் இனத்தொடு மேவும் ஊர் ஆவூர். அவ்வூரின் கண் ஈசன் விளங்கும் பசுபதீச்சரத்தை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

83. வெண்தலை மாலை விரவிப்பூண்ட
மெய்யுடை யார்விறல் ஆர்அரக்கன்
வண்டமர் பூமுடி செற்றுகந்த
மைந்தர்இ டம்வளம் ஓங்கிளங்கும்
கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார்
கதியருள் என்றுகை யாரக்கூப்பிப்
பண்டலர் கொண்டு பயிலும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: வெண்மையான தலையும், மாலையும் கலந்து அணிந்த திருமேனியுடையவர்; வலிமை பொருந்திய அரக்கனின் தலையைத் துன்புறுமாறு செய்த அழகர். அவருடைய இடம் வளம் பெருகி

Koviloor Digital Library

அவரைக் கருத்தில் பதித்து நற்கதி வேண்டும் என்று கைகூப்பித் தொழும் ஆவூர்ப் பசுபதீச்சரம் ஆகும். அதனை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

சிறப்புரை: இராவணனுடைய முடியைச் செற்ற ஈசன், அவ்வரக்கன் இசைத்த சாமவேத கானத்தை ஏற்று மகிழ்ந்து அருள் நல்கிய சிறப்பினைக் காட்டுமாறு "செற்றுகந்த மைந்தர்" என்னும் தொடர் குறித்தது.

84. மாலும் அயனும் வணங்கிநேட
மற்றுஅவ ருக்குளரி யாகிநீண்ட
சீலம் அறிவரி தாகிநின்ற
செம்மையி னாரவர் சேரும்ஊராம்
கோல விழாவின் அரங்கதுஏறிக்
கொடிஇடை மாதர்கள் மைந்தரோடும்
பாலென வேமொழிந்து ஏத்தும்ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் வணங்கித் தேடும் போது அவர்களுக்குப் புலப்படாமல் பின்னர் நீண்ட சோதி வடிவாய்த் தோன்றிய சீலம் மிக்கவர் சேரும் ஊரானது, விழாக் காலங்களில் பெண்கள் தம் துணைவருடன் சேர்ந்து இனிமையாக ஏத்தும் ஆவூர்ப் பசுபதீச்சரம் ஆகும். அதனை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.

85. பின்னிய தாழ்சடை யார்பிதற்றும்
பேதைய ராம்சமண் சாக்கியர்கள்
தன்இய லும்உரை கொள்ளகில்லாச்
சைவர் இடந்தளவு ஏறுசோலைத்
துன்னிய மாதரும் மைந்தர்தாமும்
சுனையிடை மூழ்கித் தொடர்ந்தசிந்தைப்

Koviloor Digital Library

பன்னிய பாடல் பயிலும் ஆவூர்ப்
பசுபதி ஈச்சரம் பாடுநாவே.

தெளிவுரை: *பின்னப்பட்ட சடையையுடைய சமணர்களும் சாக்கியர்களும் தம்மைப் பற்றிக் கூறிக் கொள்வனவற்றைப் பொருட்படுத்தாத சைவர்களுடைய இடமாவது, முல்லை மலர்ச் சோலை செறிந்த சுனையில் மாதரும் அவர்தம் துணைவரும் மூழ்கி நீராடி சிந்தையில் பதித்துப் பக்திப் பாக்களைப் பயிலும் ஆவூர்ப் பசுபதீச்சரம் ஆகும். அதனை நாவானது பாடித் துதிக்க வேண்டும்.*

தளவு – முல்லை.

86. எண்திசை யாரும்வ ணங்கிஏத்தும்
எம்பெரு மானைஎ ழில்கொள்ஆவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர்போற்றும்
பசுபதி ஈச்சரத்து ஆதிதன்மேல்
கண்டல்கண் மிண்டிய கானல்காழிக்
கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன
கொண்டினி தாய்இசை பாடிஆடிக்
கூடும வர்உடை யார்கள்வானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *எண் திசையும் விரிந்து பரவிய மக்கள் வணங்கிப் போற்றும் எம்பெருமானை எழில் மிக்க ஆவூரில், வழிவழியாய்த் தொன்மைக் காலத்திருந்தே உரிமை பூண்ட தொண்டர்கள் போற்றித் துதிக்கின்றனர். அத்தகைய பெருமையுற்ற பசுபதீச்சரத்தின் இறைவன் மீது தாழை மடல்கள் வளரும் சோலையுடைய சீகாழியின் கவுணியர் கோத்திரத்தைச் சார்ந்த ஞானசம்பந்தர் சொன்ன இத் திருப்பதிகத்தை*

Koviloor Digital Library

இனிதாய் இசையுடன் பாடியும் ஆடியும் கூடி விளங்கும் அடியவர்கள் சிறப்படைவார்கள்.

சிறப்புரை: மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணத்தால் செய்யப்படும் தொண்டானது "இனிதாய் இசைபாடி ஆடி" என்னும் தொடர் குறிப்பதாயிற்று. வான் என்னும் சொல் பெருமை, சிறப்பு, அழகு, தேவர் உலகு ஆகியவற்றையும் குறிப்பதால் இப்பிறவியில் அடையத் தக்கதும் மறுமையில் உறத்தக்கதும் ஆகிய யாவும் கொள்ளத்தக்கதென உணர்த்திற்று.

கவுணியன்: ஞானசம்பந்தர் திருஅவதாரம் செய்த அந்தணர் குலத்திற்கு உரிய கோத்திரத்தின் பெயராகிய கவுணியர் என்னும் பெயர் அவருக்கு உரிய சிறப்புப் பெயராக ஏற்றிச் சொல்லப்பட்டது.

9. திருவேணுபுரம்

தெளிவுரை: *பதிக எண் 1 காண்க.*

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

87. வண்டார்குழல் அரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக ஆனான்பிறைச்
சென்னிப் பெருமான்ஊர்
தண்டாமரை மலராள்உறை
தவளம்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு
வேணுபுரம் அதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: வண்டுகள் பொருந்திச் சுழன்று ரீங்காரம் செய்யும் மணம் மிகுந்த கூந்தலையுடைய நங்கையாகிய உமாதேவியோடு எக்காலத்திலும் பிரிந்து இல்லாத வாறு தனது இடப் பாகத்திலும் வரித்துத் தானே பெண்ணாகியவன் பிறைச் சந்திரனை முடியில் சூடினான். அவனுடைய ஊரானது திருமகள் உறையும் வெண்மையான உயர்ந்த மாட மாளிகைகள் உள்ள வேணுபுரம் ஆகும்.

சிறப்புரை: உமாதேவி ஞானத்தை வழங்குபவளாக இருக்கும் தன்மையைத் தானேயேற்று இடப்பாகத்தில் வரித்து அந்த ஞானத்தை வழங்கும் திருவருளைப் புரியும் பெற்றியில் தாய்மை விளங்குமாறு உள்ளதைப் பெண்தான் மிக ஆனான் என்பது உணர்த்திற்று. விண்ணைத் தாங்குவது போல உயர்ந்த மாளிகைகள் திகழ்வதையும், ஆங்கு செல்வனாகிய ஈசன் திகழ்வதால் திருமகள் விருப்பம் கொண்டு உறையும் தன்மையும் சுட்டப்படுகிறது. "தாமரை மலராள் உறை தவளம் நெடுமாடம்" என்றது வெண்தாமரை மலரில் உறைபவளையும் செந்தாமரையில் உறைபவளையும் குறிப்பதாம். கல்வியும் செல்வமும் திகழும் சிறப்பு உணர்த்தப் படுகிறது.

தவளம் – வெண்மை.

88. படைப்புந்நிலை இறுதிப்பயன்
பருமையொடு நேர்மை
கிடைப்பல்கணம் உடையான்கிறி
பூதப்படை யான்ஊர்
புடைப்பாளையின் கமுகின்னொடு
புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றல்மிகு
வேணுபுரம் அதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலும் புரிபவனாய், அதன் பயனாகிய முத்திப் பேற்றினை நல்குபவனாய், விளக்கமாகவும் நீதி நெறிகளைச் செம்மையாக வடிக்கும் வேதத்தை ஓதும் சிவகணங்களை உடையவனாய், பூதப் படை உடையவனாய் விளங்கும் பெருமானுடைய ஊரானது, பாக்கு மரங்களும் புன்னை மலரின் மணமும் மிகுந்து தென்றலாகிய் இனிமை பொருந்திய வேணுபுரம் ஆகும்.

நேர்மை – செம்மை. கிடை – வேதபாடசாலை. விடைத்தல் – மிகுதல்.

89. கடம்தாங்கிய கரியைஅவர்
வெருவஉரி போர்த்துப்
படம்தாங்கிய அரவக்குழைப்
பரமேட்டிதன் பழவூர்
நடம்தாங்கிய நடையார்நல
பவளத்துவர் வாய்மேல்
விடம்தாங்கிய கண்ணார்பயில்
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: மதம் பொருந்திய யானையை அஞ்சுமாறு செய்து அடக்கி அதன் தோலை உரித்து, அந்த யானை ஏவிய தாருகவனத்து முனிவர்கள் அஞ்சுமாறு போர்த்து அரவக்குழை யுடையனின் பழைமையான ஊரானது, நடனக்கலையில் வல்லவர்களும், பவளம் போன்ற செந்நிற இதழ்களை உடையவர்களும், விடத்தைப் போன்று தாம் கண்களால் ஈர்த்துத் தம்வழி மயங்கி நிற்கச் செய்யும் சக்தி மிகுந்த பார்வை உடையவர்களும் நிலவும் வேணுபுரம் ஆகும்.

பரமேட்டி: ஈசனைத் தேவிமேல் ஏற்றி விளம்பியது. பரம் – மேலானது; மேட்டிமை – தலைமை; மேலான தலைமை பூண்டது என்பதும் ஆம்.

Koviloor Digital Library

90. தக்கன்றன் சிரம்ஒன்றினை
அரிவித்தவன் தனக்கு
மிக்கவ்வரம் அருள்செய்தஎம்
விண்ணோர்பெரு மான்ஊர்
பக்கம்பல மயில்ஆடிட
மேகம்முழவு அதிர
மிக்கம்மது வண்டார்பொழில்
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: *தக்கன் சிரம் அறுத்து அவன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரக் கடவுளுக்கு அளவற்ற வரங்கள் அருளிய தேவர்கள் தலைவனாகிய எம்பெருமானது ஊரானது, மேகங்கள் முழவொலி போன்று அதிர்ந்தும் பக்கங்களில் மயில்கள் தோகை விரித்து ஆடவும், தேனை அருந்திய வண்டுகள் சோலைகளில் பொருந்தி இருக்கவும் உள்ள வேணுபுரம் ஆகும்.*

91. நானாவித உருவால் நமை
ஆள்வான்நணு காதார்
வானார்திரி புரமூன்றுஎரி
யுண்ணச்சிலை தொட்டான்
தேனார்ந்தெழு கதலிக்கனி
உண்பான்திகழ் மந்தி
மேனோக்கிநின்று இறங்கும்பொழில்
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: *ஈசன் தன்னை நினைத்துத் தியானம் செய்யும் அடியவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு உருவத்தை வெளிப்படுத்தி ஆள்பவன்; அப்பெருமானை அணுகாத அசுரர்களை அவர் களுடைய மூன்று கோட்டைகளுடன் எரியுண்ணுமாறு செய்து அழித்தவன். அவனுடைய ஊரானது வாழைக் கனியிலிருந்து பெருகும் தேனை உண்ணும் நோக்கில்*

Koviloor Digital Library

குரங்குகள் அருந்திப் பின்னர் மரத்திலிருந்து பூமியை நோக்காது மேல் நோக்கியவாறு இறங்கி வரும் செம்மைப் பொழில் கொண்ட வேணுபுரம் ஆகும்.

சிறப்புரை: இறைவன் ஒருவன் என்பதும், அவனைப் போற்றும் அடியவர்கள் மனத்தில் எவ்வண்ணம் தோன்றுகின்றதோ அவ்வண்ணம் இருந்து அவர்க்குக் காட்சி புரிதலையும் "நானாவித உருவால் ஆளும்" சிறப்புக் கூறப்பெற்றது.

92. மண்ணோர்களும் விண்ணோர்களும்
வெருமிம்மிக அஞ்சக்
கண்ணார்சலம் மூடிக்கடல்
ஓங்கவ்உயர்ந் தான்ஊர்
தண்ணார்நறும் கமலம்மலர்
சாயல்இள வாளை
விண்ணோர்குதி கொள்ளும்வியல்
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: மண்ணுலகத்தவர்களும் விண்ணுலகத்தவர்களும் அதிர்ச்சியுற்று அஞ்சுமாறு, பிரளய காலத்தில் எல்லாம் நீரால் மூடுமாறு, கடல் பெருகி ஓங்கி இருக்கும் போதும் மேலோங்கி இருப்பவனது ஊரானது, குளிர்ந்த மணம் மிகுந்த தாமரை மலர்ச் சாயலுடைய இளம் வாளை மீன்கள் மேலே எழும்பித் துள்ளிக் குதிக்கும் இயல்புடைய வேணுபுரம் ஆகும்.

சிறப்புரை: பிரளய காலத்தில் யாவும் கடல் நீரால் சூழப் பெற்று இருந்தாலும் தெளிந்த மணம் மிகுந்த நீரில் வாளை மீன் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தலானது, ஈசன் திருவருளின் இயல்பும் அதனால் உயிர்கள் பெற்று மகிழும் பேரின்பம் குறைவுபடாமையும் நுதலிற்று.

Koviloor Digital Library

93. மலையான்மகள் அஞ்சவ்வரை
எடுத்தவ்வலி யரக்கன்
தலை தோளவை நெரியச்சரண்
உகிர்வைத்தவன் தன்னூர்
கலைஆறொடு சுருதித்தொகை
கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொல்தேர்தரு
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: *மலைமகளாகிய பார்வதிதேவியும் ஈசனும் கயிலை மலையில் வீற்றிருந்தபோது, பெருமாட்டி கலங்குமாறு மலையைப் பெயர்த்த இராவணன் வலிமையையும், தலையையும், தோளையும் கலங்கும் படி தனது கால் விரலின் நகத்தால் செய்தவன் ஈசன். அப் பெருமானுடைய ஊரானது, கலை யொழுக்கத்துடன் வேதத்தையும் கற்றோர் மிகுந் திருக்க, மதிப்பு மிக்க சொற்களைப் பலரும் ஏற்று ஒழுகுமாறு செய்யும் சிறப்புடைய பெருமக்கள் வாழும் வேணுபுரம் ஆகும்.*

சிறப்புரை: *அடியவர்களுக்கு அருளும் திருவடியின் பெருமை "சரண் உகிர்" என்று குறிக்கப் பெற்றது.*

உகிர் – நகம் – திருவடியைக் குறித்தது.

94. வயம்உண்தவ மாறும்அடி
காணாது அலம் ஆக்கும்
பயனாகிய பிரமன்படு
தலையேந்திய பரனூர்
கயமேவிய சங்கம்தரு
கழிவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந்து உறங்கும்பொழில்
வேணுபுரம் அதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: வெற்றியைத் தரும் நற்றவத்தைச் செய்த திருமால் ஈசனின் திருவடியைக் காணுமாறு முயற்சி செய்தும் காண முடியவில்லை. பிரமனுடைய தலை ஒன்றினைக் கிள்ளி, தன் கையில் திருவோடாகக் கொண்டு சஞ்சலம் தருமாறு ஏந்தினான் அரன். அவனுடைய ஊரானது, கடலின் ஆழத்தில் உள்ள சங்குகள் உப்பங்கழி வழியாகச் சென்று நெல் வயலில் வந்து தங்கும் நிலப்பகுதியுடைய வேணுபுரம் ஆகும்.

அலம் – சஞ்சலம்; கயம் – ஆழ்ந்த நீர்ப்பரப்பு.

95. மாசுஏறிய உடலார்அமண்
குழுக்கள்ளொடு தேரர்
தேசு ஏறிய பாதம்வணங்
காமைத்தெரி யானூர்
தூசுஏறிய அல்குல்துடி
இடையார்துணை முலையார்
வீசுஏறிய புருவத்தவர்
வேணுபுரம் அதுவே.

தெளிவுரை: அழுக்கு மெய்யுடைய அமணரும், பௌத்தரும் ஒளி பொருந்திய திருவடியை வணங்கித் துதிக்கவும் அறியவொண்ணாதவனாகிய ஈசன் ஊரானது, ஆடை பொருந்திய மெல்லிடையும் அச்சமற்று நேர்கொண்டு வீசும் பார்வையும் உடைய நங்கையர் மிக்க வேணுபுரம் ஆகும்.

தூசு – ஆடை. வீசு ஏறிய புருவம் – (பெண்களின்) அச்சமற்ற பார்வை உடையதை உணர்த்துதல்.

96. வேதத்தொலி யானும்மிகு
வேணுபுரம் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு
பந்தன்தன பாடல்

Koviloor Digital Library

ஏதத்தினை இல்லாஇவை
பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை இல்லார்சிவ
கெதியைப்பெறு வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வேதங்கள் எக் காலத்திலும் ஓதப்பட்டு, அவ்வொலியானது பரவி இருக்கும் வேணுபுரம் என்னும் நகரைப் போற்றி, ஈசன் திருவடிக் கமலத்தின் பால் மனத்தைப் பதித்து அதனால் எழப்பெற்ற ஞான சம்பந்தப் பெருமானுடைய திருப்பாடல்கள், தினையளவும் குற்றம் இல்லாதவை. எனவே இப்பதிகத்தை ஓதுபவர்கள் தினையளவும் துன்பம் இன்றி உலகில் வாழ்வார்கள். பின்னர் சிவகதியாகிய முத்தி இன்பத்தைப் பெறுவார்கள்.

சிறப்புரை: மிசைவல்லார் என்பது நுகர்தல் தன்மையை விளக்கும். இசையுடன் பாடுதலையும் குறிக்கும். "ஏதத் தினை இல்லா," "கேதத்தினை இல்லார்," "சிவகெதி யைப் பெறுவார்" ஆகிய மூன்றும் வினைமுற்றாகக் கொள்ளல் சிறப்புடைத்து.

ஏதம் – துன்பம், குற்றம். கேதம் – துன்பம். சிவகெதி – சிவகதி, முத்திப் பேறு.

10. திருவண்ணாமலை

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம். திருமால், பிரமதேவர், சூரியன், சந்திரன், அட்டவசுக்கள் முதலானோர் பூசித்தது. ஈசன் திருவடியைத் திருமாலும், திருமுடியைப் பிரமதேவரும் தேடியும் காண முடியாத நிலையில் ஈசன் சோதிப் பிழப்பாகித் தோன்றி காட்சி

Koviloor Digital Library

நல்கிய சிறப்புப் பெற்றது இத்திருத்தலம். திருக்கோயில், மலையை ஒட்டியது. மலையை வலம் வருதல் சிறப்பு. முருகப் பெருமான் அருணகிரிநாதருக்குக் கம்பத்தில் தோன்றி காட்சி தந்த இடம் இது. இத் தலத்தின் கார்த்திகை தீபப் பெருவிழா சிறப்புடையது.

இத் தலம் பஞ்ச பூதத்தலங்களுள் நெருப்பு: நினைக்க முத்தி தரும் தலம் இதுவே.

சுவாமி : அருணாசலேஸ்வரர், அண்ணாமலையார்

அம்பிகை : உண்ணாமுலை

தல மரம் : மகிழ மரம்

தீர்த்தம் : சிவகங்கை, பிரமதீர்த்தம், அக்னி தீர்த்தம், இந்திர தீர்த்தம்.

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

97. உண்ணாமுலை உமையாளொடும்
உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம் முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ணம் அறுமே.

தெளிவுரை: உண்ணாமுலை என்னும் திருநாமம் தாங்கிய உமாதேவியோடு உறைகின்ற ஒப்பற்ற வனாகிய ஈசன் அத்தேவியைத் தன் இடப்பாகத்தில் வரித்துப் பெண் ஆயினான். அப்பெருமானுடைய மலையாகிய திருவண்ணாமலை செல்வம் மிக்க மணிகளைக் கொண்டுள்ளது. அம் மலையிலிருந்து

Koviloor Digital Library

மண்ணில் பொருந்த வீழும் அருவியானது இள முழவின் ஓசையைத் தருகின்றது. அத்தகைய அண்ணா மலையைத் தொழுபவர்தம் வினைகள் தவறாமல் அறுந்து வீழும்.

சிறப்புரை: சோதிப் பிழம்பாகிய பெருமான் மலை சோதி வடிவாய் இருத்தலை, திருமாமணி திகழ என்னும் சொல் உணர்த்திற்று. அண்ணாமலை என்பது தேவியின் திருநாமமாகிய உண்ணாமுலை என்று குறித்ததைப் போல, ஈசன் திருநாமத்தைத் குறித்தும் உணர்த்திற்று. அண்ணாமலை, மலையின் திருநாமமும் ஆகும். இதனை, பஞ்சாட்சரத்திற்கு (ஐந்தெழுத்து மந்திரம்) ஒப்பக் கொள்ளலும் உண்டு. வழுவின்றி வினையறுதல் வண்ணம் ஆகும்.

98. தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகல் மிசை
சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும்பொழில்
அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை இலரே.

தெளிவுரை: உயர்ந்த மாங்கனிகளை ஆண் குரங்கு பறித்துக் கொள்ளவும், அதனால் அசையும் மாங் கொம்புகள் மேகத்தைத் தொட்டு சிறிய நீர்த் துளிகளைச் சிதறும்படி செய்ய பெருமையான பசுக்கள் எருதுகளுடன் சாரும் சோலைகளையுடைய அண்ணாமலை அண்ணலின், பூப்போன்று மென்மை யாயும் செம்மை தருவனவாயும் திகழும் திருவடியை நினைப்பவர்களுக்கு வினை இல்லை.

Koviloor Digital Library

சிறப்புரை: முக்கனிகளுள் ஒன்றான மாங்கனியைக் கடுவன் கொண்டுள்ளதைக் குறிப்பதாயினும், சிறப்பான மற்ற கனிகளும் பெருகி நிற்றலைக் குறிக்கும். மா - சிறப்பு மிகுந்த; ஆ - பசுக்களையுடைய பொழிலும் ஆயிற்று. இப் பசுக்கள் தம் பிணையொடு சேரத் திகழ்வது சிவசக்தி சார்ந்திருந்து போகம் தருதலைச் சுட்டும். அண்ணாமலையாரின் திருவடிச் சிறப்பும் அருள் புரியும் பெருஞ்சிறப்பும் பெரிது ஆதலைக் குறிப்பது "பூமாங்கழல் புனைசேவடி" ஆகும். நினைக்க முத்தி தரும் தலத்தின் மகிமை, "நினைவார் வினை இலர்" எனப் பெற்றது. கனி வளம், பால் வளம், பொழில் வளம் அருள் வளம் இயம்புதல் காண்க.

கடுவன் – ஆண்குரங்கு. ஆமா – பசு.

99. பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேல்நிறை
சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழில்
அண்ணாமலை அண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே.

தெளிவுரை: தோகை விரித்தாடும் மயில் தன் பெடையோடு உறையும் பொழிலும், முத்தும் மணியும் தரையில் பரவச் சிதறி ஒளி திகழவும், நீர்த்திரள் பொருந்திக் குளிர்ச்சி மலரவும் உள்ள இடம் அண்ணா மலை. அவ் அண்ணல், மார்க்கண்டேயனைக் காக்கும் பொருட்டுக் காலனை அழித்தவன். அப் பெருமா னுடைய திருவடியை வணங்குபவர் புகழ் பெறுவர்.

பீலி – மயில் தோகை. சூலிம்மணி – அறுந்த மணிகள். ஆலி – நீர்த்திரள், பனிக்கட்டி ஆலங்கட்டி.

Koviloor Digital Library

100. உதிரும்மயிர் இடுவெண்தலை
கலனாஉல கெல்லாம்
எதிரும்பலி உணல்ஆகவும்
எருதுஏறுவது அல்லால்
முதிரும் சடை இளவெண்பிறை
முடிமேல்கொள அடிமேல்
அதிரும்கழல் அடிகட்குஇடம்
அண்ணாமலை அதுவே.

தெளிவுரை: ஈசன், ஒரு காலத்தில் பிரமனுடைய ஒரு தலையைக் கொய்து மறக்கருணை ஆற்ற. அதுவே திருஓடு எனத் திருக்கரத்தில் சேர்ந்தது. அது பலியேற்கும் பிச்சைப் பாத்திரமாக அமைய எல்லோரும் எதிர்வந்து பிச்சை இட்டனர். அதனை உணவாகவும் இடபத்தை வாகனமாகவும் மற்றும் முதிர்ந்த சடையும் இளவெண் மதியும் முடியில் தரித்துத் திருவடியில் ஒலிக்கும் கழலினையுடைய அடிகளாகிய ஈசனுக்குரிய இடமாவது, அண்ணா மலையே ஆகும்.

சிறப்புரை: ஈசனுடைய ஒலிக்கும் கழலும் திருவடியும் இருகையாய் விளங்கும் இடபமும் திருமுடிக் கோலமும் அருளும் பாங்குடைய வெண்பிறை சூடுதலும் ஆகிய திருமேனிக் கோலம் சுட்டப்பெறுதல் நோக்கத்தக்கது. குருமுகமாக இருந்து அஞ்ஞானத்தை விலக்கி ஞானத்தைப் பொழிந்து பூரணத்துவத்தைத் தரும் ஈசன் அடிகள் எனப் போற்றப்படுகிறார். முதிரும் சடை ஈசனுக்கு உரித்தாயிற்று.

இளவெண்பிறை – குறைந்த (தேய்ந்த) நிலவு. அடிகள் – ஆசாரியர்.

101. மரவம்சிலை தரளம்மிகு
மணிஉந்துவெள் ளருவி

Koviloor Digital Library

அரவம்செய முரவம்படும்
அண்ணாமலை அண்ணல்
உரவம்சடை உலவும்புனல்
உடனாவதும் ஓரார்
குரவம்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே.

தெளிவுரை: அழகிய ஒளி வீசும் முத்துக்களும் இரத்தினங்களும் மிகுந்திருக்கத் தூய்மையான அருவியின் ஒலி பரவுதலால் கலகலவெனச் சலனத்தை யுடைய அண்ணாமலையின் அண்ணலாகிய ஈசன் பாம்பும் கங்கையும் தன் சடையில் பொலிவதையும் ஒரு பொருட்டாகக் கொள்ளாமல் உமாதேவி யுடனாய் விளங்கி இருப்பது மேன்மை தருவதாகும்.

சிறப்புரை: உமாதேவியை உடனாகக் கொண்டு உலகத்தில் இல்லற ஒழுக்க நெறியைப் பேணும் உபாய மாய் உமை புல்குதல் குணம் எனப் போற்றப்படுகிறது. அவ் வொழுக்க நெறி அமையவில்லையாயின் "இரு நிலத் தோர் விண்பால் யோகு எய்தி வீடுவர்காண் சாழலோ" எனப் புகலும் மணிவாசகர் பாடலைக் (திருவாசகம் பாடல் எண் 263) காண்க.

சிலை – ஒளி. அரவம் செய – ஒலி எழுப்ப. உரவம் – (உரகம்) பாம்பு. மரவம், குரவம் சிறப்புத் தோய்ந்த அடைமொழி.

102. பெருகும்புனல் அண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
அணிவார்அது பருகிக்
கருகும்மிடறு உடையார்கமழ்
சடையார்கழல் பரவி

Koviloor Digital Library

உருகும்மனம் உடையார்தமக்கு
உறுநோய்அடை யாவே.

தெளிவுரை: *பெருகும் புனலை யுடைய அண்ணாமலை யார், கடலில் தோன்றிய நஞ்சைப் பருகும் வல்லமை உடையவர்; அந்த நஞ்சினைப் பருகியதன் விளைவாகக் கண்டம் கருமை நிறம் அடையப் பெற்ற வர்; திருநீற்று மேனியர்; மணங்கமழும் சடையை உடையவர். அப்பெருமானுடைய திருவடியைப் போற்றி மனம் உருகி வழிபடும் அடியவர்களுக்கு பிறவி எடுக்கின்ற தன்மைத்தாகிய நோய் இல்லை. எத்தகைய பிணியும் இல்லை என உணர்த்துவதாயிற்று.*

பெருகும்புனல் – கங்கை. அண்ணாமலை – திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஈசன் திருநாமம். பிறை சேர் கடல் நஞ்சு – பாற்கடலில் அமுதம் கடையும் பொருட்டு மேருமலையை மத்தாகவும் வாசுகியைக் கயிறாகவும் கொண்டு கடைய, அதன் வெம்மை தாங்க ஒண்ணாது வாசுகி என்னும் பாம்பு நஞ்சைக் கக்கியது. அது பிறை யளவு சிறிதாக இருப்பினும் யாவரும் அஞ்சி ஓடும் போது ஈசன் அதை மிடற்றில் (கண்டம்) தேக்கிக் காத்தனன். நஞ்சின் கருமை தோன்ற நீல கண்டம் அமைபலாயிற்று. உறுநோய்: மீண்டும் உறுகின்ற பிறவி நோய்.

103. கரிகாலன் குடர்கொள்வன
கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்தலை
உதையுண்டுஅவை உருள
எரியாடிய இறைவர்க்குஇடம்
இனவண்டு இசைமுரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை அதுவே.

தெளிவுரை: *கரிய கால்களையுடைய நரிகள் குடல் களைத் தின்றும், வெண்மையான மண்டை ஓட்டினை*

Koviloor Digital Library

உருளும்படி கால்களால் உதைத்தும் ஆடிக் கொண்டிருக்கப் பேய்கள் ஆடும் இடுகாட்டில் திருக் கரத்தில் தீப்பிழம்பை ஏந்தி ஆடும் இறைவனுக்கு உரிய இடம் என்பது கூட்டம் கூட்டமாக வண்டுகள் இசை எழுப்ப, ஈரமும் குளிர்ச்சியும் கலந்த கண்களை யுடைய உமாதேவியுடன் விளங்கும் அண்ணாமலை யாகும்.

சிறப்புரை: அரி என்பது பல பொருள்களைக் குறிக்கும் சொல். ஈரம் நனி தோயும் குளிர்ச்சித் தன்மை கொண்டது என்பது இவண் சிறப்புடைத்து. மலரின் மீது சுழலும் வண்டினம் தேவியின் கண்களுக்கு ஒப்பாதலைக் கூறினமை காண்க. நெருப்பினை ஏந்திய பெருமான் குளிர்ச்சி பொருந்திய உமாதேவியுடன் விளங்குதலையும் அதன் இடமாவது அண்ணாமலை எனவும் உணர்த்திற்று.

அரியாடிய கண்ணாள் – தாமரைக் கண்ணாள். அட்சி – கண்; மீனாட்சி, காமாட்சி என்றவாறு வண்டுகள் சூழும் மலர்க்கண்ணுடை யாள் எனத் தேவியின் திருவிழி சிறப்பித்துக் கூறப்பட்டது.

104. ஒளிறூபுலி அதள்ஆடையன்
உமைஅஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்இரா வணனை
அளறூபட அடர்த்தான்இடம்
அண்ணாமலை அதுவே.

தெளிவுரை: ஒளிரும் புலியின் தோலை ஆடையாக உடையவன்; உமாதேவி அச்சம் கொண்டதை யொட்டி, பிளிர்ந்து வந்து எதிர்த்த மதயானையின்

Koviloor Digital Library

முகத்தைப் பிடித்தும் அதன் தோலை உரித்தும் திருவிளையாடல் நடத்தியவன்; யாவராலும் கணித்துக் கூற முடியாதவாறு வேறுபாட்டை யுடையவன்; மலை ஏ்டுத்த இராவணனைச் சேற்றில் அழுந்துமாறு தண்டித்தவன். அப்பெருமானுடைய இடமாவது அண்ணாமலையே.

சிறப்புரை: யானையின் பலம் துதிக்கையில் உள்ள தென்பதனை வதனம் பிடித்து உரித்த காட்சி உணர்த்திற்று.

ஒளிறூ, பிளிறூ, வெளிறூ, அளறூ சந்தம் நோக்கி நெடிலாயிற்று. பிளிறு – யானையின் ஒலி. வெளிறு – வெளிப்படை, உள் நோக்கம் (அ) முன்னெச்சரிக்கையின்மை. விகிர்தன் – கணிக்க முடியாதவாறு வேறுபாடு உடையவன். அளறு – சேறு, புழுதி.

105. விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய
அண்ணாமலை அண்ணல்
தளராமுலை முறுவல்உமை
தலைவனடி சரணே.

தெளிவுரை: விளா மரமாய் நின்றவனை மாய்த்த திருமாலும், தாமரை மலர்மேல் உறைந்து வேதத்தில் தோய்ந்த குறைவற்ற புகழையுடைய நான்முகனும் அளிவிட முடியாதபடி நெருப்புப் பிழம்பாகிய அண்ணாமலையார், உண்ணாமுலை அம்மையாகிய உமையின் தலைவன். அப்பெருமான் திருவடியையே சரணம் ஆகக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

சிறப்புரை: அழலாகிய அண்ணாமலையாரின் பேராற்றுலும், அப்பெருமானைக் காண முடியாத திருமாலும் நான்முகனும் தம்தம் அகந்தை அழிந்ததை நோக்கிய சிறப்பும், உமாதேவியாரின் திருஉளப் பாங்கில் மகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் வாய்மை நெறியும் 'முறுவல் உமை' என்னும் தொடரால் உணர்த்தப்பட்டன. சரணம் அடைதல் ஆணவ மலத்தை ஒழிக்கும் உபாயமாயிற்று.

106. வேர்வந்துற மாசுஊர்தர
வெயில்நின்று உழல்வாரும்
மார்பம்புதை மலிசீவரம்
மறையாவரு வாரும்
ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின்
அண்ணாமலை அண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல
கழல்சேர்வது குணமே.

தெளிவுரை: வேர்வை உண்டாகி அதனால் அழுக்குத் தோய வெயிலில் திரிபவரும் மரவுரியை மார்பு மறையாதவாறு தரித்துக் கொண்டு வருபவர்களாய், முற்றிய தன்மையில்லாத நிலையில் உரை செய்பவர்களுடைய மொழிகளை ஏற்க வேண்டாம். மழுப்படை தாங்கியுள்ள அண்ணாமலையாரின் நல்ல கழலை எண்ணித் துதிப்பது குணம் தரும்.

சிறப்புரை: உயிருக்கு நல்லது செய்யும் திருவடியாதலால் நல்ல கழல் எனப்பட்டது. குணம் என்பது ஆன் மாக்கள் கொள்ளவேண்டிய நற்பண்பை உணர்த்திற்று.

சீவரம் – மரத்தால் செய்த ஆடை, மரவுரி. ஆரம்பர் உரை – முற்றிய அறிவின் வயம் இன்றி தொடக்க காலத்தில் போதிய அனுபவம் கொள்ளாது புல்லறிவின் வயத்தால் அறியப் பெற்று உரைத்தல்.

Koviloor Digital Library

107. வெம்புந்திய கதிரோன்ஒளி
விலகும்விரி சாரல்
அம்புந்தீமூ எயில்எய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயில்ஆலுவ
குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வெம்மை தரும் கதிரவனுடைய ஒளியும் அற்றுப் போகுமாறு மேகத்தில் திரிந்த மூன்று கோட்டைகளைச் செயலிழக்கச் செய்தவன் ஈசன். அவ் அண்ணாமலையானைப் பாடிய, குளிர்ந்த சீகாழியின் ஞானசம்பந்தன் தமிழாகிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லார்தம் திருவடி பேணுதல் பெருந்தவம் ஆகும்.

சிறப்புரை: ஈசனே மலையாக விளங்குவதை யொட்டிக் கதிரவன் தன் வெம்மைக் கரங்களாகிய கதிர்களால் தீண்டுவதற்கு அஞ்சி விலகிச் செல்ல மேகங்கள் சூழ்ந்து குளிர்ச்சி தரும் சிறப்பு கூறப்பட்டது. சீகாழிப் பதியில் கொம்பு எனும் ஒருவகை இசைக்கருவியின் ஒலியைக் குயில் எழுப்பும் என்று இசையின் மேன்மை கூறப்பட்டது. திருஞானசம்பந்தர் தமிழில் ஓதிய இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள் திருத்தொண்டர்கள் ஆகுதலையும் அவர்தம் அடிபரவுதல் அடியாரைப் போற்றல் என்பதனையும் உணர்த்திற்று. இது சங்கம வழிபாடு — அடியார் வழிபாடு ஆகும்.

11. திருவீழிமிழலை

தல விளக்கம்: பதிக எண் 4 காண்க.

பண் : நட்டபாடை

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

108. சடையார்புனல் உடையான்ஒரு
சரிகோவணம் உடையான்
படையார்மழு உடையான்பல
பூதப்படை உடையான்
மடமான்விழி உமைமாதுஇடம்
உடையான்எனை உடையான்
விடையார்கொடி உடையான்இடம்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: சடையின்கண் பொருந்திய கங்கையை உடையவன்; சரிந்த கோவண ஆடை யுடையவன்; ஆயுதமாக விளங்கும் மழுவை யுடையவன்; பூதகணங் களைப் படை வீரர்களாக உடையவன்; மான் விழி யன்ன உமை நங்கையை இடப்பாகத்தில் உடையவன்; என்னை ஆளாக உடையவன்; இடபத்தைக் கொடி யாக உடையவன். அவனுடைய இடம் என்பது திருவீழி மிழலை ஆகும்.

சிறப்புரை: ஈசன் அணியும் கோவணமானது வேதம் ஆகும். அதனை யாவரும் சரியானதென்று ஒப்புதல் செய்து ஆதாரமாக ஏற்பதால் சரி கோவணம் ஆயிற்று. எனை உடையான் என்பது ஞானசம்பந்தப் பெருமானுக்கே உரிய "ஆளுடைய பிள்ளை" என்னும் சிறப்புப் பெயரை உணர்த்திற்று.

விடையார் கொடி – இடபக் கொடி.

109. ஈறாய்முதல் ஒன்றாய்இரு
பெண்ஆண்குணம் மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்அவை ஐந்தாய்

Koviloor Digital Library

ஆறார்சுவை ஏழோசையொடு
எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன் ஆனான்இடம்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் ஒடுங்குங்காலத்தில் அவற்றைத் தானே ஏற்று நின்று விளங்குவதால் முடிவுப் பொருளாகவும், அவ் உயிர்களை மீண்டும் தோன்றச் செய்யும் முதற் பொருளாகவும், தான் ஒருவனே ஆண் உருவிலும் பெண் உருவிலும் இரண்டாகத் தோன்றுபவனாகவும் மூன்று குணங்களாகவும், நான்கு வேதங்களாகவும், ஐந்து பூதங்களாகவும், ஆறு வகையான சுவைப் பொரு ளாகவும் ஏழு இசையாகவும் எட்டுத் திருக்குகளாகவும் உடையவன் ஈசன். எல்லாம் தானேயாய் விளங்கும் இறைவன் அவ்வப் பொருளின் கண் இணைந்து உடனிருப்பவனாகவும், அவ்வப்பொருளில் கலவாமல் வேறாய் விளங்குபவனாகவும் இருப்பவன். அவன் வீற்றிருக்கின்ற இடமாவது திருவீழிமிழலை ஆகும்.

சிறப்புரை: சத்துவகுணம், ரஜோகுணம், தாமசகுணம் ஆகிய மூன்று குணத்தைக் குணம் மூன்று எனப்பட்டது. ஒன்றுக்கொன்று மாறுபாடு கொள்ளா மல் தெளிவைப் புகலும் இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும் மாறா மறை நான்கு எனப்பட்டது. நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் என, பூதம் ஐந்து எனப்பட்டது. பொருந்திய சுவை ஆறு: அவையாவன, 1. உவர்ப்பு, 2. துவர்ப்பு, 3. கார்ப்பு, 4. கைப்பு(கசப்பு), 5. புளிப்பு, 6. இனிப்பு. ஏழோசை என்பது ஏழு இசையை உணர்த்திற்று. அவை

Koviloor Digital Library

ஒலியின் வேறுபாட்டால் நிகழ்தல் ஆகும். ஏழுதமிழிசை (ஓசைகள்). 1. குரல், 2. துத்தம், 3. கைக்கிளை, 4. உழை, 5. இளி, 6. விளரி, 7. தாரம். பின்னர் தோன்றிய இசைகள் 1. சட்சம் (சஞ்சமம்) 2. ரிஷபம், 3. காந்தாரம், 4. மத்யமம், 5. பஞ்சமம், 6. தைவதம், 7. நிஷாதம். இவற்றின் முதல் எழுத்துக் களைக் கணக்கிட்டு சரிகமபதநி என ஏழு சுரங்கள் ஆயின. வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும் நேர்த் திசைகளுடன் கோணங்களாக உள்ள வடகிழக்கு. தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு ஆகிய நான்கும் சேர்ந்து எட்டுத்திசை ஆயிற்று. ஈசன் யாவுமாய் ஆனான் என்பது முத்தும் மணியும் விரவிக் கலந்து நிற்றல் போல "வேறு வேறாய்" என்பதும், பாலும் சர்க்கரை பொருந்திக் கலந்து நிற்றல் போல "உடனாய்" என்பதும் உணர்த்துவதாயிற்று. இத்திருப்பாட்டு 1முதல் 8வரை எண்ணல் அலங்காரம் உடையது.

110. வம்மின்னடி யீர்நாள்மலர்
இட்டுத்தொழுது உய்ய
உம்மன்பினொடு எம்மன்புசெய்து
ஈசன்னுறை கோயில்
மும்மென்றுஇசை முரல்வண்டுகள்
கொண்டித்திசை எங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: அடியவர் பெருமக்களே, வாருங்கள்! புது மலர்களால் ஈசன் பாதத்தை அருச்சித்து வணங்கிப் போற்றி இவ்வுலகில் பிறவி எடுத்ததைப் பயனாக்கும் வகையில் உய்தல் வேண்டும். உமது அன்போடு எண் அன்பும் இணைந்து நிற்க விளங்கும் ஈசன் உறைகின்ற கோயில் (இடம்) திருவீழி மிழலை ஆங்கு. வண்டுகள்

Koviloor Digital Library

பூக்களில் அமர்ந்து நன்கு மலரச் செய்து இசைக்கப் பெருகி வளரும் சோலைகளும் நீர்வளம் சார்ந்த வயல்களும் உள்ளன.

சிறப்புரை: அடியவர்களின் திருக்கூட்டச் சிறப்பினை "உம் அன்பினொடு எம் அன்பும் செய்து" எனும் தொடர் உணர்த்திற்று. பெருகிவளர் சோலை புதுமலர்களைத் தருவதாயிற்று.

கெண்டுதல் – கிண்டுதல், துருவுதல். விம்மும் பொழில் – பெருகி வளரும் சோலை.

111. பண்ணும்பதம் ஏழும்பல
ஓசைத்தமிழ் அவையும்
உள்நின்றதொர் சுவையும்உறு
தாளத்துஒலி பலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு
காற்றும்சுடர் மூன்றும்
விண்ணும்முழுது ஆனான்இடம்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: இசையுடன் ஏழு சுரங்களில் எழுப்பப்படும் தமிழ்ப் பாடல் தாளத்தின் இயல்பு சேர, அப்பாடலுக்குள் பொதிந்து விளங்கும் உயர்ந்த பொருளை உணர்ந்து மகிழும் சிறப்பும் மலர், நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகியவற்றுடன் சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய மூன்றும் சேர, அட்ட மூர்த்தியாக முழுமை பெற்று விளங்கும் இடம் திருவீழிமிழலை ஆகும்.

உயிர் – ஆன்மா. சுடர்மூன்று – ஐம்பூதங்களில் நெருப்பு, சூரியன், சந்திரன்.

112. ஆயாதன சமயம்பல
அறியாதவன் நெறியின்

Koviloor Digital Library

தாயானவன் உயிர்கட்குமுன்
தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவன்எம்இறை
செல்வத்திரு வாரூர்
மேயானவன் உறையும்இடம்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: சைவத்தைத் தவிர பிற சமயங்கள் இறையுண்மையை ஆராயும் கொள்கை பெறாமையால் அவற்றால் அறியப்படாதவன். பல்வேறு சமயத்திற்கும் தோற்றுவாய் ஆகித் தாய்போல் காத்து அருள்பவன். எல்லா உயிர்களுக்கும் தோற்று வாயாக இருப்பவன். வேதத்தால் மொழியப்பெறும் மூன்று வகையான தீயாக விளங்குபவன். அத்தகையவன் எமது தெய்வமாகிய சிவபெருமான். அப்பெருமான் செல்வம் திகழும் திருவாரூரில் பொருந்தி இருப்பவன். அவன் உறையும் இடம் திருவீழி மிழலை ஆகும்.

சிறப்புரை: மறை புகலும் வேள்வித் தீ 1. ஆசுவனீயம், 2. தக்கிணாக்கினி, 3. காருகபத்தியம் என மூன்று தன்மையுடையதனை மூத்தீ என்க் குறித்தார். திருமகள் பூசித்த திருத்தலமாகிய திருவாரூர் செல்வத் திருவாரூர் ஆயிற்று முத்தித்தலமானதால் செல்வத் திருவாரூர் எனலும் ஆம்.

செல்வம் – திருமகள்.

113. கல்ஆல்நிழல் கீழாய் இடர்
காவாய்என வானோர்
எல்லாம்ஒரு தேராய்அயன்
மறைபூட்டிநின்றுஉய்ப்ப
வல்லாய்எரி காற்றுஈர்க்குஅரி
'கோல்வாசுகி நாண்கல்

Koviloor Digital Library

வில்லால்எயில் எய்தான்இடம்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: "கல்லால மரத்தின் கீழிருந்து சனகாதி முனிவர்களுக்கு அறம் உரைத்த பெருமானே! எங்களைக் காப்பாற்றுக" என்று தேவர்கள் எல்லாம் வணங்கி வேண்டி நிற்க, ஒளி திகழும் சூரிய சந்திரர்கள் தேர்ச்சக்கரங்களாகவும், பிரமன் சாரதியாகவும், வேதங்கள் குதிரைகளாகவும் திகழக் காற்றுப் போன்று வேகமாகச் செல்லும் எரிக்கும் தன்மை யுடைய நெருப்பைக் கொள்ளுமாறு திருமாலாகிய அம்பினால், மேருமலையை வில்லாகவும் வாசுகி என்னும் பாம்பை நாணாகவும் கொண்டு அசுரர்களின் மூன்று கோட்டைகளையும் எரித்தான். அவனுடைய இடமாவது திருவீழிமிழலை.

எரி, காற்றீர்க்கு அரி – அக்கினி, காற்று, திருமால். எல் – ஒளி. கோல் – அம்பு.

114. கரத்தான்மலி சிரத்தான்கரி
உரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி
பணிமூவர்கட்கு ஓவா
வரத்தால்மிக அளித்தான்இடம்
வளர்புன்னைமுத்து அரும்பி
விரைத்தாதுபொன் மணிஈன்றுஅணி
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: ஈசன், பிரமனது ஒரு தலையைக் கையில் கபாலமாகக் கொண்டவன். யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவன்; தன்னை எதிர்த்த மூன்று கோட்டைகளும் எரியுமாறு செய்து அதற்கு உள்ளிருந்து அவனுடைய திருவடியைப் பணிந்த

Koviloor Digital Library

மூவருக்கு ஒவ்வில்லாத நித்தியப்பணி ஆற்றும் விதத்தில் வாயிற் காவலர் ஆகும் வரம் அளித்து வாழ் வித்தவன். அவனது இடமானது, புன்னை முத்துப் போல் அரும்பி பொன்தாதுக்களை ஈன்று அழகு சேர்க்கும் திருவீழிமிழலை ஆகும்.

115. முன்நிற்பவர் இல்லாமுரண்
அரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித்து எடுத்தான்முடி
தடந்தோள்இற வூன்றிப்
பின்னைப் பணிந்து ஏத்தப்பெரு
வாள்பே ரொடும் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம்
வீழிம்மழ லையே.

தெளிவுரை: தனக்கு எதிராக முன்னிருந்து போர் புரிபவர் யாரும் இல்லாத இராவணன், ஈசன் திரு இருக்கையாகிய வடகயிலை மலையைப் பெயர்த்து (பிடித்து) எடுத்த போது, அவனுடைய அகன்ற வலிமையான தோள் துன்புறுமாறு தனது திருப்பாத விரலால் ஊன்றினான் சிவபெருமான். பின்னர் அவ் அரக்கன் பணிந்து ஏத்த, உயர்ந்த வாளும் பேரும் கொடுத்த மின் போன்று பொலியும் சடையை உடைய அப் பெருமானுடைய இடம் திருவீழிமிழலை ஆகும்.

சிறப்புரை: இயற்கையின் நியதியிலிருந்து முரண்பட்டு மலையைப் பெயர்க்க முற்பட்டதால் முரண் அரக்கன் எனப்பட்டது. வட கயிலை பெருமை நோக்கிய திருப்பெயர். கயிலை மலையைக் குறித்தது. தான் பெயர்த்து எடுத்த மலையினாலேயே நெரிப்பட்டு நிற்றலை எண்ணி அழுதமையால் இராவணன் (இராவணம் – அழுகை) என்ற பெயருடன் சந்திரகாசம்

Koviloor Digital Library

எனப்படும் பெரிய வாளும் ஒருசேரக் கொடுத்தான் பரமன்.

வடகயிலை – வடக்கு – இனம் இல்லா அடை மொழி. தென்னாடுடைய சிவன் என்பது போல.

116. பண்டுஏழ்உலகு உண்டான்அவை
கண்டானும் முன்அறியா
ஒண்தீஉரு ஆனான்உறை
கோயில்நிறை பொய்கை
வண்தாமரை மலர்மேல்மட
அன்னம்நடை பயில
வெண்தாமரை செந்தாதுஉதிர்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: படைப்புத் தொழிலை உடைய பிரமனும், ஒருகாலத்தில் அவ் உலகங்களை உண்டு உமிழ்ந்த திருமாலும் நேரில் காண்பதற்கு அரியவனாய் சோதிப் பிழம்பாய் வடிவு கொண்ட ஈசன் உறைகின்ற கோயிலானது திருவீழிமிழலை ஆகும். அது நீர் நிறைந்த குளத்தில் வளமிக்க தாமரை மலர்மீது அன்னப் பறவை நடை பயிலவும் வெண்தாமரை செவ்விய பூந்தாதுகளைச் சிந்தவும் வளத்தைப் பெருக்கும் இயல்புடையது.

சிறப்புரை: வண்தாமரை மலர் மேல் மட அன்னம் நடை பயிலுதல், செந்திரு (இலட்சுமி கடாட்சம்) பொருந்தி இருத்தலையும், மகிழ்ச்சியின் நிறைவினையும் சாற்றுகிறது. கலைமகளின் சிறப்பினையும் அதனால் ஞானானந்தம் தேன் சொரிதலையும் வெண்தாமரை செந்தாது உதிர் என்பது புலப்படுத்திற்று.

தாது – தேன்; உதிர்தல் – சொரிதல்.

Koviloor Digital Library

117. மசங்கல்சமண் மண்டைக்கையர்
குண்டக்குணம் இலிகள்
இசங்கும்பிறப்பு அறுத்தான்இடம்
இருந்தேன்களித்து இரைத்துப்
பசும்பொன்கிளி களிமஞ்ஞைகள்
ஒளிகொண்டுஎழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில்
வீழிம்மிழ லையே.

தெளிவுரை: மயக்கம் தரும் சொற்களைக் கூறும் சமணர்களின் சொற்களை நீக்கி, வினைவயத்தால் நேரும் பிறவித்தளை அறுத்தவனாகிய சிவபெருமான் உறையும் இடமாவது திருவீழிமிழலை ஆகும். அது, பசும்பொன் நிறமுடைய கிளிகளும், மயில்களும் விளக்கத் தேன்சொரியும் மலர்களும் குலுங்கக் கதிரவன் ஒளியைப் பெறும் உயர்ந்த சோலைகளை உடைய ஊர் ஆகும்.

மசங்கல் – மயக்கம். விசும்பைப் பொலிவிக்கும் பொழில் – மண்ணுலகமும் தேவர் உலகமும் பொலிவடையச் செய்யுமாறு பூக்களை நிறைய அளித்து இறைவனுக்கு உரித்தாகுமாறு செய்வது.

118. வீழிம்மிழ லைம்மேவிய
விகிர்தன்தனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம்
பந்தன்தமிழ் பத்தும்
யாழின்இசை வல்லார்சொலக்
கேட்டார்அவர் எல்லாம்
ஊழின்மலி வினைபோயிட
உயர்வான்அடை வாரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: திருவீழிமிழலையில் பொருந்தி வீற்றிருக்கும் சிவபெருமானைப் பக்தி மணம் கமழும் சீகாழிப் பதியில் விளங்கும் ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த இனிய பதிகத்தை யாழில் அமைத்து இசையுடன் பாட வல்லவர்களும், வல்லார் சொல்லக் கேட்போரும் ஊழிதோறும் மலிந்து துன்புறுத்தும் வினை களையப் பெற்று சிவபெருமானுடைய திருவடிப் பேற்றினை அடைந்து இன்புற்று விளங்கு வார்கள்.

சிறப்புரை: கல்வியும், ஞானசாத்திரமும், உமாதேவியார் பொற்கிண்ணத்தில் அளித்த அமுதினை அருந்திய தால் ஏற்பட்டதைத் குறிக்கும் சான்றாகக் கலைஞான சம்பந்தன் ஆயினவாறு உணர்த்திற்று. இத் திருப்பதிகம் திருநீலகண்ட யாழ்ப்பாணரால் இசையுடன் பாடப் பெற்றது எனவும் குறித்தது. யாழின் இசையுடன் பாட வேண்டிய தன்மையும் உணர்த்துவதாயிற்று. "ஊழின் மலிவினை போயிட" என்பது பாச நீக்கத்தை அறுதி யிட்டுக் கூறுவதாயிற்று. "உயர்வான் அடைவார்" என்பது தேவர் உலகினை என்று கொள்ளாது, அதனினும் சிறப்பானதாகவும் உயர்வுடையதாகவும் உள்ள முத்தி இன்பமாகிய சிவப்பேற்றை உணர்த்திற்று. தத்தமது புண்ணிய வைப்புக்கு ஏற்ப தேவருலகத்தில் இருந்து மகிழ்ந்து மீண்டும் பிறவியை நோக்கி வருதலால் அது "உயர்வான்" ஆகாது என்பதும் கொள்க.

விகிரர்தன் – சிவபெருமான். விரை – மணம். கலை – கல்வி, சாத்திரம். யாழின்னிசை – யாழ் இன்னிசை (யாழ் போன்ற இனிய இசை), யாழின் இசை. ஊழின் மலி வினை – வினையின் மிகுதி கூறுதல்.

Koviloor Digital Library

12. திருமுதுகுன்றம்

தல விளக்கம்: நடுநாட்டுத் தலம். விருந்தாசலம் என்று அழைக்கப்படுகிறது. விருத்தகாசி என்ற சிறப்புப் பெயரும் உண்டு. பிரமனும் அகத்தியரும் வழிபட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பன்னீராயிரம் பொன்பெற்று அருகிலுள்ள மணிமுத்தாறு நதியில் இட்டுப் பின்னர் திருவாரூரில் எடுத்துக் கொண்டார் என்பது வரலாறு.

அந்திம காலத்தில் உயிர்களுக்கு ஈசன் ஐந்தெழுத்து ஓதி, தமது திருக்காட்சியை நல்கு கின்றான் எனக் கந்தபுராணம் பகர்கிறது.

தல விநாயகர், பாதாள விநாயகர் சன்னதி தனியாக உள்ளது.

சுவாமி : பழமலை நாதர், விருத்தகிரீஸ்வரர்

அம்பாள் : விருத்தாம்பிகை, பெரியநாயகி

தீர்த்தம் : மணி முத்தாறு, அக்னி தீர்த்தம், குபேர தீர்த்தம்

தல மரம் : வன்னி

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

119. மத்தாவரை நிறுவிக்கடல்
கடைந்தவ்விடம் உண்ட
தொத்தார்தரு மணிநீள்முடிச்
சுடர்வண்ணனது இடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகில்
ஒளிர்குங்குமம் கொண்டு
முத்தாறுவந்துஅடி வீழ்தரு
முதுகுன்றுஅடை வோமே.

Koviloor Digital Library

தெளிவுரை: மந்தர மலையை மத்தாகக் கொண்டும், வாசுகி என்ற பாம்பைக் கயிறாகக் கொண்டும், பாற்கடலைக் கடைந்த போது முதலில் தோன்றிய ஆலகால விடத்தை உண்ட, நெருப்பைப் போன்ற சிவந்த வண்ணம் உடையவனாகிய சிவ பெருமானுடைய இடம் திருமுதுகுன்றம் ஆகும். ஆங்கு, மலர்க் கொத்துகளும் குளிர்ந்த சந்தனம், அகில், ஒளிரும் குங்குமப் பூ ஆகியவற்றைக் கொண்டு முத்தாறு மகிழ்ச்சியுடன் ஈசன் திருவடியை வணங்குகிறது. அத்தகைய சிறப்புடைய பதியை அடைந்து இறைவனைத் துதிப்போமாக.

முத்தாறு வந்து அடிவீழ் – முத்தாறு வந்து அடிவீழ்தல், முத்தாறு உவந்து அடிவீழ்தல். அடைவோம் – பன்மை குறித்த ஆணை வழி நின்றது!

120. தழைஆர்வட வியவீதனில்
தவமேபுரி சைவன்
இழைஆர்இடை மடவாளொடும்
இனிதாஉறை இடமாம்
மழைவான்இடை மழுவஅவ்எழில்
வளைவாள்உகிர் எரிகண்
முழைவாள்அரி குமிறும்உயர்
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: தழைகள் நிறைந்த ஆல மர நிழலில் யோகீஸ்வரனாக இருந்து தவக்கோலத்தில் விளங்கும் சிவபெருமான், மெல்லிய இடையை உடைய உமாதேவியோடு இனிதாய் உறையும் இடமானது, மேகத்தில் இடி முழக்கம் நிகழ அவ்வொலியானது குகையில் இருக்கும் சிங்கத்தையும் கர்ச்சிக்குமாறு செய்யவல்ல திருமுதுகுன்றம் ஆகும். அங்கு சென்று இறைவனை வணங்கித் துதிப்போமாக.

Koviloor Digital Library

சிறப்புரை: மேகத்தின் இடியோசையைக் கேட்ட சிங்கம், அவ்வொலி யானையின் பிளிறல் எனக் கொண்டு கர்ச்சனை செய்தது என உணர்த்தியது காண்க. தனித்திருந்து தவம் புரியும் ஈசன் உமாதேவி யுடன் வீற்றிருக்கும் சிறப்பு கூறப்பட்டது வளைவாள் உகிர், எரிகண் முழையில் உள்ள ஒளி பொருந்திய சிங்கத்திற்கு அடை மொழியாயிற்று.

தழை – இலைகள்; வடம் – ஆலமரம். சைவன் – சிவபெருமான். முழை – குகை.

121. விளையாததொர் பரிசில்வரு
பசுபாசவே தனைஒண்
தளையாயின தவிரவ்வரு
தலைவன்அது சார்பாம்
களையார்தரு கதிர்ஆயிரம்
உடையவ்வவ னோடு
முளைமாமதி தவழும்முயர்
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: உயிரானது பாசத்தால் கட்டப்பட்டுத் துன்பத்தில் ஆழ்தலை மீண்டும் விளையாதவாறு தவிர்க்கும் ஒளிமயமான தலைவனாகிய ஈசன் சார்ந்த இடமாவது, ஆயிரம் கதிர்களையுடைய சூரியனோடு பிறைச் சந்திரனும் தவழும் திருமுதுகுன்றம் ஆகும். அப் பதியை அடைந்து இறைவனைத் துதிப்போமாக.

சிறப்புரை: பசுவை (உயிர்), பாசமானது (மும்மலம்) கட்டித் துன்புறுத்துவதைப் பதியாகிய ஈசன் சார்பால் நீக்கம் பெறுதல் இங்கு உணர்த்தப்பெற்றது. ஈசனைப் பாசம் சாராது என்பதைக் குறிக்குமாறு தலைவன் என்பதற்கு ஒண் அடைமொழி ஆயிற்று. சந்திரனைப் பெருமான் சூடிய தன்மையும் அதன் வளரும் சிறப்பும் தோன்ற, “முளைமாமதி” எனவாயிற்று.

Koviloor Digital Library

தவிரவ்வரு, உடையவ்வவ – சந்தம் நோக்கி மிகுந்தது. முளை – வளர்தல் குறித்தது. அடைதல் – மனத்தாலும் இழைதல்.

122. சுரர்மாதவர் தொகுகின்னரர்
அவரோதொலை வில்லா
நரர்ஆனபல் முனிவர்தொழ
இருந்தான்இடம் நலமார்
அரசார்வர அணிபொற்கலன்
அவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: தேவர்களும், தவசிகளும், கின்னரர் முதலானோரும், மக்கள் பிறவி யுடைய பல முனிவர் களும் தொழுமாறு வீற்றிருக்கும் இடமாவது திருமுது குன்றம். அது நலம் திகழும் அரசாட்சியை நல்கும் மன்னர்கள் பொன்னாலான அணிகலன்களைக் கொண்டு முரசு ஒலி ஆர்க்க வரும் சிறப்புடையது. அங்கு அடைந்து இறைவனைத் துதிப்போமாக.

கின்னரர்: கின்னரி எனும் இசைக் கருவியைப் பயிலும் ஒருவகைத் தேவசாதியர். மொய்ம்பு – சிறப்பு.

123. அறையார்கழல் அந்தன்தனை
அயில்மூவிலை அழகார்
கறையார்நெடு வேலின்மிசை
ஏற்றான்இடம் கருதில்
முறையாயின பலசொல்லிஒண்
மலர்சாந்துஅவை கொண்டு
முறையால்மிகு முனிவர்தொழு
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: அந்தகாசுரன் தேவர்களைத் துன்புறுத்திய காலத்தில், தேவர்களுடைய வேண்டுகோளின்படி

Koviloor Digital Library

சிவபெருமான் பைரவமூர்த்தியை ஏவ, அப்பெருமான் முத்தலைச் சூலத்தால் அவ் அசுரனை மாய்த்தான். அவ்வாறு யாவராலும் போற்றித் துதி செய்யுமாறு உள்ள திருவடியை உடைய ஈசன் இடமாவது திருமுதுகுன்றம் ஆகும். முறையாக ஓதும் வேதத்தால் பரவிப் பூக்களாலும் சந்தனம் முதலான வாசனைப் பொருள்களாலும் பூசை நடத்தி, அங்கு முறைப்படி முனிவர்கள் வணங்குகின்றனர். அத்தகைய இடத்தை அடைந்து ஈசனைத் துதிப்போமாக.

அந்தன் – அந்தகாசுரன். அறையார் கழல் – துதிச் சொற்களால் போற்றப் பெறும் திருவடி.

124. ஏவார்சிலை எயினன்னுரு
வாகிஎழில் விசயற்கு
ஓவாதஇன் னருள்செய்தஎம்
ஒருவற்குஇடம் உலகில்
சாவாதவர் பிறவாதவர்
தவமேமிக உடையார்
மூவாதபல் முனிவர்தொழு
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: வில்லும் அம்பும் ஏந்திய வேடன் உருவில் வந்து எழில் மிக்க அர்ச்சுனருக்கு எப்போதும் நிலைத்திருக்குமாறு அருள் செய்த எமது நாதனாகிய ஈசனுக்குரிய இடமானது உலகில் இறப்பில்லாதவர்களும் மீண்டும் பிறப்புக்கான வினையைக் கொள்ளாதவர்களும் ஆகிய மிகுந்த தவத்தை உடையவர்களும், இளமை நீங்காத பல முனிவர்களும் தொழுது போற்றும் திருமுதுகுன்றம் ஆகும். அங்குச் சென்று இறைவனை வணங்குவோமாக.

சிறப்புரை: தவம் செய்து ஈசனால் அருளப் பெற்ற அர்ச்சுனர் கண்ணப்பராகத் திருஅவதாரம் செய்த

Koviloor Digital Library

வரலாற்றின் பகுதியாக எழில் விசயன் எனவும், ஓவாது இன்னருள் செய்த எம் ஒருவன் எனவும் விளக்கிற்று.

ஏவார் சிலை – ஏ ஆர்சிலை: ஏ – அம்பு; சிலைவில் எயினன் - ஈசன் வேடன் உருவில் தோன்றியது. விசயன் – அர்ச்சுனர்.

125. தழல்சேர்தரு திருமேனியர்
சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகஏறிய
மறையோன்உறை கோயில்
விழவோடுஒலி மிகுமங்கையர்
தகும்ஆடக சாலை
முழவோடுஇசை நடமுன்செயு
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: தழல்போன்ற சிவந்த திருமேனியை உடையவர்; சந்திரனைச் சடைமுடியில் சூடியவர்; பெரிய இடபத்தின்மேல் ஏறிய மறையோன்; அவன் உறையும் இடமானது விழாக்கள் நடத்தியும், காலில் சலங்கை பூட்டி நடனம் புரியும் நடன சாலைகளும் முழவோசையும் இசைப்பாடலின் ஓசையும் முற்படும் திருமுதுகுன்றம் ஆகும். ஆங்கு சார்ந்து இறைவனைத் துதிப்போமாக.

126. செதுவாய்மைகள் கருதிவ்வரை
எடுத்ததிறல் அரக்கன்
கதுவாய்கள்பத்து அலறீஇடக்
கண்டான்உறை கோயில்
மதுவாயசெங் காந்தள்மலர்
நிறையக் குறை வில்லா
முதுவேய்கண்முத்து உதிரும்பொழில்
முதுகுன்றுஅடை வோமே.

Koviloor Digital Library

தெளிவுரை: தனது வலிமையைத் தவறுதலாகக் கணித்துக் கயிலையை எடுத்த அரக்கனின் தாடைகள் பத்தும் அலறும்படி செய்த சிவபெருமான் உறையும் கோயிலானது. செங்காந்தள் மலர்கள் தேனைச் சொரியவும், மூங்கில்கள் முத்துக்களை உதிர்க்கவும் விளங்கும் சோலைகளையுடைய திருமுதுகுன்றம் ஆகும். அதனை அடைந்து துதிப்போமாக.

செதுவாய்மை: செது – தவறு; வாய்மை – வலிமை

127. இயலாடிய பிரமன்னரி
இருவர்க்குஅறி வரிய
செயலாடிய தீயார்உரு
வாகிஎழு செல்வன்
புயல்ஆடுவண் பொழில்சூழ்புனல்
படப்பைத்தடத் தருகே
முயல்ஓடவெண் கயல்பாய்தரு
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: தமக்குள் உயர்ந்தவர் என்று தற்பெருமை கூறிய பிரமன், திருமால் ஆகிய இருவரும் அறிந்து கொள்வதற்கு அரியவனாய் நெருப்புப் பிழம்பாய் உருவாகி எழுந்த செல்வன், மேகம் பரவும் சோலைகளும் நீர்ப்பரப்புகளும் கயல்பாயும் வயல்களும் திகழும் திருமுதுகுன்றத்தில் எழுந்தருளி இருக்க ஆங்கு சென்றடைந்து துதிப்போமாக.

சிறப்புரை: வாய்ச் சொற்களால் முனைப்புற்றதை ; இயல் ஆடிய பிரமன், அரி எனவும், செயலாய்த் திகழும் ஈசன், 'செயலாடிய தீயார் உருவாகி எழு செல்வன்' என உரைக்கப்படுதல் காண்க.

தீயார் உரு – தீ ஆர் உரு, நெருப்பு வடிவம், சோதி உரு. முயல் – வெண்மைக்கு ஒப்புமை.

Koviloor Digital Library

128. அருகரொடு புத்தர்அவர்
அறியாஅரன் மலையான்
மருகன்வரும் இடபக்கொடி
உடையான் இடம்அலர்ஆர்
கருகுகுழல் மடவார்கடி
குறிஞ்சிஅது பாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்றுஅடை வோமே.

தெளிவுரை: சமணரும் பௌத்த மதத்தினரும் அரனை அறியார். ஈசன், இமவான் மருகன், இடபக் கொடியை உடையவன். அவனுடைய இடமாவது, மலர் சூடிய கருங்கூந்தலை யுடைய பெண்கள் குறிஞ்சிப்பண் இசைத்து முருகனது பெருமையைப் புகலும் திருமுது குன்றம் ஆகும். அப்பதியை அடைந்து இறைவனைத் துதிப்போமாக.

சிறப்புரை: மலையும் அதனைச் சார்ந்த நிலமும் குறிஞ்சி யாதலும், அந்நிலத்திற்கு உரிய கடவுளாகிய முருகனது பெருமையை உரைக்கும் தன்மையும் ஈண்டு புலப் படுத்தப் பெற்றது. இத்திருத்தலம் குறிஞ்சி நிலத்தில் அமையப் பெற்ற சிறப்பு உணர்த்திற்று. கயிலை மலை நாதனாகிய ஈசனை திருமுதுகுன்ற நாதனாயும், மலை யான் மருகனாயும் உரைக்கப்பெற்று குறிஞ்சி நிலத்தின் பெருமை கூறப்பட்டது. தலைவியும் தலைவனொடு கூடும் திணையாகிய குறிஞ்சித்திணை குறிப்பது போன்று ஆன்மாக்கள் இறைவனைக் கலந்து நிற்கும் பெற்றி உரைத்தலும் அறியத்தக்கது.

முருகன்னது: முருகனது – சந்தம் நோக்கி னகரம் மிகுந்தது.

129. முகில்சேர்தரு முதுகுன்றுடை
யானைம்மிகு தொல்சீர்ப்

Koviloor Digital Library

புகலிந்நகர் மறைஞானசம்
பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைகள்
இசையோடுஇவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கு இடர்
பாவம்மடை யாவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: முகில் பொருந்தி விளங்கும் திருமுது குன்றத்தில் எழுந்தருளியுள்ள ஈசனை மிகப் பழைமை பொருந்திய சிறப்புடைய புகலி நகரின் ஞானசம்பந்தப் பெருமான் உரைசெய்த நிகரில்லாத இந்தத் திருப்பதிகத்தை இடையோடு கூறும் அடியவர்களுக்குத் துன்பமும் இல்லை பாவமும் அணுகாது.

சிறப்புரை: "வேத நெறி தழைத்தோங்க..." என்னுமாப் போன்று, மறை, ஞானசம்பந்தப் பெருமான் உரையாயிற்று. மிகுவைத் துறை விளங்குதலும் பூதபரம்பரை பொலிதலும் மேலும் சிறப்புடைத்தாய் இருத்தலால் "நிகரில்லன தமிழ் மாலை" ஆயிற்று. இத்திருப்பதிகம் இசைத்தலால் இடர்தீர்தலும் பாவம் அணுகாமையும் நிகழ்தலானது, முன்வினைப் பயனால் உண்டாகும் துன்பம் நீங்குதலும் இப்பிறவியில் நேரும் பாவம் அணுகாத நிலையும் குறித்தது.

புகலிந் நகர், பந்தன்னுரை, பகரும்மடியவர், பாவம் மடையாவே – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

13. திருவியலூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். தற்போது திருவிசலூர் என வழங்கப்படுகிறது. மேலும் இது

Koviloor Digital Library

பண்டாரவாடை திருவிசலூர் எனச் சிறப்பாக அழைக்கப் படுகிறது. ஜடாயு வழிபட்ட திருத்தலம்.

சுவாமி : யோகானந்தீஸ்வரர், வில்வாரண்யேசுவரர், புராதனேஸ்வரர்

அம்பிகை : சௌந்தர நாயகி

தீர்த்தம் : சடாயு தீர்த்தம்

பதிகக் குறிப்பு: சிவபெருமான் ஞானசம்பந்தருக்குத் திருக்காட்சி நல்கிய திருத்தலம். இச் செய்தி பாடல் எண்கள் 5 மற்றும் 9இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

130. குரவம்கமழ் நறுமென்குழல்
அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன்
உரிவைஉடல் அணிவோன்
அரவும்மலை புனலும்மிள
மதியும்நகு தலையும்
விரவும்சடை அடிகட்குஇடம்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: குரவம் என்னும் மலரின் மணம் கமழும் கூந்தலை உடைய உமாதேவி நடுங்குமாறு, யானையின் முகத்தைக் கிழித்து அதன் தோலை உரித்துப் போர்வையாய் அணிபவனாகிய சிவபெருமான், நாகம், கங்கை, இளைய பிறைச் சந்திரன் மற்றும் வெண்மையான மண்டை ஓடும் கொண்டுள்ளவன். அவனுடைய சடைமுடி பரந்துள்ளது. அத்தகைய அடிகளுக்கு உரிய இடமாக உள்ளது நீர்வளம் மிக்க திருவியலூர்.

Koviloor Digital Library

சிறப்புரை: வீரத்தின் மகிமை தோன்ற ஈசன் யானையின் தோலை உரித்த செயலானது, மென்மைப் பண்புகள் நிறைந்த பெண்களுக்கு அச்சம் தோன்றுதல் என்பது பெண்மை மரபு வழி உமாதேவியின்பால் ஏற்றிக் கூறப்பட்டது.

131. ஏறுஆர்தரும் ஒருவன்பல
உருவன்நிலை ஆனான்
ஆறுஆர்தரு சடையன்அனல்
உருவன்புரி உடையான்
மாறுஆர்புரம் எரியச்சிலை
வளைவித்தவன் மடவாள்
வீறுஆர்தர நின்றான்இடம்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: இடப வாகனத்தில் அமர்ந்து காட்சி நல்கும் ஒப்பற்றவன்; பல வடிவங்களை உடையவன்; கங்கையைச் சடையில் கொண்டவன்; தீவண்ணம் போன்று சிவந்த திருமேனி உடையவன்; என்றும் நிலைத்து இருப்பவன்; அன்புடையவன்; நன்னெறியி லிருந்து மாறுபட்டு நின்ற மூன்று அசுரர்களின் கோட்டைகளை எரியுமாறு செய்தவன்; உமாதேவி பெருமையுடன் மகிழுமாறு விளங்கி நின்றவன்; அப் பெருமானின் இடமாக உள்ளது நீர்வளம் மிக்க திருவியலூர் ஆகும்.

சிறப்புரை: உயிர்கள்மாட்டு இயற்கையான அன்புடைமை புரிவுடையான் எனப்பட்டது. புரிதல் என்பது மிகுதலையும், தானே யாவற்றையும் விரும்பிச் செய்தலையும், இயக்கம் பெறுதலையும் சுட்டும். இவை யாவும் இறைவனுக்கே உரித்தாதல் அறிக. அருள் புரிதலும் கருணை புரிதலும் இறைவறுக்கே ஒல்லுமாப் போல. புரியுடையான் சிறப்பு உணர்த்திற்று.

Koviloor Digital Library

அப்பர் பெருமானுக்குப் பொதி சோறு அளிக்கவும், சிறுத்தொண்டருக்குப் பைரவ வேடம் தாங்கிய விருந்தினர் போன்றும் தோற்றம் நிகழ்த்திய பாங்கு, பல உருவன் என்பதற்குப் பொருந்துமாறும் கொள்ளுதல் சிறப்புடைத்து. உமாதேவியார் மகிழுமாறு - பெருமையுடன் பிரியாது நிற்றலை மடவாள் வீறு ஆர்தர நின்றான் என்பது உணர்த்திற்று

132. செம்மென்சடை அவைதாழ்வுற
மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி எனநின்றுஇசை
பகர்வார்அவர் இடமாம்
உம்மென்றுஎழும் அருவித்திரள்
வரைபற்றிட உரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: செம்மையான மெல்லிய சடையுடன் அழகிய தோற்றம் கொண்டு தாருகவனத்து முனிவர் தம் மனைகள்தோறும் சென்று பிச்சை ஏற்கும் சிவபெருமானுடைய இடமாவது, நீர்மல்கு சோலை களும் மூங்கில்களும் வயல்களும் மருவித் திகழும் திருவியலூர் ஆகும்.

வரை – மூங்கில் காடுகளையும் குறிக்கும். உரைமேல் விம்மும் பொழில் – புகழால் பொலியும் சோலை.

133. அடைவுஆகிய அடியார்தொழ
அலரோன்தலை யதனில்
மடவார்இடு பலிவந்துஉணல்
உடையான்அவன் இடமாம்
கடையார்தர அகில்ஆர்கழை
முத்தம் நிரைசிந்தி

Koviloor Digital Library

மிடைஆர்பொழில் புடைசூழ்தரு
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: புகலிடமாக அடியவர்கள் எல்லாம் தொழுது போற்ற, பிரமன் தலையைத் திரு ஓடாகத் தன் கரத்தில் ஏந்தி, தாருகவனத்தில் உள்ள முனிவர்களின் பத்தினிப் பெண்களிடம் பிச்சை ஏற்றவன் சிவபெருமான். அவனுடைய இடமாவது அகிலும் மூங்கில்களிலிருந்து தோன்றிய முத்துக்களும் கடைவீதிகளில் பொலிந்து விளங்கும், செறிந்த பொழிலைச் சூழ்ந்த நீர் வளம் மிக்க திருவியலூர் ஆகும்.

அடைவு – புகலிடம். கடை ஆர் – கடைவீதியில் விளங்குதல், வெளிப்படுதல். மிடை – செறிதல்.

134. எண்ணார்தரு பயனாய்அயன்
அவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாய்உயர்
பொருளாய்இறை யவனாய்க்
கண்ணார்தரும் உருவாகிய
கடவுள்ளிடம் எனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: நினைப்பவர்தம் எண்ணத்தில் பொருந்தும் பயனாகவும், படைப்புத் தொழில் புரிபவனாகவும், மிகுந்த ஞானமாகவும், இசையில் விளங்கும் வேதமாகவும், உயர்ந்த பேற்றைத் தரும் இறைவனாகவும், காட்சிக்கு இனிமை தரும் வடிவப் பொருளாகவும் உடைய கடவுளின் இடம், தேவர்களுடன் மண்ணுலகத்தவரும் தொழுது வணங்கும் நீர்வளம் மிக்க வியலூர் எனப்படுவதாகும்.

Koviloor Digital Library

சிறப்புரை: நினைவார்தம் நெஞ்சுள் நீங்காது நின்று இயக்கும் இறைவன் அருள் மாண்பு, எண்ணத்தில் பொருந்திப் பயனைத் தருபவன் என உணர்த்தப் பட்டது. மண்ணோர்கள் கன்மத்தை நீக்கும் பொருட்டுத் தொழுதலும், பூவுலகத்தில் செய்த புண்ணியத்தின் பயனால் தேவர்கள் ஆனமையால் தேவர்கள் தொழுதலும் குறித்தது.

எண்ணார் தருபயன் – பண் ஆர் தருபயன். எண் – எண்ணம். எனலாம் – எனல் ஆம் என்பதாயிற்று.

135. வசைவில்கொடு வருவேடுவன்
அவனாய்நிலை அறிவான்
திசைஉற்றவர் காணச்செரு
மலைவான் நிலைஅவனை
அசையப்பொருது அசையாவணம்
அவனுக்குயர் படைகள்
விசையற்குஅருள் செய்தான்இடம்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: வளைந்து தோன்றும் வேடுவத் திருக் கோலத்தில் வந்து விசயனிடம் எல்லோரும் காணுமாறு போர் செய்து, பின்னர் அவனுக்குச் சிறப்பான படைக்கலன்களை அருள் செய்தவனாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடமானது, நீர்வளம் மிக்க வியலூர் ஆகும்.

136. மான்ஆர்அரவு உடையான்இரவு
உடையான்பகல் நட்டம்
ஊனார்தரும் உயிரான்உயர்
விசையான் விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென
நினைவார்அவர் இடமாம்

Koviloor Digital Library

மேல்நாடிய விண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: மானையும் அழகிய பாம்பையும் உடையவன்; இரத்தல் தொழிலைக் கொண்டு பிச்சை ஏற்பவன்; நடனம் ஆடுபவன்; உடலின்கண் பரவி இருக்கும் உயிரானவன்; உயர்வாக நினைத்துப் போற்று பவர்கள்பால் இசைவுடன் விளங்குபவன், தோன்றும் பொருள் யாவற்றிலும் தானேயாய் இருந்து செய்பவன்; அத்தகைய முதன்மையானவன் என்று நினைக்கப் படும் ஈசன், விளங்கும் இடமாவது தேவர்கள் தொழுது போற்றும் நீர் வளம் மிக்க வியலூர் ஆகும்.

சிறப்புரை: ஈசனே யாவற்றையும் விசைப்படுத்திச் செய்பவனாதலின் உயர்விசையான் எனலும் ஆம். இறைவனுடைய திருவடிப் பேற்றைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் புண்ணியத்தின் பயனாக அற்ப போகத்தை விழைவான் வேண்டி, தேவலோகம் சார்தலை உடைமையால் மேல் நாடிய என உணர்த்திற்று.

ஆர் –அழகு. இரவு – பிச்சை. விசை – விரைவு. மேல் நாடிய – மேம்போக்காக உல்ளதைக் குறித்தது.

137. பொருவார்எனக்கு எதிர்ஆர்எனப்
பொருப்பை எடுத்தான்தன்
கருமால்வரை கரம்தோள்உரம்
கதிர்நீள்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி
கழல்சேர்திரு வடியின்
விரலால்அடர் வித்தான்இடம்
விரிநீர்விய லூரே.

Koviloor Digital Library

தெளிவுரை: தன்னை எதிர்த்துப் போர் புரிய யாரும் இல்லை என்னும் அகந்தையால் கயிலையை எடுத்தான் இராவணன். அவனுடைய மலைபோன்ற தோள்களும். கரங்களும் ஒளி வீசும் கிரீடம் நெரிதலால் தலைகளும் துன்புறுமாறு, தனது வீரக் கழலணிந்த திருப்பாத விரலால் அம் மலையை அழுத்தித் தண்டனை செய்தான். அப்பெருமான் விளங்கும் இடம், நீர்வளம் மிக்க வியலூர் ஆகும்.

138. வளம்பட்டுஅலர் மலர்மேல்அயன்
மாலும்மொரு வகையால்
அளம்பட்டுஅறிவு ஒண்ணாவகை
அழலாகிய அண்ணல்
உளம்பட்டுஎழு தழல்தூணதன்
நடுவேஒரு உருவம்
விளம்பட்டுஅருள் செய்தான்இடம்
விரிநீர்விய லூரே.

தெளிவுரை: வளமான பாற்கடலில் பள்ளி கொண்டு இருக்கும் திருமாலின் உந்திக் கமலத்தில் தோன்றிய தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும், அத் திருமாலும் ஈசனைக் காண வேண்டும் என முற்பட்டு அது இயலாமையால் அயர்ந்து இருக்க. அறியவொண்ணாதபடி பேரழல் ஆகித் தோன்றினான் அப்பெருமான். பின்னர் அந்நெருப்புப் பிழம்பின் நடுவில் ஒப்பற்ற திருக்காட்சியை நல்கிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம், நீர்வளம் மிக்க வியலூர் ஆகும்.

சிறப்புரை: நான்முகன் வீற்றிருக்கும் தாமரை மலரின் சிறப்பு வளம்பட்டு அலர்வதாயிற்று. அவ்வளம் பாற்கடலை ஈந்த பரமனால் உண்டாகியது

Koviloor Digital Library

ஆன்மாவால் அறியப்பட வேண்டிய இறைவனை அறிவால் அறிய ஒண்ணாது எனவும், தோன்றாத் துணையாகிய இறைவனைக் காணவேண்டும் என்னும் நோக்கத்தில் திருமாலும் நான்முகனும் நெருக்கம் உற்றனர் எனவும் "அளம்பட்டு அறிவொண்ணா" என்பது உணர்த்திற்று.

அளம் – நெருக்கம். அறிவொண்ணா – அறிய வொண்ணாத, அறிவு ஒண்ணாத. விளம் – விளம்புதல்.

139. தடுக்கால்உடல் மறைப்பார்அவர்
        தவர்சீவர மூடிப்
பிடக்கேஉரை செய்வாரொடு
        பேணார்நமர் பெரியோர்
கடல்சேர்தரு விடம்உண்டுஅமுது
        அமரர்க்கு அருள் செய்த
விடைச்சேர்தரு கொடியான்இடம்
        விரிநீர்விய லூரே.

தெளிவுரை: மரவுரியை ஆடையாக உடையவர்கள், பிடகத்திலிருந்து உரைப்பவர்கள் ஆகியவர்களைப் பெரியோர்கள் போற்றமாட்டார்கள். கடலில் தோன்றிய விடத்தைத் தான் அருந்தி, அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்து அவர்கள் நீண்ட காலம் வாழுமாறு அருள் செய்த இடபக் கொடியுடைய சிவபெருமான் வீற்றிருக்கும் இடம், நீர்வளம் மிக்க வியலூர் ஆகும்.

சிறப்புரை: சிவனடியார்கள் எல்லோரிடத்திலும் அன்பு பூண்டு நண்பர்களாதலால் அவர்கள் பெரியோர் களாகவும் சிறப்படைதலை "நமர்பெரியோர்" என்பது உணர்த்திற்று. ஈசன் எல்லா இடங்களிலும் படர்ந்து விளங்குதலும், கீழ்த்திசை (ஈசானியம்) கண் இடமாகக்

Koviloor Digital Library

கொண்டிருத்தலும் கொடி எனும் தொடர் சுட்டுதலும் ஆகும்.

பிடகம் – பௌத்த சமய நூல். கொடி – படர்தல், கீழ்த்திசை.

140. விளங்கும் பிறை சடைமேல்உடை
விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு
தமிழ்ஞானசம் பந்தன்
துளங்குஇல்தமிழ் பரவித்தொழும்
அடியார்அவர் என்றும்
விளங்கும்புகழ் அதனோடுஉயர்
விண்ணும்முடை யாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: விளங்குகின்ற வெண்பிறைச் சந்திரனைச் சடையின் மீது தரித்துள்ள ஈசன், விகிர்தன். அப்பெருமான் வியலூரை இருப்பிடமாகக் கொண்டுள்ளதை ஞானசம்பந்தப் பெருமான் இசைத்த தமிழ்ப் பதிகமாகிய இப் பத்துப் பாடல்களையும் இசைத்து இறைவனை வணங்குபவர்கள், இம்மையில் செல்வமும் புகழும் சேர நலங்கள் யாவும் பெற்று தேவலோகச் சிறப்புகளையும் உடையவராவர்.

சிறப்புரை: “தமிழ் பரவித் தொழும் அடியார்” என்பது இத் திருப்பதிகத்தைப் பக்தியுடன் இசைத்துப் பாடுதலும் அச் செயலால் ஈசனைத் தொழுதலும் ஆதல். அன்னவர் அடியார் எனப்படுவர். இப்பேற்றினை ஞானசம்பந்தப் பெருமான் தமிழ் மாலைகள் நல்குதலால் துளங்கு இல்தமிழ் ஆயிற்று.

துளங்கில் தமிழ் – துளங்கு இல் – நடுக்கம் இல்லாத.

Koviloor Digital Library

14. திருக்கொடுங்குன்றம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். தற்போது பிரான்மலை என்று அழைக்கப்படுகிறது. மகோதர மகரிஷி பூசித்தது.

சுவாமி : கொடுங்குன்றீசர், கடூரகிரீஸ்வரர்

அம்பிகை : குயிலமுத நாயகி, அமிர்தேஸ்வரி

தல மரம் : உறங்காப் புளி

தீர்த்தம் : தேன்ஆதி

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

141. வானில்பொலி வெய்தும்மழை
மேகம்கிழித்து ஓடிக்
கூனல்பிறை சேரும்குளிர்
சாரல்கொடுங் குன்றம்
ஆனில்பொலி ஐந்தும்அமர்ந்து
ஆடிஉலகு ஏத்தத்
தேனில்பொலி மொழியாளொடு
மேயான்திரு நகரே.

தெளிவுரை: வானத்தில் திகழும் மழை மேகம் குளிர்ந்த மழையைப் பொழிய விளங்கும் கொடுங்குன்றத்தில் பசுவிலிருந்து தோன்றும் ஐந்து பூசைப் பொருள் களையும் விரும்பி ஏற்று மகிழ்ந்து உமாதேவியோடு அந் நகரில் இருப்பவன் ஈசன்.

சிறப்புரை: மழை காரணமாகச் சேதம் ஏதும் நிகழாமையைப் பொலிவு எய்தும் மழை என்பது உணர்த்திற்று. உமாதேவியார் அடியவர்களுக்கு

Koviloor Digital Library

உணர்த்தும் ஞானப்பாங்கு தேனில் பொலி மொழியாள் என்பது சுட்டும்.

142. மயில்புல்குதண் பெடையோடுஉடன்
ஆடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடும்குளிர்
சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேல்மலி நெடுவெஞ்சுடர்
அனல்ஏந்திநின்று ஆடி
எயில்முன்பட எய்தான்அவன்
மேயவ்எழில் நகரே.

தெளிவுரை: ஆண் மயில் பெண் மயிலோடு சேர்ந்து ஆடவும், குயிலின் இசை பாடவும் உள்ள குளிர்ச்சி பொருந்திய சோலை உடையது கொடுங்குன்றம். கூர்மையான வேலை மிக்க நெடிய வெஞ்சுடர் போன்ற நெருப்பைக் கரத்தில் ஏந்தி நின்று தாண்டவம் செய்து மூன்று கோட்டைகளை அழியுமாறு செய்த சிவபெருமான் இருப்பது அந்த எழில் நகர் ஆகும்.

143. மிளிரும்மணி பைம்பொன்னொடு
விரைமாமலர் உந்திக்
குளிரும்புனல் பாயும்குளிர்
சாரல்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொடு இளவெண்மதி
கெழுவும்சடை தன்மேல்
வளர்கொன்றையு மதமத்தமும்
வைத்தான்வள நகரே.

தெளிவுரை: பிரகாசம் உடைய மாணிக்க மணிகளும், பொன்னும், நறுமணம் கமழும் மலர்களும் முற்பட நீர் பெருகும் குளிர்ந்த சாரலை உடையது கொடுங் குன்றம். அது கங்கையுடன் பிறை மதியும் நட்புடன்

Koviloor Digital Library

பொருந்தி இருக்குமாறு செய்து. கொன்றை மலரும் ஊமத்தை மலரும் சேரத் தன் சடையில் வைத்த ஈசனுடைய வளமையான நகர் ஆகும்.

சிறப்புரை: இயற்கையின் சாரலாகிய குளிர்புனலும் விரைமாமலரும் ஈசன் தரித்துள்ள கங்கைக்கும் ஊமத்த மலருக்கும் ஒப்பிடுதலும், மிளிரும் மணியும் பைன் பொன்னும் முறையே சடைக்கும் கொன்றை மலருக்கும் அவ்வவற்றின் நிறத்துடன் பொருததிக் கூறுதலும் நோக்கத் தக்கது.

144. பருமாமத கரியோடுஅரி
இழியும்வரி சாரல்
குருமாமணி பொன்னோடுஇழி
அருவிக் கொடுங் குன்றம்
பொருமாஎயில் வரைவில்தரு
கணையில்பொடி செய்த
பெருமான்அவன் உமையாளொடு
மேவும்பெரு நகரே.

தெளிவுரை: பெருத்த மதம் பொருந்திய யானையும் சிங்கமும் உலவ, ஒளிமிக்க மணிகளும் பொன்னும் கொழிக்கும் அருவியைக் கொண்டது கொடுங்குன்றம்: அது, போர் செய்த மூன்று கோட்டைகளை மேருமலையை வில்லாகக் கொண்டு எய்த கணையால் பொடி படுத்திய சிவபெருமான் உமாதேவியோடு விரும்பி இருக்கும் பெருமையான நகர் ஆகும்.

சிறப்புரை: ஆணவ மலத்தைக் குறிக்கும் யானையும், அதற்குப் பகையாகிய சிங்கமும் ஒருசேரக் கூடும் காட்சி மலநீக்கத்தின் மாட்சிமையையும் அச்சமற்ற தன்மையையும் உணர்த்திற்று. அஞ்சுவது யாதொன்றும்

Koviloor Digital Library

இல்லை அஞ்ச வருவதும் இல்லை என்னும் திருநாவுக்கரசரின் வாக்கும் காண்க.

குரு மாமணி – மணியின் மகிமை கூறப்பட்டது. குரு – ஒளி.

145. மேகத்துஇடி குரலவந்துஎழ
வெருவிவ்வரை இழியும்
கூகைக்குலம் ஓடித்திரி
சாரல்கொடுங் குன்றம்
நாகத்தொடும் இளவெண்பிறை
சூடிந்நல மங்கை
பாகத்தவன் இமையோர்தொழ
மேவும்பழ நகரே.

தெளிவுரை: மேகத்தில் முழங்கும் இடியோசை கேட்டு இருள் வாழ்க்கையுடைய கூகை (கோட்டான்)கள் பரந்து திரியும் தன்மை கொண்டது கொடுங்குன்றம். பாம்பும், பிறைச்சந்திரனும் சூடி உமாதேவியை இடப் பாகமாக உடைய பரமன், தேவர்கள் தொழப் பொருந்தி இருப்பது இப் பழநகர் ஆகும்.

சிறப்புரை: கூகைக் குலம் திரிதலானது, அஞ்ஞானம் நீங்குதலை உணர்த்திற்று. உயிருக்கு இனிய நலத்தைப் பொழியும் உமாதேவியின் இயல்பு தோன்ற "நலமங்கை" என உணர்த்தியது காண்க.

146. கைம்மாமத கரியின்னினம்
இடியின்குரல் அதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக
மண்டும்கொடுங் குன்றம்
அம்மான்என உள்கித் தொழு
வார்கட்கருள் செய்யும்
பெம்மான்அவன் இமையோர்தொழ
மேவும்பெரு நகரே.

Koviloor Digital Library

தெளிவுரை: யானையானது தனது இனமாக உள்ள மற்ற யானைகளின் இடி முழக்கம் போன்ற ஓசையைக் கேட்டு அவை நிலவும் மலர்ச் சோலசைகளைச் சாரும் பாங்குடையது கொடுங்குன்றம். அது. தந்தை என்றும், கடவுள் என்றும் கருதித் தொழுபவர்களுக்கு அருள் புரியும் பெருமான் மேவும் பெருமை மிக்க நகர் ஆகும்.

அழகின் மிக்க அன்பன் உள்கி – பக்தியோடு கருத்தில் பதித்தல்.

147. மரவத்தொடு மணமாதவி
மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில்
சூழ்தண் கொடுங்குன்றம்
அரவத்தொடும் இளவெண்பிறை
விரவும்மலர்க் கொன்றை
நிரவச் சடை முடிமேல் உடன்
வைத்தான்நெடு நகரே.

தெளிவுரை: மணம் தரும் வெண்கடம்பு, குருக்கத்தி, முல்லை மற்றும் அதனின் மிக்க குரவம் ஆகிய மலர் களையுடைய பொழில் சூழ்ந்தது குளிர்ச்சி மிக்க கொடுங்குன்றம். அது, பாம்பும், பிறைமதியும் கொன்றை மலரும் நிரவச் சடைமுடியில் சேர வைத்தவனாகிய ஈசனது நகராகும்.

சிறப்புரை: மலர்கள் நிறைந்த குளிர் சோலையைப் போன்று பாம்பும், பிறையும், கொன்றையும் சூடிய பரமன் குளிர்ச்சி பொருந்தியவனாய் அருள் வழங்கி ஆனந்தத் தேனைச் சொரிகின்றான் என உணர்த்திற்று. பொழில் தரும் மலர்வண்ணமும் ஈசன் சடைமுடி காட்டும் மலர் வண்ணமும் எண்ணி மகிழ்க.

மரவம் – வெண்கடம்பு. மாதவி – குருக்கத்தி. மௌவல் – முல்லை.

Koviloor Digital Library

148. முட்டாமுது கரியின்னின்
முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை அவைமண்டிநின்று
ஆடும்கொடுங் குன்றம்
ஒட்டாஅரக் கன்தன்முடி
ஒருபஃதுஅவை உடனே
பிட்டான்அவன் உமையாளொடு
மேவும்பெரு நகரே.

தெளிவுரை: *யாராலும் தடுத்து நிறுத்துவதற்கு அரிய யானைக் கூட்டங்கள் முற்றிய மூங்கில்களை முறித்து, இயல்பாகவே ஆழம் உடைய சுனை நீரில் நின்று ஆடி மகிழும் தன்மை கொண்டது, கொடுங்குன்றம். அது, அன்பில்லாத அரக்கனான இராவணனுடைய பத்துத் தலைகளையும் ஒடியுமாறு செய்தவனான பரமன் உமாதேவியோடு மேவி விளங்கும் பெருமையான நகர் ஆகும்.*

முட்டா – தடைப்படுத்த ஒண்ணாத. ஒட்டா – அன்பில் ஒட்டி நில்லாத. முடி ஒரு பஃது – முடி பத்து.

149. அறையும்மரி குரல்ஓசையை
அஞ்சி அடும்ஆனை
குறையும் மன மாகிம்முழை
வைகும்கொடுங் குன்றம்
மறையும்மவை உடையான்என
நெடியான்என இவர்கள்
இறையும்மறி வொண்ணாதவன்
மேயவ்வெழில் நகரே.

தெளிவுரை: *வீறுகொண்டு அறைந்து கொல்லும் இயல்புடைய சிங்கம், அதன் குரலைக் கேட்டு அஞ்சிப் போராடும் தன்மையுடைய யானை, ஆகிய இருவகை விலங்குகளும் தமது இயல்பிலிருந்து மாறுபட்டுக் –*

Koviloor Digital Library

கொல்லுதலும் அஞ்சுதலும் ஆகிய குணத்தை நீக்கித் தத்தம் இடத்தில் வாழும் நெறியை உடையது கொடுங் குன்றம். அது, ஓதப்பெறும் வேதத்தை உடைய வனாகிய பிரமனும், உலகத்தை அளப்பதற்காக நெடிய உருவம் கொண்ட திருமாலும் சிறிதளவும் அறிய வொண்ணாதவனாகிய சிவபெருமான் விளங்கும் எழில் மிக்க நகர் ஆகும்.

சிறப்புரை: ஈசனின் அருட்பொலிவு ஐந்தறிவுடைய விலங்கினங்களையும் ஆட்கொண்டு விளங்கியது என உணர்த்திற்று. ஆறு அறிவு கொண்ட மக்களையும் அவ்வருட் பேறு சார்ந்து நிற்பது எனல் உய்த்துணரத் தக்கது.

150. மத்தக்களிறு ஆளிவ்வர
அஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை
வைகும்கொடுங் குன்றம்
புத்தரொடு பொல்லாமனச்
சமணர்புறம் கூறப்
பத்தர்க்கு அருள் செய்தான்அவன்
மேயபழ நகரே.

தெளிவுரை: மதம் பொருந்திய யானையும் யாளியும் தமது இருப்பிடத்திலிருந்து வெளியே வருவதற்கு அச்சம் கொண்டு வாழும் தன்மையுடையது கொடுங் குன்றம். அது, பௌத்த சமண மதத்தினர் புறம்பாகக் கூறினும், தன்னை வணங்கும் பக்தர்களுக்கு வேண்டிய வாறு அருள்செய்த ஈசன் விளங்கும் பழமையான நகர் ஆகும்.

151. கூனல்பிறை சடைமேல்மிக
உடையான்கொடுங் குன்றைக்

Koviloor Digital Library

கானல்கழு மலமாநகர்
தலைவன்னல கவுணி
ஞானத்துஉயர் சம்பந்தன
நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துஉலகு
ஏத்தும்எழி லோரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வளைந்த பிறைச் சந்திரனைச் சடை மீது பெருமையாகத் தரித்துள்ளவனாகிய சிவ பெருமானுக்கு உரிமையானது கொடுங்குன்றம். அதனை ஞானசம்பந்தப்பெருமான் நலங்கொள் தமிழாகத் தந்தருள, இப்பதிகத்தைப் பாடிப் போற்று புவர்களின் குறைபாடுகள் யாவும் தீர்ந்து விலகும்; துன்பம் தீரும்; உலகத்தவர் பாராட்டும் சிறப்பையும் பெறுவார்கள்.

சிறப்புரை: "கழுமாமலர் தலைவன்," "நலகவுணி," "ஞானத்து உயர்" எனத் திருஞானசம்பந்தரின் மகிமை கூறப்பட்டது. "மன்னுயிர்களுக்கு நலத்தைக் கொள்ளச் செய்யும் பாமாலை" நலங் கொள்தமிழ் எனப் பெற்றது.

ஊனம் – குறைபாடு. துயர் – துன்பம். உலகேத்தும் – புகழ் நல்குதல் தேற்றப் பொருள் ஆயிற்று.

15. திருநெய்த்தானம்

தல விளக்கம்: சோழ நாட்டு – காவிரி வடகரைத் தலம். திருவையாற்றுக்கு அண்மையில் உள்ளது. திருவை யாற்றை மையமாகக் கொண்ட சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. தில்லைஸ்தானம் எனவும் வழங்கப் படுகிறது.

Koviloor Digital Library

சுவாமி : நெய்யாடியப்பர்

அம்பிகை : பாலாம்பிகை, இளமங்கையம்மை

தீர்த்தம் : காவிரி

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

152. மையாடிய கண்டன்மலை
மகள்பாகமது உடையான்
கையாடிய கேடில்கரி
உரிமூடிய ஒருவன்
செய்யாடிய குவளைம்மலர்
நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமான்இடம்
நெய்த்தானமெ னீரே.

தெளிவுரை: கரிய கண்டத்தை (கழுத்து) உடையவன், மலைமகளாகிய உமாதேவியைப் பாகமாக உடையவன்; தனது திருக்கரத்தால் யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட ஒப்பற்றவன்; நீர்வளம் மிக்க வயல்களில் திகழும் குவளை மலர் போன்ற விழியை உடைய தேவியோடு தானும் நெய்யால் அபிடேகம் கொள்பவன். அப் பெருமானுடைய இடமாவது நெய்த்தானம் ஆகும். அதனை உரைப்பீராக.

சிறப்புரை: தாருகவனத்து முனிவர்களால் ஏவப்பெற்ற யானையானது, சிவபெருமானுடைய திருக்கரத்தால் அடக்கப்பட்டுச் செம்மையுற்றதால் கேடில் கரியாயிற்று. திருத்தலத்தின் திருநாமமாக விளங்கும் நெய்த்தானம் என்று உரைக்குமாறு வழங்கிய ஆணை மந்திரச் சொல்லாகக் கொள்ளத்தக்கது. ஈசன் ஆன்

Koviloor Digital Library

மாக்களிடம் மிக நெருக்கமாக - நட்புடன் விளங்கு தலை "நெய்" எனும் சொல் குறித்தலும் ஆம்.

செப் – நீர்வளம் மிக்க வயல். கேடில் – அழிதல் இல்லாத. நெய் – சினேகம், நட்பு. நெய்யாடிய பெருமான் – சுவாமியின் திருநாமம்.

153. பறையும்பழி பாவம்படு
துயரம்பல தீரும்
பிறையும்புனல் அரவம்படு
சடைஎம்பெரு மான்ஊர்
அறையும்புனல் வருகாவிரி
அலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில்
நெய்த்தானமெ னீரே.

தெளிவுரை: தன்பால் உண்டான பழி நீங்கும்; பாவம் மற்றும் அதனால் நேரும் துன்பமும் தீரும். சடை முடியில் வெண்மையான பிறைச்சந்திரனும், கங்கையும், அரவும் (பாம்பும்) உடைய எமது பெருமானாகிய ஈசனது ஊரானது, காவிரியின் வடகரை மேல் நிறைந்த மாண்பினை உடைய மகளிர் விளங்கும் நெய்த்தானம் ஆகும். அதனை உரைப்பீராக.

சிறப்புரை: காவிரி வடகரைத்தலம் என்பது இத்திருப்பாட்டில் உணர்த்தியது காண்க.

நிறையும் புனைமடவார் – மகளிரின் நிறை மாண்பு கூறப்பட்டது.

154. பேயாயின பாடப்பெரு
நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு
பாகம்மிக உடையான்
தாயாகிய உலகங்களை
நிலைபேறுசெய் தலைவன்

Koviloor Digital Library

நேயாடிய பெருமான்இடம்
நெய்த்தானமெ னீரே.

தெளிவுரை: பேயானது பாடிட, மகாபிரளயக் காலத்தில் நடனமாடும் சிவபெருமான், மூங்கில் போன்ற மெல்லிய தோளையுடைய உமாதேவிக்குத் தானே ஒரு பாகம் ஆனவன். எல்லா உலகங்களையும் நிலைத்திருக்குமாறு செய்யும் தலைவனாகிய அப்பெருமானுடைய இடம் நெய்த்தானம் என்று உரைப்பீராக.

சிறப்புரை: உமாதேவிக்கு ஒரு பாகத்தில் உள்ளான் என உரைத்தது. தேவியின் பெருமையும் ஈசன் அன்பும் ஒன்றுக்கொன்று வேறுபாடு இல்லாதது என உணர்த்திற்று. மன்னுயிரைத் தாங்கும் உலகங்கள் தாய்மைக்கு உகந்ததாயிற்று.

வேய் – மூங்கில். நேயாடிய பெருமான் – சிவன்; நே – அன்பு, அருள்.

155. சுடுநீறணி அண்ணல்சுடல்
சூலம்மனல் ஏந்தி
நடுநள்ளிருள் நடமாடிய
நம்பன்னுறை இடமாம்
கடுவாள்இள அரவாடுஉமிழ்
கடல்நஞ் சம்அதுஉண்டான
நெடுவாளைகள் குதிகொள்ளு யர்
நெய்த்தானமெ னீரே.

தெளிவுரை: சுடுதலால் தோன்றும் திருநீற்றை அணியும் அண்ணல், ஒளி திகழும் சூலமும் நெருப்பும் திருக் கரத்தில் ஏந்தி நள்ளிருளில் நடமாடும் சிவபெருமான் ஆகும். அப்பெருமான் உறைகின்ற இடமாவது, அரவாகிய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு ஆட்டிக் கடையும்போது உமிழ்ந்த கொடிய

Koviloor Digital Library

நஞ்சினை உண்டு விளங்கும் நெய்த்தானம் ஆகும். அதனை உரைப்பீராக.

கடு – நீறுக்கு அடைமொழி. நள்ளிருளுக்கு நடு என்பதும், நஞ்சுக்குக் கடு (கொடிய) என்பதும் அடைமொழி ஆயிற்று. நஞ்சமது – அது, வேற்றுமை உருபு. நெருவாளைகள் குதிகொள் – நீர்வளத்தைக் காட்டியது. உயர் நெய்த்தானம் – நீர்வளத்தின் மேன்மையையும், நெய்த்தானத்தின் சிறப்பினையும் உயர் என்னும் தொடர்களும் சிறப்புடைத்து.

156. நுகர்ஆரமொடு ஏலம்மணி
செம்பொன்னுரை உந்திப்
பகராவரு புனல்காவிரி
பரவிப் பணிந்து ஏத்தும்
நிகரால் மணல் இடுதண்கரை
நிகழ்வாயநெயத் தான
நகரான்அடி யேத்தந்நமை
நடலையடை யாவே.

தெளிவுரை: நுகரும் மணம் மிக்க சந்தனம், ஏலம், மணிகள், பொன் ஆகியவற்றைப் பெருகும் நுரையால் உந்தி வரும் வெள்ளப் பெருக்கினை உடைய காவிரி யானது, பணிந்து போற்றும் தன்மையில் மணலைக் கரை மருங்கில் சேர்க்கின்றது. அத்தகைய பெருமை யுடைய நெய்த்தானத்திற்கு உரியவனாகிய ஈசன் திருவடியை வணங்கித் துதிக்கத் துன்பம் நம்மை அடையாது.

நுகர் ஆரம் – மணம் நுகரும் தன்மையைக் கொண்ட சந்தனம். நடலை – துன்பம்.

157. விடையார்கொடி உடையவ்வணல்
வீந்தார்வெளை எலும்பும்
உடையார்நறு மாலைசடை
உடையார்அவர் மேய

Koviloor Digital Library

புடையேபுனல் பாயும்வயல்
பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவர் என்றும்அமர்
உலகம்அடை யாரே.

தெளிவுரை: இடபக் கொடியை உடையவரும், எலும்பையும் கொன்றை மலரையும் மாலையாகக் கொண்டவரும் சடை முடியுடையவரும் ஆகிய ஈசன் விளங்கி நிற்கும் இடமாவது, பெருக்கெடுத்துப் பாயும் நீர்நிலைகளும் வயல்களும் சோலைகளும் சூழ்ந்த நெய்த்தானம் ஆகும். அதனை அடையாதவர்கள் எக்காலத்திலும் அமர்ந்து விளங்கும் உலகமாகிய வீட்டு உலகத்தை அடைய மாட்டார்கள்.

சிறப்புரை: நெய்த்தானம் முத்தித்தலம் என விளம்பிற்று. அமர் உலகம் – அமர்ந்து இருக்கும் (வீடு) உலகம்; முத்தி.

158. நிழல்ஆர்வயல் கமழ்சோலைகள்
நிறைகின்றநெய்த் தானத்
தழலானவன் அனல்அங்கையில்
ஏந்திஅழ காய
கழலான்அடி நாளும்கழ
லாதேவிடல் இன்றித்
தொழலார்அவர் நாளும்துயர்
இன்றித்தொழு வாரே.

தெளிவுரை: கண்களுக்குக் குளிர்ச்சியான ஒளியைத் தருமாறு ஓங்கி வளர்ந்த வயல்களும், மணங் கமழும் சோலைகளும் நிறைகின்ற நெய்த்தானம் என்னும் நகருக்குரிய சோதியாக இருப்பவனான சிவபெருமான் அழகிய திருக்கரத்தில் நெருப்பினை ஏந்தியவன். அப் பெருமானின் அழகிய திருவடியை நாள்தோறும் முறையாகத் தொழும் இயல்பினை உடையவர்கள்

Koviloor Digital Library

எந்நாளும் துயரின்றி மகிழ்ச்சியுடன் திகழ்வார்கள். அத்தகைய பெருமை மிக்க அடியவர்கள் ஏனையோராலும் தொழப்படும் சிறப்பு உடையவராவர்.

சிறப்புரை: அடியவர்மாட்டு இனிமையைத் தோற்றுவித்து - அகத்தின் அழகைப் பெருக்கி அருள் தரும் சிறப்புடையது சிவனடி என்பதனை, அழகாய கழலான் என்பது உணர்த்திற்று. இத் திருப்பாட்டு அடியார் வழிபாட்டின் பெருமையை உணர்த்திற்று.

நிழல் – ஒளி; தழல் – சோதி.

159. அறையார்கடல் இலங்கைக்கு இறை
அணிசேர்கயி லாயம்
இறையாரமுன் எடுத்தான்இரு
பதுதோள்இற ஊன்றி
நிறைஆர்புனல் நெய்த்தானனன்
நிகழ்சேவடி பரவக்
கறைஆர்கதிர் வாள்ஈந்தவர்
கழல்ஏத்துதல் கதியே.

தெளிவுரை: ஒலிக்கும் கடல் சூழ்ந்த இலங்கையின் வேந்தனான இராவணன், பெருமை மிக்க கயிலை மலையைத் தனது உடல் பலத்தின் காரணமாகக் கையார முன்னர் எடுத்தான். அவனது இருபது தோள்களும் நலியுமாறு தன் திருப்பாத விரலால் ஊன்றினான், நிறைவான நீர் வளம் கொண்ட நெய்த் தானத்தில் விளங்கும் சிவபெருமான். தமது செம்மையான திருவடியைப் போற்றி வணங்கிய அவ் அரக்கனுக்கு சந்திரகாசம் என்னும் வாளை ஈந்து அருள் புரிந்தவர் அப்பெருமான். அவர்தம் திருவடி மலரை ஏத்துதல் நல்ல கதியாகும்.

Koviloor Digital Library

சிறப்புரை: *திண்மையும் மாண்பும் தரும் சிறப்புடைய புனல் என்பதனை, நிறை ஆர்புனல் என்பது உணர்த்திற்று. இது தீர்த்தத்தின் மகிமையைக் குறிப்பதாம். இறைவனுடைய திருவடி ஆன்மாக்களை நன்னெறிப் படுத்தும் செம்மை புரிந்து நிகழ்த்துதலால் நிகழ் சேவடி எனப் போற்றுவதாயிற்று. கறைஆர் கதிர்வாள் என்பது சந்திரகாசம் என்னும் வாளைக் குறிப்பதாயிற்று.*

தாரணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்

என வரும் கம்பராமாயணப் பாடல் வரிகள் காண்க. ஆன்மாக்களுக்கு அண்மையுடன் பெருமையும் சேர்க்க வல்லது, 'அணிசேர் கயிலாயம்' ஆயிற்று. திருக்கயிலை சிவபெருமானின் வடிவமாகக் கொள்ளுதலும் உணரத் தக்கது.

அறை – ஒலி. அணி – வேடம் (வடிவம்), அண்மை, பெருமை. இறையார – கையார. நிறை ஆர் புனல் – மாண்பு திகழும் நீர். கறை ஆர் கதிர் – சந்திரன்.

160. கோலம்முடி நெடுமாலொடு
கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாய்ஒளி
திகழ்வாயநெய்த் தானம்
காலம்பெற மலர்நீர்அவை
தூவித்தொழுது ஏத்தும்
ஞாலம்புகழ் அடியார்உடல்
உறுநோய்நலி யாவே.

தெளிவுரை: *பன்றி வடிவத்தைத் தாங்கிய திருமாலும், தாமரை மலர்மீது உறையும் பிரமனும், சிவபெருமானுடைய பெருமையை அறிதற்கு அரியதாகிய பேரொளியாகித் திகழும் பெருமான் விளங்குவது*

Koviloor Digital Library

நெய்த்தானம். விடியற்காலையில் மலரால் தூவி அருச்சனை செய்து தொழுது போற்றும் அடியவர்கள் உலகத்தாரால் போற்றப்படுவார்கள். அவர்களுக்கு உடற்பிணி இல்லை.

சிறப்புரை: பூவார் மலர் கொண்டு அடியார்கள் தொழு தலையும் அதன் பயனையும் உணர்த்துவதாயிற்று. இது சரீரத்தால் செய்யப்படும் வழிபாடு (சரியை) காட்டியது. வழிபாட்டின் பயன் பிணி தீர்தல் எனப் புகல்வதாயிற்று. இது இறைவனுக்கு உடலாக விளங்கவல்ல ஆன்மாவுக்கும் பொருந்தும்.

கோலம் – பன்றி.

161. மத்தம்மலி சித்தத்துஇறை
மதிஇல்லவர் சமணர்
புத்தர்அவர் சொன்னம்மொழி
பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை
நெய்த்தானம்அது ஏத்தும்
சித்தம்உடை அடியார்உடல்
செறுநோய் அடை யாவே.

தெளிவுரை: தெய்வ சித்தத்தைத் துறந்த சமணர் மற்றும் பௌத்தர்தம் சொற்களைப் பொருட்படுத்தாமல் நெய்தானத்தில் வீற்றிருக்கும் பெருமானைப் போற்றி வணங்கும் தன்மையுடையவர்கள் உடற்பிணி அடைய மாட்டார்கள்.

சிறப்புரை: சித்தம் உடை அடியவர்கள் செயல் பாட்டை உடையவர்கள் என்பதும் கொள்க.

162. தலமல்கிய புனல்காழியுள்
தமிழ்ஞானசம் பந்தன்

Koviloor Digital Library

நிலமல்கிய புகழால்மிகு
நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை
பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி
சேர்வர்சிவ கதியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருத்தலச் சிறப்பு மிக்கவர், சீகாழியின் தமிழ் ஞானசம்பந்தர். நிலவுலகின் புகழால் மிகுந்த நெய்த்தானத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை, நிகரில்லாத பல சிறப்புகளை உடைய பாடலாகிய அவர்தம் இத்திருப்பதிகத்தினை ஓதுபவர்கள் சிவனடியைப் பொருந்தி விளங்குவார்கள்.

சிறப்புரை: ஈசன் மிக நுண்ணிய (சில் பொருள்) பொருளிலும் நிறைந்து காணப்படுதலும், அது, விளங்கும் செல்வமாதலும், அவனுடைய அடி சேர்தல் சிவகதி எனவும் உணர்த்தப் பெற்றது.

16. திருப்புள்ளமங்கை

தல விளக்கம்: சோழ நாடு – காவிரி தென்கரைத் தலம். தற்போது பசுபதி கோயில் என்று வழங்கப்படுகிறது. திருக்கோயிலின் பெயர், ஆலந்துறை என்பது. தேவர்கள் அமுதத்தைக் கடைந்த போது வெளிப்பட்ட நஞ்சினை இறைவன் அமுது செய்த இடம். பிரமன் பூசித்த திருத்தலம்.

சுவாமி : ஆலந்துறைநாதர், பசுபதீஸ்வரர்

அம்பிகை : அல்லியங்கோதை

தல மரம் : ஆலமரம்

Koviloor Digital Library

தீர்த்தம் : *காவிரி*

பண் : *நட்டபாடை*

திருச்சிற்றம்பலம்

163. பால்உந்துறு திரள்ஆயின
பரமன்பிர மன்தான்
போலும்திறல் அவர்வாழ்தரு
பொழில்சூழ்புள மங்கைக்
காலன்திறல் அறச்சாடிய
கடவுள்ளிடம் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
அடையாவினை தானே.

தெளிவுரை: *பாலின் திரட்சியைப் போன்று இனிமை யானவன் பரமன். அவன் காலனுடைய வலிமையை இழக்கச் செய்தவன். அவனுடைய இடமாவது, பிரமனைப் போன்ற வேதத்தினை நாளும் ஓதும் சிறப்பினை உடைய அந்தணர்கள் வாழும் திருப்புள்ள மங்கை என்னும் பதியில் விளங்கும் ஆலந்துறை யாகும். அதனைத் தொழுபவர்களை வினை அடையாது.*

சிறப்புரை: *பாலுந்துறுதிரள் என்பது ஞானத்தின் திரட்சியை உணர்த்துவதாயிற்று. ஈசன் ஆலத்தை அமுது செய்த திருத்தலத்தின் மகிமை தோன்ற காலன் திறல் அற்றதை உணர்த்தும். மார்க்கண்டேயரைக் காலன் பிடியிலிருந்து காக்கத் தம் திருப்பாதத்தால் உதைத்து அருள் புரிந்தமையும் சாற்றும்.*

அடையாவினை தானே – வினை அடையாது. தானே என்பது தேற்றப் பொருளாய் வந்தது.

Koviloor Digital Library

164. மலையான்மகள் கணவன்மலி
கடல்சூழ்தரு தன்மைப்
புலையாயின களைவான்இடம்
பொழில்சூழ்புள மங்கைக்
கலையால்மலி மறையோர்அவர்
கருதித்தொழுது ஏத்த
அலைஆர்புனல் வருகாவிரி
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: கடல் சூழ்தலால் விளையும் புலை மீசர் மணமானது மேலெழாதவாறு நறுமணத்தை நல்கும் பொழில் சூழ்ந்த திருப்புள்ளமங்கை என்னும் ஊரில், கல்வியிலும் ஒழுக்கத்திலும் மிக்க மறையவர்கள் மனதாரத் தொழுது ஏத்திட, காவிரியாறு அலைகளை யுடைய தீர்த்தத்தைத் தருமாறு திகழும் ஆலந்துறை உள்ளது. அங்கு கோயில் கொண்டு இருப்பவன் மலை மகள் தலைவன் ஆவன்.

165. கறைஆர்மிடறு உடையான்கமழ்
கொன்றைச்சடை முடிமேல்
பொறைஆர்தரு கங்கைப்புனல்
உடையான்புள மங்கைச்
சிறைஆர்தரு களிவண்டுஅறை
பொழில்சூழ்திரு ஆலந்
துறைஆனவன் நறைஆர்கழல்
தொழுமின்துதி செய்தே.

தெளிவுரை: விடத்தை உண்ட கறை தோய்ந்த மிடறு உடையவன், வாசனை பொருந்திய கொன்றை மலரைச் சடை முடிமேல் தரித்துக் கங்கையை உடையவன். அவன் திருப்புள்ளமங்கையில் வண்டுகள் சூழும் பொழிலை உடைய திரு ஆலந்துறையில்

Koviloor Digital Library

விரும்பி இருப்பவன். அப்பெருமானுடைய மணம் மிகுந்த மலர்ப்பதத்தைத் துதி செய்து வணங்குமின்.

சிறப்புரை: "இனித்தம் உடைய எடுத்த பொற்பாதம்" என்னும் திருநாவுக்கரசரின் வாக்கிற்கேற்ப "நறை ஆர்கழல்" என உணர்த்துதல் காண்க.

நறை – மணம், தேன்.

166. **தணிஆர்மதி அரவின்னொடு**
வைத்தான்இட மொய்த்தெம்
பணியாய்அவன் அடியார்தொழுது
ஏத்தும்புள மங்கை
மணிஆர்தரு கனகம்மவை
வயிரத்திர ளோடும்
அணிஆர்மணல் அணைகாவிரி
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: குளிர்ச்சியான சந்திரன் பாம்புடன் சேர்ந்து இருக்குமாறு, தன் முடியில் வைத்திருப்பவனுடைய இடமாவது, அடியவர்கள் எல்லாம் மொய்த்து இருக்குமாறு கூடித்தொழுது ஏத்தும் திருப்புள்ளமங்கை. அவன் வீற்றிருக்கும் திருத்தலம், மாணிக்கம், பொன், வயிரம் யாவும் மணலொடு கொண்டு வரும் காவிரியின் இயல்பு கொள் ஆலந்துறை ஆகும்.

சிறப்புரை: அடியார்கள் புடைசூழ ஈசனைத் தொழுது போற்றும் சிறப்பு "எம் பணியாய்" என உணர்த்திற்று. காவிரியின் செல்வ வளம் அணி ஆர் மணல் எனக் குறித்ததாம். தொழுது ஏத்தும் அடியவரும் காவிரி யாறும் இணைத்துக் கூறப்படும் சால்பால் அடியார் சிறப்பு போற்றப்படுகிறது.

Koviloor Digital Library

167. மெய்த்தன்னுறும் வினைதீர்வகை
தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்துஆர்அகில்
கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை ஆந்தைபல
பாடும்புள மங்கை
அத்தன்நமை ஆள்வான்இடம்
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: வினைப் பயனால் இப் பிறவி வாய்க்கப் பெற்றதையொட்டி அவ் வினை தீரும் வகையாக வேண்டும். ஈசனை வணங்கித் தொழுவதற்கு ஏற்ற வகையில் காவிரியானது மலர்களையும் சந்தனத்தையும் கொண்டு வருகின்றது. அக்காவிரியின் கரையில் சார்ந்த மரப் பொந்துகளில் வாழும் ஆந்தைகள் பாடும் திருப்புள்ளமங்கையில் வீற்றிருக்கும் அத்தன் நம்மை ஆள்பவன். அவனுடைய திருக்கோயில் ஆலந்துறை.

சிறப்புரை: ஆந்தை பல பாடும் என்றது, எல்லா உயிர்களும் ஈசனைத் தொழுதல் உயிர்க்கு இன்றியமையாதது என உணர்த்திற்று.

பொத்து – பொந்து.

168. மன்ஆனவன் உலகிற்குஒரு
மழையானவன் பிழைஇல்
பொன்ஆனவன் முதல்ஆனவன்
பொழில்சூழ்புள மங்கை
என்ஆனவன் இசைஆனவன்
இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும்மிடம்
ஆலந்துறை அதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: உலகில் உள்ள பொருட்களில் பதிந்து ஒளிர்பவன்; மழையானவன்; குற்றமற்ற பொன் போன்று பிரகாசிப்பவன்; யாவற்றுக்கும் முதற்பொருளானவன்; பொழில் சூழ்ந்த திருப்புள்ள மங்கையில் எனக்கு ஆனவன்; பாடும் இசையானவன்; இளஞாயிறு போன்ற செம்மையான சோதி வடிவானவன். அவன் வீற்றிருக்கும் இடம் ஆலந்துரை ஆகும்.

சிறப்புரை: என் ஆனவன் என்பது என் உயிர் போன்ற வன் எனலும் ஆம். ஆன் - பசு (உயிரைக் குறிப்பது) எனக்கு மிகவும் வேண்டியவன் என்று உணர்த்துவதும் ஆகும்.

169. முடிஆர்தரு சடைமேல்முளை
இளவெண்மதி சூடிப்
பொடிஆடிய திருமேனியர்
பொழில்சூழ்புள மங்கைக்
கடிஆர்மலர் புனல்கொண்டுதன்
கழலே தொழுது ஏத்தும்
அடியார்தமக்கு இனியான்இடம்
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: திருமுடியில் விளங்கும் சடையில் இளமை யான சந்திரனைச் சூடி, திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி, பொழில்கள் சூழ்ந்த திருப்புள்ள மங்கையில் நீரும் மலரும் கொண்டு பூசித்து வணங்கு பவர்களுக்கு இனியவனாக இருப்பவன் ஈசன். அவன் வீற்றிருக்கும் இடம் ஆலந்துறை ஆகும்.

170. இலங்கைமனன் முடிதோள்இற
எழில்ஆர்திரு விரலால்

Koviloor Digital Library

விலங்கல்லிடை அடர்த்தான்இடம்
வேதம்பயின்று ஏத்திப்
புலன்கள்தமை வென்றார்புகழ்
அவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையான்இடம்
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: இலங்கை மன்னன் தலைமுடியும் தோளும் நலியுமாறு அழகிய தனது திருப்பாத விரலால் மலைக்குக் கீழே துன்பம் கொள்ளத் தண்டித்தவன் இடமாவது, வேதம் நன்கு பயின்று, அதனை ஓதி, புலன்கள் ஐந்தினையும் வெற்றி கொண்டு ஆளும் தன்மையுடையவர்களாய், புகழ் கொள்ளும் பெருமக்கள் வாழும் திருப்புள்ளமங்கை ஆகும். அதில், கொன்றை மாலை அணிந்த சடையை உடையவனாகிய அவ் ஈசன் வீற்றிருப்பது ஆலந்துறை.

இலங்கை மனன் – இலங்கை மன்னன். விலங்கல் – மலை – கயிலையைக் குறித்தது. அலங்கல் – மாலை.

171. செறிஆர்தரு வெள்ளைத்திரு
நீற்றின்திரு முண்டப்
பொறிஆர்தரு புரிநூல்வரை
மார்பன்புள மங்கை
வெறிஆர்தரு கமலத்துஅயன்
மாலும்தனை நாடி
அறியாவகை நின்றான்இடம்
ஆலந்துறை அதுவே.

தெளிவுரை: நெருங்கி மேவி தூய்மை தரும் திருவெண்ணீற்றைத் திருநுதலில் தரித்து, முப்புரி நூல் மார்பில் திகழ விளங்குபவன் சிவபெருமான். அவன் தாமரை மலரின் மீது அமர்ந்துள்ள பிரமனும்,

Koviloor Digital Library

திருமாலும் நாடிச் சென்றும் அறியாவகையில் திருப்புள்ளமங்கையில் நின்றான். அவன் இருப்பது ஆலந்துறை ஆகும்.

சிறப்புரை: பொருந்திக் கலந்து தூய்மை நல்கும் பெற்றியை உடைய திருநீற்றுக்கு, "செறி ஆர்தரு" என்பது அடை மொழியாக நின்று அதன் சிறப்பை உணர்த்திற்று.

செறி – பொருந்துதல், கலத்தல்.

172. நீதிஅறி யாதார்அமண்
கையரொடு மண்டைப்
போதியவர் ஓதும்முரை
கொள்ளார்புள மங்கை
ஆதிஅவர் கோயில்திரு
ஆலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு
தன்மைபெறல் ஆமே.

தெளிவுரை: முறைமை அறியாத சமணர் மற்றும், பௌத்தர்கள் கூறும் உரைகளைக் கொள்ளதவர்கள் வாழ்கின்ற திருப்புள்ளமங்கையில், மூலப்பொருளாக் உடையவனுடைய கோயில் ஆலந்துறை ஆகும். ஆங்கு சென்று வணங்குபவர்கள் முப்பத்து முக்கோடி தேவர் களும் மற்றும் அவ்வினத்தைச் சார்ந்த கின்னரர் முதலானோரும் ஏத்திடும் சிறப்பைப் பெறுவார்கள்.

173. பொந்தின்னிடைத் தேனூறிய
பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி
ஆலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுள்
கலைஞானசம் பந்தன்

Koviloor Digital Library

சந்தம்மலி பாடல்சொலி
ஆடத்தவம் ஆமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பொழில்கள் சூழ்ந்த நிலையில் மரப் பொந்துகளில் தேன் ஊறும் வளம் மிக்கது திருப்புள்ள மங்கை. ஆங்கு, குளிர்ந்த நீர் வரும் காவிரி சூழ்ந்த இடம் ஆலந்துறை. அங்கு வீற்றிருக்கும் சிவ பெருமானை, மணம் கமழும் சீகாழியில் மேவும் ஞானசம்பந்தப்பெருமான் இசைத்த சந்தம் பெருகும் இத்திருப்பதிகத்தைப்பாடி, அதன் வழி மனம் இலயித்துத் தன்னை மறந்து பக்திப் பரவசத்தால் ஆடும் நிலையுடையவர்கள், தவம் செய்து அதனால் பெறுகின்ற பயனை உடையவர்கள் ஆவர்.

17. திருஇடும்பாவனம்

தல விளக்கம்: சோழ நாட்டு, காவிரி தென்கரைத் தலம். இடும்பன் பூசித்துப் பேறு பெற்ற திருத்தலம். இடும்பனின் உடன் பிறந்தவளான இடும்பை என்பவளைப் பாண்டவருள் வீமன் மணம் செய்து கொண்டான். அதன் வழி இடும்பாவனம் என்னும் பெயர் பெற்றது என்பர். இது பிதிர் முத்தித்தலம்.

சுவாமி : சற்குண நாதர், இடும்பானேஸ்வரர்

அம்பிகை : மங்கள நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சமுக புஷ்கரணி, பிரம தீர்த்தம்.

பண் : நட்டபாடை

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

174. மனம்ஆர்தரு மடவாரொடு
மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனம்ஆர்தரு சங்கக்கடல்
வங்கத்திரள் உந்திச்
சினம்ஆர்தரு திறள்வாள்எயிற்று
அரக்கன்மிகு குன்றில்
இனமாதவர் இறைவர்க்குஇடம்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: *மனத்திற்கு இசைந்த மகளிரொடு மகிழும் இளைஞர்கள் மலர் தூவி இருக்க, அரக்கனுடைய குன்றளூரில் செல்வப் பெருக்கை நிலை நாட்டும் தனங்கள் பெருக, யோகிகளாகிய தவசிகள் இறைவனை ஏத்துகின்றனர். அந்த இடம் இடும்பாவனம் ஆகும்.*

175. மலைஆர்தரு மடவாள்ஒரு
பாகம்மகிழ்வு எய்தி
நிலைஆர்தரு நிமலன்வலி
நிலவும்புகழ் ஒளிசேர்
கலைஆர்தரு புலவோர்அவர்
காவல்மிகு குன்றில்
இலைஆர்தரு பொழில்சூழ்தரும்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: *மலைமகளாகிய உமாதேவியை ஒரு பாகமாக் வைத்து மகிழ்வெய்திய ஈசன், ஒளிமிகுந்த குன்றளூரில், அடர்த்தியான பொழில்கள் சூழ்ந்த தேவர்கள் தொழுது ஏத்துவது, விளங்கும் இடும்பாவனம் ஆகும்.*

புலவோர் – அறிஞர், தேவர்.

Koviloor Digital Library

176. சீலம்மிகு சித்தத்தவர்
சிந்தித்து எழும்எந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரும்
உலகத்தவர் நலம்ஆர்
கோலம்மிகு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
ஏலம்கமழ் பொழில்சூழ்தரும்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: நல்லொழுக்கம், எளிமை, தூய்மை, தவம் முதலான நற்பண்புகள் செழிப்பாகக் கொண்ட, சீலம் மிகுந்த சிந்தனை யுடையவர்களின் மனத்தில் எழும் எந்தையாகிய ஈசன், உலகத்தவர் நலம் பெறுவதற்காக, அழகிய மகளிர் வாழும் குன்றளூரில் வாசனை பொருந்திய மலர்கள் சூழும் இடும்பாவனத்தில் கோயில் கொண்டுள்ளவன்.

சிறப்புரை: சீலம் மிக்க தவ வேந்தர்களின் எண்ணத் திலும், வாக்கிலும், செயலிலும் தோன்றும் ஈசன் குண விசேடமானது, "எழும் எந்தை" என உணர்த்திற்று. மகளிர்தம் கற்பின் சிறப்பு நலமார் கோலம் எனப் போற்றப்பட்டது.

கோலம் – அழகு.

177. பொழில்ஆர்தரு குலைவாழைகள்
எழில்ஆர்திகழ் போழ்தில்
தொழிலால்மிகு தொண்டர்அவர்
தொழுதுஆடிய முன்றில்
குழல்ஆர்தரு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
எழில்ஆர்தரும் இறைவர்க்கு இடம்
இடும்பாவனம் இதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: பொழில்கள் நிறைந்த அந்தக் குன்றில் வாழை மரங்கள் குலைகள் ஈன்று அழகையும் வளத்தையும் தருவனவாகும். இறைபக்தி மேலீட்டால் பணி செய்யும் திருத்தொண்டர்கள் தொழுது ஆடி மகிழவும், மலர் சூடிய கூந்தலை உடைய மகளிர் மிகுந்து உடன் பணி ஆற்றும் எழில் மிக்கது, இடும்பாவனம். இதுவே இறைவனுக்கு உரிய இடமாயிற்று.

178. பந்தார்விரல் உமையாள்ஒரு
பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய
செழுநீர்வயல் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ்
குரவம்கமழ் குன்றில்
எந்தாய்என இருந்தான்இடம்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: பந்தணையும் விரலி என்னும் திருநாமம் கொண்ட உமாதேவியை ஒரு பாகத்திலும், கங்கையைத் திருமுடியிலும் உடையவன் ஈசன். அவன், செந்தாமரை மலர்கள் விளங்கும் நீர்நிறைந்த வயல்களும் புன்னையும் குரவமும் கமழும் குன்றளூரில் இடும்பாவனம் திகழ எம் தந்தையாக வீற்றுள்ளான்.

179. நெறிதீர்மையர் நீள்வானவர்
நினையும் நினைவாகி
அறிநீர்மையில் எய்தும்அவர்க்கு
அறியும் அறிவு அருளிக்
குறிநீர்மையர் குணம் ஆர்தரு
மணம்ஆர்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரும்
இடும்பாவனம் இதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஒழுக்க நெறியின்கண் நின்று மேவும் இனிமை மிக்கவர்களும், உயர்ந்தவர்களாகிய வானவர் களும் நினைந்து போற்றும் நிலையில் நெஞ்சிற் பதியும் பொருளாகி, மெய்ஞ்ஞான நிலையால் அறிபவர் களுக்கு ஏற்ப உயர்ந்த ஞானத்தை அளித்து, அத்தகை யவர்களுக்கு மெய்ஞ்ஞானப் பொருளாகி, உருவத் தோற்றத்தில் மகிழ்ந்து அந்த நெறியில் அதற்கே உரிய குண விசேடத்தோடு மணம் பரப்பும் குன்றளூரில் நீர் பாயும் வயல்கள் நெருங்கிச் சூழ்ந்த இடும்பாவனத் தில் ஈசன் விளங்குகின்றான்.

சிறப்புரை: அருவம், உருவம், அருஉருவம் ஆகிய மூன்று நிலைகளிலும் மேவும் ஈசன், அத்தகைய நெறி திகழும் பெருமக்களுக்கு அவரவர்தம் பாங்கில் நின்று அருள் வழங்குதலை உணர்த்திற்று. விளம்புமா விளம்பே, கருதுமா கருதே, பணியுமா பணியே, உரைக்குமாறு உரையே என்னுமாறு நினையும் நினைவு ஆகி, அறியும் அறிவு அருளி என்பது உணர்த்திற்று. இது, அவனருளாலே அவன் தாள் வணங்கும் பேறு பெறுதலை நுதலிற்று.

குறி நீர்மையர் – சிவனடி சேர்தலைக் குறியாக உடைய தன்மையர்.

180. நீறுஏறிய திருமேனியர்
நிலவும்முல கெல்லாம்
பாறுஏறிய படுவெண்தலை
கையில்பலி வாங்காக்
கூறுஏறிய மடவாள்ஒரு
பாகம்மகிழ் வெய்தி
ஏறுஏறிய இறைவர்க்குஇடம்
இடும்பாவனம் இதுவே.

Koviloor Digital Library

தெளிவுரை: திருவெண்ணீறு பதியுமாறு மிக்கப் பூசிய திருமேனி உடையவர், கையில் கபாலம் ஏந்திப் பிச்சை கொண்டவர், உமாதேவியை ஒரு பாகமாக உடையவர், இடபத்தின் மீது ஏறியவர்; இத்தகைய தன்மையுடைய இறைவனுக்கு இடமாக உடையது இடும்பாவனம்.

சிறப்புரை: இடப்பாகத்தில் உமாதேவியைக் கொண்டு மகிழ் வெய்தியமையும், வெண்தலை யோட்டினைத் திருக்கரத்தில் ஏந்தி பிச்சையேற்று காட்சி நல்கியமையும், ஈசன், உடனாய் இருத்தலும் வேறாய் விளங்குதலும் ஆக எத்தன்மையிலும் இருக்க வல்லான் என உணத்தலாயிற்று. மகிழ் வெய்துதல், ஆன்மாக்களுக்கு உரித்தானதே அன்றி இறைவன் நிர்க் குணம் எனல் ஆம்.

பாறு ஏறிய படு வெண்தலை – திருவோட்டின் சிறப்பு கூறப்பட்டது. பாறு – பருந்து. தலை – பிரமன் சிரம்.

181. தேர்ஆர்தரு திகழ்வாள் எயிற்று
அரக்கன்சிவ மலையை
ஓராதுஎடுத்து ஆர்த்தான்முடி
ஒருபஃதுஅவை நெரித்துக்
கூர்ஆர்தரு கொலைவாளொடு
குணநாமமும் கொடுத்த
ஏர்ஆர்தரும் இறைவர்க்குஇடம்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: வானத்தில் தேர்மீது இவர்ந்து வந்த ஒளி போன்ற பற்களை உடைய அரக்கன், ஆராய்ந்து பார்க்காமல் கயிலை மலையைப் பெயர்த்து ஆரவாரம் செய்தான். அஞ்ஞான்று அவனது பத்துத் தலைகளையும் நெரியுமாறு செய்த இறைவன், பின்னர்

Koviloor Digital Library

அவ்வரக்கனின் இசையால் மகிழ்ந்து தெய்வத்தன்மை பொருந்திய வாட்படையும் இராவணன் என்னும் பெயரையும் நல்கினான். சிறப்புப் பொருந்திய அவ் ஈசன் விளங்கும் இடம் இடும்பாவனம்.

182. பொருள்ஆர்தரு மறையோர்புகழ்
விருத்தர்பொலி மலிசீர்த்
தெருள் ஆர்தரு சிந்தையொடு
சந்தம்மலர் பலதூ
மருளார்தரு மாயன்னயன்
காணார்மயல் எய்த
இருளார்தரு கண்டர்க்குஇடம்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: உண்மைப் பொருள் விளக்கும் மறையை ஓதுபவர்களும், புகழ் மிக்க முதுபெரும் மாந்தர்களும் பொலிய, நன்றாகத் தெளிந்த சிந்தையால் மணம் பொருந்திய மலர்களால் ஈசனைப் பூசிக்கின்றனர். மருள் உற்ற திருமாலும், நான்முகனும் மயங்கிய தன்மையால் இறைவனைக் காண முடியாதவாறு ஆயினர். அத்தகைய ஈசன் கரிய கண்டத்தை உடையவன். அவனுக்கு இடமாக விளங்குவது இடும்பாவனம் ஆகும்.

சிறப்புரை: மருளின் வயத்தால் இறைவனை அறிய ஒண்ணாமையும் தெளிந்த சிந்தையர் பொலிவு அடைதலையும் அதற்கு உபாயமாக மலர்தூவி ஈசனை அருச்சித்தலும் உணர்த்துவதாயிற்று.

இருள் ஆர்தருகண்டம் – கரியகண்டம், நீலகண்டம்.

183. தடுக்கைஉடன் இடுக்கித்தலை
பறித்துச் சமண் நடப்பார்

Koviloor Digital Library

உடுக்கைபல துவர்க் கூறைகள்
உடம்புஇட்டுஉழல் வாரும்
மடுக்கண் மலர் வயல்சேர்செந்நெல்
மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவான்இடம்
இடும்பாவனம் இதுவே.

தெளிவுரை: தலை முடியைக் களைந்தும் காவியுடை கொண்டும் இருக்கும் சமணர்களும் பௌத்த மதத்தினரும் இடுக்கண் நீங்குமாறு **செய்பவ**னாகிய ஈசன் இடம், மலர்களும் நெல் வயல்களும் நீர்நிலைகளும் மலிந்த இடும்பாவனம் ஆகும்.

184. கொடிஆர்நெடு மாடக்குன்ற
ளூரிற் கரைக்கோல
இடிஆர்கடல் அடிவீழ்தரும்
இடும்பாவனத்து இறையை
அடிஆயும்அந் தணர்காழியுள்
அணிஞானசம் பந்தன்
படியால்சொன்ன பாடல்சொலப்
பறையும்வினை தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அலங்காரத் தோரணங்களையுடைய நெடிய மாடமாளிகைகள் கொண்ட குன்றளூரில் எழுந்தருளியுள்ள இடும்பாவனத்து இறைவனை ஞான சம்பந்தப் பெருமான் அவ் அவர்க்குப் பொருந்தியபடி சொன்ன இத் திருப்பதிகத்தை ஓதிட வினை அழியும்.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தை ஓத, வினையானது தானாகவே அழியும் என்பது காண்க.

பறையும் – அழியும்.

Koviloor Digital Library

குறிப்பு: குன்றளூர் என்பது இடும்பனது தலை நகரம். அது குன்றில் எனவும் குறிப்பிடப்படுகிறது. இந் நகருக்கு அண்மையில் உள்ள தலம் இடும்பாவனம். இங்கு எழுந்தருளியுள்ள பெருமானை இடும்பன் பூசித்துப் பேறு பெற்றான்.

18. திருநின்றியூர்

தல விளக்கம்: சோழ நாட்டு வடகரைத் தலம். திருமகள் வழிபட்டது. திருக்கோயில் எழுப்புவதற் காகப் பூமியைத் தோண்டும்போது சிவலிங்கம் வெளிப் பட்டது எனப் புராண வரலாறு சாற்றும்.

சுவாமி : லட்சுமி புரீஸ்வரர்

அம்பிகை : உலக நாயகி

தல மரம் : விளா மரம்

தீர்த்தம் : மகாலட்சுமி தீர்த்தம்

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

185. சூலம்படை சுண்ணப்பொடி
சாந்தம்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை
முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு
போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி
யூரின்நிலை யோர்க்கே.

தெளிவுரை: திருநின்றியூரில் நிலைபெற்றுள்ள ஈசனுக்குச் சூலம் படையாகவும், திருவெண்ணீறு சாற்றும் பொடியாகவும் உள்ளது; பவளம் போன்ற

Koviloor Digital Library

சிவந்த சடை முடியில் பால்போன்ற வெண்மையான சந்திரன் அழகுடன் விளங்குகின்றது; மார்க்கண்டேயன் உயிரைக் கவர வந்த காலனுடைய வலிமையைத் தனது திருப்பாதத்தால் போக்கிய பெருமையால், என்றும் குளுமை நிலைத்து விளங்குவ தாகிறது.

186. அச்சம்மிலர் பாவம்மிலர்
கேடும்மிலர் அடியார்
நிச்சம்முறு நோயும்மிலர்
தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிடறு உடையார்நறுங்
கொன்றைநயந்து ஆளும்
பச்சம்முடை அடிகள்திருப்
பாதம்பணி வாரே.

தெளிவுரை: திருநின்றியூரில் எழுந்தருளியுள்ள ஈசனைப் பணியும் அடியவர்களுக்கு அச்சம் ஏற்படுவதில்லை; பாவ காரியங்களைச் செய்ய மாட்டார்கள்; கால் பேதத்தாலும் மற்றும் காரிய பேதத்தாலும் அவ்வப் போது உடலுக்கு ஏற்படும் நோயும் இல்லை. அப்பெருமான், நஞ்சு அருந்திய கண்டத்தை உடைய வராய் நறுமணம் கமழும் கொன்றை மலரைச் சூடி யவர். அவர் அன்பு உடையவர்.

பச்சம் – அன்பு. மிலர், முறு, முடை என்பன சந்தம் நோக்கி மிகுந்தது.

187. பறையின்னொலி சங்கின்னொலி
பாங்காரவும் ஆர
அறையும் மொலி எங்கும்மவை
அறிவார்அவர் தன்மை
நிறையும்புனல் சடைமேல்உடை
அடிகள்நின்றி யூரில்

Koviloor Digital Library

உறையும்மிறை யல்லதுஎனது
உள்ளம்உண் ராதே.

தெளிவுரை: நின்றியூரில் திருவிழாக்கள் நடை பெறுவதை யொட்டி எழும் வாத்தியங்களின் ஒலியும், சங்கின் ஒலியும் பாங்குடன் பொருந்தி எழ, அர, அர என்றும் சிவ, சிவ என்றும் பக்தர்கள் ஒலிக்கும் சிவ ஒலிகள் எல்லா இடத்திலும் பரவ, அவற்றை நன்கு அறியும் தன்மையுடையவர் நிறைந்த கங்கையைத் தன் சடைமேல் தரித்திருக்கும் ஈசன் ஆவார். அத்தகைய இறைவனை யல்லாது வேறு வகையான பொருளின் மீது என் உள்ளம் சாராது.

188. பூண்டவ்வரை மார்பில்புரி
நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு
பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு
நின்றியது தன்னில்
ஆண்டகழல் தொழில்அல்லது
அறியார்அவர் அறிவே.

தெளிவுரை: நாகத்தை அணிகலனாகப் பூண்ட மலை போன்ற விசாலமான மார்பில் பூணூல் திகழவும், சடையில் நன்கு விரிந்த கொன்றை மலரும், பால் போன்ற சந்திரனும் தரித்து விளங்குபவன் பரமன். அப்பெருமான், சோலை சூழ் நின்றியூரில் இருப்பவன். அவனைத் தொழுதால் அன்றி அப்பெருமானின் சிறப்பினை அறிய முடியாது.

சிறப்புரை: ஈசனைத் தொழுதால் மட்டுமே அவனை அறிய முடியும் என உணர்த்திற்று.

திருநின்றி – திருநின்றியூர் தலம்.

Koviloor Digital Library

189. குழலின்னிசை வண்டின்னிசை
கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில்
சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வலன் அங்கைஅது
ஏந்திஅனல் ஆடும்
கழலின்னொலி ஆடும்புரி
கடவுள்களை கண்ணே.

தெளிவுரை: புல்லாங்குழலின் வழி எழும் இசையானது, வண்டின் இசையாய்த் தோன்றுமாறு செய்ய, அதனை யொட்டிக் குயிலும் உடன் சேர்ந்து கூவி இசை எழுப்ப, அடர்த்தியான நிழலைத் தரும் சோலை சூழ்ந்த நின்றியூரில், நெருப்பைப் போன்று வலிமையான படையாகிய மழுவை ஒரு கரத்தில் ஏந்தி மற்றொரு கரத்தில் நெருப்பு ஏந்தி ஆடவும், நடனம் புரியும் திருப்பாதம் கழலின் ஒலி சேர்க்கவும், ஈசன் திகழ் கின்றான். அத்தகைய கடவுள் நமக்குப் பற்றுக் கோடாக உள்ளவன்.

190. மூரல்முறு வல்வெண்நகை
உடையாள்ஒரு பாகம்
சாரல்மதி அதனோடுடன்
சலவம் சடை வைத்த
வீரன்மலி அழகார்பொழில்
மிடையும்திரு நின்றி
யூரன்கழல் அல்லாதுஎனது
உள்ளம்உண ராதே.

தெளிவுரை: புன்முறுவல் விளங்கும் ஒளிதிகழ் உமாதேவியை ஒரு பாகத்திலும், சந்திரனும் கங்கையும் அழகிய சடைமுடியிலும் வைத்த சிவபெருமான்

Koviloor Digital Library

பொழில் சூழும் திருநின்றியூரன் ஆவான். அவனுடைய திருக்கழலை யல்லாது வேறு எதிலும் என் உள்ளம் சாராது.

சிறப்புரை: மூரல் முறுவல் வெண்ணகையானது உமா தேவியின் முறுவலை வியந்தது. இதனைப் "பத்தித் திரு நகை" என அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழ் சாற்றும். ஈசன் புரிந்த வீரச் செயல்களான யானையின் தோலை உரித்தது முதலானவற்றைக் குறித்தலை வீரன் எனும் சொல் உணர்த்திற்று. அட்ட வீரட்டத்தானைக் குறிக்கும்.

சல அம் சடை – சலம் (கங்கை) அழகிய சடையில்.

191. பற்றிஒரு தலைகையினில்
ஏந்திப்பலி தேரும்
பெற்றிஅது வாகித்திரி
தேவர்பெரு மானார்
சுற்றிஒரு வேங்கைஅத
ளோடும்பிறை சூடும்
நெற்றிஒரு கண்ணார் நின்றி
யூரின் நிலை யாரே.

தெளிவுரை: ஒரு கரத்தில் பிரம கபாலத்தைப் பிச்சைப் பாத்திரமாக ஏந்திப் பலி கொள்வதைத் தேர்ந்தெடுத்த பெற்றியில் திரிந்த தேவர் பெருமான், புலியின் தோலை ஆடையாகக் கொண்டும், சந்திரனைத் திருச்சடையில் சூடிக் கொண்டும், நெற்றியில் ஒரு கண் கொண்டு, நின்றியூரில் நிலைபெற்றவர் ஆயினார்.

பலி – பிச்சையேற்றல். வேந்தை அதள் – புலித்தோல். நெற்றி – ஒரு கண் – நுதலின்பால் உள்ள நெருப்புக் கண். மன்மதனை எரித்தது.

Koviloor Digital Library

192. நல்லம்மலர் மேலானொடு
ஞாலம்மது உண்டான்
அல்லர்என ஆவர்என
நின்றும்அறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி
யூரின்நிலை யார்எம்
செல்வர்அடி அல்லாதுஎன
சிந்தைஉண ராதே.

தெளிவுரை: அழகிய நல்ல மலராகிய தாமரை மலர் மேல் உறையும் பிரமனோடு, உலகத்தை உண்டு உமிழ்ந்தவனாகிய திருமாலும், காணவில்லை எனவும். காணப்பட்டான் எனவும் தமக்குள் விவாதம் செய்தும் அறிவரியவனாய் நெல் வயல் சூழ்ந்த நின்றியூரில் நிலைத்துள்ளார், ஈசன். அவரே எம் செல்வர். அப் பெருமானுடைய திருவடியை அல்லாது என் சிந்தை வேறொன்றினை உணராது.

சிறப்புரை: அறிதலின் மேம்பட்ட பொருளாய் உணர்தல் என்பது, தன்வயமாகி நிற்றலை உணர்த் திற்று.

193. நெறியில்வரு பேராவகை
நினையாநினை ஒன்றை
அறிவில்சமண் ஆதர்உரை
கேட்டும்மய ராதே
நெறியில்லவர் குறிகள்நினை
யாதேநின்றி யூரில்
மறிஏந்திய கையான்அடி
வாழ்த்தும்மது வாழ்த்தே.

தெளிவுரை: நன்னெறியில் வருவனவற்றை அந்நெறியில் இருந்து மாறுபடாதவாறு உரைத்தலை நினையாத

Koviloor Digital Library

சமணர் போன்றோர் உரைகளைக் கேட்டு மயக்கம் கொள்ளாமல், நின்றியூரில் மழு ஏந்திய திருக்கரத்தை உடைய ஈசனைப் போற்றுவது மெய்யான வாழ்த்து ஆகும்.

சிறப்புரை: எக் காரணம் பற்றியும் இறைவனைப் போற்றித் துதிப்பதில் தளர்வு அடைதல் கூடாது என்பது உணர்த்தப்பட்டது.

மறி – மழுப்படை. மது வாழ்த்து – இனிய வாழ்த்தும் ஆம்.

194. குன்றம்மது எடுத்தான்உடல்
தோளும் நெரிவு ஆக
நின்றுஅங்கு ஒரு விரலால்உற
வைத்தான் நின்றி யூரை
நன்றுஆர்தரு புகலித்தமிழ்
ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை
வின்றிநிறை புகழே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கயிலாய மலையை எடுத்தவனாகிய இராவணன் உடலும் தோளும் நெரியுமாறு புரிந்து, ஒரு விரலால், பின்னர் நன்மை உறுமாறு செய்தான். அவன் வீற்றிருந்து அருளும் நின்றியூரை ஞானசம்பந்தப் பெருமான் இசைத்த எக்காலத்தும் குறைவுபடாத தமிழ் மாலையாகிய இத் திருப்பதிகத்தை உரைப்பவர் களுக்கு நிறை புகழ் உண்டாகும்.

சிறப்புரை: தமிழ் ஞானம் மிகு பந்தன் என்பது திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருநாம விளக்கத்தை உணர்த்துவதாயிற்று. குன்றாத் தமிழ், தமிழின் மேன்மை – திருப்பதிகத்தின் மேன்மையும்,

Koviloor Digital Library

குறைவு இன்றி என்பது நிறைபுகழின் சிறப்பையும் - பயனையும் உணர்த்திற்று.

19. திருக்கழுமலம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

195. பிறைஅணி படர்சடை முடிஇடை பெருகிய
புனல்உடை யவன்இறை
இறைஅணி வளைஇணை முலையவள் இணைவனது
எழில்உடை இடவகை
கறைஅணி பொழில்நிறை வயல்அணி கழுமலம்
அமர்கனல் உருவினன்
நறைஅணி மலர்நறு விரைபுல்கு நலமலி
கழல்தொழல் மருவுமே.

தெளிவுரை: இறைவன், சடை முடியில் பிறைச் சந்திரனும், கங்கையும் உடையவன். முன் கையில் வளையலை அணியாகப் பெற்ற உமாதேவியை எழிலுடன் இடப்பாகமாகக் கொண்டு, அடர்த்தியான சோலையும், நிறைவாய்ப் பயன் தரும் வயல்களும் அழகுடன் விளங்கும் கழுமல நகரில் வீற்றிருக்கும் தழல் உருவினன் அவன். அவனுடைய திருவடி நறுமணம் உடையதும் தேன் ததும்பும் மலர் போன்றதும் ஆகும். அத்தகைய திருவடியைத் தொழுது பற்றி இருக்க வேண்டும்.

சிறப்புரை: பரஞானம், அபரஞானம் ஆகிய இருவகையும் இணைவனவாய்த் தேவியின் திருநகில்

Koviloor Digital Library

கள் உவமைப்படுத்தல் காண்க. முத்தி நலம், நலமலி என சிறப்பிக்கப் படுதலும் அதனைத் திருவடி நல்குதலும் அதைத் தொழுது வணங்குதல் மன்னுயிரின் கடமை என்பதும் "தொழல் மருவுமே" என்பது உணர்த்திற்று. மருவுதல் என்பது கலந்து நிற்றலைக் குறிப்பால் உணர்த்தியது. "கலந்த அன்பாகி" என்று மாணிக்கவாசக சுவாமிகள் உரைப்பதும் காண்க.

கழல் – திருவடி. மருவுதல் – பற்றி இருத்தல், மனம் கலத்தல். நறை அணி மலர் நறுவிரைபுல்கு – திருவடியின் சிறப்பு உரைப்பது.

196. பிணிபடுகடல்பிற விகள்அறல் எளிதுஉளது
அதுபெரு கியதிரை
அணிபடு கழுமலம் இனிதுஅமர் அனல்உரு
வினன்அவிர் சடைமிசை
தணிபடு கதிர்வளர் இளமதி புனைவனை
உமைதலை வனைநிற
மணிபடு கறைமிட றனைநல மலிகழல்
இணைதொழல் மருவுமே.

தெளிவுரை: பிறவி என்பது கடல் போன்று பரந்து ஆசையாகிய பெரிய பெரிய அலைகளைக் கொண்டது. அது அனைவரையும் பிணித்துக் கட்டும் தன்மையுடையது. அதிலிருந்து நீங்குவதற்கு எளிய வழி உள்ளது. அது, அணி மிகுந்த கழுமலத்தில் இனிமை யுடன் வீற்றிருக்கும் நெருப்புப் போன்ற செம்மேனி யனாகவும், ஒளிரும் சடையின் மீது குளிர்ந்த இளஞ் சந்திரனைச் சூடியுள்ளவனாகவும் உள்ளவனாகிய உமாதேவியின் தலைவனை, நீல மணியைப் போன்ற கரிய கண்டம் உடைய ஈசனை, அவனது நலம் தரும் திருவடிகளைத் தொழுது அன்புடன் பற்றி நிற்றல் சிறந்ததாகும்.

Koviloor Digital Library

197. வரியுறு புலிஅதள் உடையினன் வளர்பிறை
ஒளிகிளர்கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில் விழஒலி
மலிகழு மலம்அமர்
எரியுறு நிறஇறை வனதடி இரவொடு
பகல்பர வுவர்தமது
எரியுறு வினைசெறி கதிர்முனைஇருள்கெட
நனிநினை வெய்துமதே.

தெளிவுரை: ஈசன், வரிகளையுடைய புலித்தோல் உடையை உடையவன்; வளரும் பிறைச்சந்திரனும். ஒளியைக் கிளர்ந்து நல்கும் அடர்த்தியான சடைமுடியும் உடையவன், அவ் இறைவன். அவன், திருவிழாக்களின் ஒலி மிகுந்த கழுமல நகரில் வீற்றுள்ளான். தீப்போன்ற சிவந்த திருமேனியனாகிய அப் பெருமானுடைய திருவடியை, இரவும் பகலும் போற்றி வணங்குபவர்களுக்கு. அவர் தம் துன்புறுத்தும் வினைகள், சூரியனைக் கண்ட இருள்போன்று கெடுவதற்கு. இறைவன்பால் பற்று உண்டாகும்.

198. வினைகெட மனநினை வதுமுடி கெனின்நனி
தொழுது எழு குலமதி
புனைகொடி இடைபொருள் தருபடு களிறினது
உரிபுதை உடலினன்
மனைகுட வயிறுடை யனசில வருகுறள்
படையுடை யவன்மலி
கனைகடல் அடைகழு மலம்அமர் கதிர்மதி
யினன் அதிர் கழல்களே.

தெளிவுரை: வினை யாவும் தீர்வதற்கு மனமானது இறைவனை நினைக்க வேண்டும். அது முடிய வேண்டும் என்றால், இளம் பிறை சூடி, உமாதேவியை இடமாகக் கொண்டு, யானையின் தோலை உரித்துப்

Koviloor Digital Library

போர்வையாக்கி, குடம் போன்ற பெரிய வயிற்றை யுடைய பூதப் படையுடையவனாகிய, கழுமலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் ஒலிக்கும் திருவடியைத் தொழுது போற்ற வேண்டும்.

சிறப்புரை: ஈசனை நினைக்கும் எண்ணம் நிகழ வேண்டு மானால், இறைவனை வணங்குதல் வேண்டும் என்று உணர்த்தப்பட்டது.

முடிகெனின் – முடித்தல் – எண்ணம் நிகழ்தல் எனின்.

199. தலைமதி புனல்விட அரவுஇவை தலைமையது
ஒருசடையிடை யுடன்
நிலைமரு வவூர்இடம் அருளினன் நிழல்மழு
வினொடுஅழல் கணையினன்
மலைமரு வியசிலை தனில்மதில் எரியுண
மணமருவினன் நல
கலைமரு வியபுறவு அணிதரு கழுமலம்
இனிதுஅமர் தலைவனே.

தெளிவுரை: இளம்பிறை, கங்கை, விஷம் பொருந்திய பாம்பு இவற்றைத் தலைமையாகக் கொண்டவற்றை ஒப்பற்ற சடையின் இடையில் தத்தமது இயல்பான குணமான யாவும் நீங்கி விளங்குமாறு பொருந்தச் செய்தவன் ஈசன். அவன் ஒளிமிகும் மழுப்படையை உடையவன்; மேருமலையை வில்லாகவும், அக்னியைக் கணையாகவும் கொண்டு முப்புரத்தை எரியுமாறு செய்து அன்புடையவர்கள் நெஞ்சில் கலந்தவன். அவன், காடுகளைப் போன்ற அடர்த்தியான மரங் களுடைய அழகு வளர் கழுமல நகரில் இனிது வீற்றிருக்கும் தலைவனே.

சிறப்புரை: தலைமையாகக் கொண்டுள்ளதைத் திருச் சடையில் தரித்தலானது முதற்கண் தோற்றம் பெறும்

Koviloor Digital Library

பிறைச்சந்திரனும், நீரில் முதன்மையானதாகிய கங்கையும், அரவத்தில் தலைமையானதாகிய நாகத்தையும் குறித்தது.

நிழல் – ஒளி. புறவம் – காடு; சீகாழியின் மற்றொரு பெயரும் ஆம்.

200. வரைபொருது இழிஅரு விகள்பல பருகுஒரு
கடல்வரி மணலிடை
கரைபொரு திரைஒலி கெழுமிய கழுமலம்
அமர்கனல் உருவினன்
அரைபொரு புலிஅதள் உடையினன்அடிஇணை
தொழவரு வினைஎனும்
உரைபொடி படஉறு துயர்கெட உயர்உலகு
எய்தல்ஒரு தலைமையே.

தெளிவுரை: *மலைகளைக் கடந்து, பெருகிப் பாயும் அருவிகள் பலவற்றைக் கொள்ளும் கடலின் கரைமேல் அலைகள் ஒலி எழுப்ப விளங்கும் கழுமலத்தின்கண் எழுந்தருளியுள்ள தீவண்ணன், அரையில் பொருந்திய புலித்தோல் ஆடை உடையவன். அவனது இணை யடியைத் தொழுத ஞான்று, மக்கட் பிறவிக்கு வினை தான் காரணம் என்று சொல்லப்படும் சொல்லானது பொருள் அற்றதாகும். உற்ற துயரும் கெடும். உயர்ந்த உலகமாகிய சிவனடி சார்தல் உறுதி.*

சிறப்புரை: *பரஞானம், அபரஞானம் ஆகிய இரண்டும் அடிஇணை எனப்பட்டது. ஞானம் தோன்றிய காலை வினை தீர்தல் என்பது "உரை பொடி பட" என்று உணர்த்தப்பட்டது. வினை அழியும் என்பது குறிப்பு. சாலோகம் என்பது உயர் உலகம் என வழங்கப்படுதல் காண்க.*

ஒரு தலைமையே – பிரதானமானது என்று உறுதியாகத் தெரிவித்தல் ஆகும்.

Koviloor Digital Library

201. முதிர்உறு கதிர்வளர் இளமதி சடையனை
நறநிறை தலைதனில்
உதிர்உறு மயில்பிணை தவிர்தசையுடைபுலி
அதள்இடை இருள்கடி
கதிர்உறு சுடர்ஒளி கெழுமிய கழுமலம்
அமர்மழு மலிபடை
அதிர்உறு கழல்அடி களது அடிதொழும்அறிவு
அலதுஅறி அறியமே.

தெளிவுரை: தேன் சொரியும் மலர் நிறைந்த சடையை உடைய முடியில் முற்றிய கதிர்களை உமிழும் இளமதியைச் சூடியவன் ஈசன். அவன், புலித்தோலை உடுத்தி ஒளி மிகும் கழுமல நகரில் மழுப்படை ஏத்தி வீற்றிருப்பவன். அப்பெருமானின் ஒலிக்கும் திருவடியைத் தொழுது போற்றும் அறிவு பெற்றவர் ஆவோம். அதைத்தவிர வேறு யாதும் அறிய மாட்டோம்.

சிறப்புரை: இறைவனுடைய திருவடியைத் தொழுதல் அறிவு என்றும், அஃது அல்லாத பிற அறிவு அன்று என்றும் உணர்த்தப்பட்டது. "செறிதரு கழல்கள் ஏத்திச் சிறந்து இனிது இருக்க மாட்டா அறிவிலாதவர்" என்று மாணிக்கவாசகர் உணர்த்துதலும் காண்க.

202. கடல்என நிறநெடு முடியவன் அடுதிறல்
தெறஅடி சரண்என
அடல்நிறை படைஅரு ளியபுகழ் அரவுஅரை
யினன்அணி கிளர்பிறை
விடநிறை மிடறுடை யவன்விரி சடையவன்
விடையுடை யவன்உமை
உடன்உறை பதிகடல் மறுகுஉடைஉயர்கழு
மலவியன் நகரதே.

Koviloor Digital Library

தெளிவுரை: கருமையான நிறமுடைய இராவண னுடைய முடியின் வலிமையை அழித்து, பின்னர் அவ் அரக்கன் சரணாகதியாய்த் திருவடியை வணங்கிய போது தெய்வப் படை அருளியவன் ஈசன். புகழ் மிக்க நாகத்தை அணிந்து, வளர்ந்து எழுச்சி கொளும் சந்திரனைச், சூடி, நஞ்சினைக் கழுத்தில் இருத்தி, விரிந்த சடை முடியும், இடப வாகனமும் கொண்டு, உமாதேவியுடன் விளங்கும் அத் தலைவன், கடல் பெருக்கெடுத்துப் பிரளயம் தோன்றும் காலத்திலும் நிலையாக உள்ள கழுமலம் என்னும் பதியில் உறைபவன்.

சிறப்புரை: ஈசனைப் பூசித்து ஆபரணமாகும் பேற்றினைப் பெற்ற புகழை உடையது நாகம் என்பதனைப் ''புகழ் அரவு'' என்னும் சொல் உணர்த்திற்று.

வியன் – பெருமை. மறுகு – பிரளயத்தால் தோன்றும் கலக்கம்.

203. கொழுமலர் உறைபதி உடையவன் நெடியவன்
எனஇவர் களும்அவன்
விழுமையை அளவறி கிலர்இறை விரைபுணர்
பொழில்அணி விழவுஅமர்
கழுமலம் அமர்கனல் உருவினன் அடிஇணை
தொழுமவர் அருவினை
எழுமையும் இலநில வகைதனில் எளிதுஇமை
யவர்வியன் உலகமே.

தெளிவுரை: வளமையான தாமரை மலரில் மேவும் பிரமனும், நெடியவனாகிய திருமாலும் ஈசனுடைய சிறப்பினைச் சிறிதளவும் அறியாதவராயினர். மணம் பொருந்திய சோலைகளும் திருவிழாக்களும் எப்போதும் விளங்கும் கழுமல நகரில் வீற்றிருக்கும்

Koviloor Digital Library

தீவண்ணனின் திருவடியைத் தொழுபவர்களுக்கு, வினையானது ஏழு பிறப்புகளுக்கும் இல்லை. தேவலோகத்தில் உள்ள அத்தனை பெருமையும் இந்த உலகத்தில் எளிதாக அமையும்.

சிறப்புரை: கண்ணுக்குத் தோன்றாது உள்ள வினை, அருவினை எனலும் பொருந்தும். "எழுமையும் வினை இல" என்பது இம்மைப் பயனை உணர்த்தி மக்கட் பிறப்பின் சிறப்பைப் புகன்றதாயிற்று. "மனித்தப் பிறவியும் வேண்டுவனே இந்த மாநிலத்தே" என்னும் திருநாவுக்கரசரின் வாக்கால் இதனைக் காண்க.

கொழு – வளமை. அவன் – சிவபெருமான். விழுமை – சிறப்பு. வியன் – பெருமை.

204. அமைவன துவர்இழு கியதுகில்அணி உடை
யினர்அமண் உருவர்கள்
சமையமும்ஒரு பொருள் எனும்அவை சலநெறி
யனஅற உரைகளும்
இமையவர்தொழு கழுமலர் அமர்இறைவனது
அடிபரவுவர்தமை
நமையல வினைநலன் அடைதலில் உயர்நெறி
நனிநணு குவர்களே.

தெளிவுரை: துவர் ஆடையை உடைய பௌத்தர்களும் சமணர்களும் ஒன்றினைச் சொல்வதாகக் கூறுவது நிலைத்து நிற்காத நெறி. எனவே அதனை விடுத்து, தேவர்கள் தொழுது போற்றும் கழுமலத்தில் வீற்றிருக்கும் ஈசனைப் போற்றுபவர்கள், வருத்தம் தரும் வினைகளே நன்மை பயப்பனவாய் உயர்ந்த நெறியில் விளங்குவார்கள்.

சிறப்புரை: இறையருள், தீய வினையையும் நன்மை யாக்கும் என்று உணர்த்துதல் காண்க. இது சிவனடியைத் தொழுபவர்களுக்கு உரித்தானது.

Koviloor Digital Library

சமையம் – சமயம். சலநெறி – நிலையற்ற மார்க்கம்.
நமை – நமைத்தல் – துன்புறுத்தல்.

205. பெருகிய தமிழ்விர கினன்மலி பெயர்அவன்
உறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடல்அடை கழுமலம்
உறைவிடம் எனநனி
பெருகிய சிவனடி பரவிய பிணைமொழி
யனஒரு பதும்உடன்
மருவிய மனம்உடை யவர்மதி உடையவர்
விதியுடை யவர்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *திருப்பதிகத்தால் இனிமை தரும் தமிழை விரும்பும் திருஞானசம்பந்தர், கருமையான நிறமுடைய கடலின் அலைகள் பொருந்தும் கழுமலமானது சிவபெருமான் உறைகின்ற இடமாகக் கொண்டு போற்றிப் பாடிய இத் திருப்பாடல்களை மனத்தால் பொருந்திப் பாடுபவர்கள் அறிவுடையார் ஆவார்கள். நல்விதியை உடையவர்களும் அவர்களே.*

சிறப்புரை: *மன்னுயிரரைத் தலைவன்பால் பிணைப் படுத்தும் திருப்பதிகம் என்பதனை "பிணை மொழி" என்னும் சொல் உணர்த்திற்று.*

மலி பெயர் – பெரும்புகழ். திரை – அலை; பிணர் என்பது திரைக்கு அடைமொழி – பிணர்திரை. பிணர் – ஊற்றின் வரை சுரசுரப்பு. விரகினன் – விருப்பம் உடையவன்.

20. திருவிழிமிழலை

தல விளக்கம்: *பதிக எண் 4 காண்க.*

பண் : *நட்டபாடை*

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

206. தடநிலவியமலை நிறுவியொர் தழல்உமிழ்
தருபட அரவுகொடு
அடல்அசுரரொடுஅம ரர்கள் அலைகடல்கடை
உழிஎழு மிகுசின
விடம் அடைதருமிட றுடையவன் விடைமிசை
வரும்அவன் உறைபதி
திடமலிதருமறை முறைஉணர் மறையவர்
நிறைதிரு மிழலையே.

தெளிவுரை: *மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்கிற பாம்பைக் கயிறாகவும் கொண்டு, தேவர்கள் ஒருபுறத்திலும், அசுரர்கள் ஒருபுறத்திலும் பாற் கடலைக் கடைந்தபோது கொடிய விடம் எழ, அதனை மிடற்றில் தேக்கியவன், இடபவாகனத்தில் வரும் ஈசன் ஆவான். அப்பெருமான் உறைகின்ற பதி வேதத்தை முறையாகக் கற்றுணர்ந்த மறையவர்கள் வாழும் திருவீழிமிழலை யாகும்.*

கடைஉழி – கடையும் பொழுது.

207. தரையொடு திவிதல நலிதருதகுதிறல்
உறுசலதரனது
வரையன தலைவிசை யொடுவரு திகிரியை
அரிபெற அருளினன்
உரைமலி தருசுர நதிமதிபொதிசடை
யவன்உறை பதிமிகு
திரைமலிகடல்மணல் அணிதரு பெறுதிடர்
வளர்திரு மிழலையே.

தெளிவுரை: *பூவுலகத்தையும் விண்ணுலகத்தையும் நலிவடையச் செய்த வெண்மையான பலத்தை உடைய சலந்தராசுரனுடைய மலை போன்ற தலை அறுந்து*

Koviloor Digital Library

விழுமாறு செய்த சக்கராயுதப் படையைத் திருமால் பெறுவதற்கு அருள் புரிந்தான் ஈசன். அப்பெருமான், புகழ் மிக்க கங்கையும் சந்திரனும் தன் சடை முடியில் இருக்கச் செய்தவன். அவன் உறைகின்ற பதியானது அலைகடல் மணல் மேட்டைப் போன்ற திட்டுகள் உடைய திருவீழிமிழலை ஆகும்.

திவிதல – விண்ணுலகம். சலதரன் – சலந்தராசுரன். சுரநதி – கங்கை. திடர் – திட்டுகள், மேடுகள்.

208. மலைமகள் தனைஇகழ் வதுசெய்த மதியறு
சிறுமனவனது உயர்
தலையினொடு அழல்உரு வனகரம் அறமுனி
வுசெய்தவன் உறைபதி
கலைநில வியபுல வர்கள் இடர்களைதரு
கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதிள்புடை தழுவிய திகழ்பொழில்
வளர்திரு மிழலையே.

தெளிவுரை: உமாதேவியை மதியாமல் இழிவு செய்த மதியற்ற தட்சப் பிரமனுடைய தலையோடு அக்கினி தேவனுடைய கரங்களையும் அறுந்து வீழுமாறு சினம் கொண்டு தண்டித்த ஈசன் உறையும் நகரானது, கலைப் பண்பு நிலவும் புலவர்களும், பிறருடைய இடரைப் போக்கும் வகையில் கொடைமிக்க செல்வந்தர்களும் உடைய, உயர்ந்த மதில்களும் அதனைச் சூழ்ந்த சோலைகளும் உள்ள திருவீழிமிழலை யாகும்.

சிறப்புரை: கலைபயில் புலவர்கள் அறிவுச் செல்வத்தையும், செல்வம் மிக்க கொடை வள்ளல்கள் பொருட் செல்வத்தையும் தந்து இடர்களைதல் உணர்த்தப்படுகிறது. ஆணவத்தால் செருக்குற்ற தக்கனும் அதற்குத் துணை போன அக்கினியும்

Koviloor Digital Library

தண்டிக்கப் பெற்றது. ஆணவ மலம் அழிதலைக் குறித்தது.

209. மருவலர்புரமெரி யினன்மடிதரஒரு
கணைசெல நிறுவிய
பெருவலி யினன்நல மலிதருகரன்உர
மிகுபிணம் அமர்வன
இருளிடை அடைஉற வொடுநட விசைஉறு
பரன்இனிது உறைபதி
தெருவினில் வருபெரு விழஒலிமலிதர
வளர்தரு மிழலையே.

தெளிவுரை: ஈசன், அன்பு துளியும் இன்றி தீங்கு செய்யும் தொழிலும் பகைமையும் உடைய மூன்று அசுரர்களின் கோட்டைகளும் எரிந்து அழியுமாறு, ஓர் அம்பினை ஏவும் பெரும் வலிமையுடையவன்; நல்லருள் யாண்டும் புரியும் கரங்களை யுடையவன்; இடுகாட்டில் நள்ளிரவில் நடம் பயில்பவன். அவன் இனிது உறையும் பதியானது விழாக்கள் பெருகும் திருவீழிமிழலை.

210. அணிபெறு வடமர நிழலினில் அமர்வொடும்
அடிஇணை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடும் அருளிய
பரன்உறை விடம்ஒளி
மணிபொருவரு மரகத நிலமலிபுனல்
அணைதரு வயல்அணி
திணிபொழில் தருமணம் அதுநுகர்அறுபதம்
முரல்திரு மிழலையே.

தெளிவுரை: அழகு பெறும் ஆல் நிழலில் அமர்ந்து சனகாதி முனிவர்கள் தெளிவுறுமாறு அறநெறி புகன்ற இறைவன் உறைகின்ற இடமாவது, மாணிக்க

Koviloor Digital Library

மணிகளும் மரகத மணிகளும் விளங்க, நீர் வளம் பெருகும் வயல்களும், அழகிய சோலைகளும் பெருக, வண்டுகள் ஒலி எழுப்பித் தேனைப் பருகி மகிழும் பெற்றியை உடைய திருவீழிமிழலை ஆகும்.

சிறப்புரை: சனகர், சனந்தனர், சனாதரர், சனத்குமாரர் ஆகிய நால்வர்க்கு உபதேசம் புரிந்த ஈசனின் குருத்துவம் இவண் குறிப்பதாயிற்று. இருவர் இருவராக ஈசன் திருவடிக்கண் இருந்து உபதேசம் பெற்ற மாண்பு, "இருவர்கள்" என்னும் தொடர் உணர்த்திற்று. ஆல் நிழலில் ஈசன் இருந்த சிறப்பு, அணி பெறுவடமர நிழல் என உணர்த்தப் பெற்றது. ஈசன் வியாக்கியானமாக உறுதிப் பொருள்களை மொழியாமல், சின் முத்திரை யாகச் செய்கையால், உணருமாறு உணர்த்தியது - மறை பொருளாய்க் காட்டியது, "மறையொடும் அருளிய பரன்" என்று உணர்த்தப்படுகிறது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்கி ஆன்மா வானது இறைவனுடன் பொருந்தி இலயிப்பது சின் முத்திரையின் தத்துவமாதலை, அறுபதம் தேனருந்தி விளங்கும் செயல் காட்டி சுட்டப் பெறுதலைக் குறிப்பால் உணரலாம்.

வடமரம் – ஆலமரம். அறுபதம் – வண்டு.

211. வசையறு வலிவன சரஉரு வதுகொடு
 நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகள்அறிவுறுதிறல்
 அமர்மிடல் கொடுசெய்து
அசைவில படைஅருள் புரிதரும் அவன்உறை
 பதியது மிகுதரு
திசையின் இனமலர்குல வியசெறிபொழில்மலி
 தருதிரு மிழலையே.

Koviloor Digital Library

தெளிவுரை: குற்றம் இல்லாத வலிமையுடைய வேடன் உருவம் தாங்கி உமாதேவியார் காணுமாறு, தவம் செய்த விசயனுடைய திறமையை அறியுமாறு காட்டும் வலிமை மிக்க போர் செய்து, அசைக்க முடியாத பாசுபதம் என்னும் படையை அருளிய சிவபெருமான் உறைகின்ற பதியானது, எல்லாத் திசைகளிலும் கொத்துக் கொத்தாக மலர் விளங்கும் பொழிலை உடைய திருவீழிமிழலை யாகும்.

வனசர உரு – வேடன், சிவபெருமான் விசயனுக்கு அருள் புரிவதற் காகக் கொண்ட வடிவம். மிடல் – வலிமை.

212. நலமலிதருமறை மொழியொடு நதியுறு
புனல்புகை ஒளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன் மறையவன்
உயிரது கொளவரு
சலமலி தருமறலிதன்உயிர்கெடஉதை
செய்தஅரன் உறைபதி
திலகம் இதுஎனஉல குகள்புகழ்தருபொழில்
அணிதிரு மிழலையே.

தெளிவுரை: நலந்தரும் வேத மந்திரங்களை ஓதியும், புனிதமான தீர்த்தம் மற்றும் தூப தீபம், மலர், இவற்றால் பூசித்து ஆராதனை செய்து வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கொண்டு செல்வதற் காக வந்த வஞ்சனையுடைய எமனின் உயிர் கெடுமாறு திருப்பாதத்தால் உதைத்த சிவபெருமான் உறைகின்ற பதியானது, நகர்களுள் திலகம் போன்ற சிறப்புடையது என்று உலகத்தோரால் புகழப்படும் சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை ஆகும்.

சலமலிதரு மறலி – வஞ்சனை யுடைய எமன், தீமை செய்யும் காலன். சலம் – தீய செயல்.

Koviloor Digital Library

213. அரன்உறை தருகயி லையைநிலைகுலைவது
செய்த தசமுகனது
கரம்இரு பதுநெரி தரவிரல்நிறுவிய
கழல்அடி உடையவன்
வரன்முறை உலகவை தருமலர் வளர்மறை
யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதருசிவன்உறை
பதிதிரு மிழலையே.

தெளிவுரை: *தனது இருப்பிடமாகிய திருக்கயிலையைப் பெயர்த்து எடுத்த, பத்துத் தலைகள் உடைய இராவணனுடைய இருபது கரங்கள் துன்புறுமாறு திருப்பாத விரலால், அழுத்தியவன் ஈசன். அப்பெரு மான், தன் திருஉளப் பாங்கினபடி அவ்வவர்க்கு உரியவாறு படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமன், தவறு செய்தபோது அவன் தலைகளுள் ஒன்றைக் கொய்து அதனைத் திரு ஓடாகக் கொண்டு பலி யேற்றுத் திரிந்தவன். அத்தகைய சிவபெருமான் உறைகின்ற பதி, திருவீழிமிழலை.*

214. அயனொடும் எழில்அமர் மலர்மகள் மகிழ்கணன்
அளவிடல் ஒழியஒர்
பயம்உறுவகை தழல் நிகழ்வதொர்படி உரு
வதுவர வரன்முறை
சயசய எனமிகு துதிசெயவெளியுரு
வியஅவன் உறைபதி
செயநில வியமதில் மதியதுதவழ்தர
உயர்திரு மிழலையே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் 'அளவிட முடியாத வாறு அச்சம் உற்று அயர்ந்து நிற்கும் வகையாய், சோதி உருவாகித் திகழ, வானத்தையும் கடந்து நின்றவனாய்*

Koviloor Digital Library

யாவரும் போற்றித் துதி செய்யுமாறு விளங்கினான், பரமன். அவன் உறையும் பதி திருவீழிமிழலை.

215. இகழ்உருவொடுபறி தலைகொடும்இழிதொழில்
மலிசமண் விரகினர்
திகழ்துவர்உடை உடல் பொதிபவர்கெடஅடி
யவர்மிக அருளிய
புகழ்உடை இறைஉறை பதிபுனல் அணிகடல்
புடை தழுவியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர் செறிவொடு
திகழ்திரு மிழலையே.

தெளிவுரை: *பிறரால் இகழப்படுமாறு வடிவத்தைக் கொண்டவராகிய சமண மற்றும் பௌத்தர்கள் நன்மைகளைப் பெறாமல் அயலே இருக்க, அடியவர்களுக்குப் பேரருள் புரியும் புகழ் உடைய இறைவன் உறையும் பதியாவது, நதிகள் யாவும் சேரும் கடல் சூழ்ந்த நிலவுலகில் திகழும் தேவநாந்தர்களுக்கு நிகராகக் கொடை மல்கும் பெருமக்கள் பொருந்தி விளங்கும் திருவீழிமிழலையாகும்.*

சிறப்புரை: *இறைவனை நிதமும் வணங்கும் பேறு பெற்றவர்கள் தேவர்களுக்கு நிகராவர் என உணர்த்தப் பெற்றது.*

216. சினமலி கரிஉரி செய்தசிவன் உறைதிரு
திருமிழலையை மிகு
தனமனர் சிரபுர நகர்இறை தமிழ்விர
கனதுஉரை ஒருபதும்
மனமகிழ் வொடுபயில் பவர்எழில்மலர்மகள்
கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மகள் இசைதர இருநிலன்
இடைஇனிது அமர்வரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: மிகுந்த சினத்தோடு ஏவப்பட்ட யானையின் தோலை உரித்தவர் சிவபெருமான். அவர் உறைகின்ற திருவீழிமிழலையை, செல்வம் கொழிக்கும் மனத்தை யுடையவர் விளங்கும் சீகாழி நகர் இறைவனுடைய திருஞானசம்பந்தர் உரைத்த இத் திருப்பதிகத்தைப் பெருமகிழ்வுடன் ஓதுபவர்கள் எழில் மிக்க செல்வம் பெறுவர்; கல்வி ஞானமும் பெறுவர்; யாவற்றிலும் வெற்றியும் பெரும் புகழும் அடைவர்; இவ் உலகத்தில் இனிது மகிழ்ந்திருப்பார்கள்.

சிறப்புரை: "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்பதனை, "மிகு தனமனர்" என்னும் தொடர் உணர்த்திற்று.

தமிழ் விரகன் – திருஞானசம்பந்தர்.

21. திருச்சிவபுரம்

தல விளக்கம்: சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். திருமால், வெள்ளைப் பன்றி வடிவத்தில் வழிபட்ட திருத்தலம். குபேரன் பூசித்தது.

சுவாமி : சிவபுர நாதர், பிரமபுரீஸ்வரர்

அம்பிகை : சிங்காரவல்லி, பெரிய நாயகி

தீர்த்தம் : சுந்தர தீர்த்தம்

பதிகக் குறிப்பு: ஈசன், ஐந்தொழில் ஆற்றும் சிறப்பு குறிக்கப் படுகிறது. இம்மைப் பயன் நனி தரும் பதிகம். ஒவ்வொரு திருப்பாட்டிலும் பயன் உரைத்த பாங்கு உணரத் தக்கது.

திருவிராகம்

பண் : நட்டபாடை

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17657

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

217. புவம்வளி கனல்புனல் புவிகலை உரைமறை
திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்திகழ்தரும்
உயிர்அவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன்
மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநிலன்
இனிநிலை பெறுவரே.

தெளிவுரை: ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், மண், அறுபத்தி நான்கு கலைகள், உரைக்கும் வேதம், சத்துவ, ரஜோ, தாமசம் ஆகிய முக்குணங்கள் அமையும் நெறிமுறை யாவும் விண்ணுலகத்தில் விளங்கும் தேவர்கள் மற்றும் உயிர் வகைகளுக்கு - அவ்வவற்றின் வினைக்கு ஏற்ப, படைத்தல் தொழில் செய்து தோன்றச் செய்பவன், பிரமன். அவன் சிவபெருமான் திருஉருவத்தை மனத்தில் பதித்தமையால் இத் தொழிலைச் செய்பவனாகிறான். இச் சிறப்புடன் சிவபுரத்தை நினைத்து வணங்குபவர்கள் செழுமையான இந்நிலவுலகில் இனிய நிலையைப் பெறுவார்கள்.

புவம் – ஆகாயம்; கனல் – தீ; புவி – மண்; வளி – காற்று; புனல் – நீர்.

218. மலைபல வளர்தரு புவிஇடை மறைதரு
வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முதல் உலகுகள் நிலைபெறு
வகை நினைவொடு மிகும்
அலைகடல் நடுஅரி துயில்அமர்அரிஉரு
இயல்பரன் உறை பதி

Koviloor Digital Library

சிலைமலி மதிள்சிவ புரநினைபவர்திரு
மகளொடு திகழ்வரே.

தெளிவுரை: *மலைகள் வளர்ந்தோங்கும் புவியில் வேதங்களை வழிவழியாக ஓதும் மாந்தர்களும், தேவர்களும் மற்றும் எல்லா உலகங்களும் நிலைபெற்று இருக்க வேண்டும் என்ற நினைப்புடன் பாற்கடலின் நடுவே அரிதுயில் கொள்ளும் திருமால் உருவின் இயல்புடன் சிவன் உறையும் பதியாகிய சிவபுரத்தை நினைத்து வணங்குபவர்கள் பொருட் செல்வத்தை வளமுடன் பெற்றவர்கள் ஆவார்கள்.*

அரிதுயில் – யோக நித்திரை.

219. பழுதிலகடல்புடை தழுவியபடிமுத
லிய உலகுகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள்குலமலி
தரும் உயிர்அவை யவை
முழுவதும் அழிவகை நினைவொடுமுதல்உரு
இயல்பரன் உறைபதி
செழுமணி அணிசிவ புரநகர் தொழுமவர்
புகழ்மிகும் உலகிலே.

தெளிவுரை: *பழுது இல்லாத கடலால் சூழப்பட்ட இவ் உலகம் முதலாக எல்லா உலகங்களும், தேவர்கள் மற்றும் மக்கட் குலமும் பிரளய காலத்தில் அழியும் போது எல்லாவற்றையும் - அவ்வவ் உயிர்களையும், தமது திருமேனியில் ஒடுங்குமாறு செய்து அவ் இயல் புடன் பரன் உறையும் பதியாகிய சிவபுரத்தை வணங்கித் தொழுபவர்கள், உலகில் புகழுடன் விளங்கு வார்கள்.*

படி – உலகம்

Koviloor Digital Library

220. நறைமலி தரும்அள றொடுமுகை நகுமலர்
புகைமிகு வளர்ஒளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும்
வழிபடும் அடியவர்
குறைவில பதம்அணை தரஅருள் குணம்உடை
இறைஉறைவன பதி
சிறைபுனல் அமர்சிவ புரமது நினைபவர்
செயமகள் தலைவரே.

தெளிவுரை: *மணம்மிக்க சந்தனம், அரும்பு அவிழ்ந்த மலர், தூபம், தீபம், புனித நீர், இவ்வாறான அபிஷேகப் பொருள்களால் ஒன்றிய சிந்தையுடன் விதிப்படி வழிபடும் அடியவர்கள், குறைவற்ற சிவனடியை நல்கும் அருள்குணம் உடைய இறைவன் உறையும் வனப்பு மிகுந்த பதியாகிய நீர்ப் பொய்கையுடைய சிவபுரத்தை நினைத்து வணங்குபவர்கள் ஆவர். அத்தகையோர், யாவற்றிலும் வெற்றி பெறுவர்.*

நறை – மணம்; அளறு – சந்தனம்; முகை – அரும்பு; புகை – அகிற் புகை, தூபம்; ஒளி – தீபம்; நியதம் – நியதி, விதிப்படி; வனபதி – வனப்பு மிகுந்த அழகிய பதி; சிறைபுனல் – பொய்கை, குளம்.

221. சினமலி அறுபகை மிகுபொறி சிதைதரு
வகைவளி நிறுவிய
மனன் உணர் வொடுமலர் மிசைஎழு தருபொருள்
நியதமும் உணர்பவர்
தனதுஎழில் உருவது கொடுஅடைதகுபரன்
உறைவது நகர்மதில்
கனமருவியசிவ புரநினை பவர்கலை
மகள்தர நிகழ்வரே.

தெளிவுரை: *சினம் மற்றும் ஆறுவகையான பகையாகிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) இவைகளையும் புலன்களின்*

Koviloor Digital Library

நாட்டத்தினால் மனம் சிதையாமல் ஒருமுகப்படுத்தி, இதய மலரின்கண் எழுதுவதற்கும் எண்ணுவதற்கும் அரும் பொருளாகிய பரம்பொருளைத் தியானம் செய்து யாண்டும் ஒழுகுபவர்கள், எழில் உருவாக விளங்கும் பரன் உறையும் நகராகிய சிவபுரத்தை நினைப்பவர் ஆவர். அத்தகையோர் மெய்ஞ்ஞானம் உற்றவர்கள்.

222. சுருதிகள் பலநல முதல்கலை துகள்அறு
வகைபயில் வொடுமிகு
உருவியல் உலகவை புகழ்தர வழிஒழுகு
மெய்உறு பொறிஒழி
அருதவ முயல்பவர் தனதுஅடிஅடைவகை
நினைஅரன் உறைபதி
திருவருள் சிவபுர நினைபவர்திகழ்குலன்
நிலன்இடை நிகழுமே.

தெளிவுரை: வேதங்களைக் குற்றமில்லாமல் நன்கு தெளிவாகப் பயின்று, அதனால் அகத்தின் அழகு பெருகவும், பொலிவு பெற்றுப் புகழும்படி அவ்வழி நின்று ஒழுகியும், மெய்முதலாகிய ஐம்புலன் வழி மனத்தைச் செல்லவிடாமல் காத்து அருந்தவத்தைக் கடைப்பிடித்தும் விளங்குபவர்கள், தனது திருவடியை அடையுமாறு திருஉளம் கொள்ளும் ஈசன் உறையும் பதியானது திருவருளைப் பொழியும் சிவபுரம் ஆகும். அப்பதியை நினைத்து வணங்குபவரின் குலமானது இவ்வுலகத்தில் திகழ்ந்திருக்கும்.

சிறப்புரை: வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு "குலம் திகழும்" எனச் சுட்டுவதாயிற்று.

சுருதி – வேதம். துகள் அறு – குற்றம் இல்லாது. திருவருள் சிவபுரம் – திருஅருளும் சிவபுரம்.

Koviloor Digital Library

223. கதமிகு கருஉரு வொடுஉகிர் இடவட
வரைகண கணஎன
மதமிகு நெடுமுகன் அமர்வளை மதிதிகழ்
எயிறுஅதன் நுதிமிசை
இதம்அமர் புவியது நிறுவிய எழில்அரி
வழிபட அருள்செய்த
பதம்உடை யவன்அமர் சிவபுரம் நினைபவர்
நிலவுவர் படியிலே.

தெளிவுரை: சினம் மிகுந்த கருமையான வடிவம் கொண்டு நகங்கள் பதியுமாறு உயரமாகிய மலைகள் அதிர, மதம் பொருந்திய நீண்ட முகத்தில் இருக்கும் பிறை மதியைப் போன்ற பிரகாசமான பற்களின் நுனியின் மீது உலகத்தை இதமாகத் தாங்கிய எழில் மிகுந்த திருமால் வழிபட, அருள்புரிந்த சிவபெருமான் வீற்றிருக்கும் சிவபுரத்தை நினைத்து வணங்குபவர், உலகத்தில் நலமுடன் விளங்குவர்.

சிறப்புரை: திருமால் வழிபட்ட திருத்தலச் சிறப்பு குறிக்கப்படுகிறது. திருமாலின் தேவியராகிய சீதேவி, பூதேவி இவர்களுள், பூமியானது பூதேவி ஆதலை "இதம் அமர் புவி" என்பது உணர்த்திற்று. "அருள் செய்த பதம்" என்பது திருவடி புரியும் அருளைச் சுட்டுவதாயிற்று.

கதம் – கோபம்; கருஉரு – கரிய வடிவம். உகிர் – நகம்; வளை – வளைந்த. எயிறு – பல்; நுதி – நுனி; அவன் – சிவன்.

224. அசைஉறு தவமுயல் வினில்அயன் அருளினில்
வருவலி கொடுசிவன்
இசைகயிலையை எழு தருவகை இருபது
கரம்அவை நிறுவிய
நிசிசரன் முடிஉடை தரஒரு விரல்பணி
கொளும்அவன் உறைபதி

Koviloor Digital Library

திசைமலி சிவபுர நினைபவர்செழுநிலன்
இனிநிகழ் உடையரே.

தெளிவுரை: உடம்பினை வருத்திக் தவம் புரிந்து பிரமனிடம் பல வரங்களைப் பெற்றவன் இராவணன். அந்த வர பலத்தைக் கொண்டு புகழ் மிக்க கயிலை மலையைப் பெயர்க்குமாறு தனது இருபது கரங்களைப் பயன்படுத்திய அவ் அரக்கன் தலையைப் பிளவு படுமாறு திருப்பாத விரலால் அழுத்திய சிவபெருமான் உறையும் பதி, எல்லாத் திசைகளிலும் புகழைப் பெருக்கும் சிவபுரம் ஆகும். அப்பதியை நினைத்து வணங்குபவர் உலகில் இனிய வாழ்க்கையை உடையவராவர்.

நிசிசரன் – இராவணன்.

225. அடல்மலி படைஅரி அயனொடும் அறிவரி
யதொர்அழல் மலிதரு
சுடர்உருவொடு நிகழ் தரஅவர் வெருவொடு
துதியது செயஎதிர்
விடமலிகள நுதல் அமர்கணது உடைஉரு
வெளிபடும் அவனகர்
திடமலி பொழில் எழில் சிவபுரநினைபவர்
வழிபுவி திகழுமே.

தெளிவுரை: வலிமை மிக்க சக்கராயுதத்தை உடைய திருமாலும், பிரமனும் அறிதற்கு அரியதோர் சோதி வடிவாகித் தோன்றி, பின்னர் அவர்கள் அதிர்ந்து வணங்கித் துதி செய்த காலத்தில் விடம் அருந்திய – (நீல) கண்டமும், நெற்றிக் கண்ணும் தோன்றுமாறு தமது காட்சியை வெளிப்படுத்திய ஈசன் திருநகர், அடர்த்தியான சோலைகள் சூழ்ந்த அழகிய சிவபுரம்

Koviloor Digital Library

ஆகும். அப்பதியை நினைத்து வணங்குபவர்களுக்கு. அவர்கள் எண்ணிவாறு உலகம் வளத்துடன் திகழும்.

அடல் – வலிமை.

226. குணம்அறிவுகள் நிலை இலபொருள்உரைமரு
வியபொருள் களும்இல
திணம்எனும் அவரொடு செதுமதிமிகுசம
ணருமலி தமதுகை
உணல்உடை யவர்உணர் வருபரன்உறைதரு
பதிஉலகினில் நல
கணமருவியசிவ புரநினைபவர்எழில்
உருஉடை யவர்களே.

தெளிவுரை: குணம், அறிவு முதலான யாவும் நிலை யற்றன என்னும் கொள்கையுடைய சமணர் முதலா னோர்களுக்கு உரைப்படாதவனாகிய பரமன் உறையும் பதியானது, நலம் திகழ் அடியார் திருக் கூட்டம் மருவும் சிவபுரம் ஆகும். அதனை நினைத்து வணங்குபவர்கள் அழகிய வடிவத்தை அடைவார்கள்.

நல கணம் – நற்கணத்தோர், அடியார் திருக்கூட்டம்; கணம் – கூட்டம்.

227. திகழ்சிவ புரநகர் மருவிய சிவனடி
இணை பணிசிரபுர
நகர்இறை தமிழ்விரகனது உரைநலமலி
ஒருபது நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருஉரு நிகரில
கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி அடிமையின் மிகைபுணர்
தரநல மிகுவரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: சிவபுரத்தில் எழுந்தருளியுள் ஈசனின் இணையடி மலரைப் பணியும் சீகாழித் தலைவரான திருஞானசம்பந்தர் உரைத்த இத் திருப்பதிகத்தை நவில் பவர்கள், குலம், நிலம், நிறைந்த செல்வம், நல்ல அழகு தோய்ந்த வடிவம், நிகரில்லாத கொடைப்பாங்கு, வெற்றி, புகழ், உலகம் சிறக்குமாறு கொள்ளும் நன்மார்க்கம் ஆகியவற்றை நலமுடன் வாய்க்கப் பெறுவர். மேலும் பணி செய்வதற்குரிய ஏவலர்கள் மிகையான அன்புடன் வாய்க்கப் பெற்று தரத்தில் சிறப்புற்று விளங்குவர்.

22. திருமறைக்காடு

தல விளக்கம்: சோழ நாட்டு – காவிரித் தென்கரைத் தலம். வேதாரண்யம் என வழங்கப்படுகிறது. வேதங்கள் வழிபட்டது. விளக்கிலிருந்த எண்ணெயைப் பருக வந்த எலியின் செயல் எதேச்சையாக, விளக்கு சுடர்விட்டு எரியுமாறு நிகழ்ந்தது. அச்சிவ புண்ணியம், அந்த எலியானது பின்னர் மாவலிச் சக்கரவர்த்தி யாகும் பேற்றினைத் தந்தது.

அகத்தியர், விசுவாமித்திரர், வசிட்டர், நாரதர், கௌதமர், பிரமன், இராமபிரான் முதலானோர் வழிபட்ட திருத்தலம்.

அகத்தியருக்கு ஈசன் திருமணக் கோலத்துடன் காட்சி தந்த திருத்தலம் ஆகும். இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று.

வேதங்கள் ஈசனைப் பூசித்த பின்னர் திருக்கதவம் அடைக்கப்பெற்று எவ்வாற்றானும் திறக்கப் பெறாமல் இருந்தன. திருநாவுக்கரசர் அக்கதவம் திறக்கவும்,

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் பழையபடியே பொருந்தி மூடவும் திருப்பதிகம் இசைத்து அற்புதம் நிகழ்த்தினர்.

சுவாமி : மறைக்காட்டீசர், வேதாரண்யேஸ்வரர்

அம்பிகை : யாழைப் பழித்த மொழியம்மை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : மணிகர்ணிகை, வேததீர்த்தம் (கடல்)

திருவிராகம்

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

228. சிலைதனை நடுவிடை நிறுவியொர்சினமலி
அரவது கொடுதிவி
தலமலி சுரர்அசு ரர்கள்ஒலிசலசல
கடல்கடை உழிமிகு
கொலைமலி விடம்எழ அவர்உடல் குலைதர
அதுநுகர்பவன் எழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பினைக் கயிறாகவும் கொண்டு விண்ணுலகத்தின் தேவர்கள் ஒருபுறமும், அசுரர்கள் மற்றொரு புறமும் இருந்து சலசல என்னும் ஒலி எழுமாறு பாற்கடலைக் கடையும்போது கொடிய விடமானது எழுந்தது. அது தேவர்களுக்கும் அசுரர் களுக்கும் அச்சமும் நடுக்கமும் கொடுத்தது. சிவபெரு மான் அக்கொடிய நஞ்சினை அருந்திய பரமன். அவன். மலைபோன்ற பெரிய மதில்கள் சூழ்ந்த மறைக் காட்டில் வீற்றிருக்கின்றான்.

Koviloor Digital Library

சிலை – மந்திர மலை. அரவு – வாசுகி என்னும் பாம்பு. திவிதல – விண்ணுலகம். சுரர் – தேவர். கொலை மலி – கொடிய. மறைவனம் – திருமறைக்காடு

229. கரம்முத லியஅவ யவம்அவை கடுவிட
அரவது கொடுவரு
வரன்முறை அணிதரும் அவன்அடல்வலிமிகு
புலிஅதள் உடையினன்
இரவலர் துயர்கெடு வகைநினை இமையவர்
புரம்எழில் பெறவளர்
மரநிகர் கொடை மனி தர்கள்பயில் மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: திருக்கரம் முதலாகத் திருமேனியில் உள்ள அவயவங்கள் யாவற்றினும், கடுமமையான பாம்பு மற்றும் பிற அனைத்தையும் வரன் முறையுடன் அணிகலனாகச் சூடியவன், சிவபெருமான். அவன் வலிமை மிக்க புலியின் தோலை உடையாகக் கொண்டவன். இல்லை என்று யாசிப்பவர்களுடைய துன்பத்தைத் தீர்க்கவும், தேவலோகம் சிறப்புக் கொள்ளவும் செய்யும் கற்பக மரத்தை ஒத்த நற்பண்பு நிறைந்த மாந்தர்கள் விளங்கும் மறைக் காட்டில் அப்பெருமான் வீற்றுள்ளான்.

சிறப்புரை: பாம்பு, [illegible]க்கிறகு, பிறைமதி முதலான வற்றை அணியாகக் கொண்டுள்ள ஈசனார் திருக் கோலத்தை "வரன்முறை அணிதரும் அவன்" என்னும் தொடர் உணர்த்திற்று.

இரவலர் – யாசிப்பவர். மரம் – கற்பகத் தரு.

230. இழைவளர் தருமுலை மலைமகள் இனிது உறை
தரும்எழில் உருவினன்
முழையினில் மிகுதுயில் உறும்அரிமுசிவொடும்
எழமுளரியொடு எழு

Koviloor Digital Library

கழை நுகர்தருகிரி இரிதரு கயிலையில்
மலிபவன் இருள்உறும்
மழைதவழ் தருபொழில் நிலவிய மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: அழகிய ஆபரணங்களைத் தனங்களில் பொருந்துமாறு அணிந்த உமாதேவி இனிதாய் இடப் பாகத்தில் உறையுமாறு செய்த அழகிய வடிவம் கொண்டவன் சிவபெருமான். அப்பெருமான், குகையில் நீண்ட துயில் கொள்ளும் சிங்கம் தனது கொடூரத்தை நீக்கி எழவும், கரும்பை உணவாகக் கொள்ளும் யானையின் மதம் பொருந்திய உணர்வு கெடுமாறும் இனிய தன்மையுடைய திருக்கயிலையில் விளங்குபவன். அவன், இருண்ட மேகம் போன்று பொழிலை யுடைய மறைக்காட்டில் வீற்றிருக்கும் பரமன்.

சிறப்புரை: சிங்கமும், யானையும் தத்தம் இயல்பின தாகிய விலங்கின் வன்மையையும், கொடுஞ் செயலை யும் அற்றுள்ள சிறப்பினைத் திருக்கயிலை புரிதலைக் காட்டிற்று.

இழை – இழைக்கப் பெற்ற ஆபரணம். முழை – குகை. முசிவு – மெலிதல், வன்மை கெடுதல். முளரியொடு எழுகழை – தாமரை மலரொடு கரும்பு வளர்தல் – நீர் நிலைச் சிறப்பு புகலுதல். இரிதரு – கெடுதல், வன்மை யழிதல்.

231. நலமிகு திருஇத ழியின்மலர் நகுதலை
யொடுகன கியின்முகை
பலசுர நதிபட அரவொடு மதிபொதி
சடைமுடி யினன்மிகு
தலநில வியமனி தர்களொடு தவமுயல்
தருமுனி வர்கள்தம

Koviloor Digital Library

மலம்அறு வகைமன நினைதரு மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: நலத்தின் மிக்க கொன்றை மலரும், தலை மாலையும், ஊமத்தை மலர், கங்கை, அரவம், இளம் பிறை மதி யாவும் சடை முடியில் தரித்து உள்ளவன், ஈசன். திருத்தலங்களில் வாழும் மாந்தர்களும் தவமுனிவர்களும் தத்தம் மலங்கள் அற்று வீழும்படி நினைக்குமாறு செய்யும் மறைக்காட்டில் அப்பெருமான் வீற்றுள்ளான்.

சிறப்புரை: ஈசனால் ஏற்றுத் தரிக்கப்பெற்ற கொன்றை மலர் முதலான பொருள்கள் நலத்தின் மிக்கதாயிற்று என்பதனை "நலமிகு திருஇதழி" என்பது உணர்த்திற்று. ஆன்மாக்கள் ஈசனைப் பொருந்தி நலம்பெற வேண்டும் என்பது குறிப்பால் உணர்த்தப் பெற்றது.

இதழி – கொன்றை. கனகி – ஊமத்தை. முகை – அரும்பு, ஊமத்தை மலரை விளக்கிற்று.

232. கதிமலி களிறது பிளிறிட உரிசெய்த
அதிகுணன் உயர்பசு
பதிஅதன் மிசைவரு பசுபதி பலகலை
அவைமுறை முறைஉணர்
விதிஅறி தருநெறி அமர்முனி கணனொடு
மிகுதவமுயல் தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர் மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: மிகுந்த சினத்துடன் வந்த யானை, பிளிறல் செய்து ஓலம் இடும்படி அதன் தோலை உரித்த சிறப்பான குண விசேடனாகியவன், ஈசன். அவன் பசுபதியானவன். அதற்கு மேலும், உயிரைப் பற்றியும் பதியைப் பற்றியும் நன்கு முறைப்படி சிந்தித்து

Koviloor Digital Library

உணர்ந்து, அதற்குரிய விதிகள் வழி நிற்கும் அறிஞர் களுடன் சேர்ந்து தவத்தை மேற்கொள்பவர்களும் அவற்றில் பாண்டித்தியம் பெற்ற அதி நிபுணர்களும் வழிபடும் திருமறைக்காட்டில் அப்பெருமான் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: சினத்துடன் எதிர்த்து வந்த யானையின் விரைவும் பின்னர், ஈசன் மறக்கருணையால் புகலிட மாக விளங்கி நற்கதி பெற்றமையும், "கதிமலி கயிறு" என்பது உணர்த்திற்று.

கதி – சினத்தல், விரைவு, புகலிடம். பசுபதி – உயிர்களுக்குப் பதியானவன், உயிர் போன்ற பதியும் ஆவன். பசுபதி – இறைவன்.

233. கறைமலிதிரிசிகை படைஅடல் கனல்மழு
எழுதர வெறிமறி
முறைமுறை ஒலிதம ருகம்உடைதலை முகிழ்
மலிகணி வடமுகம்
உறைதருகரன்உல கினில் உயர்ஒளிபெறு
வகை நினை வொடு மலர்
மறையவன் மறைவழி வழிபடு மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: மாற்றாரை அழிப்பதனால் உண்டாகும் குருதிக்கறை படர்ந்த திரிசூலம், நெருப்பை ஒத்த மழு, வெறித்த நோக்குடைய மான், முறையான ஒலி எழுப்பும் உடுக்கை, பிரம கபாலம், கூரிய ஆயுதம், வடவாக்கினி போன்ற சுவாலைமிகுந்த தீ ஆகியவற்றை உடையவன் ஈசன். உலகத்தில் புகழ் ஓங்கி நிற்குமாறு, தாமரை மலர் மீது விளங்கும் பிரமன், வேத விதிப்படி வழிபடும் மறைக்காட்டில், அப்பெருமான் வீற்றுள்ளான்.

Koviloor Digital Library

சிறப்புரை: வேதமும், பிரமனும் பூசித்த திருத்தலப் பெருமை உணர்த்தப் பெற்றது. மறையவனாகிய பிரமனும், மறையாகிய வேதமும் வழிபாட்டு முறைப்படி பூசிக்கும் என்பதும் ஆம்.

திரிசிகை – சூலம்; மறி – மான்; தமருகம் – உடுக்கை; கணி – ஒருவகைப் படை; ஒளி – புகழ்; மறை – வேதம்.

234. இருநிலனது புனல் இடைமடி தரளரி
புகளரி அதுமிகு
பெருவெளி யினில்அவி தரவளி கெடவியன்
இடைமுழு வதுகெட
இருவர்கள் உடல்பொறை யொடுதிரி எழில்உரு
உடையவன் இனமலர்
மருவிய அறுபதம் இசைமுரல் மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: பூமியானது (நிலம்) நீரிலும், அது தீயிலும், தீயானது வளியிலும், வளி வானிலும் ஒடுங்கும் நிலையில், திருமாலும் பிரமனும் சுமையாகிய உடலைக் கொண்டு திரிந்தனர். ஐம்பெரும் பூதங்களும் ஒன்றின் ஒன்றாய் ஒடுங்கவும், அவற்றைத் தன்னில் ஒடுக்கவும் எழில் மிக்கவனாகிய ஈசன், வண்டுகள் ரீங்காரம் செய்யும் மறைக்காட்டில் வீற்றுள்ளான்.

வியன் – ஆகாயம், பெருமை, வேறுபாடு. இறைவன் யாவும் கடந்து விளங்குதலை உணர்த்திற்று.

235. சனம்வெரு வுறவரு தசமுகன் ஒருபது
முடியொடும் இருபது
கனமரு வியபுய நெறிவகை கழலடி
யில்ஓர் விரல் நிறுவினன்
இனமலி கணநிசி சரன்மகிழ்வுறஅருள்
செய்த கருணையன் என

Koviloor Digital Library

மனமகிழ் வொடு மறை முறைஉணர் மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: நிலவுலக மக்கள் நடுங்குமாறு இராவணன் பத்துத் தலையும் வலிமை மிக்க இருபது தோள்களும் கொண்டு கயிலையைப் பெயர்த்தபோது அவ் அரக்கன் துன்புறுமாறு ஒரு விரலால் ஊன்றி, பின்னர் அவன் மகிழுமாறு நல்வரங்களைத் தந்தருளியவன் ஈசன். அக்கருணை வள்ளலாகிய பரமன், வேதங்கள் மகிழ்ச்சியுடன் முறையோடு வணங்கும் மறைக் காட்டில் அமர்ந்துள்ளவன்.

சனம் – மக்கள்; புயநெறிவகை – தோள்கள் வளைப்பட்டுத் துன்புறும் வகையில்; நெறித்தல் – வளைத்தல்.

236. அணிமலர் மகள்தலை மகன்அயன் அறிவரி
யதொர் பரிசினில் எரி
திணிதரு திரள்உரு வளர்தர அவர்வெரு
வுறலொடு துதிசெய்து
பணியுற வெளியுறு வியபரன் அவன்உரை
மலிகடல் திரள்எழும்
மணிவளர் ஒளிவெயில் மிகுதரு மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: அழகு பொருந்திய தாமரை மலரில் திகழும் திருமகள் தலைவனாகிய திருமாலும், பிரமனும் அறியமுடியாதபடி சோதி வடிவாகிப் பெருகி வளர்ந்தவனாய், பின்னர் அவர்கள் பணிந்து துதி செய்தபோது வெளிப்பட்டுத் தோன்றித் திருக் காட்சி நல்கிய பரமன், ஒலி தரும் கடல் அலைகளும், மாணிக்கத்தை ஒத்த சுடர் ஒளிசேர் வெயிலும் தரும் மறைக்காட்டில் அமர்ந்துள்ளவன்.

வெருவுறல் – அச்ச உணர்வுடன் விதிர்த்தல்; அணிமலர் – தாமரை.

Koviloor Digital Library

237. இயல்வுஅழிதர விதுசெலவுற இனமயில்
இறகுஉறு தழையொடு
செயல்மருவிய சிறுகட முடிஅடைகையர்
தலைபறி செய்து தவம்
முயல்பவர் துவர்பட முடல்பொழி பவர்அறி
வருபரன் அவன்அணி
வயலினில் வளைவள மருவிய மறைவனம்
அமர்தரு பரமனே.

தெளிவுரை: இயல்பாகிய வெப்பம் கெடுமாறு மயில் இறகால் செய்யப்பட்ட விசிறியைக் கொண்டு தண்மையைக் கொள்பவர்களும், தலையின் சிகை நீக்கித் தவக்கோலத்தைப் புனைந்தவர்களுமாகிய புறச் சமயத்தவர்களுக்கு அறிய மாட்டாதவனாகிய பரமன், அழகிய வயல்களில் சங்குகளின் வளப்பமாகிய முத்துக்கள் பரவிய மறைக்காட்டில் அமர்ந்துள்ளவன்.

சிறப்புரை: வயல்களில் நெற்பயிரும் முத்துக்களும் வளமுறச் சேர்தல் "அணிவயல்" எனச் சிறப்பிக்கப் பட்டது. அந்நிலையானது ஈசன் அருளால் மேவுதலை "பரன் அவன் அணிவயல்" என்பது உணர்த்திற்று.

விது – தண்மை; முடல் பொதிபவர் – மாயை வயத்தால் உண்மையை அறிந்து கொள்ளாமல் தருக்கி நிற்பவர்.

238. வசைஅறு மலர்மகள் நிலவிய மறைவனம்
அமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள்
புகழ்வழி வளர்தரு
இசைஅமர் கழுமல நகர்இறைதமிழ்விர
கனதுஉரை இயல்வல
இசைமலி தமிழ்ஒரு பதும்வல அவர்உல
கினில் எழில் பெறுவரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: வசை இல்லாது திருமகள் வாசம் புரிந்து செல்வ வளம் பெருக்கும் மறைக்காட்டில் வீற்றிருப்பவன் ஈசன். அவனை, விருப்பத்துடனும் பக்தியுடனும் பல சாத்திரங்களைப் பயிலும் அறிஞர் பெருமக்களால் புகழப்படுகின்ற பெருமைமிக்க கழுமல நாதனால் ஆட்கொள்ளப்பெற்ற திருஞானசம்பந்தர் போற்றி உரை செய்த இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள் எழில் பெறுவார்கள்.

சிறப்புரை: செல்வம் ஓரிடத்தில் எக்காலத்திலும் நிலைத்து நிற்பதில்லை என்னும் தன்மை திருமகளுக்கு ஏற்றிக் கூறப்படுதலும் அது வசையாக மொழிதலும் உலக நடை. அத்தகைய வசையானது மறைக்காட்டில் இல்லை என்னும் கருத்தினை "வசையறு" என்பது உணர்த்துவதாயிற்று. கலை பல பயில்பவர்கள் அறிஞர் பெருமக்கள் என்னும் பண்பு கூறுதலும், அப்பெரு மக்கள் விருப்பத்துடன் பயிலும் சிறப்பும், இவண் நிலவுவதாயிற்று. இது சீகாழிப்பதியின் சிறப்பு.

கழுமல நகர் இறை தமிழ் விரகன் – ஆளுடைய பிள்ளையாகிய திருஞானசம்பந்தரைக் குறித்தது. இத் திருப்பதிகத்தைப் பொருள் அறிந்து மனத்தில் நன்கு இருத்தி ஓத வேண்டும் என்பதனை "ஒருபதும் வல" எனும் தொடர் உணர்த்திற்று. வசை – குற்றம்; இறை – ஈசன்; உரை இயல்வள இசைமலிதமிழ் – உறுதி பயக்கும் சொல்லாகவும் உள்ளத்தை நெகிழ வைக்கும் இனிமையான இசை உடையதாகவும் விளங்கும் சிறப்பான தமிழ்.

23. திருக்கோலக்கா

தல விளக்கம்: சோழ நாட்டு – காவிரி வடகரைத் தலம். சீகாழிக்கு அண்மையில் உள்ளது. அகத்தியர், கண்வர் வழிபட்டது.

Koviloor Digital Library

சுவாமி : சப்தபுரீஸ்வரர்

அம்பிகை : ஓசை கொடுத்த நாயகி

தல மரம் : கொன்றை

தீர்த்தம் : ஆனந்த தீர்த்தம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர் இறைவனைத் தரிசித்துத் தமது திருக்கரத்தால் கைத்தாளமிட்டுப்பாட இறைவன் பொற்றாளம் நல்கினார். அம்பிகையின் அருளால் தாளத்தில் ஓசை எழுந்தது.

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

239. மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும்கீழ்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ.

தெளிவுரை: மடைகளில் வாளை மீன்கள் மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கவும், மாதர்கள் குளத்தில் குடைந்து நீராடி மகிழவும் விளங்குகின்றது கோலக்கா என்னும் ஊர். அங்கு எழுந்தருளியுள்ள ஈசன், சடைமுடியும், இளம் பிறைமதியும், திருநீற்றின் பூச்சும், கோவண ஆடையும் கொண்டுள்ள வடிவம் உடையவன். இது என்கொல்!

சிறப்புரை: மாதர்கள் குளத்தில் நீராடுதல் இறைவனைத் தொழுதலின் நோக்கமும், தொழுதற்குரிய சாதனமும் உணர்த்துவதாயிற்று. இது மக்கள் பண்பின் மேன்மையைச் சுட்டும்.

240. பெண்தான் பாகமாகப் பிறைச் சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்

Koviloor Digital Library

கண்டான் பாதம் கையால் கூப்பவே
உண்டான் நஞ்சை உலகம் உய்யவே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியைப் பாகமாகவும், வெண்பிறைச் சந்திரனைத் தலையிலும் கொண்டவன். அப்பெருமான், கோலக்காவை இருப்பிடமாகக் கொண்டான். தேவர்கள் அவன் திருவடியைக் கூப்பித் தொழுது வணங்க, உலக நன்மையைக் கருதி நஞ்சை உண்டு பாதுகாத்தான்.

கண்டான் – தேர்ந்தெடுத்து மேவினான்.

241. பூண்நல் பொறிகொள் அரவம் புன்சடை
கோணல் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே.

தெளிவுரை: அரவத்தை ஆபரணமாகப் பூண்டு, சடைமுடியில் வளைந்த பிறைச் சந்திரனைக் கொண்ட அழகனாகக் கோலக்காவில் விளங்கும் ஈசனைப் பெருமையோடு துதித்துப் பாடி, மறைவல்லவனாகிய அவனை நன்கு பூசித்துப் பேணுதல் செய்யப் பிணிகள் யாவும் நீங்கும்.

சிறப்புரை: ஒளியும், செவிப்புலனும் மிக்குள்ள தன்மையைப் "பொறிகொள் அரவம்" எனும் தொடர் உணர்த்திற்று. வாய் மணக்கப் பாடுதலும், ஈசன் மறை வல்லவனாதலால் அவன் யாவற்றிலும் வல்லவ னாதலையும் உணர்த்துதல் காண்க. பேணுதலாவது இறைவனைப் பூசித்தலும் தூப, தீப, நைவேத்யங்களால் ஆராதிப்பதும் ஆகும். பறையும் என்பது நீங்கிச் செல்லும் விரைவும், திரும்ப அணுகாத தன்மையும் உணர்த்துவதாயிற்று.

Koviloor Digital Library

242. தழுக்கொள் பாவம் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசேர் அங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ணம் ஏத்தி வாழ்மினே.

தெளிவுரை: *வினையாகிய தழுவைக் கொள்ளும் பாவத்தைப் போக்க வேண்டும் என்று வேண்டுபவர் களே! திருக்கோலக்காவில் திருக்கரத்தில் மானும், மழுவும் ஏந்தி பூதப்படைகள் சூழ, விளங்கும் ஈசனை ஒழுக்கம் தவறாமல் துதித்து வாழ்வீர்களாக.*

சிறப்புரை: *ஈசனைத் துதித்தல் பாவத்தைத் தீர்க்கும் என உணர்த்தப்பட்டது.*

243. மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே.

தெளிவுரை: *மயில்போன்ற வண்ணமிகு சாயலை யுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடைய ஈசன், மும்மதில்களையுடைய கோட்டைகளை எரித்து அழித்தவன். அவன், குயில்கள் பாடிப் பொருந்தும் சோலை சூழ்ந்த கோலக்காவை நெஞ்சார நினைத்துப் போற்ற பாவம் விலகும்.*

சிறப்புரை: *உமாதேவி மயில் வடிவம் தாங்கி ஈசனை வழிபட்டமையும் கருத்தில் கொள்க.*

மாதோர் பாகம் – மாதை ஒரு பாகம், மாதுஒர் பாகம்; ஓர் – ஓர்தல், நினைத்தல், அறிதல்.

244. வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்

Koviloor Digital Library

கொடிகொள் விழவார் கோலக் காவுள்எம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே.

தெளிவுரை: கண்ணுக்குப் புலனாகாமல் திடீரென்று தாக்க வல்ல தீய வினைகளை அகற்ற வேண்டும் என்று வேண்டுபவர்களே! மணம் மிக்க கொன்றை மலரைச் சென்னியில் சூடிய எம் அடிகளாகிய, விழாக்கள் பெருகும் கோலக்கா மேவியவனை அடைந்து அவனது திருவடியைப் பணிந்து வாழ்வீர்களாக.

சிறப்புரை: திருவடி போற்றுதல் வினை நீக்கம் பெறும் என உபதேசம் வழங்குவதாயிற்று.

245. நிழலார் சோலை நீல வண்டினம்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதம் கைகளால்
தொழலார் பக்கல் துயரம் இல்லையே.

தெளிவுரை: நிழல் தரும் சோலைகளில் உள்ள மலர்களைச் சூழ்ந்து கரிய வண்டுகள் புல்லாங் குழலை நிகர்த்த பண் இசைத்துப் போற்ற, கோலக்காவுள் ஈசன் மேவினன். அவன் திருவடியைத் தொழுபவர்களுக்குத் துயரம் இல்லை.

கழலால் மொய்த்தபாதம் – வீரக்கழல் அணியப் பெற்றதும் கொடுக்கும் இனிமையுற்றதும் ஆகிய திருவடி; மொய்த்தல் – கொடுத்தல், வள்ளல் தன்மை சார்தல். தொழலார் பக்கல் – தொழுபவர்கள் மற்றும் அவர்களைச் சூழ்ந்து அண்மையில் இருப்பவர்களையும் குறித்தல்

246. எறிஆர் கடல்சூழ் இலங்கைக் கோன்தனை
முறிஆர் தடக்கை அடர்த்த மூர்த்திதன்
குறிஆர் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே.

Koviloor Digital Library

தெளிவுரை: அலைகளைக் கரையில் எறிந்து வீசும் கடல் சூழ்ந்த இலங்கைக் கோனாகிய இராவணனுடைய முறியும் தன்மையுடைய நீண்ட கைகளைத் துன்புறுத்தியவன், ஈசன். தன்னையே குறியாகக் கொண்டு பண் பாடிப் போற்றும் நெறியுடையவராய்க் கோலக்காவில் தொழுபவர்களுக்கு வினைகள் யாவும் நீங்கும். ஆதலால் அப்பெருமானை நெறி முறைப்படி வணங்குதல் வேண்டும்.

247. நாற்ற மலர்மேல் அயனும் நாகத்தில்
ஆற்றல் அணைமே லவனும் காண்கிலாக்
கூற்றம் உதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாதம் ஏத்தி வாழ்மினே.

தெளிவுரை: நறுமணம் கமழும் தாமரை மலர்மீது விளங்கும் பிரமனும், அரவணையில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலும் காண்கிலாதவனாகிக் காலனை உதைத்த அழகனான ஈசன் திருக்கோலக் காவை இடமாக உடையவன். அவனுடைய திருவடியை வணங்கி வாழ்வீர்களாக.

ஏற்றான் – இடப வாகனன் எனலும் ஆம்.

248. பெற்ற மாசு பிறக்கும் சமணரும்
உற்ற துவர்தோய் உருவி லாளரும்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே.

தெளிவுரை: சமணர் மற்றும் குற்றமுள்ள நெறியுடைய பிறர், நன்மையைக் கொள்ள மாட்டார்கள். கோலக்காவில் மேவும் ஈசன்மீது பற்றுக்கொண்டு வணங்கிப் போற்றுபவர்களின் பாவம் நீங்கும்.

Koviloor Digital Library

249. நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஞானப்பால் அருந்தி எல்லா நலன்களும் கைவரப்பெற்ற ஞானசம்பந்தர், திருத் தொண்டர்தம் குலங்களைக் கொண்டு விளங்கும் திருக்கோலக்காவில் உறையும் ஈசனைப் போற்றி நன்மைகள் யாவும் கொண்டு விளங்கும்படி இசைத்த இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள், பாறை போன்ற வினை யாவும் நீங்கி ஓங்கி வாழ்வார்கள்.

வலங்கொள் – நன்மை தரும். உலம் – கற்பாறை.

24. சீகாழி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

250. பூவார் கொன்றைப் புரிபுன் சடைஈசா
காவாய் எனநின்று ஏத்தும் காழியார்
மேவார் புரமூன்று அட்டார் அவர்போலாம்
பாஆர் இன்சொல் பயிலும் பரமரே.

தெளிவுரை: கொன்றை மாலை சூடிப் புரிபுரியாக முறுக்கேறிய புல்லிய சடையுடைய ஈசா! எம்மைக் காத்தருள் புரிவாய் எனத் தேவர்க்ள் நின்று தொழுது ஏத்த, பகைவர்களாகிய மூன்று அசுரர்களையும் கோட்டைகளுடன் அழித்த பரமர், பாடல்களில்

Koviloor Digital Library

விளங்கும் இன் சொற்களின் பொருள்களை ஏற்கும் காழிப் பதியில் உறை நாதனேபோலும்.

காழியார் – ஈசன்

251. எந்தை என்றுஅங்கு இமையோர் புகுந்துஈண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமலர் அவர்போலாம்
அந்தி நட்டம் ஆடும் அடிகளே.

தெளிவுரை: எமது தந்தை என்று தேவர்களால் போற்றப் பட்டு மாலை சாற்றி வழிபடும் காழிப் பதியின் நாதனாகிய ஈசன், திருநீற்று மேனியர், விமலர், பிரளய காலத்தில் நட்டம் பயிலும் நடன மூர்த்தியாவார்.

நட்டம் – தாண்டவம்.

252. தேனை வென்ற மொழியாள் ஒருபாகம்
கான மான்கைக் கொண்ட காழியார்
வானம் ஓங்கு கோயில் அவர்போலாம்
ஆன இன்பம் ஆடும் அடிகளே.

தெளிவுரை: தேனினும் இனிய மொழியுடைய ஞானாம் பிகையாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் வைத்து, மானைக் கரத்தேந்தியவர் காழியார். அப்பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரிபவர். அவர் இடங் கொண்டிருப்பது அவரை நிகர்த்து ஓங்கும் சிறப்புடைத்து.

253. மாணா வென்றிக் காலன் மடியவே
காணா மாணிக்கு அளித்த காழியார்
நாணார் வாளி தொட்டார் அவர்போலாம்
பேணார் புரங்கள் அட்ட பெருமானே.

Koviloor Digital Library

தெளிவுரை: காலனுடைய வெற்றி மாட்சிமையற்றது. ஈசனைத் தவிர பிறிதொன்றும் காணாத மார்க் கண்டேயர் உயிரைக் காக்கும் பொருட்டு, காலனை மாய்த்தவர். ஈசன் பேணிக்காத்தற்கு ஒவ்வாத முப்புர அசுரர்களை எரித்துப் பொடி படுத்துவதற்குச் சரம் தொடுத்தவர் அப்பெருமான். அவர் காழிநகரில் விளங்குபவர் போலும்.

சிறப்புரை: பேணிக்காத்தற்கு ஒவ்வாத அசுரர்களை அழித்ததும், காக்கப்பட வேண்டிய மார்க் கண்டேயரைக் காத்ததும் இவண் உணர்த்தப் பெற்றது.

மாணா வென்றி – மாட்சிமையற்ற செயல் (உயிர் கவர்தல்) நாண் + ஆர் + வாளி – நாணில் பொருந்திய சரம்; வாளி – சரம். பேணார் – பேணிக்காக்கப்படுவதற்கு ஒவ்வாதவர். அட்ட – அழித்த.

254. மாடே ஓதம் எறிய வயல்செந்நெல்
காடே றிஇச்சங்கு ஈனும் காழியார்
வாடா மலராள் பங்கர் அவர்போலாம்
ஏடார் புரமூன்று எரித்த இறைவரே.

தெளிவுரை: கடலின் ஓதம், பக்கம் சார்தலால் அவ்வழி யாகச் சங்குகள் போந்து செந்நெலுடன் பொருந்தி விளங்குகின்றன. குற்றம் புரிந்த முப்புர அசுரர்களை எரித்த இறைவர் வாடா மலர் போன்ற உமாதேவி யாரைப் பாகமாக உடையவர். அவர் காழிப் பதியில் விளங்கும் ஈசனே போலும்.

மாடு – பக்கம்; காடு – மிகுதி. ஏடு – குற்றம். ஏடு ஆர் புரம் – குற்றமுடைய முப்புரம்.

255. கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்

Koviloor Digital Library

அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாம்
செங்கண் அரக்கர் புரத்தை எரித்தாரே.

தெளிவுரை: தேன் பெருகும் கொன்றை மலரும் கங்கையும் புனைந்த சடையுடைய ஈசன் அரவத்தை ஆடச் செய்பவராயும் விளங்கி, அரக்கர்தம் முப்புரங்களை எரித்தவர். அவர் காழிப்பதிநாதர் போலும்.

256. கொல்லை விடைமுன் பூதம் குனித்தாடும்
கல்ல வடத்தை உகப்பார் காழியார்
அல்ல இடத்து நடந்தார் அவர்போலாம்
பல்ல இடத்தும் பயிலும் பரமரே.

தெளிவுரை: இடப வாகனத்தின் முன் பூத கணங்கள் குதித்து ஆடவும் செய்யும். தன்னை ஏற்காதவர்கள் இடத்திலும் மற்றும் வேற்றுமையின்றி எல்லா இடங்களிலும் வியாபித்து இருப்பவர் ஈசன். அவர் கல்லால மரத்தின் அடியிலும் உகப்பவர். அவர் காழிப் பதியில் உறைபவர் போலும்.

சிறப்புரை: கல்லால நிழலில் யோக மூர்த்தியாய்த் தட்சணாமூர்த்தி வடிவம் கொண்டு நால்வாக்கு உபதேசம் செய்தது கல்லவடத்தை உகந்த தெனலும், தாருக வனத்தில் முனிபத்தினிகள்பால் பலியேற்றமை அல்ல இடத்து நடந்தார் எனலும் பொருந்தும்.

257. எடுத்த அரக்கன் நெரிய விரலூன்றிக்
கடுத்து முரிய அடர்த்தார் காழியார்
எடுத்த பாடற்கு இரங்கும் அவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே.

தெளிவுரை: மலையை எடுத்த அரக்கன் நெரியுமாறு விரலை ஊன்றி, சினத்தால் தண்டித்தார் ஈசன். பின்னர் அவ் அரக்கன் இசை எழுப்பித் துதி செய்ய

Koviloor Digital Library

இரக்கம் கொண்டு அருள் செய்தார். அவர் திருநீற்று மேனியராகிய காழியார் போலும்.

258. ஆற்றல் உடைய அரியும் பிரமனும்
தோற்றம் காணா வென்றிக் காழியார்
ஏற்றம் ஏறுஅங்கு ஏறும் அவர்போலாம்
கூற்றம் மறுகக் குமைத்த குழகரே.

தெளிவுரை: ஆற்றல் மிக்கவர்களாகிய மும்மூர்த்திகளுள் இருவரான திருமாலும், பிரமனும் ஈசனுடைய தோற்றத்தைக் காணாதவர்கள். கூற்றுவனைத் திருப்பாதத்தால் மாய்த்த ஈசன், ஏற்றம் மிகுந்த இடப வாகனத்தில் ஏறி காழிப் பதியில் விளங்குபவர் போலும்.

குமைத்தல் – வருத்துதல், அழித்தல்.

259. பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர்
கரக்கும் உரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த இறைவர் அவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத்து ஐயரே.

தெளிவுரை: பொருந்தாதவற்றைக் கூறும் சமணர், சாக்கியர் உரைகளைக் கொள்ளார் ஈசர். அவர் இருக்கு வேதத்தில் விளங்குபவர். அவர் உமையைப் பாகமாக உடைய காழியார் போலும்.

அருப்பு – அரும்பு. ஐயர் – தேவர்; தலைவர்.

260. காரார் வயல்சூழ் காழிக் கோன்தனைச்
சீரார் ஞானசம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத்து இனிதா இருப்பரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: பசுமையான வயல் சூழ்ந்த சீகாழித் தலைவனாகிய ஈசனைப் போற்றி, சீர் மிக்க திருஞான சம்பந்தர் சொன்ன இத் திருப்பதிகத்தை இவ் உலகமெல்லாம் பரவுமாறு ஓதி வழிபடுபவர்கள் அழகிய வானுலகில் இனிமையாக இருப்பர்.

கார் – பசுமை.

25. திருச்செம்பொன்பள்ளி

தல விளக்கம்: சோழநாட்டு – காவிரித் தென்கரைத் தலம். இந்திரன் வழிபட்டது. இது செம்பொனார் கோயில் என வழங்கப்படுகிறது. இந்திரபுரி, கந்தபுரி எனவும் வழங்கப்பெறும்.

அகத்தியர், பிரமன், இரதி, வசிட்டர், அஷ்டதிக்குப் பாலகர்கள், காவிரி, சமுத்திரம் முதலானோர் பூசித்த திருத்தலம்.

சுவாமி : சுவர்ணபுரீஸ்வரர், செம்பொன் பள்ளியார்

அம்பிகை : சுகந்தவன நாயகி, மருவார் குழலி

தல மரம் : வன்னி

தீர்த்தம் : இந்திர தீர்த்தம்.

பண் : தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

261. மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத்து ஈசன் கழல்களை
மருவா தவர்மேல் மன்னும் பாவமே.

Koviloor Digital Library

தெளிவுரை: மருவார் குழலி என்னும் திருநாமம் தாங்கிய உமாதேவியைப் பாகமாகக் கொண்டுள்ளவர் திருவார் செம்பொன் பள்ளியார் என்னும் திருநாமம் பூண்ட ஈசன். அவர் நீல கண்டத்தை உடையவர். அப் பெருமான் திருக்கழல்களைச் சாராதவர்பால் விளையும் பாவம் தீராது.

சிறப்புரை: தேவர்களைக் காப்பதற்கு, விஷத்தை அருந்தி நீலகண்டனாகத் திகழ்ந்த பரமன் வேண்டுவார் குறைகளைத் தீர்க்க வல்லவன் என்பதும், அவனை வணங்குதல் பாவம் தீரும் உபாயம் எனவும் உணர்த்தப் படுகிறது.

262. வாரார் கொங்கை மாதோர் பாகமாய்ச்
சீரார் செம்பொன் பள்ளி மேவிய
ஏரார் புரிபுன் சடைஎம் மீசனைச்
சேரா தவர்மேல் சேரும் வினைகளே.

தெளிவுரை: மார்பில் கச்சு அணிந்துள்ள உமா தேவியைப் பாகமாக உடைய சீரார் செம்பொன்பள்ளி மேவிய சடை முடியுடைய எம் ஈசனை நினைத்து வணங்காதவர்பால் வினை சேரும். இது ஈசன் திருவடியை நினைத்துத் தொழுதல் வேண்டும் என உணர்த்தியது.

263. வரைஆர் சந்தோடு அகிலும் வருபொன்னித்
திரைஆர் செம்பொன் பள்ளி மேவிய
நரைஆர் விடைஒன்று ஊரு நம்பனை
உரையா தவர்மேல் ஒழியா ஊனமே.

தெளிவுரை: மலைப் பகுதியில் உள்ள சந்தனத்தையும் அகிலையும் அலைகளின் மூலம் காவிரியானது கொணர்ந்து சொம்பொன்பள்ளியில் சேர்க்கும். அத்

Koviloor Digital Library

திருத்தலத்தில் வெள்ளை இடபத்தில் ஊர்ந்து காட்சி நல்கும் பரமனைப் போற்றித் துதிக்காதவர்களிடம் உள்ள குறைகள் தீராது. குறை தீர இறைவனைப் போற்ற வேண்டும் என்பது தெளிவுபடுத்தப் பெற்றது.

பொன்னி – காவிரி.

264. மழுவாள் ஏந்தி மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய
எழிலார் புரிபுன் சடைஎம் இறைவனைத்
தொழுவார் தம்மேல் துயரம் இல்லையே.

தெளிவுரை: மழுவையும், வாளையும் ஏந்தி, உமா தேவியைப் பாகமாகக் கொண்டு செழுமை மிக்க செம் பொன்பள்ளி மேவிய சடையுடைய எம் இறைவனைத் தொழுபவர்களுக்குத் துயரம் இல்லை.

265. மலையான் மகளோடு உடனாய் மதில்எய்த
சிலைஆர் செம்பொன் பள்ளி யானையே
இலைஆர் மலர்கொண்டு எல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே.

தெளிவுரை: மலையரசன் மகளாகத் தோன்றிய பார்வதி தேவியை உடனாகியும், முப்புரங்களின் கோட்டை மதில்களை எரிக்க மேருவை வில்லாகக் கொண்டவனாகவும் உள்ள செம்பொன்பள்ளி மேவிய சிவனை, இலையும், மலரும் கொண்டு இரவும் பகலும் ஒன்றிய மனத்தினராய் வணங்கிட, வினைகள் யாவும் நீங்கும்.

266. அறைஆர் புனலோடு அகிலும் வருபொன்னிச்
சிறைஆர் செம்பொன் பள்ளி மேவிய
கறைஆர் கண்டத்து ஈசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே.

Koviloor Digital Library

தெளிவுரை: திரைகள் மிக்க நீரில், அகில் சேரப் பெருகி வரும் காவிரியின் கரையில் விளங்கும் செம்பொன் பள்ளியில் வீற்றிருக்கும் நீலகண்டத்து ஈசன் கழல்களை, முழு மனத்துடன் வணங்க, வினைகள் யாவும் நில்லாது நீங்கும்.

267. பையார் அரவுஏர் அல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கைஆர் சூலம் ஏந்து கடவுளை
மெய்யால் வணங்க மேவா வினைகளே.

தெளிவுரை: விஷம் பொருந்திய அரவத்தை ஒத்த அல்குலை யுடைய உமாதேவியோடு செம்மை மிக்க செம்பொன்பள்ளி மேவிய, திருக்கரத்தில் சூலம் ஏந்திய கடவுளாகிய ஈசனைக் காயத்தால் வணங்க வினைகள் சாராது.

சிறப்புரை: காவிரி பாயும் வயலை உடைய செம் பொன்பள்ளிக்குச் "செய்யார்" அடைமொழியாதலும் ஆம்.

செய் – வயல்; ஆர் – பொருந்திய

268. வானார் திங்கள் வளர்புன் சடைவைத்துத்
தேனார் செம்பொன் பள்ளி மேவிய
ஊனார் தலையில் பலிகொண்டு உழல்வாழ்க்கை
ஆனான் கழலே அடைந்து வாழ்மினே.

தெளிவுரை: பிறைத் திங்களைச் சடையில் வைத்துத் தேன்போன்ற இனிமை மிக்க செம்பொன் பள்ளிமேவிய ஈசன், பிரம கபாலத்தை ஓடாக ஏந்திப் பலி கொண்டான். அவன் திருக்கழலைப் பணிந்து வாழ்வீராக.

Koviloor Digital Library

சிறப்புரை: பிறைத் திங்கள் சூடியது, அருளின் மேன்மையையும், பலியேற்றல் வினை நீக்கத்தையும் குறிப்பதாயிற்று. ஈசன் திருவடிப் பேறு வாழ வைக்கும் உறுதிப்பாட்டை உணர்த்திற்று.

ஊனார் தலை – பிரம கபாலம், திரு ஓடு.

269. காரார் வண்ணன் கனகம் அனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன் சடைஎன் நிமலனை
ஓரா தவர்மேல் ஒழியா ஊனமே.

தெளிவுரை: கார்வண்ணனாகிய திருமாலும், பொன் வண்ணனாகிய பிரமனும் செம்பொன்பள்ளி மேவிய கங்கையைச் சடையில் தரித்த என் நிமலனாகிய ஈசனைத் தேர்ந்து அறியாதவர்கள். அப்பெருமானை நினையாதவர்களிடம் உள்ள குறைபாடுகள் தீராது. ஈசனை நினைத்த ஞான்று ஊனமானது கதிரோனைக் கண்ட பனி போல் நீங்கும் என்பதாம்.

270. மாசார் உடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசார் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா என்ன நில்லா இடர்களே.

தெளிவுரை: உடம்பின்மீது மாசு உடையவர்கள் முதலானோர் பொருந்தாதவற்றைப் பேசித் திரிந்தாலும், ஒளி மிக்க செம்பொன்பள்ளி மேவிய ஈசனே என்று வணங்கித் துதிக்க, இடர்கள் யாவும் நீங்கும்.

மாசு – குற்றம், அழுக்கு. தேசு – ஒளி.

271. நறவுஆர்புகலி ஞான சம்பந்தன்
செறுஆர் செம்பொன் பள்ளி மேயானைப்

Koviloor Digital Library

பெறுமாறு இசையால் பாடல் இவைபத்தும்
உறுமா சொல்ல ஓங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தேன் பெருகும் புகலியின் ஞான சம்பந்தன் வயல்கள் திகழும் செம்பொன்பள்ளி மேய ஈசனைப் போற்றி உயிர்கள் நின்று அறியுமாறு பாடிய இத் திருப் பதிகத்தை உள்ளம் பொருந்துமாறு சொல்ல, வளமுடன் ஓங்கி வாழ்வர்.

செறு – வயல்; பெறுதல் – அறிதல். உறுமாசொல்ல – உள்ளம் பொருந்த ஓதுதல்.

26. திருப்புத்தூர்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம். இதனைத் திருப்பத்தூர் எனவும் சொல்லப்படுகிறது. திருக்கோயி லின் பெயர், திருத்தளி. உமாதேவியும், இலட்சுமியும் பூசித்த தலம்.

சுவாமி : ஸ்ரீதளீஸ்வரர், திருத்தளிநாதர், புத்தூரீசர்

அம்பிகை : சிவகாமி அம்மையார்

தல மரம் : கொன்றை

தீர்த்தம் : திருத்தளித் தீர்த்தம், சிவகங்கை

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

272. வெங்கள் விம்மு வெறிஆர் பொழில்சோலை
திங்க ளோடு திளைக்கும் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியார் அவர்போலும்
எங்கள் உச்சி உறையும் இறையாரே.

Koviloor Digital Library

தெளிவுரை: தேன் சொரியும் மலர்களை உடைய மணம் பொருந்திய அடர்ந்த சோலையானது, நிலவைப் போன்று தண்மையுடன் விளங்கும் திருப்புத்தூர், எங்கள் மேலான இறைவன் கங்கையைச் சடையில் தாங்கி இருக்கும் இடம் ஆகும்.

உச்சி – மேலானது.

273. வேனல் விம்மு வெறிஆர் பொழில்சோலைத்
தேனும் வண்டும் திளைக்கும் திருப்புத்தூர்
ஊனம் இன்றி உறைவார் அவர்போலும்
ஏன முள்ளும் எயிறும் புனைவாரே.

தெளிவுரை: வேனிற் காலத்தில் மலரும் மணம் பொருந்திய அடர்ந்த சோலையில் தேனும் அதை நுகரும் வண்டும் திளைத்துப் பெருகும் இயல்புடையது திருப்புத்தூர். அங்கு எழுந்தருளியுள்ள ஈசன், திருமால் வராகவதாரம் கொண்ட பின்னர், அப்பணி நிறைவடைந்தும் சினம் தணியாதவராய்ச் செருக்குற்று நிற்க, அதனை அடக்கும் முகத்தான் ஏனத்தின் முள்ளும் பல்லும் அகற்றி அதனைத் தான் அணிந்து ஆபரணமாகக் கொண்டார். அவர் அடியவர்களுக்குக் குறைவின்றி அருள் புரியும் இறைவனே போலும்.

வேனல் – வேனிற்காலம். விம்மு – மலர்தல்.

274. பாங்கு நல்ல வரிவண்டு இசைபாடத்
தேன்கொள் கொன்றை திளைக்கும் திருப்புத்தூர்
ஓங்கு கோயில் உறைவார் அவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே.

தெளிவுரை: தேன் சொரியும் கொன்றை மலர்கள் பெருகித் திகழ விளங்கும் திருப்புத்தூரின்கண் வரிவண்டுகள் எல்லாப் பக்கங்களிலும் சார்ந்து இசை.

Koviloor Digital Library

பாடுகின்றன. ஆங்கு. புல்லிய சடையின் கண் திங்கள் சூடிய ஈசன் ஓங்கி வளர்கின்ற அத் திருக்கோயிலில் உறைபவர் போலும்.

சிறப்புரை: தல மரத்தின் சிறப்பாகக் கொன்றை விசேடித்துக் கூறப்படுவது உணரத் தக்கது.

பாங்கு – நாலாப் பக்கங்களிலும் சூழ்தல். தாங்கு – திங்களைத் தாங்கி.

275. நாறவிண்ட நறுமா மலர்கவ்வித்
தேறல் வண்டு திளைக்கும் திருப்புத்தூர்
ஊறல் வாழ்க்கை உடையார் அவர்போலும்
ஏறுகொண்ட கொடிஎம் இறையாரே.

தெளிவுரை: மணம் வீசி மலரும் அழகிய மலர்களில் உள்ள தேனை, வண்டுகள் கவ்விப் பருகும் சிறப்புடையது திருப்புத்தூர். இடபக் கொடி உடைய எம் இறைவர் ஆங்கு ஊறிய வாழ்க்கை உடையவர் போலும்.

சிறப்புரை: அடியவர்தம் அன்பு எனும் தேனைப் பருகி, அவ் அடியவர்களுக்கும் தேன் போன்று உறுதியும், பிணி நீக்கமும் இனிமையும் தரவல்லவர் என்பதனை "ஊறல் வாழ்க்கை உடையார்" என்பது உணர்த்திற்று.

தேறல் – தேன். நறை – மணம் நாற விண்ட என்பது நாற இண்ட எனப் பிரித்து மணம் பொருந்திய தாமரை எனலும் பொருந்தும். இண்டை – தாமரை.

276. இசைவி ளங்கும் எழில்சூழ்ந்து இயல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்
பசைவி ளங்கப் படித்தார் அவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே.

Koviloor Digital Library

தெளிவுரை: *எழில் மிக்கதாய்ப் புகழ் விளங்கவும், நாற்புறமும் சோலைகள் விளங்கவும் திகழ்வது திருப்புத்தூர். ஆங்கு, அழகிய நுதலில் பிறையைக் கொண்ட வடிவினராகிய ஈசன் அன்புடன் விளங்குபவராய்ப் பற்றி அருள் புரியப் பழகியவர் போலும்.*

இசை – புகழ். படித்தல் – பழகுதல், விளங்குதல். பசை – அன்பு, பற்று. வசை – குற்றம் உள்ள மதி. வசை விளங்கும் வடிசேர் நுதல் – பிறை மதி சூடிய நுதலை உடையவர். வடிவு – அழகிய நுதல் – நெற்றி.

வசு என்பது எதுகை நோக்கி வசை என ஆயிற்று எனக் கொண்டு, நெற்றிக் கண்ணுடையவர் எனக் குறித்தலும் ஆம். வசு – நெருப்பு, நீர் (கங்கை).

277. வெண்நி றத்த விரையோடு அலர்உந்தித்
தெள்நி றத்த புனல்பாய் திருப்புத்தூர்
ஒள்நி றத்த ஒளியார் அவர்போலும்
வெண்நி றத்த விடைசேர் கொடி யாரே.

தெளிவுரை: *வெண்மையான மணம் நிறைந்த வண்ண மலர்களை உந்தித் தள்ளித் தெளிந்த நீர் பாயும் தன்மையுடையது திருப்புத்தூர். ஆங்கு, வெண்மையான இடபக்கொடியை உடையவரும் ஒளிப் பிழம்பாகி ஒளி தருபவரும் ஆகிய பெருமானே போலும்.*

278. நெய்தல் ஆம்பல் கழுநீர் மலர்ந்துஎங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தார் அவர் போலும்
மையுண் நஞ்ச மருவு மிடற்றாரே.

தெளிவுரை: *நெய்தல் காட்டும் ஆம்பல் மலரவும், மருத வயல்கள் மல்கிப் பெருகவும் திருப்புத்தூர் விளங்கி மேவும். ஆங்கு, நீலகண்டராய் ஈசன் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்தார் போலும்.*

சிவனார் திருப்புத்தூர் – சிவனுக்குரிய திருப்புத்தூர்.

Koviloor Digital Library

279. கருக்கம் எல்லாம் கமழும் பொழில் சோலைத்
திருக்கொள் செம்மை விழரார் திருப்புத்தூர்
இருக்க வல்ல இறைவர் அவர் போலும்
அரக்கன் ஒல்க விரலால் அடர்த்தாரே.

தெளிவுரை: *வான்வெளி யாவிலும் மணம் கமழும் பொழில்களை உடையதும், நற்செல்வமாகிய சிவனடிப் பேற்றை நல்கும் செம்மையான திருவிழாக்களை உடையதுமான ஊர், திருப்புத்தூர் என்னும் பதியாகும். இராவணனைத் தமது விரலால் அழுத்தி, அவனை வருத்திய இறைவர் அங்கு வீற்றிருப்பவர் போலும்.*

கருக்கம் – கார்மேகம் – வானத்தைக் குறித்தது.
ஒல்க – துன்பம் கொடுத்தல்.

280. மருவி எங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறும் திளைக்கும் திருப்புத்தூர்ப்
பெருகி வாழும் பெருமான் அவன்போலும்
பிரமன் மாலும் அறியாப் பெரியோனே.

தெளிவுரை: *மயில்கள் எல்லா இடங்களிலும் சூழ்ந்து இருக்க, தெருக்களில் மகிழ்ந்து உலாவுகின்ற பெருமை யுடையது திருப்புத்தூர். பிரமனும் திருமாலும் அறிய முடியாமல் ஓங்கி வளர்ந்தவனாக ஈசன் ஆங்கு விளங்கி நின்று வாழ்கின்றான் போலும்.*

மஞ்ஞை – மயில்.

281. கூறைபோர்க்கும் தொழிலார் அமண்கூறல்
தேறல் வேண்டா தெளிமின் திருப்புத்தூர்
ஆறு நான்கும் அமர்ந்தார் அவர்போலும்
ஏறு கொண்ட கொடிஎம் இறையாரே.

தெளிவுரை: *சமணர் முதலான பிறர் கூறும் சொற்களைக் கொள்ள வேண்டாம். நான்கு வேதங்களும்*

Koviloor Digital Library

அதன் ஆறு அங்கங்களும் ஆகிய ஈசன் திருப்புத்தூரில் இடபக் கொடி உடையவராய் வீற்றிருப்பவர் போலும்.

சிறப்புரை: ஆறு நான்கும் அமர்ந்தவர் என்பதனை நால் வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி என்னும் திருநாவுக் கரசரின் வாக்கால் அறியலாம். தத்துவங்கள் 36. அவற்றுள் ஆத்ம தத்துவம் 24 ஆகும். அவையாவன:

ஞானேந்திரியம்	5
கன்மேந்திரியம்	5
தன்மாத்திரை	5
பூதங்கள்	5
அந்தக்கரணம்	4
ஆக	24

282. நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேடர் உறையும் திருப்புத்தூர்ச்
சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் தீரும் அவலம் அடையாவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வேதத்தில் மேம்பட்டவராகிய ஞான சம்பந்தர், செல்வராகிய ஈசன் உறையும் திருப்புத்தூர் என்னும் பதியைப் போற்றிப் பாடிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லார் தமக்குத்தாமே உண்டாக்கிக் கொள்ளும் துன்பமும் இல்லை; பிறரால் சூழப்பெறும் இடையூறும் இல்லை.

நல்ல வேள்வி – செவி வழியாகக் கேட்டுப் பயிலும் வேதம். சேடன் – எக்காலத்திலும் எஞ்சி நிற்கும் ஈசன்.

Koviloor Digital Library

27. திருப்புன்கூர்

தல விளக்கம்: சோழ நாட்டு - காவிரி வடகரைத் தலம். பிரமன், இந்திரன், சந்திரன், சூரியன், அக்கினி, அகத்தியர், பதஞ்சலி, சப்த கன்னியர் முதலியோர் வழிபட்டது.

திருநாளைப் போவாரின் (நந்தனார்) விண்ணப் பத்தை ஏற்று ஈசன் ஆணையால் நந்தி விலகி உள்ள திருத்தலம். இங்கு, விநாயகர் உதவியால் நந்தனார் திருக்குளம் வெட்டினார்.

சுவாமி : சிவலோக நாதர்

அம்பிகை : சொக்க நாயகி

தல மரம் : புங்க மரம்

தீர்த்தம் : கணபதி தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

283. முந்தி நின்ற வினைகள் அவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்தம் இல்லா அடிகள் அவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே.

தெளிவுரை: முந்தி நின்று, விளைவினைத் தருகின்ற வினைகள் நீங்கிப் போவதற்கு, நெஞ்சமே! சிவன் பொருந்தியுள்ள திருப்புன்கூர் என்னும் பதியைச் சிந்தனை செய்வாயாக. ஆங்கு உறையும் ஈசன் மணம் கமழும் புன்சடையுடன் விளங்கும் அடிகள் போலும்.

Koviloor Digital Library

சிறப்புரை: முற்பிறவியில் நுகர்ந்தது போல எஞ்சி நின்று இப் பிறவியில் தொடர்ந்த வினைகள் முந்தி நின்ற வினைகள் என உணர்த்தப்பட்டது.

சிந்தி – சிந்தனை செய்; கந்தம் – மணம்.

284. மூவர் ஆய முதல்வர் முறையாலே
தேவர் எல்லாம் வணங்கும் திருப்புன்கூர்
ஆவர் என்னும் அடிகள் அவர்போலும்
ஏவின் அல்லார் எயில்மூன்று எரித்தாரே.

தெளிவுரை: பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும், ஈசன் திருஉளப்பாங்கின்படி தம்தம் பணி ஆற்றுபவர். யாவர்க்கும் முதல்வராயும், தேவர்களால் வணங்கப் பெறுபவராயும் சரம் தொடுத்துப் பகைவரின் மூன்று கோட்டைகளை எரித்த ஈசன், திருப்புன்கூர் என்னும் பதியில் உறையும் இறைவனே போலும்.

ஏ – சரம்; அல்லார் – பகைவர்.

285. பங்க யங்கள் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திளைக்கும் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையார்அவர் போலும்
எங்கள் உச்சி உறையும் மிறையாரே.

தெளிவுரை: பொய்கையில் தாமரை மலர்களும் கயல் களும் திளைக்க விளங்கும் இடமாவது திருப்புன்கூர். கங்கை தங்கும் சடையுடன் ஆங்கு உறைபவர் எங்கள் மேலான இறைவனே போலும்.

பழனம் – பொய்கை.

286. கரைஉலாவு கதிர்மா மணிமுத்தம்
திரைஉ லாவு வயல்சூழ் திருப்புன்கூர்

Koviloor Digital Library

உரையின் நல்ல பெருமான் அவர்போலும்
விரையின் நல்ல மலர்ச்சே வடியாரே.

தெளிவுரை: *கரைகளில் மாணிக்கம் போன்ற கதிர் மணிகளும் வயல்களில் முத்துக்களும் உடைய சிறப்பு உடைய பதி திருப்புன்கூர். மனம் பொருந்திய திருவடி உடைய பெருமானாய் அடியவர்க்கு நல்லவராய் இனிமை பெருக்கும் ஈசன், ஆங்கு உறைபவரே போலும்.*

சிறப்புரை: *அடியார்க்கு "நல்ல பெருமாள்" என்று அருணகிரிநாதர், முருகப் பெருமானைப் போற்றிக் கூறும் பாங்கும் "நல்ல பெருமான்" என ஈசனைத் துதித்து அழைக்கும் ஆளுடைய பிள்ளையார் மாண்பும் இணைத்து நோக்கி மகிழத்தக்கது. அன்பர்களின் உள்ளத்தில் கோயில் கொண்டுள்ள ஈசன் எக்காலத்திலும் நல்லவனாதலை உணர்த்துதல் காண்க. "நல்ல மலர்ச் சேவடி," அருள் புரிதலைச் சிறப்பித்தது.*

உரை – புகழ், உரைத்தல். விரை – மணம்.

287. பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையும் திருப்புன்கூர்
அழகர் என்னும் அடிகள் அவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே.

தெளிவுரை: *பவள வண்ணம் போன்ற திருமேனி உடையவராய் புகழும்படியான செஞ்சடை கொண்டு விளங்கும் ஈசன், திருப்புன்கூரில் உறையும் அழகர் என்னும் அடிகள் போலும்.*

288. தெரிந்து இலங்கு கழுநீர் வயல்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்

Koviloor Digital Library

பொருந்தி நின்ற அடிகள் அவர்போலும்
விரிந்து இலங்கு சடைவெண் பிறையாரே.

தெளிவுரை: நல்ல நீர்வளமும், செந்நெல் வளமும் மிக்கு உடையது திருப்புன்கூர். அங்கு விரிந்து பரந்த சடையில் வெண்பிறை சூடிய ஈசன், பொருந்தி உறைபவரே போலும்.

289. பாரும் விண்ணும் பரவித் தொழுதுஏத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற அடிகள் அவர்போலும்
கூர நின்ற எயில்மூன்று எரித்தாரே.

தெளிவுரை: மண்ணுலகத்தவர்களும் தேவர்களும் பரவித் தொழுது போற்றும்படி தேர்கள் செல்லுமாறு அகன்ற வீதிகளையும் திருவிழாக்களையும் உடையது திருப்புன்கூர். அங்கு, மிகுதியாய்ச் சென்று இடரைச் செய்த மூன்று மதில்களையும் எரித்த ஈசன் பொருந்தி உள்ளனர் போலும்.

290. மலைய தனார் உடைய மதில்மூன்றும்
சிலைய தனால் எரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல அரக்கன் தருக்கினை
மலைய தனால் அடர்த்து மகிழ்ந்தாரே.

தெளிவுரை: சண்டை செய்யும் கீழ்மையுடைய முப்புரத்தின் கோட்டைகளையும், அவ்வசுரர் களையும், மேருவை வில்லாகக் கொண்டு எரித்தவர் திருப்புன்கூர் மேவும் ஈசன். அப்பெருமான், அரக்கனாகிய இராவணனுடைய தருக்கினை அவன் பெயர்த்த மலையைக் கொண்டு அடக்கியவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: இராவணனைத் தண்டித்த இறைவன், இசையில் மகிழ்ந்து அருள் நல்கியதை "மகிழ்ந்தார்" எனும் சொல் உணர்த்துவதாயிற்று.

மலை அதனார் – சண்டை செய்யும் முப்புராரிகள். சிலை – மேரு மலை – ஈசனுக்கு வில்லானது. தருக்கு – செருக்கு. மலையதனால் – கயிலை மலையால்.

291. நாடவல்ல மலரான் மாலுமாய்த்
தேடநின்றார் உறையும் திருப்புன்கூர்
ஆடவல்ல அடிகள் அவர்போலும்
பாடல் ஆடல் பயிலும் பரமரே.

தெளிவுரை: நான்கு திசைகளும் அறிந்து நாடுவதற்குரிய நான்கு முகங்களை உடைய பிரமனும், திருமாலும் காணுதற்கு இயலாமல் தேடுமாறு செய்து திருவிளையாடல் புரியும் ஈசன், பாடலும் ஆடலும் பயிலும் திருப்புன்கூர் நாதன் போலும்.

சிறப்புரை: திருநடனம் புரிதலும் இசைக்கு இணங்குதலும் ஈசனுக்கு உரித்தான கருணை என்பதனைப் "பாடல் ஆடல் பயிலும் பரமர்" என்னும் தொடர் உணர்த்துவதாயிற்று.

292. குண்டு முற்றிக் கூறை இன்றியே
பிண்டம் உண்ணும் பிராந்தர் சொல்கொளேல்
வண்டு பாட மலர்ஆர் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே.

தெளிவுரை: அறிவின் மயக்கம் உற்றவர்களாகிய வேற்றுச் சமயத்தவர்கள் கூறும் மொழிகளைப் பொருட்டாகக் கொள்ள வேண்டாம். வண்டுகள் இசைக்க மலர்கள் மலர்ந்து மணம் தரும் திருப்புன்கூர் இறைவனைத் தொழுது போற்றுமின்.

Koviloor Digital Library

சிறப்புரை: ஆன்மாக்கள் இறைவன் திருப்பாத மலரைப் பற்றுதலில் நாட்டம் உறவேண்டும் என்பதை, "வண்டு கள் பாடமலர் ஆர் திருப்புன் கூர்" என்னும் தொடர் உணர்த்திற்று.

பிராந்தர் – மாயையால் மயங்கியவர்.

293. மாடமல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வர் உறையும் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருப்புன்கூர் என்னும் பதியுறை ஈசனைப் போற்றி மாட மாளிகைகளும், நெடிய மதில்களும் சூழ்ந்த காழியின் ஞானசம்பந்தர் சொன்ன இத் திருப்பதிகத்தை ஓதி வாழ்மின்.

28. திருச்சோற்றுத்துறை

தல விளக்கம்: சோழ நாட்டு – காவிரித் தென்கரைத் தலம். இந்திரன், சூரியன், கவுதமர் வழிபட்டது.

சுவாமி : தொலையாச்செல்வர், சோற்றுத்துறைநாதர்

அம்பிகை : அன்னபூரணி

தீர்த்தம் : காவிரி

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

294. செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்பன் என்னாது அருளே துணையாக

Koviloor Digital Library

ஒப்பர் ஒப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்று
அப்பர் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: உலகத்தில், இவ்வாழ்க்கையின் பயனாக அடையக் கூடிய சிற்றின்பத்தில் திளைக்காது, சமநிலையால் ஒப்ப நோக்கி, ஈசன் அருளைத் துணையாகக் கொண்டு வாழ வேண்டும். அத்தகைய தன்மையை, ஒளியுடைய வெண்ணீறு அணிந்த பெருமான் ஒப்புவர். நெஞ்சமே! ஈசன் விளங்கும் சோற்றுத்துறை சென்று அவன் தாள் மலரை வணங்கி நற்கதி அடைக.

துப்பன் – துய்த்தலைக் குறித்தது. அப்பர் – தரித்தவர்.

295. பாலு நெய்யும் தயிரும் பயின்றாடித்
தோலு நூலும் துதைந்த வரைமார்பர்
மாலும் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலும் சோற்றுத் துறை சென்றுஅடைவோமே.

தெளிவுரை: பாலும், நெய்யும், தயிரும் முதலான அபிடேகப் பொருள்களால் பூசிக்கப்படும் ஈசன் புலித் தோலையும் மான் தோலையும் உடுத்தி பூணூல் தரித்த மார்பினர். சோலையில் மயில்கள், தம்மை மறந்து ஆடும் எழில் உடைய சோற்றுத்துறை சென்று இறைவனை வணங்கித் துதித்து நற்கதி அடைவோமாக.

296. செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தைய லாளொர் பாகம் ஆயஎம்
ஐயர் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: சிவந்த திருமேனியும் சடையும் உடையவர்; இடப வாகனத்தில் ஊர்ந்து வருபவர்; கையில் சூலத்தைக் கொண்டிருப்பவர்; வீரக்கழல் அணிந்த பாதத்தை உடையவர்; இடுகாட்டில் ஆடுபவர்; உமா

Koviloor Digital Library

தேவியை ஒரு பாகமாக உடைய எம் தலைவர். அவர் வீற்றிருக்கும் சோற்றுத்துறை சென்று நற்கதி அடைவோமாக.

சிறப்புரை: சென்றடைவோம் என்பது செல்லுதலைக் குறித்ததோடு, சென்று நற்கதியை நாம் அடைதலையும் உணர்த்திற்று.

செய்ய செய் – செக்கச் செவேல்.

297. பிணிகொள் ஆக்கை ஒழியப் பிறப்புளீர்
துணிகொள் போர்ஆர் துளங்கு மழுவாளர்
மணிகொள் கண்டர் மேயவார் பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: பிணியைக் கொள்ளும் உடலை விட்டுவிட வேண்டும் என்பதன் பொருட்டு, இப்பிறவியைப் பெற்றுள்ளவர்களே! துணித்து ஆற்றும் போர்ப் படையாய் விளங்கும் மழுவேந்திய ஈசன், நீலகண்டத்தை உடையவர். அவர்தம் நீண்ட பொழிலை உடைய சோற்றுத்துறை சென்று வணங்கி நற்கதியை அடைவோமாக.

ஆக்கை – உடல்; வார் – நெடுமை, நீண்ட.

298. பிறையும் அரவும் புனலும் சடைவைத்து
மறையும் ஓதி மயானம் இடமாக
உறையும் செல்வம் உடையார் காவிரி
அறையும் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: பிறைச் சந்திரனும், அரவும், கங்கையும் சடையில் வைத்து, வேதம் புகன்று, மயானத்தை இடமாகக் கொண்டு உறையும் செல்வராகிய இறைவன் விளங்கும் காவிரி நீர் பாயும் சோற்றுத்

Koviloor Digital Library

துறை சென்று இறைவனை வழிபட்டு நற்கதி அடைவோமாக.

299. துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்காடு அரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகொள் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: உடுக்கையும் முழவும் ஒலிக்க, வெண் பொடி பூசிச் சுடுகாட்டை அரங்கமாகக் கொண்டு, தாளமும் பாடலும் முறையாகப் பயின்றாடும் ஈசன் விளங்கும் சோற்றுத்துறை சென்று நற்கதி அடைவோமாக.

துடி – உடுக்கை. முழவம் விம்ம – முழவொலி. புறங்காடு – சுடுகாடு படி – முறைமை; பாணி – தாளம்.

300. சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடிஆடிப் பரவு வார்உள்ளத்து
ஆடி சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: மார்க்கண்டேயரைக் காக்கும் பொருட்டுக் காலனை மாய்த்தும், தலையோட்டினை மாலையாய் அணிந்தும் விளங்கும் ஈசன், தன்னைப் போற்றி வாழ்த்துபவர் உள்ளத்தில் மகிழ்ந்து இருப்பவர். அப்பெருமான் வீற்றிருக்கும் சோற்றுத் துறை சார்ந்து நற்கதி அடைவோமாக.

301. பெண்ணோர் பாகம் உடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகம் கலந்த நுதலினார்
எண்ணாது அரக்கன் எடுக்க ஊன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், உமாதேவியைப் பாகமாக உடையவர்; பிறையைச் சென்னியில் சூடியவர்; நெற்றியில் கண்ணுடையவர்; பின்விளைவை ஆராய்ந்து பார்க்காமல் அரக்கன் மலையைப் பெயர்க்க, தனது திருப்பாத விரலால் ஊன்றி, அவ் அரக்கனின் செருக்கை அடக்கியவர். அத்தகைய அண்ணல் விளங்கும் சோற்றுத்துறையை நாடிச் சென்று நற்கதி அடைவோமாக.

302. தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியால் மிக்களம்
எழில்ஆர் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் தன்னைக் காணாதவராய்த் துயர்கொண்டு வருந்தி நிற்க, அத்துயர் நீங்கும் பொருட்டுத் தழல் உருவாய் ஓங்கி ஈசன் அருள் செய்தான். அவ் இறைவன் விளங்கும் விழாக்கள் நடைபெறும் திருவீதிகளையும் வேத முறைப்படி பூசனைகளும் திகழும் சோற்றுத்துறை சென்று வணங்கி நற்கதி அடைவோமாக.

மறுகு – தெருவு.

303. கோது சாற்றித் திரிவார் அமண்குண்டர்
ஓதும் ஒத்தை உணராது எழுநெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென்று அடைவோமே.

தெளிவுரை: புறச் சமயத்தார் கூறும் சாரமற்ற உரைகளை ஏற்காமல் ஈசன் திருப்பதத்தை மனத்தில் தேக்கி எழுகின்ற நெஞ்சமே! சைவ நெறிப்படி நின்று ஒழுகி அவர்தம் சிந்தையானது விரும்புகின்ற

Koviloor Digital Library

தோற்றத்தில் காட்சி தரும் முதல்வன் வீற்றிருக்கும் சோற்றுத்துறை சென்று நற்கதி அடைவோமாக.

வேடமாம் ஆதி – வேடம் (வடிவம்) ஆகும் முதல்வன்.

304. அந்தண் சோற்றுத் துறைஎம் மாதியைச்
சிந்தை செய்ம்மின் அடியார் ஆயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய குளிர்ச்சி பொருந்திய சோற்றுத் துறையில் எழுந்தருளியுள்ள எம் ஆதி முதல்வனைச் சிந்தித்துப் போற்றுமின். அது அடியார் ஆகும் சிறப்பு நல்கும். மேலும் சந்தம் மல்கிய ஞானசம்பந்தரின் இத் திருப்பதிகத்தை ஓதுதல் வழிபாடு ஆகும்.

சிறப்புரை: ஞானசம்பந்தரின் உள்ளத்தில் நிறைந்து அவர்தம் திருவாய் மொழியாக ஈசன் புகன்றான் என்பதை "வந்தவாறே புனைதல்" என்பது உணர்த்திற்று.

29. திருநறையூர்ச் சித்தீச்சரம்

தல விளக்கம்: சோழ நாட்டு - காவிரித் தென்கரைத் தலம். ஊரின் பெயர் நறையூர்; திருக்கோயிலின் பெயர் சித்தீச்சரம்; பிரமன், சித்தர்கள், மார்க்கண்டேயர், குபேரன் வழிபட்ட திருத்தலம். பிரமபுரம், நரபுரம் என்ற பெயர்களும் உண்டு. சுகந்தவனம் என்றும் சொல்லப்படுகிறது.

சுவாமி : சித்த நாதேஸ்வரர்

அம்பிகை : அழகம்மை

Koviloor Digital Library

தல மரம் : பவள மல்லிகை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

305. ஊர்உ லாவு பலிகொண்டு உலகேத்த
நீர்உ லாவு நிமிர்புன் சடைஅண்ணல்
சீர்உ லாவு மறையோர் நறையூரில்
சேரும் சித்தீச் சரம்சென்று அடைநெஞ்சே.

தெளிவுரை: *பிரம கபாலத்தை ஓடாகக் கொண்டு ஊர்களில் திரிந்து பிச்சையேற்று, கங்கையைச் சடை முடியில் வைத்து உலகத்தவர்கள் வணங்கும்படி சீர் மிக்க மறைகள் போற்றும் ஈசன் நறையூரில் எழுந்தருளி யுள்ளான். அவன் திருக்கோயில் கொண்டுள்ள சித்தீச் சரத்தை, நெஞ்சமே நினை.*

நீர் உலாவு – கங்கை தங்கிய. அடைநெஞ்சு – நெஞ்சில் அடைதல், நெஞ்சத்தில் இருத்திக் கொள்ளுதல்.

306. காடு நாடும் கலக்கப் பலிநண்ணி
ஓடு கங்கை ஒளிர்புன் சடைதாழ
வீடும்ஆக மறையோர் நறையூரில்
நீடும் சித்தீச் சரமே நினைநெஞ்சே.

தெளிவுரை: *காடுகளிலும் நாடுகளிலும் கலந்து ஓடும் கங்கையைச் சடையில் வைத்தவன் முத்திப் பேறு வாய்க்கச் செய்தவன், இறைவன். அவன் நிலவும் மறை வல்ல நறையூரில் உள்ள சித்தீச்சரத்தை நெஞ்சே நினை.*

வீடும் ஆக – முத்தி நலம் வாய்த்தல். நீடும் – நிலவும்.

307. கல்வியாளர் கனகம் மழல்மேனி
புல்கு கங்கை புரிபுன் சடையானூர்

Koviloor Digital Library

மல்கு திங்கள் பொழில்சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச் சரம் சென்று அடைநெஞ்சே.

தெளிவுரை: பொன்போன்ற தழல் வண்ணத் திருமேனி உடைய ஈசன், சடையில் கங்கையை ஏற்று கல்வியில் வல்ல அறிஞர்கள் மிக்க, சந்திரனைப் போன்ற குளிர்ந்த பொழில் சூழ்ந்த நறையூரில் நிலவும் சித்தீச் சரத்தில் வீற்றிருப்பவன். நெஞ்சே, அவனை நினை.

கனகம் – பொன். மழல் மேனி – அழல்மேனி. அழல் சந்தம் நோக்கி மழல் எனப்பட்டது.

308. நீடவல்ல நிமிர்புன் சடைதாழ
ஆடவல்ல அடிகள் இடமாகும்
பாடல் வண்டு பயிலு நறையூரில்
சேடர் சித்தீச் சரமே தெளிநெஞ்சே.

தெளிவுரை: நீண்டு விரிந்த சடையானது தாழ திருநடம் புரியும் ஈசன் இடமாவது, வண்டுகள் பாடும் சிறப்புடைய நறையூரில் நிலவும் சித்தீச்சரம் ஆகும். நெஞ்சே, இதனைத் தெளி.

309. உம்ப ராலும் உலகின் னவராலும்
தம்பெ ருமைஅ ளத்தற்கு அரியானூர்
நண்பு உலாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளிநெஞ்சே.

தெளிவுரை: தேவர்களாலும், உலக மக்களாலும் அளவிட்டுச் சொல்லுதற்கு அரியவனாகிய ஈசன் விளங்குவது, நட்புடன் விளங்கும் மறையவர்கள் மிகுந்த நறையூரில் நிலவும் சித்தீச்சரம் ஆகும். நெஞ்சே, இதனைத் தெளி.

சிறப்புரை: தூய பொன்போல் இன்றி, அணிகலனுக்குப் பொருந்தும் செம்பொன்போன்று பக்குவம் இல்லாத

Koviloor Digital Library

ஆன்மாக்களுக்கும் அருள் பெருக்கும் சித்தீச்சரம் என உணர்த்தப் பெற்றது.

உம்பர் – தேவர். உலகின்னவர் – உலக மக்கள்.

310. கூர்உ லாவு படையான் விடையேறி
போர்உ லாவு மழுவான் அனலாடி
பேர்உ லாவு பெருமா னறையூரில்
சேரும் சித்தீச் சரமே இடமாமே.

தெளிவுரை: கூர்மையான சூலப் படையான்; இடப வாகனம் உடையவன்; மழுப் படை கொண்டவன்; நெருப்பைக் கரத்தில் ஏந்தி ஆடியவன்; பெரும் புகழை உடையவன். அவனுடைய இடமாவது நறையூரில் பொருந்திய சித்தீச்சரம் ஆகும்.

குறிப்பு: "பெருமான் நறையூர்" என்பது பெருஞ் சிறப்புள்ள நறையூர் ஆகும்.

311. அன்றி நின்ற அவுணர் புரம்எய்த
வென்றி வில்லி விமலன் விரும்புமூர்
மன்றில் வாச மணமார் நறையூரில்
சென்று சித்தீச் சரமே தெளிநெஞ்சே.

தெளிவுரை: பகையாய் நின்ற மூன்று அசுரர்களின் புரங்களை வெற்றிகொண்டவன், மேருமலையை வில்லாகக் கொண்ட ஈசன். அவன் விரும்பி விளங்குவது நறுமணம் கமழும் நறையூரில் நிலவும் சித்தீச்சரம். இதனை, நெஞ்சே தெளி.

அன்றி நின்ற – பகை கொண்டு இருந்த. வில்லி – மேருவை வில்லாகக் கொண்ட ஈசன்.

312. அரக்கன் ஆண்மை அழிய வரைதன்னால்
நெருக்க ஊன்றும் விரலான் விரும்புமூர்

Koviloor Digital Library

பரக்கும் கீர்த்தி யுடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச் சரமே தெளிநெஞ்சே.

தெளிவுரை: *இராவணனுடைய வலிமை அழியுமாறு விரலால் மலையை ஊன்றும் பெருமான் விரும்புகின்ற ஊர், விரிந்த புகழையுடையவர் விளங்கும் நறையூர். ஆங்கு செல்வம் கொழித்து ஓங்கும் சித்தீச்சரத்தை நெஞ்சே! தெளி.*

313. ஆழி யானு மலரில் உறைவானும்
ஊழி நாடி உணரார் திரிந்துமேல்
சூழு நேட எரியாம் ஒருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே.

தெளிவுரை: *சக்கரப் படையுடைய திருமாலும், மலரில் உறைபவனாகிய பிரமனும் ஓர் ஊழிக் காலம் வரை தேடிச் சென்றும் உணராதவராய்த் திரிய, பின்னர் எரியாகித் - தழல் வடிவாகி நின்ற ஈசன் சீர் கொண்டு வீற்றிருப்பது சித்தீச்சரம். இதனை நெஞ்சே! நினை.*

314. மெய்யின் மாசர் விரிநுண் துகில்இலார்
கையில் உண்டு கழறும் உரைகொள்ளேல்
உய்ய வேண்டில் இறைவன் நறையூரில்
செய்யும் சித்தீச் சரமே தவமாமே.

தெளிவுரை: *வேற்றுச் சமயத்தார் கூறும் உரைகளைக் கொள்ளாதீர். உய்ய வேண்டுமானால் நறையூரில் இருந்து அருள் பாலிக்கும் இறைவன் மேவும் சித்தீச்சரத்தை எண்ணுதல், செய்யும் தவமாகும்.*

315. மெய்த்து உலாவு மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச் சரத்தை உயர்காழி
அத்தன் பாதம் அணிஞான சம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: *மெய்ம்மை விளங்க, மறையவர் உலவும் நறையூரில் நிலவும் சித்தன் மேவும் சித்தீச்சரத்தை, உயர் காழி நாதனாகிய ஈசனின் திருவடியைத் தரித்த ஞான சம்பந்தன் பாடிய பத்தும் பாடப் பாவம் தீரும்.*

காழி அத்தன் – ஈசன்.

30. திருப்புகலி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

316. விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின்று அலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலின் நகர்தானே.

தெளிவுரை: *மார்க்கண்டேயருக்கு விதிக்கப்பட்ட ஆயுட்காலம் பதினாறு ஆண்டுகள் என்பதன் விளைவாய்ச் சிவனடி பொருந்திய உயிரைக் கவருமாறு போந்த, கூற்றுவனை உதைத்த ஈசன் சேரும் பதியாவது தாமரை மலர்களும், தேன் சொரியும் மலர்ச் சோலைகளும் சூழும் புகலி நகர்.*

கொதியா – சினந்து. புகலிந் நகர் – புகலி.

317. ஒன்னார் புரமூன் றும்எரித்த ஒருவன்
மின்னார் இடையா ளொடும்கூ டியவேடம்
தன்னால் உறைவா வதுதண் கடல்சூழ்ந்த
பொன்னார் வயல்பூம் புகலிந் நகர்தானே.

Koviloor Digital Library

தெளிவுரை: *பகைவருடைய புரங்கள் மூன்றும் எரித்த ஒருவனாகிய ஈசன், மின்னலைப் போன்ற இடையுடைய உமாதேவியோடு கூடிய வடிவத்துடன் உறையும் இடம், குளிர்ந்த கடல் சூழ்ந்து, ஒளிமிக்க பொன் போன்ற நெற்கதிர்கள் விளங்கும் வயல்களை உடைய அழகிய புகலி ஆகும்.*

ஒன்னார் – பகைவர்.

318. வலியில் மதிசெஞ் சடைவைத் தமணாளன்
புலியின் னதள்கொண்டு அரைஆர்த் தபுனிதன்
மலியும் பதிமா மறையோர் நிறைந்துஈண்டிப்
பொலியும் புனல்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: *ஒளி வலிமை குன்றிய பிறைச் சந்திரனைச் சிவந்த சடையில் சூடிய மணாளளாகிய ஈசன், புலியின் தோலை இடையில் அணிந்த புனிதன். அவன் நயந்து விளங்கும் பதியாவது, மறையவர்கள் நிறைந்தும் சேர்ந்தும் வேதங்களை ஓத, தூய்மையான தீர்த்த மகிமையுடன் விளங்கும் புகலி நகர் ஆகும்.*

319. கயல்ஆர் தடங்கண் ணியொடும் மெருதேறி
அயலார் கடையில் பலிகொண் டஅழகன்
இயலால் உறையும் மிடம்எண் திசையோர்க்கும்
புயல்ஆர் கடல்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: *உமாதேவியோடு இடப வாகனத்தில் ஏறி அருள் புரிபவன் ஈசன். அவன் தாருகவனத்தில் மேவிய முனிவர்களின் மனைவாயிலில் நின்று பலி ஏற்றவன். அவ் அழகன், எண் திசையோர்க்கும் அன்பின் உரிமையோடு உறையும் இடம், மேகம் தவ்வும் கடல் விளங்கும் அழகிய புகலி நகர் ஆகும்.*

Koviloor Digital Library

கயல் ஆர் தடம் கண்ணி – உமாதேவி, மீனாட்சி. மெரு தேறி – எருது ஏறி (சந்தம் நோக்கி மிகுந்தது). கடை – வாயிற்புறம். இயல் – அன்பின் பெருக்கத்தால் உண்டாகும் உரிமை. மிடம் – இடம்; சந்தம் நோக்கி – மிகுந்தது.

320. காதார் கனபொன் குழைதோ டதுஇலங்கத்
தாதுஆர் மலர்தண் சடையே றமுடித்து
நாதான் உறையும் மிடமா வதுநாளும்
போதுஆர் பொழில்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: காதில் கனமான பொன்குழையும், தோடும் ஆபரணமாகத் திகழ, தேன் சொரியும் மலரைக் குளிர்ந்த சடையில் தரித்து ஈசன் உறையும் இடமாவது நாள்தோறும் மலரும் பொழிலை உடைய அழகிய புகலி நகர் ஆகும்.

சிறப்புரை: இசைப் பிரியனாகிய ஈசன் இரு கந்தருவர் களைக் காதில் குழையாக அணிந்துள்ளான் என்னும் குறிப்பைக் "காதார்" என்னும் சொல் உணர்த்திற்று. ஈசனைப் பூக்களால் அருச்சனை செய்வதற்கு ஏற்ப (சில மலர்கள் சில பருவ காலங்களில் பூவாது நிற்பதை யொட்டி) இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர்கள் எல்லாக் காலங்களிலும் குறைவறக் கிடைக்கப் பெறுதலை "நாளும் போது ஆர் பொழில்" என்னும் தொடர் உணர்த்திற்று.

"நாதன்" என்பது "நாதான்" என எதுகை நோக்கி மலர்ந்தது.

321. வலம்ஆர் படைமான் மழுவேந் தியமைந்தன்
கலம்ஆர் கடல்நஞ்சு அமுதுஉண் டகருத்தன்
குலம்ஆர் பதிகொன் றைகள்பொன் சொரியத்தேன்
புலம்ஆர் வயல்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: வலிமை பொருந்திய சூலப்படை, மான், மழு ஏந்திய அழகன், பாற்கடலில் இருந்து தோன்றிய

Koviloor Digital Library

நஞ்சினை அமுதமெனும் பண்பு கொள்ளுமாறு உண்டவன். அவனுடைய அழகான பதி, பொன் போன்ற கொன்றை மலர்கள் தேன் சொரியத் திசைகள்தோறும் வயல்கள் சூழ்ந்த அழகிய புகலி நகர் ஆகும்.

சிறப்புரை: கடலில் மரக் கலங்கள் செல்லும் மரபு நோக்கி "கலமார்கடல்" என உணர்த்தப் பெற்றது. மன்னுயிர்கள் அச்சமற்றுத் தழைக்க வேண்டும் என்னும் கருத்தை உடைய ஈசனின் அருட்குணம், "நஞ்சமுது உண்டகருத்தன்" என்று அறிவுறுத்தப் பெற்றது.

மைந்தன் – அழகன். குலம் – அழகு. புலம் – திசை.

322. கறுத்தான் கனலான் மதில்மூன் றையும்வேவச்
செறுத்தான் திகழும் கடல்நஞ்சு அமுதாக
அறுத்தான் அயன்றன் சிரம்ஐந் திலும்ஒன்றைப்
பொறுத்தான் இடம்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: ஈசன், கனலான், சினமுற்றான், மும்மதில்களைச் செறுத்தான், கடல் நஞ்சை அமுதாக மாற்றி அதன் நச்சுத் தன்மையை அறுத்தான்; பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் களைந்து, கபாலமாக ஏந்திச் சுமந்து பலியேற்றான். அவன் விளங்கும் இடம் புகலி நகரே.

323. தொழிலால் மிகுதொண் டர்கள்தோத் திரம்சொல்ல
எழிலார் வரையால் அன்றுஅரக் கனைச்செற்ற
கழலான் உறையும் மிடம்கண் டல்கண் மிண்டிப்
பொழிலால் மலிபூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: பணி செய்யும் இயல்புடைய திருத்தொண்டர்கள் தோத்திரப் பாடல்களைச் சொல்ல, எழில்

Koviloor Digital Library

மிக்க, கயிலை மலையால் இராவணனைத் தண்டித்த ஈசன் உறையும் இடம், நெருங்கிய தாழைகள் மலிந்த அழகிய புகலி நகர் ஆகும்.

கண்டல் – தாழை; மிண்டுதல் – நெருக்கம்.

324. மாண்டார் சுடலைப் பொடிபூ சிமயானத்து
ஈண்டா நடமா டியஏந் தல்தன் மேனி
நீண்டான் இருவர்க்கு எரியாய் அரவுஆரம்
பூண்டா னகர்பூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: சுடலையில், மாண்டவர்களின் சாம்பலைப் பூசி நடனமாடிய ஈசன், திருமால், பிரமன் ஆகிய இருவரும் காண இயலாதபடி நீண்ட வடிவின னாய்ச் சோதிப் பிழம்பாகி, பாம்பினை ஆபரணமாகப் பூண்டான். அவனுடைய நகர் புகலியே.

பூண்டானகர் – பூண்டான் நகர் – பூண்டவனுடைய நகர்.

325. உடையார் துகில்போர்த்து உழல்வார் சமண்கையர்
அடையா தனசொல் லுவர்ஆ தர்கள் ஓத்தைக்
கிடையா தவன்றன் நகர்நன் மலிபூகம்
புடையார் தருபூம் புகலிந் நகர்தானே.

தெளிவுரை: சமண நெறி உடையவர்கள், மேல் நிலை அடைவதற்கு ஒவ்வாத சொற்களைக் கூறுவர். கீழ்மை யான அவர்கள் கூற்றினை ஏற்காமல் உள்ளவனாகிய ஈசன் உறையும் நகர், கமுக மரங்கள் பொலியும் புகலி ஆகும்.

பூகம் – கமுக மரம்.

326. இரைக்கும் புனல்செஞ் சடைவைத் தஎம்மான்தன்
புரைக்கும் பொழில்பூம் புகலிந் நகர்தன்மேல்

Koviloor Digital Library

உரைக்கும் தமிழ்ஞான சம்பந் தன்ஒண்மாலை
வரைக்கும் தொழில்வல் லவர்நல் லவர்தாமே.

தெளிவுரை: *பாய்ந்து செல்லும் நீராகிய கங்கையை எம் தலைவன், தன் அழகிய சடையில் வைத்தவன். அப் பெருமானுடைய, உயர்ந்த பொழில் விளங்கும் புகலி நகர்மேல் புகழ்ந்து உரைக்கும் தமிழ் ஞானசம்பந்தன் திருப்பதிகத்தைத் தம் அளவில் வரைப் படுத்திப் பயில வல்லவர், நல்லவர் ஆவர்.*

சிறப்புரை: நல்லோர் எனும் பெயர் பெறுதல் அரிதாதலை எண்ணி, அவ்வெழில் இத் திருப்பதிகக் கடைக்காப்பாய் அமையுமாறு நோக்கம் கொண்டு, அதனை அடைதல் வேண்டும் என்னும் குறிப்பிலும் அதற்குரிய சாதனமாகவும் இத் திருப்பதிகம் அருளப் பெற்றது என உணரலாம்.

புரை – உயர்வு. வரை – எல்லை, தனக்குள் வகுத்துக் கொள்வது எனும் குறிப்பு.

31. திருக்குரங்கணில்முட்டம்

தல விளக்கம்: *தொண்டை நாட்டுத் தலம். காஞ்சிபுரத் திற்கு அண்மையில் உள்ளது. குரங்கு (வாலி), அணில், முட்டம் (காகம்) வழிபட்டது.*

சுவாமி : *வாலீஸ்வரர்*

அம்பிகை : *இறையார் வளையம்மை*

தல மரம் : *இலந்தை*

தீர்த்தம் : *வாலி தீர்த்தம், காக்கைத் தீர்த்தம்*

பண் : *தக்கராகம்*

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

327. விழுநீர் மழுவாள் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணில்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பம்இலரே.

தெளிவுரை: கங்கை, மழு, வாள் படை ஆகியன விளங்க, நீரில் குவளை மலரவும், கயல் பாயும் வளமான நீர் மிக்க வயல்களும் சூழ்ந்த குரங்கணில்முட்டம் என்னும் ஊரில் ஈசன் கோயில் கொண்டுள்ளான். அப் பெருமானைத் தொழும் சிறப்புடையவர், தீமையைத் தரும் துன்பம் இல்லாது இருப்பர்.

விழுநீர் – கங்கை.

328. விடைசேர் கொடியண் ணல்விளங் குயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்துஓங் கியகாட்டில்
குடைஆர் புனல்மல் குகுரங் கணில்முட்டம்
உடையான் எனைஆள் உடைஎந் தைபிரானே.

தெளிவுரை: இடபக் கொடியுடைய அண்ணலாகிய ஈசன், உயர் மாட மாளிகைகளின் கடைப் பக்கம், வனம் மிகுந்து, நீர் மல்கும் குரங்கணில்முட்டத்தில் உடையவன். அவன் என்னை ஆளாக உடைய என் தந்தையும் தலைவனும் ஆவன்.

சிறப்புரை: ஆளுடைய பிள்ளையாகிய ஞானசம்பந்தர் தம் திருவாக்கால் அத்தொடரை உரைத்தல் நோக்குக. ஈசனுக்கு ஆளுடைபிள்ளை ஞானசம்பந்தர். அவருக்கு ஆள் உடை எந்தை ஈசன் ஆவர்.

329. சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் தனைஆ ருயிர்வவ் வியகாலன்

Koviloor Digital Library

கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணில்முட்டத்து
ஏலம் கமழ்புன் சடைஎந் தைபிரானே.

தெளிவுரை: சூலத்தைப் படையாக உடையவன்; இடபவாகனத்தைக் கொண்டவன்; திருவெண்ணீற்றைத் தரித்தவன்; காலனாகிய கூற்றுவன் உயிரைக் கவர்ந்து காலனுக்குக் காலன் ஆனவன்; அழகிய பொழில் சூழ்ந்த குரங்கணில்முட்டத்தில் மணம் மிக்க சடையுடன் விளங்கும் என் தந்தை. அவன் என் தலைவன்.

330. வாடா விரிகொன் றைவலத்து ஒருகாதில்
தோடுஆர் குழையா னலபா லனநோக்கிக்
கூடா தனசெய் தகுரங் கணில்முட்டம்
ஆடா வருவார் அவர்அன் புடையாரே.

தெளிவுரை: வாடாது விரிந்த கொன்றை மலர் சூடி, ஒரு காதில் தோடும், மற்றொன்றில் குழையும் அணிந்து, நலம் புரிதலைப் பரிபாலனம் செய்யும் பொருட்டாக விளங்குபவன், ஈசன். யாவராலும் எளிதில் கூடாத வாறு வழிபட்ட குரங்கு, அணில், முட்டம் இவற்றின் மனமானது மகிழ்ச்சியுற்றுத் துள்ளி ஆடுமாறு காட்சி நல்கியவர். அப்பெருமான். அவர் எல்லோரிடத்திலும் அன்புடையவர்.

331. இறைஆர் வளையா ளையொர்பா கத்தடக்கிக்
கறைஆர் மிடற்றான் கரிகீ றியகையான்
குறைஆர் மதிசூ டிகுரங் கணில்முட்டத்து
உறைவான் எமைஆ ளுடை ஒண் சுடரானே.

தெளிவுரை: மணிக்கட்டில் பொருந்திய வளையை அணிந்த உமாதேவியைத் தனது மேனி பாகத்தில் அடக்கியவன் நீலகண்டம் உடையவன், யானையைத்

Koviloor Digital Library

தனது திருக்கரத்தால் மாய்த்துக் கொன்றவன், ஈசன். அப் பெருமான் குறை பொருந்திய பிறை மதியைச் சூடிக் குரங்கணில்முட்டத்தில் உறைபவன். அவன் எம்மை ஆளுடைய ஒண்சுடர்.

ஆளுடை ஒண்சுடர் – ஆளாக உடைய ஒளிமிக்க சோதி.

332. பலவும் பயனுள் ளனபற் றும்ஒழிந்தோம்
கலவம் மயில்கா முறுபே டையொடுஆடிக்
குலவும் பொழில் சூழ்ந் தகுரங் கணில்முட்டம்
நிலவும் பெருமா னடிநித் தநினைந்தே.

தெளிவுரை: தோகை விரித்த மயில், விரும்பும் பெண் மயிலுடன் மகிழ்ந்து ஆடிக் குலவும் பொழில் சூழ்ந்த குரங்கணில்முட்டம் நிலவும் ஈசன் திருவடியை நித்தமும் நினைந்ததன் பயன், பலவாகும். அதனைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் பற்றற்ற நிலை அடைந்தோம் என்பது ஆகும்.

சிறப்புரை: ஒழிப்பதற்கு அரிதாக உள்ள பற்றையும் ஒழித்தோம் என்பது இறைவன் அருள் புரிதலின் சிறப்பை நன்கு உணர்த்துவதாயிற்று.

கலவம் – தோகை. நித்தம் – (1) நித்தமும், நாள் தோறும், (2) நித்தியம், நிலையானது.

333. மாடுஆர் மலர்கொன் றைவளர் சடைவைத்துத்
தோடுஆர் குழைதான் ஒருகா தில்இலங்கக்
கூடார் மதில்எய் துகுரங் கணில்முட்டத்து
ஆடார்அரவம் மரை யார்த்து அமர்வானே.

தெளிவுரை: செல்வத்தை நிகர்த்த மலராகிய கொன்றை யைச் சடை முடியில் வைத்து, ஒரு காதில் தோடும், மற்றொரு காதில் குழையும் அணிந்து விளங்கி, நன்நெறி யுடைய தேவர்களுடன் கூடிப் பொருந்தி

Koviloor Digital Library

நிற்காதவர்களாகிய மூன்று அசுரர்களுடைய கோட்டை மதில்களை எரித்துப் பொடியாக்கிக் குரங்கணில்முட்டத்தில், சிவபெருமான் ஆடுகின்ற அரவத்தை அரையில் பொருத்தி அமர்பவன்.

தோடு, குழை – காதில் அணியும் அணி. மாடு – செல்வம்; கொன்றை மலர் செல்வத்துக்கு நிகரானது எனப்பட்டது. கூடார் – பகைவர்கள். ஆடார் அரவம் – ஆடும் இயல்பை உடைய அரவம்.

334. மையார் நிறமே னிஅரக் கர்தம் கோனை
உய்யா வகையால் அடர்த்துஇன் னருள்செய்த
கொய்யார் மலர்சூ டிகுரங் கணில்முட்டம்
கையால் தொழுவார் வினைகாண் டல்அரிதே.

தெளிவுரை: *கரிய நிற மேனியுடைய இராவணன் எந்த வகையாலும் தப்ப முடியாதபடி தண்டனை செய்து, பின்னர் இன்னருள் செய்தான் ஈசன். அவன், அன்பர்கள் மனம் விரும்புமாறு கொய்து சாற்றும் மலர்களைச் சூடி, குரங்கணில்முட்டத்தில் வீற்றிருக் கின்றான். அவனை இரு கைகளாலும் கூப்பித் தொழு பவர்களுக்கு வினை இல்லை.*

சிறப்புரை: *பிறப்புக்கு வினையே காரணமாதலின், இரு வகையான (நல்வினை, தீவினை) வினைகள் மன்னுயிர்களைச் சாராவண்ணம் ஈசன் புரிதலை உணர்த்திற்று. ஈசனையே மையமாகக் கொண்டு பற்றின்றி ஆற்றும் தொண்டு வினை பற்றாமையும் அதுவே முத்திக்குச் சாதனம் என்றும் புலப்படுத்தி யுள்ளது.*

335. வெறிஆர் மலர்த்தா மரையா னொடுமாலும்
அறியா துஅசைந்துஏத் தஓரார் அழல்ஆகும்
குறியா நிமிர்ந்தான் தன்குரங் கணில்முட்டம்
நெறியால் தொழுவார் வினைநிற் ககிலாவே.

Koviloor Digital Library

தெளிவுரை: மணம் கமழ் தாமரை மலர்மேல் உள்ள பிரமனோடு திருமாலும் அறியாது அயர்ந்து நிற்கவும் பின்னர் போற்றித் துதிக்க, நினைப்பதற்கு அரிய தீப் பிழப்பின் வடிவாகி ஓங்கினான். அப்பெருமான் விளங்கும் இடம், குரங்கணில்முட்டம். ஆங்கு, கோயில் கொண்டு விளங்குபவனை, நெறிமுறையோடு தொழுபவர்கள் வினையானது நிற்காது.

சிறப்புரை: நின்று துன்பத்தை விளைவிக்காது வினையானது அற்றுப் போகும் என்பதனை "வினை நிற்ககிலாவே" என்னும் தொடர் உணர்த்திற்று.

நிற்ககிலாவே – நிற்காது.

336. கழுவார் துவரா டைகலந் துமெய் போர்க்கும்
வழுவாச் சமண்சாக் கியர்வாக்கு அவைகொள்ளேல்
குழுமின் சடைஅண் ணல்குரங் கணில்முட்டத்து
எழில்வெண் பிறையான் அடிசேர் வதுஇயல்பே.

தெளிவுரை: துவராடையை மெய்யில் போர்த்துத் தம் கொள்கையில் மாறுபாடு இன்றி சமணர்களும், சாக்கியர்களும் உள்ளனர். அவர்கள் கூறும் சொற்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம். மின்னலைப் போன்று பளிச்சென்று சிவப்பான சடையுடைய அண்ணல் ஆகும் பெருமான், அழகிய பிறையணிந்து குரங்கணில்முட்டத்தில் உள்ளான். அவன் திருவடியின்பால் மனத்தைப் பொருத்தி வணங்குவது உயிர்களுக்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்பு ஆகும்.

337. கல்ஆர் மதில்காழியுள் ஞான சம்பந்தன்
கொல்ஆர் மழுஏந் திகுரங் கணில்முட்டம்

Koviloor Digital Library

சொல்ஆர் தமிழ்மா லைசெவிக்கு இனிதாக
வல்லார்க்கு எளிதாம் பிறவா வகைவீடே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கற்களால் கட்டப்பெற்ற மதில்களை உடைய சீகாழியை உள்ளத்தில் தேக்கிக் கொண்ட ஞானசம்பந்தன், மழுப்படை ஏந்திய ஈசன் விளங்கும் குரங்கணில்முட்டம் பற்றி சொல்லில் சிறந்த தமிழ் மாலையாகச் சொன்ன இத்திருப்பதிகத்தைச் செவிக்கு இனிமையாகச் சொல்லவும், கேட்டு மகிழவும் உள்ளவர்களுக்குப் பிறவாமை என்னும் பேறு வாய்க்கும்; முத்தி இன்பம் எளிதாய் வரும்.

செவிக்கு இனிதாக – சொல்லுதலும், சொல்லச் செவி மடுத்தலும்.

32. திருவிடைமருதூர்

தல விளக்கம்: சோழ நாடு – காவிரி தென்கரைத் தலம். மத்தியார்ச்சுனம் என்று வழங்கப்பெறும். மருத வனம், சண்பகாரண்யம், சத்திபுரம் என்ற பெயர்களும் உண்டு. வரகுண பாண்டியனுக்குப் பிரமஹத்தி நீங்கிய தலம். உமாதேவி, விஷ்ணு, இலட்சுமி, சரஸ்வதி, வேதம் முதலானோர் பூசித்தது.

சுவாமி : மகாலிங்கேஸ்வரர்

அம்பிகை : பெருநலமுலையம்மை
பிருகத்சுந்தர குஜாம்பிகை

தல மரம் : மருது (அர்ச்சுனம்)

தீர்த்தம் : காவிரி

பதிகக் குறிப்பு: ஞானசம்பந்தர் திருக்கோயிலை நோக்கிச் செல்லுங்கால் பாடியது.

பண் : தக்க ராகம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

338. ஓடே கலன்உண் பதும்ஊ ரிடுபிச்சை
காடே இடமா வதுகல் ஆல்நிழற்கீழ்
வாடா முலைமங் கையும்தா னுமகிழ்ந்து
ஈடா உறைகின் றஇிடை மருதுஈதோ.

தெளிவுரை: திருவோடு கொண்டு, ஊர் இடும் பிச்சை ஏற்று அதனையே உண்கலனாகக் கொண்டும் இடுகாட்டை இருப்பிடமாகவும், ஆல் நிழற் கீழ் குருமுகமாக இருந்தும் விளங்கும் ஈசன், உமாதேவியும் தானும் மகிழ்ந்து பெருமையாக உறைகின்ற இடைமருது இதுவோ!

ஈடு – பெருமை.

339. தடம்கொண் டதொர்தா மரைப்பொன் முடிதன்மேல்
குடம்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படம்கொண் டதொர்பாம்பு அரைஆர்த் தபரமன்
இடங்கொண்டு இருந்தான் தன்இடை மருதுஈதோ.

தெளிவுரை: பெருமை மிக்க தாமரை மலரைத் தரித்த திருமுடியின் மேல், குடத்தினால் நீர் முகந்து குளிர்ந்த நீரை ஆட்டி அபிடேகம் செய்ய ஏற்று, அரவத்தை அரையில் கட்டிய பரமன் வீற்றிருக்கும் இடைமருது இதுவோ!

தடம் – பெருமை.

340. வெண்கோ வணங்கொண்டு ஒருவெண் தலையேந்தி
அம்கோல் வளையா ளையொர்பா கம்அமர்ந்து
பொங்கா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எங்கோன் உறைகின் றஇடை மருதுஈதோ.

Koviloor Digital Library

தெளிவுரை: ஒளிதிகழ் வேதத்தைக் கோவணமாகக் கொண்டு, பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி, அழகிய வளையல்களைத் திரட்சியாக உடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு இனிது இருந்து விளங்கும் ஈசன், பொங்கி வரும் காவிரியின் அழகிய கரையின்மேல் உறைகின்ற இடைமருது இதுவோ!

சிறப்புரை: ஈசனுக்கு வேதமே கோவணமாதலால் "வெண்" அதற்கு அடைமொழியானது. பிரம கபாலம் ஒரு வெண்தலை என உணர்தப் பெற்றது.

அம் கோல்வளை – திரட்சியான அழகிய வளையல். கோல் – திரட்சி. பொங்காவரு காவிரி – நீர் பொங்கி வரும் காவிரி. பாகம் அமர்ந்து – இடப் பாகத்தில் அமர வைத்து.

341. அந்தம் மறியா தஅரும் கலம்உந்திக்
கந்தம் கமழ்கா விரிக்கோ லக்கரைமேல்
வெந்த பொடிப்பூ சியவே தமுதல்வன்
எந்தை உறைகின் றஇடை மருதுஈதோ.

தெளிவுரை: ஆதியும் அந்தமும் அறியப்பட முடியாதவன் ஈசன், அரியதாக விளங்கும் அணி கலன்களைத் தமது அலைகளால் உந்திக் கொண்டு வரும் காவிரியின் மணம் பொருந்தி வீசும் அழகிய கரையின் மேல் விளங்குபவன்; வெண்பொடி பூசிய வேதமுதல்வன். அவன் என் தந்தை. அப்பெருமான் உறைகின்ற இடைமருது இதுவோ!

சிறப்புரை: பாடல் பெற்ற திருத்தலங்கள் காவிரிக்கு வடகரை எனவும் தென்கரை எனவும் வகுக்கப் பெற்றுள்ளன. காவிரியானது கரை அழகு பெற்று விளங்குதலைக் கோலக்கரை எனும் சொல் உணர்த்தும்.

Koviloor Digital Library

342. வாசம் கமழ்மா மலர்ச்சோ லையில்வண்டே
தேசம் புகுந்துஈண் டியொர்செம் மையுடைத்தாய்ப்
பூசம் புகுந்துஆ டிப்பொலிந்து அழகாய
ஈசன் உறைகின் றஇடை மருதுஈதோ.

தெளிவுரை: *வாசம் கமழும் சிறப்பான மலர்களைக் கொண்டு விளங்கும் சோலையில் வண்டுகள் பெருமை யுடையதாய் விளங்க, பூசத் திருநாளில் மகிழ்ந்து பொலிந்து ஈசன் உறைகின்ற இடைமருது இதுவோ!*

சிறப்புரை: *ஈசனுக்கு அலங்கரிக்கப்படும் மலர்களைத் தீண்டும் பெருமை மிக்க வண்டுகள் செம்மை யுடைத்தாய் இருத்தல் எனச் சுட்டப்பெறுதல் காண்க. பூசத் திருநாளில் நடைபெறும் விழாச் சிறப்பு இவண் போற்றப்படுதலும் காண்க.*

அழகாய ஈசன் – மனத்திற்கு இசைந்து இனிமை தரும் ஈசன். கண்ணுக்கும் கருத்திற்கும் இனிமை தருபவன்.

343. வன்புற்று இளநா கம்அசைத்து அழகாக
என்பிற் பலமா லையும்பூண்டு எருதேறி
அன்பிற் பிரியா தவளோ டும்உடனாய்
இன்புற்று இருந்தான் தன்இடை மருதுஈதோ.

தெளிவுரை: *புற்றின்கண் விளங்கும் கொடிய நாகத்தைத் தரித்து, எலும்பு மாலையை அழகாகப் பூண்டு, இடப வாகனத்தில் ஏறி, அன்பு பிரியாதவளாகிய உமாதேவியோடு உடனாகி இருந்து இன்புற்று வீற்றிருக்கும் ஈசனுடைய இடைமருது இதுவோ!*

344. தேக்கும் திமிலும் பலவும் சுமந்து உந்திப்
போக்கிப் புறம்பூ சல்அடிப் பவருமால்
ஆர்க்கும் திரைக்கா விரிக்கோ லக்கரைமேல்
ஏற்க இருந்தான் தன்இடை மருதுஈதோ.

Koviloor Digital Library

தெளிவுரை: காவிரி ஆறு தேக்கு, வேங்கை, பலா மரங்களை அடித்துக் கொண்டு வந்து கரையின் இரு பக்கங்களிலும் சேர்க்கும். அவ்வாறு நிகழ்வதால் உண்டாகும் ஒலி ஆர்க்க அழகிய கரைமேல் வீற்றிருக்கும் ஈசனுடைய இடைமருது இதுவோ!

திமில் – வேங்கைமரம்; பலவு – பலாமரம். மால் – அசைச் சொல்; ஆல் (நீர்) ஆர்க்கும் திரை எனலும் பொருந்தும்.

345. பூவார் குழலார் அகில்கொண் டுபுகைப்ப
ஓவாது அடியார் அடியுள் குளிர்ந்துஏத்த
ஆவா அரக்கன் றனைஆற் றல்அழித்த
ஏவார் சிலையான் தன்இடை மருதுஈதோ.

தெளிவுரை: மென்மையான மலர் சூடும் கூந்தலையுடைய மகளிர் அகிற் புகைகொண்டு விளங்க, அடியவர்கள் சற்றும் ஓய்தல் இன்றி இடையறாது, திருவடியை நெஞ்சில் இருத்தி மகிழ்ந்து ஏத்த, வரையெடுத்த இராவணனுடைய வலிமை யழித்த பெருமை மிக்க கயிலை நாதனின் இடைமருது இதுவோ!

சிறப்புரை: அடியவர்கள் ஈசனைப் போற்றி வணங்கும் மாண்பு குளிர்ந்து ஏத்த எனச் சிறப்பிக்கப்பட்டது. இத்தொடரினைக் 'கோன் என்னைக் கூடக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ' என்றும், 'கோலமே நோக்கிக் குளிர்ந்து ஊதாய் கோத்தும்பீ' என்றும், மணிவாசகர் பகர்வதுடன் ஒப்பிட்டு நோக்குக.

ஆகாத செயலைச் செய்த அரக்கன் ஆற்றல் அழிக்கப்பட்ட தன்மையில் ஆவா அரக்கன் என உணர்த்தப்பட்டது.

ஏ ஆர் சிலை – பெருமை மிக்க மலை, கயிலாயம். ஏ – பெருமை, உயர்வு.

Koviloor Digital Library

346. முற்றா தவெதொர்பால் மதிசூ டுமுதல்வன்
நற்றா மரையா னொடுமால் நயந்துஏத்தப்
பொற்றோ ளியும்தா னும்பொலிந்து அழகாக
எற்றே உறைகின் றஇடை மருது ஈதோ.

தெளிவுரை: *இளவெண்மதி சூடும் முதல்வன், பிரமனும் திருமாலும் விரும்பி ஏத்தி வழிபட, உமாதேவியும் தானும் பொலிந்து எவ்வளவு அழகாக உறைகின்றான்! அந்த இடைமருது இதுவோ!*

நயந்து – விரும்பி. பொற்றோளி – உமாதேவியார்

347. சிறுதே ரரும்சில் சமணும் புறம்கூற
நெறியே பலபத் தர்கள்கை தொழுதுஏத்த
வெறியா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எறிஆர் மழுவா ளன்இடை மருதுஈதோ.

தெளிவுரை: *சில சமணர்களும் பௌத்தர்களும் நன்னெறிக்குப் புறம்பானவற்றைக் கூற, நன்னெறியின் பாற்பட்டுப் பலவகையால் அன்பு செய்யும் பக்தர்கள் கைதொழுது வணங்கி நிற்க, ஆவேசத்தோடு நீர் பெருகி வரும் காவிரியின் கரையில் விளங்கும், எறிந்து தாக்கும் மழுப்படையை ஆளும் ஈசன் இடைமருது இதுவோ!*

எறியா வருகாவிரி – ஆவேசத்தோடு வேகமாக வரும் காவிரி. எறி ஆர் மழு – எறிந்து வீசித் தாக்கும் மழு. மழுவாளன் – மழுப்படைக்குரிய ஈசன்.

348. கண்ணார் கமழ்க ழியுள்ஞா னசம்பந்தன்
எண்ணார் புகழ்எந் தைஇடை மருதின்மேல்
பண்ணோடு இசைபா டியபத்தும் வல்லார்கள்
விண்ணோர் உலகத் தினில்வீற்று இருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: கண்ணுக்கும் கருத்துக்கும் பொருந்தி விளங்கும் காழியை உள்மகிழும் ஞானசம்பந்தன், எண்ணத்தில் மிளிரும் புகழ் மிக்க எந்தையாகிய ஈசன் இருக்கும் இடைமருதின் மேல், பண்ணோடு பாடிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் தேவர் உலகத்தில் வீற்றிருப்பர்.

சிறப்புரை: மக்களினும் தேவர் உயர்பிறப்பாதல் உணர்த்தப்பட்டது.

கண் – அறிவு, காட்சி.

33. திருஅன்பில்ஆலந்துறை

தல விளக்கம்: சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலம். அன்பில் என்பது தலப்பெயர். ஆலந்துறை என்பது கோயில். பிரமன், வாகீசமுனிவர் வழிபட்ட தலம்.

சுவாமி : சத்திய வாகீசர், பிரமபுரீஸ்வரர்

அம்பிகை : சௌந்தர நாயகி

தல மரம் : ஆல மரம்

தீர்த்தம் : கொள்ளிடம், சந்திரதீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

349. கணைநீடு எரிமால் அரவம் வரைவில்லா
இணையா எயில்மூன் றும்எரித் தஇறைவர்
பிணைமா மயிலும் குயில்சேர் மடஅன்னம்
அணையும் பொழில்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: நீண்டு எரிதரும் அக்கினிக் கடவுள், திருமால், ஆகியோரைக் கணையாகவும், அரவத்தை

Koviloor Digital Library

நாணாகவும், மேரு மலையை வில்லாகவும் இணைத்து, முப்புரங்களை எரித்த இறைவர் மயில்கள் தம் பெடையுடன் மகிழ்ந்தும், குயில்கள் இசைத்தும், அன்னப் பறவைகள் சேர்ந்தும் உள்ள பொழில் சூழ் அன்பில் என்கின்ற பதியில் விளங்கும் ஆலந்துறையில் இருப்பவர்.

350. சடைஆர் சதுரன் முதிரா மதிசூடி
விடைஆர் கொடியொன்று உடைஎந் தைவிமலன்
கிடைஆர் ஒலிஓத்து அரவத்து இசைகிள்ளை
அடைஆர் பொழில்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: ஈசன், சடையை உடையவன்; ஆற்றல் உடையவன்; இளைய பிறை மதிசூடி இடபக் கொடி யுடைய எந்தை; விமலன், அப்பெருமான், மாந்தர், கூட்டமாக இருந்து வேதங்களை இசையுடன் ஓத, அவ் ஒலியைக் கேட்ட கிளிகள் இசைக்க விளங்கும் பொழில் சூழ் அன்பில் ஆலந்துறையில் மேவியுள்ளவர்.

351. ஊரும் மரவம் சடைமேல் உறவைத்துப்
பாரும் பலிகொண்டு ஒலிபா டும்பரமர்
நீருண் கயலும் வயல்வா ளைவராலோடு
ஆரும் புனல்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: ஊரும் அரவத்தைச் சடையில் இருக்கு மாறு செய்து, கபாலம் ஏந்திப் பலியேற்று ஒலி செய்யும் பரமன், கயல், வாளை, வரால் ஆகிய மீன்வகைகள் நீர் நிறைந்த வயல்களில் விளங்கப் பெருகும், அன்பில் ஆலந்துறையில் மேவியுள்ளவர்.

சிறப்புரை: ஊர்ந்து செல்லும் தன்மை யுடைய அரவத்தைத் தமது சடைமுடியில் பொருந்துமாறு வைத்த பாங்கு, ஆன்மாக்கள் தம் மனத்தைத் திரிய

Koviloor Digital Library

வொட்டாமல் ஒரு நிலைப்படுத்தும் அருட்பாங்கு உடையவன் ஈசன் என்பதை உணர்த்தும். "ஒலி பாடும்" என்பது உடுக்கையின் நாதம் எழுப்பும் ஒலி, அடியவர்களுக்கு இன்பமும் அல்லாதவர்களுக்கு நடுக்கமும் தருவதாம்.

352. பிறையும் மரவும் முறவைத் தமுடிமேல்
நறையுண்டு எழுவன் னியுமன் னுசடையார்
மறையும் பலவே தியர்ஓ தஒலிசென்று
அறையும் புனல்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: *பிறைச்சந்திரனும் அரவும் பகை நீங்கி ஒரு தன்மையில் அமையுமாறு வைத்துள்ள முடிமேல், மணம் கொண்டு எழும் நெருப்பை ஒத்துச் சிவந்த சடையை உடைய ஈசனார், வேத விற்பன்னர்கள் பலர், மறைகளை ஓத. அவ்வொலியானது நீர்மல்கு ஒலிசேர் அன்பில் ஆலந்துறை சேர, மேவி இருப்பவர்.*

சிறப்புரை: *சந்திரனைப் பாம்பு தீண்டுவதால் உண்டாவது சந்திரகிரகணம் என்னும் கருத்தில், சந்திரனும் பாம்பும் பகை வழியானது என்பது மரபு. இவ் இரண்டும் தன் முடியில் சேர வைத்தவர் சிவ பெருமான்.*

அரவம்: சந்தம் நோக்கி மிகுந்து – மரவம் எனப்பட்டது. முறவைத்து – உறவைத்து என்று கொள்ளலும், முறைவைத்து என்று கொள்ளலும் பொருந்தும்.

353. நீடும் புனல்கங் கையும்தங் கமுடிமேல்
கூடும் மலையாள். ஒருபா கம்அமர்ந்தார்
மாடும் முழவம் மதிர்அம் மடமாதர்
ஆடும் பதிஅன் பில்ஆலந் துறையாரே.

Koviloor Digital Library

தெளிவுரை: கங்கையை முடிமேலும், மலையரசன் மகளாகிய உமாதேவியை இடப்பாகத்திலும்) வைத்த இறைவர், முழவு ஒலிக்க இளமை யுடைய மாதர்கள் நடனம் ஆடும் பதியாகிய அன்பில் ஆலந்துறை மேவி இருப்பவர்.

354. நீறுஆர் திருமே னியர்ஊ னம்இலார்பால்
ஊறுஆர் சுவையா கியஉம் பர்பெருமான்
வேறுஆர் அகிலும் மிகுசந் தனம்உந்தி
ஆறுஆர் வயல்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: ஈசன், திருநீறு பூசிய திருமேனி உடையவர்; குற்றமற்ற மனத்தினர்தம் நற்சுவையானவர்; தேவர்தம் தலைவர். அவர், அகிலும் சந்தன மரங்களும் உந்திவரும் ஆற்றின் நீர் பாயும் வயல்கள் விளங்கும் அன்பில் ஆலந்துறையில் இருப்பவர்.

சிறப்புரை: கொள்ளிடத்தின் சிறப்பு "ஆறுஆர்" எனப் போற்றப்படுவதும், தீர்த்த மகிமை சாற்றுவதும் அறிக.

355. செடியார் தலையில் பலிகொண்டு இனிதுண்ட
படியார் பரமன் பரமேட் டிதன்சீரைக்
கடியார் மலரும் புனல்தூ விநின்று ஏத்தும்
அடியார் தொழும்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: குற்றமுடைய ஒரு சிரத்தைக் கொய்து அதன் ஓட்டில் (பிரமகபாலம்) பலிகொண்ட முறைமை யுடைய பரமன், பரமேட்டியின் சீரைப் போன்று மணத்துடன் மலரும் நீரும் சொரிந்து அடியவர்களால் தொழப்பெறும் அன்பில் ஆலந்துறை மேவியவர்.

செடி – தீமை, குற்றம் உடைமை. படி – முறைமை; கடி – மணம்.

Koviloor Digital Library

356. விடத்தார் திகழும் மிடறன் நடமாடி
படத்தார் அரவம் விரவும் சடைஆதி
கொடித்தேர் இலங்கைக் குலக்கோன் வரைஆர
அடரத்துஆர் அருள்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: விடத்தை மிடற்றில் தேக்கி, நடனம் ஆடி, படம் எடுத்து ஆடும் அரவத்தையும் சடைமுடியையும் உடையவனாகிய ஆதிமுதல்வன், இராவணனைக் கயிலைமலை நன்று அழுந்துமாறு செய்து தண்டித்துப் பின்னர் பொருந்திய அருள் புரிந்து, அன்பில் ஆலந்துறை மேவியவரே.

விடத்தார் – விடம், நஞ்சு; கொடித் தேர் – கொடியை உடைய தேர் – இராவணன் ஊர்ந்த தேரைக் குறித்தது.

357. வணங்கிம் மலர்மேல் அயனும் நெடுமாலும்
பிணங்கி அறிகின் றிலர்மற் றும்பெருமை
சுணங்கும் முகத்தம் முலையாள் ஒருபாகம்
அணங்கும் நிகழ்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: தாமரை மலர்மேல் விளங்கும் அயனும், நெடியவனாகிய திருமாலும் பிணங்கும் நெறியால், ஈசனைத் தேடிக் காணாதவர்களாய் அயர்ந்து நிற்க, பின்னர் வணங்கிப் போற்ற, நெடுஞ் சோதி வடிவாய் நின்ற பெருமை யுடையவனாகிய ஈசன், உமையை ஒரு பாகம் கொண்டு திகழும் அன்பில் ஆலந்துறை மேவி இருப்பவர்.

சிறப்புரை: மாதர்கள், தம் தலைவன்பால் கொண்ட காதலால் மெலிவு அடைதலைக் குறிக்கும் சொல் லாகிய "சுணங்கு முகத்து" என்பது, மரபு நோக்கி உமாதேவியைக் குறிப்பதாயிற்று.

சுணங்கு – மெலிவு, தேமல், பசலை.

Koviloor Digital Library

358. தறிஆர் துகில்போர்த்து உழல்வார் சமண்கையர்
நெறியா உணரா நிலைக்கே டினர்நித்தல்
வெறியார் மலர்கொண்டு அடிவீ ழும்அவரை
அறிவார் அவர்அன் பில்ஆலந் துறையாரே.

தெளிவுரை: செம்மையான பொருளை உணராத சமணர் கேட்டினையுடையவர். மணம் பொருந்திய மலர்கொண்டு தனது அடி போற்றும் அடியவர்களை அறியும் ஈசன், அன்பில் ஆலந்துறை மேவியுள்ளவர்.

தறிஆர் துகில் – தறியில் நெய்யப்படும் ஆடை.

359. ஆரவுஆர் புனல்அன் பில்ஆலந் துறைதன்மேல்
கரவா தவர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
பரவுஆர் தமிழ்பத்து இசைபா டவல்லார்போய்
விரவுஆ குவர்வா னிடைவீ டுளஎளிதாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஒலிபெருகக் கலித்து ஓடும் புனல் பெருகும் அன்பில் ஆலந்துறையின் மேல், கரத்தல் குணம் இல்லாத காழிப்பதியின் ஞானசம்பந்தன் பரவிப் பாடிய இத்திருப்பதிகத்தை இசையாகப் பாடவல்ல வர்கள், வானுலகத்தில் நன்கு விளங்குவார்கள்: முத்திப் பேறும் எளிதாகக் கூடும்.

சிறப்புரை: காழியில் உள்ள மக்கள் கரவாமல் உள்ளவர்கள் எனப் போற்றப்படுகிறது. இது மனத் தாலும், வாக்காலும், செயலாலும் கரவாத தன்மையையும் குறிக்கும். இத் தன்மை ஈசனுக்குரிய அருட்குணம் ஆதலும் காண்க. திருக்கடைக் காப்பாகக் கூறப்பட்ட பயன் வானுலகம் சார்தலுடன் முத்திப் பேறும் கிடைக்கும் வகை உணர்த்தப் பெற்றது. அவர்கள் போய் விரவு ஆகுவர் என்பது, இப்பிறவி

Koviloor Digital Library

முற்றுப் பெறுதலை உணர்த்தி, மீண்டும் பிறவாத நிலையும், பெறுதற்கரிய பேரின்ப நுகர்ச்சியடைதலும் புலப்படுத்திற்று.

34. சீகாழி

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

360. அடல்ஏ றுஅமரும் கொடியண்ணல்
மடல்ஆர் குழலா ளொடுமன்னும்
கடல்ஆர் புடைசூழ் தருகாழி
தொடர்வார் அவர்தூ நெறியாரே.

தெளிவுரை: *ஈசன், இடபவாகனம் அமர்பவர்; இடபக் கொடியை உடைய அண்ணல்; பூப்போன்ற மென்மையான குழலை உடைய உமாதேவியோடு சீகாழியில் விளங்கும் அவரைத் தொழுது வழிபடுபவர், தூய நெறியினர் ஆவார்.*

குழல் – கூந்தல்

361. திரைஆர் புனல்சூ டியசெல்வன்
வரைஆர் மகளோடு மகிழ்ந்தான்
கரைஆர் புனல்சூழ் தருகாழி
நிரைஆர் மலர்தூ வுமின்இன்றே.

தெளிவுரை: *அலைகளையுடைய கங்கையைச் சூடிய செல்வன், மலைமகளாகிய உமாதேவியோடு மகிழ்ந்து வீற்றிருப்பவன். அவன் வீற்றிருக்கும் புனல் சூழ்ந்த காழியை மலர்தூவிப் போற்றிப் பரவுமின்.*

Koviloor Digital Library

362. இடிஆர் குரல்ஏ றுடைஎந்தை
துடிஆர் இடையா ளொடுதுன்னும்
கடிஆர் பொழில்சூழ் தருகாழி
அடியார் அறியார் அவலம்மே.

தெளிவுரை: இடிமுழக்கம் போன்ற குரலையுடைய இடபத்தையுடைய என் தந்தை, துடிபோன்ற அமைப்புடைய இடையையுடைய உமாதேவியோடு சேர்ந்து விளங்கும் மணம் பொருந்திய பொழில் சூழ் சீகாழியில் விளங்க, அவரை வணங்கும் அடியவர்கள் அவலம் அடையாதவர்களாவர்.

363. ஒளிஆர் விடமுன் டஒருவன்
அளிஆர் குழல்மங் கையொடு அன்பார்க்
களிஆர் பொழில்சூழ் தருகாழி
எளிதாம் அதுகண் டவர்இன்பே.

தெளிவுரை: விடத்தை உட்கொண்ட ஒருவன், வண்டு ஒலித்துச் சூழும் கூந்தலை உடைய உமாதேவியோடு பொழில் சூழ் காழியில் அன்பாய் இருக்க, அத் திருக்காட்சியைக் காண்பவர்கள் இன்பம் உறுவர்.

சிறப்புரை: திருக்கோயில் சென்று தரிசித்து வழிபடுதலின் பயன் உணர்த்தப் பெற்றது.

அளி – வண்டு.

364. பனிஆர் மலர்ஆர் தருபாதன்
முனிதான் உமையோ டுமுயங்கிக்
கனிஆர் பொழில்சூழ் தருகாழி
எளிதாம் அதுகண் டவர்ஈடே.

தெளிவுரை: குளிர்ந்த மலர் போன்ற திருவடியையுடைய ஈசன், உமையோடு இணைந்து கூடிக் கனி தரும் பொழில் சூழ்ந்த சீகாழியில் இனிது விளங்க, அத்

Koviloor Digital Library

திருக்காட்சியைக் கண்டு தரிசித்தவர்கள் இனிதே பெருமை யுற்றவர்கள் ஆவர்.

சிறப்புரை: சிவபெருமான் உமாதேவியுடன் பொருந்தி விளங்கும் காட்சி இனிதாகும். அவ்வினிய திருக்காட்சியைத் தரிசித்தவர்களும் இனிதாய் இருப்பர் எனவும், அதற்கு அச்சாரமாகக் கனி தரும் பொழில் சூழ் காழி என உரைப்பதும் காண்க.

முனி – ஈசன். ஈடு – பெருமை, கனம்.

365. கொலைஆர் தரும்கூற் றம்உதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதுஏத் தியகாழி
தலையால் தொழுவார் தலையாரே.

தெளிவுரை: கொலைத் தன்மையுடைய கூற்றுவனை உதைத்து, மலை மகளாகிய தேவியுடன் மகிழ்ந்தான், சிவபெருமான். ஞானிகள் தொழுது போற்றக் காழியில் விளங்கும் அப்பெருமானைத் தலை வணங்கித் தொழு பவர்கள் சிறப்படைவர்.

சிறப்புரை: தலை வணங்கித் தொழுதல் என்பது சரீரத்தால் செய்யும் வழிபாடாகும், தொழுதலை முதன்மையாக்கி, வழிபடுதல் கடன் என்பதனை தலையால் தொழுதல் என்னும் தொடர் உணர்த்திற்று.

தலை – தலை (சிரம்), முதன்மை, சிறப்பு.

366. திருவார் சிலையால் எயில்எய்து
உருவார் உமையோடு உடன்ஆனான்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே.

Koviloor Digital Library

தெளிவுரை: மேருமலையை அழகிய வில்லாகக் கொண்டு, முப்புரங்களின் கோட்டைகள் எரிந்து சாம்பலாகுமாறு செய்து, மேன்மையான உமா தேவியை உடனாகக் கொண்டு, அடர்ந்த பொழில் சூழ்ந்த காழியில் விளங்கும் ஈசனைக் காணாதவர் களுக்குச் சிறப்பு இல்லை.

சிறப்புரை: மேரு மலையின்கண், பொருட்செல்வம் அனைத்தும் மல்கிக் கிடத்தலைப் புராணங்கள் மொழியும். இதனைக் குறிக்கும் வகையில் திருவார் சிலை என உணர்த்தப்பட்டது. ஈசன் கருணையே, உமை வடிவில் வெளிப்பாடு அடைதலையும், ஞான சம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பால் வழங்கியது உமையின் வடிவம் ஆதலையும், "உருவார் உமை" என்னும் தொடர் உணர்த்திற்று.

வளப்பம் மிகுதியால் கரும்பச்சை நிறம் ஓங்கும் பொழில், கருஆர் பொழில் ஆயிற்று. காழியை அடைந்து ஈசனைக் காயத்தால் வணங்க வேண்டும். என உணர்த்திற்று. இது சரியை வழிபாடு ஆகும்.

திரு – செல்வம். உரு – மேன்மை, வடிவம், அழகு. கரு – கருமை வான் – பெருமை, சிறப்பு.

367. அரக்கன் வலிஒல் கஅடர்த்து
வரைக்கும் மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநினைந்தே.

தெளிவுரை: இராவணனுடைய வலிமையைக் கெடுமாறு தண்டித்து, மலைமகளாகிய உமாதேவி யோடு மகிழ்ந்து விளங்கிய ஈசன், ஊற்று நீர் பெருக்கும் சீகாழியில் மேவி இருக்கின்றான். அப்பெருமானை

Koviloor Digital Library

மனத்தில் கொண்டு, ஏராளமான மலர்களால் தூவிப் போற்றுக.

சிறப்புரை: ஊற்று நீர் கண்களுக்குப் புலப்படாதவாறு - தொட்டனைத்து ஊறும் மணற்கேணி போல உள்ள தன்மையும், தேவைக்கேற்பத் தோண்டும் அளவில் வெளிப்படும் நீர்போல, இறை அருள் ஆங்கு ஆன்மாக்களுக்கு வெளிப்படும் என்று உணர்த்துப் பெற்றது. நீரின் மிகுதி சில இடங்களில் இடையூறு அமையும் தன்மை கொண்டது. எனினும் ஈசன் அருள் அவ்வாறு இல்லை என்பதும், அது பல்கிப் பெருக வேண்டும் என்னும் குறிப்பாலும், ஏராளமான மலர்கள் தூவி ஏத்துமின் என்று உணர்த்துப்படுகிறது.

நிரக்கும் – ஏராளமாக.

368. இருவர்க்கு எரியா கிநிமிர்ந்தான்
உருவில் பெரியா ளொடுசேரும்
கருநல் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே.

தெளிவுரை: திருமால், பிரமன் ஆகிய இருவருக்கும், தீப் பிழம்பாகி வளர்ந்தோங்கிய ஈசன், உமாதேவியோடு சேர்ந்து கரிய கடல் சூழ் காழிப் பதியில் விளங்க, அதனைச் சாரும் மக்கட்கு வினை நீங்கி மாயும்.

உருவில் பெரியாள்: பெரிய நாயகி. திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தேவியின் திருநாமம்.

பரவை – கடல்

369. சமண்சாக் கியர்தாம் அலர்தூற்ற
அமைந்தான் உமையோடு உடன்அன் பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே.

Koviloor Digital Library

தெளிவுரை: *சமணர்களும் சாக்கியர்களும் குறை மொழியைச் சொன்னாலும், அதனை ஏற்காதவனாய் உமாதேவியுடன் அன்பு சேர விளங்கும் காழிப்பதி யுடையவனை, மலர்தூவிப் போற்றுவது நற்றொண் டாகும்.*

சிறப்புரை: "பூ நாளும் தலைசுமப்பப் புகழ் நாமம் செவி கேட்ப" என வரும் ஞானசம்பந்தர் வாக்கு, "சுமந்து ஆர்மலர் தூவுதல் தொண்டு" என்று இவண் உணர்த்துதலை ஓர்க.

370. நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வான் அடைவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மன்னுயிர்களுக்கு நலத்தை அளிப்பவ ராகிய ஞானசம்பந்தன், காழிப்பதியை நிலையாக உடைய ஈசன்பால் பாடிய இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள் சிறப்பு அடைவார்கள்.*

கலம் – மரக்கலம், கப்பல்.

35. திருவிழிமிழலை

தல விளக்கம்: *பதிக எண் 4 காண்க.*

பண் : *தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

371. அரைஆர் விரிகோ வணஆடை
நரைஆர் விடைஊர் திநயந்தான்

Koviloor Digital Library

விரைஆர் பொழில்வீ ழிம்மிழலை
உரையால் உணர்வார் உயர்வாரே.

தெளிவுரை: அரையில் கோவண ஆடையும், வெள்விடை ஊர்தியும் நயந்த, மணம் பொருந்திய பொழில் சூழ் வீழிமிழலையின் நாதனை, நல்லுரை கொண்டு போற்றியும், தியானம் செய்தும் வழிபடு பவர்கள், உயர்நிலை அடைவார்கள்.

நயந்தான் – விரும்பினான். ஊர்தி – வாகனம்.

372. புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங் கைகரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமுநெஞ்சே.

தெளிவுரை: அழகுடன் பொருந்திய சடைமுடியில் ஒலி செய்து ஆர்க்கும் கங்கையை வைத்த ஈசனை, வீழிமிழலையில் தரிசித்து வினை இன்மை எனும் சிறப்பைக் கொள்ளாமலும், அப் பெருமானை நினைத்துப் போற்றி வணங்காமலும் இருக்கும் நெஞ்சம் ஒரு நெஞ்சம் ஆகுமா?

புனைதல் – அழகு செய்தல். கனைதல் – ஒலித்தல்.

373. அழவல் லவர்ஆ டியும்பாடி
எழவல் லவர்எந் தைஅடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர்தொண்டே.

தெளிவுரை: பக்திப் பெருக்கால் அழுதும், ஆடியும், பாடியும் எழும் தொண்டர்கள், ஈசன் திருவடியைப் போற்றி ஆனந்தப் பரவசம் கொண்டு பேரின்பத்தில் திளைத்துத் திருவீழிமிழலையில் எழுந்தருளியுள்ள

Koviloor Digital Library

நாதனைத் தொழுவார்கள். அவர்கள் வல்லவர்கள்; நல்லவர்கள். தொண்டில் சிறந்தவர்கள்.

சிறப்புரை: அழுது ஆற்றும் பக்திப் பெருக்கினை, "மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து உன் விரை ஆர் கழற்கு என் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி" என்றும், "வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்றும் மாணிக்கவாசகர் கூற்றால் வெளிப்படுத்துவதும் காண்க.

374. உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் மரைஆர்த் தஅழகன்
விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் மடியார் அடியாரே.

தெளிவுரை: வலிமையுறும் சடையிலும் அரையிலும் அரவத்தைக் கொண்ட அழகனாகிய பொழில் சூழ் வீழிமிழலை நாதனைப் பரவித் தொழுபவரே அடியார்கள் ஆவர்.

உரவம் – வலிமை. மரை ஆர்த்த, மடியார். அரை ஆர்த்த அடியார் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

375. கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண்டு அறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவார் உயர்வாரே.

தெளிவுரை: நஞ்சை அருந்தியதால் கண்டம் கரியதாகிய ஈசன், வண்டு சூழும் கொன்றை மரங்கள் சூழ் வீழி மிழலையில் விளங்க, அவனை உரிமையோடு நினைத்துத் தொழுபவர்கள் உயர்ந்த நிலை பெறுவர்.

376. சடைஆர் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்

Koviloor Digital Library

விடையான் உறைவீ ழிம்மிழலை
அடைவார் அடியார் அவர்தாமே.

தெளிவுரை: *ஈசன், சடையில் வெண்பிறை சூடியவன்; கூட்டமாக உள்ள பூதப்படை கொண்டவன்; இடபக் கொடியை உடையவன். அப்பெருமான் உறையும் வீழி மிழலையை அடைந்து, அவனடி பணிபவரே அடியவர்கள் ஆவர்.*

சரி – கூட்டம்.

377. செறிஆர் கழலும் சிலம்புஆர்க்க
நெறிஆர் குழலா ளொடுநின்றான்
வெறிஆர் பொழில்வீ ழிம்மிழலை
அறிவார் அவலம் மறியாரே.

தெளிவுரை: *உறுதி மிக்க வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்க, சுருண்ட குழலையுடைய உமாதேவியுடன் விளங்கும் ஈசன், மணம் பொருந்திய சோலைசூழ் வீழிமிழலை யில் மேவ, நன்கு அறிந்து அப்பெருமானை வழிபடு பவர்கள் வாழ்வில் துன்பத்தைச் சற்றும் அடையா தவர்கள் ஆவர்.*

சிறப்புரை: *சிலம்பு தேவிக்குரிய அணியாகவும் கழல் ஈசனுக்குரிய அணியாகவும் கொள்ளுதல் மரபு. "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என்னும் சேக்கிழார் வாக்கும் நோக்குக.*

செறிஆர் கழல் – உறுதியான வீரக்கழல். நெறி ஆர் குழல் – சுருண்ட கூந்தல். வெறி ஆர் பொழில் – மணம் கமழ் பொழில். பொழில் – சோலை.

378. உளையா வலிஒல் கஅரக்கன்
வளையா விரல்ஊன் றியமைந்தன்

Koviloor Digital Library

விளைஆர் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவார் அடியாரே.

தெளிவுரை: அழிவைத் தரும் வலிமை படைத்த இராவணனுடைய ஆற்றல் குன்றுமாறு விரல் ஊன்றிய ஈசன் திருவீழி மிழலையில் வீற்றிருக்க, அப்பெருமானை அன்புடன் மனம் தழுவிப் போற்றுபவர்களே அடியவர் ஆவர்.

சிறப்புரை: வீழிமிழலையில், வயல்களில் நல்ல விளைச்சல் கண்டு வளம் பெருகுவதைப் போல, அடியவர் மனத்தில் அன்பு பெருக ஈசனின் அருள் பெருகி நிற்றலை உணர்த்திற்று.

உளைதல் – அழிதல். அளையாவருவார் – மனம் தழுவி வருதல்.

379. மருள்செய்து இருவர் மயலாக
அருள்செய் தவனார் அழலாகி
வெருள்செய் தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் அஞ்ஞானத்தால் மருட்சி அடைந்து மயங்கி நிற்க, நெருப்புப் பிழம்பாகி வெருளும்படி செய்து அருள் புரிந்த ஈசன் விளங்கும் வீழிமிழலையில், தெளிந்த மனத்தினராய்ப் போற்றித் துதிப்பவர்தம் தீவினை, தேய்ந்து அழியும்.

வெருள் – வெருட்சி. தெருள் – தெளிவு.

380. துளங்கும் நெறியார் அவர்தொன்மை
வளங்கொள் ளன்மின்புல் லமண்தேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினைஒய்வே.

Koviloor Digital Library

தெளிவுரை: பக்தி நெறியில் உறுதிப்பாடு இல்லாமல் அசைவை யுடைய புறச்சமயத்தவர்களின் மொழிகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம். வீழிமிழலையில் விளங்கும் ஈசனாரை உள்ளத்தில் பதித்துத் துதிப்பவர்களுடைய வினை அசைவுற்று நீங்கும்.

தேரை – தேரர் – பௌத்தர்.

381. நளிர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
குளிர்ஆர் சடையான் அடிகூற
மிளிர்ஆர் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க்கு இலைகேடே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: குளிர்ச்சி பொருந்திய காழியின் ஞான சம்பந்தன், குளிர்ந்த கங்கையைச் சடையில் தரித்த வனாகிய ஈசன் அடிபோற்றி, மிளிர்பொழில்சூழ் வீழி மிழலையைப் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர் களுக்குக் கெடுதியானது எக்காலத்திலும் இல்லை.

நளிர் – குளிர்ச்சி.

36. திருவையாறு

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். திருநாவுக்கரசர் கயிலைக் காட்சியைக் கண்டு தரிசித்த திருத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சேரமான பெருமாள் நாயனாரும் தரிசிக்க முற்படும் போது இடையில் காவிரி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது இவர்கள் ஈசனைத் தரிசித்துத் திரும்பும் வரை காவிரி வெள்ளம் ஒதுங்கி நின்று வழிவிட்டு, நின்றது.

Koviloor Digital Library

சிவபெருமான், வெளியூர் சென்றிருந்த சிவாச்சாரியார் வடிவத்தில் தமக்குத்தாமே பூசனை நிகழ்த்திய தலம். "ஐயாறு அதனில் சைவன் ஆகியும்" என இதனைத் திருவாசகம் குறிக்கின்றது. அகத்தியர் பூசித்த தலம். இத்தலம் பூலோக கயிலாயம் எனப்படும்.

சுவாமி : ஐயாறப்பர், செம்பொற்சோதி பஞ்சநதேஸ்வரர்.

அம்பிகை : அறம் வளர்த்த நாயகி, தருமாம்பிகை, திரிபுர சுந்தரி

தல மரம் : வில்வ மரம்

தீர்த்தம் : காவிரி, சூரிய புஷ்கரணி, நந்தி தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

382. கலைஆர் மதியோடு உரநீரும்
நிலைஆர் சடையார் இடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோடு
அலைஆர் புனல்சே ரும்ஐயாறே.

தெளிவுரை: கலையுடைய சந்திரனும் மிகுதியாக உள்ள கங்கையும் சடையில் தரித்து விளங்கும் ஈசன் திகழும் இடமாவது, மலையில் தோன்றும் முத்துக்களும், சிறப்பான மணிகளும். சந்தன மரங்களும் காவிரியில் அடித்துக் கொண்டு சேரும் வளம் மிக்க ஐயாறு ஆகும்.

கலை ஆர்மதி: கலைபொருந்திய மதி – சந்திரன். ஆரம் – முத்து; உரநீர் – நீரின் மிகுதி, வலிமை.

383. மதிஒன் றியகொன் றைவடத்தான்
மதிஒன் றஉதைத் தவர்வாழ்வு
மதியின் னொடுசேர் கொடிமாடம்
மதிஅம் பயில்கின் றஐயாறே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், சந்திரனையும் கொன்றை மாலையையும் முடியில் சூடியவன்; வீரபத்திரக் கோலத்தில் தக்கன் யாகத்தை அழித்த போது, சந்திரனைக் காலால் மிதித்துத் தேய்த்தவன். சந்திரமண்டலம் அருகில் சேரும்படி உயர்ந்த மாடங்களையுடைய திங்கள் தவழும் ஐயாறு, அப்பெருமான் வீற்றிருக்கும் இடம் ஆகும்.

384. கொக்கின் னிறக்கின் னொடுவன்னி
புக்க சடையார்க்கு இடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதுஐயாரே.

தெளிவுரை: உருத்திராக்க மாலையை நன்கு அணிந்தும், கொக்கிறகும் நெருப்பும் கொண்டுள்ள சடைமுடியுடையவராகிய ஈசனுக்குத் தேவர்களெல்லாம் வணங்கும் ஐயாறு இடமாகும்.

385. சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ரும்ஐயாறே.

தெளிவுரை: மும்மதில்களை எல்லையாகக் கொண்டு தீங்கிழைத்த மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாகுமாறு செய்து, நீலகண்டனாக உள்ள இறைவர் விரும்பும் கோயிலானது, மக்கள் கண்களுக்குப் புலனாகாமல் தேவர்கள் துதிக்கும் ஒலி திகழும் ஐயாறு ஆகும்.

386. உமையாள் ஒருபா கமதாகச்
சமைவார் அவர்சார் விடம்ஆகும்

Koviloor Digital Library

அமைஆர் உடல்சோர் தரமுத்தம்
அமையா வரும்அந் தண்ஐயாறே.

தெளிவுரை: *உமாதேவி ஒரு பாகத்தில் விளங்க, ஈசன் சார்ந்து இருக்கும் இடமாவது, மூங்கில்கள் முற்றி வெடிக்க, அதிலிருந்து முத்துக்கள் அழகோடு வரும் அழகிய குளிர்ச்சி பொருந்திய ஐயாறு ஆகும்.*

அமை – மூங்கில்; அழகு. அமையாவரும் – அமைதல்.

387. தலையில் தொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் கும்ஐயாறே.

தெளிவுரை: *தலையில் பூங்கொத்துக்களை மாலையாக அணிந்தும். மானைத் திருக்கரத்தில் ஏந்தியும் விளங்கும் ஈசன் சேரும் இடமாவது, நிலைத்த மனத்தினராய் நித்தம் மலர்கொண்டு வணங்கும் சிறப்புப் பொருந்திய ஐயாறே.*

தொடை – பூங்கொத்து. கலை – மான்.

388. வரம்ஒன் றியமா மலரோன்றன்
சிரம்ஒன் றைஅறுத் தவர்சேர்வாம்
வரைநின்று இழிவார் தருபொன்னி
அரவம் கொடுசே ரும்ஐயாறே.

தெளிவுரை: *தெய்வப் பேறுடைய பிரமனுடைய சிரம் ஒன்றை அறுத்த ஈசனார் சேர்கின்ற இடமாவது, மலையிலிருந்து வீழும் பொன்னி நதியின் ஒலி திகழும் ஐயாறே.*

வரம் ஒன்றிய: தெய்வப் பேறுடைய – மும்மூர்த்திகளுள் ஒருவர்.

Koviloor Digital Library

389. வரைஒன் றதுஎடுத் தஅரக்கன்
சிரம்அங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ரும்ஐயாறே.

தெளிவுரை: மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணனுடைய சிரத்தையும், அங்கத்தையும் நெரித்த ஈசனார் சேர்கின்ற இடமாவது, மணம் பொருந்திய மலர்களைத் திரைகள் மூலமாகக் கரையில் சேர்க்கும் ஐயாறே.

விரை – மணம். திரை – அலை.

390. சங்கக் கயனும் அறியாமைப்
பொங்கும் சுடரா னவர்கோயில்
கொங்கில் பொலியும் புனல்கொண்டு
அங்கிக்கு எதிர்காட் டும்ஐயாறே.

தெளிவுரை: சங்கைக் கையில் உடைய திருமாலும் அறியமாட்டாதவராய்ப், பூக்கும் நெருப்புப் பிழம்பாய் விளங்கும் ஈசனார் திருக்கோயில், தேன் எனச் சுவை யுடைய நீர்கொண்டு வேள்வி முதலான சுபச் செயல் களுக்கு அர்க்கியம் – அர்ப்பணம் காட்டும் ஐயாறே.

சங்கக் கயனும் – சங்கு ஏந்திய கையினன், திருமால். கொங்கு – தேன்.

391. துவர்ஆ டையர்தோல் உடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோடு
அவர்தாம் அணைஅந் தண்ஐயாறே.

தெளிவுரை: துவர் ஆடையுடைய வஞ்சனையாளர் கூறும் மொழிகளை நாடாது, தவமுனிவர்களும் பிரமனும் சார்ந்து விளங்கும் இடம் ஐயாறே.

கவர் – வஞ்சனை. தவராசர் – முனிவர்.

Koviloor Digital Library

392. கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலம்ஆர் தருஞா னசம்பந்தன்
அலைஆர் புனல்சூழும் ஐயாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கலை ஞானியர் ஒலி செய்யும் காழியில் நலம் சிறக்கப் புரியும் ஞானசம்பந்தன், நீர் சூழும் ஐயாற்றைப் பற்றி உரைத்த இத் திருப்பதிகத்தைச் சொல்ல வல்லவர்களின் துயர் வீழ்ச்சி அடையும்.

37. திருப்பனையூர்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். தாலவனம் என அழைக்கப்படுகிறது. (தாலம் - பனை). சப்தரிஷிகள். பராசரர், மகாலட்சுமி வழிபட்டது. சுந்தரருக்கு இறைவன் நடனக்காட்சியை நல்கிய தலம். கரிகாற் சோழன் மறைந்து தங்கி இருந்து வழிபட்ட தலம்.

சப்தரிஷிகள்: 1. காசிபர், 2. கௌசிகர், 3. கௌதமர், 4. அகத்தியர், 5. அத்திரி, 6. பிருகு, 7. பரத்வாசர்.

சுவாமி : சௌந்தரநாதர், தாலனேஸ்வரர்

அம்பிகை : பெரிய நாயகி

தல மரம் : பனைமரம்

தீர்த்தம் : மகாலட்சுமி தீர்த்தம்

பண் : தக்க ராகம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

393. அரவச் சடைமேல் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவன்ஊராம்
நிரவிப் பலதொண் டர்கள் நாளும்
பரவிப் பொலியும் பனையூரே.

தெளிவுரை: *அரவம் பொருந்திய சடையில் சந்திரனும் ஊமத்தை மலரும் விரவிப் பொலிகின்ற ஈசனின் ஊர், பல தொண்டர்கள் யாண்டும் இருந்து, தினமும் தொழுது சிறப்புக் கொள்ளும் பனையூர் ஆகும்.*

394. எண்ணொன் றிநினைந் தவர்தம்பால்
உண்ணின் றுமகிழ்ந் தவன்ஊராம்
கண்ணின்று எழுசோ லையில்வண்டு
பண்நின்று ஒலிசெய் பனையூரே.

தெளிவுரை: *ஒன்றிய மனத்தினராய், ஈசனை நினைத்து வழிபடும் தொண்டர்களின் உள்ளத்தில் பொருந்தி நின்று, அவர்கள் துயரை அகற்றி, அடையும் மகிழ்ச்சியையும் தானே ஏற்று, அத் தொண்டர்களுக்கு இருவினையும் ஒத்த பாங்குடையதாக வைத்து, மீளவும் பிறக்கும் இயல்பை நீக்கி அருள் நல்குபவனுடைய ஊரானது, தேன் சொரியும் மலர்ச்சோலையில் வண்டுகள் இசை பாடும் பனையூர் ஆகும்.*

395. அலரும் மெறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறைஒன்று உடையான்ஊர்
சிலர்என் றும்இருந்து அடிபேணப்
பலரும் பரவும் பனையூரே.

தெளிவுரை: *மலர்களால் போற்றி அர்ச்சனை செய்யப் படுகின்ற சிவந்த சடை முடியில் மலரும் பிறைச் சந்திரனை உடைய ஈசனது ஊர், அணுக்கத்*

Koviloor Digital Library

தொண்டர்களாக விளங்கும் அடியவர்களும், திருத் தொண்டர்களும் எல்லாக் காலங்களிலும் இருந்து திருவடியைப் பேணிப் பரவி வழிபடும் பனையூர் ஆகும்.

சிறப்புரை: அணுக்கத் தொண்டர்கள் சிறிதளவே தேவைப்படுதலால் அவர்கள் சிலர் எனவும், வழிபடும் தொண்டர்கள் பெருகிக் காணப்படுதலால் அவர்கள் பலர் எனவும் குறிக்கப்படுதலைக் காண்க.

அலர் – மலர், பூ. எறி – தூவி அருச்சனை செய்தல்.

396. இடிஆர் கடல்நஞ் சமுதுஉண்டு
பொடிஆ டியமே னியினான் ஊர்
அடியார் தொழமன் னவர்ஏத்தப்
படியார் பணியும் பனையூரே.

தெளிவுரை: அலைகளால் கரையை இடித்து மோதும் கடலில் இருந்து தோன்றிய நஞ்சை அமுதமாக ஏற்று உட்கொண்டு, வெண்பொடியாகிய திருநீற்றைப் பூசிய மேனியை உடையவனின் ஊரானது, அடியவர்களும், மன்னவர்களும் தொழுது போற்றவும், உலகத்தில் உள்ள பிற மாந்தர்களும் வணங்கும் பனையூர் ஆகும்.

சிறப்புரை: மனம், வாக்கு, காயம் ஆகிய மூவகையால் ஏத்துபவர்கள் அடியார் எனவும்; மனம், வாக்கு ஆகிய இரண்டின் வயப்பட்டு ஏத்த வல்லவர்கள் மன்னவர் கள் எனவும்; காயத்தால் வணங்கும் பெருமக்கள் படியார் எனவும் ஆகிய மூவகையான வழிபாடும் நிகழ்த்தப்படுதல் இவண் உணர்தப்படுகிறது.

படி – உலகம்.

Koviloor Digital Library

397. அறைஆர் கழல்மேல் அரவுஆட
இறைஆர் பலிதேர்ந் தவன்ஊராம்
பொறையார் மிகுசீர் விழமல்கப்
பறைஆர் ஒலிசெய் பனையூரே.

தெளிவுரை: ஒலிக்கும் கழலும் அரவமும் ஆட, கையில் திருவோடு ஏந்தி, பிட்சாடன மூர்த்தித் திருக்கோலம் பூண்டு பலி கொண்டவனுடைய ஊரானது, உலகத்தில் சிறப்பாகச் செய்யப்படும் பெருமையான விழாக்கள் விளங்க, ஒலிப்பறை முழங்கும் பனையூர் ஆகும்.

இறை – முன்கை. பொறை – பூமி, உலகம். பறை – ஒலி எழுப்பும் தோற் கருவி.

398. அணியார் தொழவல் லவர்ஏத்த
மணிஆர் மிடறுஒன்று உடையான்ஊர்
தணிஆர் மலர்கொண்டு இருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே.

தெளிவுரை: ஈசனைத் தொழுது போற்ற வல்லவர்கள் அவனுக்கு அண்மையில் உள்ளவர் ஆவர். அத்தகையோர் விளங்க, நீலகண்டத்தை உடையவனாகிய ஈசன் இருக்கும் ஊரானது, குளிர்ந்த நீரும் பூக்களும் கொண்டு இருவேளையும் பணிந்து வழிபடும் அடியார்கள் நிலவும் பனையூர் ஆகும்.

சிறப்புரை: சிவபூசை இரு காலங்களில் நித்தமும் நிகழும் வழிபாட்டு முறை உணர்த்தப் பெற்றது.

அணியார் – அண்மையில் உள்ளவர், அணி மிக்கது. தணி ஆர் மலர் – குளிர்ந்த நீரும் மலரும்.

399. அடையா தவர்மூ எயில்சீறும்
விடையான் விறல்ஆர் கரியின்தோல்

Koviloor Digital Library

உடையான் அவன்எண் பலபூதப்
படையான் அவன்ஊர் பனையூரே.

தெளிவுரை: முப்புரத்து அசுரர்களைச் சினந்து அழிக்கும் இடப வாகனனாகிய ஈசன், வலிமை மிக்க யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவன். அப்பெருமான் பூத கணங்களைப் படையாகக் கொண்டவன். அவனுடைய ஊர் பனையூர் ஆகும்.

அடையாதவர் – முப்புரத்து அசுரர்கள்.

400. இலகும் முடிபத்து உடையானை
அலல்கண்டு அருள்செய் தஎம்அண்ணல்
உலகில் லுயிர்நீர் நிலமற்றும்
பலகண் டவன்ஊர் பனையூரே.

தெளிவுரை: சிறுமை யுடைய பத்துத் தலைகளை யுடைய இராவணன் மலையின் கீழ் அடையும் துன்பத்தைக் கண்டு, இரக்கம் கொண்டவராய் அருள் செய்த எம் அண்ணலாகிய ஈசன், உலகத்தில் எல்லாக் காலங்களிலும் உயிர்கள், நீர், நிலம் மற்றும் உள்ள அனைத்தும் கண்டவர். அவர் ஊர் பனையூர் ஆகும்.

இலகு – சிறுமை. அலல் – அல்லல், துன்பம்.

401. வரம்உன் னிமகிழ்ந்து எழுவீர்காள்
சிரமுன் னடிதா ழவணங்கும்
பிரமன் னொடுமால் அறியாத
பரமன் னுறையும் பனையூரே.

தெளிவுரை: ஈசனின் பெருங் கருணையால் வரங்கள் பல பெற்று, அதை நினைத்து மகிழ்ச்சி கொண்டு வணங்கித் தொழும் அன்பர்காள்! சிரம் தாழ்த்தி

Koviloor Digital Library

வணங்கும் பிரமனும், திருமாலும் அறியாத பரமன் உறையும் ஊர் பனையூர் ஆகும்.

402. அழிவல் லமண ரொடுதேரர்
மொழிஅல் லனசொல் லியபோதும்
இழிவில் லதொர்செம் மையினான்ஊர்
பழிஇல் லவர்சேர் பனையூரே.

தெளிவுரை: சமணர்களும், பௌத்தர்களும் உயர்ந்த மொழி யல்லாதனவற்றைச் சொன்ன போதிலும், குறையற்ற செம்மை வழங்கும் ஈசனது ஊர், பழியில்லாதவர்கள் விளங்கும் பனையூர் ஆகும்.

சிறப்புரை: வினை வழி, பழி ஏற்படுதலால், அப்பழிக்கு உண்டான வினை நீங்கிய தன்மை உணர்த்தப்பட்டது.

403. பார்ஆர் விடையான் பனையூர்மேல்
சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொல்மா லைகள்பத்தும்
ஊர்ஊர் நினைவார் உயர்வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பூவுலகத்தில் சிறப்புடைய பனையூர் மேல், சீரார் தமிழ் ஞானசம்பந்தன் உரைத்த, எக்காலத்திலும் சிறந்து விளங்கும் சொல் மாலையாகிய இத்திருப்பதிகத்தை மிகுதியாக நினைத்து ஓதுபவர்கள், உயர்வு அடைவர்.

சிறப்புரை: பனையூர் எனும் திருத்தலம் ஈசனார் அருள் ஆணையில் உரிமை உடையது என்பதனை "விடையான் பனையூர்" என்பது உணர்த்துவதாயிற்று. பெருமானைப் போற்றிப் பாடும் சொல் மாலைகள் ஆராத் தன்மை உடைய தென்பதும், எனவே அதனை மிகுதியாக நினைத்துப் பாடி மகிழ்வது ஆரா அமுதை

Koviloor Digital Library

உண்டது ஒக்கும் என்பதும், உணர்த்தப் பெற்றது. இவ்வியல்பு உயர்வைத் தரவல்லது என்பது பதிகத்தின் பயனாதலை ஓர்க.

ஊர்ஊர் – மிகுதியைக் கூறுதல்.

38. திருமயிலாடுதுறை

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். அம்பிகை வழிபட்ட தலம். மாயூரம் எனவும் வழங்கப் பெறும். சூத வனம், பிரமபுரம், தென் கயிலை என்பன வேறு பெயர்கள். இந்திரன், பிரமன், குருபகவான், அகத்தியர், சப்த மாதர்கள் வழிபட்டது.

அம்பிகை மயில் வடிவம் கொண்டு ஆடியது கௌரி தாண்டவம் எனப்படும். எனவே கௌரிமாயூரம் எனவும் பெயர் பெறும் (மயூரம் - மயில்).

சுவாமி : மயூரநாதர்

அம்பிகை : அபயாம்பிகை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : காவிரி இடப தீர்த்தம்.

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

404. கரவுஇன் றிநன்மா மலர்கொண்டு
இரவும் பகலும் தொழுவார்கள்
சிரம்ஒன் றியசெஞ் சடையான் வாழ்
வரமா மயிலா டுதுறையே.

தெளிவுரை: தலை மாலை பூண்ட செஞ்சடையண்ணல் வீற்றிருக்கும் மயிலாடுதுறையில், அடியவர்கள்

Koviloor Digital Library

வஞ்சனை இன்றி நன்மலர்களைக் கொண்டு இரவும் பகலும் தூவித் தொழுகின்றனர்.

சிறப்புரை: மண்டை ஓடுகளைக் கோர்த்து மாலையாக அணிந்துள்ள ஈசனைச் சிரம் ஒன்றிய செஞ்சடையான் என உணர்த்துதலும், அப் பெருமானை நன் மாமலர்களால் அடியவர்கள் வழிபடுதலும் குறிப்பிடப் பட்டது. ஈசன் தரித்துள்ள மாலை அவன் நித்தியன் என்பதை உணர்த்துவதாயிற்று.

405. உரவெங் கரியின் னுரிபோர்த்த
பரமன் னுறையும் பதிஎன்பர்
குரவம் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே.

தெளிவுரை: குரவம், சுரபுன்னை, வன்னி ஆகிய மலர்கள் விளங்கும் மயிலாடுதுறையானது வலிமை யான கொடிய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட பரமன் உறையும் பதியாகும்.

சுரபுன்னை – நாகலிங்கப் பூ. உரவெங்கரி – தாருகவனத்து முனிவர் களால் ஏவிவிடப்பட்ட யானை.

406. ஊனத்து இருள்நீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண்டு அடிபேணும்
தேன்ஒத்து இனியான் அமரும்சேர்
வானம் மயிலா டுதுறையே.

தெளிவுரை: அஞ்ஞானம் என்னும் இருள் ஆன்மாவை ஊனப்படுத்துகிறது. அஃதாவது, ஆன்மாவானது - உயிரானது, ஈசனோடு பொருந்தி மகிழ்ந்து உறைவதற்கு அஞ்ஞானம் தடையாக உள்ளது. அது நீங்க வேண்டு மானால் ஞானப் பொருள் கொள்ள வேண்டும். அது, தேனை ஒத்து இனிமை தரும் பதியாகிய ஈசன் அடி

Koviloor Digital Library

போற்றுவதால் உண்டாகும். அவ் ஈசன் அமர்ந்துள்ள இடம், உயர்ந்த தன்மையில் விளங்கும் மயிலாடுதுறை.

ஊனத்து இருள் – மும்மலத்து இருள்.

407. அஞ்சுஒண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சுஒன் றிநினைந்து எழுவார்மேல்
துஞ்சும் பிணிஆ யினதானே.

தெளிவுரை: ஐந்து புலன்களின் வழி செல்லும் ஆசையை அழித்தவன் இறைவன். மயிலாடுதுறையில் அப் பெருமான் வீற்றுள்ளான். அப் பெருமானை ஒன்றிய சிந்தனையால் வணங்குபவர்களிடம் உள்ள பிணிகள் யாவும் மறையும்.

சிறப்புரை: ஈசன், பொறிவாயில் ஐந்து அவித்தவன் என்று குறிப்பிடுதலை ஓர்க. ஈசனை வணங்கிப் போற்றலும், இதர பணிகளை மேற்கொள்ளும் காலத்திலும், அப் பெருமானையே சிந்தித்து அவனருளே துணையாகி நிற்க வேண்டும் என்ற நோக்கிலும், அவனே யாவற்றையும். செய்பவன் எனும் கொள்கையில் பற்றற்றுச் செயல் ஆற்றுதலும், "நினைந்து எழுவார்" என்னும் தொடர் உணர்த்திற்று. அவ்வாறு ஈசனை வழிபடுபவர்தம் பிணி, மற்றும் இடையூறு தாமாகவே மறையும் எனவும் உணர்த்துவ தாயிற்று.

மஞ்சன் – மைந்தன் – ஈசன். துஞ்சும் – ஏகும், மாயும்.

408. தணியார் மதிசெஞ் சடையான்றன்
அணிஆர்ந் தவருக்கு அருள்என்றும்
பிணியா யினதீர்த்து அருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே.

Koviloor Digital Library

தெளிவுரை: குளிர்ந்த சந்திரனைச் செஞ்சடையில் தரித்தவன் ஈசன். அவன், தன்னை அடைந்து வழிபடுபவர்களுக்கு அருள்புரிபவன். அவன் மயிலாடு துறையில் வீற்றிருந்து பிணிகளைத் தீர்த்து அருள் செய்யும் மணி போன்றவன்.

சிறப்புரை: பிணி தீர்வதற்கு, மணி, மந்திரம் ஔடதம் ஆகியவற்றைப் பயன்படுத்துதல் போன்று, ஈசன் மயிலாடுதுறையில் மணியாய் இருந்து பிணிதீர்த்தலை உணர்த்துவதாயிற்று. அவனுடைய திருநாமத்தை உச்சரித்தலும், ஒன்றிய சிந்தனையால் மாந்துதலும் மந்திரம் மற்றும் ஔஷதம் எனக் குறிப்பால் உணர்க.

அணி – அண்மை.

409. தொண்டர் இசைபா டியும்கூடிக்
கண்டு துதிசெய் பவன்ஊராம்
பண்டும் பலவே தியர்ஓத
வண்டார் மயிலா டுதுறையே.

தெளிவுரை: தொண்டர்கள் பக்தியாகக் கூடி இருந்து இசைப் பாடல்களைப் பாடி, ஈசனைக் கண்டு தரிசித்து மகிழ்கின்றனர். அப்பெருமான் உறையும் ஊரானது – இதே போன்று முற்காலத்திலும் பல வேதவிற்பன்னர் கள் கூடி இருந்து ஓதிய மயிலாடுதுறை ஆகும்.

துதிசெய்பவன் – துதி செய்யப்படும் ஈசன்.

410. அணங்கோடு ஒருபா கம்அமர்ந்து
இணங்கி அருள்செய் தவன்ஊராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே.

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு, அக் கருணைத் தாயின் அருள் பாங்கின்படியும்

Koviloor Digital Library

அடியவர்தம் வேண்டுதலின்படியும் இணங்கி அருள் புரிபவன் ஈசன். அப்பெருமான், நுண்மையாய் ஆயும் முப்புரிநூல் அணிந்த பெருமக்கள் கூடி வணங்கும் மயிலாடுதுறையில் வீற்றிருப்பவன். எனவே, அது அவனுடைய ஊர் ஆகும்.

சிறப்புரை: "நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல்'' அரிது என்னும் கருத்து, வேதங்களைக் கற்றறிதல், கேள்வி ஞானத்தால் வருதல் எனவும், அது வணக்கமுறும் நல்ல பண்பைத் தரும் எனவும் உணர்த்துவதாயிற்று.

நுணங்கு – நுண்மை.

411. சிரம்கை யினில்ஏந் திஇரந்த
பரம்கொள் பரமேட் டிவரையால்
அரங்கஅவ் அரக்கன் வலிசெற்ற
வரங்கொள் மயிலாடுதுறையே.

தெளிவுரை: பிரம கபாலத்தைக் கையில் ஏந்திப் பலி கொண்ட ஈசன், உமாதேவி தன்பால்பற்றிச் சூழுமாறு சேர, அதற்குக் காரணமாகிய அரக்கனின் வலிமை குறையும்படி வரையால் அடர்த்தினான். அப்பெருமான் வீற்றிருப்பது மயிலாடுதுறை.

412. ஞாலத் தைநுகர்ந் தவன்தானும்
கோலத்து அயனும் மறியாத
சீலத்தவனூர் சிலர் கூடி
மாலைத் தீர்மயி லாடுதுறையே.

தெளிவுரை: பூமியை உண்டு உமிழ்ந்த திருமாலும், அழகிய பிரமனும் அறியாதவாறு ஓங்கியும், மறைந்தும் இருந்த ஈசன் வீற்றிருக்கும் இடமாவது, மயக்கத்தைத் தீர்க்கும் பெற்றியை உடைய மயிலாடுதுறை.

ஞாலம் – பூவுலகம். மாலைத்தீர் – மயக்கத்தைத் தீர்க்கும்.

Koviloor Digital Library

413. நின்றுஉண் சமணும் நெடுந்தேரர்
ஒன்றும் மறியா மைஉயர்ந்த
வென்றி அருளான் அவன்ஊரான்
மன்றல் மயிலா டுதுறையே.

தெளிவுரை: *சமணரும், பௌத்தரும் உயர் பொருளை அறியாதவராய் இருக்க, வெற்றியைத்தரும் அருளை உடையவனாகிய ஈசன் உறைவது மணம் கமழும் மயிலாடுதுறை ஆகும்.*

மன்றல் – மணம். மறியாமை – அறியாமை – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

414. நயர்கா ழியுள்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்
செயலால் உரைசெய் தனபத்தும்
உயர்வாம் இவைஉற்று உணர்வார்க்கே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நயம் மிக்கவர் விளங்கும் காழியின் ஞான சம்பந்தன், மயலைத் தீர்க்கும் மயிலாடுதுறையின்மேல் ஈசன் திருவருளால் உரை செய்த இத் திருப்பதிகத்தை உணர்ந்து ஓதுபவர்களுக்கு எல்லா உயர்வும் உண்டாகும்.*

39. திருவேட்களம்

தல விளக்கம்: *காவிரி வடகரைத்தலம். சிதம்பரம் அருகில் அண்ணாமலை நகரில் உள்ளது. அர்ச்சுனருக்குப் பாசுபதம் தந்தருளிய தலம். நாரதர் பூசித்த தலம்.*

சுவாமி : *பாசுபதேஸ்வரர்*

அம்பிகை : *நல்ல நாயகி, சற்குணாம்பாள்*

Koviloor Digital Library

தல மரம் : மூங்கில்

தீர்த்தம் : கோயிலுக்கு எதிரில் உள்ள திருக்குளம்.

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

415. அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்
ஆர்அழல் அங்கை அமர்ந்திலங்க
மந்தமுழவம் இயம்ப
மலைமகள் காண நின்றாடிச்
சந்தம் இலங்கு நகுதலை கங்கை
தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும்
வேட்கள நன்னகராரே.

தெளிவுரை: ஆதியும் அந்தமும் ஆகிய அண்ணல். நெருப்பை அழகிய கரத்தில் கொண்டு முழவு ஒலிக்க, கபாலமும் கங்கையும் குளிர்ச்சி பொருந்திய சந்திரனும் மயங்கித் திளைக்க, மலைமகள் கண்டு மகிழுமாறு நின்று ஆடுகின்றார். அவர் திருநீற்றை மெய்யில் பூசி வேட்கள நகரில் இருப்பவர்.

அந்தம் – முடிவு; ஆதி – தோற்றம். நகு தலை – பிரம கபாலம்.

416. சடைதனைத் தாழ்தலும் ஏறமுடித்துச்
சங்கவெண் தோடு சரிந்திலங்கப்
புடைதனில் பாரிடம் சூழப்
போதருமாறு இவர் போல்வார்
உடைதனில் நால்விரற் கோவணஆடை
உண்பதும் ஊரிடு பிச்சைவெள்ளை
விடைதனை ஊர்தி நயந்தார்
வேட்கள நன்நகராரே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், சடையைத் தாழ முடித்துக் காதில் வெண்குழையும் தோடும் விளங்கவும், பூதங்கள் நாலா பக்கங்களிலும் சூழ்ந்திருக்க வருபவர். இவரது உடை கோவணம். இவர் ஊர் இடுகின்ற பிச்சையை ஏற்று உண்டு, இடபத்தைத் தனது வாகனமாக விரும்பியவர். இவரே வேட்களம் என்னும் நன்நகரில் இருப்பவர்.

சிறப்புரை: நான்கு வேதங்களும் ஈசனுக்குக் கோவணமாதல், நால்விரல் கோவணம் என உணர்த்தப்பட்டது. நால் விரல் இடை அகலம் என உரைத்தலும் உண்டு.

புடை – பக்கம். பாரிடம் – பூதம்.

417. பூதமும் பல்கண மும்புடைசூழப்
பூமியும் விண்ணும் உடன்பொருந்தச்
சீதமும் வெம்மையும் ஆகிச்
சீரொடு நின்றஎம் செல்வர்
ஓதமும் கானலும் சூழ்தரு வேலை
உள்ளம் கலந்து இசையால்எழுந்த
வேதமும் வேள்வியும் ஓவா
வேட்கள நன் நகராரே.

தெளிவுரை: பூதம் மற்றும் பல கணங்களும் புடை சூழவும், பூவுலகமும் விண்ணுலகமும் உடன் சேர்ந்து பொருந்துமாறும் எல்லாமாய் விளங்கி, குளிர்ச்சியும், வெம்மையும் தாமே ஆகும் சிறப்புடன் இருக்கும் ஈசன் எம் செல்வர். அவர் காட்சிக்கும் கருத்துக்கும் இனிமையும் குளிர்ச்சியும் தரும் கடல் சூழ்தரும் சோலையைப் போன்று, உள்ளத்தில் கலக்கும் இசையால் எழும் வேத வேள்விகள் ஓய்வில்லாது விளங்கும் வேட்கள நகரில் உள்ளவரே.

Koviloor Digital Library

418. அரைபுல்கும் ஐந்தலை ஆடல்அரவம்
அமையவெண் கோவணத் தோடுஅசைத்து
வரைபுல்கு மார்பில் ஓர்ஆமை
வாங்கி அணிந் தவர்தாம்
திரைபுல்கு தெண்கடல் தண்கழி ஓதம்
தேனலங்கானலில் வண்டுபண்செய்ய
விரைபுல்கு பைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: ஈசன், ஐந்து தலைகளையுடைய அரவு இடையில் ஆட, ஒளிமிக்க கோவணம் அணிந்து ஆடி, மலைபோன்று வலிமையான திரண்ட மார்பில் ஆமையை அணிந்து இருப்பவர். அவர், அலைகள் கொண்ட தெளிந்த கடலில் உப்பங்கழி ஓதம் விளங்க, இருமருங்கும் தேன் மலர்ச் சோலைகளில் வண்டுகள் இனிய பண்களை இசைக்கும் சிறப்பு பொருந்திய வேட்களம் என்னும் நன்நகரில் உள்ளவர்.

தெண் – தெளிவு.

419. பண்ணுறு வண்டறை கொன்றைஅலங்கல்
பால்புரை நீறுவெண் ணூல்கிடந்த
பெண்ணுறு மார்பினர் பேணார்
மும்மதில் எய்த பெருமான்
கண்ணுறு நெற்றி கலந்தவெண் திங்கள்
கண்ணியர் விண்ணவர் கைதொழுது ஏத்தும்
வெண்ணிற மால்விடை அண்ணல்
வேட்கள நன்னகராரே.

தெளிவுரை: வண்டுகள் இசைபாடும் கொன்றை மாலையணிந்தும், பால்போன்ற திருவெண்ணீறு பூசி வெண்ணூல் திகழ, உமாதேவியை இடப்பாகத்தில் கொண்ட பெருமான், நன்னெறியைப் பேணிக்

Koviloor Digital Library

காவாதவர்களான முப்புர அசுரர்களை அழித்தவர். அவர், நெற்றில் ஒரு கண்ணும், வெண்பிறைச் சந்திரனும் சூடி உள்ளவர்; தேவர்கள் தொழுது போற்ற, வெண்மையான இடப வாகனத்தை உடையவர். அவர் வேட்கள நகரில் இருப்பவரே.

சிறப்புரை: கரிய மால், ஈசனுக்கு இடப வடிவம் கொண்டு வாகனமாகிய சிறப்புத் தோன்ற, கருமை நிறம் மாறி வெண்மை நிறம் உற்றதை வெண்ணிற மால் விடை அண்ணல் என்பது உணர்த்திற்று. மேலும், இதனை, "இடபமதாய்த் தாங்கினான் திருமால் காண்" எனவும்; ஈசன், கடகரியும், பரிமாவும், தேரும் உகந்து ஏறாது இடபம் உகந்து ஏறினான் எனவும் மாணிக்கவாசகர் கூறுதல் காண்க.

அலங்கல் – மாலை.

420. கறிவளர்குன்றம் எடுத்தவன் காதல்
கண்கவர் ஐங்கணை யோன்உடலம்
பொறிவளர் ஆரழல்உண்ணப்
பொங்கிய பூதபுராணர்
மறிவளர் அங்கையர் மங்கையொர் பங்கர்
மைஞ்ஞிற மான்உரி தோலுடை ஆடை
வெறிவளர் கொன்றைஅம் தார்ஆர்
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: மிளகுச் செடிகள் பெருகி வளரும் கோவர்த்தன மலையை எடுத்து, பசுக்கூட்டங்களுடன் மக்களையும் பாதுகாத்த திருமாலின் புதல்வனாகிய ஐந்து மலர்க்கணைகளை யுடைய மன்மதனை, நெற்றிக் கண்ணிலிருந்து எழும் நெருப்புப் பொறியால் எரித்தவர், ஈசன். அப்பெருமான், மானைத் திருக்கரத்தில் ஏந்தியவர்; உமாதேவியை ஒரு பாகமாக

Koviloor Digital Library

உடையவர்; கரிய மானின் தோலை உரித்து அதனை ஆடையாகக் கொண்டவர்; மணம் பெருக்கும் கொன்றை மலரை அழகிய மாலையாகச் சூடியவர். அவரே வேட்கள நகரில் இருப்பவர்.

கறி – மிளகு. பொறி – நெருப்புப்பொறி. மைஞ்ஞிறம் – கருமை.

421. மண்பொடிக் கொண்டுஎரித் தோர்சுடலை
மாமலை வேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச் சேர நின்றாடி
நொய்யன செய்யல் உகந்தார்
கண்பொடி வெண்தலை யோடுகையேந்திக்
காலனைக் காலால் கடிந்துஉகந்தார்
வெண்பொடிச் சேர்திரு மார்பர்
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: பிரளய காலத்தில் யாவற்றையும் எரித்துப் பொடியாக்கி. அந்தச் சாம்பலைப் பூசி, உமாதேவி மகிழுமாறு நடனம் புரிந்து நுட்பத்தைச் செய்ய விரும்பியவர், ஈசன். அவர், பிரம கபாலத்தைக் கையில் ஏந்தியவர்; காலனைக் காலால் உதைத்தவர்; திருநீற்றை மார்பில் அணிபவர். அவர் வேட்களம் என்னும் நகரத்தில் உள்ளவரே.

சிறப்புரை: "உகந்து ஆர் வெண்பொடி" எனத் திருநீற்றின் சிறப்பும், அதனை மனமானது மகிழ்ச்சியுடன் கொள்ள வேண்டும் எனவும் உணர்த்தப் பெற்றது.

422. ஆழ்தரு மால்கடல் நஞ்சினை உண்டார்
அமுதம் அமரர்க்கு அருளிச்
சூழ்தரு பாம்புஅரை ஆர்த்துச்
சூலமோடு ஒண் மழுவேந்தித்
தாழ்தரு புன்சடை ஒன்றினை வாங்கித்
தண் மதியம்மய லேததும்ப

Koviloor Digital Library

வீழ்தரு கங்கை கரந்தார்
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: திருமால் பள்ளிகொண்டுள்ள பாற்கடலில் தோன்றிய நஞ்சினைத் தாமே ஏற்று உண்டு, அமுதத்தைத் தேவர்களுக்கு அருள் செய்து, பாம்பை அரையில் கட்டி, சூலமும் மழுவும் கரத்தில் ஏந்தி, தாழும் சடை யொன்றில் குளிர்ந்த சந்திரனை இன்ப மயக்கம் உறுமாறு சூடி, கங்கையைத் தம் திருமுடியில் ஏற்றுக் கொண்டவர் ஈசன். அவர் வேட்களம் என்னும் நகரில் இருப்பவரே.

423. திருவொளி காணிய பேதுறு கின்ற
திசைமுகனும் திசைமேல் அளந்த
கருவரை யேந்திய மாலும்
கைதொழ நின்றதும் அல்லால்
அருவரை ஒல்க எடுத்த அரக்கன்
நாடெழில் தோள்கள் ஆழத்து அழுந்த
வெருவுற ஊன்றிய பெம்மான்
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: ஈசனுடைய பேரொளியாகிய திரு மேனியைக் காண விரும்பியவர்கள் திசைமுகனாகிய பிரமனும், திசைகளுக்கும் மேலாக மூவுலகத்தையும் அளந்து, கோவர்த்தனகிரியைக் கையில் ஏந்திய திருமாலும் ஆவர். அவர்கள் இருவரும் கைதொழுது நிற்கின்றனர். அருமையான கயிலையை எடுத்த அரக்கனின் விரும்பத்தக்க தோள்கள் கீழே அழுந்து மாறும் அச்சம் கொள்ளுமாறும் விரலால் உன்றியவன் அப் பெருமான். அத்தகைய பெருமை உடையவர் வேட்கள நன்நகரில் இருப்பவரே.

ஒல்குதல் – எதிர்கொள்ளுதல்

Koviloor Digital Library

424. அத்த மண் தோய்துவர் ஆர்அமண்குண்டர்
யாதும்அல்லாஉரை யேஉரைத்துப்
பொய்த்தவம் பேசுவதல்லால்
புறன்உரை யாதொன்றும் கொள்ளேன்
முத்தன வெண்முறு வல்லுமை யஞ்ச
மூரிவல் லானையின் ஈருரிபோர்த்த
வித்தகர் வேத முதல்வர்
வேட்கள நன்நகராரே.

தெளிவுரை: செம்மண் தோய்த்துத் துவர் ஆடை அணியும் அமணர்கள் கூறும் பயனற்ற உரைகள், பொய்த் தவத்தையே பேசும். எனவே அதனை யான் ஏற்றுக் கொள்வதில்லை. முத்துப் போன்ற வெண்மை யான முறுவல் புரியும் உமாதேவி அஞ்சுமாறு வலிமை யான கொடிய யானையைப் பிளந்து சாய்த்து, அதன் தோலைப் போர்த்துக் கொண்ட வித்தக வேத முதல்வர் வேட்கள நன்நகரில் உள்ள ஈசன் ஆவர்.

அத்தமண் – செம்மண். மூரி – வலிமை.

425. விண்ணியல் மாடம் விளங்குஒளிவீதி
வெண்கொடிஎங்கும் விரிந்துஇலங்க
நண்ணிய சீர்வளர் காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணி னல்லாள்ஒரு பாகம் அமர்ந்து
பேணிய வேட்கள மேல்மொழிந்த
பண்ணியல் பாடல் வல்லார்கள்
பழியொடு பாவம் இலாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உயர்ந்த மாட மாளிகைகளும், தூய்மை யான ஒளிமிக்க வீதிகளும், சாந்தமும் அமைதியும் காட்டும் வெண்ணிறக் கொடிகளும் எல்லா இடங்

Koviloor Digital Library

களிலும் விரிவாகத் திகழச் சீர் மிகுந்து வளரும் காழியின் நற்றமிழ் ஞானசம்பந்தன், பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு அமர்ந்து காத்தருளும் வேட்கள நகரின்மேல் மொழிந்த இசைப் பாடல்களைப் பாட வல்லவர்கள், பழியும் பாவமும் அற்றவர் ஆவர்.

பெண்ணின் நல்லாள் : திருத்தலத்தில் உள்ள அம்பிகையின் திருநாமம் – நல்ல நாயகி.

40. திருவாழ்கொளிபுத்தூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். திருவாளப் புத்தூர் என்று அழைக்கப்படுகிறது. அர்ச்சுனர், திருமால், வண்டு வழிபட்டது.

சுவாமி : மாணிக்க வண்ணர், இரத்தினபுரீஸ்வரர்

அம்பிகை : வண்டமர் பூங்குழலி, பிரமகுந்தளாம்பாள்

தல மரம் : வாகை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

426. பொடிஉடை மார்பினர் போர்விடை ஏறிப்
பூதகணம் புடைசூழக்
கொடி உடை ஊர்திரிந்து ஐயம்
கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள்நெடும் கண்ணுமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலர் இட்டு
கறைமிடற்றான் அடி காண்போம்.

Koviloor Digital Library

தெளிவுரை: திருநீறு அணிந்த மார்பினர், ஈசன். பூத கணங்கள் புடைசூழப் போர்த்தன்மையுடைய வீரம் பொருந்திய இடப வாகனத்தில் ஏறி, ஊர்ஊர் திரிந்து பிச்சை கொண்டவர் அவர். அப்பெருமான் பிச்சை கொள்ளும்போது பலர் பலவாகக் கூறினும், உமா தேவியை ஒரு பாகம் கொண்டு வாழ்கொளி புத்தூரில் மேவியுள்ளவர். நீலகண்டனாகிய அப்பெருமான் திருவடியை மணம் பொருந்திய உயர்ந்த மலர்களால் போற்றித் தரிசனம் செய்வோம்.

427. அரைகெழு கோவண ஆடையின் மேல்ஓர்
ஆடரவம் மசைத்து ஐயம்
புரை கெழு வெண்தலை ஏந்திப்
போர்விடை ஏறிப் புகழ
வரைகெழு மங்கையது ஆகமொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர் தூவி
விரிசடை யான்அடி சேர்வோம்.

தெளிவுரை: கோவண ஆடை அரையில் திகழ, மேல் ஆடும் அரவத்தைத் தரித்தவன் ஈசன். அப்பெருமான், பிரமனது தலையைத் திருஓடாகக் கைக்கொண்டு பிச்சை யேற்றவன்; போரில் வெற்றி கொள்ளும் வீரமிக்க இடபத்தை வாகனமாகக் கொண்டவன்; மலையரசன் மகளாகிய பார்வதி தேவியைத் தனது திருமேனியில் பாகமாகக் கொண்டவன்; வாழ்கொளி புத்தூரில் மேவியுள்ளவன்; விரிந்த சடையுடைய அப்பெருமான் திருவடியை மணம் கமழ் மலர்களால் அர்ச்சித்து வணங்குவோம்.

சிறப்புரை: 'வரை கெழு மங்கை' என்பது உமாதேவியின் சிறப்பினை ஓதவல்லது. தேவியின் திருமேனியைத்

Koviloor Digital Library

தனது பாகம் கொண்டார் ஈசன் எனவும், தேவியைத் தனது திருமேனியில் பாகமாகக் கொண்டார் எனவும் அமையுமாறு உணர்த்தும் நயம் உணரற்பாலது. விரிசடையான் அடி - பாதாதி கேசம் கூறி, அவ்வாறே மன்னுயிர் முற்றும் சரணடைதலை உணர்த்தியது.

ஆகம் – திருமேனி, உடம்பு. அரவம் மசைத்து: அரவம் அசைத்து – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

428. பூண்நெடு நாகம் அசைத்து அனல்ஆடிப்
புன்தலை அங்கையில் ஏந்தி
ஊண்இடு பிச்சைஊர் ஐயம்
உண்டி என்று பலகூறி
வாள்நெடுங் கண்ணுமை மங்கையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தாள்நெடு மாமலர் இட்டுத்
தலைவன தாள்நிழல் சார்வோம்.

தெளிவுரை: நீண்டு வளர்ந்த நாகத்தை ஆபரணமாகப் பூண்டும், அனலைக் கரத்தில் ஏந்தியும் ஆடிப் பிரம கபாலத்தை ஏந்திப் பிச்சை ஏற்கும் பாவனையில் பல சொற்களைக் கூறி, வாளைப் போன்று கூரிய நோக்குடைய கண்களைக் கொண்ட உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டவன், வாழ்கொளிபுத்தூரில் வீற்றிருக்கும் இறைவன். அவ் இறைவனின் தாளினை மலர்களால் போற்றி வணங்கி அடைக்கலம் ஆவோம்.

நிழல் சார்தல் – அடைக்கலம் ஆதல்.

429. தார்இடு கொன்றையொர் வெண்மதி கங்கை
தாழ்சடை மேல் அவை சூடி
ஊர்இடு பிச்சைகொள் செல்வம்
உண்டி என்று பலகூறி

Koviloor Digital Library

வார்இடு மென்முலை மாதொரு பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கார்இடு மாமலர் தூவிக்
கறைமிடற் றான்அடி காண்போம்.

தெளிவுரை: *கொன்றை மாலை, வெண்மதி, கங்கை ஆகியவற்றைச் சடைமேல் சூடி, ஊரில் பிச்சை இடுமாறு பலவற்றைக் கூறி, உமையை ஒரு பாகம் உடையவன் வாழ்கொளிபுத்தூரில் உள்ளவன். அவனடியை, மலர் தூவிப் போற்றிக் காண்போம்.*

430. கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
காதிலொர் வெண்குழையோடு
புனமலர் மாலை புனைந்து ஊர்
புகுதி என்றே பலகூறி
வனமுலை மாமலை மங்கையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்
இனமலர் ஏய்ந்தன தூவி
எம்பெரு மானடி சேர்வோம்.

தெளிவுரை: *பொன்போன்ற பெருமை மிக்க கொன்றை மாலை விளங்கவும், காதில் வெண்குழையும் அணிந்து, காட்டு மலர்களையும் புனைந்து சூடி ஊரில் பிச்சை கொள்ளுமாறு பல கூறி, உமாதேவியை ஒரு பாகம் கொண்டு, வாழ்கொளி புத்தூரில் உள்ளவன் ஈசன். அர்ச்சனை செய்வதற்குரிய மலர்களால் அப்பெருமான் திருவடியைப் போற்றிச் சரணடைவோம்.*

கனம் – பொன், பெருமை. அடி சேர்வோம் – சரணடைவோம்.

431. அளைவளர் நாகம் அசைத்து அனல்ஆடி
அலர்மிசை அந்தணன் உச்சிக்
களைதலை யில்பலி கொள்ளும்
கருத்தனே கள்வனே என்னா

Koviloor Digital Library

வளையொலி முன்கை மடந்தையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தளைஅவிழ் மாமலர் தூவித்
தலைவன தாளிணை சார்வோம்.

தெளிவுரை: புற்றில் வளரும் நாகத்தையும், அனலையும் அசையுறுமாறு ஆடி, பிரமனின் கபாலத்தைக் கரத்தில் ஏந்தி, வளையலை அணிந்த உமா தேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ள ஈசன், வாழ்கொளிபுத்தூரில் உள்ளவன். அப்பெருமானை என் கருத்திற்கிசைந்த தலைவனே! உள்ளம் கவர்ந்த கள்வனே! என்று போற்றி, நன்கு விரிந்த மலர்களால் திருவடியை அர்ச்சனை செய்து சார்ந்திருப்போம்.

அளை – புற்று. அந்தணன் – பிரமன். உச்சிக்களை தலை – கபாலம், ஈசன் திருவோடு.

432. அடல்செவி வேழத்தின் ஈருரி போர்த்து
அழிதலை அங்கையில் ஏந்தி
உடல்இடு பிச்சையோடு ஐயம்
உண்டிஎன்று பலகூறி
மடல்நெடு மாமலர்க் கண்ணியொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தடமலர் ஆயின தூவித்
தலைவன தாள்நிழல் சார்வோம்.

தெளிவுரை: அடர்ந்த காதுகளை உடைய யானையின் தோலை உரித்துப் போர்த்தும், தலையோட்டைக் கையில் ஏந்திப், பிச்சை, ஐயம், உண்டி தருவீர் எனப் பலவாறு கூறியும், நீண்ட இதழ்களை யுடைய மலர்க் கண்களைக் கொண்ட உமாதேவியைப் பாகம் வைத்தவன், வாழ்கொளிபுத்தூரில் வீற்றிருக்கும் ஈசன்.

Koviloor Digital Library

அப்பெருமானைப் பெருமை மிக்க மலர்களால் தூவி வழிபட்டு அவன் தாள் நிழல் சார்வோம்.

அழிதலை – பிரமகபாலம். உடல் இடு பிச்சை – உடலைக் கருத்தில் கொள்ளுதல் – வடிவத்தின்பால் இரக்கம் கொண்டு இடுகின்ற பிச்சை. தாள் நிழல் – திருவடியின் குளிர்ச்சி பொருந்திய இனிய இருப்பிடம். சார்வோம் – அடையத் தக்க நலத்தைக் கருதி முன்னின்று அடைதல்.

433. உயர்வரை ஒல்க எடுத்த அரக்கன்
ஒளிர் கடகக் கை அடர்த்து
அயல்இடு பிச்சையோடு ஐயம்
ஆர்தலை என்றுஅடி போற்றி
வயல்விரி நீல நெடுங்கணி பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர் தூவித்
தாழ்சடை யான்அடி சார்வோம்.

தெளிவுரை: உயர்ந்த கயிலை மலையை எதிர் கொண்டு எடுத்த அரக்கனின், ஒளிமிக்க கடகம் பூண்ட கரங்களை அடர்த்துப் பலி யேற்று, நீல நெடுங்கண்ணி யுடைய உமாதேவியைப் பாகம் கொண்டு, வாழ்கொளி புத்தூரில் வீற்றிருப்பவன் ஈசன். அப்பெருமானை மலர் தூவிப் போற்றி அடிசார்ந்து இருப்போம்.

ஒல்குதல் – எதிர் கொள்ளுதல். ஆர்தலை – ஆர்தல் + ஐ. விளி. தலைவர். நெடுங்கணி – நெடுங்கண்ணி. சயம் – மாலை.

434. கரியவநான்முகன் கைதொழுது ஏத்தக்
காணலும் சாரலும் ஆகா
எரிஉரு வாகிஊர் ஐயம்
இடுபலி உண்ணிஎன்று ஏத்தி
வரியர வல்குல் மடந்தையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்

Koviloor Digital Library

விரிமலர் ஆயின தூவி
விகிர்தன சேவடி சேர்வோம்.

தெளிவுரை: கரியவனாகிய திருமாலும், நான்முகனும் கை தொழுது ஏத்தி, காண்பதற்கும், சார்ந்து நெருங்கு வதற்கும் ஆகாத எரியும் தீப்பிழம்பாகி, பிரமகபாலம் கொண்டு பிச்சை யேற்று, உமாதேவியை ஒரு பாகம் கொண்டவன், வாழ்கொளிபுத்தூரில் வீற்றிருக்கும் ஈசன். அப்பெருமானை மலர்கொண்டு தூவிப் போற்றி, அடி சேர்வோம்.

435. குண்டுஅமணர்துவர்க் கூறைகள் மெய்யில்
கொள்கையினார் புறம்கூற
வெண்தலை யில்பலி கொண்டல்
விரும்பினை என்று விளம்பி
வண்டுஅமர் பூங்குழல் மங்கையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கள் மாமலர் தூவத்
தோன்றிநின்றான் அடி சேர்வோம்.

தெளிவுரை: மெய்ம்மையுடைய கொள்கை யில்லாதவர் கள் புறம் கூறி நிற்கப், பலி கொள்வதை விரும்பினை எனக்கூறித் தொண்டர்கள் உமைபாகனாகிய நின்னை, வாழ்கொளிபுத்தூர் மேயவன் எனப் போற்றுகின்றனர். அத்தகைய ஈசன் திருவடி சேர்வோம்.

436. கல்லுயர் மாக்கடல் நின்று முழங்கும்
கரைபொரு காழிய மூதூர்
நல்லுயர் நான்மறை நாவின்
நற்றமிழ் ஞானசம் பந்தன்
வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும்
வல்லவன் வாழ்கொளி புத்தூர்ச்

Koviloor Digital Library

சொல்லிய பாடல்கள் வல்லார்
துயர்கெடுதல் லெளி தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடல் அலைகள் முழங்கிக் கரையைச் சாரும் மூதூர் ஆகிய காழிப் பதியின் நான்கு மறைகளிலும் உயர்ந்த நாவன்மை கொண்ட நற்றமிழ் ஞானசம்பந்தன், சூலம், மழு, வாள் ஆகியவற்றில் வல்லமையுடன் விளங்குபவனாகிய ஈசன் வளர், வாழ் கொளிபுத்தூரைப் பற்றிச் சொல்லிய பாடல்களைச் சொல்ல வல்லவர்களுக்குத் துயரானது எளிதில் தீரும்.

41. திருப்பாம்புரம்

தல விளக்கம்: காவிரி தென் கரைத் தலம். ஆதிசேஷன் வழிபட்ட தலம். பாம்புபுரம் என்பது பாம்புரம் ஆயிற்று. உரகபுரம் என்பது வேறு பெயர்.

சுவாமி : பாம்புரேஸ்வரர்

அம்பிகை : வண்டார்குழலி

தல மரம் : வன்னி மரம்

தீர்த்தம் : ஆதிசேஷ தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

437. சீர்அணி திகழ்திரு மார்பில்வெண் ணூலர்
திரிபுரம் எரிசெய்த செல்வர்
வார்அணி வனமுலை மங்கையோர் பங்கர்
மான்மறி ஏந்திய மைந்தர்
கார்அணி மணிதிகழ் மிடறுடை அண்ணல்
கண்ணுதல் விண்ணவர் ஏத்தும்

Koviloor Digital Library

பார்அணி திகழ்தரு நான்மறை யாளர்
பாம்புர நன்னக ராரே.

தெளிவுரை: ஈசன், அழகு திகழ் திருமார்பில் வெண்ணூல் பூண்டவர்; திரிபுரத்தை எரித்த செல்வர்; வனப்பு மிகுந்த தனங்களையுடைய உமாதேவியை ஒரு பங்காகக் கொண்டவர்; இளமையான மானைக் கரத்தில் ஏந்திய அழகர்; கரிய அழகிய மணி போன்று திகழும் கழுத்தை உடையவர்; நெற்றியில் கண்ணுடையவர். அவர், தேவர்கள் போற்றி வழிபடும், நான்மறையில் வல்லவர்கள் திகழும் பாம்புர நகரில் விளங்குபவர்.

மான்மறி – மான்குட்டி

438. கொக்கிறகோடு கூவிள மத்தம்
கொன்றையோடு எருக்கணி சடையர்
அக்கினொடு ஆமை பூண்டுஅழகாக
அனலது ஆடும்எம் மடிகள்
மிக்கநல்வேத வேள்வியுள் எங்கும்
விண்ணவர் விரைமலர் தூவப்
பக்கம்பல் பூதம் பாடிட வருவார்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: கொக்கின் இறகு, வில்வம், ஊமத்தம்பூ, கொன்றை மலர், எருக்கம் பூ ஆகியன அணியும் சடையை உடையவர் ஈசன். உருத்திராக்கமும் ஆமையும் தரித்து ஒரு கரத்தில் நெருப்பை ஏந்தி ஆடுகின்ற அடிகள் அவர். அப்பெருமான், தேவர்கள் மணம் மிக்க மலர்களைத் தூவிப் போற்றவும், பூதகணங்கள் பாடித் துதிக்கவும், வேத முறையில் நல்ல வேள்விகள் ஆற்றவும் உள்ள பாம்புர நகரில் மேவி இருப்பவர்.

அக்கு – சங்குமணி, உருத்திராக்கம்.

Koviloor Digital Library

439. துன்னலின் ஆடை உடுத்துஅதன் மேல்ஓர்
சூறைநல்லரவது சுற்றிப்
பின்னுவார் சடைகள் தாழவிட்டுஆடிப்
பித்தராய்த் திரியும்எம் பெருமான்
மன்னுமா மலர்கள் தூவிட நாளு
மாமலை யாட்டியும் தாமும்
பன்னுநான் மறைகள் பாடிட வருவார்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: பொருந்திய ஆடை உடுத்தி, அதன்மேல் காற்றை ஆகாரமாக உடைய அரவத்தைச் சுற்றி, முறுக்கிய சடைகள் தாழ்ந்து விழுமாறு ஆடி, பித்தர் போலத் திரியும் எம்பெருமான், பிரகாசிக்கும் மாமலர் கள் தூவிப் போற்றி, நான்கு மறைகளையும் சொல்ல உமாதேவியுடன் விளங்குபவர். அவர் பாம்புர நன் நகரில் இருப்பவர்.

துன்னல் – பொருந்தல். சூறை – காற்று.

440. துஞ்சு நாள் துறந்து தோற்றமும் இல்லாச்
சுடர்விடு சோதி எம் பெருமான்
நஞ்சுசேர் கண்டம் உடையஎன் நாதர்
நள்ளிருள் நடம்செயும் நம்பர்
மஞ்சுதோய் சோலை மாமயில்ஆட
மாட மாளிகை தன்மேல் ஏறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர் பயிலும்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: தோற்றமும் மறைவும் இல்லாத சுடர்மிகு சோதியாகிய எம்பெருமான், கண்டத்தில் நஞ்சு பொருந்திய தலைவர்; நள்ளிருளில் நடம்புரியும் நம்பர். அவர், மேகம் சூழ் சோலையில் மாமயில்களும், மாட மாளிகைகளில் பஞ்சு போன்ற மென்மையான பாதங்

Koviloor Digital Library

களை உடைய பாவையர்களும் ஆடல் பயிலும் பாம்புர நகரில் இருப்பவர்.

நம்பர் – ஈசன்.

441. நதியதன் அயலே நகுதலை மாலை
நாள்மதி சடைமிசை அணிந்து
கதியது வாகக் காளிமுன் காணக்
கானிடை நடம்செய்த கருத்தர்
விதியது வழுவா வேதியர் வேள்வி
செய்தவர் ஓத்தொலி ஓவாப்
பதியதுவாகப் பாவையும் தாமும்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: கங்கையும் தலை மாலையும் கொண்டு பிறைச் சந்திரனைச் சடைமிசைச்சூடி, இடுகாட்டில் காளியானவள் காணுமாறு நடம் புரிந்த ஈசன், விதி வழுவாது வேதியர்கள் வேள்வியாற்ற, அவ் வேதத்தின் ஒலியானது ஓய்வின்றி ஒலிக்கும் பதியெனும் பாம்புர நகரில் உமாதேவியுடன் விளங்குகின்றார்.

சிறப்புரை: கருத்துக்களுக்கெல்லாம் ஆதியாக விளங்குபவன் ஈசன் என்பதையும், அவன் கருத்தே யாண்டும் நிகழ வல்லதென்பதையும், "கருத்தர்" என்னும் சொல் உணர்த்திற்று.

கருத்தர் – கடவுள்

442. ஓதிநன்கு உணர்வார்க்கு உணர்வுடை ஒருவர்
ஒளிதிகழ் உருவம் சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்தளம் வள்ளல்
மான்மறி யேந்திய மைந்தர்
ஆதிநீ அருள் என்று அமரர்கள் பணிய
அலைகடல் கடைய அன்று எழுந்த

Koviloor Digital Library

பாதிவெண் பிறைசடை வைத்தஎம் பரமர்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: சிவனுடைய திருநாமத்தை ஆத்மார்த்த மாக ஓதுபவர்களின் நெஞ்சத்தில் ஊறி நிற்கும் ஒப்பற்ற ஒருவராகி, சோதி வடிவாய் விளங்குபவர் ஈசன். அவர், உமாதேவியை இடப்பாகத்தில் வைத்த எம் அண்ணல்; இளமை பொருந்திய மான் ஏந்திய கரத்தை உடைய அழகர். "ஆதி முதல்வனே! அருள்வாயாக!" எனத் தேவர்கள் பணிய, அலைகடலில் கடைய, அதில் எழுந்த பொருளான பிறைச் சந்திரனைச் சடையில் வைத்த பரமர், பாம்புர நகரில் விளங்கும் ஈசன்.

443. மாலினுக்கு அன்று சக்கரம் ஈந்து
மலரவற்கு ஒருமுகம் ஒழித்து
ஆலின்கீழ் அறம்ஓர் நால்வருக்கு அருளி
அனலது ஆடும்எம் அடிகள்
காலனைக் காய்ந்து தம்கழல்அடியால்
காமனைப் பொடிபட நோக்கிப்
பாலனுக்கு அருள்கள் செய்தஎம்அடிகள்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: திருமாலுக்குச் சக்கரப் படையை நல்கி, பிரமனுக்குரிய ஐந்து முகங்களுள் ஒன்றினைக் களைந்து நான்முகம் உடையவனாகச் செய்து, சனகாதி முனிவர்களுக்குக் கல்லால மரத்தின்கீழ் அறம் உணர்த்தி, நெருப்பைத் திருக்கரத்தில் ஏந்தி ஆடுகிறவர் எம் அடிகள். அவர் வீரக்கழல் அணிந்த தம் திருப்பாதத்தால் உதைத்து அழித்து, மன்மதனை நெற்றிக் கண்ணால் நோக்கி எரித்துச் சாம்பலாக்கி, பாலகனாகிய உபமன்யுவுக்கு பாற்கடல் ஈந்து அருள் புரிந்த அடிகள். அவர் பாம்புர நகரில் இருப்பவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" ஈசன் என்று, உபமன்யுவுக்கு அருள் புரிந்த பாங்கும் இவண் உணர்த்தப்பட்டது.

444. விடைத்தவல்அரக்கன் வெற்பினை எடுக்க
மெல்லிய திருவிரல் ஊன்றி
அடர்த்தவன் தனக்குஅன்று அருள்செய்த அடிகள்
அனலது ஆடும்எம் மண்ணல்
மடக்கொடி யவர்கள் வருபுனல்ஆட
வந்துஇழி அரிசிலின் கரைமேல்
படப்பையில் கொணர்ந்து பருமணி சிதறும்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: குற்றம் புரியும் வலிய அரக்கன் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க, அதனைத் தனது மென்மையான திருப்பாத விரலால் ஊன்றியவன் ஈசன். தகாத செயலைச் செய்தவனுக்கும் அன்று அருள் செய்த அவ் அடிகள், அனலைக் கரத்தில் ஏந்தி ஆடுபவர். இளம் நங்கையர்கள் அரிசில் ஆற்றில் நீராடக் கரையில் உள்ள தோட்டங்களில் மணிகள் சிதறி மல்கும் பாம்புர நகரில் அப்பெருமான் விளங்கு பவர்.

விடைத்தல் – குற்றப்படுதல். படப்பை – தோட்டம்.

445. கடிபடுகமலத்து அயனொடு மாலும்
காதலோடு அடிமுடி தேடச்
செடிபடு வினைகள் தீர்த்தருள் செய்யும்
தீவணர் எம்முடைச் செல்வர்
முடியுடை அமரர் முனிகணத் தவர்கள்
முறைமுறை அடிபணிந்து ஏத்தப்
படியது வாகப் பாவையும் தாமும்
பாம்புர நன்னகராரே.

Koviloor Digital Library

தெளிவுரை: மணம் திகழ் தாமரை மலரின்மேல் உறையும் பிரமனோடு, திருமாலும், விருப்பத்துடன் அடியும் முடியும் தேடிச் செல்ல, தீமை தரும் வினைகளைத் தீர்த்து அருள் புரியும் எமது செல்வர், தீவண்ணம் உடையவர். அப்பெருமான், தேவர் தலைவர்களும், முனிகணத்தவர்களும் முறைப்படி திருவடியைப் பணிந்து ஏத்த, இவ்வுலகின்கண், தேவியும் தானும் திகழ விளங்குவது பாம்புர நகர்.

கடி – மணம். செடி – குற்றம், தீமை. படி – உலகம்.

446. குண்டர்சாக் கியரும் குணமிலாதாரும்
குற்றுவிட்டு உடுக்கையர் தாமும்
கண்டவாறு உரைத்துக் கால்நிமிர்ந்து உண்ணும்
கையர்தாம் உள்ளவாறு அறியார்
வண்டுசேர் குழலி மலைமகள் நடுங்க
வாரணம் உரிசெய்து போர்த்தார்
பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்
பாம்புர நன்னகராரே.

தெளிவுரை: சாக்கியர், மற்றும் பேணும் நற்குணங்கள் இல்லாதவர்களும், நின்று கொண்டு கையில் உணவை ஏந்தி உண்பவர்களும், உண்மைப் பொருளை உள்ளவாறு அறியமாட்டார்கள். மலைமகள் நடுக்கம் கொள்ளுமாறு வீரத்துடன் யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட ஈசர், பாம்புர நன் நகரில் வீற்றிருந்து முற்காலத்தில் செய்த பாவங்களைத் தீர்ப்பவர் ஆவர்.

சிறப்புரை: நின்று கொண்டு கையில் உணவை ஏந்தி உண்பது பொருந்தாது என்னும் அறம் உரைத்த சிறப்பு காண்க.

Koviloor Digital Library

முற்பிறவியில் செய்த வினையானது இப்பிறவியில் பாவமாக அமைதலையும், அதனைத் தீர்ப்பவர் ஈசன் எனவும், "பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்" என உணர்த்தப்பட்டது. இப்பிறவியில் தம்மை யறியாது செய்யும் பாவமும் தீரும் என்று குறிப்பால் உணர்த்தும். ஈசன் திருவடியை வணங்குதல், பின்னரும் நல்வினையால் ஈசனைக் கண்டு களிக்கச் செய்யும் என்று உரைக்கும், "பண்டு செய்த பழவினையின் பயன், கண்டு கண்டு களித்திகாண் நெஞ்சமே" எனும் திருநாவுக்கரசரின் அருள்வாக்காலும் கொள்க.

குற்று – குறைவு.

447. பார்மலிந்து ஓங்கிப் பருமதில் சூழ்ந்த
பாம்புர நன்னக ராரைக்
கார்மலிந்து அழகார் கழனிசூழ்மாடக்
கழுமல முதுபதிக் கவுணி
நார்மலிந்து ஓங்கு நான்மறைஞான
சம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்து அழகார் செல்வமது ஓங்கிச்
சிவனடி நண்ணுவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உலகில் மிக ஓங்கிய அகன்ற மதில் சூழ்ந்த பாம்புர நகரில் பொருந்திய ஈசனைப் போற்றி நீர்வளம் மிக்க வயல்களும், மாடமாளிகைகளும் உடைய பழைமையான கழுமல நகரில், கவுணியர் கோத்திரத்தில் உதித்த நான்மறைகளில் வல்லவரும், அன்பின் மிக்கவருமாகிய ஞானசம்பந்தர் உரைத்த இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், சிறப்பும், செல்வமும் ஓங்கி வாழ்ந்து சிவனடியை நண்ணுவர்.

கார் – மழை, நீர். நார் – அன்பு.

Koviloor Digital Library

42. திருப்பேணுபெருந்துறை

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். உமாதேவி, முருகர், பிரமன் வழிபட்டது. இது திருப்பந்துறை என வழங்கப்படுகிறது.

சுவாமி : சிவானந்தேஸ்வரர்

அம்பிகை : மலையரசி, மங்களாம்பிகை

தல மரம் : வன்னி மரம்

தீர்த்தம் : மங்கள தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

448. பைம்மா நாகம் பன்மலர் கொன்றை
பன்றிவெண் கொம்புஒன்று பூண்டு
செம்மாந்து ஐயம் பெய்க என்றுசொல்லிச்
செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மான்நோக்கிய அந்தளிர்மேனி
அரிவையோர் பாகம் அமர்ந்த
பெம்மானல்கிய தொல்புகழாளர்
பேணு பெருந்துறையாரே.

தெளிவுரை: படம் கொண்ட நாகம், கொன்றை மலர், பன்றியின் வெண்மையான கொம்பு ஆகியவற்றைப் பூண்டு, கம்பீரமாகப் பிச்சையேற்கும் தொழிலை ஆற்றிய செல்வர், பரமன் ஆவர். அழகிய மானின் நோக்கும், தளிர் மேனியும் உடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர் அப்பெருமான். அவர் பெரும்புகழ் நல்கும் பெருமக்கள் பேணும் பெருந்துறையில் உள்ளவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: பிச்சை எடுப்பது இழிந்த தொழிலாயினும், எல்லாம் இயற்றும் செல்வராக விளங்குபவர் ஈசன். அவருடைய தன்னிச்சையான செயலைக் கருத்தில் பதியுமாறு செம்மாந்து இருக்கும் பண்பு உணர்த்தப் பட்டது.

செம்மாந்து – இறுமாந்து. அந்தளிர்மேனி – அம் + தளிர்மேனி (அம் – அழகு).

பன்மலர் கொன்றை: (1) பல இதழ்கள் கொத்தாக உள்ள கொன்றை மலர். (2) ஊமத்தம், எருக்கம் முதலான பல மலர்களும், கொன்றை மலரும்.

449. மூவரும் ஆகி இருவரும் ஆகி
முதல்வனுமாய் நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்
பல்கண நின்று பணியச்
சாவம தாகிய மால்வரை கொண்டு
தண்மதிள் மூன்றும் எரித்த
தேவர்கள் தேவர் எம்பெருமானார்
தீதில் பெருந்துறை யாரே.

தெளிவுரை: பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் முத்தொழில்களைச் செய்யும் நிலையில் வேறு வேறாகக் காட்சியில் தோன்றினாலும், ஈசன் அவ் இயலில் இருந்து ஒன்றி விளங்குபவன். அவனே சிவனும் சக்தியென இரண்டாய் விளங்குபவன். அவன் யாவற்றையும் தம்பால் ஒடுக்கவல்ல பரசிவனாய் – ஏகனாகியவன். பல்கணத்தவர்களும் பணிந்து பாவங்களைத் தீர்த்தும் நல்வினைகளைக் கைக் கொண்டும் விளங்க, மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்த, தேவதேவராகிய எம் பெருமான், தீமையே இல்லாத பெருந்துறையில் இருப்பவர்.

Koviloor Digital Library

450. செய்பூங் கொன்றை கூவிள மாலை
சென்னியுள் சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங் கோதை மாதுமை பாகம்
கூடியோர் பீடுடை வேடர்
கைபோல் நான்ற கனிகுலை வாழை
காய்குலையில் கமுகு ஈனப்
பெய்பூம் பாளை பாய்ந்து இழி தேறல்
பில்கு பெருந்துறை யாரே.

தெளிவுரை: புனையப்பட்ட கொன்றை மற்றும் வில்வ மாலை அணிந்து தலையில் கங்கை தரித்து, உமா தேவியை ஒரு பாகத்தில் கூடி இருக்குமாறு வைத்துப் பெருமை மிக்க வடிவம் கொண்டவர் ஈசன். அவர், வாழைக் குலையும் கமுகமும் ஈனும், தேன் வழியும் பெருந்துறையில் உள்ளவரே.

கூவிளம் – வில்வம்; சென்னி – தலை. பில்குதல் – வழிதல்.

451. நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவும் ஆகிஓர் ஐந்து
புலனொடு வென்று பொய்மைகள் தீர்ந்த
புண்ணியர் வெண்பொடிப் பூசி
நலனொடு தீங்கும் தான்அலது இன்றி
நன்குஎழு சிந்தையர் ஆகி
மலனொடு மாசும் இல்லவர் வாழும்
மல்கு பெருந்துறை யாரே.

தெளிவுரை: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவர் ஈசர், அவர், ஐம்புலன்களின் ஆசைகளை அடக்கி வென்ற, பொய்ம்மை தீர்ந்த புண்ணியர்; திருவெண்ணீறு பூசியுள்ள திருமேனியர். நல்லன விளைந்தாலும், தீங்கு நேரிட்டாலும், ஈசனை யன்றி வேறு எப்பொருளும் நினைப்பதற்கில்லை என்ற

Koviloor Digital Library

உறுதியான சிந்தையுடையவர்களாகி, ஆணவம், கன்மம், மாயை ஆகிய குற்றங்களை அகற்றி வாழ்பவர் கள் பெருகி மல்கும் பெருந்துறையில் அப்பெருமான் வீற்றிருக்கின்றார்.

சிறப்புரை: "நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்" என்னும் திருநாவுக்கரசர் வாக்கும் "நலனொடு தீங்கும் தான் அலது இன்றி" என்ற அருள்வாக்குடன் சிந்திக்கத் தக்கது.

452. பணிவாய் உள்ள நன்கு எழு நாவின்
பத்தர்கள் பத்திமை செய்யத்
துணியார் தங்கள் உள்ளம் இலாத
சமடர்கள் சோதிப்பு அரியார்
அணிஆர் நீலம் ஆகிய கண்டர்
அரிசில் உரிஞ்சு கரைமேல்
மணிவாய் நீலம் வாய்கமழ் தேறல்
மல்கு பெருந்துறையாரே.

தெளிவுரை: ஈசன்பால் எக் காலத்திலும் பணிவாக விளங்கிப் பணிந்து பக்திமை பெருக நாவினால் போற்றும் பக்தர்கள் உள்ளனர். அறியாமை சிறிதும் இல்லாதவர்களாய், இறை நெறிக்குப் புறம்பாகச் செய்யாதவர்களாய் உள்ளனர். அவர்கள் துன்பங்கள் வரப்பெற்றுச் சோதனைக்கும் ஆளாவது இல்லை. அழகு மிக்க நீலகண்டராகிய பெருமான் தேன்கமழும் சிறப்புடைய அரிசில் ஆற்றங்கரையில் விளங்கும் பெருந்துறையில் இருப்பவர்.

அரியார் – அரிதாதல் – இல்லை எனும் பொருள் குறித்தது. சுமடர் – அறிவில்லாதவர்.

453. எண்ணார் தங்கள் மும்மதிள்வேவ
ஏவலம் காட்டிய எந்தை

Koviloor Digital Library

விண்ணோர்சாரத் தண்ணருள் செய்த
வித்தகர் வேதமு தல்வர்
பண்ணார் பாடல் ஆடல் அறாத
பசுபதி ஈசனோர் பாகம்
பெண்ஆண் ஆய வார்சடை அண்ணல்
பேணு பெருந்துறை யாரே.

தெளிவுரை: *ஈசனையும், நற்றவத்தின் மேன்மையினையும், சிறிதும் நெஞ்சத்தில் கொள்ளாத அசுரர்களுடைய மூன்று கோட்டைகள் எரியுமாறு அம்பின் வலிமையைக் காட்டிய எந்தை, தேவர்கள் சார்ந்து போற்ற, இனிமையாக அருள் செய்யும் வித்தகர், வேத முதல்வர்; அப்பெருமான் பண் பெருகும் பாடலும் ஆடலும் மல்கிப் பெருகும் பெருந்துறையில், அழகிய சடையும், உமாதேவியை ஒரு பாகமும் கொண்டு, உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற பதியாய், பெண்ணும் ஆணும் கலந்து விளங்கும் அர்த்தநாரியாய் விளங்குபவர்.*

ஏ – அம்பு; வலம் – வலிமை.

454. விழைஆர்உள்ள நன்குளமுநாவில்
வினைகெட வேதம்ஆறு அங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய வாற்றால்
பெரியோர் ஏத்தும் பெருமான்
தழைஆர் மாவின் தாழ்கனி உந்தித்
தண்ணரசில் புடை சூழ்ந்து
குழைஆர் சோலை மென்னடை அன்னம்
கூடு பெருந்துறை யாரே.

தெளிவுரை: *பிழை இல்லாமலும் விருப்பம் மிக்கும் வினை நீங்குமாறும், வேதமும் அதன் ஆறு அங்கங்களையும் ஓதவல்ல பெரியோர்கள் ஏத்தும் பெருமானாக விளங்கும் ஈசன், மாங்கனிகளைத் தரும்*

Koviloor Digital Library

சோலைகளை உடைய அரிசிலாற்றின்கரையில் நடை பயிலும் அன்னப் பறவை கூடும் பெருந்துறையில் வீற்றிருப்பவர்.

455. பொன்னங் கானல் வெண்திரை சூழ்ந்த
பொருகடல் வேலி இலங்கை
மன்னன்ஒல்க மால்வரை ஊன்றி
மாமுரண்ஆகமும் தோளும்
முன்னவை வாட்டிப் பின்னருள் செய்த
மூவிலை வேலுடை மூர்த்தி
அன்னம் கன்னிப் பேடையொடு ஆடி
அணவு பெருந்துறை யாரே.

தெளிவுரை: அழகிய சோலைகளும், வெண்மையான நுரைகளுடன் கூடிய அலைகள் கரைகளில் மோதும் கடலை நாற்புறங்களிலும் வேலியாகக் கொண்ட இலங்கையின் மன்னனாகிய இராவணன் கெடுமாறு, பெருமை மிக்க கயிலை மலையைத் தம் விரலால் ஊன்றி, அவன் உடலும் தோளும் வாட்டியவர் ஈசர். பின்னர், அவ் அரக்கன் வணங்கிப் போற்றி செய்ய, அருள் செய்தவர் அவர். சூலப்படை கொண்டுள்ள மூர்த்தியாகிய அப்பெருமான், அன்னப்பறவைகள் தம் பேடைகளுடன் மகிழ்ந்து கூடும் பெருந்துறையில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஆணவ மலம் தோன்ற, செருக்குற்ற இராவணனுடைய வலிமையை அடக்கிய தன்மையும், சாந்தம் தவழும் அன்னப் பறவைகள் மகிழ்ந்து சேரும் தன்மையும் இவண் சுட்டப்பெறுகின்றன. சாந்தமும் மகிழ்ச்சியும் இறைவனிடம் சாரும் ஆன்மாக்கள்பால் அடையும் என உணர்த்தப்பட்டது.

அணவு – சேர்தல், அண்மையாதல்.

Koviloor Digital Library

456. புள்வாய் போழ்ந்து மாநிலம் கீண்ட
பொருகடல் வண்ணனும் பூவின்
உள்வாய் அல்லி மேலுறை வானும்
உணர்வரி யான்உமை கேள்வன்
முள்வாய் தாளின் தாமரை மொட்டின்
முகமலரக் கயல் பாயக்
கள்வாய் நீலம் கண்மலர் ஏய்க்கும்
காமர் பெருந்துறை யாரே.

தெளிவுரை: கொக்கு வடிவம் கொண்ட அசுரனின் வாயைப் பிளந்து மாய்த்தவனும், பூமியைத் தோண்டிச் செல்பவராக அவதாரம் கொண்டவனும், ஆகிய திருமாலும், தாமரை மலரின் அகத்தில் உள்ள இதழில் உறையும் பிரமனும் உணர்வதற்கு அரியவனாகியவன் ஈசன். அப்பெருமான் உமாதேவியின் நாயகன். அவர், தாளில் முள் பொருந்திய தாமரை மலரின் மொட்டு போன்ற நீண்ட முகம் மலரவும், கயல் போன்ற கண்கள் நீலமலர்போல் மலரவும் விளங்கும் மாதர்கள் மகிழும் பெருந்துறையில் வீற்றிருப்பவரே.

புள் – கொக்கு. அல்லி – மலரின் உள்புறத்தில் உள்ள அகஇதழ்.

457. குண்டும் தேரும் கூறைகளைந்தும்
கூப்பிலர் செப்பிலர் ஆகி
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டுசெயாது விரும்பும்
தண்டும் பாம்பும் வெண்தலை சூலம்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டும் தேனும் வாழ்பொழிற்சோலை
மல்கு பெருந்துறை யாரே.

தெளிவுரை: சமணர்களும், பௌத்தர்களும் ஈசனை வணங்கிலர்; அவன் திருநாமத்தைக் கூறிலர். தன் முனைப்புக் கொண்டு அறிவற்ற தன்மையில் செய்யும்

Koviloor Digital Library

தொல்லைக்கு ஆட்பட்டு இடர்ப்பாடானதைச் செய்யாது மெய்யடியார்கள் இறைவனை விரும்பி ஏத்துகின்றனர். அவர், தண்டும், பாம்பும், கபாலமும், சூலமும் தாங்கியுள்ள தலைவர். அப்பெருமான் வண்டும் தேனும் மல்கும் சோலை சூழ்ந்த பெருந் துறையில் இருப்பவரே.

தேர் – தேரர், பௌத்தர். மிண்டும் மிண்டர் – தன் முனைப்புடைய அறிவிலிகள். மிண்டவைகண்டு மிண்டு செயாமை – அச்சுறுத்தி நெருக்கினாலும் அதனைக் கண்டு துவண்டு இடர் கொள்ளாமை.

458. கடைஆர் மாட நன்கு எழு வீதிக்
கழுமலவூரன் கலந்து
நடைஆர் இன்சொல் ஞானசம்பந்தன்
நல்லபெருந்துறை மேய
படைஆர் சூலம் வல்லவன் பாதம்
பரவிய பத்து இவை வல்லார்
உடையார் ஆகி உள்ளமும் ஒன்றி
உலகினில் மன்னுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வாயில்கள் பொருந்திய மாட மாளிகைகள் விளங்கும் வீதிகள் உள்ளது கழுமல நகர். அவ் ஊரினராகிய ஞானசம்பந்தர், ஒழுக்கமும் இனிமையும் சேர்ந்த சொற்களால் நன்மை திகழும் பெருந்துறை மேவிய சூலப்படையுடைய ஈசன்பால் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதினார். இதனை நன்கு உரைக்க வல்லவர்கள், எல்லா செல்வமும் உடையவர்களாய், அருட் செல்வம் மிக்கு விளங்குமாறு, உள்ளமும் ஈசன் பால் ஒன்றி இருக்க உலகில் சிறந்து விளங்குவார்கள்.

சிறப்புரை: தலத்தின் மகிமை தோன்ற நல்ல பெருந்துறை என்று உணர்த்தப்பட்டது.

கடை – வாயில். நடை – ஒழுக்கம்.

Koviloor Digital Library

43. திருக்கற்குடி

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். தற்போது உய்யக் கொண்டான் மலை என்று வழங்கப்படுகிறது. கரன் வழிபட்டது. நாரதர், உபமன்யு முனிவர், மார்க்கண்டேயர் ஆகியோரும் வழிபட்ட தலம்.

சுவாமி : உச்சிநாதர், முத்தீசர், கற்பகநாதர், உஜ்ஜீவநாத சுவாமி.

அம்பிகை : பாலாம்பிகை, அஞ்சனாட்சி

தல மரம் : வில்வ மரம்

தீர்த்தம் : பொன்னொளி ஓடை, ஞானவாவி, நாற் கோண தீர்த்தம், எண்கோண தீர்த்தம், குடமுருட்டி.

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

459. வடம்திகழ் மென்முலையாளைப்
பாகம் தாக மதித்துத்
தடம்திரை சேர்புனல் மாதைத்
தாழ்சடை வைத்த சதுரர்
இடம் திகழ் முப்புரி நூலர்
துன்பமொடு இன்பம்அது எல்லாம்
கடந்தவர் காதலில் வாழும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: உயர்வான யாவும் உடைய உமாதேவியைத் தனது உடம்பில் ஒரு பாகத்திலும், நீர் நிலைகளில் சேரும் கங்கை என்னும் மங்கையைச் சடை முடியிலும் வைத்துள்ளவர், எல்லாவற்றிலும் வல்லவராகிய ஈசன். அவர், முப்புரி நூலை அணிந்தவர். ஈசனுக்குத் துன்பம் என்பதும் இல்லை; அவர் இன்பமாகக் கருதுவதும்

Koviloor Digital Library

எதுவும் இல்லை. எல்லாம் கடந்தவராகிய ஈசன் விருப்பத்தோடு கற்குடியில் உள்ள பெருமையான மலையின்கண் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: உயர்ந்த நிலையில், மலைமகளாக விளங்கும் உமாதேவியும், தாழ்ந்த நிலைகளிலும், பள்ளங்களிலும் விளங்கும் கங்கையும் தன்பால் பொருந்துமாறு செய்த ஈசன் சகலமும் வல்லவர் - சதுரர் என உணர்த்தப் படுதல் காண்க. தேகத்தில் முக்கியமான பகுதியாகிய மார்பில் திகழும் முப்புரி நூலின் சிறப்பு நோக்கியும், நூல் அணிதல் வாயிலாக விளக்கப்படும் பண்பின் எழுச்சியும், இடந்திகழ் முப்புரி நூலர் என, நூலின் பெருமை உணர்த்தப் பட்டது. பற்றற்றவனாக விளங்கும் ஈசன் விருப்பத்தோடு - காதலுடன் கற்குடியில் வாழ்கின்றார் என்று போற்றப்படுவதானது, ஈசன் அடியவர்கள்பால் விரும்பி உள்நின்று அருள் புரிதலின் நாட்டம் உணர்த்துவதாகும்.

வடம் – பெருமையும், உயர்வும். தடம் – நீர் நிலை. சதுரர் – எல்லா வற்றிலும் வல்லமை பொருந்தியவர்.

460. அங்கம்ஒரு ஆறுடை வேள்வி
ஆன் அருமறை நான்கும்
பங்கம்இல் பாடலோடு ஆடல்
பாணி பயின்ற படிறர்
சங்கமதுஆர் குற மாதர்
தங்கையில் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: அருமையாகப் போற்றப்படுகின்ற வேதமும், அதன் ஆறு அங்கமும், வகுத்தவாறு வேள்வியும், குறை வில்லாத பாடலும், ஆடலும்,

Koviloor Digital Library

தாளமும் பயில விளங்குபவர் ஈசன். சங்குகளால் ஆகிய வளையல் களை அணிந்துள்ள குறவர்குல மாதர்களின் கரங்களில் திகழும் மைந்தர்கள், மேகத்தில் இருக்கும் நிலவைத் தொடுவதற்குத் தாவுகின்றனர். அத்தகைய பெருமைக்குரிய கற்குடி மலையில் ஈசன் வீற்றிருக்கிறார்.

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே என்று மொழியப்படுவதில் - அல்லானே என்பதைப் போன்று படிறர் எனப்பட்டது.

பாணி – தாளம். படிறு – பொய்.

461. நீர்அக லம்தரு சென்னி
நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த
தண்மதி சூடிய சைவர்
போர் அகலம்தரு வேடர்
புனத்திடை இட்ட விறகில்
கார்அகி லின்புகை விம்மும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: பரந்த கங்கை நீரைச் சடையில் கொண்டுள்ள ஈசன், நீளமான ஊமத்தம் மலரைச் சூடியவர். விண்மீனின் ஒளி திகழும் குளிர்ந்த சந்திரனைத் தரித்த சைவர். போர் செய்யும் பாங்குடைய வேடர்கள், மேகத்தைப் போன்று அகிற்புகை எழுப்பிப் பெருமை கொள்ளும் கற்குடி மலையில் அப்பெருமான் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: சந்திரனின் ஒளியினும் சூரியனுடைய ஒளி மிக்கது. அதனினும் மேன்மை யானது விண்மீன்கள் - நட்சத்திரங்கள். ஈசன் அருள் பெற்ற சந்திரன்

Koviloor Digital Library

கொண்டுள்ள ஒளியானது நட்சத்திரங்களின் பேரொளியால் சூழப்பெற்று அதனினும் பேரொளியாக விளங்குகின்றது என உணர்த்தப் படுவது காண்க. நட்சத்திரங்களால் சூழப்பட்ட சந்திரன் என மரபு நோக்கிக் கூறுதலும் அமையும்.

தாரகை – விண்மீன், நட்சத்திரம்.

462. ஒருங்குஅளி நீஇறைவா என்று
உம்பர்கள் ஓலம்இடக் கண்டு
இருங் களம் ஆர விடத்தை
இன்னமுது உண்ணிய ஈசர்
மருங்கு அளியார் பிடி வாயில்
வாழ் வெதிரின் முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: உடலும், உள்ளமும் நடுங்குமாறு தோன்றிய கொடிய விடத்தைக் கண்டு அஞ்சிய தேவர்கள், "இறைவா! நீரே எம்மைக் காத்து அருள்வீராக" என்று இறைஞ்சி ஓலம் இட, அவ் விடத்தைப் பெருமையான கண்டத்தில் ஆரப் பொருந்த வைத்து உட்கொண்டவர் ஈசர். அவர், அன்பின் மிக்க பெண் யானைகளின் வாயில், மூங்கில்களை உணவாகக் கொடுக்கும் ஆண் யானைகள் நிலவும் கற்குடி மாமலையில் விளங்குபவர்.

அளி – அருள். வெதிர் – மூங்கில். களம் – கண்டம், கழுத்து. இருங்களம் – பெரிய கழுத்து. இரு – பெரிய, பெருமை.

463. போர்மலி திண்சிலை கொண்டு
பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடுரு வாகிப்
பண்டு ஒருவர்க்கு அருள் செய்தார்

Koviloor Digital Library

ஏர்மலி கேழல் கிளைத்த
இன்னொளி மாமணி எங்கும்
கார்மலி வேடர் குவிக்கும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: போர்த் தொழில் மிக்க உறுதியான வில்லைக் கரத்தில் கொண்டு, பூதகணங்கள் புடைசூழ உலகத்தில் தோற்றம் பெறும் வேடுவ வடிவம் தாங்கி, அர்ச்சுனருக்கு அருள் புரிந்தவர் ஈசர். அழகிய பன்றிகள் பெருகி இருக்க, சிறப்பான மணிகளைக் குவித்துச் செல்வம் பெருக்கும், கரிய நிறமுள்ள வேடர்கள் சூழும் கற்குடி மாமலை அவர் இடமாகும்.

சிறப்புரை: ஈசன் பன்றிக்கு மறக்கருணை புரிந்த பாங்கும், வேடர்களுக்குப் பன்றிகள் பெருஞ் செல்வம் ஆதலாலும் அதன் சிறப்பு தோன்ற ஏர்மலி கேழல் என உணர்த்தப் பெற்றது.

சிலை – வில். வேடுரு – வேடர் வடிவம். ஒருவர் – அர்ச்சுனர். ஏர் – அழகு. கேழல் – பன்றி. கிளைத்தல் – பெருகி இருத்தல்.

464. உலந்தவர் என்புஅது அணிந்தே
ஊர்இடு பிச்சையர் ஆகி
விலங்கல்வில் வெங்கன லாலே
மூஎயில் வேவ முனிந்தார்
நலம்தரு சிந்தையர் ஆகி
நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: எலும்பு மாலை அணிந்து, கபாலத்தைக் கைக் கொண்டு பிச்சையேற்பவராகி மலையை வில்லாகவும் நெருப்பைக் கணையாகவும் கொண்டு முப்புரங்களை எரியுமாறு செய்தவர் ஈசன். அவர்

Koviloor Digital Library

நலத்தைத் தரும் பக்திச் சிந்தனையுடையவர்களாய் நாவினால், விரும்பித் தோத்திரப் பாடல்களை அன்பு ததும்பும் நெஞ்சினராய்க் கூறும் அடியவர்கள் வாழும், கற்குடி மாமலையில் வீற்றிருப்பவர்.

465. மான்இடம் ஆர்தரு கையர்
மாமழு ஆரும் வலத்தர்
ஊனிடை ஆர்தலை யோட்டில்
உண்கல னாக உகந்தார்
தேனிடை ஆர்தரு சந்தின்
திண்சிறை யால்தினை வித்திக்
கானிடை வேடர் விளைக்கும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: ஈசன், மானைக் கையில் கொண்டுள்ளவர், சிறப்பான மழுப்படையை உடைய வலிமை மிக்கவர்; பிரமகபாலம் ஏந்தி அதனை உணவு கொள்ளும் பாத்திரமாக மகிழ்ந்து ஏற்றவர். தேன் கூடுகள் மிகுந்துள்ள சந்தன மரங்களையுடைய கானில் தினை வித்துக்களை விதைக்க, விளைச்சலைத் தருகின்ற கற்குடி மாமலையில் அப்பெருமான் வீற்றிருக்கின்றார்.

சிறப்புரை: ஈசன், மானை இடக்கரத்திலும் மழுவை வலக்கரத்திலும் தரித்துள்ளவர் என்று உணர்த்தப் படுதல் காண்க.

466. வாள்அமர் வீர நினைந்த
இராவணன் மாமலை யின்கீழ்த்
தோள்அமர் வன்தலை குன்ற
தொல்விரல் ஊன்று துணைவர்
தாள்அமர் வேய் தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்

Koviloor Digital Library

காளமது ஆர்முகில் கீறும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: *வீரத்தின் சிறப்பினைக் காட்டுவதாக நினைத்து மலையைப் பெயர்த்த இராவணனைக் கீழே அழுத்தி, அவன் தோளும் தலையும் குன்றுமாறு விரலை ஊன்றியவர் ஈசர். அப்பெருமான், மூங்கிலின் நுனிப்பகுதியைப் பற்றி இழுத்துப் பின்னர் அதனை விட்டுவிட, அதன் விசையானது வேகமாகச் சென்று கரிய மேகத்தைக் கிழிக்கும் தன்மையுடைய கற்குடி மலையில் வீற்றிருப்பவர்.*

சிறப்புரை: *ஈசன், ஆதியும் அந்தமும் இல்லா சோதியாயும் முன்னைப் பழைமைக்கும் பழைமை யனாக விளங்குதலைத் தொல் விரல் என உணர்த்தப் பட்டது. யாவற்றுக்கும் ஈசனே துணையாக விளங்கி அருள் புரியும் செம்மை துணைவர் என்று உணர்த்தப்பெற்றது.*

வாள் – ஒளி, சிறப்பு. காளம் – கரிய.

467. தண்டுஅமர் தாமரை யானும்
தாவிஇம் மண்ணை அளந்து
கொண்டவ னும்மறி வொண்ணாக்
கொள்கையர் வெள்விடை ஊர்வர்
வண்டிசை யாயின பாட
நீடிய வார்பொழில் நீழல்
கண்டு அமர் மாமயில் ஆடும்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: *தண்டு உடைய தாமரை மலரின்மேல் அமர்ந்த பிரமனும், நெடிய வடிவெடுத்து இவ்வுல கத்தை மூவடியாக அளந்து தனதாக்கிக் கொண்ட திருமாலும், அறிய வொண்ணாத குறிப்பில் உள்ளவர்*

Koviloor Digital Library

ஈசன். அவர் வெண்மையான இடப வாகனத்தில் ஊர்பவர். அவர், வண்டுகள் இசை பாடவும், நீண்ட பொழிலின் நிழலில் கண்டு இனிது விளங்கும் மயில்கள் ஆடவும் உள்ள கற்குடி மலையில் வீற்றிருப்பவர்.

மறிவொண்ணா – அறிவொண்ணா. சந்தம்நோக்கி மகரம் – மிகுந்தது.

468. மூத்துவர் ஆடையி னாரும்
மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொன்மொழி யார்கள்
நயமில ராமதி வைத்தார்
ஏத்துஉயர் பத்தர்கள் சித்தர்
இறைஞ்ச அவர்இடர் எல்லாம்
காத்தவர் காமரு சோலைக்
கற்குடி மாமலை யாரே.

தெளிவுரை: முற்றிய காவி உடையை உடைய புறச் சமயத்தினர், நாவானது துவர்ப்பு கொள்ளுமாறு பொய்ம்மொழியை உரைப்பவர் ஆவர். அவர்கள் மென்மை யற்றவர்கள். அவ்வாறு இன்றி ஈசரைப் பக்தி செய்யும் மதி உடையவர்கள், அவரை ஏத்தி உயர்வடைவார்கள். அவர்கள் சித்தர்கள் ஆவர். அத்தகையோரின் இடர் யாவும் தீரும். இவர் ஏத்த விளங்குபவர் கற்குடி மலையில் வீற்றிருப்பவர்.

மூ + துவர் – முற்றிய துவராடை. மூசு – மொய்த்தல் தன்மை. கடுப்பொடி – கடுக்காய்த் துவர்

469. காமரு வார்பொழில் சூழும்
கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி
நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை
பத்திவை பாடவல் லார்கள்

Koviloor Digital Library

பூமலி வானவ ரோடும்
பொன்னுல கில்பொலி வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அணிபெறும் அழகிய நெடிய சோலை சூழும் கற்குடி மலையில் எழுந்தருளியுள்ள பெருமானை, நாவானது மணக்கும் வள்ளன்மை யுடைய காழியின் புகழும் நலமும் திகழும் ஞான சம்பந்தர் பாக்களில் சிறந்த செந்தமிழ்ப் பாடல்களைப் பாட, அதனை ஓத வல்லவர்கள் தேவலோகத்தில் சிறந்து விளங்குவார்கள்.

44. திருப்பாச்சிலாச்சிராமம்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். தற்போது திருவாசிராமம் என்பது மாறி திருவாசி என அழைக்கப்படுகிறது. சுந்தரர் பொன் பெற்ற தலம். பார்வதி, பிரமன், இலட்சுமி, அகத்தியர் வழிபட்டது.

கொல்லி மழவனின் புதல்வி முயலகன் என்னும் நோயால் பீடிக்கப்பட்டு வருந்த, ஞானசம்பந்தப் பெருமான் திருப்பதிகம் பாடித் தீர்த்தருளினார்.

சுவாமி : 1, மாற்றறி வரதர், 2. சமிவனேஸ்வரர், 3. பிரமபுரீஸ்வரர்

அம்பிகை : பால செளந்தரி

தல மரம் : வன்னி

தீர்த்தம் : சிலம்பாறு

பண் : தக்க ராகம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

470. துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வர்
அணிவளர் கோலம் எலாம்செய்து பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வ தோஇவர் மாண்பே.

தெளிவுரை: ஒற்றைக் கீற்றுடைய சந்திரன் வளர்ந்து ஒளி கொண்டு விளங்க, அதனைச் சுடர் விடும் சடை முடியில் தரித்துப் பாம்புகள் பொருந்துமாறு ஏற்றுப் பூத கணங்கள் சூழக் கையில் கபாலம் ஏந்தி, இவர், இன்னார் என்று கருதாமல் எல்லோரிடமும் பலியேற்பவர், ஈசன். இவர், அழகிய திருக்கோலம் புனைந்து, பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற நீலகண்டர். இவரோ இந்த நங்கையை முயலகன் என்னும் நோயால் வாடுதல் அடைந்து மயல் கொள்ளு மாறு செய்வது! இதுவோ இவர் மாண்பு!

சிறப்புரை: தன்னிடமுள்ள ஒளியெல்லாம் தேயப் பெற்றுத் துண்டு – பிறைச்சந்திரன் ஆகிய நிலவை, ஈசன், திருமுடியில் தாங்கி அருள் புரிந்தார். சந்திரனானது சூரியனிடமிருந்து ஒளிபெறும் இயல்பு நோக்கி, ஈசனாரின் சடையானது சுடர்ச் சடை என உணர்த்தப் பட்டது.

துணி – துண்டு. பணி – பாம்பு. பாரிடம் – பூதம். மணிவளர் கண்டர் – நஞ்சு அருந்திய கண்டர், நீலகண்டர். மங்கை – கொல்லி மழவன் என்னும் அரசனுடைய மகள்.

Koviloor Digital Library

471. கலைபுனை மான்உரி தோல்உடை ஆடை
கனல்சுட ரால்இவர் கண்கள்
தலைஅணி சென்னியர் தார்அணி மார்பர்
தம் மடிகள் ளிவர்என்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்துஅமர்பாச்சில்
ஆச்சிரா மத்து உறை கின்ற
இலைபுனை வேலரோ ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே.

தெளிவுரை: கலைமானின் தோலை ஆடையாகக் கொண்டு சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களைக் கண்களாகவும், சுடர்மிகும் சென்னியும்யுடைய ஈசன், மாலை அணிந்த மார்பினர். இவர் அலைகளையுடைய நீர்வளம் மிக்க பூம்பொழில்கள் சூழும் பாச்சில் ஆச்சிராமத்தில் வேல்கொண்டு உறைகின்றவர். இவரோ இந்த நங்கை வாடுமாறு இடர் செய்வது! இதுவோ இவருக்குப் பெருமை தருவது!

சிறப்புரை: நீர்வளத்தின் பெருக்கம் அலைபுனல் என்று உணர்த்தப்பட்டது. திரிசூலம், மூவிலை வேல் என்று சொல்லப்படுவது.

தம் மடிகள் ளிவர் – தம் அடிகள் இவர் – மகரமும் ளகரமும், சந்தம் நோக்கி மிகுந்தது. ஏழை – மழவனுடைய மகள்.

472. வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சு இருள் மாலை
வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சுஅடை கண்டர் நெஞ்சு இடமாக
நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சுஅடை மாளிகை சூழ்தரு பாச்சில்
ஆச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
சிதைசெய்வ தோஇவர் சீரே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், வெம்மையான நெருப்பைக் கரத்தில் ஏந்தி ஆடுபவர்; பிரளய காலத்தில் கரிய இருளில் தலை மாலையை விரும்பி இருப்பவர்; வெண்மையான முப்புரி நூல் பூணும் மார்பினர்; நஞ்சு பதியப் பெற்ற கழுத்தை உடையவர்; அப்பெருமான் பக்தர்களின் நெஞ்சினை இடமாகக் கொண்டு விரும்பி அருள் புரிவர். மேகம் சூழ்ந்து அடையுமாறு உயர்ந்த மாட மாளிகைகள் சூழ்ந்த பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற செஞ்சுடர் வண்ணத்தராகிய ஈசன், இப் பெண் வாடிச் சிதையுமாறு செய்வதோ! இவருக்கு இதுவோ சிறப்புத் தரும்!

473. கனமலர்க் கொன்றை அலங்கல் இலங்கக்
கனதரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்து அழகாய
புனிதர்கொ லாம்இவர் என்ன
வனமரி வண்பொழில் சூழ்தரு பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
மயல் செய்வ தோஇவர் மாண்பே.

தெளிவுரை: பெருமையுடைய கொன்றைமலர் மாலை விளங்கப் பெருமை தரும் தூய பிறைச் சந்திரனைத் தரித்து, மற்றும் புனங்களில் உள்ள எருக்கம், ஊமத்தம் முதலான மலர்களைச் சூடி, அழகாக மேவும் புனிதர் இவர்தான் என்று வியந்து போற்றி மகிழுமாறு உள்ளவர், பொழில் சூழ் பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற மைந்தர் - ஈசர். இத்தகைய மைந்தரோ மங்கையை வாடுமாறு மயல் செய்வது! இதுவோ இவருடைய மாண்பு.

474. மாந்தர்தம் பால்நறு நெய்மகிழ்ந்து ஆடி
வளர்சடை மேல் புனல் வைத்து

Koviloor Digital Library

மோந்தை முழாக்குழல் தாளமொர் வீணை
முதிரஓர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தர் பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
சாந்துஅணி மார்பரோ தையலை வாடச்
சதுர்செய்வதோ இவர் சார்வே.

தெளிவுரை: *மாந்தர்கள் விரும்பியவாறு பசுக்களிலிருந்து கிடைக்கப்பெறும் பால், நெய் முதலான பூசைப் பொருள் ஏற்று அபிடேகம் கொண்டு மகிழ்பவர் ஈசன். இவர், சடை முடியில் கங்கையை வைத்தவர்; மோந்தை, முழவின் வகை, தாளம், வீணை முதலான இசைக் கருவிகள் இயங்கவும் வாயினால் பாடியும் மகிழும் அகன்ற விழிகளையுடைய பூத கணங்கள் விளங்கும் பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்றவர். சந்தனம் அணிந்துள்ள மார்பினராகிய இவரோ நங்கையை வாடச் செய்வது! இதுவோ இவர் சார்வு!*

475. நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணால் உற்று நோக்கி
ஆறது சூடி ஆடரவு ஆட்டி
ஐவிரல் கோவண ஆடை
பால்தரு மேனியர் பூதத்தர் பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
ஏறது ஏறியர் ஏழையை வாட
இடர் செய்வதோ இவர் ஈடே.

தெளிவுரை: *திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசியவர், நிறைந்த சடையுடையவர், மன்மதனை நெற்றிக்கண்ணால் உற்று நோக்கியவர், கங்கையைச் சூடியவர், ஆடுகின்ற அரவத்தை ஆட்டுபவர், ஐவிரற்கிடை அளவு கோவண ஆடை உடையவர், பால்*

Koviloor Digital Library

போன்ற தூய திருமேனியர், பூதப்படை உடையவர், ஈசன். இவர் இடபவாகனத்தை உடையவர். பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற இப்பெருமான் இப் பெண்ணை வாடுமாறு செய்வதோ! இதுவோ இவர் பெருமை!

ஐ – அழகு, மேன்மை. (கோவணத்தைக் குறித்தது) (பதிக எண் 39, பாடல்வரிசை எண் 416இல் காண்க). ஐவிரல் – ஒரு சாண் அளவும் ஆம். ஏறது ஏறியா – இடபம் ஏறியர். ஈடு – பெருமை.

476. பொங்கு இள நாகம்ஒரு ஏக வடத்தோடு
ஆமைவெண்ணூல் புனைகொன்றை
கொங்கு இள மாலை புனைந்துஅழகாய
குழகர் கொலாம் இவர் என்ன
அங்கு இள மங்கையோர் பங்கினர்பாச்சில்
ஆச்சிரா மத்து உறை கின்ற
சங்கு ஒளி வண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர் செய்வதோ இவர் சார்வே.

தெளிவுரை: சீறி வரும் இள நாகம், ஆமையோடு, வெண்ணூல், கொன்றை மலர், மற்றும் தேன் சொரியும் மாலைகள் புனைந்து அழகுடன் விளங்கும் ஈசர், உமா தேவியைப் பாகமாக உடையவர். இவர் பாச்சில் ஆச்சிராமத்தில் சங்கின் ஒளி வண்ணத்துடன் தாழ்ந்த சடையுடையவராய் உறைகின்றவர். இவர் இந்த நங்கை வாடுமாறு சதி செய்வதோ! இதுவோ இவருக்குச் சார்வு!

வெண்ணூல் – முப்புரிநூல், பூணூல். சார்வு – சார்ந்து இருப்பது.

477. ஏவலத்தால்விச யற்குஅருள் செய்து
இராவண னைஈடு அழித்து
மூவரி லும்முத லாய்நடு வாய
மூர்த்தியை அன்றி மொழியாள்

Koviloor Digital Library

யாவர் களும்பர வும்எழில் பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
தேவர்கள் தேவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வ தோஇவர் சேர்வே.

தெளிவுரை: *பாசுபதம் என்னும் வலிமையான அத்திரத்தினை விசயற்குத் தந்து அருள் செய்தும், இராவணனுடைய பெருமையைச் சிதைத்தும் மும்மூர்த்திகளுள் தலைமை யுடையவராயும், பிரமன் திருமால் ஆகியோர் தேடிச்செல்லும் காலத்தில் இடை நின்ற நடுநாயகமாகவும் உள்ளவர் ஈசன். இங்கு மயல் கொண்டு வாடி, நோயால் பீடிக்கப்பட்டுள்ள இப் பெண், அத்தகைய பெருமை மிக்க மூர்த்தியை யல்லாது வேறு ஒருவரையும் அறியாதவள் அப்பெருமானுடைய திருநாமத்தையே கூறுபவள். இவ்வாறு இருக்க, எல்லோரும் போற்றிப் பரவும் பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற ஈசன், இந் நங்கையை வாட விடுவதோ! இதுவோ இவரைச் சேர்ந்தவர்கள் அடையக்கூடிய பயன்!*

478. மேலது நான்முகன் எய்தியது இல்லை
கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனும் எய்தியது இல்லை
எனஇவர் நின்றதும் அல்லால்
ஆலது மாமதி தோய்பொழில் பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
பாலது வண்ணரோ பைந்தொடி வாடப்
பழிசெய்வ தோஇவர் பண்பே.

தெளிவுரை: *நான்முகன் அன்னப் பறவை வடிவம் தாங்கி மேலே உயரப் பறந்து சென்று, ஈசனார் முடியைக் கண்டதும் இல்லை; பூமியைக் குடைந்து*

Koviloor Digital Library

சென்று நீலவண்ணனாகிய திருமால் ஈசன் திருவடியைக் கண்டதும் இல்லை; இவர்கள் இருவரும் திகைத்து நின்றவர் ஆயினர். நிலவைத் தொடும் உயர்ந்த ஆலமரங்கள் சூழ் பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற பால் போன்ற வெண்மை நிறத்தவராகிய இவ் ஈசனோ, இந்த நங்கையை வாடுமாறு துன்பம் செய்வது! இதுவோ இப் பெருமானுடைய பண்பு!

479. நாணொடு கூடிய சாயின ரேனும்
நகுவர் இவர்இரு போதும்
ஊணொடு கூடிய உள்கு நகையால்
உரைகள் அவைகொள வேண்டா
ஆணொடு பெண்வடிவு ஆயினர் பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
பூண்நெடு மார்பரோ பூங்கொடி வாடப்
புனைசெய் வதோஇவர் பொற்பே.

தெளிவுரை: நாணம் முதலான நற்பண்புகளை இழந்தவராய்ப் பயனற்ற மொழிகளைக் கூறி உணவு கொள்வதையே நோக்கமாக உடையவர்கள் சொற்களை ஏற்க வேண்டாம். ஆண் வடிவம் பெண் வடிவம் ஆகி பாச்சில் ஆச்சிராமத்தில் உறைகின்ற நெடிய மார்பில் அணிகலன்கள் கொண்ட ஈசரோ, இந்த நங்கை வாடுமாறு செய்வது! இதுவோ இவரது மேலான குணம்!

சிறப்புரை: ஆணொடு பெண் வடிவு என்பதனைப் பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க எனும் கூற்றாலும் நோக்குக.

சாயினர் – சாய்தலை உடையவர், இழிதல்.

480. அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரா மத்துஉறை கின்ற

Koviloor Digital Library

புகைமலி மாலை புனைந்துஅழ காய
புனிதர்கொ லாம்இவர் என்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி
நற்றமிழ் ஞானசம் பந்தன்
தகைமலி தண்தமிழ் கொண்டுஇவை ஏத்தச்
சாரகி லாவினை தானே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உள்ளம் நிறைந்த அன்புடன் திருத்தொண்டர்கள் வணங்க, ஆச்சிராமத்தில் உறைகின்ற ஈசரே, புனிதர் என்று புகலிடமாக விளங்கும் தமிழ் மாலை சாற்றிய நற்றமிழ் ஞானசம்பந்தரின் இத் திருப்பதிகத்தை ஓதுபவர்களிடம் வினை சாராது.

45. திருவாலங்காடு

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். கார்க்கோடகன், சுநந்த முனிவர் முதலியோர் வழிபட்டது. சிவபெருமான் நடனம் புரியும் ஐந்து சபைகளுள் முதலாவதாகிய இரத்தின சபை இது. மற்றவை: தில்லை - பொற்சபை; ஆலவாய் (மதுரை) - வெள்ளிச் சபை; திருநெல்வேலி -- தாமிர சபை; குற்றாலம் - சித்திர சபை என்பன.

இங்கு, ஈசன் புரிவது ஊர்த்துவ தாண்டவம். காரைக்கால் அம்மையார், தலையால் நடந்து நடராசப் பெருமானைத் தரிசனம் செய்தார். இத்தலத்தை மிதிக்க அஞ்சிய ஞானசம்பந்தர் கனவில் ஈசன் தோன்றி "எம்மைப் பாட மறந்தனையோ" எனக் கூறத் திருப்பதிகம் அருளப் பெற்றது. பழையனூர் சிறப்புத் தோன்ற ஆலங்காடு உரைக்கப்பெற்றுள்ளது.

Koviloor Digital Library

சுவாமி : வட ஆரண்யேஸ்வரர், ஆலங்காட்டு அப்பர், தேவர் சிங்கப் பெருமான்.

அம்பிகை : வண்டார் குழலி

தல மரம் : பலா மரம்

தீர்த்தம் : முத்தி தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

481. துஞ்சவரு வாரும் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்து என்னை நினைவிப் பாரு முனைநட்பாய்
வஞ்சப் படுத்த ஒருத்தி வாழ்நாள் கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும்ப ழையனூர் ஆலங்காட்டு எம் மடிகளே.

தெளிவுரை: *பரமர், இரவு துயிலும் போது கனவில் தோன்றி காட்சி தருபவர், தொழுமாறு செய்பவர். மனமானது வழுவிச் சென்றாலும் என் நெஞ்சுள் புகுந்து என்னை நினைக்கச் செய்பவரும் அவர். வஞ்சமாக ஒருவனுடைய வாழ்நாளைக் கொண்டதை அறிந்த தன்மை கேட்டுத் துறந்தவர்தம் நிலையுணர்ந்து அஞ்சும் பழையனூரின் ஆலங்காட்டில் விளங்குபவர் எம் பெருமைக்குரிய தலைவர்.*

மடிகள்: அடிகள். குரு. கடவுள், தலைவர் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

குறிப்பு: *பழையனூர் நீலி வரலாறு பின் இரு அடிகளில் குறிக்கப் பெறுகிறது. முற்பிறவியில் தன் கணவனால் வஞ்சித்துக் கொல்லப்பட்ட ஒரு பெண், பேய் வடிவு கொண்டு மறு பிறவியில் அக்கணவனின் மனைவியாக அமைந்தாள். அவன், அப்பெண்மணி தனது மனைவி*

Koviloor Digital Library

அல்ல என்று உரைத்தும் அதனை ஏற்று நம்பிக்கை கொள்ளாத பழையனூரில் இருந்த எழுபது வேளாளர் பெருமக்கள், அப்பெண்ணுக்காகப் பரிந்து பேசி, ஆடவன் உயிருக்குப் பொறுப்பு ஏற்றனர். பேயாகிய அப் பெண்மணி ஆடவன் உயிரை மாய்த்து வெளியேறியது. அவனுடைய உயிருக்குப் பொறுப்பு ஏற்ற பழையனூரில் உள்ள எழுபது வேளாளர்கள் தம் சொல் பிழையானதற்கும் - ஆவ் ஆடவன் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போனதற்கும் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர். சொன்ன சொல்லைக் காக்கத் தவறியமைக்காக உயிர் துறந்த வேளாளர்களின் செயல் கண்டு அஞ்சத்தக்கது என்னும் குறிப்புத்தோன்ற 'அஞ்சும் பழையனூர்' எனப்பட்டது.

482. கேடும் பிறவியும் ஆக்கி னாரும் கேடிலா
வீடு மாநெறி விளம்பினார்எம் விகிர்தனார்
காடும் சுடலையும் கைக்கொண்டு எல்லிக்
கண்ப்பேயோடு
ஆடும் பழையனூர் ஆலங் காட்டெம் மடிகளே.

தெளிவுரை: கெடுதி செய்யும் தன்மையும், அதன் வாயிலாகப் பிறவி கொள்ளுதலும், கெடுதியை நீக்கி முத்திப் பேறும் அதற்குரிய நெறிகளும் வழங்குபவர் ஈசன். அவர், சுடுகாட்டில், இருளில் பேய்க் கணத்தவரோடு பழையனூர் ஆலங்காட்டில் ஆடும் அடிகள். அவர் எம் தலைவர்.

விகிர்தனார் – இறைவர்.

483. கந்தம் கமழ்கொன்றைக் கண்ணிசூடி கனலாடி
வெந்த பொடிநீற்றை விளங்கப் பூசும் விகிர்தனார்

Koviloor Digital Library

கொந்தண் பொழிற்சோலை அரவில்தோன்றிக்
கோடல்பூத்து
அந்தண் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: நறுமணம் கமழும் கொன்றை மலர்சூடி, நெருப்புக் கனலைக் கரத்தில் ஏந்தி திருவெண்ணீற்றை நன்றாக விளங்குமாறு பூசும் இறைவர், நெருங்கிய பூங் கொத்துக்கள் உள்ள சோலைகளில் அரவத்தைப் போன்று நுனிப்பகுதியில் பூக்கள் மலர்ந்து பூத்து விளங்கும் பழையனூர் ஆலங்காட்டில் உள்ளவர் எம் தலைவர்.

கோடல் பூத்து – மேல் பகுதியில் தெரியப் பூத்தல்.

484. பால மதி சென்னி படரச் சூடிப் பழியோராக்
காலன் உயிர் செற்ற காலனாய கருத்தனார்
கோலம் பொழிற் சோலைப் பெடையோடுஆடி
மடமஞ்ஞை
ஆலும் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: இளைய சந்திரனைத் தலையில் படருமாறு சூடிப் பழிச் சொல்லை நினையாமல் மார்க்கண் டேயரின் உயிரைக் கவர வந்த எமனுடைய உயிரைக் கவர்ந்த கால வல்லமையுடைய கருத்தராகியவர் ஈசர். அழகிய சோலைகளில் ஆண் மயில் தனது பேடையோடு மகிழ்ச்சியுடன் உலவும் பழையனூர் ஆலங்காட்டில் உள்ளவர் எம் தலைவர்.

சிறப்புரை: ஈசன்பால் அடைக்கலம் அடைந்த மார்க் கண்டேயரின் உயிரைத் தன்னால் கவருவதற்கு இயலாது என உணராமல், முயற்சி செய்த தன்மை காலனுக்குப் பழி ஏற்பட்டதுடன், அவன் உயிரும் நீங்கப் பெற்றது. இதனைப் "பழி ஓராக்காலன் உயிர்

Koviloor Digital Library

செற்ற" என்னும் தொடர் உணர்த்தியது. ஈசனே எல்லா வற்றையும் முன்னின்று விளைவிப்பவர் என்றும் உணர்த்தப்பட்டது.

ஓரா – நினைத்துப் பார்க்காத, சிந்திக்காத.

485. ஈர்க்கும் புனல்சூடி இளவெண் திங்கள் முதிரவே
பார்க்கும் அரவம்பூண்டு ஆடிவேடம் பயின்றாரும்
கார்க்கொள் கொடிமுல்லை குருந்தமேறிக் கருந்தேன் மொய்த்து
ஆர்க்கும் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: *நீராடுகின்றவர்தம் பாவங்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டு, புண்ணியர்கள் ஆக்கும் நீராகிய கங்கையைச் சூடி, இளமையான ஒரு கலையுடைய பிறைச் சந்திரன் முற்றிப் பூரணமாகத் திகழும் தன்மையைப் பார்க்கின்ற அரவத்தைப் பூண்டு, நடனம் புரிபவர் ஈசர். அப்பெருமான் அத் திருக்கோலத்தில் திருநடனம் புரிபவர் கார்காலத்தில் மலரும் முல்லைக் கொடிகள் குருந்த மரத்தில் படர்ந்து ஏறித் தேனில் பரவும் நிலையை உடைய பழையனூர் ஆலங்காட்டில் உள்ளவர் எம் தலைவர். இங்கு நடராசப் பெருமான் நடனக் காட்சி உணர்த்தப்படுதல் காண்க.*

486. பறையும் சிறுகுழலும் யாழும்பூதம் பயிற்றவே
மறையும் பலபாடி மயானத்துஉறையு மைந்தனார்
பிறையும் பெரும்புனல்சேர் சடையினாரும் பேடைவண்டு
அறையும் பழையனூர் ஆலங்காட்டு எம் மடிகளே.

தெளிவுரை: *பறை, குழல், யாழ் இவற்றைப் பூதகணங்கள் வாசிக்க, வேதங்கள் ஓதி மயானத்தில் உறைகின்றவர் ஈசர். அவர், சந்திரனும் கங்கையும் சடையில் கொண்டு*

Koviloor Digital Library

பெண் வண்டுகள் ஒலிக்கும் பழையனூர் ஆலங் காட்டில் விளங்கும் தன்மையர்.

487. நுணங்கு மறைபாடி ஆடிவேடம் பயின்றாரும்
இணங்கு மலை மகளோடு இருகூறு ஒன்றாய்
இசைந்தாரும்
வணங்கும் சிறுத்தொண்டர் வைகல்ஏத்தும் வாழ்த்தும்
கேட்டு
அணங்கும் பழையனூர் ஆலங்காட்டு' எம் மடிகளே.

தெளிவுரை: நுட்பமான, உயர்ந்த கருத்துக்களைக் கூறும் வேதம் பாடும் திருக்கோலத்தை ஏற்றவரும், உமாதேவி யுடனாகிய நிலையில் இருவேறு தனித்தனி கூறாக இன்றி, ஒரே கூறாக அர்த்தநாரியாக இசைந்துள்ள வரும், திருத்தொண்டர்களை வணங்கிப் போற்றும் சிறுத்தொண்டரால் ஏத்தியும் வாழ்த்தியும் கூறும் பக்தி மொழிகளைக் கேட்டும் விளங்குகின்ற ஈசன், தெய்வத் தன்மை பொருந்தும் பழையனூர் ஆலங்காட்டில் இருப்பவரே.

சிறப்புரை: மறை ஓதுபவர்களின் உள்ளத்தில் மகிழ்ந்து உறையும் சிறப்பு நன்கு உணர்த்தப்பட்டது. அறுபத்து மூவரில் ஈசனுக்குப் பிள்ளைக் கறி உணவு அளித்த சிறுத்தொண்டரின் திருப்பெயர் சாற்றிப் பாடிய பாடல் இது.

488. கணையும் வரிசிலையும் எரியும்கூடிக் கவர்ந்துஉண்ண
இணைஇல் எயில்மூன்றும் எரித்திட்டார்எம் மிறைவனார்
பிணையும் சிறுமறியும் கலையும்எல்லாம் கங்குல்சேர்ந்து
அணையும் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: தீமைக்கு வேறெதனையும் இணையாகச் சொல்ல முடியாத கொடிய தன்மை யுடைய மூன்று

Koviloor Digital Library

கோட்டைகளையும், அதன் அசுரர்களையும் வில், அம்பு, நெருப்பு ஆகியவற்றால் எரித்துச் சாம்பலாக் கியவர், எம் இறைவனாகிய ஈசர். எல்லாவகையான மான்களும் இரவில் சேர்ந்து விளங்கும் பழையனூர் ஆலங்காட்டில் உள்ள அவர், எம் தலைவர்.

489. கவிழமலை தரளக் கடகக் கைபால் எடுத்தான் தோள்
பவழ நுனை விரலால் பையஊன்றிப் பரிந்தாரும்
தவழும்கொடி முல்லை புறவம்சேர நறவம்பூத்து
அவிழும் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: கயிலை மலையைக் கவிழுமாறு முத்துக் கடகத்தைப் பதித்த கையால் எடுத்த இராவணனைத் தனது பவழம் போன்ற சிவந்த விரல் நுனியால் மெல்ல ஊன்றி, பின்னர் பரிந்து நல்வரங்களை நல்கியவர், ஈசன். முல்லை மலர்கள் பூத்துக் குலுங்கும் பழையனூர் ஆலங்காட்டில் அப்பெருமான் உள்ளார். அவர் எம் தலைவர்.

490. பகலும்இர வும்சேர் பண்பினாரு நண்பு ஓராது
இகலும் இருவர்க்கும் எரியாய்த் தோன்றி நிமிர்ந்தாரும்
புகலும்வழி பாடுவல் லார்க்கு என்றும் தீயபோய்
அகலும் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: வெண்மை பரவும் பகல் ஒளி போன்ற நிறத்தை உடையவர் பிரமன்; இருளை ஒத்த கரிய நிறத்தை உடையவர் திருமால்; இவர்கள் இருவரும் தத்தமக் குரியதான மகிமையாகிய படைத்தல், காத்தல் ஆகிய தொழில் முறையும், மும்மூர்த்தி எனப்படும் பெருமையும், தந்தை, புதல்வர் எனும் உறவு முறையும் கருத்தில் கொள்ளாது, தமக்குள் பேதம் ஏற்பட்டுப் பகை கொள்ளலாயினர். அதனை அளவிடுவதற்கு உரிய செயலாக, ஈசனைக் காண முற்பட்டனர். ஆங்கு,

Koviloor Digital Library

தீப் பிழம்பாகத் தோன்றி உயர்ந்தவர், வழிபாடு செய்ய வல்லவர்களுக்குத் தீமையான யாவும் களைந்து, நன்மைகளை அளிக்கும் பழையனூர் ஆலங்காட்டில் விளங்கும் அடிகள்.

சிறப்புரை: ஆகம விதிகளில் புகன்றவாறு செய்யப்படும் வழிபாடு, மாந்தர்களுக்குத் தீயவற்றை அகற்றும் என்று உணர்த்தப்பட்டது. ஈசனைப் போற்றித் துதித்தலும், திருமுறைகளை ஓதுதலும், புகலும் வழிபாடு எனல் பொருந்தும்.

"எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உணர்த்துதலும் இவண் கருதத்தக்கது.

ஈசனின் நெடுமையும் அளவிடுவதற்கு இயலாத தன்மையும், நிமிர்ந்தார் என உணர்த்தப் பெற்றது. மும் மூர்த்திகளுள் மேலானவர் ஈசன் எனும் கருத்தும் விளக்கப்படுதல் காண்க. (மற்றும் பதிக எண் *42*; பாடல் வரிசை எண் *449*இல் காண்க)

491. போழம் பலபேசிப் போதுசாற்றித் திரிவாரும்
வேழம் வருமளவும் வெயிலேதுற்றித் திரிவாரும்
கேழல் வினைபோகக் கேட்பிப்பாரும் கேடிலா
ஆழ்வர் பழையனூர் ஆலங்காட்டுஎம் மடிகளே.

தெளிவுரை: நன்மைக்குப் புறம்பான கருத்துக்களைப் பேசிப் பொழுதை வீணாக்கியும், வயிற்றுப் பசி மிகுந்திருத்தலால் பகலெல்லாம் உணவு கொள்பவர் களும்; புற நெறியினர். பிறவிகள்தோறும் ஒட்டி வருகின்ற வினைகள் கெடுமாறு ஈசனைப் போற்றி வழிபடுபவர்கள் தீமையின்றித் திளைத்திருப்பார்கள்.

Koviloor Digital Library

அவ்வாறு செய்தருள்பவர் பழையனூர் ஆலங்காட்டில் உறையும் எம் தலைவர்.

போழம் – வேறுபாடு. வேழம் – யானை (மிகுந்த பசியை உணர்த்தியது). கேழல் வினை – ஒட்டி வரும் வினை.

492. சாந்தம் கமழ் மறுகிற் சண்பைஞான சம்பந்தன்
ஆந்தண் பழையனூர் ஆலங்காட்டுஎம் அடிகளை
வேந்தன் அருளாலே விரித்தபாடல் இவைவல்லார்
சேர்ந்த இடமெல்லாம் தீர்த்தமாகச் சேர்வாரே.

தெளிவுரை: சந்தன மரங்கள் கமழப் பரவும் சண்பை நகர் ஞானசம்பந்தன், குளிர்ந்த நீரும், அழகும் உடைய பழையனூர் ஆலங்காட்டில் மேவும் எம் அடிகளைப் போற்றி, அப்பெருமானுடைய திருவருளால் விரிவாகப் பாட்டிசைத்த இத்திருப்பதிகத்தைப் பாடவல்லவர்கள், செல்லும் இடங்கள் தோறும் புனிதமாகிய தீர்த்தமாக விளங்கிப் பிறர் பாவங்களை நீக்க வல்லவர் ஆவர். இதனால் தமது பாவங்கள் தாமாகவே தீரும் என்பது குறிப்பால் உணர்த்தப் பட்டது.

சிறப்புரை: இத் திருப்பதிகம் ஓதுபவர்கள் மூர்த்தியாக விளங்குதலும் அவர்கள் செல்கின்ற இடங்கள் - திருப் பாதம் பதிகின்ற இடங்கள் தலமாக மலர்தலும், தீர்த்த மாக விளங்கி மன்னுயிர்களின் பாவங்களைத் தீர்த்தலும் திருக்கடைக்காப்பில் நன்கு உணர்த்தப் பட்டது. இத் திருவாக்கியம் ஈசன் உள்நின்று உணர்த்திய சிறப்பினையும் பகர்வதாயிற்று. தீர்த்த மகிமையும் கொள்க.

சாந்தம் – சந்தனம்; மறுகு – பரவுதல், கலத்தல்;. ஆந்தண்: ஆம் – நீர், அழகு; தண் – குளுமை. வேந்தன் – ஈசன், காப்பவன்.

Koviloor Digital Library

46. திருவதிகை வீரட்டானம்

தல விளக்கம்: நடு நாட்டுத் தலம். பண்ருட்டியின் அருகில் உள்ளது. அட்ட வீரட்டங்களுள் ஒன்று. திரிபுரத்தை எரித்த வீரச் செயல் நிகழ்ந்த இடம். திருமால், பிரமன், கருடன், பஞ்ச பாண்டவர்கள் வழிபட்டது. திருநாவுக்கரசர் சூலை நோய் நீங்கப் பெற்ற திருத்தலம். அவர்தம் தமக்கையார் திலகவதி திருத்தொண்டு செய்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத் தலத்தை மிதிக்க அஞ்சி, அருகில் உள்ள சித்த வடமடத்தில் தங்கியிருக்க, அவருக்கு ஈசனே அடியார் திருக்கோலத்தில் வந்து திருவடி தீட்சை வழங்கினார்.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் உண்மை விளக்கம் என்னும் சாத்திர நூலைச் செய்தருளிய மனவாசகம்கடந்தாரின் தலம். திருஞானசம்பந்தருக்கு ஈசன் திருநடனக் காட்சியை நல்கிய திருத்தலம். அதிகை – தலப் பெயர்; வீரட்டானம் – கோயில் பெயர்.

சுவாமி : வீரட்டேஸ்வரர், அதிகை நாதர், திரிபுராந்தகேஸ்வரர்

அம்பிகை : திரிபுரசுந்தரி

தல மரம் : சரக்கொன்றை

தீர்த்தம் : கெடிலநதி, சக்கர தீர்த்தம்

பண் : தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

493. குண்டைக் குறட்பூதம் குழும அனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்

Koviloor Digital Library

வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலான் ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: பருத்துக் குட்டையான பூத கணங்கள் குழுமி இருக்க, கெண்டை மீன்கள் உடைய கெடில நதியின் வடக்குப்பக்கத்தில் வண்டுகள் மருள் என்னும் பண்ணில் பாட்டு இசைக்க, பொன் போன்ற வண்ணம் உடைய விரிந்த கொன்றை மாலைகள் சூடித் திருக்கரத்தில் அனலை ஏந்தி, ஈசன் வீரட்டானத்தில் நடம் புரிகின்றார்.

சிறப்புரை: தீர்த்தமாகிய கெடில நதியின் சிறப்பும், தல மரமாகிய கொன்றை மலரின் சிறப்பும் உணர்த்தப் பட்டது. அட்டவீரட்டத்தின் திருச் செயலும் ஞானசம்பந்தருக்குத் திருநடம் புரிந்த காட்சியும் உரைக்கப்பட்டது.

தொடையல் – மாலை.

494. அரும்பும் குரும்பையும் அலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோடு உடன்கை அனல்வீசிச்
சுரும்புஉண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பும் அதிகையுள் ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: மென்மையான மார்பகங்களும், இனிமை யான மொழியும் உடைய உமாதேவியோடு, கரத்தில் நெருப்பு ஏந்தி அனல் வீசவும், வண்டுகள் பரந்து சூழ்ந்து தேன் உண்ணும் கொன்றை மலரைச் சூடி ஒளி விடும் சடை தாழ்ந்து விளங்க, யாவராலும் விரும்பப் படுகின்ற ஈசன், திருவதிகையுள் வீரட்டானத்தில் நடம்புரிகின்றார்.

குரும்பை – பனை நுங்கு; சுரும்பு – வண்டு.

Koviloor Digital Library

495. ஆடல் அழல் நாகம் அரைக்குஇட்டு அசைத்து ஆடப்
பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேல் மதிதோய் அதிகையுள்
வேடம் பலவல்லான் ஆடும் வீரட் டானத்தே.

தெளிவுரை: ஆடி அசைந்துகொண்டு இருக்கும் கொடிய விடம் உள்ள நாகத்தை ஆபரணமாகக் கொண்டு, பாடுகின்ற மறையில் வல்லவனாகிய பரமன், படுதம் என்று சொல்லப்படும் கூத்தினை ஆடிப் பலியேற்று, வானத்தில் உள்ள சந்திரனைத் தொடும் உயர்ந்த மாட மாளிகைகளை உடைய அதிகையுள், வீரட்டானத்தில் இருந்து, பல்வேறு வடிவங்களைப் புனைய வல்லவ னாகி, நடம் புரிகின்றான்.

அழல் – விடம்.

496. எண்ணார் எயில்எய்தான் இறைவன் அனல்ஏந்தி
மண்ணார் முழவுஅதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரமன் அதிகையுள்
விண்ணோர் பரவநின்று ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: நன்மையை எண்ணிப் பாராது முரண் பட்டு நின்ற மூன்று அசுரர்களையும், அவர்களுடைய கோட்டை மதில்களையும் எரியுமாறு செய்தவர் இறைவன். அப்பெருமான், கரத்தில் அனலை ஏந்தி, முழவு ஒலி அதிர, இளமையான பிறைச் சந்திரனைச் சூடிப் பண்கள் தோய்ந்த வேதங்களைப் பாடவும், தேவர்கள் போற்றித் தொழவும், அதிகையில் உள்ள வீரட்டானத்தில் நடம் புரிபவர்.

எண்ணார் – பகைவர்.

497. கரிபுன் புறமாய கழிந்தார் இடுகாட்டில்
திருநின்று ஒரு கையால் திருவாம் அதிகையுள்

Koviloor Digital Library

எரியேந் தியபெருமான் எரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: *இறந்தவர்களை ஊர்ப்புறத்தில் எரித்துச் சாம்பலாக்கப்படும் இடுகாட்டில், நெருப்பை ஏந்தித் திருமகள் நின்று இணையும் திருவாகும் அதிகையுள், வீரட்டானத்தில் இறைவன், சுடர்விடும் சடை தாழுமாறு கங்கையைத் தரித்து நடம் புரிபவர்.*

498. துளங்கும் சுடர்அங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாயல் உமையோடு இசைபாடி
வளங்கொள் புனல்சூழ்ந்த வயல்ஆர் அதிகையுள்
விளங்கும் பிறைசூடி ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: *சுடர்விட்டு அசைந்து எரியும் நெருப்பினைக் கரத்தில் நெருக்கமாகப் பதித்துத் திரு விளையாடல் புரிந்து, இளமையான மெல்லிய கொம்பு போன்ற சாயலையுடைய உமாதேவியோடு இசைபாடி, ஒளிதிகழ் பிறைச் சந்திரனைச் சூடி, நீர்வளம் பெருகிச் சூழ்ந்த வயல்களையுடைய அதிகையுள், வீரட் டானத்தில் ஈசன் நடம் புரிபவர்.*

துளங்குதல் – அசைதல்; துதைய – நெருக்கம்;
விளையாடி – திரு விளையாடல்.

499. பாதம் பலர்ஏத்தப் பரமன் பரமேட்டி
பூதம் புடைசூழப் புலித்தோல் உடையாகக்
கீதம் உமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின்று ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: *பரமனாகிய பரமேட்டி பூத கணங்கள் புடை சூழ விளங்குகின்றார். பரமன் திருவடியைப் பலரும் போற்றி நிற்கின்றனர். புலித் தோலை உடையாகக் கொண்டு விளங்கும் முதல்வனின்*

Koviloor Digital Library

ஆட்டத்திற்கு உமாதேவி இனிய இசைகொண்டு பாடுகின்றார். கெடில நதியின் வடப் பக்கத்தில் உள்ள வீரட்டானத்தில் ஈசன் நடனக் காட்சியை நல்குகின்றார்.

சிறப்புரை: ஈசனும் பிராட்டியும், இசையும் நடனமும் கொண்டு, மன்னுயிர்களை மகிழ்வித்தல் உணர்த்தப் பட்டது.

500. கல்லார் வரைஅரக்கன் தடந்தோள் கவின்வாட
ஒல்லை அடர்த்துஅவனுக்கு அருள்செய்து அதிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் தலைசூடி
வில்லால் எயில்எய்தான் ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: கல்போன்ற உறுதியான மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணனுடைய பெரிய தோளின் அழகு குலையுமாறு, விரைவாகத் தண்டித்தும், பின்னர் அவ் அரக்கன் வணங்கிப் போற்றித் துதிக்க, அருள் புரிந்தும் விளங்குபவர் பரமன். அவர், பற்கள் நன்கு விளங்கியும் பிளந்த வாயை உடையதும் ஆகிய மண்டை ஓடுகளை மாலையாகச் சூடுபவர். வில்லேந்தி முப்புரங்களை எரித்தவர். அப்பெருமான், அதிகையுள் உள்ள வீரட் டானத்தில் நடம் புரிபவர்.

குறிப்பு: மண்டை ஓடுகளைக்.கோர்த்து மாலையாகக் கொண்டுள்ளதை, "பல்ஆர் பகுவாய நகுவெண் தலை" எனக் குறித்தார்.

பகுவாய – பிளந்த வாய்; நகுவெண்தலை – சிரிப்பதைப் போன்ற தோற்றம் உடைய வெண்மையான மண்டையோடு.

501. நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூல் உடையானைக்

Koviloor Digital Library

கடிஆர் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடிஆர் தலையேந்தி ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் நிமிர்ந்து அழகாகத் தீப்பிழம்பாக ஓங்கிய ஈசனைக் காண்பதற்கு இயலாதவர் ஆயினர். அப்பெருமான், திருநீறு அணிந்த மார்பினர்; முப்புரிநூல் அணிந்துள்ளவர்; அவர் மணம் மிக்க நிலப் பூக்கள் மலரும் அதிகைப் பதியின் வீரட்டானத்தில் பிரம கபாலம் ஏந்தி நடம் புரிபவர்.

சிறப்புரை: நெடிது ஓங்கிய திருமாலும் காண இயலாதபடி மேலே உயர்ந்து ஓங்கிய ஈசனார் திருச்செயல் "நிமிர்ந்தானைக் காண்கிலர்" என உணர்த்தப் பெற்றது.

ஈசனார் யாண்டும், எல்லா இடங்களிலும் வியாபித்து இருப்பவர் என்பதையும், அகந்தை கொண்டதன் காரணமாகக் கண்களுக்குத் தோற்றம் ஆகார் என்பதையும் "காண்கிலார்" என்னும் சொல் உணர்த்திற்று.

மலரும் மதிகை : மலரும் அதிகை – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

502. அரையோடு அலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோடு உடன்ஏந்தி உடைவிட்டு உழல்வார்கள்
உடையோடு உரைஒவ்வாது உமையோடு உடன்ஆகி
விரைதோய் அலர்தாரான் ஆடும்வீரட் டானத்தே.

தெளிவுரை: உணவின் வகைக்கு ஏற்றம் கொடுத்துக் குண்டிகையும் சுரைக்குடுக்கையும் ஏந்தி உள்ளவர்கள் உலகில் உழல்பவர்கள் ஆவர். அவர்கள் உரைகள் ஏற்கத் தகாதன. உமாதேவியோடு வீற்றிருக்கும், மணம் பரவும் மலர்களை மாலையாக உடைய பரமன், வீரட்டானத்தில் நடம் புரிகின்றார். அப்பெருமானை வணங்குதல் வேண்டும்.

விரை – மணம், வாசனை; தாரான் – மாலை அணிந்தவன்; அலர்தாரான் – மலர்மாலை சூடியவன்.

Koviloor Digital Library

503. ஞாழல் கமழ்காழி யுள்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீர் அதிகைவீரட் டானத்துச்
சூழும் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழும் துணையாக நினைவார் வினைஇலரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கொன்றை மலர் மணம் பரப்பும் சீகாழிப் பதியின் ஞானசம்பந்தர், தெளிந்த நீர்மிகும் கரைகளில் நாணல்கள் செழித்து ஓங்கும் அதிகைப் பதியில் உள்ள வீரட்டானத்தில் விளங்கும் பரமனைப் போற்றிப் பாடிய இத் தமிழ் மாலையை ஓதி, அதனையே, ஈசனைப் போன்று வாழும் துணையாகப் பற்றி நினைப்பவர்கள், வினையில்லாதவர்கள் ஆவர்.

சிறப்புரை: பரஞானம், அபரஞானம் ஆகிய இரண்டு மலரடிகளையும் சூழ்ந்து, மன்னுயிர்கள் பொருந்தி நிற்றல் தோன்ற, 'சூழும் கழலான்' என உணர்த்தப் பட்டது.

ஈசனே உயிர்க்கு வாழும் துணையாதல் போன்று இத் திருப்பதிகம் வாழும் துணையாகும் என்று உணர்த்தப் பெற்றது. வினை இலர் என்பது, இரு வகைப்பட்ட நல்வினை மற்றும் தீவினை நீங்கப் பெறுதலும், அதுவே முத்தி இன்பத்துக்குச் சாதனம் ஆதலும் உணர்த்தப்படுகிறது.

"பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே" எனத் திருநாவுக்கரசர், வினைகள் ஆற்றும் இயல்பினை ஓதுதலும் காண்க.

ஞாழல் – கொன்றை; வேழம் – நாணல், மூங்கில்.

Koviloor Digital Library

47. திருச்சிரபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *பழந்தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

504. பல்லடைந்த வெண்தலையில்
பலிகொள்வது அன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாள்
மேனியில் வைத்தல்என்னே
சொல்லடைந்த தொல்மறையோடு
அங்கம்க லைகள்எல்லாம்
செல்லடைந்த செல்வர்வாழும்
சிரபுர மேயவனே.

தெளிவுரை: *திரண்ட மேன்மையான சொற்களும், அதன் பொருள்களும், பழமையான வேதம் மற்றும் அதன் அங்கம் ஆகியவற்றில் சொல்லப்பட்ட கலைகள் யாவும் அருள்வயத்தால் சென்று அடையப் பெற்ற செல்வப் பெருமக்கள் வாழும் சிரபுர நகரில் விளங்கும் பெருமானே! மண்டை ஓட்டினைப் பிச்சைப் பாத்திரமாகக் கையில் ஏந்திப் பிச்சை கொள்வதும், வில்லைப் போன்ற வளைந்த புருவத்தை உடைய பெண்ணின் நல்லாளாகிய உமையைத் திரு மேனியில் பாகமாக வைத்திருப்பதும் ஏன்? என்னே என வியந்தவாறு.*

சிறப்புரை: *நல்லாள் எனத் தேவியைக் குறிப்பிட்டது. "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என ஞானசம்பந்தர் அருளிச் செய்ததும் நோக்குக.*

பல்லடைந்த வெண்தலை – பிரமகபாலம்.

Koviloor Digital Library

505. கொல்லை முல்லை நகையினாள் ஓர்
கூறுஅது அன்றியும்போய்
அல்லல் வாழ்க்கைப் பலிகொண்டு உண்ணும்
ஆதரவு என்னைகொலாம்
சொல்ல நீண்ட பெருமையாளர்
தொல்கலை கற்றுவல்லார்
செல்ல நீண்ட செல்வமல்கு
சிரபுர மேயவனே

தெளிவுரை: சொல்லற்கு அரிய பெருமை மிக்கவர்கள், பழைமையான கலைகளைக் கற்றுத் தேர்ந்தவர்கள், அளவற்ற பெரும் பொருட் செல்வங்களும் கொண்டு விளங்கும் சிரபுரத்தில் மேவும் ஈசனே! முல்லை மலர் போன்ற இனிய பற்களை உடைய தேவியை ஒப்பற்ற பாகமாகக் கொண்டும், இரத்தல் தொழிலை ஏற்றுப் பிச்சை எடுத்து உண்ணும்படி ஆசை கொண்டது ஏன்?

சிறப்புரை: பழைமையான சாத்திரங்களைக் கற்றுத் தேர்தல், பழைமையைப் போற்றிப் பாதுகாக்கும் தன்மையும், தற்கால நிலைக்கேற்ப உள்ள அனைத்தும் கற்றுப் பிறர்க்கும் போதித்தலால் உண்டாகும் நீண்ட பெருமையும், இங்கு சிறப்பாகக் குறிப்பிடுதல் காண்க.

நகை – பல்; ஆதரவு – அன்பு, ஆசை; சொல்ல நீண்ட – சொல்வதற்கு அரிய, நிரம்ப; செல்லநீண்ட – செல்வம் பெருகித் தானாகச் சென்றடைதல்.

506. நீர் அடைந்த சடையின்மேலோர்
நிகழ்மதி அன்றியும்போய்
ஊர் அடைந்த ஏறது ஏறி
உண்பலி கொள்வது என்னே
கார் அடைந்த சோலை சூழ்ந்து
காமரம் வண்டிசைப்பச்

Koviloor Digital Library

சீர் அடைந்த செல்வம்ஓங்கு
சிரபுர மேயவனே.

தெளிவுரை: மேகம் தவழும் சோலை சூழ்ந்து, வண்டுகள் காமரம் என்னும் பண்ணிசை எழுப்பி, யாங்கணும் பரவச் செல்வம் ஓங்கும் சிரபுர நகரில் விளங்கும் ஈசனே! கங்கை தங்கிய சடையில் சந்திரனைச் சூடியதும் அன்றி, இடப வாகனத்தில் ஏறி ஊர்தோறும் பலியேற்றதும் ஏன்? — என்னே என வியந்தவாறு.

சிறப்புரை: செல்வத்தின் பயனாக அருள்நெறி பெருகுதலும், ஈசன் வழிபாடு மற்றும் திருவிழாக்கள் நடைபெறுதலும், வேதம் பயிலுதலும் முதலான நற்செயல்கள் நடைபெறுதலை, செல்வமானது சீர் அடைந்தது என்னும் குறிப்பால் உணர்த்தப்பட்டது.

507. கைஅடைந்த மானினோடு
கார்அரவு அன்றியும்போய்
மெய்அடைந்த வேட்கையோடு
மெல்லியல் வைத்தல்என்னே
கைஅடைந்த களைகளாகச்
செங்கழு நீர்மலர்கள்
செய்அடைந்த வயல்கள்சூழ்ந்த
சிரபுர மேயவனே.

தெளிவுரை: களைகள் பறித்துச் செம்மையுடைய வயல்களும், செங்கழுநீர் மலர்கள் உடைய நிலைகளும் கொண்ட சிரபுரத்தில் விளங்கும் ஈசனே! மானைக் கரத்தில் கொண்டு விடம் கொண்ட அரவும் வைத்ததும் அன்றித் திருமேனியில் மெல்லியளாகிய உமாதேவியைப் பாகமாக வைத்து இருப்பது ஏன்? — என்னே என வியந்தவாறு.

கார் அரவு – விடம்கொண்ட பாம்பு – விடத்தின் கருமை நோக்கி கார் அரவு எனப்பட்டது.

Koviloor Digital Library

508. புரம் எரித்த பெற்றியோடும்
போர்மத யானைதன்னைக்
கரம் எடுத்துத் தோல்உரித்த
காரணம் ஆவதென்னே
மரம்உரித்த தோல்எடுத்த
மாதவர் தேவரோடும்
சிரம்எடுத்த கைகள்கூப்பும்
சிரபுர மேயவனே.

தெளிவுரை: *மரவுரியை ஆடையாகக் கொண்டுள்ள மாமுனிவர்களும் தேவர்களும், சிரத்தின் மேலாகக் கைகளைக் கூப்பி வணங்கும் சிரபுரத்தில் விளங்கும் ஈசனே! முப்புரத்தை எரித்து வெற்றி கொண்டு, பின்னர், போர்க்கோலம் பூண்டு வந்த மத யானையின் தோலை உரித்த காரணம் என்ன? என்னே என வியந்தவாறு.*

509. கண்ணுமூன்றும் உடையதுஅன்றிக்
கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு
பாம்புடன் வைத்தல்என்னே
எண்ணுமூன்று கனலும்ஓம்பி
எழுமையும் விழுமியராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர்
சிரபுர மேயவனே.

தெளிவுரை: *ஆகவனீயம், காருக பத்தியம், தட்சிணாக் கினி ஆகிய மூவகையான கனலை ஓம்பி, எழுவகையான பிறப்பு வகைகளிலும் சிறப்புடையவர் களால் உறுதியான மூன்று வகையான தேவ, ரிஷி, பித்ரு வேள்விகளைப் புரிய விளங்கும் சிரபுர நகரில் மேவிய ஈசனே! சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று கண்களை உடையதும் அல்லாமல், கரத்தில்*

Koviloor Digital Library

வெண்மழுவும் ஏந்தி, ஆதாரம், கீழ், உச்சம் என மூன்று வகையான சுருதிகளுடைய வீணையும், பாம்பும் வைத்திருப்பது என்னே!

குறிப்பு:- எழுமை குறிக்கும் ஏழு பிறவிகளாவன:

(1) தேவர், *(2)* மனிதர், *(3)* மிருகம், *(4)* பறவை, *(5)* ஊர்வன, *(6)* நீர்வாழ்வன, *(7)* தாவரம்.

510. குறைபடாத வேட்கையோடு
கோல்வளை யாள்ஒருபால்
பொறைபடாத இன்பமோடு
புணர்தரு மெய்ம்மை என்னே
இறைபடாத மென்முலையார்
மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடல்ஓங்கு
சிரபுர மேயவனே.

தெளிவுரை: கன்னிப் பெண்கள் மாளிகையின் மேலிருந்து குற்றமற்ற பாடல்களை இசைக்க ஓங்கும் சிரபுரத்தில் விளங்கும் ஈசனே! உமையவள் குறைவில்லாத நிறைவான விருப்பத்துடன் இணைந்து மகிழ்வதற்கு உரிய மெய்ம்மை நும்மிடம் உள்ளது. அது என்னே!

இறை - முன்கை, மணிக்கட்டு.

511. மலை எடுத்த வாளரக்கன்
அஞ்சஒ ருவிரலால்
நிலைஎடுத்த கொள்கையானே
நின்மல னேநினைவார்
துலைஎடுத்த சொல்பயில்வார்
மேதகு வீதிதோறும்

Koviloor Digital Library

சிலைஎடுத்த தோளினானே
சிரபுர மேயவனே.

தெளிவுரை: நடுநிலை தவறாது துலாக்கோல் போன்று துல்லியமாக மொழியும் பெருமக்கள் திகழும் சிரபுர நகரில் விளங்கும் ஈசன், மலையை எடுத்த இராவணன் அஞ்சும்படி ஒரு விரலால் அடர்த்த கொள்கையினால் சிறப்புற்று, மேரு மலையை வில்லாக எடுத்த தோளையுடையவன்.

சிறப்புரை: இரு வினைகளையும் ஒப்ப நோக்கும் தன்மையில் விளங்கும் பெருமக்கள் எனத் "துலை எடுத்த சொற்பயில்வார்" என்னும் தொடர் குறித்தலும் ஆம்.

துலை – துலாக் கோல், தராசு.

512. மாலினோடு மலரினானும்
வந்துஅவர் காணாது
சாலும்அஞ்சப் பண்ணிநீண்ட
தத்துவ மேயதுஎன்னே
நாலுவேதம் ஓதலார்கள்
நம்துணை என்றுஇறைஞ்சச்
சேலுமேயும் கழனிசூழ்ந்த
சிரபுர மேயவனே.

தெளிவுரை: நான்கு வேதங்களையும் ஓதும் வேத விற்பன்னர்கள் என்று போற்றவும், சேல் விளங்கும் நீர் வளத்துடன் வயல்கள் செறிந்தும் திகழும் சிரபுர நகரில் மேவும் ஈசனே! திருமாலும், பிரமனும் வந்து காண முடியாது மிகவும் அச்சம் கொள்ளுமாறு செய்து, பின்னர், தீப்பிழம்பாக எல்லையில்லாது நீண்டு வளர்ந்து ஓங்கிய தத்துவம் யாது! என்னே!

சாலும் – மிகுதி.

Koviloor Digital Library

513. புத்தரோடு சமணர்சொற்கள்
புறன்உரை என்று இருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த
பான்மையது என்னை கொலாம்
மத்தயானை உரியும்போர்த்து
மங்கையொ டும்முடனே
சித்தர்வந்து பணியும்செல்வச்
சிரபுர மேயவனே.

தெளிவுரை: *மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்து, உமாதேவியுடன் விளங்கிச் சித்தர்கள் வந்து பணிகின்ற செல்வச் சிரபுர நகரில் மேவும் ஈசனே! புத்தர்களும் சமணர்களும் நின்னை வணங்காது விலகி நின்றும், பக்தர்கள் வந்து பணியுமாறு செய்த பாங்கு என்னே!*

514. தெங்குநீண்ட சோலை சூழ்ந்த
சிரபுர மேயவனே
அங்க நீண்ட மறைகள்வல்ல
அணிகொள்சம் பந்தன்உரை
பங்கநீங்கப் பாடவல்ல
பக்தர்கள் பாரிதன்மேல்
சங்கமோடு நீடிவாழ்வர்
தன்மையி னால்அவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *தென்னை மரங்களும், சோலைகளும் சூழ்ந்த சிரபுரத்தில் விளங்கும் ஈசனை, நான்கு வேதங்களிலும், அதன் நெடிய அங்கங்களிலும் வல்ல ஞானசம்பந்தன் உரை செய்த இத் திருப்பதிகத்தைக் குறைவு இல்லாமல் பாடவல்ல பக்தர்கள், இவ் உலகில் தம் மக்கள் புடைசூழ நெடிது வாழ்வார்கள்.*

சங்கம் – அடியார் திருக்கூட்டம்.

Koviloor Digital Library

48. திருச்சேய்ஞலூர்

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். சேங்கனூர் என்று அழைக்கப்படுகிறது. முருகப்பெருமான், சூரசம்மாரம் நிகழ்த்துவதை முன்னிட்டு, வழிபட்டு உருத்திர பாசு பதாத்திரம் பெற்றார். அறுபத்து மூவருள் ஒருவராகிய சண்டேஸ்வரர் திரு அவதாரம் செய்த திருத்தலம்.

சிபிச்சக்கரவர்த்தி, அரிச்சந்திரன் வழிபட்டது.

சுவாமி : சத்யகிரிநாதர்

அம்பிகை : சகிதேவி அம்மை

தீர்த்தம் : மண்ணியாறு (சத்திய நதி)

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

515. நூலடைந்த கொள்கையாலே
நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல்மேவி
அருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: சேல் விளங்கும் குளிர்ந்த வயல்சூழ் சேய்ஞலூரில் மேவும் பெருமானே! பல நூல்களைக் கற்ற பெருமக்களாக விளங்கிய சனகாதி முனிவர்கள் உண்மைப் பொருளைக் காணமாட்டாதவர்களாய் நும் அடி வணங்கி விண்ணப்பிக்க, ஆல் நிழலில் அமர்ந்து சொன்ன அருமறை யாது!

Koviloor Digital Library

516. நீறடைந்த மேனியின்கண்
நேரிழை யாள்ஒருபால்
கூறடைந்த கொள்கையன்றிக்
கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி
அரவம் அணிந்ததென்னே
சேறணிந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: சேறு குழையப்பெற்ற வளமான கழனி களையுடைய சேய்ஞலூரில் மேவும் ஈசனே! ஒருபுறம் நீறு விளங்கும் திருமேனியில் உமாதேவி பாகமாகக் கொண்டு விளங்கி நிற்க, சடைமுடியில் கங்கை என்னும் தேவியைக் கொண்டும், திங்களும் அரவமும் தரித்தும் இருப்பது என்னே!

517. ஊனடைந்த வெண்தலையின்
ஓடுபலி திரிந்து
கானடைந்த பேய்களோடு
பூதம் கலந்துடனே
மான்அடைந்த நோக்கிகாண
மகிழ்ந்துஎரி ஆடல்என்னே
தேனடைந்த சோலைமல்கு
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: தேன்மல்கு சோலைசூழ் சேய்ஞலூரில் மேவும் ஈசனே! பிரமகபாலம் ஏந்திப் பலியேற்றுப் பிட்சாடண மூர்த்தியாகத் திரிந்து, இடுகாட்டில் பேய்க்கணங்களுடன் பூத கணங்கள் சூழக் கலந்து மான் போன்ற நோக்குடைய உமாதேவி கண்டு மகிழுமாறு, கரத்தில் நெருப்பு ஏந்தி ஆடல் புரிந்தது என்னே!

கான் – இடுகாடு.

Koviloor Digital Library

518. வீண்அடைந்த மும்மதிலும்
 வில்மலையா அரவின்
நாண்அடைந்த வெஞ்சரத்தால்
 நல்லெரி யூட்டல்என்னே
பாண்அடைந்த வண்டுபாடும்
 பைம்பொழில் சூழ்ந்துஅழகார்
சேண்அடைந்த மாடமல்கு
 சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: வண்டுகள் இசைக்கப் பைம்பொழில் சூழ்ந்தும், வானத்தைத் தொடும் உயர்ந்த மாட மாளிகைகள் கொண்டும் விளங்கும் சேய்ஞலூரில் மேவும் ஈசனே! மேருமலையை வில்லாகவும், அரவத்தை நாணாகவும் வெம்மையான நெருப்புக் கணையால் பயனற்றனவாக இருந்த முப்புரத்தை நன்றாக எரிந்து சாம்பலாகுமாறு செய்த அற்புதம்தான் என்னே!

519. பேய்அடைந்த காடுஇடமாப்
 பேணுவது அன்றியும்போய்
வேய்அடைந்த தோளிஅஞ்ச
 வேழம் உரித்ததென்னே
வாய்அடைந்த நான்மறைஆறு
 அங்கமோடு ஐவேள்வித்
தீஅடைந்த செங்கையாளர்
 சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: நான்கு வேதங்களும், ஆறு அங்கங்களும் வாய் மணக்க ஓதி மேன்மையான ஐவகை வேள்வித் தீயை வளர்க்கும் செம்மையான கரத்தினர் விளங்கும் சேய்ஞலூரில் மேவும் ஈசனே! பேய்கள் உறையும் சுடுகாட்டை இடமாகக் கொண்டு பேணுவதுடன், மூங்கிலையொத்த மெலிந்த தோளையுடைய

Koviloor Digital Library

உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்தது என்னே! விந்தை!

சிறப்புரை: மெல்லிய மூங்கில் போன்ற தோளை உடைய தேவியை "வேயுறு தோளி" என்னும் தொடரால் ஞானசம்பந்தர் குறிப்பதும் ஓர்க.

ஐ வேள்வி – தேவ, பித்ரு, அதிதி முதலான யக்ஞம்.

520. காடுஅடைந்த ஏனம்ஒன்றின்
காரணம் ஆகிவந்து
வேடுஅடைந்த வேடனாகி
விசயனொடு எய்ததுஎன்னே
கோடுஅடைந்த மால்களிற்றுக்
கோச்செங்க ணாற்குஅருள்செய்
சேடுஅடைந்த செல்வர்வாழும்
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: தந்தங்களை உடைய, பெருமை மிக்க கோச்செங்கட் சோழ மன்னருக்கு அருள் செய்தவரும், பெருமை மிக்க செல்வர்களும் வாழும் சேய்ஞலூரில் விளங்குபவரும் ஆகிய ஈசனே! காட்டிற்குச் சென்ற ஒரு பன்றியைக் காரணமாகக் கொண்டு வேட்டுவத் திருக்கோலம் பூண்டு விசயனோடு போரிட்டது என்னே! விந்தை!

சிறப்புரை: திருவானைக்காவில் சிலந்தி சிவத்தொண்டு ஆற்றி நிற்க, அதற்குக் குந்தகமாகக் கருதப்பட்ட யானையின் துதிக்கையினுள் புகுந்து சென்று கடித்தது. யானையும் சிலந்தியும் மாண்டன. சிலந்தி மறு பிறவியில் கோச்செங்கட் சோழனாகப் பிறப்புக் கொண்டது. இதனைச் சேக்கிழார் "சிலம்பிதனைச் சோழர் குலத்து வந்து முன்னுதித்து" என்று

Koviloor Digital Library

கூறுகின்றார். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய இவரைத் 'தென்னவனாய் உலகாண்ட செங்கணனார்க்கு அடியேன்' என்று போற்றுகின்றார் சுந்தரர்.

மால் – பெருமை; சேடு – பெருமை, அழகு, சிறப்பு.

521. பீரடைந்த பாலது ஆட்டப்
பேணாத வன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந் தான்தனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமைவ குத்ததுஎன்னே
சீரடைந்த கோயில்மல்கு
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: சீரும் சிறப்பும் கொண்டு திகழும் சேய்ஞலூரில் திருக்கோயில் கொண்டு விளங்கும் ஈசனே! சுரப்புற்ற ஆவின் பாலைச் சிவலிங்கத் திரு மேனிக்கு பாலகன் அபிடேகம் செய்ய, அதன் மெய்ம்மையை உணராது, சினந்த அப் பாலகனின் தந்தையின் கால் தடியப் பெற்றது; பக்தி மிகுந்த அப் பாலகனின் செயலைக் கண்டு மகிழ்ந்து, மாலை சூட்டிச் சண்டேசப்பதம் ! நல்கியதுடன் தலைமைப் பதவியும் வகுந்துத் தந்தது என்னே!

522. மாவடைந்த தேர்அரக்கன்
வலிதொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு
நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போல்
பூசுரர் போற்றிசெய்யும்

Koviloor Digital Library

சேவடைந்த ஊர்தியானே
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: தாமரை மலரில் உறையும் பிரமனைப் போன்று தேவர்கள் எல்லாம் போற்றவும், இடப வாகனத்தில் விளங்கியும் சேய்ஞலூரில் மேவும் ஈசனே! குதிரைகளைப் பூட்டிய தேரில் சென்ற அரக்கனுடைய வலிமையை அழித்துப் பின்னர் அவன் அமுது இசைத்த பாடல் கேட்டு இரக்கம் கொண்டு அருள் செய்த தன்மை என்னே!

மா – குதிரை; சே – இடபம்.

523. காரடைந்த வண்ணனோடு
கனகம் அனையானும்
பாரடைந்தும் விண்பறந்தும்
பாதமுடி காணார்
சீரடைந்து வந்துபோற்றச்
சென்றுஅருள் செய்தது என்னே
தேரடைந்த மாமறுகில்
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: தேர் செல்லும் சிறப்பான வீதிகளையுடைய சேய்ஞலூரில் மேவும் பெருமானே! கரிய வண்ணனாகிய திருமாலும் பொன் வண்ணத்தவனான பிரமனும் முறையே பூமிக்குள்ளும், விண்ணில் பறந்தும் சென்று பாதமோ அல்லது முடியோ காணாதவர் ஆயினர். பின்னர் அவ் இருவரும் சீர்மையுற்றுத் தத்தம் ஆற்றலை உணர்ந்து போற்ற, சோதி வடிவத்தில் விளங்கி அருள் செய்த தன்மை என்னே!

மறுகு – வீதி, தெரு.

Koviloor Digital Library

524. மாசடைந்த மேனியாரு
மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த ஊணினாரு
நேசமி லாததென்னே
வீசடைந்த தோகையாட
விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடும்
சேய்ஞலூர் மேயவனே.

தெளிவுரை: *வீசும் இயல்புடைய மயில் தோகை விரித்து ஆட, மணம் வீசும் பொழில்களில் ஒளிமிக்க வண்டுகள் பாடும் சேய்ஞலூரில் மேவும் ஈசனே! மாசு அடைந்த தேகமும் ஊணில் நேசம் உடையவரும் ஆகிய புறச் சமயத்தினர் நின்பால் நேசமில்லாமல் இருத்தல் என்னே!*

525. சேயடைந்த சேய்ஞலூரில்
செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ்
தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு
சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார்
வானுலகு ஆள்பவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *முருகப் பெருமான் பூசித்த சேய்ஞலூரில் எழுந்தருளியுள்ள ஈசன் சீர்பரவி, வளம் திகழ் வயல்சூழ் தோணிபுர நாதன்; புகழும், ஞானமும் மல்கும் ஞானசம்பந்தன் மொழிந்த இத் திருப் பதிகத்தை வாய் மணக்கப் பாடவல்லவர்கள் வானுலகு ஆள்பவர் ஆவர்.*

Koviloor Digital Library

குறிப்பு:– முருகப் பெருமான் வழிபட்ட தலம் குறிப்பிடப்பட்டது.

சேய் – முருகப் பெருமான்; சாய் – புகழ்.

49. திருநள்ளாறு

தல விளக்கம்: பதிக எண் 7 காண்க.

பதிகக் குறிப்பு: இத் திருப்பதிகம் சமணர் செய்த அனல் வாதத்தில் (தீயில் இடுதல்) வெற்றி கண்ட பச்சைப் பதிகம் ஆயிற்று.

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

KOVILOOR ANDAVAR ★ LIBRARY, KOVILOOR
A. No. 17657

526. போகம்ஆர்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகம்ஆர்த்த பைங்கண்வெள்
ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகம்ஆர்த்த தோலுடையன்
கோவண ஆடையின்மேல்
நாகம்ஆர்த்த நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: ஈசன், போகம் ஆர்த்த பூண் முலையாள் என்னும் திருநாமம் தாங்கிய உமாதேவியை உடனாகக் கொண்டு வேறாகவும், இடப வாகனத்தை உடையவராய் விளங்குபவர். அவர் தன்னுடைய கூறாகவும் பெருமாட்டியை உடையவர். தோலுடையும், கோவண ஆடையும், நாகமும் கொண்டுள்ள அப்பெருமான் பொருந்தி இருப்பது நள்ளாறு.

Koviloor Digital Library

527. தோடுடைய காதுடையன்
தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணும்ஓர் பால்உடையன்
ஏடுடைய மேல்உலகோடு
ஏழ்கடலும் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: *ஈசன், தோடு அணிந்த காது உடையவன். தோலை ஆடையாக உடையவன். எக்காலத்திலும் குறையாத சிறப்புடைய போர்த் தன்மையுடைய இடபத்தை வாகனமாக உடையவன். உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டுள்ளவன். ஒன்றின்மேல் ஒன்றாக மலரிதழ் போன்று, விளங்கும் ஏழு உலகங்களும் கடல்களும் சூழ்ந்த நாடுகளில் விளங்கும் நம் பெருமான் பொருந்தி விளங்குவது நள்ளாறே.*

528. ஆன்முறையால் ஆற்றவெண்ணீறு
ஆடிஅ ணிஇழையோர்
பால்முறையால் வைத்தபாதம்
பத்தர்ப ணிந்துஏத்த
மான்மறியும் வெண்மழுவும்
சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: *பசுவிலிருந்து முறையாக விதிப்படி தயாரிக்கப்பெற்ற திருவெண்ணீறு புனைந்து, இழைத்த ஆபரணங்களைப் பூண்ட உமையை ஒரு பக்கம் முறையாக வைத்தவர் ஈசன். அவருடைய திருப் பாதத்தைப் பத்தர்கள் பணிந்து ஏத்துகின்றனர். மானும், மழுவும், சூலமும் கரத்தில் பற்றி நிற்கும்*

Koviloor Digital Library

நான்மறையாளனாகிய நம் பெருமான் மேயது நள்ளாறே.

மேயது – பொருந்தி விளங்குவது.

529. புல்க வல்ல வார்சடைமேல்
பூம்புனல் பெய்து அயலே
மல்கவல்ல கொன்றைமாலை
மதியோடு உடன்சூழப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற்
பாதநி ழல்சேர
நல்கவல்ல நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: வரிசையாகச் சேர்ந்து பொருந்தும் சடைமேல் கங்கையை வைத்து, அடுத்துக் கொன்றை மாலை, சந்திரன் சூடி விளங்கப் பல்கிப் பெருகும் திருத் தொண்டர்கள் பொற்பாத நிழலில் சேர்ந்து பக்தியுடன் இருக்க, நல்லவை நல்கும் நம்பெருமான் மேவி இருப்பது நள்ளாறே.

530. ஏறுதாங்கி ஊர்திபேணி
ஏர்கொள்இ ளமதியம்
ஆறு தாங்கும் சென்னி மேல்ஓர்
ஆடு அரவம் சூடி
நீறு தாங்கி நூல் கிடந்த
மார்பில் நிரை கொன்றை
நாறுதாங்கு நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: இடபக் கொடி தாங்கி, வாகனமாகவும் அவ் இடபத்தை ஏற்றுக் காத்து, அழகிய இளஞ் சந்திரனையும் கங்கையையும் தரித்து, ஆடிக் கொண்டிருக்கும் அரவத்தைச் சூடி, திருநீறு தரித்து,

Koviloor Digital Library

முப்புரிநூல் திகழும் மார்பில் கொன்றை மலரின் மணம் வீச, நம் பெருமான் மேவி விளங்குவது நள்ளாறே.

நிரை – வரிசையாகக் கொத்துக் கொத்தாக விளங்குதல்;
நாறு – மணம்.

531. திங்கள் உச்சி மேல்விளங்கும்
தேவன் இமையோர்கள்
எங்கள் உச்சி எம்மிறைவன்
என்றுஅடி யேஇறைஞ்சத்
தங்கள் உச்சி யால்வணங்கும்
தன்னடி யார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: ஈசன், சந்திரனை உயர்ந்த இடத்தில் வைத்தவன். தேவர்கள் எல்லோரும், எங்களுக்கு மேலான இறைவன் அவனே என்று திருவடியை வணங்கிப் போற்றுகின்றனர். தலையால் வணங்கும் அடியவர்களுக்கு எல்லாம், மேன்மையாவது நம் பெருமான். அவர் மேவி விளங்குவது நள்ளாறே.

சிறப்புரை: இறைவனை வணங்குதலே மேன்மை — உச்ச மானது எனவும் அச்செயலுக்குச் சான்றாகச் சந்திரன் உச்ச நிலை கொண்ட காட்சியை உணர்த்துவதும் காண்க.

532. வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி
விண்கொள்மு ழவுஅதிர
அஞ்சிடத்துஓர் ஆடல்பாடல்
பேணுவது அன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித்
திகழ்தரு கண்டத்துள்ளே

Koviloor Digital Library

நஞ்சடைத்த நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: வெம்மையான சுடர்மிகும் தீயை அழகிய கையில் ஏந்தி, விண்ணையும் அதிரச் செய்யும் முழவு ஒலிக்க, அஞ்சும் இடமாகிய இடு காட்டில் ஒப்பற்ற ஆடலும் பாடலும் நடைபெறுமாறு விரும்பி மகிழ்வதும் அல்லாமல், சிவந்த சடைக்கு ஒருகலைப் பிறைச் சந்திரனைச் சூடி, நஞ்சினைக் கண்டத்திலே திகழுமாறு வைத்துள்ள நம் பெருமான் மேவி விளங்குவது நள்ளாறே.

அஞ்சிடம் – அஞ்சத்தகுந்த இடமாகிய சுடுகாடு; நஞ்சு அடைத்த – நஞ்சை அடைத்து இருத்தி வைத்த.

533. சிட்டம் ஆர்ந்த மும்மதிலும்
சிலைவரைத் தீஅம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீறு
ஆடுவது அன்றியும் போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னி மேலோர்
பால்ம தியம்சூடி
நட்டம் ஆடு நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: வலிமையின் சிறப்புப் பொருந்திய மூன்று மதில்களையும், மேரு மலையை வில்லாகவும் தீயை அம்பாகவும் கொண்டு, சுட்டுப் பொசுக்கிச் சாம்பலாக்கித் திருவெண்ணீறு பூசுவதும் அல்லாமல், நெற்றிப்பட்டம் உடைய தலையின்மேல் வெண் மதியைச் சூடி நடனம் ஆடுகின்ற நம் பெருமான் மேவி விளங்குவது நள்ளாறே.

சிறப்புரை: எரிந்து கருகிப் போனதைச் சிட்டம் எனக் கூறும் மரபு தோன்ற, இழிநிலையாகிய மும்மதிலின்

Koviloor Digital Library

தன்மையைச் சிட்டம் என்ற பொருளால் உணர்த்துதலாயிற்று.

சிட்டம் – எரிந்து கருகிப்போனது. மாட்டு(தல்) மாட்டுதல் – அழித்தல், கொளுத்துதல்; பட்டம் – நெற்றித் தகடு, அணிவகை. நட்டம் – நடனம்.

534. உண்ணலாகா நஞ்சுகண்டத்து
உண்டுஉட னேஒடுக்கி
அண்ணலாகா வண்ணநீழல்
ஆரழல் போல்உருவம்
எண்ணலாகா உள்வினைஎன்று
எள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: யாரும் உட்கொள்வதற்குப் பொருந்தாத நஞ்சை உட்கொண்டு, கண்டத்தில் தேக்கி ஒடுக்கி நிறுத்தியவர் ஈசன். அவர், யாரும் அண்டி நெருங்க முடியாதவாறு வண்ணமிகு ஒளி பொருந்திய நெருப்புப் போன்ற உருவம் கொண்டவர். அப்பெருமான், எண்ணுவதற்கு அரிதாகிய வினையால் உண்மையை உணராது நிற்கும் பிரமனும் திருமாலும் வலிந்து சென்று நண்ணவேண்டும் என முயன்றும் நண்ண முடியாதவராய் மேவி விளங்குவது நள்ளாறே.

நீழல் – நிழல் – ஒளி. சந்தம் நோக்கி நகரம் நீண்டது.

535. மாசு மெய்யர் மண்டைத்தேரர்
குண்டர்கு ணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்று எண்ணி
அந்நெறி செல்லன்மின்
மூசு வண்டார் கொன்றைசூடி
மும்மதி ளும்முடனே

Koviloor Digital Library

நாசம் செய்த நம் பெருமான்
மேயது நள்ளாறே.

தெளிவுரை: *மாசுடைய தேகத்தையுடைய பௌத்தர் மற்றும் குணமற்றவர்களும் பேசுவனவற்றை மெய்ம்மை எனக் கருதி அவ்வழியில் செல்ல வேண்டாம். கொன்றை மலர் சூடி, மும்மதில்களையுடைய முப்புரத்தை உடனே அழியுமாறு செய்த நம் பெருமான், மேவி விளங்குவது நள்ளாறே.*

536. தண்புனலும் வெண்பிறையும்
தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்கு காழி
ஞானசம் பந்தனல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல்
பத்தும்இ வைவல்லார்
உண்பு நீங்கி வானவரோடு
உலகில் உறைவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *குளிர்ந்த கங்கையையும் வெண்மையான பிறைச் சந்திரனையும் தரித்திருப்பவர் ஈசன். அப் பெருமானைப் போற்றி, நட்பின் மிக்க நல்லோர்கள் பெருகி வாழும் காழியின் ஞானசம்பந்தன், நற் பண்பின் சிகரமாக நள்ளாற்றில் மேவி நிற்கப் பாடிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், இப் பிறவியில் அடைவதற்கு உரிய வினைப் பயன் நீங்கப் பெற்று வானவர்களுடன் அவ்வுலகில் விளங்குவார்கள்.*

சிறப்புரை: *இப் பிறவியில் கொண்டு அடைய இருக்கும் நன்மை மற்றும் தீய வினைகளை "உண்பு" என்பது குறிப்பதாயிற்று. உண்ணும் பொருளின் மீது தாவிச்*

Koviloor Digital Library

சென்று கொள்ளும் மனத்தின் இழிவு கூறும் பாங்கில் இவண் உணர்த்தப்படுகிறது.

50. திருவலிவலம்

தல விளக்கம்: காவிரி தென் கரைத் தலம். வில்வ வனம், கொன்றை வனம் முதலியன வேறு பெயர்கள். வலியன் (கரிக்குருவி) பூசித்ததால் வலிவலம் ஆயிற்று. சூரியன் பூசித்த தலம். காரண மாமுனிவர் வழிபட்டது.

சுவாமி : மனத்துணை நாதர், இருதய கமலநாதேஸ்வரர்

அம்பிகை : அங்கயற்கண்ணி, மாழையங்கண்ணி

தல மரம் : புன்னை

தீர்த்தம் : காரணர் கங்கை, சங்கர தீர்த்தம்

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

537. ஒல்லையாறி உள்ளம் ஒன்றிக்
கள்ளம் ஒழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காமவினை அகற்றி
நல்லவாறே உன்றன்நாம
நாவில் நவின்று ஏத்த
வல்லவாறே வந்து நல்காய்
வலிவலமே யவனே.

தெளிவுரை: வலிவலத்தில் மேவி விளங்கும் ஈசனே! உலகப் பொருள்களின்மேல் பற்றுக் கொண்டு பரபரப்பு எய்தி, மனமானது வேகத்தில் இயங்குவதைச் சாந்தப் படுமாறு செய்து, நின்பால் ஒன்றிப் பொருந்தி இருக்குமாறு நல்கிடுவாய். வஞ்சனை அற்ற நிலையும்

Koviloor Digital Library

பிறரிடம் கொடிய உரைகளை நவிலாதவாறும் தூய்மைப்படுத்திச் சுயவிருப்பின்மேல் செய்யப்படும் செயல்களை அகற்றுக. உன்னுடைய திருநாமத்தை எந்த நெறியில் நவில வேண்டுமோ அந்த நன்னெறியில் நவிலுமாறு அருள்புரிவாய். என்னுடைய தரத்தின் அளவினை அறிந்து, எவ்வழியில் உரை செய்தால் யான் ஈடேற முடியுமோ அந்த நிலையை அறிந்து எனக்கு நல்கி அருள்புரிக.

சிறப்புரை: பரபரப்பு கொண்டுள்ள மனம் அடங்கு தலை, 'வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" என்னும் மாணிக்கவாசகர் தம் வாக்கினையும் இயைந்து நோக்குக.

538. இயங்குகின்ற இரவிதிங்கள்
மற்றுநல் தேவரெல்லாம்
பயங்களாலே பற்றி நின்பால்
சித்தம்தெ ளிகின்றிலர்
தயங்கு சோதீ சாமவேதா
காமனைக் காய்ந்தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய்
வலிவல மேயவனே.

தெளிவுரை: வலிவலத்தில் மேவும் பெருமானே! எக் காலத்திலும் தத்தம் கருமத்தால் இயங்கிக் கொண்டிருக்கும் சூரியன், சந்திரன் முதலான தேவர்கள் யாவரும் அச்சத்தால் பீடிக்கப்பட்டவர் களாகவும், நின்பால் சித்தம் வைக்கத் தெளிவற்றவர் களாகவும் உள்ளனர். ஒளிமிகும் சோதியாய்ச் சாம வேதப் பிரியனாய் விளங்குபவனே! மன்மதனை எரித்தவனே! உலக மாயையில் மயங்கும் என்முன் வந்து யான் ஈடேறுமாறு நல்குக.

Koviloor Digital Library

தயங்கு – ஒளி விடுதல்; சாம வேதா – சாம வேதப் பிரியன். இராவணனுடைய துன்பம் நீங்க, அவன் வாசித்த சாமவேதம் கேட்டு இரக்கம் கொண்டு அருளினமை நோக்கிக் குறித்தது.

539. பெண்டிர் மக்கள் சுற்றம் என்னும்
பேதைப் பெருங் கடலை
விண்டு பண்டே வாழமாட்டேன்
வேதனை நோய் நலியக்
கண்டு கண்டே உன்றன் நாமம்
காதலிக்கின்றது உள்ளம்
வண்டு கிண்டிப் பாடும் சோலை
வலிவல மேயவனே.

தெளிவுரை: *வண்டுகள் பூக்களைக் கிண்டி இசைக்கும் வலிவல ஈசனே! பெண்டிர், புதல்வர், சுற்றத்தார் என்னும் பேதைப் பெருக்கத்தில் சூழ்ந்து திளைத்து, முந்தைக் காலங்களிலும் கிடந்து, நன்மை தருகின்ற நெறியான வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொள்ளாதவனாயினேன். அதன் பயனாக வேதனையான பிறவி முதலான தீராத நோய்கள் உற்று நலிவடைந்தேன். இப்போது நின் நாம மகிமையின் சிறப்பினை எண்ணி மகிழ்கின்றது என் மனம். அருள் புரிக.*

540. மெய்யர்ஆகிப் பொய்யைநீக்கி
வேதனையைத் துறந்து
செய்யர் ஆனார் சிந்தையானே
தேவர் குலக் கொழுந்தே
நைவன் நாயேன் உன்றன்நாம
நாளும் நவிற்று கின்றேன்
வையமுன்னே வந்து நல்காய்
வலிவல மேயவனே.

Koviloor Digital Library

தெளிவுரை: வலிவல நகரில் மேவும் பெருமானே! பொய்யான, நிலையற்ற பொருள்களை ஒதுக்கித் தள்ளி, மெய்யான பொருளையே பற்றி, அதன் பயனாகத் துன்பத்தை ஒழித்துச் செம்மையாளர்களாய் விளங்குபவர்களின் சிந்தையில் விளங்குபவனே! நாளும் உன் திருநாமத்தை உரைக்கின்றேன். நாய் போன்று கீழ்மையனாக இருந்து சீரழியும் என்பால் போந்து இவ்வுலகில் நல்லருள் புரிவாய்.

541. துஞ்சும் போதும் துற்றும் போதும்
சொல்லுவன் உன் திறமே
தஞ்சம் இல்லாத் தேவர் வந்துஉன்
தாளிணைக்கீழ்ப் பணிய
நஞ்சை உண்டாய்க்கு என்செய்கேனோ
நாளு நினைந்து அடியேன்
வஞ்சம் உண்டென்று அஞ்சுகின்றேன்
வலிவல மேயவனே.

தெளிவுரை: வலிவல நகரில் மேவும் பெருமானே! துயிலும்போதும், உண்பது முதலாக உலகப் பொருள்களை ஏற்று நுகரும்போதும், உன்னுடைய பெருமையையே நினைத்துப் பாராட்டுபவனாய் யான் இருப்பவன். வேறு யாரிடத்திலும் தஞ்சம் அடையும் நிலையில்லாத தேவர்கள், நின் தாள் பணிந்து நிற்க, அவர்கள் உய்ய வேண்டும் என்பதற்காக நஞ்சினை உட்கொண்டாய். அத்தகைய கருணையுடைய ஈசனே! நினக்கு நான் எவ்வகையில் ஆற்றிப் போற்றுவதற்கு இயலும்! நின்னை, நாள்தோறும் போற்றி வணங்கு கின்றேன். உலக மாயை என்னைப் பற்றி நின்னை வணங்கும் தன்மையிலிருந்து வேறுபடுத்தி வஞ்சித்து விடுமோ என்று அஞ்சுகின்றேன். என் அச்சம் நீக்கி அருள்புரிவாயாக.

Koviloor Digital Library

542. புரிசடையாய் புண்ணியனே
நண்ணலார்மூ வெயிலும்
எரியஎய்தாய் எம்பெருமான்
என்று இமையோர் பரவும்
கரி உரியாய் காலகாலா
நீல மணி மிடற்று
வரி அரவா வந்து நல்காய்
வலிவல மேயவனே.

தெளிவுரை: சுருண்டு நீண்ட சடையை உடைய புண்ணியனே! வலி வலத்தில் மேவும் ஈசனே! முப்புரங்களை எரியுமாறு செய்தனை என்று தேவர்கள் போற்ற விளங்குபவனே! யானையின் தோலை உரித்தவனே! காலனுக்குக் காலனாக இருப்பவனே! நீலகண்டத்தை உடையவனே! அழகிய ஒளிமிக்க அரவம் தரித்தவனே! அடியேற்கு நல்லருள் புரிக!

543. தாயு நீயே தந்தை நீயே
சங்கரனே அடியேன்
ஆயு நின்பால் அன்பு செய்வான்
ஆதரிக்கின்றது உள்ளம்
ஆய மாய காயந்தன்னுள்
ஐவர் நின்றுஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன்
வலிவல மேயவனே.

தெளிவுரை: வலிவல நகரில் மேவும் பெருமானே! யான் நோக்காத காலத்திலும் எனது நன்மையைக் குறிக் கோளாகக் கொண்டு பேணும் தாயும் நீயே! என்னைப் பக்குவப் படுத்தி மேலானவனாக்கும் பொறுப்பினை ஏற்றுப் பிரியமுடன் எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்யும் தந்தையும் நீயே! சங்கரனே! எல்லாவற்றை யும் ஆய்ந்து செய்யும் நின்பால், அடியேன் அன்பு

Koviloor Digital Library

செய்தலையே விரும்புகின்றது என் உள்ளம். ஐந்து புலன்கள் இந்த உடம்பில் பொருந்தி நின்று நின்னை நினைய ஒட்டாமல் செய்ய, மனம் மாயையின் வசம் உற்றதோ என அச்சம் கொள்கின்றேன். அடியேற்கு நல்லருள் புரிவாயாக.

ஆயம்: சூதாடும் உபகரணம் – இங்குக் காயத்தையும் (உடம்பு) ஐம்புலன்களையும் குறித்தது.

544. நீர் ஒடுங்கும் செஞ்சடையாய்
நின்னுடைய பொன்மலையை
வேரொடும் பீழ்ந்து ஏந்தலுற்ற
வேந்தன் இரா வணனைத்
தேரொடும் போய் வீழ்ந்தலறத்
திருவிரலால் அடர்த்த
வார் ஒடுங்கும் கொங்கைபங்கா
வலிவல மேயவனே.

தெளிவுரை: வலிவலத்தில் மேவும் ஈசனே! உமா தேவியைப் பாகமாக உடையவனே! கங்கையைச் செஞ்சடையில் தரித்தவனே! நின்னுடைய பொன் மலையாகிய கயிலையைப் பெயர்த்த இராவணனைத் திருவிரலால் தண்டித்து, அவனை அலறுமாறு செய்தவனே! அருள் புரிக!

545. ஆதியாய நான்முகனும்
மாலும்அறி வரிய
சோதியானே நீதியில்லேன்
சொல்லுவன் நின் திறமே
ஓதிநாளும் நின்னையேத்தும்
என்னை வினை அவலம்
வாதி யாமே வந்து நல்காய்
வலிவல மேயவனே.

Koviloor Digital Library

தெளிவுரை: வலிவலத்தில் மேவும் பெருமானே! நான்முகனும் திருமாலும் அறிய முடியாத ஆதியாகவும் விளங்கிச் சோதியாகக் காட்சி நல்கிய ஈசனே! நின்னுடைய சிறப்புக்களைக் கூறும் தகுதி இல்லாதவன் ஆயினும், உன் திருநாமத்தை ஓதி நாள்தோறும் போற்றி வழிபடும் என்னை வினையின் தாக்கத்தால் நேரும் இடையூறு துன்புறுத்தாதபடி எனக்குக் காட்சி தந்து அருள்புரிக.

நீதி – தகுதி.

546. பொதியிலானே பூவணத்தாய்
பொன்திகழும் கயிலைப்
பதியிலானே பத்தர் சித்தம்
பற்று விடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர்
சாக்கியர் என்று இவர்கள்
மதியிலாதார் என்செய்வாரோ
வலிவல மேயவனே.

தெளிவுரை: வலிவலத்தில் மேவும் ஈசனே, பொதிய மலையிலும் பூவணத்திலும், பொன் திகழும் கயிலைப் பதியிலும், பக்தர் நெஞ்சத்திலும் பற்றுக் கொண்டு விளங்குபவன். விதியைப் பற்றி நினையாத சமணர் மற்றும் சாக்கியர்கள், ஈசனைக் கருதி வணங்காதவர் களாய் இருக்க என் செய்வார்களோ!

சிறப்புரை: ஈசனை வணங்காத புறச் சமயத்தினர்பால் இரக்கம் கொண்டு அவர்களும் போற்றித் துதிக்க வேண்டும் எனக் கருணைத் திறத்தால் உணர்த்தப் பட்டது.

547. வன்னி கொன்றை மத்தம்சூடும்
வலிவல மே யவனைப்

Koviloor Digital Library

பொன்னி நாடன் புகலி வேந்தன்
ஞானசம் பந் தன்சொன்ன
பன்னு பாடல் பத்தும் வல்லார்
மெய்த்தவத் தோர் விரும்பும்
மன்னு சோதி ஈசனோடே
மன்னி இருப் பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வன்னி, கொன்றை மலர், ஊமத்தம் மலர் ஆகியன சூடி, வலிவல நகரில் மேவி விளங்கும் ஈசனைப் போற்றிக் காவிரி பாயும் நாட்டினை உடைய புகலியின் தோன்றலாகிய ஞானசம்பந்தர் சொன்ன புகழ் விளங்கும் இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், உண்மையான தவவேந்தர்கள் விரும்புகின்ற சோதி வடிவினராகத் திகழும் ஈசனோடு, பொருந்தி மகிழ்ந்து விளங்குவார்கள்.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள் ஈசனுடன் இரண்டறக் கலந்து ஆனந்தப் பெருக்கில் மூழ்கி இருப்பர் என உணர்த்தப்பட்டது.

பன்னு – புகழ் மிக்கது.

51. திருச்சோபுரம்
(தியாகவல்லி)

தல விளக்கம்: நடு நாட்டுத் தலம். அகத்தியர் வழிபட்டது. ஒரு காலத்தில் மணல் மேடாக இருந்ததைக் கண்ட சிவயோகி ஒருவர், இத் திருக் கோயில் புதையுண்டு இருத்தலைக் கூறி மணல் மேட்டை அகற்றினார். தற்போது தியாகவல்லி என அழைக்கப்படுகிறது.

Koviloor Digital Library

சுவாமி : சோபுரநாதர், மங்களபுரீஸ்வரர்

அம்பிகை : சோபுரநாயகி, வேல்நெடுங்கண்ணி

தல மரம் : கொன்றை

தீர்த்தம் : பரம தீர்த்தம் (திருக்குளம்)

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

548. வெங்கண்ஆனை ஈர்உரிவை
போர்த்து விளங் குமொழி
மங்கை பாகம் வைத்துகந்த
மாண்பது என் னைகொலாம்
கங்கையோடு திங்கள் சூடிக்
கடி கமழும் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய்
சோபுர மேயவனே.

தெளிவுரை: கங்கையுடன், சந்திரனையும் தரித்து மணம் பெருகும் கொன்றை மலர் மாலை சூடித் தூய வெண்ணீறு அணிந்த ஈசனே! சோபுரத்தில் மேய பெருமானே! கொடிய யானையின் தோலை உரித்துப் போர்த்தி, இனிய மொழியாளாகிய உமாதேவியைப் பாகம் கொண்ட மாண்பு என்னே!

சிறப்புரை: மன்னுயிர்களுக்கு இனிய சொல்லாகிய சிவமந்திரத்தை உமாதேவியானவள் ஓதுகின்றாள் எனும் குறிப்பு 'விளங்க, மொழி மங்கை' என உமா தேவியின் தாய்மை அன்பு உணர்த்தப்பட்டது.

549. விடை அமர்ந்து வெண் மழு ஒன்று
ஏந்தி விரிந்து இலங்கு
சடை ஒடுங்கத் தண்புனலைத்
தாங்கியது என் னைகொலாம்

Koviloor Digital Library

கடை உயர்ந்த மும்மதிலும்
காய்ந்து அனலுள் ளழுந்தத்
தொடை நெகிழ்ந்த வெஞ்சிலையாய்
சோபுரமே யவனே.

தெளிவுரை: உயரமாக நீண்ட மதில்களையுடைய முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு செய்யும் சரங்களைத் தொடுக்கும் வலிமையான வில்லையுடையவனே! சோபுரத்தில் மேவும் பெருமானே! இடப வாகனத்தில் அமர்ந்து, வெண் மழுப் படையைக் கரத்தில் ஏந்தி, விளங்குகின்ற சடை முடியில் ஒடுங்குமாறு, குளிர்ந்த புனலாகிய கங்கையைத் தாங்கியது என்னே!

தொடை – அம்பு, சரம்.

550. தீயராய வல்லரக்கர்
செந்தழலுள் அழுந்தச்
சாய எய்து வானவரைத்
தாங்கியது என் னைகொலாம்
பாயும் வெள்ளை ஏற்றை ஏறிப்
பாய்புலித்தோல் உடுத்த
தூய வெள்ளை நீற்றினானே
சோபுரமே யவனே.

தெளிவுரை: பாய்ந்து செல்லும் வெள் விடையை வாகனமாகக் கொண்டு ஏறிப் பாய்ந்து தாக்கும் புலியின் தோலை உடுத்தித் தூய்மையான திரு வெண்ணீற்றைத் தரித்துச் சோபுரத்தில் வீற்றிருக்கும் பெருமானே! தீயவர்களாகிய கொடிய முப்புரத்து அசுரர்களைத் தீக்கு இரையாக்கி, வானவரை ஆதரித்துக் காத்தது என்னே!

Koviloor Digital Library

சிறப்புரை: பாயும் புலிக்கு எருதானது இயல்பால் அச்சம் கொள்ளக்கூடியதாயினும், ஈசன் அருள் வண்ணம் அவ்வியல்பைக் கெடுத்து மேன்மையைத் தரவல்லது என உணர்த்துவதாயிற்று.

551. பல்இல்ஒடு கையில் ஏந்திப்
பல்கடையும் பலிதேர்ந்து
அல்லல் வாழ்க்கை மேலதான
ஆதரவு என் னைகொலாம்
வில்லை வென்ற நுண்புருவ
வேல்நெடுங்கண் ணியொடும்
தொல்லைஊழி யாகிநின்றாய்
சோபுரமே யவனே.

தெளிவுரை: வில்லினையும், வெல்லும் ஆற்றலுடைய நுண்புருவமும், வேலைப் போன்ற நெடிய கூர்மை யான நோக்குடைய விழியும் உடைய உமாதேவியைப் பாகமாக கொண்டு, மிகப்பழைய ஊழிக்காலம் முதற் கொண்டு சோபுரத்தில் மேவிய பெருமானே! பற்கள் உதிர்ந்த மண்டையோட்டைக் கையில் ஏந்திப் பிச்சையேற்றுத் திரிந்தனை. துன்பத்தைத் தரக்கூடிய இச் செயலை ஏற்க விழைந்தது என்னே!

552. நாற்றமிக்க கொன்றைதுன்று
செஞ்சடை மேல் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த
காரணம் என் னைகொலாம்
ஊற்றமிக்க காலன்றன்னை
ஒல்க உதைத்து அருளி
தோற்றம் ஈறும் ஆகிநின்றாய்
சோபுரமே யவனே.

தெளிவுரை: வலிமையில் மிக்கவனான காலனைத் திருப்பாதத்தால் உதைத்து, அவனுடைய ஆற்றலை

Koviloor Digital Library

ஒடுக்கி, எல்லாவற்றுக்கும் தோற்றமும், முடிவும் தானேயாகிச் சோபுரத்தில் விளங்கும் பெருமானே! மணம் மிகுந்த கொன்றை மலர் பொருந்த விளங்கும் சிவந்த சடையின் மேல் சந்திரனை ஏற்றம் கொள்ளுமாறு வைத்த காரணம் என்னே!

ஊற்றம் – வலிமை.

553. கொன்நவின்ற மூவிலைவேல்
கூர் மழுவாள் படையன்
பொன்னைவென்ற கொன்றைமாலை
சூடும் பொற்புஎன் னைகொலாம்
அன்னம் அன்ன மென் நடையாள்
பாகம் அமர்ந்து அரைசேர்
துன்ன வண்ண ஆடையினாய்
சோபுரமே யவனே.

தெளிவுரை: அன்னப் பறவையைப் போன்று மென்மை யான நடையுடையவளாகிய உமையைப் பாகமாகக் கொண்டு அமர்ந்து, அரையில் பொருந்திய வண்ண மிகு ஆடையும் அணிந்து, சோபுரத்தில் மேவும் பெருமானே! மூன்று இலைகளையுடைய வேல் என்று சொல்லப்படுகின்ற பெருமை கொண்ட சூலமும், கூரிய மழுவாளும் படையாகக் கொண்டு, பொன்னை வென்ற சிறப்புமிக்க கொன்றை மாலை சூடும் பொற்பு என்னே!

சிறப்புரை: பொன், மணமற்றது என்பது தோன்ற பொன்னை வென்ற கொன்றை எனக் கொன்றை மலரின் பெருமை உணர்த்தப்பட்டது. ஈசன் உமா தேவியை ஒரு கூறாக உடையவன் என்பது தோன்ற, வண்ண ஆடையினாய் எனச் சிறப்பிக்கப் பட்டது. இதனை "உடையாளை, ஒல்கு செம் பட்டுடையாளை"

Koviloor Digital Library

என அபிராமி பட்டர் தேவியின் ஆடையைப் பற்றிக் குறிப்பிடுதலும் காண்க.

கொன் – பெருமை; பொற்பு – அழகு.

554. குற்றம் இன்மை உண்மை நீஎன்று
உன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான
காரணம் என் னைகொலாம்
வற்றல் ஆமை வாளரவம்
பூண்டு அயன்வெண் தலையில்
துற்றல்ஆன கொள்கையானை
சோபுரமே யவனே.

தெளிவுரை: ஆமையின் ஓடும் அரவமும் பூண்டு, பிரம கபாலத்தை ஏந்திப் பலிகொண்டு சோபுரத்தில் மேவி இருப்பவனே, நின்பால் விருப்பும் பக்தியும் கொண்டு குற்றம் இல்லாதவர் நீவிர், உண்மைப் பொருளாக விளங்குபவரும் நீரே என்று நின் அடியவர்கள் பணிவார்கள். இவர்கள் கற்ற கல்வியானது பெரு ஞானமாகத் திகழ்ந்து விளங்குவதற்குக் காரணம் என்னே!

சிறப்புரை: பிரமனது ஒரு சிரத்தைக் கிள்ளி எடுத்த ஈசனார் திருச்செயல், குற்றம் ஆகாமையை உணர்த்துவ தாயிற்று. ஈசனே யாண்டும் நிலவும் மெய்ப்பொருள் எனவும் குற்றமே இல்லாக் குணக்குன்று ஈசனே எனவும், தேர்ந்தறியும் ஞானமே கற்றறிந்ததன் பயன் எனவும், உணர்த்துவதாயிற்று.

555. விலங்கல்ஒன்று வெஞ்சிலையாக்
கொண்டு விறல் அரக்கர்
குலங்கள் வாழும் ஊர் எரித்த
கொள்கை இது என் னைகொலாம்

Koviloor Digital Library

இலங்கை மன்னு வாள் அவுணர்
கோனை எழில் விரலால்
துலங்க ஊன்றி வைத்துகந்தாய்
சோபுரமே யவனே.

தெளிவுரை: இலங்கையின் வேந்தனாகிய இராவணன், மலையைப் பெயர்க்கும்போது, தன் விரலால் ஊன்றி உகந்து, சோபுரத்தில் மேவும் பெருமானே! மேரு மலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்து அழித்ததன் நோக்கம் என்னே!

556. விடங்கொள் நாக மால்வரையைச்
சுற்றிவிரி திரைநீர்
கடைந்த நஞ்சை உண்டு உகந்த
காரணம் என் னைகொலாம்
இடந்து மண்ணை உண்ட மாலும்
இன் மலர்மேல் அயனும்
தொடர்ந்து முன்னம் காண மாட்டாச்
சோபுரமே யவனே.

தெளிவுரை: மண்ணை உண்ட திருமாலும், தாமரை மலர்மீது உறையும் பிரமனும் நின்னைக் காண வேண்டும் என்று தொடர்ந்து சென்றும் காணற்கு அரியவனாய்ச் சோபுரத்தில் விளங்கும் பெருமானே! மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடையும்போது தோன்றிய நஞ்சினை உண்டு உகந்த காரணம் என்னே!

557. புத்தரோடு புன்சமணர்
பொய் உரையே உரைத்துப்
பித்தராகக் கண்டுஉகந்த
பெற்றிமைஎன் னைகொலாம்
மத்த யானை ஈருரிவை
போர்த்து வளர் சடைமேல்

Koviloor Digital Library

துத்தி நாகம் சூடினானே
சோபுரமே யவனே.

தெளிவுரை: மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்துச் சடையில் நாகத்தைச் சூடி சோபுரத்தில் விளங்கும் பெருமானே! புத்தரும், சமணரும் பொய்ம்மை கூறினும், அதனை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும் பெருமைதான் என்னே!

துத்தி – பாம்பின் படம்.

558. சோலைமிக்க தண்வயல்சூழ்
சோபுரமே யவனைச்
சீலமிக்க தொல்புகழார்
சிரபுரக்கோ நலத்தான்
ஞாலமிக்க தண்தமிழால்
ஞானசம்பந் தன்சொன்ன
கோல மிக்க மாலைவல்லார்
கூடுவர்வான் உலகே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சோலைகளும் குளிர்ச்சியான வயல்களும் சூழ் சோபுரத்தில் மேவும் ஈசனைச் சீலமிக்க புகழுடைய சிரபுரத்தின் கோனாக விளங்கும் தலைவனாகிய ஞானசம்பந்தன் ஞாலம் நலத்தில் மிகுந்து விளங்குமாறு சொன்ன இத் திருப்பதிகத்தை ஓதவல்லவர் வானுலகத்தைச் சென்றடைந்து மகிழ்வர்.

52. திருநெடுங்களம்

தல விளக்கம்: காவிரி தென் கரைத்தலம் அகத்தியர் வழிபட்டது.

Koviloor Digital Library

சுவாமி : நெடுங்களநாதர், நித்திய சுந்தரேஸ்வரர்

அம்பிகை : மங்களநாயகி, ஒப்பிலாநாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : சுந்தர தீர்த்தம், அகத்திய தீர்த்தம்

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

559. மறையுடையாய் தோல் உடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
என்று உனைப்பே சின்அல்லால்
குறையுடையார் குற்றம் ஓராய்
கொள்கையினால் உயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே.

தெளிவுரை: நெடுங்களம் என்னும் பதியில் விளங்கும் பெருமானே! உன்னதமாகப் போற்றப்படும் வேதத்தை உடையவராகிய நீவிர் தோலை உடையாகக் கொண்டவர், நீண்ட அழகிய சடையின்மேல் வளர்ந்து ஒளிரும் பிறைச் சந்திரனையும் கொண்டுள்ளீர். பிஞ்ஞகனே! என்று உம்மைப் பேசிப் புகழ்வதையன்றி யாம் வேறு ஆற்றுவது ஒன்றும் இல்லை. குறைகளை உடையவர்களாயினும், அவர்கள் புரிந்த குற்றங்களைக் கருதாது, உயர்ந்து விளங்கும் கருணைத் திறத்தால் அருள் புரிபவராகிய நீவிர், உம்மை வணங்கிப் போற்றும் கொள்கையால் நிறையுடையவராக விளங்கும் அடியவர்களின் இடரைக் களைந்து அருள்புரிவீராக.

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசன், அடியவர்தம் குறைகளை எண்ணிப் புறம் தள்ளாது, ஏற்று அருள் புரியும் மாண்பு உணர்த்தப்பட்டது. இதனைச் "சீயேதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டு அருளும் தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்றும்; "வெறுப்பனவே செய்யும் சிறுமையை நின் பெருமையினால் பொறுப்பவனே'' என்றும், மாணிக்கவாசகர் அருளியவாறும் நோக்குக.

560. கனைத்துஎழுந்த வெண்திரைசூழ்
கடலிடை நஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த
திருந்திய தே வநின்னை
மனத்தகத் தோர் பாடல்ஆடல்
பேணிஇராப் பகலும்
நினைத் தெழுவார் இடர்களையாய்
நெடுங்கள மே யவனே.

தெளிவுரை: ஆரவாரித்து எழும் வெண்மையான நுரைகளையுடைய அலைகள் கொண்ட கடலில் தோன்றிய நஞ்சினைத் தினைத்தனையாகக் குறைவு படுத்திக் கண்டத்தில் இருத்திக்கொண்ட தேவனே! நெடுங்களத்தில் விளங்கும் பெருமானே! நின்னை மனத்தால் நினைந்து, பாடிப் பக்திப் பரவசம் கொண்டு, ஆடிப் பணியும் அடியவர்களின் இடரைக் களைவீராக.

சிறப்புரை: அடர்த்துப் பெருகிய நஞ்சானது ஈசன் திருமுன்னர் தினையளவாய்ச் சிறுத்து வலிமை இழந்தது என உணர்த்தப்பட்டது. பகற்பொழுதில் ஈசனை நினைத்து ஆற்றும் செயலும், இரவில் உறக்கத்திலும், அந்தராத்மா உறங்காது ஈசனைத்

Koviloor Digital Library

தியானித்துக் கொண்டு இருத்தலும் புகலுமாறு, இராப்பகலும் பேணித் தொழும் மாண்பு உரைக்கப் பட்டது.

கனைத்து – ஒலித்து, ஆரவாரித்து.

561. நின்னடியே வழிபடுவான்
நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரை வவ்வேல்
என்று அடற் கூற்று உதைத்த
பொன்னடியே பரவி நாளும்
பூ வொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்கள மே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் விளங்கும் பெருமானே! நின்னடியையே வணங்கிப் போற்றும் மார்க்கண் டேயரின் உயிரைக் கவரச்சென்ற கூற்றுவனை, என்னுடைய அடியவன் அவன்; அவன் உயிரைக் கொண்டு செல்லற்க! என்று தெளிவித்து, அடர்த்து, உதைத்த திருவடியைப் பரவி, நாள்தோறும் பூவும் நீரும் சுமந்து போற்றும் அடியவர்களின் இடரைக் களைவீராக.

சிறப்புரை: அடியவர்கள் பூக்களைச் சுமந்து தொண் டாற்றுதல் இங்கு உணர்த்தப்படுகிறது. "பூ நாளும் தலை சுமப்ப" என்றும், "பூவார் மலர்கொண்டு அடியார் தொழுவார்" என்றும், அடியவர்கள் ஆற்றும் தொண்டு வலியுறுத்தப்படுதல் காண்க. அருச்சனைக்குப் பூக்களும், அபிடேகத்திற்கு நன்னீரும் அடியவர்கள் சுமந்து செல்லுதல் உணர்த்தப்படுகிறது.

அடற்கூற்று – போர்க்குணம் உடைய கூற்றுவன் – காலன்.

Koviloor Digital Library

562. மலைபுரிந்த மன்னவன்றன்
மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்
அலை புரிந்த கங்கை தங்கும்
அவிர்சடையா ரூரா
தலை புரிந்த பலிமகிழ்வாய்
தலைவ நின்தாள் நிழல்கீழ்
நிலை புரிந்தார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் ஈசனே! மலையரசன் மகளாகிய பார்வதியை ஒரு பாகத்தில் கொண்டு மகிழ்ந்து, கங்கையைச் சடை முடியில் தங்குமாறு செய்தவனே! பிரம கபாலம் ஏற்று ஊர்தொறும் பலி கொண்டவனே! தலைவனாக விளங்குபவனே! நின் திருவடியைத் தியானம் செய்யும் அடியவர்களின் இடரைக் களைவீராக.

563. பாங்கின் நல்லார் படிமம் செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கி நல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கித்
தாங்கி நில்லா அன்பினோடும்
தலைவ நின்தாள் நிழற்கீழ்
நீங்கி நில்லார் இடர்களையாய்
நெடுங்கள மே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் ஈசனே! நற்பண்பின் மிக்க நின் பக்தர்கள் விரதம் பூண்டு நோற்க, பூத கணங்கள் நின்பால் அடைக்கலமாகி ஒன்றிப் பொருந்தி நன்மையானவற்றைத் தரவல்ல தோத்திரப் பாடல்களைப் பாடி, யாவராலும் தொழப்படும் நின் திருக்கழலை வணங்குகின்றன. அளவற்ற அன்பு செய்து பெருக்கெடுத்தோடும் தன்மையில் நின் திருவடி

Koviloor Digital Library

நிழலில் அல்லாது வேறு கதி அறியாதவர்களின் இடரைக் களைவீராக.

சிறப்புரை: "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்! ஆர்வலர் புன்கண்ணீர் பூசல்தரும்" என்பதனைத் தமிழ் மறை தாங்கி நில்லா அன்பினோடும் என உணர்த்தப் படுவது காண்க. "மூசு வண்டறைப் பொய்கையும் போன்றது ஈசன் எந்தை இணையடி நீழலே" என திருநாவுக்கரசர் குறிப்பிடுவது போன்று, ஈசன் திருவடியை நீங்காது நிற்கும் பெருமையும் வள்ளன்மை யும் உணர்ந்த பின்பு. அடியவர்கள் ஈசன் இணையடி நிழலை நீங்கார் என்னும் நெடும் பண்பு தோன்ற "நீங்கி நில்லார்" என உணர்த்தப்பட்டது.

படிமம் – விரதம்.

564. விருத்தனாகிப் பாலனாகி
வேதம் ஓர் நான்கு உணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ்சடைமேல் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவன்
அடி இணையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய்
நெடுங்களமே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! வயது முதிர்ந்த கோலத்திலும், இளமையான கோலத்திலும் தோன்றிக் காட்சி நல்கி, நான்கு வேதங்கள் உணரும் கருத்தனாகிக் கங்கையைச் சடையில் ஏற்று, யாவற்றுக்கும் பொருளாக விளங்கும் ஆதி தேவனே! நின்னை ஆனந்தத்தால் ஆடிப்பாடிப் போற்றும் அடியவரின் இடரைக் களைவீராக.

Koviloor Digital Library

அருத்தன் – பொருளாக விளங்குபவன்; நிருத்தர்கீதர் – பக்திப் பெருக்கால் தன்னை மறந்து ஆடுபவர், பாடுபவர்.

565. கூறு கொண்டாய் மூன்றும் ஒன்றாக்
கூட்டியோர் வெங் கணையால்
மாறு கொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறு கொண்டாய் சாந்தம் ஈதென்று
எம்பெருமான் அணிந்த
நீறு கொண்டார் இடர்களையாய்
நெடுங்கள மே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! உமா தேவியை ஒரு பாகத்தில் கூறாகக் கொண்டாய்! நெருப்பு, காற்று, திருமால் ஆகிய மூன்றும் இணைத்து ஓர் அம்பு ஆக்கி, அதனைச் செலுத்தி முப்புரங்களை எரியுண்ணச் செய்தாய்! இடபத்தைக் கொடியாகக் கொண்டாய்! திருவெண்ணீறு ஒன்றே சாந்தம் தருவது என்னும் கொள்கையில், எம்பெருமான் அணிந்து பெருமையைப் புகல, அதனைச் செல்வமாகக் கொண்டு தரிக்கும் அடியவர்களின் இடரைக் களைவீராக.

சிறப்புரை: அம்பின் வல்லமையைக் காட்டும் பாங்கில் அக்கினி, வாயு (காற்று), திருமால் ஆகிய மூன்று சக்திகளும் பொருந்தி நிற்குமாறு செலுத்திய பாங்கு, மூன்றும் ஒன்றாக் கூட்டி என உணர்த்தப்பட்டது. இக் கருத்து பாடல் வ. எண். 113 (பதிக எண் 11)இல் குறிக்கப் படுவதும் காண்க.

வெந்துயர் தீர்ப்பது நீறு, பரவ இனியது நீறு, பெருமை கொடுப்பது நீறு, அவலம் அறுப்பது நீறு, பாக்கியமாவது நீறு, கருத இனியது நீறு எனத்

Koviloor Digital Library

திருநீற்றின் பெருமையை ஞானசம்பந்தர் உரைத்தலை ஒண்பொருளாகக் கொண்டு சாந்தம் இது என்று நீறு கொண்ட அடியார்களின் சிறப்பும் இங்கு உணர்த்தப் பட்டது.

566. குன்றின் உச்சி மேல் விளங்கும்
கொடிமதில்சூழ் இலங்கை
அன்றி நின்ற அரக்கர்கோனை
அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால்
ஏத்தி இராப் பகலும்
நின்று நைவார் இடர்களையாய்
நெடுங்கள மேயவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! குன்றின் உச்சியில் விளங்கும் கொடியும் மதிலும் சூழ் இலங்கையின் அரக்கர் கோனாகிய இராவணன் மாறுபட்டு நின்று, மலையைப் பெயர்த்து எடுத்தபோது அவனை அடர்த்து வலிமையை இழக்கச் செய்தவனே! நின் பெருமைகளாக இச் செயலுடன் மற்றும் பிறவும் உரைத்துப் போற்றி மனங்கசிந்து உருகும் அடியவர் களின் இடரைக் களைவீராக.

குறிப்பு: ஒரு காலத்தில், வாயு தேவனுக்கும் ஆதி சேடனுக்கும் வலிமையில் மிக்கவர் யார் என அறியும் போட்டி ஏற்பட்டது. அப்போது மேரு மலையை ஆதிசேடன் தனது பரந்து விரிந்த தலைகளால் மறைத்து மூடிக்கொண்டான். வாயு தேவன், கடுமையான காற்றை வீசியும் ஏதும் செய்ய முடிய வில்லை. தேவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆதி சேடனின் ஆற்றலுக்கு இணை இல்லை என மொழிந்து போட்டியை நிறுத்துமாறு வேண்டினர். ஆயிரம்

Koviloor Digital Library

தலைகளையுடைய ஆதிசேஷன் ஒரு தலையின் ஒரு பகுதியைச் சற்று உயர்த்திப் பார்க்க, அக்கால அளவில் மூன்று சிகரங்கள் மேரு மலையிலிருந்து, வாயு தேவன் வீசிய காற்றினால் பறந்து சென்றன. அவற்றுள் இரு கூறுகள் பாரதத்திலும் ஒரு கூறு இலங்கையிலும் சென்று விழுந்தது. இலங்கையில் விழுந்த இச் சிகரத்தின் சிறப்புத் தோன்ற குன்றின் உச்சி என உணர்த்தப்பட்டது.

அன்றி – வேறுபட்டு; நைவார் – பக்திப் பெருக்கினால் கசிந்து உருகுபவர்.

567. வேழ வெண்கொம்பு ஒசித்த மாலும்
விளங்கிய நான் முகனும்
சூழ எங்கு நேடஆங் கோர்
சோதியுள் ஆகி நின்றாய்
கேழல் வெண் கொம்பு அணிந்த பெம்மான்
கேடிலாப் பொன் னடியின்
நீழல் வாழ்வார் இடர்களையார்
நெடுங்களமே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! கம்சனுடைய பட்டத்து யானையின் கொம்பினை ஒடித்த திருமாலும், விளங்கும் புகழ்மிகு பிரமனும் எல்லா இடங்களிலும் சூழ்ந்து தேடச் சோதி வடிவாக மேவிய பொருளே! பன்றியின் கொம்பினை வீரம் செறிய அணிந்துள்ள பெருமானே! கெடுதல் இல்லாப் பொன்னடிகளையுடைய நின் நிழற்கண் வாழ்பவர்களின் இடரைக் களைவீராக.

சிறப்புரை: ஈசனார் திருவடியால் தீண்டப் பெற்ற அனைத்தும் உய்யப் பெற்ற மாண்பு நோக்கி கேடிலாப் பொன்னடி என உணர்த்தப்பட்டது.

நேட – தேட; கேழல் – பன்றி; கேடுஇலா – கெடுதல் இல்லாத.

Koviloor Digital Library

568. வெஞ்சொல் தம்சொல் ஆக்கிநின்ற
வேடமிலாச் சமணும்
தஞ்சம் இல்லாச் சாக்கியரும்
தத்துவம் ஒன்று அறியார்
துஞ்சல்இல்லா வாய்மொழியால்
தோத்திர நின் னடியே
நெஞ்சில் வைப்பார் இடர் களையாய்
நெடுங்கள மே யவனே.

தெளிவுரை: நெடுங்களத்தில் மேவும் பெருமானே! கொடிய சொற்களைக் கூறும் சமணரும் நின்னைத் தஞ்சம் அடையாத சாக்கியரும் உண்மையின் தத்துவத்தை அறியாதவர்கள். அழிதல் இல்லாத வேதத்தாலும் தோத்திரங்களாலும் நின்னையே சரணாக அடைந்து நினைத்து வாழ்பவர்களின் இடரைக் களைவீராக.

துஞ்சல் – அழிதல், கெடுதல்; வாய்மொழி – வேதம்; தோத்திரம் – துதிப்பாடல்கள்.

569. நீடவல்ல வார்சடையான்
மேய நெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகில்
சிரபுரக் கோ நலத்தால்
நாடவல்ல பனுவல் மாலை
ஞானசம் பந் தன்சொன்ன
பாடல் பத்தும் பாடவல்லார்
பாவம்ப றையுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நீண்ட சடையையுடைய ஈசன் மேவிய நெடுங்களத்தைச் சிறப்பின் மிக்க பெருமக்கள் வாழும் சிரபுரத்தின் கோவாகிய ஞானசம்பந்தன், நலங்கள்

Koviloor Digital Library

நாடப் பாடிய இத் திருப்பதிகத்தைப் பாடுபவர்கள் பாவமற்றவராவர்.

சிறப்புரை: பனுவல் மாலை, பாடல் பத்தும் எனப் போற்றி இயம்புவது, சிறப்பின் மாட்சிமையை உணர்த்துவதாகும். "இடரைக் களையும் எந்தாய் போற்றி" என்று மணிவாசகர் உரைத்தலும் உணரற் பாலது. இதனை இடர் களையாய் எனும் தொடரோடு உணர்தல் நன்று.

சேடர் – பெருமக்கள்.

53. திருமுதுகுன்றம்

தல விளக்கம்: *பதிக எண் 12 காண்க.*

பண் : *பழந்தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

570. தேவராயும் அசுரராயும்
சித்தர் செழு மறைசேர்
நாவராயு நண்ணுபாரும்
விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமல ரோன்
செங்கண் மால்ஈசன் என்னும்
மூவராய முதல் ஒருவன்
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: தேவர், அசுரர், சித்தர், வேதம் ஓதும் அந்தணர், நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என ஐந்தும் பிரமன், திருமால், ஈசன் என மும்மூர்த்தி களாயும் விளங்கும் முழு முதல் கடவுளாகும் ஒருவன் விளங்கி இருப்பது முதுகுன்றம் என்னும் பதி.

Koviloor Digital Library

571. பற்றுமாகி வானுளோர்க்குப்
பல்கதிரோன் மதிபார்
எற்று நீர் தீக் காலுமேலை
விண்ணியமா னனோடு
மற்று மாதோர் பல்லுயிராய்
மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான்
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: வானவர்களுக்குப் பற்றாக இருப்பவன் ஈசன். வானவர்கள் பற்றிப் போற்றும் பரம் பொருளும் அவன். சூரியன், சந்திரன், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இயமானன் (புருடன்) என ஆகிப் பல உயிர்களும் ஆகித் திருமால், பிரமன், வேதங்கள் என ஆகி, இவை அனைத்தும் சேர்ந்த முற்றும் ஆகி, வேறாகவும் திகழும் முழு முதலான பரமன் விளங்குவது முதுகுன்றம்.

572. வாரிமாகம் வைகுதிங்கள்
வாளரவம் சூடி
நாரிபாக நயந்துபூமேல்
நான்முகன்றன் தலையில்
சீரிதாகப் பலிகொள்செல்வன்
செற்றலும் தோன் றியதோர்
மூரி நாகத்து உரிவைபோர்த்தான்
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: கங்கை, வானத்தில் இருக்கும் சந்திரன், ஒளிமிக்க அரவம், இவற்றைச் சூடி, உமா தேவியை ஒரு பாகத்தில் விரும்பித் தாமரை மலரில் விளங்கும் நான்முகனுடைய சிரத்தை ஓடாகக் கரத்தில் ஏந்திப் பிச்சை யேற்ற செல்வனாகிய ஈசன், வலிமையான

Koviloor Digital Library

யானையின் தோலை உரித்துப் போர்த்தியவன். அவன் மேவி இருப்பது முதுகுன்றம்.

வாரி – கங்கை; மாகம் – ஆகாயம்; நாரி – உமை; மூரி – வலிமை; நாகம் – யானை.

573. பாடுவாருக்கு அருளும் எந்தை
பனிமுதுபௌ வமுந்நீர்
நீடு பாரு முழுதும் ஓடி
அண்டர் நிலை கெடலும்
நாடுதானும் ஊடும் ஓடி
ஞாலமு நான் முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத்து
உயர்ந்தது மு துகுன்றே.

தெளிவுரை: *தன்னைப் போற்றித் துதிப்பவர்களுக்கு அருள் புரிபவன், எந்தையாகிய பரமன். கடல் நீரானது பெருகி, உலகம் முழுவதும் பரவி, தேவர்கள் நிலையும் கெடுமாறு சூழும் பிரளய காலத்திலும் உயர்ந்து அழியாமல் இருக்கும் முதுகுன்றில், அப்பெருமான் விளங்கி இருப்பவர்.*

பௌவம் – கடல்.

574. வழங்கு திங்கள் வன்னிமத்த
மாசுணமீ தணவிச்
செழுங் கல்வேந்தன் செல்விகாணத்
தேவர்திசை வணங்கத்
தழங்கு மொந்தை தக்கைமிக்க
பேய்க்கணம் பூ தம்சூழ
முழங்கு செந்தீ ஏந்தியாடி
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: *கலைகளை வழங்கும் அமுத தாரைகள் கொண்ட சந்திரனும், வன்னி, ஊமத்த மலர், பாம்பு*

Koviloor Digital Library

இவற்றையும் கலந்து பொருந்த வைத்து, மலையரசன் மகளாகிய உமாதேவி கண்டு மகிழவும், தேவர்கள் தொழுது வணங்கவும், மொந்தை, தக்கை ஆகிய கருவிகள் ஒலிக்கப் பூதகணங்களும் பேய்க் கணங்களும் சூழ, நெருப்பைக் கரத்தில் ஏந்தி நடனம் புரியும் ஈசன், விளங்குவது முதுகுன்றம்.

மாசுணம் – பாம்பு; அணவி – கலந்து இருக்குமாறு செய்து; செழுங்கல் வேந்தன் – மலையரசன், பர்வதன்; செல்வி – பார்வதி, உமாதேவி.

575. சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள்
தொல்லரா நல் லிதழி
சழிந்த சென்னிச் சைவ வேடம்
தாளிணைத்து ஐம் புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு
அறம் பொருள்இன் பம்வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: சுழிகளை உடைய கங்கையும், தொய்ந்து சிதைந்த சந்திரனும், இயல்பான விடத்தைத் தன்னகத்தே உடைய தொன்மையான அரவத்தையும், நல்ல மணம் கமழும் கொன்றை மலரையும் நெருக்கமாகக் கலந்து பொருந்துமாறு சென்னியில் வைத்தவன் ஈசன். சனகாதி முனிவர்கள், சைவத் திருக் கோலம் பூண்டவர்களாய், கால்களைப் பத்மா சனத்தின் பாங்கில் பொருத்தி ஐம்புலன்களை அடக்கித் திரியும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, ஒருமுகப் படுத்தி இருக்க, அவர்களுக்கு அறம் பொருள் இன்பம் வீடு எனும் பொருள்களை உணர்த்தியவனாகிய முக் கண்ணுடைய ஆதி முதல்வன், மேவி இருப்பது முதுகுன்றம்.

Koviloor Digital Library

கழிந்த – நீர்ச்சுழி; தோய்ந்து – தொய்ந்து, தளர்ந்து; சழிந்த – நெருங்கிய; தொல்அரா – பாம்பு; தொல் – இயல்பு, தொன்மை, பழைமை; மொழிந்தவாயான் – பொருந்த உணர்த்திய வழியான்.

576. மயங்குமாயம் வல்லராகி
வானினொடு நீரும்
இயங்குவோருக்கு இறைவனாய
இராவணன் தோள் நெரித்த
புயங்கராக மாநடத்தன்
புணர்முலை மாது உமையாள்
முயங்கு மார்பன் முனிவர் ஏத்த
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: மயக்கத்தை உண்டாக்கும் மாயையில் வல்லவர்களாய், ஆகாயத்திலும் நீரிலும் இயங்கும் அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணனுடைய தோளைப் புயங்க நடனத்தின் வாயிலாக நெரித்து, உமா தேவியோடு விளங்கும் ஈசன், முனிவர் பெருமக்கள் போற்றித் துதிக்க விளங்குவது முதுகுன்றம்.

சிறப்புரை: நிலவுலகின்கண் மேவும் ஒழுக்க நெறியில் பொருந்தி நிற்காது, மாயை நெறியில் நிற்கும் அரக்கர்கள் என்பதை "வானினொடு நீரும் இயங்குவோர்" என்பது உணர்த்திற்று. புயவலிமையால் அடர்த்த இராவணனது செருக்கினைப் புயங்க நடனத்தால், ஈசன் அடக்கினார் என்பதும் உணர்த்தப் பெற்றது.

577. ஞாலம் உண்ட மாலுமற்றை
நான்முகனும் மறியாக்
கோலம் அண்டர் சிந்தை கொள்ளார்
ஆயினும்கொய் மலரால்

Koviloor Digital Library

ஏல இண்டை கட்டி நாமம்
இசைய எப்போ தும்ஏத்தும்
மூலமுண்ட நீற்றர் வாயான்
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: உலகத்தை உண்டு பாதுகாத்து வெளியே உமிழ்ந்த திருமாலும், மற்றும் பிரமனும் தேடியும் அவர்களுக்குப் புலப்படாதவாறு ஈசன் இருந்தனர். ஆயினும், அடியவர்கள், கொய்த நறுமணம் கமழும் தாமரை மலர்களால் மாலை தொடுத்துத் திருவைந் தெழுத்து ஓதி மனம் பொருந்துமாறு ஏத்தித் திருநீறு தரித்தவர்தம் திருவாயிலிருந்து எழும் மந்திர வடிவாக விளங்குபவன் பரமன். அப் பெருமான் மேவி விளங்குவது முதுகுன்றம்.

சிறப்புரை: தேகமானது, தோன்றிய காலத்திலேயே மலம் பொருந்தி மூலப் பொருளாக இருத்தலும், அதனைத் திருவைந்தெழுத்து ஓதியும், திருவெண் ணீற்றை இசையப் பூசியும் தரித்தும் விளங்க, அம் மலத்தின் வன்மை கெடுதலும் தோன்ற, 'மூலம் உண்ட நீற்றர்' என, அடியார் பெருமக்களின் சிறப்பு உணர்த்தப் பெற்றது.

மூலப் பொருளாக விளங்கி மலத்தை நீக்கும் திருநீற்றை நெற்றியில் (முண்டம் - நெற்றி) தரித்த அடியவர்களின் பெருமை உணர்த்தப் பெற்றது எனலும் பொருந்தும்.

மறியா – அறியா. சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது

578. உறிகொள் கையர் சீவரத்தர்
உண்டு உழல்மிண் டர்சொல்லை
நெறிகள் என்ன நினைவுறாதே
நித்தலும் கை தொழுமின்

Koviloor Digital Library

மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப்
பொங்குவிடத் தையுண்ட
முறிகொள் மேனி மங்கைபங்கன்
மேயது மு துகுன்றே.

தெளிவுரை: குண்டிகையைக் கையில் கொண்ட வராயும், காவியுடையை உடையவராகவும், உடல் வன்மைய ராயும் உடையவர்கள் சொல்லை நன்னெறி பயப்பனவாகக் கொள்ளாது, ஈசனை நாள்தோறும் தொழுது போற்றுமின். மரக்கலம் செலுத்தப்படும் கடலில் தோன்றிய நஞ்சை உண்ட தளிர் . போன்ற திருமேனியுடைய உமாதேவியைப் பாகமாகக் கொண்டவனும், மானை ஏந்தும் கரத்தை உடையவனும் ஆகிய அப்பெருமான் மேவி இருப்பது முதுகுன்றம்.

உறி – குண்டிகை, தூக்கு; மறி – மான்; முறி – தளிர்.

579. மொய்த்து வானோர் பல்கணங்கள்
வணங்குமு துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமை என்னும்
பிரமபுரத் தலைவன்
. . . .

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வானோர்கள் மற்றும் பல கணத்தவர்களும் வணங்கும் பெருமை மிக்கது முதுகுன்றம். பித்தர் போன்று சிவபோதம் வயப்படும் திருக்கோலம் பெருமையைத் தர வல்லது. (இறுதி இரு வரிகள் கிடைக்கவில்லை.)

Koviloor Digital Library

54. திருவோத்தூர்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். திருவத்தூர், திருவத்திபுரம், செய்யாறு என வழங்கப்படுகிறது. இறைவன், தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தின் பொருளை உபதேசித்த தலம்.

தொண்டைமான் என்னும் அரசனுக்குத் துணையாய் நின்று எதிரிகளை அழித்துப் போரில் வெற்றி கொள்ளச் செய்து அரசாட்சியும் பெறச் செய்த திருத்தலம். அடியவர் ஒருவர் திருக்கோயிலுக்குப் பனைமரங்களை வைத்து அவற்றின் வாயிலாகப் பெறும் வருவாயில் திருக்கோயில் பணிக்கு அர்ப்பணித்திருந்தார். அப் பனைமரங்கள் யாவும் ஆண் பனைகளாய் இருந்தன. அடியார்களின் வேண்டு கோளுக்கு இரங்கி திருஞானசம்பந்தர் திருப்பதிகம் அருளிச் செய்து, அப்பனை மரங்களைப் பெண் பனை மரங்களாக்கிக் குலைகளைத் தருமாறு புரிந்தார்.

சுவாமி : வேதபுரீஸ்வரர்

அம்பிகை : பாலகுசலாம்பிகை

தல மரம் : பனை

தீர்த்தம் : வேத தீர்த்தம் (சேயாறு)

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

580. பூத்தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய ஒளிமழு வாள்அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே.

Koviloor Digital Library

தெளிவுரை: பூசைக்கு ஏற்ற மலர்களைத் தேர்ந்து அதனைக் கொண்டு உம்முடைய பொன் போன்ற திருவடியைப் போற்றி வணங்காதவர் யாண்டும் இல்லை. ஒளிமிக்க கூர்மையான மழுப் படையை, அழகிய கரத்தில் ஏந்தி, ஓத்தூரில் விளங்கி நடம் புரியும் கூத்தப் பெருமானே! உமது அருள் குணத்தை நினைக்குந்தோறும் மனம் மகிழும்.

581. இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மான்உரி
உடையீ ரேஉம்மை ஏத்ததும் ஓத்தூர்ச்
சடையீ ரேஉம் தாளே.

தெளிவுரை: உமாதேவியை உடனாகக் கொண்டு, புள்ளிமான் தோலை உடையாகத் தரித்து, விளங்கும் சடையை உடையவரே! ஓத்தூரில் உமது திருவடியை ஏத்துதும்.

582. உள்வேர் போல நொடிமையி னார்திறம்
கொள்வீர் அல்குல்ஓர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி ஓத்தூர்க்
கள்வீ ரேஉம காதலே.

தெளிவுரை: அடிவேரைப் போன்று நெஞ்சில் பழிப்புடையவர்களின் திறனையும் அறியக் கூடியவர், அரையில் கோவணம் கொண்டு, வாழைக் கனியில் தேன் சொரியும் ஓத்தூரில் விளங்கும் ஈசர், கள்ளர்க்குக் கள்ளர் ஆதலை வியந்தவாறு.

583. தோட்டீ ரேதுத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீ ரேஅடி யார்வினை
ஓட்டீ ரேஉம்மை ஏத்துதும் ஓத்தூர்
நாட்டீ ரேஅருள் நல்குமே.

Koviloor Digital Library

தெளிவுரை: கட்டழகு உடையவரே! படம் கொண்ட ஐந்து தலை நாகத்தை ஆட்டுவிப்பவரே! அடியவர்களுடைய வினைகளை ஓட்டுவிப்பவரே! ஓத்தூர் என்னும் நகரில் விளங்குபவரே! உம்மை ஏத்துதும்! அருள் நல்குவீராக!

தோட்டீர் – தோடு அணிந்தவர் எனலும் ஆகும்; தோட்டி – கட்டழகு.

584. குழையார் காதீர் கொடுமழு வாள்படை
உழைஆள் வீர்திரு ஒத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின்று ஆடுவார்
அழையா மேஅருள் நல்குமே.

தெளிவுரை: குழையை ஆபரணமாக உடைய செவியை உடையீர்! கொடுமையான மழு வெனும் கூர்மையான வாள்படையும் பக்கத்தில் கொண்டு இருப்பீர்! திருவோத்தூரில் விளங்கி அருளாட்சி புரிவீர்! குற்றங்கள் இன்றி உம்மைப் போற்றிப் பாடும் பெருமக்களுக்கும், பக்திப் பெருக்கால் மனங்கசிந்து உருகித் தம் நிலை மறந்து ஆடும் பேரன்பர்களுக்கும், அவர்கள் அழைக்காமலே அவர்களுக்கு முன்னின்று அருள் புரிவீராக.

சிறப்புரை: இரு கந்தருவர்களைக் காதில் வெண் குழையாக உடையவராய், இசை நயந்து விளங்குவதும் திருக்கரத்தில் மழுவாள் படையைக் கொண்டுள்ளதும் ஈசனார் மென்மையும், அடியவர்களைக் காக்கும் திறமும் உடையவர் என்பதை உணர்த்தும்.

இசை நயந்த ஈசன் இசையால் போற்றும் அடியவர்களுக்கு அழையாமலே அருள் புரியும் பாங்கும் சுட்டப்பெற்றது. அருள் நல்குமே எனும்

Koviloor Digital Library

விண்ணப்பம் "அருள் நல்கும்" எனும் தேற்றப் பொருளும் தரும்.

உழை – பக்கம்.

585. மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீர்என்று
உட்கா தார்உள ரோதிரு ஒத்தூர்
நக்கீ ரேஅருள் நல்குமே.

தெளிவுரை: *திருஓத்தூரில் மேவி மகிழ்ந்திருக்கும் பெருமானே! நீவிர், பிரம கபாலம் ஏந்திப் பலியேற்ற காலத்தில், நும் அடியவர்கள் அச்ச உணர்வைப் பெறாதவர்களாய் உளரோ! அருள் நல்குவீராக!*

586. தாதுஆர் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்து
ஓதா தார்உள ரோதிரு ஒத்தூர்
ஆதீரே அருள் நல்குமே.

தெளிவுரை: *மகரந்தத் தாதுகள் கொண்ட கொன்றை மலரை ஒளியுடைய முடியில் சூடிய நாதனே என்று நும்மைப் புகழ்ந்து போற்றாதவர்களும் உளரோ! திருவோத்தூரில் விளங்கும் ஆதிப் பொருளே, அருள் நல்குவீராக!*

தாது – மகரந்தம், தேன்; தயங்கு – ஒளி.

587. என்றான் இம்மலை என்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவன் ஒத்தூர்
என்றார் மேல்வினை ஏகுமே.

தெளிவுரை: *கயிலை மலையை எளிமையாகவும், தன் ஆற்றலுக்குக் குறைந்ததாகவும் கருதிய இராவணனை*

Koviloor Digital Library

விரலால் வென்றவர் பரமன். இறைவன் திருவடியை ஒன்றி வணங்காத மூன்று அசுரர்களையும், கோட்டை மதில்களையும் எய்தவன் விளங்குவது ஓத்தூர் என்று மொழிந்தவர்பால் மேவிய வினை தீரும்.

என்றான் – என்னதான், இம்மலை என மொழியும் இகழ்வு.

588. நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலும் திசையெலாம்
ஒன்றாய் ஒள்ளெரி யாய்மிக ஓத்தூர்
நின்றீ ரேஉமை நேடியே.

தெளிவுரை: ஓத்தூரின்கண் ஒருங்கு திரண்ட சோதி வடிவாக நின்று விளங்கிய உம்மைத் தேடி, நான் மறையாளனாகிய பிரமனும், திருமாலும் திசை யெலாம் சென்றார் போலும்! நான்முகனும், திருமாலும் திசையெலாம் சென்று தேடியும் காண்கிலர் என்றவாறு.

589. கார்அு மண்கலிங் கத்துவர் ஆடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓர்அும் பால்எயில் எய்தவன் ஓத்தூர்ச்
சீர்அு வன்கழல் சேர்மினே.

தெளிவுரை: சமணர், சாக்கியர்தம் சொற்களைப் பொருட்டாகக் கொள்ளன்மின். ஒரே அம்பைச் செலுத்தி முப்புரம் எரித்தவன் உறையும் ஓத்தூரில் மேவும் பெருமானுடைய சீர்மை மிகும் கழல் பணிந்து மகிழ்வீராக.

590. குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்
அரும்பு கொன்றை அடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: திருவோத்தூரில் ஆண் பனை, காய்களை ஈன்று பெண் பனையாயின. ஆங்கு, கொன்றை மலர் சூடிய அடிகளைப் பெருமை கெழுமிய புகலியின் ஞானசம்பந்தன் போற்றிச் சொல்லிய இத் திருப்பதிகத்தை விரும்பி ஓதுபவர்கள் வினை நீங்கும்.

குரும்பை – பனங்காய்.

55. திருமாற்பேறு

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். திருமால்பூர் என வழங்குகின்றது. இதற்கு ஹரிசக்கரபுரம் என்றும் பெயர். திருமால் ஈசனை வழிபட்டு சுதர்சனம் எனும் சக்கராயுதத்தைப் பெற்றார். சந்திரன் வழிபட்டது.

சுவாமி : மணிகண்டேஸ்வரர்

அம்பிகை : அஞ்சனாட்சி, கருணாம்பிகை

தல மரம் : வில்லம்

தீர்த்தம் : சக்கர தீர்த்தம், பாலாறு

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

591. ஊறி ஆர்தரு நஞ்சினை உண்டுஉமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றியின்
மாறி லாமணி கண்டரே.

தெளிவுரை: கடலில் நன்றாக ஊறிக் கிளம்பிய நஞ்சினை உட்கொண்டு உமாதேவியை ஒரு கூறாகக் கொண்டு திருநீற்றைத் திருமேனியில் திகழப் பூசி யணிந்து, வயல்களில் வளம் பெருக்கும் அழகிய திருமாற்பேற்றில், இவருக்கு ஒப்பாக வேறு யாரையும்

Koviloor Digital Library

கூற முடியாதவாறு தனிப்பெரும் தலைவராக விளங்குபவர் மணிகண்டர். (மணிகண்டர் – திருத் தலத்தில் மேவும் ஈசனார் திருநாமம்).

சிறப்புரை: ஈசனார் செவ்வண்ணத்துடன், பொருந்தும் "உமை நீறுசேர் திருமேனியர்" எனத் தேவியின் நீல வண்ணமும், திருநீற்றின் வெண்மையும் இணைத்து மூவண்ண மேனியராக உணர்த்தப்பட்டது.

தென் – அழகு.

592. தொடைஆர் மாமலர் கொண்டுஇரு போதுஉம்மை
அடைவா ராம்அடி கள்ளென
மடைஆர் நீர்மல்கு மன்னிய மாற்பேறு
உடையீ ரேஉமை உள்கியே.

தெளிவுரை: வயல்களின் மடைகளில் நீர் மல்கும் மாற்பேற்றில் வீற்றிருக்கும் பெருமானே! உம்மை நெஞ்சார நினைத்து, மலர் மாலைகள் கொண்டு அடியவர்கள் இரு வேளைகளிலும் சாற்றி வழிபடுகின்றனர்.

தொடை – மாலை.

593. பைஆ ரும்அர வம்கொடு வாட்டிய
கையான் என்று வணங்குவர்
மைஆர் நஞ்சுண்டு மாற்பேற்று இருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே.

தெளிவுரை: திருமாற்பேற்றில் இருக்கின்ற ஐயனே! படத்தைப் பொருந்திய அரவத்தை ஆட்டும் கரத்தை உடையவன் என்றும் நின்னை நஞ்சு உண்ட பெருமான் என்றும், நின் அடியார்கள் வணங்குவர்.

Koviloor Digital Library

594. சால மாமலர் கொண்டு சரண்என்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே.

தெளிவுரை: நீலகண்டர் என்னும் திருநாமம் தாங்கிய பெருமானே! மாற்பேற்றில் விளங்குபவனே! திருமால் நின்னை வழிபாடு செய்ததைத் தொடர்ந்து, மேலானவர்கள் மிகுதியான சிறந்த மலர்களைக் கொண்டு சரணம் அடைந்து வழிபடுவார்கள்.

சால – மிகுதி.

595. மாறி லாமணி யேஎன்று வானவர்
ஏற வேமிக ஏத்துவர்
கூற னேகுல வும்திரு மாற்பேற்றின்
நீற னேஎன்று நின்னையே.

தெளிவுரை: அன்பு நிலவும் திருமாற்பேற்றின் அங்கமாக உடையவனே என்றும், திருநீற்றினை உடையவனே என்றும், ஒப்புமை இல்லாத சோதியாக ஒளிவிடும் மணியே என்றும், தாம் நற்கதி அடைய வேண்டும் என்றும் வானவர்கள் நின்னை ஏத்தி மகிழ்வார்கள்.

596. உரையா தார்இல்லை ஒன்றுநின் தன்மையைப்
பரவா தார்இல்லை நாள்களும்
திரை ஆர்பாலியின் தென்கரை மாற்பேற்று
அரையா னேஅருள் நல்கிடே.

தெளிவுரை: பாலாற்றின் தென்கரையில் விளங்கும் மாற்பேற்றின் அரசனே! எல்லா நாட்களிலும் அடியவர்கள் நின்னைப் போற்றிப் புகழ்ந்து மனம் ஒன்றி வணங்குகின்றனர். அருள் நல்குக.

Koviloor Digital Library

597. அரசு அளிக்கும் அரக்கன் அவன்றனை
உரைகெ டுத்தவன் ஒல்கிட
வரமி குத்தஎம் மாற்பேற்று அடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே.

தெளிவுரை: இலங்கையின் வேந்தனாகிய இராவணனின் புகழ் கெடுமாறு அவனை விரலால் தண்டித்துப் பின்னர் அவனுக்கு, மனம் அடங்கித் துதி செய்ய வரம் கொடுத்த மாற்பேற்று அடிகளை வணங்கிப் போற்றிடப் பாவம் தீரும்.

598. இருவர் தேவரும் தேடித் திரிந்துஇனி
ஒருவ ரால்அறி வொண்ணிலன்
மருபு நீள்கடில் மாற்பேற்று அடிகளைப்
பரவு வார்வினை பாறுமே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் எங்குத் தேடியும் காண்கிலராய், இனி யாராலும் அறியவொண்ணாதவன் எனத் தெளிவுற்று மாற்பேற்றில் விளங்கும் அடிகளின் திருவடியை மருவி வணங்கினர். அப் பெருமானைப் பரவுபவர் வினை நீங்கும்.

மாறும் – நீங்கும், அழியும்.

599. தூசு போர்த்துஉழல் வார்கையில் துற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேச மல்கிய தென்திரு மாற்பேற்றின்
ஈசன் என்றுஎடுத்து ஏத்துமே.

தெளிவுரை: ஆடையைப் போர்த்தும், உணவைக் கையில் ஏந்தியும், உழலும் நீசர்களாகிய கீழ்மக்களின் சொற்களைக் கொள்ளன்மின். புகழ் மிக்க திருமாற்பேற்றின் ஈசனைப் போற்றித் துதிப்பீராக.

Koviloor Digital Library

("கொள்ளலும்" என்பது கொள்ளலாமோ! என எதிர்மறையாக வியந்தவாறு.)

600. மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னு மாற்பேற்று அடிகளை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்சொல்
பன்ன வே வினை பாறுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருமாலுடன், சந்திரனும் சிறப்பாக வழிபட்ட மாற்பேற்று அடிகளைப் போற்றி ஞான சம்பந்தன் சொன்ன இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் வினை நீங்கப் பெறுவார்கள்.

சோமன் – சந்திரன்; தல வரலாறு உணர்த்தப் பெற்றது.

56. திருப்பாற்றுறை

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலம். திருப்பாலத் துறை என வழங்கப்படுகிறது. மார்க்கண்டேய முனிவர், சூரியன் வழிபட்டது.

சுவாமி : ஆதிமூலேஸ்வரர், திருமூலநாதர்

அம்பிகை : மேகலாம்பிகை, மோகநாயகி, நித்யகல்யாணி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : கொள்ளிடம்

பதிகக் குறிப்பு: இத் திருப்பதிகம் சற்புத்திர மார்க்கத்தி விருந்து மாறுபட்டு நாயக நாயகி பாவனையில் சன்மார்க்க நெறிக்கண் அமைந்தது.

பண் : பழந்தக்க ராகம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

601. காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யாரார் ஆதி முதல்வரே.

தெளிவுரை: உலகத்தவர்கள் நாள்தோறும் வணங்கிப் பரவும் ஆதிமூலநாதராகிய பாற்றுறையார் கார் காலத்தில் விளங்கும் கொன்றை மலரைத் திருமுடியில் தரித்தவர். அவர் அடியவரின் சிறப்பான சிந்தையைத் தம்பால் சென்று பதியுமாறு செய்தவர்.

602. நல்லா ரும்மவர் தீயர் எனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்தலைச் செல்வர்எம் பாற்றுறை
எல்லா ரும்தொழும் ஈசரே.

தெளிவுரை: பற்கள் கொண்ட வெண்மையான தலை யோட்டை (பிரம கபாலம்) உடைய செல்வராகிய எம் பாற்றுறை ஈசர் தேவர், முனிவர், ஞானிகள், சித்தர்கள் முதலான எல்லா சீவர்களும் தொழ வல்லவர். அவர் தீயைக் கரத்தில் ஏந்தியவர். இவர் நல்லவராய் அடியவர்தம் உள்ளத்தில் திகழ்ந்து மகிழ்வினை நல்கிப் பக்திப் பெருக்கால் மொழியப்படும் தோத்திரச் சொல் மலர்களைச் சூடியவர் ஆயினார்.

603. விண்ணார் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணார் வந்துஎன் எழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணா ணாளும் உறைவரே.

தெளிவுரை: வானத்தில் திகழும் சந்திரனை, விளங்கு கின்ற நெற்றியில் சூடிய ஈசன், என்னுடைய

Koviloor Digital Library

எண்ணத்தில் புகுந்து என் எழிலைக் கவர்ந்து செல்லலானார். அவர், வண்டுகள் இசைப் பாடல் களை ஓதும் பாற்றுறையுள் நாள்தோறும் உறைபவரே.

உண்ணாணாளும் – உள் நாள் நாளும் – நாள்தோறும்.

604. பூவும் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லார் எயில்எய்தார்
பாவம் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓ என் சிந்தை ஒருவரே.

தெளிவுரை: பூவும் திங்களும் முடியில் புனைந்த ஈசர், பகைவர்களின் முப்புரங்களை அம்பினால் எய்து அழித்தார். அப்பெருமான், பாவங்கள் தீர்க்கும், தீர்த்த மகிமையுடைய பாற்றுறையில் விளங்குபவர். என் சிந்தை அவர் ஒருவரையே பற்றி நிற்கும். "ஓ" வினா விளி.

ஏ – அம்பு, சரம்.

605. மாகம் தோய்மதி சூடி மகிழ்ந்துஎனது
ஆகம் பொன்னிறம் ஆக்கினார்
பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே.

தெளிவுரை: வானத்தில் தோய்ந்து விளங்கும் சந்திரனைச் சூடி மகிழ்ந்து, எனது உடலைப் பசலை கொள்ளுமாறு பொன் வண்ணம் ஆக்கிய ஈசனார், ஒரு பாகத்தில் பெண்ணை உடையவராய், நாகத்தை அணியாகப் பூண்டவராய்ப் பாற்றுறை மேவிய நலத்தினர்.

சிறப்புரை: பசலை தோன்றப் பொன்னின் தன்மையையும், சிறப்புத் தோன்ற ஒளியையும்

Koviloor Digital Library

செய்தவர் ஈசன் என்னும் குறிப்புத் தோன்றப் பொன்னிறம் ஆக்கினார் என உணர்த்தப்பட்டது.

மாகம் – ஆகாயம், வான்; ஆகம் – உடம்பு, மார்பு; நயவர் – நலத்தினர், அன்பர்.

606. போது பொன்திகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்துஎன் நலங்கொண்டார்
பாதம் தொண்டர் பரவிய பாற்றுறை
வேதம் ஓதும் விகிர்தரே.

தெளிவுரை: பொன் போன்று விளங்குகின்ற கொன்றை மலரை முடியில் புனைந்த நாதர், என் உள்ளத்தைக் கவர்ந்து, எனது மேனியைத் தளர்ச்சியுறுமாறு செய்தார். அவர் பாதத்தைத் திருத்தொண்டர்கள் தொழுது போற்ற, வேதப் பொருளை உணர்த்தும் விகிர்தராய்ப் பாற்றுறையில் விளங்குபவர்.

சிறப்புரை: சிவஞானம் மேலிட்டு நிற்க, தேகத்திற்குரிய உணவு மற்றும் அலங்காரங்கள் தவிர்த்து நின்று ஈசனார்பால் ஒன்றி நிற்றல் "நலங் கொண்டார்" என உணர்த்தப்பட்டது.

போது – மலர். விகிர்தர் – வேறுபாடு உடையவர். அவர்தம் திருஉள்ளத்தில் தோன்றியவாறு புரிபவர்.

607. வாடல் வெண்தலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினார்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆட நாகம் அசைத்தாரே.

தெளிவுரை: ஈசர், மண்டை ஓடுகளை மாலையாகச் சூடி, பெரிய இடபத்தை வாகனமாகக் கொண்டு, வண்டுகள் பண்ணிசைக்கும் பாற்றுறையில் ஆடுகின்ற நாகத்தைப் பூண்டு, என் மனத்தை அசைத்தவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: ''தலைமாலை தலைக்கு அணிந்து தலையாலே பலி தேரும் தலைவன்'' எனத் திருநாவுக்கரசர் வெண் தலை சூடுதலைக் குறித்தவாறும் ஓர்க. "தட மதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில் இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ'' என மால்விடை கொண்டதனை, மாணிக்க வாசகர் உரைப்பதும் உணரத்தக்கது.

மால் – பெருமை. அசைத்தார் – நாகம் அசைதலும், மனம் அசைதலும் சுட்டவல்லது.

608. வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வம் செய்துஎன் எழில்கொண்டார்
பவ்வ நஞ்சடை கண்டர்எம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே.

தெளிவுரை: வெம்மை தரும் நெருப்பை ஒத்த சிவந்த மேனியர்; வெண்மையான திருநீற்றை அணிந்தவர்; கடல் நஞ்சைக் கண்டத்தில் வைத்தவர்; முல்லை சூடிப் பாற்றுறை மேவியவர் ஈசர். அவர் என் உள்ளத்தைக் கவர்ந்து என் எழிலைக் கொண்டவராவர்.

சிறப்புரை: ஈசனை வெவ்வ (வெப்பம்) மேனியர் என்றுரைத்தல், தலைவனைப் பிரிந்து ஆற்றாது தலைவியின் தேகம் உறும் வெப்பத்தை உணர்த்தியது. வெண்மை, நீற்றின் தன்மை தனக்கு நேர்ந்த பசலை குறித்தும்; எழில் கொண்டமை, தன்னை முழுமையாக ஆட்கொள்ளப்பட்டமையும் உணர்த்தப்பட்டது. முல்லை சூடிய அழகராகிய ஈசன் முல்லைத் திணை ஒழுக்கத்திற்குரிய பிரிவுத் துன்பத்தை வெளியில் புலப்படுத்தாத வண்ணம் இருத்தலைச் சுட்டியது.

எவ்வம் – துன்பம்; எழில் கொண்டார் – எழிலைக் கவர்ந்து கொண்டார்; பவ்வம் – பௌவம் – கடல்; மவ்வல் – மௌவல் – முல்லை.

Koviloor Digital Library

609. ஏனம் அன்னமும் ஆனவ ருக்குளரி
ஆன வண்ணத்துஎம் அண்ணலார்
பானல் அம் மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே.

தெளிவுரை: *பன்றியும் அன்னமும் ஆக வடிவம் கொண்டு தேடிய திருமால், பிரமன் ஆகியோருக்குத் தீப்பிழம்பாகத் தோன்றி, காட்சி நல்கிய அண்ணலார், உயர்ந்த வெண்பிறை சூடிய மைந்தராய்ப் பானல் என்னும் மலர்கள் நிறைந்த பாற்றுறையில் விளங்குபவர்.*

பானல் – நீலோற்பலம்.

610. வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்துஎன் நன்னலம் வௌவினார்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாம்ஓர் மணாளரே.

தெளிவுரை: *திருநீறு புனைந்தவர்; சூலப்படை யுடையவர்; மார்பில் முப்புரிநூல் திகழ விளங்குபவர்; பசுமையான மாதவி மலர்கள் சூழும் பாற்றுறையில் மேவும் அழகர். அவரே யான் ஓர்ந்து கொண்ட மணாளர். அவர் என் நெஞ்சுள் புகுந்து என் நலத்தைக் கவர்ந்து கொண்டார்.*

சிறப்புரை: *ஈசன்பால் முற்றும் இழந்த தன்மையும், அப் பெருமான் ஆட்கொண்ட பாங்கும் உணர்த்தப் பட்டது.*

611. பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம் பந்தனது இன்தமிழ்
பத்தும் பாடிப் பரவுமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: பத்தர்கள் விளங்கும் பாற்றுறை மேவிய ஆயிரம் திருநாமம் கொண்ட ஈசனைப் போற்றிப் பக்திப் பெருக்கில் திகழும் ஞானசம்பந்தர் பாடிய இனிய தமிழ் மாலையாகிய இத் திருப்பதிகத்தை, அனைவரும் பாடி, பரமனைத் துதிக்க வேண்டும்.

சிறப்புரை: ஈசன், ஆயிரம் திருநாமங்களை உடையவன் என்பதை "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இலாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என மாணிக்கவாசகர் உரைத்த மாண்பு காண்க. இதனை, "ஆறேறு சடையானை ஆயிரம் பேர் அம்மானை'' எனத் திருநாவுக்கரசர் குறிப்பர்.

57. திருவேற்காடு

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம். வேதம் வழிபட்ட தலம். முருகப் பெருமான் பூசித்தது. அகத்தியருக்கு, இறைவன் திருமணக் காட்சி நல்கிய திருத்தலம். மூர்க்க நாயனார் அவதரித்த தலம்.

சுவாமி : வேதபுரீஸ்வரர், வேற்காட்டு நாதர்

அம்பிகை : பாலாம்பிகை, வேற்கண்ணியம்மை

தல மரம் : வேலமரம்

தீர்த்தம் : வேலாயுத தீர்த்தம்

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

612. ஒள்ளிது உள்ளக் கதிக்காம் இவன்ஒளி
வெள்ளி யான்உறை வேற்காடு

Koviloor Digital Library

உள்ளி யார்உயர்ந் தார்இவ் உலகினில்
தெள்ளி யார்அவர் தேவரே.

தெளிவுரை: உயர்ந்த பொருளை நினைப்பவர்களுக்கு நல்ல கதியைத் தரும் ஈசன், வெள்ளியங்கிரியில் ஒளி வடிவாக உயர்ந்து இருப்பவன். அப்பெருமான் உறைவது வேற்காடு. அவனை நினைந்த பெரியோர்கள் உயர்ந்தார்கள். அன்னோர் உலகில் தெளிந்தவர்கள் ஆவர். அவர்கள் தேவர்கள்.

ஒள்ளிது – உயர்ந்த பொருள்.

613. ஆடல்நாகம் அசைத்து அளவு இல்லதோர்
வேடம் கொண்டவன் வேற்காடு
பாடி யும்பணிந் தார்இவ் உலகினில்
சேடர் ஆகியு செல்வரே.

தெளிவுரை: தானாகவே ஆடும் நாகத்தைத் தன் இச்சைக்கேற்ப அசைத்து, அளவற்ற வடிவங்களைக் கொண்டுள்ளவன் வேற்காட்டில் மேவும் பரமன். இவ் உலகில் அப் பெருமானைப் பாடித் துதித்துப் பணிபவர்கள், பெருமை மிக்க செல்வம் உற்றவர் ஆவர்.

சேடர் – பெருமையாளர், பெரியோர்.

614. பூதம் பாடப் புறங்காட்டு இடைஆடி
வேத வித்தகன் வேற்காடு
போதும் சாந்தும் புகையும் கொடுத்தவர்க்கு
ஏதம் எய்துதல் இல்லையே.

தெளிவுரை: பூத கணங்கள் பாடவும், அதற்கு ஏற்ப இடுகாட்டின் இடையில் ஆடுபவனாகிய ஈசன், வேதத்தில் வல்லவன். அப் பெருமான் வேற்காட்டில்

Koviloor Digital Library

விளங்க. மலரும் சந்தனமும் அகிலும் கொண்டு வழிபடுபவர்களுக்குத் துன்பம் இல்லை.

புறங்காடு – இடுகாடு, சுடுகாடு; போது – மலர்; ஏதம் – துன்பம், குற்றம்.

615. ஆழ்க டல்எனக் கங்கை கரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தால்பணிந்து ஏத்திடப்
பாழ்ப டும்மவர் பாவமே.

தெளிவுரை: நதிகளைத் தன்னகத்தே சேர்த்துக் கொள்ளும் ஆழ்கடலைப் போன்று, கங்கையைத் தன் சடையில் கரந்து கொண்டவன் ஈசன். நீண்டு வீழும் சடையையுடைய அப்பெருமான், வேற்காட்டில் வீற்றிருக்கச் செருக்கு அற்ற மனத்தினராய்ப் பணிந்து ஏத்தும் அடியவர்களின் பாவமானது விலகும்.

தாழ்வுடை மனம் – தன்முனைப்பு இல்லாத மனம்; படும்மவர் – படும் அவர் – சந்தம் நோக்கி மகரம் மிகுந்தது.

616. காட்டி னாலும் அயர்த்திட அக் காலனை
வீட்டி னான்உறை வேற்காடு
பாட்டி னால் பணிந்து ஏத்திட வல்லவர்
ஒட்டி னார்வினை ஒல்லையே.

தெளிவுரை: மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சென்ற காலத்தில், ஈசன் முழு முதல்வன் எனப் புகலும் பாங்கில், பலவாறு செயல்கள் வாயிலாகப் புலப்படுத்தியும் அதனை ஏற்காது, வன்மை நிகழ்த்திய காலனை வீழ்த்தியவனான ஈசன் உறைவது வேற்காடு. ஆங்கு மேவிய அப்பெருமானைத் துதிப் பாடல்களால் பாடிப் பணிந்து வழிபடுபவர்களுடைய வினை விரைவில் விலகும்.

Koviloor Digital Library

சிறப்புரை: மார்க்கண்டேயர், ஈசன் அருளால் தோற்றம் கொண்டவர் என்றும், கால தூதர்கள் போந்தும் நெருங்க முடியாத தன்மை முதலான பல குறிகள் வாயிலாகப் புலப்படுத்தும் செயல்கள், "காட்டி னாலும்" என உணர்த்தப் பெற்றது. ஈசன், தன்னை அடைக்கலம் அடைந்தவர்களைக் காத்தருள் புரிகின்றான் என்ற உண்மையும். இவண் வெளிப் படுத்தப்பட்டது.

617. தோலி னால்உடை மேவவல் லான்சுடர்
வேலி னால்உறை வேற்காடு
நூலி னாற் பணிந்து ஏத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே.

தெளிவுரை: தோலை உடையாகக் கொண்டு சுடர் வேல் பொருந்த உறையும் வேற்காட்டில் மேவும் ஈசனை, வேத. ஆகம விதிகளில் புகன்றவாறு பணிந்து ஏத்திட வல்லவர்களின் மயங்கும் வினை மாயும்.

சிறப்புரை: வேதங்கள் வேல மரங்களாக இருந்து பூசித்ததும், இறைவனது திருத்தல நாமச் சிறப்பாகிய வேற்காட்டு நாதர், அம்பிகை வேற்கண்ணி அம்மை, தல விருட்சம் வேல மரம் ஆகிய சிறப்புக்களும் "சுடர் வேலினால் உறைவேற்காடு" என உணர்த்தப்பெற்றது.

மால் – மயக்கம்; மாலின் ஆர் வினை – மயக்கத்தைத் தரும் வினை.

618. மல்லல் மும்மதில் மாய்தர எய்ததோர்
வில்லி னான்உறை வேற்காடு
சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே.

தெளிவுரை: வலிமை பொருந்திய மூன்று மதில்கள் மாயுமாறு எய்த ஒப்பற்ற மேருமலையை வில்லாகக்

Koviloor Digital Library

கொண்டவன் உறைவது வேற்காடு. அப்பெருமானைக் குறைவில்லாத மனத்தினராய்ப் போற்றித் துதிப்பவர் களும், கண்டு தரிசிப்பவர்களும், அறிவும் தெளிவும் கொண்டு நீடு வாழ்வார்கள்.

மல்லல் – வலிமை; தீர்க்கம் – நீட்சி, அறிவு, தெளிவு, பூரணம்.

619. மூரல் வெண்மதி சூடு முடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடு நினைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே.

தெளிவுரை: இளநகை புரியும் தன்மையில் மெல்லிய கீற்றுடைய வெண்மையான சந்திரனைச் சூடும் முடியுடைய வீரம் பொருந்திய ஈசன், மேவி விளங்கும் வேற்காட்டில் அன்புடன் வழிபாடு செய்பவர்கள் அப்பெருமான் கழலைச் சேர்வது திண்ணம்.

மூரல் – இளநகை – வெண்பிறை அழகு குறித்தது; வாரம் – அன்பு.

620. பரக்கி னார்படு வெண்தலை யில்பலி
விரக்கி னான்உறை வேற்காட்டூர்
அரக்கன் ஆண்மை அடரப்பட் டான்இறை
நெருக்கி னானை நினைமினே.

தெளிவுரை: ஈசன் கபாலம் ஏந்திப் பலி கொண்டார். அப் பெருமான் உறையும் ஊர் வேற்காடு. கயிலையைப் பெயர்த்த இராவணனுடைய ஆண்மை கெடுமாறு அடர்த்து அவன் முன் கைகளைத் துன்புறுத்திய ஈசனை நினைத்துப் போற்றுமின்.

பரக்கினார் – பரப்பு கொண்டு திரிந்த பிரமன்; இறை – முன் கை.

621. மாறி லாமல ரானொடு மாலவன்
வேற லான் உறை வேற்காடு
ஈறி லாமொழி யேமொழி யாஎழில்
கூறி னார்க்கில்லை குற்றமே.

Koviloor Digital Library

தெளிவுரை: மாற்றம் இல்லாத பிரமனும் திருமாலும் காணுதற்கு அரியவனாய், வாகையாய் நின்ற ஈசன் உறைகின்ற வேற்காட்டில், ஈறிலா மொழியாக விளங்கும் தோத்திரங்களை மொழிபவர்களுக்கு எவ்விதமான குற்றங்களும் உண்டாகாது.

சிறப்புரை: தேவி காமாட்சியின் சிவபூசை முடிவு இல்லாதது எனவும், எப்போதும் நிகழ்ந்து கொண்டே இருக்க வல்லதென்பதும், புகலப்படுதலைப் போன்று தோத்திர மொழிகளும் ஈறு இல்லாதது என உணர்த்தப் பட்டது.

வேறல் – வெற்றி, வாகை; வேறலான் – வாகை கொள் ஈசன்; ஈறிலா மொழி – முடிவு கொள்ளாத தோத்திரங்கள்.

622. விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருவேற்காட்டில் ஈசனைக் கண்டு தொழுது திருவடியைப் போற்றி ஞானசம்பந்தர் பாடிய இத் திருப்பதிகத்தை மனத்திற் கொண்டு மகிழ்ந்து பாட எல்லா மேன்மைகளும் விளையும்.

குணம் – மேன்மைகள்.

58. திருக்கர வீரம்

தல விளக்கம்: காவிரி தென்கரைத் தலம். இது கரையபுரம் என வழங்கப்படுகிறது. கௌதமர் பூசித்தது. கரம் (கழுதை) பூசித்தது. கரவீரம் (பொன்னலரி) தல மரத்தின் பெயர்.

Koviloor Digital Library

சுவாமி : *கரவீர நாதர்*

அம்பிகை : *பிரத்யட்ச மின்னம்மை*

தல மரம் : *அலரி*

தீர்த்தம் : *அனவரத தீர்த்தம்*

பண் : *பழந்தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

623. **அரியு நம்வினை உள்ளன ஆசற**
வரிகொள் மாமணி போற்கண்டம்
கரிய வன்திக ழும்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே.

தெளிவுரை: *அழகிய சுடர்விடும் மணியைப் போன்று கரிய கண்டத்தையுடையவனாகிய ஈசன், திகழ்ந்து ஓங்கும் கரவீரத்தில் விளங்குகின்றான். பெரியோனாகிய அப்பெருமான் திருக்கழலைப் போற்றித் துதிக்க, வினைகள் யாவும் சிதைந்து அழியும்; குற்றங்களும் அறுந்து ஒழியும்.*

அரி – களைதல்; வரி – அழகு.

624. **தங்கு மோவினை தாழ்சடை மேலவன்**
திங்க ளோடுஉடன் சூடிய
கங்கை யான்திக ழும்கர வீரத்துஎம்
சங்க ரன்கழல் சாரவே.

தெளிவுரை: *தாழ்ந்து விளங்கும் சடையின்மேல் திங்களோடு கங்கையைத் தரித்தவனாகிய ஈசன் திகழும் கரவீரத்தில், எம் சங்கரனின் திருக்கழலைச் சார்ந்திருக்க, வினையானது தங்கித் துன்புறுத்துமோ. (வினையானது நீங்கும் என்பது குறிப்பு.)*

Koviloor Digital Library

625. ஏதம் வந்தடை யாஇனி நல்லன
பூதம் பல்படை யாக்கிய
காத லால்திக ழும்கர வீரத்துளம்
நாதன் பாத நணுகவே.

தெளிவுரை: பூத கணங்களைப் படையாகக் கொண்ட விருப்பத்தால் திகழும் கரவீரத்தில் விளங்கும் நாதன் பாதத்தை நண்ணி வணங்கக் குற்றங்கள் எதுவும் சாராது; இனிமேல் நடப்பது நல்லனவாகவே விளங்கும்.

626. பறையு நம்வினை உள்ளன பாழ்பட
மறையு மாமணி போல் கண்டம்
கறைய வன்திக ழும்கர வீரத்துளம்
இறைய வன்கழல் ஏத்தவே.

தெளிவுரை: ஒளிபொருந்திய மணியைப் போன்ற கறையை உடைய கண்டத்தினனாகிய ஈசன் திகழும் கரவீரத்தில், எமது இறைவனின் திருக்கழலை ஏத்தி வழிபட, முன் செய்த வினையும் கெடும். உள்ள வினையும் பாழ்பட்டு மறையும்.

627. பண்ணின்ஆர்மறை பாடலன் ஆடலன்
விண்ணில் ஆர்மதில் எய்தமுக்
கண்ணி னான்உறை யும்கர வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே.

தெளிவுரை: பண்களில் சிறந்து விளங்குகின்ற சுருதி மேவும், வேதத்தில் திளைத்து, ஆடலிலும் பாடலிலும் மேலானவனாகிய ஈசன்; ஆகாயத்தில் ஆரவாரித்து எழுந்த முப்புரங்களை எரித்துப் பொடிபடுத்திய முக்கண்ணுடைய செல்வன் உறையும் கரவீரத்தை

Koviloor Digital Library

நண்ணி, அப் பெருமானை வணங்குபவர்களின் வினையானது அழியும்.

628. நிழலின் ஆர்மதி சூடிய நீள்சடை
அழலின் ஆரழல் ஏந்திய
கழலி னார்உறை யும்கர வீரத்தை
தொழவல் லார்க்குஇல்லை துக்கமே.

தெளிவுரை: ஒளி பொருந்திய சந்திரனைச் சிவந்த நீண்ட நெருப்பை ஒத்த சடையில் சூடிக் கரத்தில் நெருப்பை ஏந்தி, வீரக்கழல் ஒலிக்க விளங்கும் பெருமான், கரவீரத்தில் வீற்றிருக்கின்றார். அப் பெருமானைத் தொழ வல்லவர்களுக்குத் துயரம் இல்லை.

நிழல் – ஒளி.

629. வண்டர் மும்மதில் மாய்தர எய்தவன்
அண்ட னார்அழல் போல்ஒளிர்
கண்ட னார்உறை யும்கர வீரத்துத்
தொண்டர் மேல்துயர் தூரமே.

தெளிவுரை: தீயவர்களாகிய முப்புராரிகளின் கோட்டைகளை எரித்துச் சாம்பலாக்கிய கடவுள், நெருப்பைப் போல் சுயம் பிரகாசம் உடைய கழுத்தை உடையவராய், உறைகின்ற கரவீரத்தில் தொண்டு செய்து போற்றி வாழும் அடியவர்களுக்குத் துயரம் இல்லை.

வண்டர் – தீயோர்; அண்டனார் – கடவுள்.

630. புனல்இ லங்கையர் கோன்முடி பத்திறச்
சினவல் ஆண்மை செகுத்தவன்
கனல வன்னுறை கின்ற கரவீரம்
எனவல் லார்க்குஇடர் இல்லையே.

Koviloor Digital Library

தெளிவுரை: கடல் சூழ்ந்த இலங்கையர் கோனாகிய இராவணனுடைய பத்துத் தலைகளின் வலிமையை அழித்து, அவ் அரக்கனுடைய சினத்தால் எழுந்த செருக்கினையும் ஒழித்து விளங்குபவன் ஈசன். அப் பெருமான், தன்னைச் சினந்தவர்களுக்குக் கனலாக விளங்குபவன். அவன் உறையும் இடமாகிய கரவீரத்தினை, நினைத்து ஏத்த வல்லார்க்கு, இடர் இல்லை.

கனலன் – ஈசன் (கனல் – நெருப்பு, சினம்).

631. வெள்ளத் தாமரை யானொடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திரள் ஆகிய
கள்ளத் தான்உறை யும்கர வீரத்தை
உள்ளத் தான்வினை ஒயுமே.

தெளிவுரை: நீரில் விளங்கும் தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனும், திருமாலும் தெளிவடைந்து ஏத்துமாறு, தீப்பிழம்பாகிய ஈசன் உறையும் கரவீரத்தை நினைத்து ஏத்த, வினை செயலற்று ஒடுங்கி நலியும்.

சிறப்புரை: பிரமன், திருமாலின் உந்திக் கமலத்தில் விளங்கும் தாமரையில் வீற்றிருப்பினும் தாமரை மலர் நீரில் விளங்கும் மரபு நோக்கி வெள்ளத் தாமரையான் என உணர்த்தப்பட்டது. ஈசன், தன்னுடைய தோற்றத்தைக் கரந்து கொள்வதும், காட்சிக்குப் புலப்படுத்துவதும், அவனது இச்சையின் வண்ணம் நிகழப்பெறுதலால், "கள்ளத்தான்" என்று உணர்த்தப் பட்டது. "என் உள்ளம் கவர் கள்வன்" என ஞானசம்பந்தர் ஈசனைக் குறிப்பிடுதலையும் நோக்குக.

கள்ளத்தான் – ஈசன்; உள்ளத்தான் – நினைத்து வாழ்த்த, போற்ற.

Koviloor Digital Library

632. செடிஅ மண்ணொடு சீவரத் தாரவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடிய வன்னுறை கின்ற கரவீரத்து
அடிய வர்க்கில்லை அல்லலே.

தெளிவுரை: சமணர்களும் பிறரும் கூறும் கொடிய உரைகளைக் கொள்ள வேண்டாம். சிறப்பும் நறுமணமும் கமழும் ஈசன் உறைகின்ற கரவீரத்தில் மேவும் திருத்தொண்டர்களுக்கு அல்லல் என்பது இல்லை.

கடியவன் – ஈசன்; கடி – நறுமணம், சிறப்பு.

633. வீடி லான்விளங் கும்கர வீரத்துளம்
சேடன் மேல்கசி வால்தமிழ்
நாடு ஞானசம் பந்தன் சொல்லிவை
பாடு வார்க்குஇல்லை பாவமே

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: எக்காலத்திலும் வீழ்ச்சியோடும், அழிதலும் அற்றவனாய், விளங்கும் கரவீரத்தில் பெருமையோடு வீற்றிருக்கும் எம் ஈசன் மேல், அன்பு மீதூரத் தமிழைப் போற்றும் ஞானசம்பந்தன் சொல்லிய இத் திருப் பதிகத்தைப் பாடுபவர்களுக்குப் பாவம் இல்லை.

தமிழ் – இனிமை.

59. திருத்தூங்கானை மாடம்
(பெண்ணாகடம்)

தல விளக்கம்: நடு நாட்டுத் தலம். பெண்ணாடம் என வழங்கப்படுகிறது. தேவகன்னியர், காமதேனு, வெள்ளை யானை (பெண் + ஆ + கடம்) வழிபட்டது.

Koviloor Digital Library

கடந்தை நகர் எனவும் பெயர்பெறும். கலிக்கம்ப நாயனார் திரு அவதாரத் தலம். அப்பர், சூல இடபக் குறி பொறிக்குமாறு வேண்டிப் பெற்ற திருத்தலம்.

இத் தலத்தின் வேறு பெயர்கள்: தயராச பதி, புஷ்பாரண்யம், மகேந்திர புரி, பார்வதிபுரம், சோகநாசனம், சிவ வாசம்.

திருக்கோயிலின் பெயர்: தூங்கானை மாடம்.

சுவாமி : சுடர்க்கொழுந்து நாதர், பிரளய காலேஸ்வரர்

அம்பிகை : கடந்தைநாயகி

தல மரம் : சண்பகம்

தீர்த்தம் : கபிலை தீர்த்தம், பார்வதி தீர்த்தம், இந்திர தீர்த்தம், முக்குளம், வெள்ளாறு.

பண் : பழந்தக்க ராகம்

திருச்சிற்றம்பலம்

634. ஒடுங்கும் பிணிபிறவி கேடென்று இவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீர் எல்லாம்
அடிகள் அடிநிழற்கீழ் ஆளாம்வண்ணம்
கிடங்கும் மதிலும் சுலாவிஎங்கும்
கெழுமனை கள்தோறு மறையின்னொலி
தொடங்கும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: உடலை ஒடுக்கும் பிணி, பிறவி, கேடுகள் என் உடைய அவலம் பொருந்திய வாழ்க்கையி லிருந்து விடுபட வேண்டும் என்று கருதி, அதற்குரிய மார்க்க மாவது தவம் புரிதலே என்று தீர்மானித்து, அவ் இடத்தைத் தேடிச் செல்பவர்களே! ஈசன் திருவடிக்கீழ் அடியவர் ஆகும் வண்ணம், அகழியும் மதில்களும் சூழ

Koviloor Digital Library

மனைகள் தோறும் வேதத்தின் ஒலியானது எப்போதும் இசைத்துக் கொண்டிருக்கும் கடந்தை என்னும் பதியில் விளங்கும் தூங்கானை மாடத்தில் மேவியருளும் ஈசனைத் தொழுமின்கள்.

635. பிணிநீர சாதல் பிறத்தல்இவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோடு
அணி நீர மேலுல கம்எய்தலுறில்
அறிமின் குறைவில்லை ஆனேறுடை
மணி நீல கண்டம் உடையபிரான்
மலைமக ளும்தானு மகிழ்ந்து வாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங் கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: பிணிக்கப்படும் நோய் எனப்படும் இறத்தலும் பிறத்தலும் ஆகியவற்றை ஒழித்து எக்காலத்தும் பிரியாத பேரின்பத்தோடு அழகு பொருந்திய உயர்ந்த உலகத்தை அடைய வேண்டும் எனக் கருதுவீராயின், அதற்கு யாதொரு குறைபாடும் இல்லை. அறிவீராக! இடப வாகனத்தில் விளங்கும் நீலகண்டப் பெருமான். மலை மகளாகிய உமா தேவியும் தானும் மகிழ்ந்து வீற்றிருக்கும் தெளிந்த பாங்குடைய கடந்தை நகரின் பெரிய கோயிலாக விளங்கும் தூங்கானை மாடம் சார்ந்து தொழுமின்.

636. சாநாளும் வாழ்நாளும் தோற்றம்இவை
சலிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
ஆமாறு அறியாது அலமந்து நீர்
அயர்ந்தும் குறைவில்லை ஆனேறுடைப்
பூமாண் அலங்கல் இலங்கு கொன்றை
புனல்பொ திந்தபுன் சடையினான் உறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

Koviloor Digital Library

தெளிவுரை: இறக்கின்ற நாள், வாழ்கின்ற நாள், பிறக்கின்ற தன்மை இவைகளால் சலிப்புற்ற வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்குரிய தவமானது எவ்வகையில் கைகூடும் என அறியாது வருந்தித் தளர்வுறல் வேண்டாம். அதற்கு யாதொரு குறையும் இல்லை. இடப வாகனத்தை உடையவனும், மாட்சிமை மிக்க கொன்றை மாலை சூடியவனும், கங்கை தரித்த சடையுடையவனும் உறையும் தூய்மையான மாண்பின் மிக்க கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் நாடித் தொழுமின்கள்.

அலமந்து – வருந்துதல்.

637. ஊன்றும் பிணிபிறவி கேடென்றுஇவை
உடைத்தாய வாழ்க்கை ஒழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லா
மனந்திரிந்து மண்ணின் மயங்காதுநீர்
மூன்று மதில்எய்த மூவாச் சிலை
முதல்வர்க்கு இடம்போலு முகில்தோய் கொடி
தோன்றும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: பிணியை நிலைப்படுத்தும் பிறவியானது கேடென்று கருதி, அதனை உடைய வாழ்க்கையி லிருந்து விடுபட வேண்டும் எனக் கொண்டு, தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்னும் நெஞ்சினராய், மயக்கத்தில் நிற்பவர்களே! நீவிர் அனைவரும் மனத்தில் மாறுபாடு கொண்டு உலகில் மயங்காது, மூன்று மதில்களை எரித்து அழித்த மூப்படையாத மேருமலையை வில்லாகக் கொண்ட முதல்வர்க்கு உரிய இடம் என்று, மேகங்கள் தொழும் கொடிகளை

Koviloor Digital Library

யுடைய கடந்தை நகரில், தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் சார்ந்து தொழுமின்கள். ஆங்கு வீற்றிருக்கும் இறைவன் நீங்கள் கருதியதைக் கைகூடுமாறு நல்குவர்.

638. மயல்தீர்மை இல்லாத தோற்றம்மிவை
மரணத்தொடு ஒத்துஅழியு மாறாதலால்
வியல்தீர மேலுலகம் எய்தலுறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர ஓங்கிய நாமங்களால்
ஓவாது நாளும்அடி பரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: மயக்கம் தீர்வதற்கான உபாயம் யாது எனக் கருத வேண்டாம். மரணத்துடன் இம் மாயை நிலைகள் யாவும் ஒத்து அழிந்து விடும் தன்மை உடையன. ஆதலால், உயர்ந்த உலகத்திற்குச் செல்ல வேண்டும் என்று, பலவிதமான திறத்தில் முனைப் படுதலைப் பற்றி, வேறொன்றும் கொள்ள வேண்டாம். ஈசனுடைய திருநாமங்கள் உயர்ந்த தன்மை உடையவை. அவற்றை இடைவிடாது துதித்து, உச்சரித்து, அவ் விமலனுடைய திருவடியைப் பரவி, அவன் இடமாகிய கடந்தைத் தடங்கோயில் சேர்தூங்கானை மாடம் தொழுமின்கள். அச்செயல் உமது துயரைத் தீர்க்கும் தன்மை கொண்டது.

வியல் – பல திறத்தால் ஆகிய முறைகள்.

639. பல் நீர்மை குன்றிச் செவி கேட்பிலா
படர்நோக் கில்கண் பவளந் நிற
நல்நீர்மை குன்றித் திரை தோலொடு
நரை தோன்றும்கால நமக்காதன்முன்

Koviloor Digital Library

பொன்நீர்மை துன்றப் புறந்தோன்றுநற்
புனல்பொ திந்தபுன் சடையினான் உறையும்
தொல்நீர்க் கடந்தைத் தடங் கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: பலவிதமான சிறப்புக்கள் குறைவுபடத் தோன்றுமாறு, செவிகளின் கேட்கும் திறம் குறையவும், கண்கள் மங்கிப் பார்க்கும் திறன் தளர்ச்சி கொண்டும் உடல் வலிமை குன்ற நரையும் திரையும் தோன்றவும், ஆகியன யாவும் மூப்பின் வலிமையால் நிகழ்கின்றது. இந்நிலைக்கு நாம் ஆளாகும் முன்னர், பொன் மயமாய்ப் பொருந்தி காட்சி நல்கும், கங்கை தரித்த சடையை உடையவனாகிய ஈசன் உறையும், நீர்மல்கு கடந்தை நகரில் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் சார்ந்து தொழுமின்கள்.

துன்றுதல் – பொருந்துதல்.

சிறப்புரை: மூப்பு எய்தி உடல் சோர்வுற்றிருக்குங்காலை திருக்கோயிலுக்குச் செல்வதும், திருநாமங்களைச் சொல்வதும், செவி மடுப்பதும், தரிசித்து மகிழ்வதும், ஆகாத தன்மையை இயல்பால் உண்டாதலை உணர்த்திச் சரியை வழிபாட்டு நிலை இளமைக் காலத்தில் வலியுறுத்தப்பட்டது.

640. இறை யூண் துகளோடு இடுக்கண் எய்தி
இழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
நிறை யூண் நெறிகருதி நின் றீர்எல்லா
நீள்கழ லேநாளு நினைமின் சென்னிப்
பிறைசூழ் அலங்கல் இலங்கு கொன்றை
பிணையும் பெருமான் பிரியாத நீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

Koviloor Digital Library

தெளிவுரை: சிறிதளவாகிய புன்மையான உணவு கொண்டு துயரம் அடைந்து இழிவாக இருக்கும் வாழ்க்கையை ஒழித்து விட வேண்டும் என்று முனைப்புக் கொண்டு, தவம் என்று சொல்லப்படும் பெருமை தரும் நிறைவான உணவைக் கருதி நாடும் அன்பர்காள்! எல்லோரும் ஈசனுடைய நெடிய திருவடியை நினைமின்! சென்னியில் பிறைச் சந்திரன் விளங்கவும், கொன்றை மலர் மாலை திகழவும், வைத்துள்ள பெருமான் பிரியாது வீற்றிருக்கும் நீர்த்துறை சூழ்ந்த கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடம் சார்ந்து தொழுமின்கள்.

சிறப்புரை: வாழ்க்கையை ஒழித்தல் என்பது குறை உணவாகவும், ஈசனை வணங்கிப் போற்றுதல் நிறை உணவாகவும் உணர்த்தி, நிறை உணவு கொண்ட மாந்தர் ஆரோக்கிய நிலை பெறுதலைப் போன்று, ஈசனை வணங்கி மன்னுயிர்கள் கடைத்தேறும் வழி உணர்த்தப்பட்டது.

இறை – சிறிது; இடுக்கண் – துயரம்.

641. பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
இல்சூழ் இடங்கருதி நின்றீர்எல்லாம்
இறையே பிரியாது எழுந்துபோதும்
கல்சூழ் அரக்கன் கதறச் செய்தான்
காதலியும் தானும் கருதி வாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: மூப்பு, பிணி உற்ற தன்மையால் பற்கள் வீழ்ந்தும், நாவானது தளர்ச்சியுற்று வாய்ச் சொற்கள் குழறியும், மெய்யானது (தேகம்) சுருங்கி வாட்டம்

Koviloor Digital Library

கொண்டும், பிறரால் கிழம் என்று பழிக்கப்படுகின்ற இவ்வாழ்க்கை ஒழிய வேண்டும் என்றும், அதற்காகத் தவம் மேற்கொள்ள வேண்டும் என்று கருதி, அதனை ஒட்டிப் பொருத்தமற்ற இடங்களில் நிற்பவர்களே! எல்லோரும் வாருங்கள்! சிறிதும் தாமதியாது வாருங்கள்! ஈசன் மலையைப் பெயர்த்த அரக்கனை வதைத்து, உமா தேவியும், தானும் கருதி வாழும் பழைமையான சீரினைக் கொண்ட கடந்தைத் தடங் கோயில் சேர் தூங்கானை மாடம் தொழுமின்கள்! அது நற்கதியை அளிக்கும் என்பது குறிப்பு.

642. நோயும் பிணியும் அருந்துயரமு(ம்)
நுகருடைய வாழ்க்கை ஒழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீர்எல்லா
மலர்மிசைய நான்முகனு மண்ணும் விண்ணும்
தாய அடிஅளந்தான் காணமாட்டாத்
தலைவர்க்கு இடம் போலும் தண்சோலை விண்
தோயும் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: நோயும், துயரமும் மற்றும் மனத்தைப் பிடித்துள்ள அச்சம் முதலானவைகளும் நுகரும் தன்மையுடைய இவ்வாழ்க்கை ஒழியத் தவ வழியே நன்றெனக் கருதி நிற்பவர்களே! மலர்மிசை உடையவனாகிய நான்முகனும், பூவுலகத்தையும் தேவருலகத்தையும் உரிமையாக அளந்தவனாகிய திருமாலும், காணற்கு அரியவனாகிய தலைவர் ஈசன். அவர் விண்ணளவு ஓங்கி வளர்ந்த சோலைகளை யுடைய கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடத்தில் வீற்றிருக்க எல்லோரும் தொழுமின்கள். அவர் உமக்கு நற்கதி அளிப்பவர் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

643. பகடூர் பசிநலிய நோய்வருதலால்
பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரு
மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன
திகழ்தீர்ந்த பொய்ம்மொழிகள் தேறவேண்டா
திருந்திழை யும்தானும் பொருந்திவாழும்
துகள்தீர் கடந்தைத் தடங்கோயில் சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே.

தெளிவுரை: *பசி மிக்க அடைந்து நலிய, நோய் தாக்கி வருதலால் பழியும் கொள்ளும் இவ்வாழ்க்கை ஒழிய வேண்டும் என்று எண்ணி, அதற்காகச் சிகை நீக்கியும், துவராடையும் கொண்டவர்கள் சொல்பவை பொய்ம் மொழிகளாகும். அவற்றை ஏற்றுக்கொண்டு பின்பற்ற வேண்டாம். உமாதேவியோடு தானும் பொருந்தி குற்றங்களைத் தீர்க்கும் கடந்தைத் தடங்கோயில் சேர் தூங்கானை மாடத்தில் வீற்றிருக்கும் ஈசனைத் தொழுமின்கள். அதுவே நற்கதி தரவல்லது.*

பகடு ஊர் பசி – யானைப் பசி, மிகுந்த பசி; முகடு ஊர் மயிர்கடிதல் – முடி நீக்கிய தலை; திருந்திழை – உமாதேவி; துகள்தீர் – குற்றம் தீர்க்கும்.

644. மண்ணார் முழவதிரு மாடவீதி
வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர்
பிறை உரிஞ்சும் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்தும்
கருத்துணரக் கற்றாரும் கேட்டாரும் போய்
விண்ணோர் உலகத்து மேவிவாழும்
விதியது வேஆகும் வினை மாயுமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: *வீதிகள்தோறும் திருவிழாக்கள் நடைபெறுவதால் உண்டாகும் முழவம் அதிருமாறு ஒலிக்க, வயல்கள் பெருகும் காழியின் ஞானசம்பந்தன், நல்லருளும் வளப்பமும் மிகுந்த பெண்ணாடகத்துப் பெருங்கோயில் சேர் வானத்தை எட்டும் அளவு உயர்ந்து ஓங்கிய தூங்கானை மாடத்தில் மேவிய ஈசனைப் போற்றி உரைத்த, கண்ணுக்கினிய காட்சியைப் பரவும் பாடல்கள் பத்தினையும் கருத்துணரக் கற்றவர்களும், பாடக் கேட்டவர்களும், விண்ணோர் உலகத்தில் பொருந்தி வாழ்வார்கள். அது விதியாகி விளங்கும். அவர்கள் வினை மாயும்.*

60. திருத்தோணிபுரம்

தல விளக்கம்: *பதிக எண் 1 காண்க.*

பண் : *பழந்தக்க ராகம்*

திருச்சிற்றம்பலம்

645. வண் தரங்கப் புனற்கமல
மதுமாந்திப் பெடையினொடும்
ஒண் தரங்க இசைபாடும்
அளி யரசே ஒளிமதியத்
துண்டர் அங்கப் பூண்மார்பர்
திருத் தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க்கு என் நிலைமை
பரிந்து ஒருகால் பகராயே.

தெளிவுரை: *வளப்பம் பெருகிய அலைகள் மோதும் நீரில் விளங்கும் தாமரை மலரில் உள்ள தேனைச் சுவைத்துப் பருகி இன்புற்று, பெடையினொடும் ஒளி பொருந்திய வெண்மையான அலையோசை போன்று*

Koviloor Digital Library

இசை பாடும் வண்டரசே! ஒளிசேர் சந்திரனின் பிறையைத் தரித்து உள்ளவரும், உடலின் அங்கமாகும் எலும்பை மாலையாகக் கொண்ட மார்பினரும், பழைமையான நடனம் புரிந்து திருத்தோணிபுரத்தில் உறைபவரும் ஆகிய அப் பெருமானுக்கு என் நிலையை நன்கு அறிந்து பரிவோடு ஒருமுறை பகர்வாயாக.

சிறப்புரை: ஆன்மாக்கள் பெண் தன்மை உற்றதென்றும், அது எப்போதும் கொழு கொம்பாகிய இறைவனைப் பற்றி நிற்றல் வேண்டும் என்னும் கருத்தும் இவண் உணர்த்தப்பட்டது.

தரங்கம் – அலை; மது – தேன்; அளி – வண்டு; அங்கம்பூண் – எலும்பு மாலை; கால் – முறை.

646. எறி சுறவம் கழிக்கானல்
இளங்குருகே என்பயலை
அறிவுறாது ஒழிவதுவும்
அருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதம் ஓதும்
திருத்தோணி புரத்துஉறையும்
வெறி நிறார் மலர்க்கண்ணி
வேதியர்க்கு விளம்பாயே.

தெளிவுரை: துள்ளும் சுறா மீன்கள் விளங்கும் உப்பங் கழியின் கானலில் நிலவும் இளங்குருகே! நான் கொண்டுள்ள பசலை நோயை, இறைவனிடம் அறிவிக்காது விடுவதும் வினைப் பயன் ஆகும் தரத்ததோ! மிகுந்த பயனை அடையும் தன்மையில் சிறுவர்கள் திருவைந்தெழுத்து ஓதும் பெருமைமிக்க தோணிபுரத்தில், மணமும் வண்ணமும் பொருந்திய மலரைச் சூடியுள்ள வேதநாயகராகிய ஈசனிடம் எனது நிலையை விளம்புவாயாக.

எறிசுறவம் – துள்ளும் சுறாமீன்; பயலை – பசலை; வெறி – மணம்.

Koviloor Digital Library

647. பண்பழனக் கோட்டகத்து
வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே
கடுவினையேன் உறுபயலை
செண்பகம்சேர் பொழில்புடைசூழ்
திருத் தோணி புரத்துறையும்
பண்பனுக்குஎன் பரிசுரைத்தால்
பழியாமோ மொழியாயே.

தெளிவுரை: *நன்றாகப் பண்படுத்தப்பெற்ற வயல்களின் கரைகளில் வாடுதல் கொள்ளாத சிவந்த கொண்டையுடன் சண்பங் கோரையின் இடையே விளங்கும் வாரணமே! தலைவனாகிய ஈசனைப் பிரிந்து ஆற்றாது கொடிய வினையுடைய யான் பசலையுற்றேன். செண்பக மலர்ப்பொழில்சூழ் திருத்தோணிபுரத்தில் உறையும் பண்பின் மிக்கு விளங்கும் தலைவனுக்கு எனது நிலையை எடுத்து ஓதினால் நினக்கு எவ்விதப் பழியும் நேராது. எனவே மொழிவாயாக.*

சிறப்புரை: *ஈசன், தலைமகளின் துன்பத்தை உணர்ந்து கொள்ளும் பண்பாளன் எனவும், வினையின் காரணமாகப் பிரியும் நிலை உண்டாதலைக் கருதி, அதன் வயம் ஏற்பட்ட ஆதங்கம் வெளிப்படுத்து முகத்தான் பழியாமோ எனவும் உணர்த்தப்பட்டது.*

செஞ்சூட்டு – சிவந்த கொண்டை; கண்பகம் – செண்பங் கோரையின் இடையில்; வாரணம் – கோழி, சேவலைக் குறித்தது; பயலை – பசலை நோய் தலைவனைப் பிரிந்து ஆற்றாது தலைவியுறும் காதல் நோய்.

648. காண்தகைய செங்கால்ஒண்
கழி நாராய் காதலால்
பூண் தகைய முலை மெலிந்து
பொன் பயந்தாள் என்றுவளர்

Koviloor Digital Library

சேண்தகைய மணிமாடத்
திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற்கு இன்றே சென்று
அடியறிய உணர்த்தாயே.

தெளிவுரை: ஒப்பற்ற உப்பங்கழியில் காண்பதற்கு அழகிய செங்கால்களையுடைய நாராய்! அன்பின் மேலீட்டால், அணிகள் பூணப்பெற்ற மார்பகங்கள் மெலிவுறவும், பொன் நிறத்தின் பசலையுறவும், ஆயினாள் என்று, விண்ணை நெருங்கும் உயர்ந்த மணி மாடத் திருத்தோணிபுரத்து உறையும் ஆண்தகையாற்கு, இன்றே சென்று எனது உள்ளத்தின் வேட்கையை உணர்த்துவாயாக.

சிறப்புரை: ஆண் தகைமையுடையவன் ஈசன் ஒருவனே என உணர்த்தப்பட்டது. என்னை ஆட்கொண்ட அன்புக் கரத்தினன் — ஆண்டகையான், எனச் சுவைபடக் கொள்ளலும் காண்க. தூது சென்று உரைக்குங்காலை, உள்ளத்தின் கிடக்கையும், அடி முதற்கொண்டு தற்போது உள்ளவரையில் யாவற்றை யும் கூற வேண்டும் எனவும் உணர்த்துவதாயிற்று. ஈசனார் திருவடி அறிய உணர்த்துதலும் சாலும்.

649. பாராரே எனை ஒருகால்
தொழுகின்றேன் பாங்கமைந்த
காராரும் செழு நிறத்துப்
பவளக்காற் கபோதங்காள்
தேராரு நெடுவீதித்
திருத்தோணி புரத்துறையும்
நீராரும் சடையாருக்கு
என்நிலைமை நிகழ்த்தீரே.

Koviloor Digital Library

தெளிவுரை: செழுமை கூடிய நிறத்துடைய பவளம் போன்ற சிவந்த கால்களையுடைய கார்வண்ண மாடப் புறாக்களே! இதற்கு முன்னதாகத் தூதாக அனுப்பிய வண்டரசு, இளங்குருகு, சேவல், நாரை ஆகியவர்கள் திரும்பி வந்து என்னைப் பாராது உள்ளனர். உம்மைத் தொழுகின்றேன். தேர் செல்லும் நெடிய வீதிகளையுடைய தோணிபுரத்தில் உறையும் கங்கை தரித்த சடையுடைய நாதருக்கு எனது நிலைமையை இயம்புவீர்.

சிறப்புரை: நீர்மை என்னும் பண்புடை மொழியும், இனிமையுடைய ஈசன் என்பதால் எனது நிலைமை யினை எடுத்துக் கூறுவதற்கு இயலும் எனும் மாண்பு, குறிப்பால் உணர்த்தப்பட்டது.

650. சேற்றெழுந்த மலர்க்கமலச்
செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த அன்னங்காள்
விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி
புரத்தீசன் துளங்காத
கூற்றுதைத்த திருவடியே
கூடுமா கூறீரே.

தெளிவுரை: தாமரை மலர்களும் செஞ்சாலிக் கதிர் களின் நெல் மணிகளும் திகழ வீற்றிருக்கும் அன்னப் பறவைகளே! திருத்தோணிபுரத்தில் விளங்கும் ஈசன், விண்ணுலகமும் மண்ணுலகமும் மறைகளும் தோற்று வித்தவன். யாராலும் அசைக்க முடியாத கூற்றுவனை உதைத்த வல்லமையுடையவன், அப்பெருமான். அவனுடைய செல்வப் பெருங்கழலை யான் கூடி மகிழுமாறு அவனிடம் சென்று மொழிவீரே. ஏகாரம் விண்ணப்பத்தின் மாண்பினை மொழிவதாயிற்று.

Koviloor Digital Library

651. முன்றில் வாய் மடல் பெண்ணைக்
குரம்பை வாழ் முயங்கு சிறை
அன்றில் காள் பிரிவுறுநோய்
அறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவும்
திருத் தோணி புரத்துறையும்
கொன்றை வார் சடையார்க்கு என்
கூர்பயலை கூறீரே.

தெளிவுரை: *முற்றங்களிலும், மட்டைகள் விளங்கும் பனை மரங்களிலும் கூடுகளை அமைத்து, நெருங்கிய சிறகுகளை உடைய அன்றில் பறவைகாள்! நீங்கள் எக்காலத்தும் இணையோடு கூடி ஒருமித்து விளங்கு வதால், யான் படும் பிரிவுத் துன்பத்தை உங்களால் அறிய முடியாது. ஆயினும் இணைந்து வாழ்வதில் வல்லவர்களாகிய நீவிர் தூது உரைப்பதற்கு ஏற்றவர்கள் ஆவீர். இனிமையான தென்றல் புகுந்து எல்லா இடங்களில் பரவி விளங்கும் திருத்தோணி புரத்தில் உறையும் மணங்கமழும் கொன்றை மாலை சூடிய செஞ்சடையாராகிய ஈசற்கு, என்னை வாட்டும் பசலை நோய் பற்றிக் கூறுவீர்.*

முன்றில் – முற்றம்; மடற்பெண்ணை – பனைமரம்; குரம்பை – கூடு.

652. பானாறு மலர்ச் சூதப்
பல்லவங்கள் அவை கோதி
ஏனோர்க்கும் இனிதாக
மொழியும்எழில் இளங்குயிலே
தேன்ஆரும் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்தமரர்
கோனாரை என்னிடைக்கே
வர ஒருகால் கூவாயே.

Koviloor Digital Library

தெளிவுரை: சாறும், மணமும் மிக்க மலர்களையும் மாந்தளிர்களையும் விரும்பி ஏனோர்க்கும் இனிதாக மொழியும் எழிலை உடைய இளங்குயிலே! தேன் சொரியும் பொழில்களைப் பக்கத்தில் சூழத் திகழும் திருத்தோணிபுரத்தில் வீற்றிருக்கும், தேவர்களுக் கெல்லாம் தலைவராக விளங்கும் ஈசனை, என் இடத்திற்கே வருமாறு ஒருமுறை கூவுவாயே.

சிறப்புரை: குயில் ஓசை மிகவும் இனிமை உடைய தாதலின், ஒருமுறை கூவினாலும் பயன் உண்டாகும் என்று உணர்த்தப்பட்டது. "கீதம் இனிய குயிலே" என்று குயிலின் இனிய ஓசையை வியந்து, மாணிக்க வாசகர் உரைத்தலும் ஓர்க. மேலும், "தேவர் பிரான் வருமாறு கூவாய்" என்று மொழிவதும், "என்னி டைக்கே வரக் கூவாயே" எனும் ஞானசம்பந்தர் வாக்கும் நோக்குக.

இறைவனே வந்து மன்னுயிர்களை ஆட் கொள்கின்றான் என்னும் மாண்பு "என்னிடைக்கே வர" எனும் தொடரால் உணர்த்தப்படுகிறது.

பால் – சாறு; நாறு – மணம்; சூதப்பல்லவம் – மாந்தளிர்.

653. நற்பதங்கண் மிக அறிவாய்
நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாய்அலகில்
பூவைநல்லாய் போற்றுகின்றேன்
சொற்பதம்சேர் மறையாளர்
திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்குஎன்
மெய்ப்பயலை விளம்பாயே.

Koviloor Digital Library

தெளிவுரை: *அழகான அலகினையுடைய நாகணவாய்ப் பறவையே! நல்ல மொழிகளை மிக நன்றாக அறிவாய்! நீயே நல்லாய். உன்னைப் போற்றுகின்றேன். உன்னை வேண்டிக் கொள்கின்றேன். பக்திச் சொற்களின் பதப் பொருளாகவும், வேதத்தின் நாயகனாகவும், திருத் தோணிபுரத்தில் உறையும், மேருமலையை வில்லாகக் கொண்ட தோளினையுடைய விகிர்தனுக்கு, என்னுடைய மெய்யான பசலையை விளம்புவாய்.*

பூவை – நாகணவாய்ப் பறவை.

654. சிறையாரு மடக்கிளியே
இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத் தருவன்
மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடல்தோணி
புரத்தீசன் துளங்கும் இளம்
பிறை யாளன் திருநாமம்
எனக்கு ஒருகால் பேசாயே.

தெளிவுரை: *தலைவன்பால் கொண்ட மேலான விருப்பத்தால், அரச வண்டு, இளங்குருகு, சேவல், நாரை, கபோதங்கள் (புறா), அன்னங்கள், அன்றில் பறவை, இளங்குயில், நாகணவாய்ப்புள் ஆகியவற்றைத் தூது விடுத்தும் பயன் விளையாத நிலையைக் கண்டாள் தலைவி. அவள் மனம் ஆற்றொணாத் துயரில் மூழ்குகின்றது. தான் வளர்த்த கிளி நினைவிற்கு வருகின்றது. தான், தலைவனுடைய திருநாமங்களை மொழிந்து மகிழ்ந்த நிலையில், கிளியானது தலைவனுடைய திருநாமத்தைச் செவி மடுத்திருக்கும் என நம்புகின்றாள். இறைவன் திருநாமத்தைத் தான் வளர்த்த கிளியின் வாயிலாகக் கேட்டு மகிழ்வடைய*

Koviloor Digital Library

வேண்டும் எனக் கருதுகின்றாள். மகிழ்ச்சியைத் தருகின்ற ஈசன் திருநாமத்தைக் கூறும் கிளிக்குத் தேனும் பாலும் தருவதற்கு இசைகின்றாள். இந்நிலையில் அவள் கூற்று எழுகின்றது.

கூண்டில் மகிழ்ச்சியுடன் விளங்கும் கிளியே! இங்கே வா! தேனும் பாலும் நீ உட்கொள்ளும் முறைப்படியே தருவன். முத்தும் பவளமும் பெருகும் கடல் துறையாகிய தோணிபுரத்தீசன் துளங்கும் இளம் பிறையாளன். அவனுடைய திருநாமத்தை என்னிடம் பேசி மொழிவாய்.

655. **போர்மிகுத்த வயல் தோணி**
புரத்துறையும் புரிசடைஎம்
கார் மிகுத்த கறைக் கண்டத்து
இறையவனை வண்கமலத்
தார் மிகுத்த வரைமார்பன்
சம்பந்தன் உரைசெய்த
சீர் மிகுத்த தமிழ்வல்லார்
சிவ லோகம் சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வைக்கோற் போர் மிகுந்து தோன்ற நில வளத்தை உடைய தோணிபுரத்தில் உறையும் சடையும், நீலகண்டமும் உடைய எம் இறைவனைத் தாமரை மலர் மாலை அணிந்த ஞானசம்பந்தன் ஏத்தி உரை செய்த சிறப்புகள் மிகுந்த இத் திருப்பதிகத்தை ஓதி உரைப்பவர்கள், சிவலோகம் சேர்வார்கள்.

KOVILOOR ANDAVAR
A. No. 17657
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library